# மகா வம்சம்

உதயணன்



# மகா வம்சம்

(சரித்திர நாவல்)

பாகம் - 2

உதயணன்

## அத்தியாயம் நாற்பத்து ஒன்பது

# புதிய மார்க்கம்

நாகர் மலைத்தீவை விட்டுப் புறப்பட்டு ஒருநாள் ஆகியிருந்தது. அந்த ஒருநாள் முழுவதும் விஜயன் யாரோடும் பேசவில்லை. ஐந்தாம் தளத்தில் இருந்த மரக்கலத் தலைவனின் அறையைவிட்டு வெளியே வரவில்லை. உணவு நேரங்களில் உணவு கொண்டு வந்தவர்களிடம் எதுவும் வினவவில்லை. தீவுக்கப்பலை உபதலைவன் தனஞ்செயன் இயக்கினான். மற்றபடி டெமிட்ரியஸ், அசுவநாவிகர், உதயணன், விதுரன், நரசிம்மன், விகர்ணன், பகீரதன் ஆகிய உபதளபதிகள் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்தவர்களுக்குப் பணி ஒதுக்கீடு செய்து அதைக் கண்காணித்து வந்தார்கள். இந்த நிலையில் ஒருநாள் ஓடிவிடவே உபதலைவர்கள் ஒன்றுகூடி கப்பல் செல்ல வேண்டிய மார்க்கம் பற்றி விவாதித்தார்கள்.

''இப்போது எந்த மார்க்கத்தில் கப்பல் போகிறது?'' என்று கேட்டான் உதயணன் தனஞ்செயனிடம்.

''அது இன்னும் உறுதியாகவில்லை'' என்றான் தனஞ்செயன்.

''உறுதியாகாமல் கப்பல் எங்கே போகிறது?'' என்று கேட்டான் உதயணன்.

தனஞ்ஜெயனோ அதற்கு நேரடியாக பதில் கூறாமல் ''கப்பல் எங்கே செல்ல வேண்டும் என்பதை மரக்கலத் தலைவர்தான் முடிவு செய்யவேண்டும்?'' என்றான்.

''நான் கேட்டது அதுவல்ல தனஞ்செயா. கப்பல் இப்போது நாகதீபத்திற்குத்தானே போகிறது?''

''இல்லை''

''நாம் போக வேண்டிய இடம் நாகதீபம் தானே?''

''ஆம்''

''பிறகு ஏன் அதை நோக்கிப் போகவில்லை?''

''போவதற்கு தலைவரின் கட்டளை வரவில்லை''

''ஏன்?''

''தெரியவில்லை''

''தெரியாமல் எப்படி கப்பலை இயக்குகிறாய்?''

''தலைவரைச் சந்திக்க முடியவில்லை. அவர் தன் அறையிலேயே இருக்கிறார். யாரோடும் பேசவில்லை''

''மௌன விரதம் இருக்கிறாரா?''

''தெரியவில்லை''

''தனஞ்செயா, கப்பலை இயக்கும் பொறுப்பை வகிக்கும் நீ இப்படி பொறுப்பில்லாமல் பேசுவது வியப்பாக இருக்கிறது. தலைவர் உன்னைத்தேடி வந்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாயா? அவர் பேசாமலேயே இருந்து விட்டால் நீ எங்கே கொண்டு செல்வாய் கப்பலை?''

''அதற்கில்லை உதயணா. நாகர்மன்லத் தீவில் நாகநந்தினி பலியிடப்பட்டதில் நிலைகுலைந்து போயிருக்கிறார் தலைவர். அவரை நெருங்கத் தயக்கமாக இருக்கிறது''

''நாகநந்தினியின் கதை முடிந்து விட்டகதை. அதைப்பற்றி இனிமேல் நினைக்க எதுவும் இல்லை. தயக்கத்தை விட்டுவிட்டு தலைவரைப் போய் பார்க்லாம் வாருங்கள்''

இப்படி உதயணன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பணியாள் ஒருவன் வந்து அனைவரையும் விஜயன் அழைப்பதாகக் கூறினான்.

ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு விஜயனிடம் சென்றபோது அவர்களைப் பார்த்த விஜயன் ''என்ன எல்லோரும் சேர்ந்து முடிவு கட்டிவிட்டீர்களா?'' என்று கேட்டான்.

''நாங்கள் முடிவு கட்ட என்ன இருக்கிறது! நீங்கள்தானே முடிவு செய்ய வேண்டும்?'' என்றான் உதயணன்.

''முடிவை நான் பார்த்துக் கொள்கிறேன். உங்கள் அளவில் முடிவு செய்து வைத்திருக்கலாம் அல்லவா? அதைத்தான் கேட்கிறேன். தீவுக்கப்பலை நாகதீபத்திற்குக் கொண்டு செல்லலாம் அல்லவா?''

இதற்கு அசுவநாவிகர் மற்றும் டெமிட்ரியஸைத் தவிர மற்றவர்கள் ஆமோதித்தார்கள்.

ஆமோதிக்காதவர்களைப் பார்த்து ''உங்களுக்கு விருப்ப மில்லையா?'' என்று கேட்டான் விஜயன்.

''தலைவரே, நாகதீபத்திற்கு நாம் போக வேண்டும் என்றால் வெறுங்கைகளோடு போகமுடியாது என்று சதுர்வேதி கூறியதையும் அதையடுத்து கர்ணபத்ர பங்கத்தை வங்கதேசத்திலிருந்து கடத்தியதையும் மறந்து விட்டீர்களா?'' என்றார் அசுவநாவிகர்.

''மறக்கவில்லை. அந்த கர்ணபத்ர பங்கத்தை வங்க தேசத்து படைத்தலைவன் ராகுலன் பாரடைஸோடு சேர்ந்து கொண்டு நம்மிடமிருந்து களவாடி விட்டதையும் மறக்கவில்லை'' என்றான் விஜயன்.

''அதை நாம் மீட்க வேண்டாமா? அது இல்லாமல் நாக தீபத்திற்குப் போவது பயனுள்ளதாக இருக்குமா?''- என்று கேட்டார் அசுவநாவிகர்.

''இருக்காது தான். அதேசமயம் அதைத்தேடி எங்கே நாம் செல்லமுடியும்? எப்படி மீட்கமுடியும்?''

''கர்ணபத்ர பங்க பெட்டிகளுடன் ராகுலன் சாவகத்திற்குச் செல்வதாக பாரடைஸ் சொன்னான்''

''அதை எப்படி நம்புவது? நம்புவதாகவே வைத்துக் கொண்டாலும் சாவகத்திற்குச் செல்ல பல நாட்கள் ஆகும். அங்கே போனாலும் கர்ணபத்ர பங்கத்தை மீட்க முடியுமா என்று தெரியவில்லை''

இங்கு குறுக்கிட்ட டெமிட்ரியஸ் ''தலைவரே, ராகுலன் சாவகம் செல்வது கர்ணபத்ர பங்கத்தை விற்பதற்காகத்தான். விற்பனைக்காக அவர் சாவகம் செல்ல வேண்டியதில்லை. சொர்ணத்தீவிலேயே விற்றுவிடலாம்'' என்றான்.

''தனி ஒரு மனிதனாக இருந்துகொண்டு சொர்ணத்தீவில் விலைமதிக்க முடியாத கர்ணபத்ர பங்கத்தை ராகுலனால் விற்க முடியாது. இது அவருக்கே தெரிந்திருக்க வேண்டும். அதனால் தான் இரண்டு தரகர்களை வைத்துக்கொண்டு சாவகம் செல்லத் தீர்மானித்திருக்கிறார். சாவகத்தின் கீழை கடற்கரை பகுதியில் கள்ளத்தனமாகப் பொருட்களை வாங்கவும் விற்கவும் பற்பல கொள்ளைத்தரகர்களும் வியாபாரிகளும் இருக்கிறார்கள். அவர்களிடம் தான் கர்ணபத்ர பங்கத்தை விற்கமுடியும்'' என்றார் அசுவநாவிகர்.

''நீங்கள் சொல்வதுபடி ராகுலன் கள்ள வியாபாரிகளுக்கு விற்றிருந்தால் நாம் என்ன செய்யமுடியும்?''- கேட்டான் விஜயன்.

''நான் கூறியது ஒருவிதமான முறைதான். அப்படித்தான் நடக்க வேண்டும் என்றில்லை. வேறு மாதிரியாகவும் விற்கலாம். என் யோசனை என்னவென்றால் தீவுக்கப்பலை சொர்ண பூமிக்கு அதாவது சொர்ணத் தீவிற்குக் கொண்டு போய் இக்கப்பலில் உள்ள பொருட்களையெல்லாம் விற்று நமக்குத் தேவையான போர் ஆயுதங்கள், கவசங்கள், பொறிகள், புரவிகள் ஆகியவற்றை வாங்கலாம். துடுப்புத் தள்ளும் அடிமைகள் சிலரும் தேவை. அவர்களையும் வாங்கலாம். தீவுக்கப்பலை இணையற்ற போர்க்கப்பலாக மாற்றலாம். நாம் எங்கே போவதாக இருந்தாலும் நம் கப்பல் போர்க்கப்பலாக இருப்பது தான் பாதுகாப்பானது. நமது தோழர்களுக்கு கடற்போர் பயிற்சியைக்கூட சொர்ணத்தீவில் பெறலாம்''

''எல்லாம் சரிதான் அசுவநாவிகரே. நல்ல யோசனைதான். ஆனால் அதற்குப்பின் சாவகத்திற்குப் போய் என்ன செய்வது?'' என்று கேட்டான் விஜயன்.

''இப்போது அதைப்பற்றி திட்டமாக எதுவும் சொல்ல முடியவில்லை தலைவரே. சொர்ண பூமிக்கு முதலில் போவோம். ராகுலனைப் பற்றி அங்கேகூட ஏதாவது செய்தி கிடைக்கலாம்'' என்றார் அசுவநாவிகர்.

''என்ன சொல்கிறாய் உதயணா? நரசிம்மா?'' என்று இதர உபதலைவர்களை வினவினான் விஜயன்.

''நாகதீபத்திற்கு எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போவது நல்லது. அத்தீவை ஆக்கிரமிக்க வேறு நாடுகள் முயல்வதாகவும் நாம் முந்திக் கொள்ளவேண்டும் என்றும் சதுர்வேதி கூறியதாக நீங்கள் கூறினீர்கள். வங்கதேசத்தை விட்டுப் புறப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன'' என்றான் உதயணன்.

விஜயன் இது விஷயமாக ஏற்கனவே முடிவு செய்திருந்தான். கர்ணபத்ர பங்கத்தை மீட்பது ஆதாயமானதாக இருந்தாலும் அதை வஞ்சகமாகக் கவர்ந்த துரோகியான ராகுலனை விட்டுவிட விஜயன் தயாராக இல்லை. அவனை எப்படியாவது தேடிப் பிடித்து தண்டித்தாலொழிய தனக்கு ஏமாளி என்ற அவப்பெயர் நிச்சயமாக நிலைத்து நிற்குமாதலால் அந்த அவப் பெயருடன் நாக தீபத்திற்குச் செல்ல அவன் விரும்பவில்லை. ராகுலனைத் தேடி சாவகத்திற்குச் செல்வதே அவனது விருப்பமாக இருந்தது. சாவகத்திற்குப் போகும் வழியில் சொர்ணத்தீவுக்குச் சென்று அசுவநாவிகர் கூறியதுபோல் தீவுக்கப்பலை போர்க்கப்பலாக மாற்றிக்கொள்வது நல்லது என்றும் முடிவுசெய்து தனஞ்செயனிடம் மரக்கலத்தை சொர்ணத்தீவுக்குச் செல்லும் மார்க்கத்தில் திரும்பும்படிக் கட்டளையிட்டான்.

அதையடுத்து பதினோரு நாட்கள் வரை அமைதியாக பயணத்தை மேற்கொண்டது தீவுக்கப்பல். நாகர்மலைத் தீவுகளுக்கு தென்கிழக்காக மரக்கலத்தை இயக்கினான் தனஞ்செயன். மரக்கலத்தின் அடிப்பாகம் நன்றாக சுத்தம் செய்யப்பட்டிருந்ததாலும், மரக்கலத்தின் பத்து பாய்மரங்களும் விரிக்கப்பட்டிருந்ததாலும், காற்று அனுகூலமாக வீசியபடி யாலும் தீவுக்கப்பலின் வேகம் கணிசமாக உயர்ந்து லகுவாகப் பயணம் செய்தது. தனஞ்ஜெயனுடன் கப்பலைப் பற்றியும் கடலைப்பற்றியும் தன் சந்தேகங்களைக் கேட்டபடி இருந்தான் விஜயன். தனஞ்செயனும் பல சந்தர்ப்பங்களில் கடற்பயணம் மேற்கொண்டிருந்த காரணத்தால் தன் அனுபவத்தில் கண்ட பல விஷயங்களை விஜயனுக்கு சொல்லி வந்தான். கிரேக்க கடலோடியான டெமிட்ரியஸூம் அவ்வப்போது அவர்களது உரையாடலில் கலந்து கொண்டான்.

பன்னிரண்டாம் நாளன்று தங்களுக்கு முன்னால் விநோதமான காட்சியை அவர்கள் காண நேர்ந்தது. தங்களுக்கு முன்னால் கடற்பரப்பிற்கு மேலே சாம்பல் படலம் உருவாவதை அவர்கள் கண்டார்கள். மரக்கலத்தில் இருந்த அனைவரும் அப்படலத்தைக் காணமுடிந்தது. அதோடு கடற்பரப்பில் கணக்கற்ற மீன்களும் கடல் வாழ் இனங்களும் செத்து மிதந்ததையும் அவர்கள் கண்டார்கள். எங்கேயோ யாரோ இருந்து கொண்டு கடல்வாழ் இனங்களை ஆயிரக்கணக்கில் கொன்று கடலில் மிதக்கவிடுவது போலிருந்தது அக்காட்சி.

''தனஞ்செயா, இதென்ன புதுமாதிரியாக இருக்கிறது? மீன்கள் எதற்காக இந்த அளவிற்கு செத்து மிதக்கின்றன?'' என்று கேட்டான் விஜயன்.

தனஞ்ஜெயன் விஜயனுக்குப் பதில் சொல்லாமல் எதையோ கூர்மையாகக் கவனித்தான். டெமிட்ரியஸூம் சுற்றிலும் கவனித்தபடி இருந்தான். சாம்பல் படலம் முதலில் இருந்ததைவிட அதிக அளவில் எழுந்து நன்றாகப் பரவவும் தொடங்கியது. எதிரே எதையும் பார்க்க முடியவில்லை. அதோடு கடல் நீரில் பெருமளவில் கொப்புளங்கள் உண்டாயின. அதையடுத்து கடல்நீர் கொதிக்கத் துவங்கியது. நீராவி படலமும் உண்டாகி சாம்பல் படலத்தில் ஊடுருவியது. காதைப் பிளக்கும் படியான ஓசை எழுந்தது பெரும் குழப்பத்தை உருவாக்கியது. எங்கே என்ன நடக்கிறது என்று புரியாத நிலை.

''கீழைக் கடலில் அபாயமான பகுதிகளில் ஒன்றில் நாம் சிக்கிக் கொண்டதாக - நினைக்கிறேன்'' என்று விஜயனிடம் சொன்ன தனஞ்செயன் அபாய சங்குகளை ஊதும்படிச் செய்தான். அவனது அபாய சங்கொலிகளைக் கேட்டதும் உபதலைவன் விதுரன் தனது கட்டுப்பாட்டில் இருந்தவர்களிடம் பாய்மரங்களை இறக்கிச் சுற்றும்படி கட்டளையிட்டதும் தோழர்கள் மும்முரமாக அப்பணியில் இறங்கினார்கள். கீழ்தளத்தில் இருந்த துடுப்பு வலிப்பவர்களுக்கும் கட்டளைகள் போனதால் அவர்கள் துடுப்பு போடுவதை நிறுத்தினார்கள். கப்பலில் இருந்தவர்களுக்கு பத்திரமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்படி அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. கடல் அலைகள் படிப்படியாகப் பெரியதாகி இருபதடி உயரத்திற்கு எழுந்தன.

அந்த அலையினால் உயர்த்தப்பட்ட கடல் நீர் தீவுக் கப்பலில் விழுந்தது. அவ்வாறு விழுந்த கடல்நீர் மிகவும் சூடாகவும் இருந்தது. கப்பலில் விழுந்த கடலின் கொதிநீர் நல்ல வேளையாக கடலுக்கே உருண்டு விழும்படி மரக்கல அமைப்பு இருந்ததால் கப்பலுக்குள் நீர் திரளவில்லை. சூடான கடல் நீர் அடிப்பாகத்தின் மூலம் உள்ளே வராத வண்ணம் கீழ்தளத்தில் இருந்த அடிமைகள் தங்கள் துடுப்புகளை உள்ளே இழுத்துக் கொண்டு துவாரங்களின் கதவுகளை மூடினார்கள். மரக்கலத்தில் சுக்கானைப் பிடித்திருநத மாலுமி சுக்கானின் பிடி தளறுவதாகவும் தன் கட்டுப்பாட்டை மீறி சுழல்வதாகவும் கூச்சல் போட்டான். நீராவி மண்டலமும், சாம்பல் மண்டலமும், பேரலைகளுமாகச் சேர்ந்து பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கியிருந்தது. மரக்கலம் தன் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக இழுக்கப்படுவதை உணர்ந்தான் தனஞ்செயன்.

''தானும் தீவுக்கப்பலும் பிழைப்பது குதிரைக் கொம்பு தான்'' என்று விஜயனிடம் வாய்விட்டுக் கூறவும் செய்தான் தனஞ்ஜெயன்.

மிகவும் அபாயமான கட்டத்தில் சிக்கியிருந்தது தீவுக்கப்பல்.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பது

# சொர்ணத்தீவு

மரக்கவத்தில் இருந்த அனைவரும் பிரமை பிடித்தவர்களாய் என்ன நடக்கிறது என்று அறிய முடியாதவர்களாய் - தங்களது இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொண்டார்கள். மரக்கலமும் மாலுமிகளின் கட்டுப்பாட்டை விட்டு விலகி கண்டபடி சென்று கொண்டிருந்தது. ஆனால் விஜயனுக்கு மட்டும் அவனுக்குள் இருந்த ஏதோ ஒரு சக்தி தன்னை அமானுஷ்யமான மனிதனாக எண்ண வைத்ததால் அவன் பிரமைக்கு ஆளாகாமல் இருந்தான். ஐந்தாவது தளத்தில் பாய்மரத் தண்டைப் பிடித்த வண்ணம் சிலை

போல் நின்றுவிட்ட அவன்மீது சூடான கடல்நீர் அலை அலையாக மோதி விழுந்தபோது அவன் அதிர்ச்சியடையாமல் அவஸ்தையை ரசிக்க முற்பட்டான். சிந்தனை பழுது படாமல் இருந்தது. தேவபுத்தர் நாகதீபத்தின் அரசனாவதற்குத் தன்னைத் தேர்ந்தெடுத்தது அர்த்தமுள்ள காரியமாக இருக்குமானால் தனக்கும் தன் மரக்கலத்திற்கும் எதுவும் நிகழாது என்று திடமாக நம்பினான். இத்தகைய நிலையில் சுமார் அரை நாள் பொழுதிற்கு கண்டபடி ஒடிய மரக்கலம் வேகம் குறைந்து மிதக்கும் நிலைக்கு வந்தது. வானத்தை மறைத்திருந்த நீராவி மண்டலமும் சாம்பல் மண்டலமும் நீங்கி வானம் தெளிவாகக் காணப்பட்டது. தங்களைச் சூழ்ந்த பயங்கரம் விலகும் என்று எதிர்பார்த்துத் தவித்துக் கிடந்த அனைத்து மாலுமிகளும் தெளிவான வானத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்ட மரக்கலத்தையும் கண்டு குதித்துக் களித்தார்கள். மறுஜன்மம் எடுத்தது போல ஆனந்தக் கூத்தாடினார்கள். அந்த ஆனந்தத்தில் அர்த்தமிருந்ததால் விஜயனும் அவர்களோடு சேர்ந்து கொண்டான். அன்று இரவு முழுவதும் எல்லோரும் ஆனந்தக் களைப்பில் உறங்கினார்கள்.

விஜயனும் உபதலைவர்களும் ஒருங்குகூடி பேசினார்கள். அப்போது நடந்தது என்ன என்பதை விளக்கினான் தனஞ்செயன்.

''தலைவரே, நீங்கள் நிலப்பகுதியில் வெடிக்கும் எரிமலைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவை எப்போதோ கிளம்பி வெடித்து மலை வடிவத்திலேயே இருக்கும். அதன் வாய் திறந்தபடியே இருக்கும். பூமியின் உட்பகுதி குலுங்கும் போதெல்லாம் அந்த மலைவாய் வழியாக சாம்பலும் புகையும் அக்னி குழம்பும் பீறிட்டு மலைமீதே வழிந்து நிலத்தில் ஓடும். பூமியின் மேல் ஓடு பலவீனமாக இருக்கும் இடங்களிலேயே இதுபோன்ற எரிமலைகள் வெடிக்கின்றன. இதேபோன்று பலவீனமான மேலோட்டைக் கொண்ட பூமியின் பரப்புகள் கடலுக்குள்ளும் இருக்கின்றன. பூமியின் ஆழமான உட்பகுதி குலுங்கி அழுத்தம் அதிகரிக்கும் போது அந்தப் பரப்பு வெடிக்கின்றன. அவற்றிலிருந்து சாம்பல் எழுந்து வானவெளியை மறைக்கின்றன. நீராவி மிக உயரத்திற்கு பீறிட்டு கடலில் கரையும்போது கடல்நீர் கொதிக்கிறது. அந்தப்

பகுதியில் இருக்கும் கடல் வாழ் இனங்கள் செத்துப்போய் மிதக்கின்றன. அந்த எரிமலை அதிர்வினால் கடல் பகுதியில் பெரும் கலக்கமடைந்து உயரமான அலைகளை எழுப்புகின்றன. அதற்குள் சிக்கிய மரக்கலங்கள் அலைக்கழிக்கப்பட்டு அழிகின்றன. அப்படிப்பட்ட கடல் எரிமலைப் பகுதியில் தான் நமது தீவுக்கப்பலும் சிக்கிக் கொண்டிருக்கிறது. அநேகமாக இது அழிந்திருக்க வேண்டும். யார் செய்த புண்ணியமோ நமது கப்பல் அதிசயமாகப் பிழைத்திருக்கிறது''

''கப்பலுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்குமா?'' கேட்டான் விஜயன்.

''நிலைமை மோசமாவதற்கு முன்பாக நாம் பாய்களை இறக்கி சுருட்டிவிட்டோம். இல்லாவிட்டால் கப்பல் மேலும் தாறுமாறாக ஓடியிருக்கும். பாய்கள் கிழிந்து முற்றிலும் சேதமாகியிருக்கும். அது தவிர்க்கப்பட்டு விட்டது. அலைகளின் முரட்டுத்தனத்தால் மரக்கலம் கவிழ்ந்திருக்கலாம். அல்லது உடைந்திருக்கலாம். சாதாரண மரக்கலமாக இருந்திருந்தால் அப்படித்தான் ஆகியிருக்கும். ஆனால் நமது மரக்கலமோ பிரம்மாண்டமானத் தீவு கப்பலானதால் பேரலைகளால் எதையும் செய்ய முடியவில்லை'' என்றான் தனஞ்செயன்.

அவனது கடலறிவையும் விளக்கத்தையும் கேட்டு அவனை மனதாரப் பாராட்டினான் விஜயன். பிறகு ''இதுபோன்ற கடல் எரிமலைகள் இன்னும் இருக்குமா?'' என்று கேட்டான்.

''அதுபற்றி உறுதியாக எதுவும் கூறமுடியாது தலைவரே. சாதாரணமாகவே சொர்ணபூமி பகுதியிலிருந்து ஆரம்பித்து சாவகக் கடல் மற்றும் கிழக்கு கடற்பகுதியில் இதுபோன்ற மர்மங்கள் உண்டு. நிலநடுக்கங்கள் கடலுக்குள் நடக்கின்ற பகுதியாக இதனைக் கடலோடிகள் கருதுவார்கள். சொர்ணபூமி பகுதியிலிருந்து தென் கீழைக் கடல் பகுதியில் ஏதாவது, அதிசயங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. பழையத் தீவுகள் கடலுக்குள் மூழ்குவதும் புதிய தீவுகள் கடலிலிருந்து மேலெழுவதும் இங்கு நடந்து வருகின்றன. சாவகம் மற்றும் கீழை நாடுகளில் நிலப்பகுதியில் ஜீவ எரிமலைகள் நிறைய

இருக்கின்றன. அடிக்கடி அவை நெருப்புக் குழம்பை உமிழ்கின்றன. சொர்ணபூமிக்கும் சாவகத்திற்கும் இடையே பெரியதோர் எரிமலை இருக்கிறது. அது வெடித்து ஒரு ஊரே அழிந்திருக்கிறது''* என்றான் தனஞ்ஜெயன்.

''ஆபத்தில்லாத இடங்களோ நேரங்களோ கிடையாது தனஞ்ஜெயா. நமது மரக்கலத்தையே ஆபத்தான இடமாக மாற்றியவன் ராகுலன். ஆகவே ஆபத்துக்களால் நாம் அஞ்சவோ தயங்கவோ வேண்டியதில்லை. நடப்பது நடந்தே தீரும். அதை எதிர்கொள்வது தான் நம் கடமை'' என்றான் விஜயன்.

மறுநாள் காலை தனஞ்ஜெயன் தான் சிறந்த மாலுமி என்பதை மீண்டும் நிரூபித்தான். கீழ்த்தள அடிமைகளை துடுப்பு வலிக்கச் சொல்லிவிட்டு சுருட்டி வைக்கப்பட்ட பாய்களை விரிக்கவிட்டான். திசை காட்டும் கருவியைக் கொண்டு திசையைச் சரிபார்த்து செல்லவேண்டிய மார்க்கத்தில் சுக்கானைத் திருப்பச் சொல்லி தீவுமரக்கலப் பாதையைச் சீர்த்திருத்தினான். எட்டுநாள் பயணத்திற்குப் பிறகு சொர்ணபூமியின் அருகே வந்து விட்டதை விஜயனுக்கு அறிவித்தான் தனஞ்செயன்.

அப்போது அஃசுவநாவிகர் விஜயனிடம் வந்து ''தலைவரே, இச் சொர்ணத் தீவு சொர்ணபூமி என்றே அழைக்கப்படுகிறது. இங்கே தங்கம் நிறைய கிடைப்பதால் இப்பெயர் வந்ததாகக் கூறுவார்கள். கீழை நாட்டுத் தீவுகளில் தற்போது இதுதான் பலமான தீவாக இருந்து வருகிறது. இத்தீவை ஆள்பவர்களும் திறமைசாலிகள். ஆகவேதான் இத்தீவிற்கு இரண்டு துறைமுகங்களை அமைத்திருக்கிறார்கள். ஒன்று போர்த் துறைமுகம். அதன் கண்ணில் நமது கப்பல் பட்டால் அவ்வளவுதான். நூற்றுக்கணக்கான போர்க்கலங்கள் நம்மை நோக்கி வந்து கைப்பற்றிவிடும். நாம் அங்கே போக வேண்டிய அவசிய மில்லை. இரண்டாவது துறைமுகமான வணிகத் துறை முகத்திற்குத்தான் நாம் போகப் போகிறோம். அதை நோக்கி கப்பலைச் செலுத்த வேண்டும்'' என்றார்.

* Page 125 'Unexplained' by Dr. Karl.P.N. Shuker

விஜயனும் தனஞ்ஜெயனும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்கள்.

விரைவிலேயே வணிகர் துறைமுகத்தை நெருங்கியது. அங்கே கப்பல்கள் எந்த இடத்தில் நங்கூரம் பாய்ச்சி நிற்கவேண்டும் என்பதை படகில் கண்காணிப்பு செய்து வந்த காவல் வீரர்கள் அறிவிக்கவே தனஞ்செயனே தீவுக்கப்பலை நங்கூரமிட்டு நிறுத்தினான். அத்தீவுக்கப்பலுக்கு முன்பாக நான்கு மரக்கலங்கள் துறைமுகத்திற்குள் நுழைவதற்காகக் காத்திருந்ததால் தன் மரக்கலம் நுழைவதற்கு எப்படியும் ஒருநாள் ஆகும் என்பதை விஜயனுக்குத் தெரிவித்தான். அந்த அவகாசத்தில் கடற்கரைக்குச் சென்று அதையடுத்த வணிக ஸ்தலத்தை நோட்டம் விட்டு வர விஜயன் விரும்பினான். அப்போது ஏதோ பேசமுற்பட்ட அசுவநாவிக் என்ன காரணத்தாலோ மௌனமாக இருந்து கொண்டார். விஜயனோடு அவரும், டெமிட்ரியஸும், உதயணனும் நூலேணியில் இறங்கி படகு மூலம் கரையை அடைந்தார்கள். கடற்கரை கணிசமான அகலத்திற்கு இருந்தது. கப்பல்களில் இருந்து படகுகள் மூலம் கொண்டுவரப்பட்ட சரக்குகள் கடற்கரையின் இரண்டு பக்கங்களிலும் வரிசையாக இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. சம்பந்தப்பட்ட வியாபாரிகள் சரக்குகளின் விவரத்தைச் சொல்லச் சொல்ல சுங்க அதிகாரி அந்த விவரங்கள் உண்மைதானா என்பதை அறிய பல்வேறு சோதனைகளைச் செய்தார். சோதனையின்போது சரக்கு மூட்டைகளும் பெட்டிகளும் சற்றே சேதமடைந்து உள்ளேயிருந்த பொருட்கள் மணலில் சிதறின. அப்படிச் சிதறிய பொருட்களில் உயர்தர சந்தன பொம்மைகளும், மாலைகளும் இருந்தன. ஆனால் அவற்றை வணிகர்கள் பொறுக்கி எடுக்க சுங்க அதிகாரி அனுமதிக்கவில்லை. சோதனை முடிந்தபின் சரக்குகளுக்குச் செலுத்த வேண்டிய சுங்கவரித்தொகை அறிவிக்கப்பட்டது. சுங்க அதிகாரி எதுவும் கணக்கிட்டுச் சொன்னமாதிரி தெரியவில்லை. ஏதோ சகட்டு மேனிக்கு அறிவித்தார். வணிகர்கள் எதுவும் பேசாமல் வரித்தொகையாக தங்க நாணயங்களையோ தந்த நாணயங்களையோ செலுத்திய பின்பு சரக்கு மூட்டைகளின் மீது முத்திரை குத்தப்பட்டது.

அச்சமயத்தில் ஓரிரு மூட்டைகளை சுங்க அதிகாரி தனக்காக ஒதுக்கிக் கொண்டார். அவ்வாறு ஒதுக்கப்படும் சரக்கு மூட்டைகளை ஏற்றிச் சொல்ல பாரவண்டிகள் தயாராக நின்றிருந்தன. கடற்கரையின் இருபுறமும் இதே நிலைதான் நிலவியது. அதைக்கண்ட விஜயன் ''ஒரே அடாவடியாக இருக்கிறதே அசுவநாவிகரே?'' என்று கேட்டான்.

''சரக்குகளை விற்க இந்த இடத்தை விட்டால் வேறு இடங்களுக்குப் போகவேண்டும். சாவகத்திற்குப்* போக வேண்டும். இல்லையென்றால் சொர்ணபூமியின் மறுகரைக்கு வந்து கடாரம் போன்ற இடங்களை நாடவேண்டும். அது மிகவும் சிரமம் என்பதாலும் லாபமற்றது என்பதாலும் இங்கேயே விற்றுவிட வணிகர்கள் விரும்புகிறார்கள். வாருங்கள். இந்தச் சரக்குகளை வாங்கும் வணிகசாலைக்குப் போவோம்'' என்றான் அசுவநாவிகர்.

வணிகஸ்தலமானது விசாலமானதாக இருந்தது. அதேசமயம் கட்டுக்கோப்பாக இருந்தது. பல்வேறு நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் அங்கே காணப்பட்டார்கள். கீழைக்கடலில் சொர்ணபூமியே பெரிய வணிகத்தளமாக இருந்த காரணத்தால் அங்கே பல நாட்டைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமாகவே தங்கி வியாபாரத்தில் ஈடுபட்டு சரக்குகளை வாங்கி உள்நாட்டு பகுதிகளுக்கு அனுப்பி நல்ல விலைக்கு விற்று கொழுத்த லாபம் சம்பாதித்து வந்த காரணத்தால் அவர்களது வாழ்க்கை செழிப்பாக இருந்தது. அவர்களது தேகங்களும் கொழுத்துக் கிடந்தன. வணிகஸ்தலமானது பல்வேறு சரக்குகளுக்கு ஏற்ப பல்வேறு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஆபரணங்கள், மிளகுப் பொதிகள், வாசனை திரவியங்கள், மீன் உணவுகள், துணிகள் என ஒவ்வொரு ரகத்திற்கும் ஒவ்வொரு நுழைவு வாசல் இருந்ததால் கடல் வணிகர்கள் தங்கள் சரக்குகளை அடிமைகளின் மீதும் கழுதையின் மீதும், ஒட்டகங்களின் மீதும் ஏற்றி சம்மந்தப்பட்ட நுழைவு வாயில்களில் நுழைந்தார்கள். உள்ளே சரக்குகள் பல்வேறு தொட்டிகளில் கொட்டப்பட்டதும்

* சாவகம் என்பது தற்காலத்தில் ஜாவா என்றும், சொர்ணத்தீவு என்பது சுமத்ரா என்றும் அழைக்கப்படுகின்றன.

சொர்ணத்தீவைச் சேர்ந்த வியாபாரிகள் பொருட்களின் தரத்தைச் சோதிப்பதுமாய் விலையை நிர்ணயிப்பதுமாய் இருந்தார்கள். சில இடங்களில் கடல் வணிகர்களோடு வந்திருந்த தரகர்கள் விலை பேசினர். பேரம் முடிந்த பொருட்கள் வணிகஸ் தலத்திற்கு அருகாமையில் இருந்த பெரும் வண்டிகளில் ஏற்றப்பட்டன. இங்கேயும் ஸ்வர்ணபூமி வியாபாரிகளின் அடாவடிகள் தான் அதிகமாக இருந்தன.

அதையெல்லாம் பார்த்து பின் ''தலைவரே, என்ன நினைக்கிறீர்கள் இந்த வியாபாரத்தைப்பற்றி?'' என்று கேட்டான்.

''வியாபாரம் என்றால் ஏற்ற இறக்கம் இருக்கும். பேரங்கள் இருக்கும். லாப நஷ்டங்களும் இருக்கும். ஆனால் இங்கே சுங்க அதிகாரிகளிடம் ஆரம்பித்து எங்கே பார்த்தாலும் அடாவடியும் ஊழலும்தான் அதிகமாக இருக்கிறது'' என்றான் விஜயன்.

''அதற்குக் காரணம் இந்த அடாவடி மூலம்தான் இந்நாட்டு மன்னனின் கருவூலத்திற்கு அதிக வருமானம் போகிறது. சுங்க அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கிக்கொள்ளும் சரக்குகளில் பாதிக்குமேல் மன்னனுக்குப் போய்ச் சேருகிறது. எனவே தான் மன்னன் இத்தகைய அடாவடிகளை அழிப்பதற்கு பதில் வளர்க்கிறான்'' என்றார் அசுவநாவிகர்.

''இந்த ரீதியில் நமது பொருட்கள் விற்கப்படுமானால் நமக்கு நஷ்டம் அதிகமாக இருக்குமல்லவா?'' என்று கேட்டான் விஜயன்.

''நாம் வேறு ஒரு வழியில் நமது சரக்குகளை விற்க முயலுவோம்''

''எப்படி?''

''இங்கே எனக்குத் தெரிந்த தரகன் ஒருவன் இருக்கிறான். அவன் சாமான்யமானவன் அல்ல. பெரும் அதிகாரமும் ஆட்பலமும் கொண்டவன். மன்னனுக்கு இணையான வணிக ராஜ்யம் ஒன்றை அவனிங்கே நடத்துகிறான். அவன் விஷயத்தில் மன்னன்கூட தலையிடுவதில்லை. அவன் பொருட்கள் எல்லாவற்றையும் நன்றாக வாங்கி விற்கக்கூடிய தரகன். அவன்

மட்டும் நமக்குக் கிடைத்துவிட்டால் இந்த அடாவடிகள் இருக்காது. பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும்''

''எங்கிருக்கிறான் அவன்?''

''தெரியாது. ஆனால் கண்டுபிடித்து விடலாம். ஆனால்...''

''என்ன ஆனால்?''

''அதில் ஒரு சிக்கல் இருக்கிறது''

''சிக்கலா?''

''சிக்கல் என்பதைவிட ஆபத்து என்று சொல்லலாம்''

''என்ன ஆபத்து?''

''அவனிடம் சரக்குகளை விற்றவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உயிரோடு ஊருக்குப் போய்ச் சேர்ந்ததில்லை''

''ஏன்?''

''செத்துவிடுகிறார்கள்''

''எப்படி?''

''தெரியவில்லை. மர்மமாக இருக்கிறது. நல்ல விலைக்கு விற்ற அவர்கள் இக்கடற்கரையிலேயே கூத்தடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அதற்கடுத்த இரண்டொரு நாட்களில் அவர்களது சடலங்கள் சிதைந்த நிலையில் கடற்கரை பகுதியில் இருக்கும்''

''யாராவது கொலை செய்து விடுவார்களா?''

''அப்படித்தான் நாம் நினைப்போம். எல்லாரும் நினைப்பார்கள். ஆனால்''

''ஆனால் என்ன?''

''இத்தீவில் உள்ள பறக்கும் ராட்சதக் குரங்குதான் அவர்களைக் கொல்வதாக இங்குள்ளவர்கள் சொல்கிறார்கள்?''

''பறக்கும் குரங்கா? நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லை அசுவநாவிகரே'' என்றான் விஜயன்.

அப்போது குறுக்கிட்ட உதயணன் ''அசுவநாவிகர் கூறுவது உண்மையாக இருக்கலாம் தலைவரே, பறக்கும் குரங்குகளை

விட வினோதமான சிருஷ்டிகளை நாங்கள் அந்த இரகசிய தீவில் கண்டோம்'' என்றான்.

''அசுவநாவிகரே! பறக்கும் குரங்கானது நீங்கள் குறிப்பிடும் தரகரிடம் வியாபாரம் பேசும் வணிகர்களை மட்டும் கொல்வது எப்படி?''

''யாராவது ஏவிவிடுகிறார்கள் என்று தோன்றுகிறது''

''எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். நாம் அந்தத் தரகரை நாடவேண்டும். நீங்கள் உடனடியாக அவரைக் கண்டு பிடியுங்கள்'' என்றான் விஜயன்.

அசுவநாவிகர் தரகர் விஷயமாக மர்மம் இருப்பதாகவும் அதில் உயிர் போகக் கூடிய ஆபத்து உண்டாகக்கூடும் என்றும் கூறியிருந்தாலும், அசுவநாவிகர் விஜயன் மீது உண்டாகியிருந்த உறுதியான நம்பிக்கையின் காரணமாக தயக்கம் எதுவுமின்றி தரகரைத் தேடி புறப்பட்டார்.

மற்ற மூவரும் பண்டக சாலைகள் பக்கம் சென்று பல்வேறு நடப்புகளைப் பற்றி அறிந்தார்கள். ஸ்வர்ணபூமியின் மன்னனது பெயர் ஸ்வர்ணேசுவரன் என்பதையும் மிகவும் சிறந்த நிர்வாகி என்றும் தைரியத்திற்குப் பெயர் பெற்றவன் என்பதையும் எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அக்காலத்தில் வட இந்தியாவிலும் கீழ்த்திசை நாடுகளிலும் பாலிமொழி பிரசித்தமாகியிருந்தபடியால் சுவர்ணத்தீவிலும் அந்த மொழியே பெரும்பாலாகப் பேசப்பட்டு வந்தது. அன்று முழுவதும் அலைந்த அவர்கள் பல்வேறு விஷயங்களைச் சேகரித்தார்கள். பறக்கும் குரங்கு பற்றியும் சிலர் தெரிவித்தார்கள். சுவர்ணத்தீவிற்கும் சாவகத்திற்கும் இடையே இருந்த பெரும் எரிமலையில் அந்த ராட்சதக் குரங்கு வசிப்பதாகவும் எப்போதாவது நாட்டுப் பகுதிகளுக்குள் வந்து துஷ்டர்களைத் தூக்கிச் சென்று எரிமலைக்குள் போடுவது வழக்கம் என்றார்கள். அது பறந்து வருமானால் வானமானது மறைந்து பூமி இருண்டுவிடும் என்றும் அப்போது என்ன நடக்கும் என்பது தெரியாது என்றும் சிலர் தெரிவித்தார்கள். அக்குரங்கின் செயல்கள் ஏதோ சாபகாரியங்கள் என்று மன்னன் உட்பட எல்லோரும் நம்புவதாகச் சொன்னார்கள். அவை யாவும்

நம்பமுடியாத கட்டுக் கதையைப் போலத் தோன்றினாலும் விஜயனும் மற்றவர்களும் அதைப்பற்றி கவலைப்படவில்லை.

அன்றிரவு வெகுநேரமான பின்பே திரும்பிவந்தார் அசுவநாவிகர்.

''தரகரைக் கண்டீர்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''தரகரைக் காணமுடியவில்லை. ஆனால் தரகரின் துணைவனைக் கண்டேன். தரகரைக் காண அனுமதியும் பெற்று விட்டேன்''- என்றார் அசுவநாவிகர் சந்தோஷத்துடன்.

''எப்போது சந்திக்கலாம்?''

''நாளைக் காலையில்''

இதைக் கேட்டுப் பெரும் திருப்தியடைந்தான் விஜயன்.

மறுநாள் இதே நால்வர் தரகரைச் சந்திக்கச் சென்றனர்.

அவர்களுக்கு முன்னால் வந்த தரகர் அங்கே இருந்தவர் களிடம் நல்லமுறையில் பேசி பொருட்களை வாங்கிக் கொள்ளவும் சம்மதித்தார்.

ஆனால் அவர் எழுப்பிய கோரிக்கையோ எதிர்பாராததாக இருந்தது.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்தொன்று

## தரகர்

அன்றிரவெல்லாம் விஜயனும் மற்றவர்களும் நிம்மதியாகப் பொழுதைக் கழித்தார்கள். மறுநாள் காலை தரகரைச் சந்திக்கப் புறப்பட்டபோது ராஜரீக உடைகளை அணிந்து கொண்டான் விஜயன். உதயணன், டெமிட்ரியஸ் மற்றும் அசுவநாவிகர் ஆகியோர் வணிகர்களைப் போல ஆடைகளை அணிந்து கொண்டார்கள். கப்பலிலிருந்து கரைக்கு வந்து சுங்க அதிகாரியிடம் அசுவநாவிகர் வெள்ளி நாணயம் ஒன்றை எடுத்துக்காட்டியபோது அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்த சுங்க

அதிகாரி நாணயத்தைக் கொடுத்த நால்வரையும் வியப்புடன் பார்த்தார்.

''உங்களுக்கு உயிரின்மீது ஆசையில்லையா?'' என்று கேட்டார் அகன்ற கண்களுடன்.

''இருக்கிறது'' என்றான் விஜயன்.

விஜயனையும் அவனது தோற்றத்தையும் கண்ட சுங்க அதிகாரி ''இவன் ராஜகுமாரனாக இருக்க வேண்டும்'' என்று சொல்லிக்கொண்டு ''உயிரின் மீது ஆசையிருந்தால் எதற்காக இந்த முயற்சி?'' என்று கேட்டார்.

''ஆசை இருக்கிறது. ஆனால் கவலை இல்லை'' என்றான் விஜயன்.

''ஆகா. பேச்சில் வல்லவர்கள் இவர்கள். இருந்தாலும் விதிக்கு முன் பேச்சு என்ன செய்ய முடியும்?'' என்று சொல்லிக் கொண்ட அவர் அவர்களை அனுப்பிவிட்டு படகோட்டிகளை அழைத்தார். படகோட்டிகள் வந்து சேர்ந்தபோது அவர் பிரமையில் ஆழ்ந்தார்.

''ஐயா, என்ன அப்படியே உட்கார்ந்து விட்டீர்கள்?'' என்று கேட்டார்கள் படகோட்டிகள்.

''பறக்கும் குரங்கு வரப் போகிறதடா முட்டாள். அது தெரியாமல் நான்கு அப்பாவிகள் தரகரிடம் போகிறார்கள். பாவம்'' என்று அலுத்துக் கொண்ட அவர் ''அதோ அந்தத் தீவுக்கப்பலில் இருக்கும் சரக்குகளை பத்திரமாக இறக்கி இக் கடற்கரையின் நடுவே அடுக்குங்கள். ஒரு துரும்பு கூடச் சிதறக் கூடாது. ஜாக்கிரதை'' என்று கூறினார்.

இதற்கிடையில் தரகரின் இருப்பிடத்திற்குச் சென்ற விஜயனும் மற்றவர்களும் தரகரின் துணைவனைச் சந்தித்தார்கள்.

''நீங்கள் எந்த நாட்டிலிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்டான் துணைவன்.

''பரத கண்டத்தில் வங்கதேசத்திலிருந்து வருகிறோம்'' என்றான் விஜயன்.

''எல்லா விவரங்களையும் அறிந்துதான் வந்திருக்கிறீர்களா?''

''எல்லா விவரங்களையும் என்றால்?''

''இதற்கு முன்பு நீங்கள் வந்ததில்லையா?''

''இல்லை''

''இப்போது எதற்கு வந்தீர்கள்?''

''சரக்குகளை நல்ல விலையில் விற்பதற்காகத்தான்''

''நீங்கள் எதிர்பார்க்கும் விலையைவிட அதிகவிலை கிடைக்கும்''

''மிக்க மகிழ்ச்சி''

''ஆனால் ஒரு விஷயம் முக்கியம்''

''சொல்லுங்கள்''

''நீங்கள் எதிர்பார்க்கும் விலையைவிட தரகர் அதிக விலையை கொடுத்து வாங்குகிறார் என்றால் அதற்கு அவர் எதிர்பார்க்கும் விஷயத்திற்கு நீங்கள் ஒப்புக் கொள்ளவேண்டும்''

''அவர் என்ன எதிர்பார்ப்பார்?''

''அது அவருக்குத்தான் தெரியும்''

''என்ன கேட்கிறாரோ கேட்கட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்''

''அற்பமாக எடை போடவோ எதிர்பார்க்கவோ முயலாதீர்கள்''

''சரி''

''என் அறிவுரை ஒன்றை நான் சொல்லலாமா?''

''சொல்லுங்கள்''

''பணத்தைவிட உயிர் முக்கியம். பணத்தை இழந்தால் மீண்டும் பெறலாம். உயிரை இழந்தால் மீண்டும் பெறமுடியாது. ஆகவே...''

''சொல்லுங்கள்''

''நீங்கள் தரகரை சந்திக்காமல் போய்விடுவதே நல்லது''

''நாங்கள் பறக்கும் குரங்கைக் கூடச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். எங்களுக்கு எந்த பயமும் இல்லை''

'துணைவன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மாளிகையின் உள்ளே போய்விட்டு வந்து ''நீங்கள் உள்ளே போகலாம்'' என்றான்.

நால்வரும் உள்ளே சென்றார்கள்.

''ஏன் அசுவநாவிகரே, பறக்கும் குரங்கை ஏவி விடுபவன் இத்தரகனாக இருக்குமோ?'' என்று கேட்டான் விஜயன்.

அசுவநாவிகர் இதற்கு பதில் சொல்லவில்லை.

பிறகு மாளிகைக்குள் சென்ற அவர்களை ஆசனங்களில் அமரச்சொல்லி உபசரித்தான் பணியாள். சில நிமிடங்கள் கழித்து அங்கே வந்து அமர்ந்த தரகரைக் கண்டதும் நான்கு பேருமே அசந்து போனார்கள்.

''நீங்கள் தான் தரகரா?'' என்று வாய்விட்டுக் கேட்கவே செய்தான் விஜயன்.

''ஏன்? எதற்காக இப்படியொரு சந்தேகம்?'' என்று கேட்டார் தரகர்.

''பெண்ணாக இருப்பதால் வியப்படைந்து விட்டார் எங்கள் தலைவர்'' என்று குறுக்கிட்டுச் சொன்னார் அசுவநாவிகர்.

''ஏன்? பெண்கள் தரகர்களாக இருக்கக் கூடாதா? அல்லது பெண்கள் தரகர்களாக இருப்பது உங்கள் தலைவருக்குப் பிடிக்காதா?'' என்று கேட்டாள் அப்பெண் தரகர்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இங்கே இதுவரை இருந்த தரகர்களின் பிராபல்யம் பற்றிக் கேள்விப்பட்டோம். அதை வைத்துக்கொண்டு தரகர் அனுபவம் வாய்ந்த முரட்டுச் சுபாவம் கொண்ட மத்திய வயதிற்குடையவராக இருப்பார் என்று எதிர்பார்த்தோம். நீங்களோ அழகுக்கு அழகு செய்ய வந்த அழகியாய் இளம் பெண்ணாக இருக்கிறீர்கள். இதை யாரும் எதிர்பார்க்கவில்லை'' என்றார் அசுவநாவிகர்.

இப்படி நால்வரையும் கலங்கடித்த அப்பெண் சர்வ அலட்சியமாக கால்மீது காலைப் போட்டுக்கொண்டு பெரும் தோரணையுடன் அமர்ந்திருந்தாள். அவளது நீண்ட பொன்னிற குழல்கள் கட்டிமுடிக்கப்படாததால் காற்றில் அசைந்து முகத்தைக் காட்டியும் மறைத்தும் சென்றவிதமானது அவளது முகத்தோடு விளையாடுவது போலிருந்தது. எடுப்பான நாசியும் அகன்ற கண்களும் அவளது முகத்திற்கான அழகை எடுப்பாகக் காட்டின. சாயம் பூசப்பட்ட இதழ்கள் வழுவழுப்புடன் நெளிந்த விதமானது எதிரே இருந்தவர்களைச் சுண்டியிழுப்பது போல் இருந்தது. அவள் ஏதோ கலப்பு இனத்திற்குப் பிறந்தவள் என்பதை உணர்த்தும் விதத்தில் மாறுபட்டு இருந்தது முகச்சாயல். உயர்ரக ஆடைகளை அணிந்திருந்தாலும் குறிப்பிட்ட இடங்களில் அவை வெட்டி தைக்கப்பட்டிருந்ததால் ஆடவர்களை மயக்கும் அங்கங்கள் அங்கங்கே பளிச்செனத் தெரிந்து அச்சமூட்டின. அவள் பேசும்போது வெளிப்பட்ட பற்கள் வெண்மைக்கு உதாரணம் காட்டுவது போல் மாசுமறுவற்று காணப்பட்டது.

தனது அழகை நால்வரும் ரசிப்பதைக் கண்ட அவள் ''நீங்களெல்லாம் பரத நாட்டைச் சேர்ந்தவர்களா?'' என்று கேட்டாள்.

''ஏன்?'' கேட்டான் விஜயன்.

''அந்த நாட்டவர்களுக்குத்தான் ரசனை அதிகம். ரசிப்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை'' என்றாள் அவள்.

அவள் எதைக் குறிக்கிறாள் என்பது அவர்களுக்குப் புரியாமலில்லை. ஆனால் பாராட்டுகிறாளா அல்லது கேலி செய்கிறாளா என்பது புரியவில்லை.

இதற்கிடையில் அவளே பேசமுற்பட்டு ''உங்கள் சரக்குகளின் பட்டியலைக் காட்டுங்கள்'' என்றாள்.

அசுவநாவிகர் ஒரு பட்டியலை நீட்டியதும் அதை அலட்சியமாக வாங்கிய அவள் நிதானமாகப் படித்துவிட்டு ''ஒன்றும் பிரமாதமாக இல்லை'' என்றாள்.

அதைக் கேட்டதும் விஜயன் பேசமுற்பட்டு ''அப்படிச் சொல்லவேண்டாம். இதோ பாருங்கள்'' என்று கூறி சிறியதோர் பட்டு மூட்டையை அவிழ்த்து அதில் இருந்த முத்துக்களைக் காட்டி ''இந்த முத்துக்களைப் பாருங்கள். இவை ஸ்தூலமானவை. உருண்டையானவை. தட்டையில்லாமல் இருப்பவை. ஒளியோடு இருப்பவை. வழுவழுப்பும் லேசான மஞ்சள் கலந்த வெண்மையும் கொண்டவை. பாண்டிய நாட்டு முத்துக்கள்'' என்றான்.

முத்துக்களை வாங்கிப் பார்த்த அவள் ''உங்கள் தேசத்தில் முத்துக்கள் இல்லையா? பாண்டிய நாட்டு முத்துக்களை நீங்கள் ஏன் வாங்கிவிற்க வேண்டும்?'' என்று கேட்டாள்.

''சிறப்பான பொருட்கள் எங்கே இருந்தாலும் தேடி வாங்கி பல இடங்களுக்கும் அனுப்புவது வணிகர்களுக்கே உரிய சிறப்பு. அதோடு பாண்டிய நாட்டில் தற்போது மரக்கலங்கள் சரிவர இல்லாத காரணத்தால் அங்கிருந்து முத்துக்களை இங்கே அனுப்புவதில்லை. எங்கள் வங்கநாடு மரக்கலப் பலம் பெற்ற நாடு. பல நாடுகளுக்கும் கப்பல் மூலம் வணிகம் செய்கிறோம். ஆகவே முத்துக்களுக்குப் பேர்போன பாண்டிய நாட்டிலிருந்து முத்துக்களைப் பெற்று கீழை நாடுகளுக்கு விற்கிறோம். அதுமட்டுமல்ல. ஆயிரத் தெட்டு முத்துக்களைக் கோர்த்து இந்திரச் சந்தம் என்ற முத்துமாலையைச் செய்கிறோம். நூறு முத்துக்களால் ஆன தேவச் சந்தம், அறுபத்து நான்கு முத்துக்களால் ஆன அர்த்தஹாரம், ஐம்பத்து நான்கு மணிகள் கொண்ட ரஷ்மி களாபம், முப்பத்தி இரண்டு முத்துக்களைக் கொண்ட குச்சம், இருபத்தி ஏழு முத்துக்களைக் கொண்ட நட்சத்திர மாலை, இருபத்தி நான்கு முத்துக்களால் ஆன அர்த்த குச்சம் மற்றும் மாணவகம் ஆகிய ஆபரணங்களை* தயார் செய்து விற்பனைக்காகக் கொண்டு வந்திருக்கிறோம். இவற்றை அரசமகளிர் அப்படியே அணிந்து மகிழலாம். உங்கள் கழுத்தில் அறுபத்து நான்கு முத்துக்களைக் கொண்ட ஹர்த்த ஹாரத்தை அணியச் செய்தால் சங்குக் கழுத்து ஜொலிக்கும்'' என்றான்.

---

* அத்தியாயம் 9 பக்கம் 165 அர்த்த சாஸ்திரம். தமிழில் ஆனந்த நாச்சியாரம்மா.

''அப்படியா?'' என்றாள் அவள்.

''அது மட்டுமல்ல. நாங்கள் கொண்டு வந்த மிளகு சேர நாட்டின் மலைக்காடுகளில் விளைந்தவை. உயர்ரகமானவை. உணவுக்கும் மருந்துவத்திற்கும் உபயோகப்படக்கூடிய சிறப்பான பண்டம். இதைப் பெறுவதற்குச் சேரநாட்டில் யவனர்கள் போட்டி போடுகிறார்கள். அந்நாட்டில் வெண் முத்துக்கள் சிந்திக் கிடந்தாலும் மக்கள் சீந்துவதில்லை. கறுப்பு முத்துக்களான இந்த மிளகு ஒன்று சிந்தி விழுந்தாலும் அதைப் பெறுவதற்காகச் சண்டை போட்டுக் கொள்வார்கள். மிளகிற்கு அத்தனைச் சிறப்பு உண்டு. யவன நாட்டவர்கள் இம்மிளகிற்கு 'யவனப் பிரியா' என்றே பெயர் சூட்டியிருக்கிறார்கள். அதே போல எங்கள் நாட்டு வாசனை திரவியங்களின் சிறப்பு வேறெதற்குமில்லை...'' என்று விஜயன் கூறிக்கொண்டே போக, தரகர் பெண் ''போதும் போதும்'' என்று கூறி நிறுத்தினாள்.

''உங்கள் சரக்குகளைவிட நீங்கள் சரக்குடையவர் என்பது புலனாகிறது. எத்தனையோ வர்த்தகர்கள் என்னிடம் வந்து வார்த்தை ஜாலங்களைக் காட்டி ஏமாந்து போயிருக்கிறார்கள். சிலரை, நான் தண்டித்துமிருக்கிறேன். ஆனால் நானே மயங்கிப் போனது உங்களிடம்தான். நீங்கள் வார்த்தை ஜாலம் காட்டவில்லை. உண்மையை ரசிக்கத்தக்க விதத்தில் சொல்லியிருக்கிறீர்கள். எனக்கு பரமதிருப்தி. உங்கள் சரக்கிற்கு என்ன விலையை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நான் சரக்குகளுக்கான விலையைச் சொல்வதைவிட எங்கள் தேவைகளைச் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் இவற்றை விற்றுத்தான் எங்கள் தேவைகளை வாங்கமுடியும்'' என்று கூறி தன் தேவைகளை விவரமாக எடுத்துச் சொன்னான் விஜயன்.

''உங்கள் பேச்சு நியாயமானதாக இருக்கிறது'' என்று சொன்ன அவள் ''உங்கள் கப்பலை போர்க்கப்பலாக மாற்றி யாரோடு போர் புரியப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''நிச்சயமாக உங்கள் நாட்டோடு அல்ல''

விஜயன் இவ்வாறு கூறியபோது அரண்மனைக் காவலன் ஒருவன் அவசரமாக உள்ளே நுழைந்து வணங்கினான்.

அவனை எரித்துவிடுவதுபோல் பார்த்த அவள் ''உள்ளே நுழைய உனக்கு யார் அனுமதி கொடுத்தது?'' என்று கேட்டாள்.

பதட்டத்தில் இருந்த காவலாளி ''நான் மன்னரிடமிருந்து வருகிறேன்'' என்றான்.

''நான் கேட்டதற்கு பதில் இதுவல்ல'' என்றாள் அவள்.

''அம்மணீ, என்னை மன்னித்து விடுங்கள். மன்னர் கடற்கரைக்கு வந்திருக்கிறார். தங்களை உடனடியாக வந்து சந்திக்கும்படி எனக்கு உத்தரவிட்டார். ஆகவேதான் உங்கள் காவலாளிகளை மீறி உள்ளே நுழைந்துவிட்டேன்''- என்றான் அரண்மனைக் காவலன் பீதியுடன்.

அவளோ தன் தோரணையை விடாமல் ''மன்னரை இன்றைக்குச் சந்திக்க முடியாது என்று அவரிடம் போய்ச் சொல்'' என்று கூறி கையைக் காட்டியதும் காவலன் எதுவும் கூறாமல் வெளியேறினான்.

அவளது அலட்சியமும் தைரியமும் அங்கிருந்தவர்களை அசத்தியது.

அதேசமயம் அவள் தனது முகத்தை இயல்பாக மாற்றிக் கொண்டு ''சொல்லுங்கள். எந்த நாட்டுடன் போரிடப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''யாரோடும் இல்லை. எங்கள் மரக்கலத்தை தயார்ப்படுத்திக் கொண்டு திரும்பப் போகிறோம்'' என்றான் விஜயன்.

இதையடுத்து எல்லோரையும் அங்கேயே அமரும்படிக் கூறிவிட்டு அசுவ நாவிகரை மட்டும் உள்ளே அழைத்துக் கொண்டு போனாள் அவள்.

உள்ளே போனதும் ''ஐயா, வணிகரே, என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டாள் அவள்.

''ஓரளவிற்கு கேள்விப்பட்டிருக்கிறேன் அம்மணீ''

''நான் இந்நாட்டு மன்னனுக்கு இணையான வணிக அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறேன். மன்னன் எனக்கு ஒரு பொருட்டல்ல. சற்று முன் நீங்கள் அதை உணர்ந்திருப்பீர்கள்''

''ஆம் அம்மணி.''

''இத்தீவில் பாதிக்குப் பாதி என் ஆதரவாளர்கள். என் பலத்தை மன்னனால் எளிதில் உடைக்க முடியாது. அதனால் தான் எனக்கு அவன் அடங்கியிருக்கிறான்''

''இருக்கலாம் அம்மணி''

''நான் யாரிடமும் வணிக விஷயத்தை எளிதாக முடித்துக் கொள்வேன். அது ஏன் தெரியுமா?''

''தெரியாது அம்மணி''

''என்னிடம் சரக்குகளை விற்றவர்களில் பெரும்பாலானோர் இத்தீவைவிட்டு வெளியே போனதில்லை''

''ஏன் அம்மணி?''

''இத்தீவில் இருக்கும் பறக்கும் ராட்சதக் குரங்கொன்று அவர்களைக் கொன்றுவிடுகிறது''

''பறக்கும் குரங்கா?''

''ஆமாம். சிலரது உடலை எரிமலையில் போட்டுவிடும். சிலரது உடலை நகருக்குள்ளாவது கடற்கரையிலாவது போட்டுவிடும்''

''ஐயோ''

''எனக்கு சரக்குகளும் கிடைக்கும். அதற்கு கொடுத்த பணமும் திரும்ப வந்துவிடும். எப்படி என் வியாபாரம்?''

''பயங்கரமானது''

''என்னிடம் உள்ள செல்வம் மன்னனிடம் உள்ள செல்வத்திற்கு ஈடானது''

''வியப்பாக இருக்கிறது''

''உங்களது நிலை என்ன என்பது உங்களுக்கு இப்போது புரிகிறதா?''

''புரிகிறது அம்மணீ. ஆனால் நாங்கள் கொள்ளைலாபம் அடிக்க வந்த பேராசைக்காரர்களல்ல. லட்சியம் ஒன்றுக்காகப் புறப்பட்டவர்கள். ஏற்கனவே எங்களிடம் இருந்த பெரும் செல்வத்தை இழந்துவிட்டவர்கள். எங்கள் மீது கருணைகாட்ட வேண்டும்''

''நீங்கள் எதை இழந்தீர்கள்?''

''ஒரு நாட்டையே வாங்கவல்ல கர்ணபத்திர பங்க அணிகலன்கள் அடங்கிய பெட்டிகள்''

இதைக் கேட்டுச் சிரித்தாள் அவள்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''ஒன்றுமில்லை. பொதுவாக நான் யாருக்கும் கருணை காட்டுவதில்லை. உங்களுக்கு மட்டும் கருணை காட்ட வேண்டும் என்றால் நீங்கள் என் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவேண்டும்''

''சொல்லுங்கள் அம்மணி''

''நீங்கள் எனக்கு விற்கும் சரக்குகளோடு இன்னொரு சரக்கையும் தரவேண்டும். அதற்கு எவ்வளவு விலை வேண்டுமானாலும் தர நான் தயார்''

''சொல்லுங்கள் அம்மணி''

''சொன்னாள் அவள்.

அதிர்ந்து போனார் அசுவநாவிகர்.

## அத்தியாயம் ஐம்பத்திரண்டு

# ஸ்ரீவிஜயாவின் கோரிக்கை

''என்ன அதிர்ந்து போய்விட்டீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''இதை நான் எதிர்பார்க்கவில்லை'' என்று சற்று பதட்டத்துடன் சொன்னார் அசுவநாவிகர்.

''எதிர்பாராத விஷயங்கள் வாழ்க்கையில் குறுக்கிடுவது எதிர்பார்க்கக்கூடிய விஷயம்தான்'' என்றாள் அவள்.

''அம்மணி, இந்த விஷயத்தில் நான் எப்படி சம்மதம் சொல்ல முடியும்?''

''வணிகரே, என் பெயர் என்ன தெரியுமா?''

''தெரியாது''

''ஸ்ரீவிஜயா. என் வயது என்ன தெரியுமா? பதினெட்டு. நான் யார் தெரியுமா?''

''யார்?''

''சொர்ணத்தீவு மன்னரின் மகள்''

இதைக் கேட்டதும் ஆடிப் போய்விட்டார் அசுவநாவிகர். அவருக்கு மேற்கொண்டு பேச முடியவில்லை. ''நான் வருகிறேன் இளவரசி'' என்றார்.

''என்ன சொன்னீர்கள்?''

''போய் வருவதாகச் சொன்னேன் இளவரசி''

''அதை மறந்துவிடுங்கள். நான் வணிகர். என்னை வணிகத் தரகர் என்று சொன்னால் போதும்''

''சரி''

''என் கோரிக்கை பற்றி உடனடியாக உங்களவர்களிடம் சொல்லி பரபரப்பை உண்டாக்க வேண்டாம். நான் சொல்லும் போது சொன்னால் போதும்''

''சரி''

''அதுவரை நாம் பேசியதையெல்லாம் நீங்கள் மறந்துவிடுவது நல்லது''

''சரி''

''நீங்கள் போகலாம்''

கனத்த இதயத்துடன் திரும்பிய அசுவநாவிகர் ''விஷயம் முடிந்துவிட்டது''- என்றார் தனது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு.

''அதுதான் அப்போதே முடிந்துவிட்டதே. இவ்வளவு நேரமாக நீங்கள் அவளுடன் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''வியாபார விஷயமாகத்தான் பேசிக்கொண்டிருந்தோம்''

''அதையும் தான் அப்போதே பேசிவிட்டோமே?''

''இளவரசே, வியாபாரத்தில் சில நெளிவு சுளிவுகள் உள்ளன. அதைப்பற்றி உங்களுக்குச் சொன்னால் புரியாது. அவை வணிகர்களோடு இருக்கட்டும். அதுதான் நல்லது''

அசுவநாவிகர் ஏதோ மழுப்பப் பார்க்கிறார் என்று எல்லோருக்குமே தெரிந்தது. இருந்தாலும் அவரை தர்ம சங்கடத்தில் ஆழ்த்த அப்போது விரும்பாமல் ''பறக்கும் குரங்கு பற்றி ஏதாவது சொன்னாளா?'' என்று கேட்டான் உதயணன்.

''பறக்கும் குரங்கா? இதென்ன புதிய கதை?'' என்று ஒன்றும் தெரியாதது போல் கேட்டார் அசுவநாவிகர். அவரது மனமோ படபடத்துக் கொண்டிருந்தது.

''அதைப்பற்றி கூறியதே நீங்கள்தானே? இப்போது போய் வாயைப் பிளக்கிறீர்களே! இதுபற்றி அவள் எதுவும் கூறவில்லையா?'' என்று கேட்டான் உதயணன்.

''இல்லை'' என்று சுருக்கமாகச் சொல்லிக் கொண்டார் அசுவநாவிகர்.

''கோரிக்கை ஏதாவது விடுத்தாளா?'' என்று கேட்டான் விஜயன்.

''பிறகு சொல்வதாகச் சொன்னாள்''

இதற்குப் பிறகு யாரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. தரகரின் மாளிகையை விட்டு கடற்கரைக்கு வந்தபோது அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. தீவுக் கப்பலில் இருந்த சரக்குகள் எல்லாம் கொண்டுவரப்பட்டு கடற்கரையில் நடுப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்தன. அதைச்சுற்றி பலமான பாதுகாப்பு போடப்பட்டிருந்தன. இந்த ஏற்பாடு தரகர் ஸ்ரீவிஜயாவின் காரியமாகத்தான் இருக்கும் என்று நினைத்தார் அசுவநாவிகர். ஆனாலும் அவ்வளவு சரக்கையும் சில நாழிகைப் பொழுதிற்குள் எப்படி இங்கே கொண்டு வரமுடிந்தது என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்ட அவர் ''எல்லாம் அப்பெண்ணின் அசகாயச் சூரத்தனம்தான். தனது ஆட்களில் ஆயிரக்கணக்கானவர்களை ஒரு சேர அனுப்பி எல்லாவற்றையும் கொண்டு வந்திருப்பாள்'' என்று பதிலையும் சொல்லிக் கொண்டார்.

அவர் நினைத்தது சரிதான் என்பதை உறுதி செய்வது போல் அங்கு வந்து சேர்ந்தார்கள் சுங்க அதிகாரிகள். விஜயனையும் அவனைச் சேர்ந்த மூவரையும் அவர்கள் அசூயையுடன் பார்த்தார்கள். தங்களுக்கு வரவேண்டிய ஆதாயமும் அரசாங்கத்திற்குப் போய்ச் சேரவேண்டிய சுங்கவரியும் கிடைக்காமல் போனதால் ஸ்ரீவிஜயாவின் பேரில் அவர்களுக்கு உண்டாகியிருந்த கோபம் இந்த நால்வர் மீதும் திரும்பியது.

''நீங்கள் செய்யும் வணிகம் முறையற்றது. நாடுவிட்டு நாடு வந்த நீங்கள் சரக்குகளுக்கு சுங்கம் செலுத்தாதது அநீதி''- என்றார் ஓர் அதிகாரி.

அவர் சுங்கம் விதித்ததையும் வசூலித்ததையும் விஜயன் நேரில் கண்டிருந்த காரணத்தால் அவர் அநீதியைப் பற்றிப் பேசியது அவனுக்கு வினோதமாக இருந்தது. ஆகவே அவரைப் பார்த்து ''இந்த அநீதியைப் பற்றி நீங்கள் பேச வேண்டிய இடம் வேறு. எங்களிடம் அல்ல'' என்றான்.

அவனது பேச்சு உண்மைதான் என்றாலும் அது அவரது கோபத்தை அதிகரிக்கவே செய்தது.

''இங்கே மன்னரது சட்டங்களுக்கு உட்பட்டு நடக்கும் வேலைகளுக்கு ஆள் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆனால் மன்னருக்கு எதிரான அடாவடியான வேலைகளுக்கு ஆயிரக்கணக்கில் ஆட்கள் வேலை செய்கிறார்கள். நான்கு நாட்கள் வரை நடக்கக் கூடிய வேலையை இவர்கள் நான்கு நாழிகையில் செய்கிறார்கள். இந்த அநியாயங்கள் ரொம்ப நாளைக்கு நீடிக்காது'' என்று பொறுமினார் அதிகாரி.

பொறாமையாலும் இயலாமையாலும் அவர் புலம்புவதை உணர்ந்து கொண்ட விஜயன் ''உங்கள் விருப்பம்தான் எங்களுக்கும். அநியாயங்கள் அதிக காலத்திற்கு நீடிக்கக் கூடாது'' என்றான்.

''அடாவடி கூட்டத்தோடு சேர்ந்து கொண்டு நீயே இப்படிப் பேசுகிறாயா?'' என்று உள்ளுக்குள் கேட்டுக் கொண்ட அதிகாரி ''இங்கே மன்னர் வந்து விட்டுப்போனார் தெரியுமா?'' என்று கேட்டார் மிரட்டுவது போல்.

''எங்களுக்கு எப்படித் தெரியும்? நாங்கள்தான் பார்க்கவில்லையே?'' என்ற விஜயன் ''மன்னர் எதற்காக இங்கு வந்தார்?'' என்று கேட்டான்.

''சரக்குகளை பார்வையிட வந்தார்?''

''அவர் ஏன் பார்வையிட வேண்டும்? அதற்குத்தான் அதிகாரிகள் நீங்கள் இருக்கிறீர்களே?''

''இச்சரக்குகள் தரகரின் சரக்காயிற்றே? நாங்கள் பார்வையிட முடியாதல்லவா? ஆகவேதான் மன்னர் பார்வையிட்டார்''

''எதற்கு?''

''அடாவடியின் மதிப்பு எவ்வளவு என்பதை அறிய''

''அறிந்து கொண்டு என்ன செய்யமுடியும்?''

''அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தைப்பற்றி அறிந்து கொள்ளலாம் அல்லவா?''

''அதிகாரி, நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. தன் கண்களுக்கு முன்னால் சர்வசகஜமாக உண்டாகும்

நஷ்டத்தை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதைவிட்டு கணக்கெடுப்பு மட்டும் நடத்திவிட்டுப் போவது மன்னருக்குச் சிறப்பானதாக இல்லையே?''

''மன்னரைப்பற்றி எளிதாக எண்ணி விடாதீர்கள். அவர் ஒன்றும் சும்மாயிருக்கவில்லை. இந்த அடாவடியை அடியோடு அழிக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார். விரைவிலேயே நல்ல முடிவு வந்துவிடும்''

''தரகரின் அடாவடி முடிவுக்கு வந்துவிடும். ஆனால் உங்கள் அடாவடிகளும் அத்துமீறல்களும் எப்போது முடிவுக்கு வரும்? திறமையான மன்னனாக இருந்தால் அடாவடிகளை அழிக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டான்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட விஜயன் ''எல்லாம் உங்கள் நாட்டு விஷயம். நாங்கள் சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றான்.

''ஏதோ உங்களுக்கு எதுவும் நடக்காது என்று ஆனந்தப்பட்டு விட வேண்டாம். மன்னர் நினைத்தால் உங்களை எது வேண்டுமானாலும் செய்யலாம். அவர் இங்கிருந்து போன வேகத்தைப் பார்த்தால் எங்களுக்கு அப்படித்தான் தோன்றுகிறது'' என்று எச்சரித்தார் சுங்க அதிகாரி.

''மன்னர் விட்டு விட்டாலும் பறக்கும் குரங்கு எங்களைவிடப் போவதில்லை. ஆறிலும் சாவு. நூறிலும் சாவு. சாவுக்கு அஞ்சுவதில் அர்த்தமில்லை'' என்று கூறிவிட்டு விஜயன் தன் உபதலைவர்களுடன் தீவுக்கப்பலுக்குப் போனான்.

கடற்கரையில் நடந்த விஷயங்கள் விரைவிலேயே கப்பலில் இருந்தவர்களுக்குத் தெரிந்து விட்டதால் அதுபற்றி அவரவர்களும் பேசிக்கொண்டார்கள். பறக்கும் குரங்கு பற்றிய செய்தி பலருக்கு கலக்கத்தைத் தந்தது.

அன்றிரவு விஜயனும் அவனுடன் கடற்கரைக்குச் சென்ற உபதலைவர்களும் பல்வேறு நினைவுகளில் திளைத்தார்கள்.

அசுவநாவிகர் மிகவும் தவித்துப் போனார். ஸ்ரீவிஜயா கூறிய விஷயங்களும் அவள் விடுத்த கோரிக்கையும் அவரைக் கலங்கடித்ததென்றால் அந்த விஷயங்களை உடனடியாக

யாரிடமும் கூறிவிட வேண்டாம் என்று எச்சரித்தது அவரைக் குழப்பியது காரணம் தெரியாததால். ஸ்ரீவிஜயா மன்னன் மகள் என்பதாலும் மன்னனுக்கு நிகரான சக்தி என்பதாலும்அவளது எச்சரிக்கையை மீறும் துணிவு அவருக்கு வரவில்லை. அதற்கு ஏற்றாற்போல் தீவுக்கப்பலில் இருந்த சரக்குகளை மிகக் குறைந்த நேரத்தில் அகற்றி கடற்கரையில் குவித்த அவளது வேகம் அசர வைக்கக் கூடியதாக இருந்தது.

விஜயனை நினைத்தாலும் அவருக்குப் பயமாகத்தான் இருந்தது. தற்போது அவனிடம் விஷயத்தை மறைப்பது சங்கடமாகவும் உபத்திரமாகவும் இருந்தது அவருக்கு. இதனால் பாதகம் ஏற்பட்டுவிட்டால் தன்னைச் சித்திரவதை செய்து கொல்ல விஜயன் தயங்கமாட்டான் என்று நினைத்ததால் அன்றிரவு முழுவதும் அவரால் உறங்கமுடியவில்லை. மற்றவர்களது விசாரிப்புகளிலிருந்து தப்புவதற்காக உறங்குவது போல் நடித்தார்.

உதயணின் சிந்தனையோ பறக்கும் குரங்கைப் பற்றியதாக இருந்தது. அவன் ஏற்கனவே வினோதமான மிருங்களைக் கண்டிருந்தானாதலால் பறக்கும் குரங்கைப்பற்றி அறியவும் காணவும் ஆவலாய் இருந்தான். அதைப்பற்றிய செய்தி உண்மையாக இருக்குமா, அப்படி இருந்தால் அது எப்படி இருக்கும்? எவ்வளவு பெரியதாக இருக்கும் எவ்வாறு பறக்கும்? மனிதர்களை எப்படி பிடித்துக்கொண்டு பறந்து செல்லும் என்கிற கற்பனையில் இரவைக் கழித்தான்.

விஜயன் குரங்கைப் பற்றியோ ஸ்ரீவிஜயாவைப் பற்றியோ கவலைப்படவில்லை. அவள் மூலம் வேலைகள் விரைவாக நடந்து வருவதை எண்ணி மகிழ்ச்சியடைந்த அவன் அசுவநாவிகரின் மழுப்பல் பதில்களால் அசதியடைந்தான். அவர் எதையோ மறைக்கிறார் என்று திட்டமாக நம்பினான். தன்னிடம் சொல்லாத அளவிற்கு அப்படியென்ன ரகசியம் இருக்க முடியும் என்பது அவனுக்கு விளங்கவில்லை. அவர் மறைக்க முயற்சி செய்வது பேராபத்தை உண்டாக்கி விட்டால் என்ன செய்வது என்ற கவலையே அவனுக்குப் பிரதானமாக இருந்தது.

டெமிட்ரியஸுக்கோ சொர்ணத்தீவுக்கு வந்ததே பிடிக்கவில்லையாதலால் அவன் கேள்விப்பட்ட விஷய மெல்லாம் கசந்தது. எதையும் ரசிக்க முடியாமல் இரவைக் கழித்தான்.

மறுநாள் காலை கடற்கரை காலியாக இருந்தது. ஸ்ரீவிஜயாவின் பிரதிநிதியொருவன் தீவுக்கப்பலுக்கு வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். தரகர் கடற்கரையில் இருந்த சரக்குகளையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டதாகத் தெரிவித்தான். விஜயனைச் சார்ந்த அத்தனை பேருக்கும் அடையாள அட்டையைப்போல் தந்தத்தால் ஆன முத்திரைகளைக் கொடுத்தான். அந்த முத்திரையை வைத்துக் கொண்டு தீவுக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்றும் யார்யார் எதை வாங்கவேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்கள் இந்த முத்திரையைக் காட்டினால் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதற்கான தொகையைத் தரகர் கொடுத்துவிடுவார் என்றும் தெரிவித்தான்.

பிரதிநிதியின் பேச்சு விஜயனுக்குத் திருப்திகரமாக இருந்தது. ஆனால் அசுவநாவிகருக்கோ வயிற்றில் புளியைக் கரைப்பதாக இருந்தது. வேலைகள் இத்தனை சுறுசுறுப்பாக நடைபெற்று வருவதற்குக் காரணம் ஸ்ரீவிஜயாவும் அவளது கோரிக்கையும் தான் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்ததாலும் கோரிக்கை என்ன என்பது விஜயனுக்குத் தெரியவரும்போது என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதாலும் வாந்தியை எதிர்பார்க்கும் நோயாளியைப்போல் இருந்தார். போகும்போது பிரதிநிதி அசுவநாவிகரைப் பார்த்து கண்ஜாடை காட்டிவிட்டுப் போனதால் தலைகிறுகிறுத்தது அவருக்கு.

விஜயன் அதை கவனித்தாலும் கவனிக்காதது போல் இருந்து கொண்டு பிரதிநிதியிடம் ''எங்கள் பணிகளுக்குகூட இருந்து வழிகாட்ட ஒரு பத்து பேர் வேண்டும். கிடைக்குமா?'' என்று கேட்டான்.

''சிறிது நேரத்தில் அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் பிரதிநிதி.

அதற்குப் பிறகு தாமதம் எதுவும் செய்யாத விஜயன் உபதலைவர்களை அழைத்தான். ''டெமிட்ரியஸ், நீ நமது கப்பலுக்குத் தேவையான துடுப்புத் தள்ளும் திறமையான முன்னூறு மாலுமிகளை வாங்கவேண்டும். இதுதான் உன் பணி. பிரதிநிதியின் உதவி ஆள் வந்ததும் நீ புறப்படு. உதயணா, நமக்கு முன்னூறு மாலுமிகள் கிடைக்கப்போவதால் நம்மிடையே இருக்கும் துடுப்புத் தள்ளும் அடிமைகளை அடிமைச் சந்தையில் நல்ல விலைக்கு விற்றுவிடு. நரசிம்மா, இந்த மரக்கலத்தை தனஞ்ஜெயனின் ஆலோசனையுடன் போர்க் கப்பலாக மாற்ற வேண்டியது உன் பணி. அதற்குத் தேவையான ஆயுதங்களையும் பொறிகளையும் வாங்கிக்கொள். விதுரா! நீயும் விகர்ணனும் நமது தோழர்களுக்கான போர்ப்பயிற்சிகள் அளிக்கும் ஏற்பாடுகளை செய்யுங்கள். பகீரதா! நீ மரக்கலத்திற்கு காவல் இரு. போர்ப் பயிற்சிக்கு தோழர்களை அனுப்பும் அதே சமயம் கப்பலில் எப்போதும் நூறு பேர் பாதுகாப்பிற்கு இருக்கும்படி பார்த்துக்கொள். நானும் அசுவநாவிகரும் புரவிகளை வாங்கச் செல்கிறோம்'' என்றான்.

கொஞ்ச நேரத்தில் பிரதிநிதியின் ஆட்கள் பத்து பேர் வந்ததும் அவர்களில் ஒருவனை மட்டும் தனக்காக வைத்துக்கொண்டு மற்ற ஒன்பது பேர்களையும் திட்டமிட்டபடி உபதலைவர்களோடு உதவிக்காக அனுப்பி வைத்தான் விஜயன். எல்லோரும் புறப்பட்டுப் போனபிறகு அசுவநாவிகரை அழைத்த விஜயன் ''என்ன அசுவநாவிகரே, இதுபோன்ற வணிகத் தரகரை நீங்கள் உங்கள் வாழ்நாளில் சந்தித்திருக்கிறீர்களா? ஏதோ சுங்கவரி இல்லாமல் சரக்குகளை நகர்த்த இதுபோன்றத் தரகர்கள் உதவலாம். ஆனால் நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாக விலை தருவது. அதைப் பணமாகத் தராமல் நம் தேவைகளை நிறைவேற்றி சரிகட்டுவது, அத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முத்திரை அடையாளங்களையும் உதவியாட்களையும் அனுப்புவது என்று நாம்கேட்காமலேயே செய்து தரும் தரகர் வேறு யாராவது இருக்க முடியுமா? இந்தத் தரகர் பெண் நமக்குக் கிடைத்தது வரப் பிரசாதம் தான் இல்லையா?'' என்று கேட்டான்.

''ஆ...மாம்'' என்று இழுத்தார் அசுவநாவிகர்.

''அந்தப் பெண் உங்களை அழைத்துத் தனியாகப் பேசினாளே - தனது பெயரைச் சொன்னாளா?'' என்று கேட்டான் விஜயன்.

''சொன்னாள். சொன்னாள். அவள் பெயர் ஸ்ரீவிஜயா''

''அசுவநாவிகரே, இந்தச் சொர்ணபூமிக்கு ஸ்ரீவிஜயம் என்ற சிறப்புப் பெயர் உண்டு. அதன் பெயரையே தன் பெயராக வைத்திருக்கிறாள் இவள். ஒரு வேளை இவள் அரசகுமாரியாக இருப்பாளோ?''

கடற்காற்று வீசினாலும் அசுவநாவிகருக்கு வியர்த்தது.

''அப்படியெல்லாம் இருக்காது தலைவரே'' என்றான் சுதாரித்துக்கொண்டு.

''அவள் யாராக இருந்தால் நமக்கென்ன? நமக்குத் தேவை உதவி. அதை அவள் விருப்பத்தோடு செய்கிறாள். அது போதும்.'' என்று சொன்ன விஜயன் ''ஏன் அசுவநாவிகரே, ஒருவேளை இப்படியெல்லாம் இஷ்டப்படி உதவி செய்துவிட்டு கைம்மாறு ஏதாவது கேட்டு நம்மை ஆடவொட்டாமல் செய்துவிடப் போகிறாள். நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்'' என்றான்.

அசுவநாவிகருக்கு வயிற்றைக் கலக்கியது. எதுவும் பேசவில்லை.

விஜயனே பேசமுற்பட்டு அசுவநாவிகரே, உங்களுக்குப் புரவிகளை வாங்குவதில் நல்ல பரிச்சயம் இருக்கும். உங்களை அறிமுகப்படுத்தியபோதே சதுர்வேதி என்னிடம் சொன்னார். எனவே நீங்கள் இந்த உதவியாளரை அழைத்துக் கொண்டு புரவி வியாபாரியைச் சந்தியுங்கள். நான் அரண்மனை வரைக்கும் போய்விட்டு உருகிறேன்'' என்றான்.

''அரண்மனைக்கா? எதற்கு?''

''மன்னனைச் சந்திப்பதற்கு''

இதைக் கேட்டதும் கல்லாய்ச் சமைந்தார் அசுவநாவிகர்.

◈◈◈

### அத்தியாயம் ஐம்பத்து மூன்று

## அசுவநாவிகரின் கலக்கம்

அசுவநாவிகர் கல்லாகச் சமைந்து விட்டதை அரைக் கண்ணால் கவனித்த விஜயன் உதவிக்கு வந்திருந்த மனிதனிடம் ''மன்னரை இப்போது சந்திக்க முடியுமா?'' என்று கேட்டான்.

''ஐயா, மன்னரின் தினசரி நடப்பு மிகவும் ஒழுங்கு படுத்தப்பட்டது. அசாதாரண காரணத்தைத் தவிர இந்த ஒழுங்கு மீறப்படுவதில்லை. ஒரு நாளைக்குரிய பொழுது பதினாறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு பணிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. நள்ளிரவில் மன்னர் கண்விழிக்கிறார். மங்கள வாத்தியங்கள் முழங்க கண்விழிக்கும் அவர் அந்தரங்க அதிகாரியின் மூலம் அன்றைய பணிகளைப் பற்றி தெரிந்து கொள்கிறார். பிறகு ஒற்றர் படையை அழைத்துப்பேசி ரகசிய கட்டளைகளை இடுகிறார். பிறகு ராஜகுருவின் ஆசியைப் பெற்று அறிஞர்கள், நிமித்திகர்கள், வைத்தியர்கள் ஆகியோரைச் சந்திக்கிறார். வைத்தியர்கள் அவருக்கு உடல்நலச் சான்றளித்தால் தான் அவர் அன்றைய பிற பணிகளை மேற்கொள்ளமுடியும். உடல் நலச்சான்று கிடைத்த பின் அதிகாரிகளை அழைத்து வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பார். பிறகு நகர மக்களது தேவைகளைப் பரிசீலிப்பார். அதற்குப் பிறகு நீராடல். அதையடுத்து தனக்கு வந்த காணிக்கைகள் மற்றும் எதிரிகளிடமிருந்து வரும் கப்பம் ஆகியவற்றை ஆராய்ந்து ஏற்பார் அல்லது நிராகரிப்பார். பிறகு மந்திரிகளுடன் ஆலோசனை. ஓலை எழுதுவது அனுப்புவது முதலான வேலைகள். பிறகு ஓய்வு. தேவைப்பட்டால் அந்தரங்க ஆலோசனை. அதற்குப் பிறகு படைமுகாமிற்குச் சென்று பார்வையிட்டு தளபதிகளுடன் ஆலோசனை. பிறகு பிடிபட்ட எதிரிகளைப் பார்வையிடுதல். அதற்குப் பிறகு நீராடுதல். படித்தல். அதற்குப் பிறகு மங்கள வாத்தியங்கள் முழங்க பள்ளியறைக்குச் செல்லுதல். இதுதான் மன்னரது தினசரி நடைமுறை'' என்றான் உதவியாளன்.

''நமது மன்னர்களது நடைமுறையைப் போலவே இந்த மன்னரது நடைமுறைகளும் இருக்கின்றன. கவனித்தீர்களா அசுவநாவிகரே?'' என்று கேட்டான் விஜயன்.

''ஆமாம். ஆமாம்.'' என்று தலையை ஆட்டினார் அசுவநாவிகர்.

உதவியாளனைப் பார்த்து ''இப்போது போனால் மன்னரைக் காணமுடியுமா?'' என்று கேட்டான் விஜயன்.

''நான் விளக்கிய முறைகளின்படி தற்போது மந்திராலோசனை நடந்து கொண்டிருக்கவேண்டும். ஓலைகளைத் தயாரித்தல் அனுப்புதல் ஆகியபணியில் இருப்பார் மன்னர். இது முடிந்ததும் ஓய்வெடுக்கச் செல்வார். அந்த நேரத்தில் அவர் விரும்பினால் தங்களைச் சந்திக்கலாம்''

''நான் எதற்கும் முயன்று பார்க்கிறேன்'' என்று கூறிவிட்டு கப்பலை விட்டு அகன்றான் விஜயன்.

அசுவநாவிகரும் அதுதான் சமயம் என்று உதவியாளனை புரவி வணிகரிடம் அனுப்பிவிட்டு தரகரின் மாளிகையை நோக்கிச் சென்றார். மாளிகைக்கு அருகில் சென்று கொண்டிருக்கும்போதே ''என்ன அசுவநர்விகரே, என்ன விஷயம்?'' என்று அவருக்குப் பின்னாலிருந்து கேட்டாள் ஸ்ரீவிஜயா.

அவளைப் பார்த்துத் திரும்பிய அசுவநாவிகர் ''என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும் அம்மணி?'' என்று கேட்டார்.

அவளோ ''அற்பமான விஷயங்களுக்கெல்லாம் ஆச்சரியப் படுவதை விடுங்கள்'' ஏன்று கூறிவிட்டு ''விஷயங்கள் எப்படி நடக்கின்றன? திருப்திதானா?'' என்று கேட்டாள்.

''இல்லை பயமாக இருக்கிறது'' என்றார் அசுவநாவிகர்.

''எதற்கு பயம்?''

''உங்கள் வேகம் அசாதாரணமாக இருக்கிறது. திருப்திக்குப் பதில் சந்தேகத்தைத் தருகிறது. அவருக்கே வந்துவிட்டது இந்தச் சந்தேகம்''

''வங்க இளவரசருக்கா?''

''ஆம். என்னைச் சுற்றிக் கேள்விகளால் வலை பின்னுகிறார். திணறடிக்கிறார். தாங்கமுடியவில்லை''

''என் கோரிக்கையை உடனடியாக அவருக்குத் தெரிவித்தால் அவர் ஏற்கமாட்டார். ஆகவேதான் நான் உதவி செய்யும் விதத்தில் நீங்கள் யாருமே எதிர்பார்க்காத வேகத்தைக் காட்டினேன். இப்போது அதைச் சொன்னால் அதை ஏற்க அவருக்குத் தயக்கம் இருக்காது''

''அப்படியானால் சொல்லி விடவா?''

''நாளைக்குச் சொல்லிவிடுங்கள்''

''சொல்லி விடுகிறேன்''

''அசுவநாவிகரே!''

''அம்மணி!''

''அவரிடம் என் கோரிக்கையைத் தெரிவிப்பதோடு உங்கள் கடமை முடிந்துவிடாது''

''வேறென்ன செய்யவேண்டும்?''

''கோரிக்கைக்கு அவரைச் சம்மதிக்கும்படிச் செய்ய வேண்டும்''

''அது கஷ்டம் அம்மணி''

'உங்களுக்கெல்லாம் கஷ்டமே இல்லாமல் உதவுகிறேனே அது உங்களுக்குப் புரிகிறதல்லவா?''

''புரிகிறது. ஆனால் இது வேறு. அது வேறு''

''வேறு வேறு தான். ஆனால் இது இல்லாமல் அது இல்லை''

''நீங்கள் சொல்வது புரியவில்லை''

'அவரது சம்மதத்தை நீங்கள் பெறவில்லையென்றால் பறக்கும் குரங்கு தன் வேலையைக் காட்டும்''

''வேண்டாம் அம்மணி. அப்படி எதுவும் நடந்து விடக்கூடாது. அவரைச் சம்மதிக்க வைப்பது என் வேலை'' என்று சொன்ன அசுவநாவிகர் ''ஒரு விஷயம்'' என்றார்.

''என்ன?''

''அவர் மன்னரைச் சந்திக்கப் போவதாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்''

''போகட்டும்''

''அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்ட அசுவநாவிகர் புரவி வணிகம் நடைபெறும் இடத்தை விசாரித்துக் கொண்டு அங்கு வந்தபோது அதிர்ச்சி அடைந்தார்.

அங்கே விஜயன் பல்வேறு புரவிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். புரவி விற்பனைக் கூடம் விசாலமானதாக இருந்தது. ஒவ்வொரு புரவிக்கும் சதுரம் சதுரமாக இடம் விடப்பட்டு அதற்குள்ளாக அது சிறைவைக்கப்பட்டிருந்தது. புரவிகளின் வகைகள் பலவாறு இருந்தது. வெகுமதியாகப் பெறப்பட்டவை, விலை கொடுத்து வாங்கப்பட்டவை, போரில் கைப்பற்றியவை, பிறரிடமிருந்து உதவிக்காக பெறப்பட்டவை, அடமானமாக வாங்கப்பட்டவை ஆகிய பலவகைகள் இருந்ததால் அந்த விவரங்கள் அட்டையில் எழுதப்பட்டு புரவிகள் இருந்த சதுரப்பரப்பில் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. அதோடு அந்த அட்டையில் குதிரைகளின் குலம், வயது, நிறம், சுழி அடையாளங்கள் ஆகிய விவரங்களும் எந்த நாட்டுக்குதிரை என்பதும் ஒவ்வொரு புரவியின் சிறப்பம்சங்கள் என்ன என்பதும், விலை விவரமும் குறிப்பிடப்பட்டிருந்தன. அவையாவும் பழக்கப்பட்ட பயிற்சிப் புரவிகள் என்று அறிவிக்கும் பலகை கூடத்தின் வாயிலிலேயே இருந்தது. கூடத்திற்கு அப்பால் மணற்பரப்பிலான செண்டு வெளி இருந்தது. அங்கே பல்வேறு புரவிகளுக்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்தார்கள் ஆஜானுபாகுவான பயிற்சியாளர்கள்.

பயிற்சிபெற்ற புரவிகளை புரவி வணிகரின் உதவியோடு பார்வையிட்டுக் கொண்டிருந்தான் விஜயன்.

ஒரு புரவியைச் சுட்டிக்காட்டிய வணிகர் விஜயனிடம் ''ஐயா, இது அரபு நாட்டிலிருந்து வந்த உத்தம ஜாதிக் குதிரை. இதன் முகம் 32 அங்குலமும் இதன் நீளம் 160 அங்குலமும் உயரம் 30 அங்குலமும் பருமன் 100 அங்குலம் உடையது. இதற்கு

தினமும் இரண்டு துரோண வேக வைத்த அரிசி, ஒருபடி நெய், ஐந்து பலம் லவணம், ஐம்பது பலம் மாமிசம், ஒரு ஆடகம் மாமிச ரசம், ஐந்து பலம் வெல்லம் கலந்த ஒருபடி அராபானம் ஆகியவற்றைத் தினமும் கொடுக்கிறோம். இப்புரவி பலவிதமான நடைகளுக்கும் சாகசங்களுக்கும் பேர் போனது. இரண்டு நாட்களுக்கு இதன் கண்களுக்கு பரிச்சியமாகி தினமும் இரண்டுமுறை இதனை முத்தமிட்டால் அப்படிச் செய்கிறவருக்கு இது நண்பனாகிவிடும். இப்புரவியின் விலை இரு புரவிகளுக்கு உரியவிலை. ஆனால் இதை விலைக்குறைவாக உங்களுக்கு விற்கும்படி தரகர் கூறியிருக்கிறார்'' என்றார்.

''இப்புரவியைக் கப்பலில் ஏற்றி கடற்பயணம் செல்லலாமா?''

''செல்லலாம். இது இங்கு வந்ததே கடற்பயணத்தில் தானே? கடற்பயணத்திற்கு ஏற்ப உணவு முறையை மாற்றித் தருகிறேன். அதை நீங்கள் கடைப்பிடித்தால் போதும். பிரச்சினை இருக்காது.''

''எனக்கு பத்துப் புரவிகள் வேண்டும்''

''எல்லா புரவிகளும் ஒரே வகையைச் சேர்ந்ததாக இருக்க வேண்டாம். ஒவ்வொரு புரவியும் ஒவ்வொரு வகையைச் சேர்ந்ததாக இருந்தால் நல்லது.''

''எதற்கும் சுழியைப் பார்த்துவிடுவது நல்லது''

''பார்க்கலாம். அதேசமயம் இப்புரவிகளைப் பயன்படுத்து பவர்கள் யார் யார் என்பதை முடிவு செய்து கொண்டு அவர்களை இரண்டு நாட்களுக்கு இங்கே அனுப்பி வையுங்கள். பரிச்சியம் உண்டாகட்டும்''

''நான் ஒருவன் வருகிறேன். என்னைத் தவிர ஒன்பது தோழர்களை நாளை அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறிவிட்டு விடை பெறவிருந்தபோது தான் அசுவநாவிகரைக் கவனித்தான் விஜயன்.

''என்ன அசுவநாவிகரே, உங்களை இந்த இடத்திற்கு வரும்படித்தானே சொன்னேன்? எங்கே போய்விட்டீர்கள்?

ஒருவேளை தரகரைப் பார்க்கப் போய் விட்டீர்களா?'' என்று கேட்டான்.

''அதெல்லாம் இல்லை தலைவரே. எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வந்துவிட்டார். அவரது இல்லம் வரை போய் வரவேண்டியதாயிற்று.

''போகட்டும். நீங்கள் நான் தேர்ந்தெடுத்திருக்கும் புரவிகளை ஒருமுறை பாருங்கள். அவற்றைப் பற்றிய விவரங்கள் சரிதானா என்பதை அறியுங்கள். நான் நம் தோழர்கள் பயிற்சி பெறும் இடத்திற்குப் போய் வருகிறேன்''

''மன்னரைச் சந்தித்தீர்களா?''

''ஏன், சந்திக்க வேண்டுமா?''

''அதெல்லாம் இல்லை. நீங்கள்தானே சந்திக்கப் போவதாகச் சொன்னீர்கள். அதனால்தான் கேட்டேன்''

''அவசரம் ஒன்றுமில்லை. நாளை பார்த்துக் கொள்ளலாம்''

''சரி''

விஜயன் போனபிறகு ஏனோதானோவென்று புரவிகளைப் பார்வையிட்டுவிட்டு தனியிடத்திற்குப் போய் நீண்ட நேரமாக யோசனையில் ஆழ்ந்துவிட்டு நன்றாக இருட்டிய பிறகே தீவுக்கப்பலுக்குச் சென்றார். அசுவநாவிகர். அப்போது விஜயன் உபதலைவர்களிடம் அவர்களுக்கு இடப்பட்ட பணிகளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான்.

மாலுமிகளை வாங்கும் பணியை மேற்கொண்டிருந்த டெமிட்ரியஸ் ''கடற்படையில் பணியாற்றும் மாலுமிகள் மற்றும் வாய்ப்பு கிடைக்காத திறமை மிகுந்த மாலுமிகள் நகரின் மேற்குப்புறம் 'மாலுமிகள் பள்ளம்' என்ற இடத்தில் இருந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். வாய்ப்பு கிடைக்காத திறமை வாய்ந்த மாலுமிகள் நமக்கு உகந்தவர்களாக இருப்பார்கள். அவர்களை அழைத்து பேசினால் ஒரு முடிவுக்கு வரலாம். ஆகவே என் பணி நாளைதான் துவங்கும்'' என்றான்.

உதயணன் பேசமுற்பட்டு ''சொர்ணத்தீவின் அடிமைச் சந்தையில் விசாரித்துப் பார்த்தேன். அடிமைகள் நல்ல உடல்

நலத்தோடும் பலத்தோடும் இருந்தால் அவர்களை அணிவகுத்து நிற்க வைத்து அடிமை வர்த்தகர்கள் நல்ல விலைக்கு வாங்குவார்கள் என்ற தகவல் கிடைத்தது. மேலும் சில விவரங்களை விசாரித்துவிட்டு என் பணியை முடிக்கிறேன்'' என்றான்.

மரக்கலத்திற்கு வேண்டிய ஆயுதங்களை சொர்ணத்தீவின் ஆயுத அங்காடியில் பார்வையிட்டதாகவும் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து வைத்திருப்பதாகவும் இரண்டு நாட்களில் ஆயுதங்களை வாங்கிவிட முடியும் என்றும் கூறினான் உபதலைவன் நரசிம்மன்.

தோழர்கள் பயிற்சி விவரமும் திருப்தியாக இருந்ததால் எல்லோருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துவிட்டு கப்பலை விட்டு இறங்கி எங்கோ சென்றான் விஜயன்.

ஏறக்குறைய இரவு நேரம் முற்றிய நிலையில் கப்பலில் இருந்தவர்கள் தீவில் இருந்த உணவுப் பண்டகங்களிலிருந்து வாங்கிக் கொண்டு வந்திருந்த உணவுகளை அருந்திவிட்டு படுக்கத் தொடங்கினர். என்ன காரணத்தாலோ வெளிநாட்டு கப்பல்களிலிருந்து சரக்குகளை இறக்கும் பணி மாலையிலேயே நிறுத்தப்பட்டு விட்டதால் கடற்கரை அமைதியாக இருந்தது. காற்று வாங்குவதற்காகக்கூட யாரும் அங்கே திரியவில்லை. சுங்கச் சாவடிகள் மூடப்பட்டு பந்தங்கள் மட்டும் ஏற்றப் பட்டிருந்ததால் அந்த மங்கலான ஒளியில் கடற்கரையானது பொன்னிறத்தில் காட்சியளித்து சொர்ணபூமியை அடையாளம் காட்டிக் கொண்டிருந்தது. கடற்கரைக்கு ஆதரவு தெரிவிப்பது போல் கடல் பகுதியும் அப்போது அமைதியாகவே இருந்தது. தூரத்தில் இருந்த போர்த்துறைமுகம் பல்வேறு விளக்கொளிகளுடன் பிரகாசமாக இருந்தது. சரியான இடைவெளியில் ஒற்றைச் சங்கொலி அங்கே எழுந்து வணிகத் துறைமுகத்தில் ஊடுருவிக் கொண்டிருந்தது. வானம் நிர்மலமாய் இருந்ததால் அங்கே சுதந்திரமாக விளையாட வந்த அழகுப் பெண்களைப் போல ஏராளமான நட்சத்திரங்கள் ஜொலித்தன. அந்த நட்சத்திரங்களையே இமை கொட்டாமல் பார்த்தபடி மேல்தளத்தில் சாய்ந்து அமர்ந்திருந்த அசுவநாவிகரிடம் மற்ற உபதலைவர்கள் வந்து அமர்ந்தார்கள்.

''என்ன அசுவநாவிகரே, உங்கள் பணி என்ன ஆயிற்று? அதைப்பற்றி எதுவும் சொல்லவில்லையே?'' என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''என் பணி சொல்லும்படியாகவா இருக்கிறது?'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட அசுவநாவிகர் ''நான் சொல்ல என்ன இருக்கிறது? தலைவர் தான் என்னோடு இருந்தாரே! அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார்'' என்றார்.

''உங்களுக்குத் தெரியாத புரவி வாணிகமா? இருந்தாலும் உங்களோடு மட்டும் தலைவர் எதற்காக வந்தார்?'' என்று கேட்டான் உதயணன்.

''என்னை வேவு பார்க்க வந்தார்'' என்று சொல்ல முடியாத அவர் ''இந்தக் கேள்வியை நீங்கள் அவரிடம்தான் கேட்கவேண்டும்'' என்றார்.

''அவரிடம் எல்லாவற்றையும் சகஜமாக கேட்டுவிட முடியுமென்றால் உங்களை ஏன் கேட்கப் போகிறோம்?'' என்றான் நரசிம்மன்.

அசுவநாவிகர் சிறிதுநேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு உபதலைவர்களைப் பார்த்து ''நண்பர்களே, நமக்கு முன்னால் பெரும் இக்கட்டு ஒன்று வந்து சேர்ந்திருக்கிறது. அதைத் தீர்க்க நீங்கள் தான் உதவ வேண்டும்'' என்றார்.

''என்ன புதிர் போடுகிறீர்கள் அசுவநாவிகரே?''என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''டெமிட்ரியஸ், நீயும் பலநாடுகளுக்குச் சென்று பார்த்தவன். நமக்கு இங்கே உதவிய வணிகத் தரகரைப் போல எங்காவது பார்த்திருக்கிறாயா?''

''இது என்ன திடீர் கரிசனம் தரகரின் மீது?''

''கேட்டதற்குப் பதில் சொல் டெமிட்ரியஸ்''

''இது ஒன்றும் ரகசியமில்லையே. வெளிப்படையாக எல்லோருக்குமே தெரிந்த விஷயம்தானே இது? இதில் எல்லோருக்கும் வியப்புதான். அதற்கென்ன இப்போது?''

''வியப்புக்குரிய விஷயங்களுக்குப பின்னால் சிக்கல் இருக்கும் டெமிட்ரியஸ்''

''முதலில் நீ பீடிகை போடாமல் சிக்கலைப் பற்றிச் சொல்''

''தரகர் தான் செய்யும் உதவிகளுக்கு இணையாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்''

''என்ன கோரிக்கை?''

சொன்னார் அசுவநாவிகர்.

உபதலைவர்கள் அவரைப் பார்த்துத் தீவிழி விழித்தார்கள்.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்து நான்கு

# விஜயனின் அபயம்

''அசுவநாவிகரே, நீங்கள் விளையாடவில்லை என்று நினைக்கிறேன்'' என்றான் டெமிட்ரியஸ் மிரட்டும் குரலில்.

''விளையாடும் நேரமா இது? அதுவும் உங்களோடுதானா நான் விளையாடப் போகிறேன்? விளையாடும் வயதும் எனக்கில்லை'' என்றார் அசுவநாவிகர்.

''வார்த்தை விளையாட்டு தேவையில்லை இப்படிப்பட்ட கோரிக்கையைத் தரகர் எப்படி எழுப்பலாம்?'' என்று கேட்டான் உதயணன்.

''தரகா ஆடவராக இருந்தால் இப்படிப்பட்ட கோரிக்கையை எழுப்ப முடியாதே!''

''இடக்கான பேச்சு வேண்டாம் அசுவநாவிகரே. தரகரின் கோரிக்கை ஆபத்தான விளைவுகளை உண்டாக்கும்'' என்றான் உதயணன்.

''இதை தரகர் தான் உணரவேண்டும்''

''நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டியதுதானே?''

''பிறகென்ன?''

''கோரிக்கைக்கு இணங்காவிட்டால் பறக்கும் குரங்கு வருமாம்''

''வந்தால்?''

''நமது உடல்கள் இங்கிருக்காது. எரிமலைக்குள்ளேயோ அல்லது கடற்கரையிலோ நகரத்திலோ எந்த மூலையிலோ இருக்கும்''

''இந்தக் கோரிக்கைக்கு நீங்கள் ஒப்புக்கொண்டு விட்டீர்களா?''

''இக்கோரிக்கையை நிறைவேற்றும் பொறுப்பை என்மீது சுமத்திவிட்டாள் அவள்''

''என்ன செய்வதாக உத்தேசம்?''

''எனக்கென்று தனியாக உத்தேசம் ஏது? நீங்களெல்லாம் என்ன சொல்கிறீர்களோ அப்படியே செய்கிறேன்''

''நீங்களாகவே பேசி முடிவு செய்துவிட்டு ஒன்றும் ெரியாத ாாதிரி அபிப்ராயம் கேட்கிறீர்களா? இந்த கோரிக்கையை அவள் எப்போது சொன்னாள் உங்களிடம்?''

''நேற்று சந்தித்தபோது தான்''

''அப்போதே இதை நம் தலைவரிடம் சொல்ல வேண்டியது தானே?''

''சொல்ல வேண்டாம் என்று அவள் அப்போது என்னைக் கட்டிப் போட்டு விட்டாள்''

''கட் ு மிகவும் பலமானது போலிருக்கிறது''

''அப்படித்தான் இருக்க வேண்டும்''

''அசுவநாவிகரே, எங்களுக்கு விஜயன் தான் தலைவர்''

''எனக்கு மட்டும் இல்லையா? எனக்கும் அவர்தான் தலைவர்''

''இல்லை. உங்களுக்குத் தரகர்தான் தலைவர்''

''உளராதே டெமிட்ரியஸ்''

''உளறுவதும் உளறிவிட்டு வந்திருப்பதும் நீங்கள்தான். விஜயன்தான் தலைவர் என்றால் அவருக்குத்தான் கீழ்ப்படிய வேண்டுமே தவிர தரகருக்கல்ல. நீங்கள் தரகர் சொற்படி நடந்து கொண்டு தலைவரிடம் உண்மையாக நடந்து கொள்ள தவறி விட்டீர்கள்''

''இல்லை டெமிட்ரியஸ். அவள் பறக்கும் குரங்கு பற்றி கூறியதை நினைத்துப் பார். அதனால் உண்டாகக்கூடிய அழிவைப் பற்றி நினைத்துப் பார். ஆகவேதான் அவள் கூறியபடி நடந்துகொண்டேன்''

''இப்போது மட்டும் என்ன? கோரிக்கை நிறைவேறினால் உண்டாகக் கூடியது அழிவுதான். நன்றாக யோசித்துப் பாருங்கள் அசுவநாவிகரே. நீங்கள் நேற்றே இந்த விஷயத்தை தலைவரிடம் கூறியிருந்தால் தரகர் மூலம் வணிகம் செய்வதை தவிர்த்திருப்பார். இந்தச் சிக்கல் உண்டாகியிருக்காது. எதில் ஆபத்து என்பதை முடிவு செய்யும் உரிமை நமக்கு ஏது? தலைவரிடம் கூறிவிட்டால் அவர் பார்த்துக் கொள்கிறார். நம்மையெல்லாம் நாகர்மலைத் தீவில் பலியிலிருந்து அவர் காப்பாற்றவில்லையா? இப்படிப்பட்டவரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று உமக்கு இன்னமும் தெரியவில்லை. அதுசரி, இப்போது எதற்காக இந்த விஷயத்தைச் சொல்கிறீர்கள்?''

''சொல்லும்படிச் சொல்லிவிட்டாள் அவள்''

''நீங்கள் தரகரிடம் பணியில் சேர்வதுதான் சரியானது''

''தவறு நடந்து விட்டது. இப்போது என்ன செய்யலாம்?''

''இனிமேல் என்ன செய்யமுடியும்? தரகரின் உதவியைப் பெறத் தொடங்கி விட்டோம். சரக்குகள் முழுவதும் அவளிடம் போய்விட்டன. நமது பிடி இப்போது அவளிடம் இருக்கிறது. இந்த நிலையில் தலைவரால் என்ன செய்யமுடியும்?''

''நாம் தான் அவரிடம் எடுத்துச் சொல்லவேண்டும்''

''எங்களால் முடியாது. நீயே சொல்லிக்கொள்''

''சிக்கல் வரும்போது இப்படி கைகழுவி விடுவதுதான் நண்பர்களது பண்பா?''

''என்ன சிக்கல்?'' என்று கேட்டபடி அங்கே பிரவேசித்தான் விஜயன்.

அவனைக் கண்டதும் அனைவரும் தர்மசங்கடத்தில் நெளிந்தார்கள்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் விஜயன்.

உபதலைவர்கள் விஷயத்தை எடுத்துச் சொன்னார்கள்.

''இதுதானா விஷயம்? தரகரின் கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன். யாரும் கவலைப்பட வேண்டியதில்லை'' என்றான் விஜயன்.

அனைவரும் திகைத்துப் போனார்கள்.

விஜயனின் பதிலைக் கேட்ட உபதலைவர்கள் சற்றே மிரண்டார்கள்.

''தலைவரே, அந்தத் தரகர் கோருவது தங்களது உள்ளத்தை. தங்களது உடலை. தங்களது எதிர்காலத்தை. இதை நீங்கள் ஏற்கிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

''இதில் உங்களுக்கென்ன கஷ்டம்?'' என்று கேட்டான் விஜயன்.

''கஷ்டம் எதுவுமில்லை. உபத்திரவமாக இருக்கும்''

''யாருக்கு?''

''எல்லோருக்கும் தான்''

''எப்படி?''

''அதாவது...''

''உபத்திரவம் வந்தாலும் சரி. ஆபத்தே வந்தாலும் சரி. யாருக்கும் எதுவும் நேராது. நான் பார்த்துக் கொள்கிறேன். யாரும் குழம்ப வேண்டாம்'' என்று கூறிவிட்டு அசுவநாவிகரை மட்டும் தனியே அழைத்துச் சென்று ''அவள் கூறிய எல்லா விவரங்களையும் அப்படியே சொல்லுங்கள்'' என்றான்.

அவரும் விவரங்களைச் சொன்னார்.

''அசுவநாவிகரே, இப்பெண் ஸ்ரீவிஜயா இத்தீவு அரசனின் மகள் என்றா சொன்னீர்கள்'' என்று சொல்லி நிறுத்தினான் விஜயன்.

''அப்படித்தான் அவள் சொன்னாள்'' என்றார் அசுவநாவிகர்.

''அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் உறுதி செய்து கொள்ள வேண்டும்'' என்று சொன்ன விஜயன்.

''மன்னன் மகளாக இருக்கும் அவள் எதற்காகத் தரகர் என்ற பதவியை ஏற்றுக்கொண்டு இது மாதிரியான விஷயங்களில் இறங்க வேண்டும்? மன்னன் மூலமாகவே எல்லா சுகங்களையும் பெறக்கூடிய நிலையில் உள்ள அவள் அவனுக்கு எதிராக ஏன் இப்படியொரு பதவியில் இருக்க வேண்டும்? தனக்கென ஆதரவாளர்களை எதற்காகத் திரட்ட வேண்டும்? இதனால் அவளுக்குச் சாதகங்களைவிட பாதகங்கள் தானே அதிகம்?'' என்று கேட்டான் அசுவநாவிகரிடம்.

''எனக்கும் அதுதான் புதிராக இருக்கிறது'' என்றார் அசுவநாவிகர்.

''பார்த்துக் கொள்வோம். நாளைக்கு நாம் இருவரும் அவளைப் போய் பார்க்கலாம்'' என்றான் விஜயன்.

இருவரும் அவளது மாளிகைக்குச் சென்றபோது அவள் அங்கே இல்லை.

''அசுவநாவிகரே, நான் நமது தோழர்கள் பயிற்சிபெறும் இடத்திற்குப் போகிறேன். நீங்கள் அவள் வரும் வரை இங்கேயே இருங்கள். அவள் வந்ததும் நான் இங்கு வந்ததை தெரியப்படுத்துங்கள். அவளாகவே விரும்பினால் நானிருக்கும் இடத்திற்கு அழைத்து வாருங்கள்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் விஜயன்.

நேராகத் தோழர்கள் போர்ப்பயிற்சி பெறும் கூடத்திற்குச் சென்று அவர்கள் பயிற்சி பெறும் வழிகளைக் கண்டான். தோழர்கள் ஐம்பது ஐம்பது பேர்களாகப் பிரிக்கப்பட்டு வாள்

வீச்சு, அம்பெய்தல், வேலெறிதல், பொறிகளை இயக்குதல், கைச்சண்டை போன்ற பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பயிற்சியளித்தவர்கள் நல்ல உடற்கட்டு கொண்டவர்களாக மட்டுமல்லாமல் பயிற்சியளிக்கக் கூடிய திறமை பெற்றவர்களாகவும் இருந்தார்கள். பயிற்சியை அளிப்பதில் அவர்களுக்கு ஆர்வம் இருந்ததையும் கவனித்தான் விஜயன்.

ஓரிரு பயிற்சியாளர்களிடம் பேச்சு கொடுத்தபோது அவர்கள் எல்லோருமே தரகரின் வார்த்தைக்கு மதிப்பளித்து வேலைகளைச் செய்வதாகக் கூறியபோது தரகரின் செல்வாக்கு விஜயனுக்கு பெரும் வியப்பாகத் தோன்றியது.

''நீங்களெல்லாம் மன்னரின் படையில் இருப்பவர்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''முன்பு இருந்தோம். இப்போது ஒருபடி மேலே வந்து பயிற்சியாளர்களாக இருக்கிறோம்''

''படையில் இருப்பதைவிட இங்கே இருப்பது உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதா?''

''ஆமாம்''

''காரணம். இங்கே நாங்கள் வீரர்களை அழிக்கவில்லை. உருவாக்குகிறோம். இது மகிழ்ச்சியான விஷயம் தானே?''

''இங்கே எல்லோருக்கும் வித்தியாசமின்றி பயிற்சியளிக்கிறீர்களா?''

''ஆமாம். இப்பணியில் மகிழ்ச்சி இருக்கிறது. சம்பளம் அதிகமாக இருக்கிறது''

''தரகர் இதற்கு முன்பு இதுபோல போர்ப் பயிற்சியை அளிக்க இளைஞர்களை அனுப்பியதுண்டா?''

''பலமுறை அனுப்பியதுண்டு. அவர்களையெல்லாம் திறமையான வீரர்களாக மாற்றி அனுப்பியிருக்கிறோம். ஆனால் இந்த முறை என்ன விசேஷமோ தெரியவில்லை. இங்கே வந்திருக்கும் இளைஞர்களுக்குப் பயிற்சியை அளிக்க இரண்டு மடங்கு சம்பளம் தருவதாக அறிவித்திருக்கிறார்''

''இங்கே வர்மக்கலைகளையும் கற்றுத் தருகிறீர்களா?''

''வீரர்களுக்கு அதுவும் தேவைதான். ஆகவே வீரக்கலைகள் அனைத்தையும் கற்றுக் கொடுக்கிறோம்''

''வெறும் பத்து நாட்களுக்குள் இவர்களுக்கெல்லாம் பூரணமான பயிற்சியை அளிக்க முடியுமா?''

''சிரமம்தான். ஆனால் இங்கே வந்திருப்பவர்கள் ஏற்கனவே போர்ப் பயிற்சியைப் பெற்றவர்களைப் போல இருக்கிறார்கள். கொம்புசீவி விடுவதுபோல் அவர்களது திறமைகளைக் கூர்மை படுத்துகிறோம். அதோடு கற்கும் ஆர்வம் அவர்களிடம் மிதமிஞ்சி இருக்கிறது. எனவே பத்து நாட்களில் அவர்களுக்குத் தேவையான அளவிற்குப் பயிற்சியை அளிக்க முடியும்''

விஜயன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் தோழர்கள் பயிற்சி பெறுவதைக் கவனித்தான். நேற்றும் இங்கு வந்து கவனித்திருந்த காரணத்தால் ஒரு சில வீரர்கள் அவனது கவனத்தை ஈர்த்தார்கள். அவர்களிடம் சீரான வேகமும் ஆர்வமும் இருந்ததை விஜயன் கண்டான். அவர்களது உடற்கட்டும் சிறப்பாக இருந்தது. அப்படி இருந்த ஒன்பது தோழர்களை மட்டும் அழைத்து புரவிகள் கூடத்திற்கு அனுப்பிவிட்டு அடிமைகள் விற்கப்படும் இடத்திற்குச் சென்றான்.

அடிமைகளின் விற்பனைச் சந்தை ஊரின் நடுவே விசாலமான இடத்தில் அமைந்திருந்தது. அங்கே சதுர வடிவிலான தாழ்வு மேடைகள் அமைக்கப்பட்டு அதன்மீது அடிமைகள் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் நிற்க வைக்கப்பட்டிருந்தார்கள். செல்வந்தர்களும், அரண்மனையைச் சேர்ந்தவர்களும் அந்த அடிமைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்க, அடிமை வர்த்தகனோ அடிமைகளுக்கு விலையைச் சொல்லிக் கொண்டிருந்தான். விற்பவர்களும் வாங்குபவர்களும் சத்தம் போட்டு பேரம் பேசிக் கொண்டிருக்க, அடிமைகளோ தொங்கிய தலைகளுடன் அமைதியாக நின்றிருந்தார்கள். தனது மரக்கலத்தில் இருந்த அடிமைகளை கைகள், கால்கள் மற்றும் கண்களைக் கட்டிய நிலையில் சந்தையின் ஓர் ஓரமாக மண்டியிட்ட கோலத்தில்

நிறுத்தியிருந்தான் உபதலைவன் உதயணன். விஜயன் அங்கே வந்ததைக் கட்டும் அருகில் வந்த அவன் ''நமது அடிமைகளைத் தரகரே வந்து பார்வையிட இருப்பதாக அவளது ஆட்கள் சிலர் கூறிவிட்டுப் போனார்கள். இதர அடிமைகளுடன் இவர்களைச் சேர்க்க வேண்டாம் என்றும் சொன்னதால் நான் இவர்களைத் தனியாகவே வைத்திருக்கிறேன்'' என்றான்.

''தரகர் வந்து என்ன விலையைச் சொன்னாலும் ஒப்புக் கொள். பேரம் வேண்டாம்'' என்று கூறிவிட்டு ''தரகர் ஒரு வேளை என்னைத்தேடி வந்தால் மரக்கலத்திற்குப் போய் விட்டதாகச் சொல்'' என்று தெரிவித்துவிட்டு புரவிகள் கூடத்திற்குச் சென்றான் விஜயன்.

அங்கே அவன் அனுப்பிய ஒன்பது தோழர்களை புரவி வணிகரும் பயிற்சியாளரும் புரவிகளோடு பரிச்சியமாகும் நுணுக்கங்களைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தார்கள். அதையடுதது புரவிகளோடு பழகவும் ஆளாக்கப்பட்டார்கள். நீண்ட நேரம் வரை அங்கேயே இருந்து நடப்புகளைக் கவனித்துக் கொண்டிருந்தான் விஜயன். அப்போது அங்கே புரவியின் மீது அமர்ந்தபடி புயலைப் போல பிரவேசித்த தரகரை புரவி வணிகரும் பயிற்சியாளரும் வரவேற்றார்கள். விஜயன் அங்கிருப்பதைக் கண்ட அவள் ''நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? உங்களைத்தேடி எங்கெல்லாம் அலைவது? மரக்கலத்திற்குக் கூட போய்விட்டு வந்தேன். நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்'' என்று கோபக் குரலில் கூறிய அவள் ''புரவி பயிற்சியாளரைப் பார்த்து ''இவருக்கு ஒரு புரவியைக் கொடுங்கள்'' என்றாள்

உடனடியாக ஒரு புரவி தருவிக்கப்பட்டு அதில் விஜயன் ஏறியதும் இரண்டு புரவிகளும் பறந்தன.

இருவரும் ஒரு தடாகக் கரையை அடைந்ததும் புரவியை நிறுத்தி கீழே இறங்கினார்கள். தடாகத்தின் நடுவே இருந்த மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அவனோடு அமர்ந்த அவள் ''பெண்ணை என் இப்படி அலைய விடுகிறீர்கள்? ஆண்களே இப்படித்தானா அல்லது இது உங்கள் சுபாவமா?'' என்று பொரிந்தாள் ஸ்ரீவிஜயா. அவளது முகத்தில் வேர்வை முத்துக்கள் பூத்து அவளழகைச் சற்றே கூட்டிக் காட்டின.

அவளது பேச்சைக் கேட்டுச் சிரித்த விஜயன் ''சொர்ணத்தீவில் எல்லாமே தலைகீழாக இருக்கும் போலிருக்கிறது'' என்றான்.

அவள் சற்றே திடுக்கிட்டவளாய் ''என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

விஜயன் சகஜமான குரலில் ''உலகில் எங்கேயும் பெண்கள் தான் ஆடவர்களை அலையவிடுவார்கள். இந்தத் தீவில் மட்டும் அப்படி கிடையாது போலிருக்கிறது'' என்றான்.

''இவ்வளவுதானா?'' என்பது போல் உள்ளுக்குள் பெருமூச்செறிந்த அவள் அவனை ஒரு வெட்டுப் பார்வை பார்த்தாள்.

''ஆடவர்களாகிய நாங்கள் தான் உன் இருப்பிடத்தைத் தேடி வந்தோம். இன்றுகூட நாங்கள்தான் உன் மாளிகைக்கு வந்தோம். நீ இல்லை. நான் என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான் விஜயன் அவளது வெட்டுப் பார்வையை ரசித்தபடி.

''சற்று காத்திருக்கக் கூடாதா? நான் இல்லை என்றால் உடனேயே பறவையைப் போலப் பறந்துவிட வேண்டியது தானா?''

''சரியாகச் சொன்னாய். பறவையின் நிலைதான் என் நிலை. ஒரே இடத்தில் உட்கார்ந்துவிட முடியுமா? வேலைகள் சரியாக நடக்கின்றனவா என்று பார்க்க வேண்டாமா?''

''அதையெல்லாம் நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? அந்த நம்பிக்கை உங்களுக்கு இந்த இரண்டு நாட்களில் வரவில்லையா?''

''வராமல் இருக்குமா? இருந்தாலும் தரகரின் பெருந்தன்மையை எண்ணி நான் தூங்கிக் கொண்டிருக்க விரும்பவில்லை.

''என்ன சொன்னீர்கள்?''

''தூங்கிக் கொண்டிருக்க...''

''அதில்லை. அதற்கு முன்பாகச் சொன்னீர்களே.''

''பெருந்தன்மையைப் பற்றிச் சொன்னேன்''

''யாருடைய பெருந்தன்மை?''

''உன்னுடைய பெருந்தன்மைதான்''

''அப்படிச் சொல்லவில்லை நீங்கள். தரகரின் பெருந்தன்மை என்றீர்கள்''

''அது சரிதானே? நீ தரகர் தானே?''

''மீண்டும் அப்படிச் சொல்லாதீர்கள்?''

''ஏன்? நீங்களாக ஏற்றுக் கொண்டப்பதவி அது. மன்னனுக்கு இணையாகப் போட்டி போடும் பதவி அது. எங்களுக்கும் எங்களுக்கு முன்னால் பலருக்கும் உதவிய பதவி அது. சுங்கக் காவலர்களையும் அரசு அதிகாரிகளையும்அசூயை கொள்ளச் செய்யும் பதவி அது. அதைக் குறிப்பிடுவது கௌரவம் தானே?''

''நீங்கள் அப்படிச் சொல்லவேண்டாம்'' என்று கூறினாள் ஸ்ரீவிஜயா. அப்படிச் சொல்லும்போது அவளுக்குள் திடீரென வெட்க உணர்வு உண்டானதாலோ என்னவோ தலையைக் குனிந்து கொண்டாள்.

ஆண்களோடும் அறிமுகமில்லாத வெளிநாட்டவரோடும் சகஜமாக உரையாடியவளும் சற்றுமுன் புரவியின் மீது அமர்ந்து ஆடவனைப் போலவே முரட்டுத்தனமாகப் பயணம் செய்தவளுமான ஸ்ரீவிஜயா திடீரென வெட்கப்பட்டது விஜயனுக்கு வியப்பாக இருந்தாலும் அந்த வெட்கம் அழகாக இருந்ததால் அவளது தொங்கிய முகத்தைத் தன் கைளால் உயர்த்தி அவளது கண்களைத் தன் கண்களால் ஊடுறுவது போல் பார்த்தான். அவளது இமைகள் துடித்தன.

அதைக் கண்ட விஜயன் ''எங்கள் தேசத்தில் குணாளப் பறவை என்ற ஒன்றிருக்கிறது. அதன் கண்கள் மிக அழகாக இருக்கும். அப்பறவையின் கண்களைப் போலவே உன் கண்களும் அழகாக இருக்கின்றன. அதுவும் வெட்கப்படும் போது அட்டகாசமாக இருக்கின்றன'' என்றான்.

''வர்ணிக்க ஆரம்பித்து விட்டீர்களா?'' என்று கேட்டாள் அவள் அவனது பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு.

''உண்மையைச் சொல்கிறேன். அவ்வளவுதான்'' என்றான் விஜயன் அவள் முகத்தின் மீது தன் பார்வையை அகற்றாமல்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டாள் ஸ்ரீவிஜயா.

''உன் இமைகள் வெளுப்பாக இருக்கின்றன. நாசியின் வடிவம் அழகாக இருந்தாலும் மாறுபட்டதாக இருக்கிறது. இரண்டு நாட்களில் இத்தீவில் பல பெண்களை நான் கண்டேன். அவர்களின் சாயல் உன்னிடம் இல்லை. சாமுத்ரிகா லட்சணம் வேறாக இருக்கிறது. உன்னை மன்னன் மகள் என்று சொன்னார் அசுவநாவிகர். உன் சாயலைப் பார்த்தால் உன் தாய் வேற்று நாட்டவளாக இருக்கவேண்டும்'' என்றான் விஜயன்.

அவனது இப்பேச்சை அவள் விரும்பவில்லை என்பதை அவளது முகமே வெளிப்படுத்தியது. ''இந்த ஆராய்ச்சி தேவையா?'' என்று கேட்டாள் பேச்சை மாற்ற எண்ணி.

''இதில் ஆராய்ச்சி என்ன இருக்கிறது? பார்த்தவுடனே தெரிகிற வேறுபாடுகள்தானே?'' என்று சொன்ன விஜயன் ''மன்னனின் மகளான உனக்கு இளவரசி என்ற பதவியைவிடத் தரகர் என்ற பதவி எந்தவிதத்தில் சிறந்தது? இளவரசியால் சாதிக்க முடியாத எதை இந்தப்பதவி உனக்குச் சாதித்துத் தருகிறது? நீ கேட்டால் மன்னர் முடியாது என்று சொல்லி விடுவாரா? என்ன?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் அவளது முகம் கறுத்துப் போயிற்று. அங்கிருந்து எழுந்து விடுவிடுவென புறப்பட்டுப் போனாள்.

விஜயன் யோசித்தான்.

# அத்தியாயம் ஐம்பத்து ஐந்து

# பண்டோரா

அன்றிரவு மரக்கலத்திற்கு வந்த விஜயன் அசுவநாவிகரை அழைத்து ''நீங்கள் புரவி கூடத்திற்கு நாளைக்கு வரவேண்டாம். முக்கியமான ஒற்றர் பணி உமக்கிருக்கிறது. அதைச் செய்தால் போதும்'' என்று சொல்லி ஒற்றறிய வேண்டிய விஷயம் என்ன என்பதைக் கூறியதும் அசுவநாவிகரின் வாய் பிளந்தது.

''அவ்வாறு நீங்கள் செய்யப் போகிறீர்களா?'' என்று கேட்டார் பதட்டமான குரலில்.

''தேவைப்பட்டால் செய்ய வேண்டியதுதான்'' என்று சொன்ன விஜயன் ''நீங்கள் நான் சொன்ன விஷயத்தில் தகவல் அறிந்தால் மட்டும் போதும். எந்த கற்பனையிலும் இறங்க வேண்டாம்'' என்று எச்சரித்துவிட்டுத் தோழர்கள் அனைவரையும் சந்தித்தான்.

ஏறக்குறைய தோழர்கள் எல்லோரும் போர்ப்பயிற்சியில் முதல் சுற்றுக்குப் போய்விட்டு வந்திருந்தார்களாதலால் அவர்களிடம் அதுபற்றிய அனுபவத்தைக் கேட்டறிந்தான். பேருக்கென்றில்லாமல் எல்லோருமே விருப்பமாகவும் உற்சாகமாகவும் பயிற்சியைப் பெறுவதாகச் சொன்னார்கள். அத்தோழர்களில் அவனை இரண்டு நாட்களாக வெகுவாகக் கவர்ந்திருந்த உபத்தியன், அசயன், பந்து காபயன், மூத்தசிவன், உத்திகன், மாமகா சீலன், சூரத்தீகன், அபையன் மற்றும் அலேசனன் ஆகிய ஒன்பது வீரர்களை அழைத்து ''நீங்கள் எல்லோரும் எல்லா கலைகளிலும் வல்லவர்களாகப் பயிற்சி பெறவேண்டும். உங்களை வைத்துக் கொண்டு நவவீரர்* படையொன்றை அமைக்கலாம் என்று நினைக்கிறேன்.

---

* மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - தொகுப்பு மற்றும் வடிவமைப்பு வித்துவான் சா.இ. கமலநாதன் மற்றும் கமலா கமலநாதன்.

அதற்கேற்ப நீங்கள் வடிவம் பெறவேண்டும்'' என்று தெரிவித்தான்.

உபதலைவர்கள் நரசிம்மனும் டெமிட்ரியஸூம் மரக்கலத்திற்கு வந்து சேராததால் விஜயன் தன் அறைக்கு வந்தான். சிறிதுநேரம் வரை ஸ்ரீவிஜயாவைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தான். அப்படியே உறங்கியும் போனான். மறுநாள் காலை அவனைச் சந்தித்த டெமிட்ரியஸ் ''தலைவரே, இன்று நீங்கள் என்னோடு வந்தால் நல்லது'' என்றான்.

''என்ன விசேஷம்?'' கேட்டான் விஜயன்.

''இரண்டு நாட்களாக மாலுமிகள் தங்கியுள்ள மாலுமிகள் பள்ளத்தில் சுற்றித் திரிந்ததில் மாலுமிகளை நாமாக வாங்குவது இயலாது என்று தோன்றுகிறது. மாலுமிகள் சுதந்திரமாக இல்லை. நம்மிடம் பேசுவதற்குக் கூடத் தயங்குகிறார்கள். இத்தீவின் கடற்படைக்குப் பல வருடங்களுக்கு முன்னால் தளபதியாக இருந்த பண்டோரா என்பவரின் கட்டுப்பாட்டில் தான் எல்லா மாலுமிகளும் இருக்கிறார்களாம். கடற்படைக் கப்பல்களுக்கு கூட அவரது தயவு இல்லாமல் மாலுமிகளை அனுப்ப முடியாது என்று சொல்கிறார்கள்''

''அதனால் என்ன? அவரைச் சந்திக்க வேண்டியது தானே?''

''பண்டோராவைப் பற்றி உலவுகிற செய்தி நல்லபடியாக இல்லை. ஆபத்தானவன் என்றும் நிதானமற்றவன் என்றும் சொல்கிறார்கள். அவனிடம் இது விஷயமாகப் பேசமுடியுமா என்றுத் தோன்றவில்லை''

''தரகருக்கும் அவள் தந்த முத்திரைக்கும் இருக்கும் செல்வாக்கை இரண்டு நாட்களாக நீ பாத்திருக்கிறாய் அல்லவா? அதைக்காட்ட வேண்டியதுதானே?''

''பண்டோராவிடம் தானே காட்டமுடியும்? அவரைத் தான் சந்திக்க முடியவில்லையே?''

''சரி. புறப்படலாம்'' என்று சொன்ன விஜயன் டெமிட்ரியஸோடு மாலுமிகள் பள்ளம் என்ற இடத்திற்குச் சென்றான்.

அந்த இடம் இயற்கையாகவே பள்ளமாக இருந்ததாலும் அங்கே மாலுமிகள் குடிசைகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வந்ததாலும் அந்த இடத்திற்கு அப்பெயர் வந்திருக்க வேண்டும் என்று கருதினான் விஜயன். அவனும் டெமிட்ரியஸும் அங்கே சென்றபோது ஓரிரு மாலுமிகளைத் தவிர மற்ற எல்லோருமே குடிசைகளில் முடங்கிக் கிடந்தார்கள். ஒருசில குடிசைகளில் பெண்களின் சிணுங்கல் சப்தம் கேட்டது. அதையெல்லாம் கேட்டுக் கொண்டு யாரிடமும் பேசாமல் இருவரும் பண்டோரா இருந்த இடத்திற்குப் போனார்கள். பண்டோராவின் இருப்பிடம் சற்றே மேடானதொரு இடத்தில் கோபுரம் ஒன்றின் உச்சியில் இருந்தது. பார்ப்பதற்கு கலங்கரை விளக்கத் தூணைப் போலத் தோன்றினாலும் அது அதுவாக இல்லை என்பது விஜயனுக்குப் புரிந்தது. சுமார் நூறடி உயரம் இருந்த அக்கட்டிடத்திற்கு வெளியில் வளைவான மர படிக்கட்டுகள் இருந்தன. அக்கோபுர மாளிகையைச் சுற்றி ஐந்து வீரர்கள் காவல் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் போய் ''பண்டோராவைச் சந்திக்க வேண்டும்'' என்றான் விஜயன்.

''அனுமதி இருக்கிறதா?'' என்று கேட்டான் ஒரு காவல் வீரன்.

''நாங்கள் இங்கே இருக்கிறோம். நீ போய் அனுமதி வாங்கி வா'' என்றான் விஜயன்.

''எதற்காகச் சந்திக்க வேண்டும்?''

''மாலுமிகள் சம்பந்தமாக என்று சொல்''

காவல் வீரர் சிறிது யோசித்துவிட்டு மரப்படிகளில் வேகமாக ஏறி உச்சியில் இருந்த அறைவாசலுக்குள் நுழைந்த சில நிமிடங்களிலேயே திரும்பி வந்து ''தளபதி யாரையும் சந்திக்க விரும்பவில்லை'' என்றான்.

''நாங்கள் தரகர் ஸ்ரீவிஜயா அனுப்பி வந்திருக்கிறோம். அவசரமான விஷயம். இதைப் போய்ச் சொல் தளபதியிடம்'' என்றான் விஜயன்.

''தளபதி யாரையும் சந்திக்க விரும்பவில்லை என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன்''

''நான் சொன்னதைச் சொல். சந்திக்க விரும்புவார்''

காவல் வீரன் அரைமனதோடு மேலே சென்றுவிட்டு கீழே வந்தான்.

''தரகரின் அடையாள முத்திரை இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது''

''அதைக் குப்பையில் வீசிவிட்டு போகச் சொல்லும்படிச் சொன்னார் தளபதி''

காவல் வீரனின் பதிலைக் கேட்டு விஜயன் அசரவில்லை.

''முறைப்படி அனுமதி கேட்டுவிட்டோம். உங்கள் தளபதி முறைகளுக்கு மதிப்பளிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே நாங்களும் முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்'' என்றான்.

''எங்களை மீறி அவரைச் சந்திக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம்'' என்றான் காவல் வீரன்.

''அப்படியானால் உங்களையும் மீற வேண்டியதுதான்'' என்று கூறிய விஜயன் டெமிட்ரியஸுக்கு ஜாடை காட்டிவிட்டு வாளை உருவினான்.

சில நிமிடங்களிலேயே வாட்போர் ஒன்று உண்டாகிவிட்டது. விஜயன் வாட்போரில் பிறவிக் கலைஞன் ஆதலாலும் டெமிட்ரியஸும் அக்கலையில் சளைக்காதவன் ஆதலாலும் இருவரும் உக்கிரமாகப் போரிடவே ஐந்து காவல் வீரர்களும் சிலநிமிடங்களிலேயே காயம்பட்டு கீழே விழுந்தார்கள். அவர்களது வாட்களை அகற்றிவிட்டு மரப்படிகளில் விஜயனும் டெமிட்ரியஸும் ஏறினார்கள்.

கோபுரத்தின் மேலே போகப் போக குடலை புரட்டும் துர்நாற்றம் எழுந்தது. அதோடு கடல் காற்றும் அபரிமிதமாய் வீசியதால் காற்றே துர்நாற்றமாக மாறிவிட்டதுபோல இருந்தது. அதைச் சகித்துக் கொண்டு திறந்து கிடந்த உச்சி அறைக்குள்

அவர்கள் நுழைந்தபோது அங்கே விரிந்த காட்சி அருவறுப்பைத் தரக்கூடியதாக இருந்தது. சுமார் அறுபது வயதிற்கு மேற்பட்டவராக இருந்த பண்டோரா மரஆசனம் ஒன்றில் மலைபோலச் சாய்ந்து கிடந்தார். அதுவரையில் அவர் உண்டு முடித்திருந்ததற்கு அடையாளமாக எலும்புத் துண்டுகளும் மதுக் கலயங்களும் சிதறிக் கிடந்தன. அவர்மீது அரைகுறையான ஆடைகளுடன் ஐந்து அழகிகள் உராய்வதும் உருள்வதுமாய் இருந்தார்கள். அவர்கள் மதுவினை அவரது வாயில் மட்டுமின்றி உடல் மீதும் வீசி அறைமுழுதும் மதுவாடை குடியிருக்கும் படிச் செய்தார்கள். தளபதியின் கண்கள் செருகியிருந்தன. பெண்களோ தெளிவாக இருந்தார்கள். ஆனால் அறையில் இருவர் நுழைந்ததைக் கண்டபின்பும் அதைப்பற்றிக் கவலைப் படாதவர்களாய் தளபதிக்குச் சந்தோஷம் தரும் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். இப்படி வெட்கத்தையே புறக்கணித்துவிட்டு காம லீலைகளைத் தொடர்ந்த அவர்களைக் கண்டபோது விஜயனுக்கு மேற்கத்திய நாடுகளில் இருந்து வரும் அடிமைகளைப் பற்றிய நினைவு வந்தது. அந்நாடுகளில் மன்னர்கள் முதல் செல்வந்தர்கள் வரை அடிமைகளை விலைக்கு வாங்கி பாலியல் சுகங்களுக்காகப் பயன்படுத்தி வந்தார்கள். அப்பெண்களுக்கு பாலியல் அடிமைகள் என்ற பெயரே அந்த நாடுகளில் வழங்கப்பட்டு வந்தது. அந்த அடிமைகளில் பலரை ஊமைகளாகவும் செவிடுகளாகவும் ஆக்கி பாலியல் சுகத்திற்குப் பயன்படுத்திவரும் வழக்கமும் சிலருக்கு இருந்தது. இங்கே தளபதியின் மீது உருளும் பெண்களும் அத்தகைய அடிமைகளாக இருக்கவேண்டும் என்று நினைத்தான் விஜயன். அதை உறுதிப்படுத்தும் வகையில் அப்பெண்களின் கால்களில் மெல்லிய சங்கிலி பிணைக்கப்பட்டிருந்தது.

மனிதர்களுக்கு மனிதப் பிறவி கிடைப்பது அரியது. அப்படிப் பிறந்தவர்களில் அந்த அருமையை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்பவர்கள் அரிதாக இருப்பார்கள். பெரும்பாலானவர்கள் அந்த அருமையை உணராமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ்வார்கள். சிலர் மேலும் ஒரு படி மேலே போய் அதுவாய் வரக்கூடிய மரணத்தைத் தாங்களாகவே வரவேற்றுச் சீரழியக் கூடியவராக இருப்பார்கள்.

அப்படிப்பட்டவர்களில் ஒருவராய் இருந்தார் பண்டோரா. சொர்ணபூமியின் கடற்படைக்குத் தளபதியாக இருந்து ஒரு காலத்தில் அவர் சாதனைகளைப் படைத்திருக்கலாம். தற்போதோ அதன் அடையாளங்களை இழந்து மதுவிற்கும் மாதுவிற்கும் அடிமையாகி மரணப் பாதையில் பயணம் செய்பவராக இருந்தார். அவரால் ஆசனத்தைவிட்டு எழ முடியும் என்று தோன்றவில்லை.

அவரது கவனத்தைக் கவருவதற்காக விஜயன் சற்றே கனைத்தான். அது கர்ஜனையாகவே இருந்ததால் கண்களை விழித்த பண்டோரா ''யாரது?'' என்று கேட்டபடி ஆசனத்தில் விறைப்பாக அமர்ந்தார். விஜயனையும் டெமிட்ரியஸையும் பார்த்து ''யார் நீங்கள்? இங்கே வர யார் அனுமதி கொடுத்தது?'' என்று மூர்க்கமாக கேட்டார். அதே சமயம் அவர்மீது உராய்ந்து கொண்டிருந்த பெண்கள் அதே நிலையில் தான் இருந்தார்கள்.

''இவர்களை வெளியே அனுப்பிவிட்டுப் பேசமுடியுமா?'' என்று கேட்டான் விஜயன்.

''அலை இல்லாத கடல் இல்லை. இவர்கள் இல்லாமல் நானில்லை. நான் கேட்டதற்கு என்ன பதில்?'' என்று கேட்டார் பண்டோரா.

''அதுதான் வந்திருக்கிறோமே! புரியவில்லையா உங்களுக்கு?'' என்று கேட்டான் விஜயன்.

''காவல் வீரர்களைக் கொன்றுவிட்டீர்களா?''

''நாங்கள் கொலை புரியவரவில்லை. மாலுமிகளைப் பற்றி உங்களிடம் பேச வந்தோம்''

''அதுபற்றிப் பேச என்னிடம் என்ன இருக்கிறது?''

''மாலுமிகள் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம்''

''அதனால் என்ன?''

''எங்கள் கப்பலுக்கு முன்னூறு மாலுமிகள் தேவை. அவர்களை உங்களிடமிருந்து வாங்கிச் செல்ல வந்திருக் கிறோம்''

''மாலுமிகளை நான் விற்பதில்லை''

''வேறு யார் விற்கிறார்கள்''

''மாலுமிகள் விற்பனை பொருட்கள் அல்ல. யாரும் அவர்களை விற்கவோ வாங்கவோ முடியாது''

''வேலையில்லாமல் இருக்கும் மாலுமிகளைக் கூடவா வாங்கக் கூடாது?''

''ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். அவர்கள் விற்கப்படுவதில்லை''

''மாலுமிகள் பலரோடு பேசினோம். அவர்கள் எங்களோடு வரவும் பணிபுரியவும் விரும்புகிறார்கள்''

''அவர்களிடம் நீங்கள் பேசியது தவறு. அவர்கள் விரும்பியதும் தவறு''

''மாலுமிகள் அடிமைகளா? அவர்களுக்கு சொந்த விருப்பம் என்று எதுவும் கிடையாதா? அவர்களது திறமைகளுக்கு உபயோகம் கிடையாதா?''

''இங்கே நான்தான் எல்லாம். என்னைக் கேள்வி கேட்கும் உரிமை மன்னனுக்கும் கிடையாது''

''இப்படித்தான் ஸ்ரீவிஜயாவும் சொல்கிறாள். இத்தீவை ஆள்வது யார்?''

''இதற்குப் பதில் என்னிடம் இல்லை. மாலுமிகள் பள்ளத்திற்கு நான் தான் மன்னன். எனக்கு ஆணையிடும் உரிமை மன்னனுக்கும் இல்லை. ஸ்ரீவிஜயாவுக்கும் இல்லை''

''ஸ்ரீவிஜயாவின் செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கிறதே!''

''எனக்கு முன்னால் பறக்காது''

''ஏன்?''

இதற்குத் தளபதி பதில் சொல்லுவதற்குள் கோபுரப் பகுதியில் திடீர் ஆரவாரம் உண்டாயிற்று. புயலைப் போல அறையில் பிரவேசித்தாள் ஸ்ரீவிஜயா. உள்ளே விஜயனைக் கண்டதும் ''உங்களை யார் இங்கே வரச்சொன்னது? வாருங்கள்

இப்படி?'' என்று கூறி அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு வெளியேறினாள்.

இந்தத் திடீர் திருப்பத்தைக் கண்டு திகைத்து நின்ற டெமிட்ரியஸைப் பார்த்து ''ஸ்ரீவிஜயா யார் என்று தெரியுமா?'' என்று சிரித்தபடிக் கேட்டார் தளபதி.

''மன்னன் மகள்'' என்றான் டெமிட்ரியஸ்.

''உன்னோடு வந்தவன் யார்?''

''வங்கதேசத்து இளவரசர் விஜயபாகு''

''ரொம்ப பசையுள்ளவனா?''

''இல்லை. இருந்த பெரும் சொத்தையும் இழந்து தேடிக் கொண்டிருப்பவன்''

''பிறகு ஏன்...?'' என்று ஆரம்பித்த அவர் ''பாவம்'' என்ற வார்த்தையோடு நிறுத்திக்கொண்டார்.

டெமிட்ரியஸ் வெளியேறினான்.

இதேசமயம் விஜயனை தன் மாளிகைக்கு அழைத்துச் சென்ற ஸ்ரீவிஜயா ''உங்களை யார் அங்கே போகச் சொன்னது?'' என்று முகம் சிவக்கக் கேட்டாள்.

''இதென்ன கேள்வி? என்னுடைய தேவைகளை அன்றைக்கே உன்னிடம் சொல்லவில்லையா நான்? மாலுமிகளை வாங்குவதும் அவற்றில் ஒன்றுதானே? அதற்கு அங்கேதானே போகவேண்டும்?'' என்றான் விஜயன் அவளது சிவந்த முகத்தை ரசித்தபடி.

அவளுக்கு அவனது நியாயமான பதில் ஏற்கும்படியாக இல்லை.

''என்னிடம் தான் சொல்லி விட்டீர்களே, நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா? இன்றைக்கு உங்கள் அடிமைகளை நான் நேரில் போய் விற்றுத் தந்துவிட்டு வருகிறேன். அதுபோல இதையும் நான் செய்திருக்க மாட்டேனா?'' என்று கடிந்து கொண்டாள் பெருமூச்செறிய.

அவளது கோபத்தையும் அசைவுகளையும் ரொம்பவும் ரசித்த விஜயன் ''உன் செல்வாக்கு அங்கே செல்லாக்காசாகி விட்டதே ஏன்?'' என்று அவளைச் சீண்டுவதுபோல் கேட்டான்.

''இருக்கட்டும். இருக்கட்டும். தளபதிக்கு கொழுப்பு அதிகமாகத்தான் இருக்கிறது. விரைவில் அவருக்குச் சமாதி கட்டுகிறேன்'' என்ற அவள் ''அவர்தான் என் முத்திரை அடையாளத்தை அலட்சியப்படுத்தி விட்டாரே, பிறகு எதற்காக அவரைச் சந்தித்தீர்கள்? மாலுமிகளை வாங்க உங்களிடம் பணம் ஏது?'' என்று கேட்டாள்.

''உண்மைதான். இருந்தாலும் அவரைச் சந்திக்க விரும்பினேன். என்னைச் சந்திக்க மறுக்கிறவர்களை மறுப்பை மீறி சந்திப்பது என் சுபாவம். அதைத்தான் நானும் செய்தேன்.''

''தளபதியைப் போல உங்களுக்கும் கொழுப்பு அதிகமாகத் தான் இருக்கிறது''

''என்னை இப்படித் தாக்கிப் பேசியது நீ மட்டும்தான். ஆனால் எனக்கு உன்மேல் கோபம் வரவில்லை. காரணமிருந்தாலும் கோபப்படாத என்மேல் நீதான் அடிக்கடி காரணமில்லாமல் கோபப்படுகிறாய்''

விஜயனின் பேச்சு அவளை மயக்கியது.

''அழகாகப் பேசுகிறீர்கள்'' என்றாள் கிறக்கத்துடன்.

''தீவுவாசிகளின் இயல்பு'' என்றான் விஜயன்.

''என்ன சொல்கிறீர்கள்?''

''நேற்று தான் சொன்னேனே!''

''என்ன சொன்னீர்கள்?''

''உலகமெல்லாம் இருக்கிற பொதுவான விஷயங்கள் இங்கே தலைகீழாக இருப்பதாகச் சொல்ல வில்லையா?''

''ஆமாம்''

''பெண்களைத்தேடி அலைவது ஆடவர் இயல்பு. அது இங்கே தலைகீழாக இருக்கிறது. பெண்களை ஆடவர்கள்

புகழ்வது உலக வழக்கம். அதுவும் இங்கே தலைகீழாகி நான் பேசுவதை நீ புகழ்கிறாய்''

''நான் உங்களைப் பாராட்டக் கூடாதா?''

''பாராட்டு. அதுதானே இங்குள்ளப் பெண்களின் இயல்பு?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இங்குள்ள பெண்களும் எல்லோரையும் போலத்தான்''

''நீ மட்டும் விதிவிலக்கு போலிருக்கிறது''

''அப்படியொன்றும் இல்லை''

''என்னை கோபுரத்திலிருந்து அழைத்து வந்தாயே அதுதான் இங்குள்ள பெண்களின் இயல்பா?''

''ஏன் இப்படி பேச்சால் என்னைக் கொல்கிறீர்கள்?''

சிரித்தான் விஜயன்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''சற்று முன் தான் நான் அழகாகப் பேசுவதாகச் சொன்னாய். இப்போது பேச்சால் நான் கொல்வதாகச் சொல்கிறாய். எத்தனை முரண்பாடு?''

''இன்றைக்கு இதோடு பேச்சை நிறுத்திக் கொண்டால் என்ன?''

''எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை''

''பிறகு?''

''சொல்''

''உங்களுக்கொன்றும் புரியவில்லையா?''

''சரியாகப் புரியவில்லை''

''இதோ புரியவைக்கிறேன்'' என்று கூறி அவன் மீது பாய்ந்து அவனை அணைத்தாள் ஸ்ரீவிஜயா.

''ஐயோ, இதென்ன வேகம்?'' என்றான் விஜயன்.

அவனது பேச்சை நிறுத்த தன் உதடுகளால் அவன் உதடுகளை மூடி அழுத்தவும் செய்தாள்.

ஆரம்ப வேகங்கள் குறைந்து போகப் போக நிதானப்பட்டன.

நிதானத்தின் போது இன்பம் அளவாகப் பிரவகித்ததால் திருப்தி அதிகமாக இருந்தது.

எங்கே இவன் உடன்படாமல் போய்விடுவானோ என்றச் சந்தேகத்தில் இருந்த அவளுக்கு அச்சந்தேகம் படிப்படியாக குறையும் அளவிற்கு விஜயனின் ஈடுபாடு அதிகமாகிக் கொண்டு வந்தது.

சந்தேகம் அறவே நீங்கும் உச்சகட்ட நிலையை நெருங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்தாறு

# ஸ்ரீவிஜயாவின் தாபம்

**விஜயனை** முதன் முதலாக தரகர் பெண்ணாக அமர்ந்து பார்த்தபோது ஸ்ரீவிஜயாவுக்கு அவனைப் பிடித்துப் போய்விட்டது. அவன் இளவரசனாக வரவில்லை. வணிகனாக வந்தான். வணிகனாகவே பேசினான். ஆனால் அவன் பேசியவிதம் கவர்ச்சியாக இருந்தது. அவனது குரலில்கூட ஒருகவர்ச்சி தவழ்ந்தது. வேறு எந்த விவரமும் தெரியாத நிலையிலும் எந்த விவரத்தைப் பற்றியும் கவலைப்படாத நிலையிலும்அவன் மீது ஈர்க்கப்பட்டுவிட்ட அவள் தேவையில்லாமல் யோசனைகளில் இறங்காமலும் காலத்தைக் கடத்தாமலும் உடனடியாக அசுவநாவிகரிடம் தன் விருப்பத்தை தெரிவித்தாள். கோரிக்கை என்று சொன்னாலும் அதில் கட்டாயம் மறைமுகமாக இருந்தது. விஜயனின் தேவைகளை பூர்த்தி செய்து தருவதாகச் சொன்னது மேலுக்கு உதவியைப் போலத் தோன்றினாலும் அது நிபந்தனையாக அமையும் வகையில் அசுவநாவிகருக்கு முதல் நாளிலேயே உணர்த்தி விட்டாள்.

இத்தனைக்கும் அவளொன்றும் ஆடவர் சுகத்திற்காக அலையும் சுபாவத்தினள் அல்ல. தரகர் பதவியில் அமர்வதற்கு முன்பும் பின்பும் பல ஆடவர்களை அவள் சந்தித்ததுண்டு. அவர்களில் சிலர் விஜயனைவிட அழகானவர்களாகவும் இருந்திருக்கலாம். பலபேர் அவளிடம் பழக்கம் வைத்துக் கொள்ளத் துடித்தது உண்டு. செல்வம் கொழிக்கும் சீமான் வீட்டுப் பிள்ளைகள் பலர் சரக்கு விற்பதை சாக்காக வைத்துக் கொண்டு அவளது அன்பைப் பெற வணிகர்களாக அணுகியதுண்டு. அப்போதெல்லாம் அவள் தரகராக மட்டுமே நடந்து கொண்டிருந்தாளே தவிரப் பெண்ணாகக்கூட காட்டிக் கொண்டதில்லை. தன் அன்பையும் உடலையும் பெற பலரும் துடிக்கிறார்கள் என்று அவளுக்குத் தெரிந்தே இருந்தாலும் யார் மீதும் அவளுக்கு இச்சை வரவில்லை. மாறாக தொழில் ரீதியான வெறியில் பலரது கொலைக்கு காரணமாக இருந்திருக்கிறாள். தன்னையும் தன் பதவியையும் அதற்கிருந்த செல்வாக்கையும் கேள்விப்பட்டாலே அவரவர்களும் அலறும் நிலை வந்தபோது அவளுக்கு ஆனந்தமாக இருந்தது. அதை அவள் பெரிதும் விரும்பினாள். ரசித்தாள். ஒரு கட்டத்தில் மன்னனையும் உதாசீனப்படுத்தி தன் விஷயத்தில் அவனும் த்லையிடாத ஒரு சூழ்நிலையை உருவாக்கியபோதுதான் அவளைக் கண்டு எல்லோரும் அஞ்சலானார்கள். அவளது அன்புக்காக ஏங்கியவர்கள்கூட ஆடிப்போய் அகன்றார்கள்.

இப்படி தனக்கு முன்னால் அச்சமே எல்லோருக்கும் பிரதானமாக இருந்து வந்த நிலையில் விஜயன் வந்த விதமும் அச்சம் எதுவுமின்றி சகஜமாகவும் அதேசமயம் அழுத்தமாகவும் பேசியபோது எங்கேயோ ஒளிந்து கொண்டிருந்த ஓர் உணர்வு அவளிடம் வெளிப்பட்டு அவளை ஆட்கொண்டது. இது எப்படி சாத்தியம் என்ற வியப்பு உள்ளுக்குள் எழுந்தாலும் உணர்வானது உண்மையாக இருந்ததால் வியப்பை உதறிவிட்டு அவ்வுணர்வை எப்படி வெற்றி பெறச் செய்யலாம் என்று யோசித்தாள். கூர்மையான அவளது அறிவு தரகு பேசும் போதே ஒளிர்ந்தது. விஜயனின் நிர்க்கதி அவளுக்குப் புரிந்தது. அதையே வலையாக அவன்மீது வீச முற்பட்டு அசுவநாவிகரிடம் கோரிக்கை விடுப்பதுபோல் கட்டாயப்படுத்தினாள். உயிர்

பயத்தை உபாயமாகக் கையாண்டாள். இருந்தாலும் சந்தேகம் மட்டும் அவளுக்குள் இருக்கவே செய்தது. விஜயன் நிர்க்கதியில் இருந்தாலும் தன்னை ஏற்காமல் போவதற்கு வாய்ப்பிருப்ப தாகவே நினைத்தாள். சரக்குகளை தன்னிடம் விற்காமல் முறைப்படி சுங்கத்துறை மூலம் அங்காடிகளில் விற்க அவன் நினைத்தால் தன்னை உதாசீனப்படுத்திவிட முடியும் என்று அவளுக்குத் தோன்றியது. எனவே அதற்கு இடமளிக்காமல் தனது ஆட்களை அனுப்பி தீவுக்கப்பலில் இருந்த சரக்குகளை அகற்றி அவனுக்கு என்னென்ன தேவையோ அங்கெல்லாம் தனது செல்வாக்கின் மூலம் வேலைகள் அதிவிரைவாக நடக்கும்படி பார்த்துக் கொண்டாள். அதில் அவளுக்கு வெற்றி கிட்டியது. விஜயனும் சம்மதம் தெரிவிக்கும் விதமாக நேரிலும் வந்தான்.

அப்போதும் அவளுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. தனக்கு சம்மதம் தெரிவிப்பதுபோல தெரிவித்து தனது இச்சைகளை பூர்த்தி செய்யாமல் ஆசை வார்த்தைகளை மட்டும் பேசிக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்று நினைத்தாள். அதைச் சோதித்துப் பார்த்துவிட வேண்டும் என்று தான் அவனது பேச்சை நிறுத்திவிட்டு அவன்மீது வேகமாகப் பாய்ந்தாள். காமம் இருவகையானது. ஒன்று மிருகமாக வெளிப்படும். மற்றொன்று மிருதுவாக வெளிப்படும். தான் மிருகம் போல் பாய்ந்த போது அவனும் மிருகமாக மாறுவான் என்றும் அப்படி மாறினால் சொர்க்கானுபவம் சோபிக்கும் என்றும் ஜொலிக்கும் என்றும் எதிர்பார்த்தாள். ஆனால் அப்படி நடக்கவில்லை. தான் காட்டிய வேகத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட அவன் மிருகமாக மாறி ஈடுகொடுக்க முயலாமல் படிப்படியாக வேகத்தைக் குறைத்து காமத்தை மிருதுவாக வெளிப்படுத்தியபோது அசந்து போனாள் அவள். மிதமிஞ்சிய காமத்தைவிட மிருதுவான காமம் மிதமிஞ்சிய ஆனந்தத்தைத் தருவதை உணர்ந்த அவள் ''இவன் காமக்கலையின் தலைவனாக இருப்பானோ?'' என்றும் ''இவன் தான் மன்மதனோ?'' என்றும் நினைத்துப் பூரித்தாள். அவனது கைகள் ஆரம்பித்து வைத்தக் காமக் கூத்து பல்வேறு அங்கங்களால் பரிணாமம் பெற்றுப் பரவியபோது சிலிர்த்துப் போன அவள் சந்தேகங்களிலிருந்து விடுபடலானாள். காம

உறவின் உச்சகட்டம் நிறைவேறி விட்டால் சந்தேகம் அறவே அழிந்துவிடும் என்று அவள் தீர்மானித்த நிலையில் அந்தச் சம்பவத்திற்காகக் காத்திருந்தாள். விஜயனோ அச்சம்பவத்தை நிகழ்த்தாமல் விலகி எழுந்துவிடவே பெரிதும் ஏமாற்ற மடைந்தாள். அதற்கென்ன காரணம் என்று அவனிடமே கேட்க முடியாத நிலை. எதிர்பார்த்த சிறப்பு நிகழாத ஏக்கத்தில் புரண்டாள் கட்டிலில். விஜயனோ எழுந்து ஆடைகளை சரி செய்து கொண்டு மரக்கலத்திற்குச் சென்று நீராடினான்.

அன்றிரவு உபதலைவர்களின் சந்திப்பின்போது உதயணன் அடிமைச் சந்தைக்கு ஸ்ரீவிஜயா நேரில் வந்ததையும் அடிமை வர்த்தகர்களோடு நேரிலேயே பேசி அடிமைகளை நல்ல விலைக்கு விற்றுத் தந்ததாகக் கூறி நான்கு சாக்கு மூட்டைகளை காட்டி அவற்றில் அடிமைகளை விற்றுப் பெற்ற தங்க நாணயங்கள் இருப்பதாகத் தெரிவித்தான்.

''நல்ல விலைக்குத்தான் விற்றிருக்கிறாள் இல்லையா?'' என்று கேட்டான் விஜயன்.

''அதிலென்ன சந்தேகம்? அங்கிருந்த அடிமை வர்த்தகர்களே அசந்து போனார்கள். அவர்கள் விற்றிருந்தால் இரண்டு மூட்டை நாணயங்கள்தான் கிடைக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள். தரகரே நேரில் ஈடுபட்டதால் தான் இந்த நிலை என்று எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள்'' என்று சொன்ன விஜயன்'' தரகர் இன்னொரு விஷயத்தையும் சொன்னார். உங்களிடம் சொல்லவும் சொன்னார்'' என்றான்.

''சொல்''

'நமது கப்பலில் இருந்த அடிமைகளுக்கு பதிலாக திறமையான மாலுமிகளை நாம் வாங்க இருந்தோம் அல்லவா?''

''ஆமாம்''

''அது விவேகமான செயல் அல்ல என்றார். மரக்கலத்தைப் பொறுத்தவரை துடுப்பு போடும் பணியை அடிமைகளைவிட வேறு யாராலும் திறம்பட செய்யமுடியாது என்றார். எனவே மாலுமிகளை வாங்குவதைவிட அடிமைச் சந்தையில் புதிய அடிமைகளை குறைந்த விலையில் வாங்கி மரக்கலத்தில்

பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், அதற்கு தானே உரிய ஏற்பாடுகளை செய்வதாகவும் சென்னார். தேவைப்பட்டால் ஒருசில திறமைசாலியான மாலுமிகளை சுக்கான் பிடிப்பதற்கும், பாய்மரங்களை ஏற்றி இறக்கவும், சிக்கலான நேரங்களில் அறிவுரை கூறி உதவுவதற்கும் பெற்றுக் கொள்ளலாம் என்றும் உங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்., என்ன சொல்கிறீர்கள்?''

''சரியான யோசனை தான்''

''தலைவரே!''

''என்ன?''

''ஒரு விண்ணப்பம்''

''சொல்''

''அடையாளம் தெரியாத மற்றும் அறிமுகம் இல்லாத அயல்நாட்டில் நம்மைப் போன்ற நிர்க்கதியில் வந்தவர்களுக்குத் தரகரைப் போல இந்த அளவிற்கு வேறு யாரும் உதவ மாட்டார்கள். இது சத்தியம்''

''அதற்கென்ன?''

''தங்கள் மனைவிகூட தங்களுக்கு துரோகம்தான் செய்தார்''

''உதயணா, பீடிகை போடாமல் விஷயத்தைச் சொல்''

''தரகரை முழுமனதோடு ஏற்றுக் கொள்ளுங்கள். கரும்பும் கிடைத்து அதைக் கடிக்க கூலியும் கிடைக்கிறது. நீங்கள் அறிவாளி. இவ்வளவு தான் என்னால் சொல்லமுடியும்'' என்று கூறிவிட்டு அகன்றான்.

''உதயணனுக்கு உணர்ச்சி வசப்படுவது வாடிக்கை'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டான் விஜயன்.

அன்று அவன் மிகவும் எதிர்பார்த்த அசுவநாவிகர் வரவில்லை.

மாறாக உபதலைவன் நரசிம்மன் வந்திருந்தான். தீவுக்கப்பலைப் போர்க் கப்பலாக மாற்றுவதற்கான உபகரணங்கள், பொறிகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றை வாங்கி விட்டதாகக் கூறிய அவன் அவற்றின் பட்டியலை விஜயனிடம் காட்டினான். மறுநாள் அவை அனைத்தும் தீவுக்

கப்பலுக்கு கொண்டு வரப்படும் என்றும் உபதலைவன் தனஞ்செயனின் ஆலோசனைப்படி மரக்கலத்தில் எங்கெங்கு பொறிகளைப் பொறுத்த வேண்டுமோ அங்கெல்லாம் பொறுத்தப்படும் என்று தெரிவித்தான். ஆயுதங்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும் குறைவான விலையில் தரமானவற்றை வாங்கும் விஷயத்திலும் தரகரின் ஆட்கள் மிகவும் உதவினார்கள் என்றும் ஸ்ரீவிஜயாவே நேரில் வந்து வாங்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டு திருப்தியடைந்ததாகவும் கூறினான்.

எல்லாவற்றையும் கூறிவிட்டு ''இதுபோன்ற தரகரை வேறெங்கும் பார்க்க முடியாது. நீங்கள் மிகவும் அதிஷ்டக்காரர் தலைவரே, தரகரை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டுப் போனான்.

''இவர்களெல்லாம் பின் விளைவுகளைப் பற்றியோ பிற்காலத்தைப் பற்றியோ யோசிப்பதில்லை'' என்று சொல்லிக் கொண்டான் விஜயன்.

அன்று நள்ளிரவு ஏறக்குறைய அனைவருமே உறங்கிவிட்ட நிலையில் உதயணன் மட்டும் எழுந்து ஒரு சுற்று பார்த்துவிட்டு விஜயனிடம் வந்தான். விஜயன் நன்றாகத் தூங்குவதை கவனித்தபின் பெருமூச்செறிந்துவிட்டு கப்பலிலிருந்து இறங்க நூலேணியை இறக்கியபோது ''எங்கே புறப்பட்டு விட்டாய் உதயணா அதுவும் இந்த நேரத்தில்?'' என்று குரல் கேட்கவே திரும்பினான் உதயணன்.

அங்கே தனஞ்ஜெயன் நின்றிருந்தான்.

''நீ இன்னும் உறங்கவில்லையா?'' என்று கேட்டான் உதயணன்.

''கப்பலில் ஒருவராவது விழித்திருக்க வேண்டும் உதயணா. இது உனக்குத் தெரியாதா?'' என்று சொன்ன தனஞ்செயன்'' என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லையே நீ?'' என்று கேட்டான்.

''கடற்கரையில் போய் படுக்கலாம் என்றிருக்கிறேன். நீ வேண்டாம் என்றால் இங்கேயே இருந்து விடுகிறேன்'' என்றான் உதயணன்.

''அப்படியெல்லாம் வேண்டாம். உன்னைத் தடுக்க நான் யார்? தாராளமாகப் போய் வா. ஆனால் ஜாக்கிரதையாக இரு. கடற்கரையில் பேய்கள் உலாவும்''

''கடலில் இல்லாத பேய்களா கடற்கரையில் உலவப் போகிறது? நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம்'' என்று கூறிவிட்டு நூலேணியில் இறங்கினான் உதயணன்.

மறுநாள் விஜயன் போர்ப்பயிற்சி பெறும் வீரர்களைப் பார்வையிட்ட போது அசுவநாவிகர் அவனைத்தேடி வந்து ஒரு செய்தியைச் சொன்னார். அதைக் கேட்டதும் விஜயனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படர்ந்தன.

''மன்னனே இப்படிச் சொன்னானா?'' என்று கேட்டான்.

''ஆமாம்''

''இதை நேரில் இருந்து கேட்டீர்களா?''

''ஆமாம்''

''எப்படி?''

''மன்னரை ஜோதிடர்கள் எளிதில் அணுகமுடியும் என்று கேள்விப்பட்டேன். ஜோதிடனாக அவரிடம் சென்றேன். பாரத தேசத்து ஜோதிடன் என்றும் தீவுக்கப்பலில் வந்தேன் என்றும் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டபோது நம் நாட்டு ஜோதிடர்களைப் பற்றி அவர் சிலாகித்துப் பேசினார். பாரத நாட்டு ஜோதிடர்கள் தெய்வாம்சம் பெற்றவர்கள் என்றார். அவர்களுக்கு கிரகங்கள் துணைபுரிகின்றன என்றும் அவர்கள் வாக்கு அருள்வாக்கு என்றும் சொன்னார்''

''உமக்கு ஜோதிடம் தெரியுமா?''

''எங்கள் தலைவர் சதுர்வேதியிடமிருந்து ஓரளவிற்கு கற்றிருக்கிறேன்''

''மன்னன் உன்னிடம் ஆருடம் கேட்டானா?''

''கேட்டார். நான் அதிகமாக எதுவும் சொல்லாமல் மன்னருக்கு நல்ல காலம் வரப்போவதாகச் சொன்னேன் எப்போது வரும் என்று கேட்டார். தீவுக்கப்பல் சொர்ணபூமிக்கு வந்து நேரத்திலிருந்தே நல்ல நேரம் துவங்கி விட்டதாகச்

சொல்லி நீங்கள் கூறியிருந்ததைச் சொன்னேன். அப்போதுதான் இந்த பதிலைச் சொன்னார்''

''அசுவநாவிகரே, மன்னனின் பதில் உமக்கு வியப்பாக இல்லையா?''

''வியப்பா? திகைப்பாக இருந்தது. ஒருகணம் திணறிப் போய் விட்டேன் நான்''

''மன்னனின் பதிலுக்கு நீங்கள் ஏதாவது சொன்னீர்களா?''

''வாயைத் திறக்கவில்லை. பேச்சை திசை திருப்பிவிட்டேன்''

''நல்லது அவசுவநாவிகரே. இந்த விஷயத்தை அப்படியே மறந்து விடுங்கள். யாரிடமும் இதுபற்றிய பேச்சு வேண்டாம். இனி உங்கள் பணி புரவிக்கூடத்தில் தொடரட்டும்'' என்றான் விஜயன்.

அசுவநாவிகரின் செய்தி எதிர்பாராததாக இருந்தாலும் அவனுக்குள் உண்டாகியிருந்த சந்தேகம் வலுப்பெற்றது.

மேற்கொண்டு அதுபற்றி யோசிக்காமல் அன்று முழுவதும் தோழர்களது பயிற்சி முகாமிலேயே நேரத்தைச் செலவிட்ட விஜயன் மரக்கலத்திற்குத் திரும்பியபோது இரவாகிவிட்டது. உபதலைவன் நரசிம்மன் போர் ஆயுதங்களை மரக்கலத்திற்கு கொண்டு வந்து சேர்த்திருந்ததால் அவற்றையெல்லாம் பார்வையிட்டு விட்டு தனஞ்ஜெயனை அழைத்து சில ஆலோசனைகளைச் சொன்னான்.

''மாலுமிகளுக்கு பதிலாக அடிமைகளை வாங்கும் விஷயம் என்னவாயிற்று? உதயணன் எங்கே?'' என்று கேட்டான் விஜயன்.

''இப்போதுதான் கடற்கரைக்குப் போனார்'' என்றார் ஒரு தோழர்.

''கடற்கரையிலிருந்து கப்பலுக்கு வரும் நேரமல்லவா இது? இந்நேரத்தில் கப்பலிலிருந்து எதற்காக கடற்கரைக்குச் செல்ல வேண்டும்?''

''கடற்கரையில் படுக்க விருப்பமாம். நேற்றுகூட நள்ளிரவுக்குப் பின் கப்பலை விட்டுப் போனார்'' என்றான் தனஞ்செயன்.

''போகட்டும். புதிய பிரச்சினைகளை உண்டாக்காமல் இருந்தால் சரி'' என்று கூறிவிட்டுத் தன்அறைக்கு வந்தான் விஜயன்.

நள்ளிரவு நேரம் தாண்டியதும் கப்பலில் அமைதி நிலவியது. விழித்திருக்கும் சுபாவம் கொண்ட தனஞ்ஜெயன் கூட அசதி காரணமாகச் சற்றே கண்ணயர்ந்தான்.

அச்சமயத்தில் கப்பலில் நூலேணி மூலம் ஏறி கப்பலுக்கு வந்த ஓர் உருவம் ஓசைப்படுத்தாமல் மேல்தளத்திற்கு வந்தது. விஜயன் இருந்த அறைக்கு வந்து லேசாகக் கதவைத் திறந்து தலையை மட்டும் உள்ளே நுழைத்தது.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்தேழு

# சொர்ணேஸ்வரன்

உள்ளே தலையை நீட்டியது தரகர் ஸ்ரீவிஜயாதான். அறைக்குள் விஜயன் தூங்கிக் கொண்டிருந்தாலும் முகத்தில் மரணக்களை படியாமல் மயக்கும் மோகனக் களையே நிலவியது. ''இவர் பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டியவர்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்ட அவள் ''என்னைத் தவிக்கவிட்டு விட்டு நிம்மதியாக இங்கே உறங்குகிறீர்களா?'' என்று முணுமுணுத்த அவள் உள்ளே நுழைந்து அவனுக்காக குனிந்து தனது இதழ்களால் அவனது உதடுகளைத் தடவினாள். அதே சமயம் விஜயன் கனவில் இருந்தான். அவளிடம் கட்டுண்டிருந்த அனுபவம் கனவாக மாறியிருந்தது அவனிடம். எனவே அவள் தனது உதடுகளைத் தடவியபோது கனவில் நடக்கும் நிகழ்ச்சி போலத் தோன்றியதால் அசைவற்றிருந்தான். அவள் உதடுகளில் அழுத்தத்தை கொடுக்கவே அவனது கனவு கலைந்தது. உதடுகளும் கலைந்தன. கண்விழித்த அவன் ஸ்ரீவிஜயாவைப் பார்த்ததும் ''நீயா?'' என்று கேட்டபடி எழுந்து

கட்டிலில் அமர்ந்து கொண்டு அவளையும் உட்காரச் சொன்னான்.

''நான் வந்தது வியப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டாள் அவள்.

''உன்னைப் பார்த்து வியக்க எதுவுமில்லை'' என்றான் விஜயன் அவளது கைகளைப் பற்றியபடி.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''வியப்பதற்குரிய நிலைகளையெல்லாம் கடந்துவிட்ட உன்னிடம் வியக்க என்ன இருக்கிறது?''

''ரொம்பத்தான் அசத்துகிறீர்கள்'' என்ற அவள் ''நேற்று என்ன அப்படிச் செய்துவிட்டீர்கள்?'' என்று கேட்டாள் ஏங்கும் குரலில்.

அவள் எதைக் குறிப்பிடுகிறாள் என்பது விஜயனுக்கு நன்றாகவே புரிந்தது. ''பிடிக்கவில்லை. அதுதான் காரணம்'' என்றான் சகஜமாக.

''எல்லாம் பிடித்துவிட்டது. அது மட்டும் பிடிக்க வில்லையா? நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள்'' என்றாள் அவனை ஏறிட்டுப் பார்த்து.

''உன்னால் ஊகிக்க முடியவில்லையா?''

''முடியாததால் தான் இங்கே வந்தேன்''

''ஸ்ரீவிஜயா, என்னைப் பற்றிய விவரம் உனக்குத் தெரியுமா?''

''எதுவாக இருந்தாலும் நான் பொருட்படுத்தத் தயாராக இல்லை''

''எதையும் அறிந்து கொள்ளாமல் என்மீது உனக்கு ஆசை வந்தது எப்படி?''

''ஆசை வெட்கமறியாது''

''இதுபோன்ற ஆசை உனக்கு வந்ததே இல்லையா?''

'இல்லை''

''நீ பலரைப் பார்த்து-பேசி-பயமுறுத்தி வைத்திருக்கிறாய். உன்னிடம் வெட்கமோ தயக்கமோ ஏற்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் என்னிடம் உனக்கு ஆசை வந்ததற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்''

''நீங்கள் நம்பினாலும் சரி நம்பாவிட்டாலும் சரி. உண்மை இதுதான். உங்களைக் கண்டதும் ஆசை வந்துவிட்டது. அதற்கு ஒரு காரணமும் இல்லை''

''நம்புகிறேன் ஸ்ரீவிஜயா. பலமான காரணங்களால் ஏற்பட வேண்டிய உணர்வுகள் சில நேரங்களில் சில மனிதர்களுக்கு காரணமில்லாமலேயே ஏற்படுவதுண்டு''

''இதையெல்லாம் ஏன் கேட்கிறீர்கள்?''

''ஸ்ரீவிஜயா!''

''சொல்லுங்கள்''

''உனக்கிருக்கும் ஆசை தொடரவேண்டுமா? மறைந்துவிட வேண்டுமா?''

''மறைந்துபோக நான் விரும்புவேனா?''

''நீ சொன்னாயே ஒரு விஷயத்தில் நான் குறை வைத்து விட்டேன் என்று - அக்குறையை வைத்ததால் தான் இன்று நீ என்னைத்தேடி வந்திருக்கிறாய் எதைப்பற்றியும் கவலைப் படாமல். நான் அக்குறையை வைக்காமல் நிறைவேற்றி யிருந்தால் நீ இங்கே வந்திருப்பாயா?''

''நீங்கள் சொல்வது உண்மைதான்''

''இப்போதாவது புரிகிறதா?''

''அதாவது''

''ஆசையை பூர்த்தி செய்து விட்டால் அது மனத்தை விட்டு அகன்றுவிடும்''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஆசையின் இயல்பு அது. நிறைவேறும் வரை வீரியமாகவும் துளிர்விட்டுக் கொண்டும் இருக்கும். நிறைவேறி விட்டால். வாடிப்போய் விரைவில் அழியும். ஏன் தெரியுமா?''

''ஏன்?''

''ஆசையின் இடம் மாறிவிடும்''

விஜயனின் அலசலைக் கேட்டு அசந்து போனாள் ஸ்ரீவிஜயா. அவன் கூறியது முற்றிலும் உண்மை என்பதால் பூரித்துப்போன அவள் அவனது மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு ''இதையெல்லாம் எங்கே கற்றீர்கள்?'' என்று கேட்டாள்.

''பட்டறிவு தான்''

''அப்படியென்றால்?''

''அனுபவம். அது தருகிற அறிவு அதிகமானது. ஆழமானது''

''என் ஆசையை நிறைவேற்றவே மாட்டீர்களா?''

''உனக்கந்த நம்பிக்கை இல்லையா?''

''உங்கள் தத்துவப்படி பார்த்தால் கவலையாக இருக்கிறது''

''கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது என்பார்கள். உன்னை நான் அப்படித்தான் நினைக்கிறேன். நீயோ ஆற்று நீராக இருக்க விரும்புகிறாய் போலிருக்கிறது'' என்று சொன்ன விஜயன் ''உன்னை இக்கப்பலிலேயே வைத்து கடத்திப் போய் விடலாமா என்று தோன்றுகிறது. நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை''

''அது தெரிந்ததுதான். ஆனால் நான் அப்படிச் செய்தால் மன்னர் விடுவாரா?''

''அவருக்கென்ன வந்தது?''

''தன் மகளை ஒருவன் கவர்ந்து போவதை எந்தத் தந்தையாவது வேடிக்கை பார்ப்பாரா?''

''போர் செய்தால் நீங்களும் போரிட வேண்டியதுதானே? உங்களால் அது முடியாதா?''

''அது கடைசி முயற்சி. அதை ஆரம்ப முயற்சியாக மேற்கொள்ள முடியாது''

''வேறென்ன செய்யப் போகிறீர்கள்?''

''சுமுகமான வழி. சமாதானமான வழி. அவரே விரும்பி உன்னை என்னோடு அனுப்பி வைக்கும் வழி''

இதைக் கேட்டதும் சட்டென்று எழுந்து கொண்டாள் ஸ்ரீவிஜயா. அவள் முகத்தில் கோபம் துளிர்த்தது.

''வீரராக இருந்து செயல்படுவதை விட்டு இப்படியெல்லாம் நீங்கள் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை'' என்றாள்.

''என் வீரத்தைப் பற்றி சந்தேகம் இருக்குமானால் இக்கப்பலில் உள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள். என் வீரம் விவேகமானது. விவேகமான வீரமே வீரனுக்கு உரியது. நாளை நான் மன்னரைச் சந்திக்கப் போகிறேன்''

''பெண் கேட்கவா?''

''அதைத்தான் நீ விரும்பவில்லையே! அதை விட்டு விடு. நான் சந்திக்கப் போவது வேறு விஷயத்திற்காக''

''அது என்ன என்று என்னிடம் சொல்லலாமா?''

''உனக்குத் தெரியாமல் எதையும் செய்ய நான் முயற்சிக்க மாட்டேன்''

''சொல்லுங்கள்''

''என் கப்பலை போர்க்கப்பலாக மாற்றுகிறேன் அல்லவா? அதை மன்னர் ஆட்சேபிக்கிறாராம். என் கப்பலை சிறை வைக்கப் போகிறாராம்''

''அப்படி யார் சொன்னது?''

''மன்னர் தான்''

''மன்னர் சொன்னதாக யார் சொன்னது?''

''அரண்மனைச் செய்திதான்''

விஜயனின் இப்பதிலைக் கேட்டதும் மறுமொழி எதுவும் சொல்லாமல் வெளியேறினாள் ஸ்ரீவிஜயா.

★★★

இன்றைக்கு சுமத்திரா என்று அழைக்கப்படும் சொர்ண பூமியில் சொர்ணத்தால் வடிவமைக்கப்பட்ட அரண்மனையின் அந்தப்புரத்தில் அதன் மன்னனான சுவர்ணேஸ்வரன் நீண்ட நேரமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்ததைக் கண்டு வியந்தாள் ராணி. சாதாரணமாக மன்னன் அந்தப்புரத்திற்குள் வரும்போது சிந்தனைகளை வெளியே வைத்து விட்டுத்தான் வருவான். அந்தப்புரமானது சுகங்களின் இருப்பிடமே தவிரச் சிந்தனைகளின் பிறப்பிடம் அல்ல என்று சொல்வான். கருமமே கண்ணாக இருப்பான். அவனது களியாட்டத்தில் அந்தப்புரமே ஆடி அதிரும். ராணியிடம் அதிகமாக காமத்தை அவன் வைத்துக் கொள்வதில்லை. அவளது திருப்திக்காக நுனிப்புல்லை மேய்வது போல் நடந்து கொண்டு பிற அழகிகளிடம் போய் விடுவான். ராணி அதைத் தவறாக எடுத்துக் கொண்டதில்லை. இந்த நிலை எந்த நாட்டிலும் நிலவும் நிலை என்று அறிந்திருந்ததால் தன் பதவிக்கும் மரியாதைக்கும் குறைவு வராமல் இருந்தால் போதும் என்று இருந்து விடுவாள். தற்போது கூட மன்னன் தன் அறைக்கு வந்தபோது இதே மனநிலையில் தான் இருந்தாள். அவனோ நுனிப்புல்லைக்கூட மேயாமல் ஆழ்ந்த யோசனையில் இறங்கி விட்டதால் பொறுமையாகக் காத்திருந்த ராணி பொறுமையின் எல்லைகள் அசாதாரணமாக நீண்டதால் ''மகாராஜாவுக்கு அப்படி என்ன யோசனை அதுவும் இங்கே?'' என்று கேட்டாள்.

யோசனையிலிருந்து அறுபட்ட சுவர்ணேஸ்வரன் ''என்ன செய்வது ராணி? அவள் என்னை யோசிக்க வைத்து விட்டாள். தேவையில்லாத இடத்தில் அசாதாரணமான நினைப்புகளைக் கொடுத்து விட்டாள்'' என்றான் ஒருவித அசதியுடன்.

''நீங்கள் இடம் கொடுத்து விட்டதால் அவள் மடம் பிடுங்குகிறாள். தவறு உங்கள்மீதுதான்'' என்றாள் ராணி தெளிவாக.

''ஸ்ரீவிஜயாவைப் போல் யாராவது இப்படி நடந்து கொண்டதாக சரித்திரம் இருக்கிறதா?'' என்று கேட்டான் மன்னன்.

''எங்குமே கேள்விப்பட்டதில்லை. ஆனால் அந்தப் புதிய சரித்திரத்தை அவள் உருவாக்க இடம் கொடுத்தது நீங்கள்''

ராணி இப்படிக் கூறியபோது அந்தப்புரமே அதிருவது போல் ஆரவாரம் கேட்டது. அதையடுத்து பேரிடி போல் அறைக்குள் நுழைந்தாள் ஸ்ரீவிஜயா.

அவளைக் கண்டதுமே ராணி எழுந்து போனாள்.

ஸ்ரீவிஜயா மன்னனைக் கோபாவேசமாகப் பார்த்தாள்.

''உட்கார் ஸ்ரீவிஜயா. எதற்கு இந்த ஆவேசம்?'' என்று கேட்டான் மன்னன்.

''உங்கள் அதிகாரம் எல்லை கடந்து போகிறது. அது நல்லதல்ல என்று எச்சரிக்கவே நான் வந்தேன்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''நான் இந்த நாட்டின் மன்னன் என்பதை மறந்து விட்டாயா?''

''நான் மறக்கவில்லை. நீங்கள் தான் நான் யார் என்பதை மறந்து விட்டீர்கள்''

''உன்னை எப்படி மறக்கமுடியும்?''

''நினைவில் இருந்தால் என்னை மீறி வங்கதேசத்துக் கப்பலை சிறைசெய்வதற்கு முயல்வீர்களா?''

''நான் முயல்வதாக யார் சொன்னது?''

''முயல்வது உண்மையா இல்லையா?''

''பொய் என்பதால் தான் யார் சொன்னது என்று கேட்டேன்''

''பொய்தான் என்றால் மிகவும் நல்லது. உண்மையாக இருக்குமானால் மிகவும் ஆபத்து''

''என்மீது நம்பிக்கையில்லையா உனக்கு?''

''நான் சந்தேகப்படும்படியான நிலையை ஏன் உண்டாக்கினீர்கள்?''

''உன் கற்பனைகளுக்கெல்லாம் என்னைக் காரணமாக்காதே ஸ்ரீவிஜயா. உனக்கு நான் ரொம்பவும் இடம் கொடுத்து

விட்டதாக ராணி சொல்லிவிட்டுப் போகிறாள். அது உண்மை என்று எனக்கும் தெரியும். ஆனாலும்உன்னை நான் வளர்த்துக் கொண்டு தான் வருகிறேன். நீயோ சந்தேகப்பட்டுக் கொண்டு வருகிறாய். வங்கதேசத்துக் கப்பலை நான் ஏன் சிறை செய்ய வேண்டும்? அந்த ஒரு கப்பலால் இந்த நாட்டிற்கு என்ன ஆபத்து வந்துவிடும்? நமது கடல் வாயிலை நூறு போர்க்கலங்கள் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும்போது இந்த ஒரே ஒரு கப்பல் நம்மை என்ன செய்யமுடியும்? அதுவும் அக்கப்பலின் சொந்தக் காரர்களுக்கு நீ உதவுகிறாய் என்று தெரிந்த பின் நான் எப்படித் தலையிடுவேன்?'' என்று வேகமாகச் சொற்களைச் கொட்டினான்.

அப்போது பணிப்பெண் ஒருத்தியை கைகளைத் தட்டிஅழைத்தாள். சில நிமிடங்கள் கழித்து பணிப்பெண் ஒருத்தி உள்ளே வந்து மதுவையும் பழங்களையும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனாள்.

அவள் வைத்த மதுவை எடுக்க மன்னன் குனிந்தபோது ''மது எனக்கு பழங்கள் உங்களுக்கு'' என்று சொன்ன ஸ்ரீவிஜயா மதுவை எடுத்து மதுவே சொக்கிப் போகிற மாதிரி தனது பவள இதழ்களால் உறிஞ்சிக் குடித்தாள். மன்னன் பழங்களை எடுத்துக் கடித்தான்.

அதைக் கண்ட ஸ்ரீவிஜயா ''இது என்ன பழங்களை கடிக்கிறீர்கள்? புளிக்கும் பழங்கள் மீது எப்போது வந்தது இந்தப் புது ஆசை?'' என்று கேட்டாள்.

''பழம் எனக்கு என்று நீ தானே சொன்னாய்?''

''நான் சொன்னது புளிக்காத பழங்களை'' என்று சொல்லி தன் பார்வையை ஓரிடத்திற்குத் திருப்பினாள்.

''அதுவா? அதையா நீ சொன்னாய்? நான் விழுந்த இடம் அது. எப்போதுமே விழுந்து கிடக்க விரும்பும் இடம் அது'' என்று சொன்ன மன்னன் அவளை அள்ளி எடுத்து அவள் சுட்டிக் காட்டிய பழங்களைப் பருக முற்பட்டான்.

அறைக்கு வெளியே பணிப்பெண்ணை நினைவிழக்கச் செய்துவிட்டு அவளது தூரிகையை எடுத்துப் போர்த்துக்

கொண்டு மறைந்திருந்த விஜயனுக்கு சற்றே குழப்பமாக இருந்தது

''ஹா. இது என்ன? கடித்து விட்டீர்கள் இப்படி?'' என்று கிறீச்சிட்டாள் ஸ்ரீவிஜயா.

''பழம் என்று நீயே கூறிவிட்ட பின் கிளி அதைக் கொத்தாமல் எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்டான் மன்னன்.

அவளுக்கு வேறு எதுவோ நினைவுக்கு வந்தது. அந்த நினைவுடன் ''நீங்கள் மிருகம்'' என்றாள் அவனது தலையை விலக்கியபடி.

''மனிதன் மிருகமாகும் நேரங்களில் இதுவும் ஒன்று. அதோடு உனக்கு முன்னால் இது போன்றச் சமயங்களில் மனிதனாக நடப்பவன் முட்டாள்'' என்றான் சகஜமாக.

''நீதான் முட்டாள்'' என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்ட ஸ்ரீவிஜயா ''நீங்கள் சொல்வது ரொம்பவும் தவறு. மலர்களை மிருகங்கள் நெருங்குவதற்கும் வண்டுகள் நெருங்குவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. மலர்கள் வண்டுகளைத்தான் விரும்பும்'' என்றாள்.

''இது என்ன புதிய பாடத்தைச் சொல்கிறாய்? நீ முன்பு சொன்ன பாடங்களை எல்லாம் மறந்துவிட்டாயா? காமவழிகளை நெருங்கும் மனிதன் மிருகமாக மாறினால்தான் காமம் கடலாகப் பெருகும் என்று சொன்னவளே நீதானே?''

வெளியே இருந்த விஜயன் மேற்கொண்டு அவர்களது பேச்சைக் கேட்காமல் அங்கிருந்து பதுங்கியபடியே வெளியேறினான்.

இதே நேரத்தில் மூன்றாவது நாளாக மரக்கலத்தைவிட்டு வெளியேறிய உதயணன் இரண்டு நாட்களாக சென்று வந்த பாதைகளை விட்டு புதிய பாதையில் நடந்தான். இரண்டு நாட்களாக ஆவலோடு அலைந்த அவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியதால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்த அவன் இன்று எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டும் என்று வைராக்கியத்துடன் புறப்பட்டான். தற்போது அவனது எண்ணமே மாறுபட்டதாக இருந்ததால் புரவியொன்றை

வாங்கிக்கொண்டு அதில் பயணம் செய்தான். ஏறக்குறைய சொர்ணத்தீவின் தெற்குப் பகுதிக்கு வந்தபோது அவனது ஆர்வம் அதிகரித்தது. புரவியை நிறுத்திவிட்டு கீழே இறங்கினான். ''இதுதான் சரியான இடம். இங்கேதான் இருக்கவேண்டும்'' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு நாலாபுறத்திலும் பார்த்தபடி நடந்தான். தொலைவில் எரிமலையொன்று நெருப்புக் குழப்பை வெளியேற்றும் காட்சியைக் கண்டான். அவனுக்குப் புல்லரித்தது. அவனது நம்பிக்கையும் அதிகரித்தது. அதே நேரம் அவனுக்குப் பின்னாலிருந்து நீண்ட ஒரு கரம் அவன் தோள்களில் விழவும் செய்தது.

உதயணனின் உடல் நடுங்கியது.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்தெட்டு

# ஸ்ரீவிஜயாவின் விருப்பம்

பெரும் அச்ச உணர்வுகள் அழுத்த நடுங்கியபடி திரும்பினான் உதயணன். தன் தோளைப்பற்றியது விஜயன் தான் என்பதை அறிந்ததும் ஆறுதலடைந்தாலும் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது அவனுக்கு.

''யாரைத் தேடிக்கொண்டு இவ்வளவு தூரத்திற்கு தனியாக வந்தாய் உதயணா?'' என்று வினவினான் விஜயன்.

உதயணன் ஏதோ மழுப்பவே ''யாராக இருந்தாலும் சொல். தயங்காதே. யாரைத் தேடுகிறாய்?''என்று கேட்டான் விஜயன்.

''பறக்கும் குரங்கை''

''இதையா மூன்று நாட்களாக இரவில் தேடுகிறாய்?''

''ஆமாம்''

''என் உபதலைவர்களில் உன்னை அறிவாளியாகக் கருதுபவன் நான். நீயோ அது தவறு என்று சொல்கிறாய்''

''பறக்கும் குரங்கு இல்லை என்று சொல்கிறீர்களா?''

''இதைவிட வினோதமான ஜீவன்களைக் கண்டவன் நீ. ஆகவே பறக்கும் குரங்கு இங்கே இருக்கலாம். நீ நம்பலாம். அதைக் காணும் ஆவல் உனக்கு இருக்கலாம். ஆனால் அதற்கு இதுவா வழி? இங்கே நமக்கு விரோதி யார் நண்பன் யார் என்பது உறுதியாகத் தெரியாது. மன்னன் ஒருபக்கமும் ஸ்ரீவிஜயா ஒரு பக்கமும் ஒற்றர்களை அனுப்பியிருக்கலாம். அவர்களால் உனக்கு ஆபத்து நேரலாம் அல்லவா?''

உதயணன் எதுவும் சொல்லவில்லை.

விஜயனே பேச்சைத் தொடர்ந்து ''இத்தீவு மக்கள் பறக்கும் குரங்குபற்றி தெரிவித்ததை நாம் கேட்டோம். யாரும் அதன் இருப்பிடம் பற்றிச் சொல்லவில்லை. பிறகு அக்குரங்குகளைப் பற்றி அசுவநாவிகரிடம் சொன்னது ஸ்ரீவிஜயா. நம்மீது குரங்கை ஏவி விடமுடியும் என்று சொன்னதும் அவள்தான். குரங்கைக் காண ஆவலாய் இருப்பதாக நீ என்னிடம் கூறியிருந்தால் அதுபற்றி அவளிடமே நான் விசாரித்திருப்பேன் இல்லையா?'' என்று கேட்டான்.

அப்போதும் உதயணன் எதுவும் பேசாததால் ''சரி, போகலாம் வா'' என்று கூறினான் விஜயன். இருவரும் புரவிகளில் புறப்பட்டார்கள். அப்போது அவனிடம் விஜயன் வினவினான்.

''மாலுமிகளுக்கு பதிலாக அடிமைகளை வாங்குவது பற்றி தரகரிடம் கூறிவிட்டாயா?''

''அடிமைகளை வாங்கி மரக்கலத்திற்கு அழைத்து வந்து விட்டேன். அவர்களை உரிய இடங்களில் அமர்த்தி விட்டான் தனஞ்ஜெயன். அனுபவம் மிகுந்த ஐந்த மாலுமிகள் நாளை வருவார்கள்'' என்று சொன்னான் உதயணன்.

ஸ்ரீவிஜயாவின் வேகமும் திறமையும் விஜயனை அசர வைத்தது.

இருவரும் மரக்கலத்தை அடைந்தார்கள். அங்கே கீழ்த் தளத்தில் குழுமியிருந்த அடிமைகளின் பெயர்களை குறித்துக் கொண்டிருந்தான் தனஞ்ஜெயன். தோழர்கள் சிலரது உதவியுடன் அவர்களது அங்க அடையாளங்கள் மற்றும் சில

முக்கியத் தகவல்களையும் ஓலைகளில் பதியச் செய்தான். எல்லோருக்கும் கால்களில் விலங்கிட்டு துடுப்பு துழாவும் இடங்களில் அமரச் செய்தான். கப்பல் புறப்படுதற்கான அடையாளம், நிறுத்துவதற்கான அடையாளம், துடுப்பைப் போடுவதற்கு, நிறுத்துவதற்கு, வேகமாகத் துழாவுவதற்கு உரிய அடையாளங்கள் ஆகியவற்றை எல்லோருக்கும் அறிவித்தான். இதையெல்லாம் தூர இருந்தபடியே க்வனித்த விஜயனுக்கு தனஞ்ஜெயனின் மீது கரிசனம் உண்டாயிற்று. தன் பொறுப்பை மிகவும் திறமையாக அவன் நிறைவேற்றுவதைக் கண்டு திருப்தியடைந்தான். பிறகு அடிமைகளின் பகுதிக்கு வந்தபோது விஜயனை அடிமைகளுக்குச் சுட்டிக் காட்டிய தனஞ்ஜெயன் ''இவர் கலத்தின் எஜமானர். ஒவ்வொருவராக வந்து அவரது கால்களை முத்தமிட்டு அவரது தலைமையை ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

விஜயன் எதுவும் பேசவில்லை. அங்கே கொண்டு வந்து போடப்பட்ட ஆசனத்தில் உட்கார்ந்தான். அடிமைகள் ஒவ்வொருவராக வந்து மண்டியிட்டு தலையைத் தாழ்த்தி அவனது கால்களை முத்தமிட்டு ''தாங்களே என் எஜமானர். நான் உங்கள் அடிமை. உங்களுக்கு அடி பணிவதே என் கடமை'' என்று சொல்லிவிட்டு அகன்றார்கள்.

பிறகு தனஞ்ஜெயன் விஜயனை அழைத்துப் போய் அம்பெறியும் பொறிகளை பொருத்தியிருந்த இடங்களை எல்லாம் காட்டினான். மரக்கலத்தின் ஐந்து தளங்களிலும் பக்கத்துக்கு ஐந்து பொறிகள் வீதம் ஐம்பது பொறிகளும் கப்பலின் முன்புறம் மற்றும் பின்புறம் ஆகியவற்றில் இரண்டு பொறிகளையும் தனஞ்ஜெயன் அமைத்திருந்தான். அனைத்திலும் அம்புகள் பொறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் இருந்த விசையை அழுத்தி விட்டால் பற்சக்கரங்கள் சுழன்று அம்புகளை ஒவ்வொன்றாக விடுவிப்பதை விஜயனுக்குச் சுட்டிக்காட்டி ''இவை தானியங்கிப் பொறிகள். இவையின்றி வீரர்கள் அவ்வப்போது தேவையான இடங்களுக்குக் கொண்டு வந்து இயக்கும் பொறிகளும் ஒவ்வொரு தளத்திலும் இருக்கின்றன'' என்றான்.

அவனது ஏற்பாடுகள் சரியாக இருக்கவே விஜயன் மறுப்பேதும் சொல்லவில்லை.

தனஞ்ஜெயனே பேச்சைத் தொடர்ந்து ''தலைவரே, நாம் வாங்கியிருக்கும் அடிமைகளே போதும். கூடுதலாக மாலுமிகள் யாரும் வேண்டாம். அவர்களுக்கு பதிலாக ஐந்து வைத்தியர்களையும் தேவையான மருந்துப் பொருட்களையும் தருவிக்க ஏற்பாடு செய்தால் நல்லது'' என்றான்.

''நல்ல யோசனைதான். செய்து விடலாம்'' என்றான் விஜயன்.

''நம் உபதலைவர்கள் விதுரனும் பகீரதனும் நம் கப்பலுக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் சேமித்துக் கொண்டுவர போயிருக்கிறார்கள். நீர்க்குடங்கள் நீரால் நிரப்பப்பட்டு ஏற்கனவே கப்பலுக்கு வந்துவிட்டன'' என்றான் தனஞ்ஜெயன்.

''மகிழ்ச்சி'' என்று சொன்ன விஜயன் ''நாளை உபதலைவர்கள் மற்றும் தோழர்கள் ஆகியோரை நான் சந்தித்து உரையாட வேண்டும். எனவே நாளை மாலை எல்லோரையும் இங்கே இருக்கும்படிச் சொல்லிவிடு. நான் தரகரைச் சந்திக்கச் செல்கிறேன். எப்போது வருவேன் என்று தெரியாது'' என்று கூறினான்.

அப்போது பொழுது விடிந்திருந்தது.

மரக்கலத்திலேயே நீராடிவிட்டு உணவையும் முடித்துக் கொண்டு கப்பலை விட்டு இறங்கி நேராக ஸ்ரீவிஜயாவின் மாளிகைக்கு வந்தான் விஜயன். மாளிகையில் அவள் இல்லை. அவள் இருக்கமாட்டாள் என்பதை எதிர்பார்த்திருந்த காரணத்தால் அவள் இல்லை என்றச் செய்தியை பணிப் பெண்கள் கூறியதும் ''அதனால் என்ன? அவளது அறையைத் திறவுங்கள். நான் உள்ளே தங்கவேண்டும்'' என்றான். அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசுவதை கவனித்ததும் மேற்கொண்டு அவர்களிடம் எதுவும் பேசாமல் நேராக ஸ்ரீவிஜயாவின் அறைக்கு போன விஜயன் தனது வாளால் அறைக்கதவின் பூட்டைப் பிளந்து உள்ளே சென்று மஞ்சத்தில் அமர்ந்தான். பணிப்பெண்கள் எதுவும் செய்ய முடியாமல் நின்றார்கள்.

அவர்களிடம் ''சற்று மது இருந்தால் கொண்டு வாருங்கள்'' என்றான். அவனுக்கும் ஸ்ரீவிஜயாவுக்கும் நெருக்கம் இருப்பதை பணிப்பெண்கள் அறிந்திருந்த காரணத்தால் மறுப்பு சொல்லாமல் ஒரு குவளையில் மதுவை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை வாங்கிக் கொண்ட விஜயன் கதவைச் சாத்திக்கொண்டான்.

மதியம் தொடங்கிய சிறிது நேரத்தில் மாளிகைக்கு வந்தாள் ஸ்ரீவிஜயா. அவளிடம் எல்லா விவரங்களையும் சொன்ன பணிப்பெண்கள் ''ஜாக்கிரதையாகச் செல்லுங்கள் அம்மா. அவர் மது அருந்தி நிலை தடுமாறி இருக்கலாம்'' என்று சொன்னார்கள்.

ஆனால் ஸ்ரீவிஜயா அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனபோது பணிப்பெண்கள் பயந்த மாதிரியான சூழ்நிலை இல்லை. மஞ்சத்தில் சாதாரணமாகவே அமர்ந்திருந் தான் விஜயன். மதுக்குவளையில் இருந்த மது அப்படியே இருந்தது.

அவள் உள்ளே நுழைந்ததைக் கண்டதும் மஞ்சத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்ட விஜயன் ''எங்கே போய்விட்டாய்? உன்னை எதிர்பார்த்து என் வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு வந்தால் உன்னைக் காணவில்லை. காலையிலேயே எங்குபோய் விட்டாய்?'' என்று கேட்டான்.

''அரண்மனைக்குப் போயிருந்தேன். திரும்புவதற்கு நேரமாகிவிட்டது'' என்று சொன்ன அவள் ''நேற்று மன்னரைச் சந்தித்தீர்களா?'' என்று கேட்டாள்.

அவளது நெஞ்சுறுதியைக் கண்டு வியந்த அவன் ''இவள் லேசுப்பட்டவளில்லை'' என்று சொல்லிக் கொண்டு ''நேற்று அரண்மனைக்கு வந்தேன். ஆனால் மன்னரைச் சந்திக்க முடியவில்லை'' என்றான்.

''ஏன்?''

''மன்னரோடு நீ பேசிக் கொண்டிருப்பதாகவும் மன்னரைச் சந்திக்க முடியாது என்றும் தெரிவித்தார்கள். ஆகவே வந்து விட்டேன்''

''இன்றைக்கு வேண்டுமானால் சந்தியுங்கள். சந்திப்பிற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்''

''வேண்டாம் ஸ்ரீவிஜயா. நான் இனி மன்னனைச் சந்திப்பதாக இல்லை'

''ஏன்?''

''நீதான் சந்தித்திருக்கிறாயே - பிரச்சினையை தீர்த்திருக்க மாட்டாயா?''

''அதைப்பற்றி அவரிடம் நான் பேசவில்லை''

''அதனால் என்ன? என்ன நடக்கிறதோ நடக்கட்டும். மன்னரை ஒரு கை பார்க்கிறேன்''

இதைக் கேட்டதும் கலகலகவென்று சிரித்த அவள் ''இதைத்தான் நான் உங்களிடம் எதிர்பார்த்தேன்'' என்று சொல்லிவிட்டு ''கவலையே வேண்டாம். மன்னரிடம் பேசிவிட்டேன். உங்களுக்கு ஒரு இடைஞ்சலும் இருக்காது'' என்றபடி அவனருகில் அமர்ந்து ''நீங்களாகத்தேடி வந்சது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது. என்ன விஷயமாக வந்தீர்கள்?'' என்று ஆசை சொட்ட கேட்டாள்.

''உன் ஆசையைத் தீர்க்கத்தான்''

''உண்மையாகவா?''

''உன் ஆசையைத் தீர்ப்பது தானே நான் உனக்குச் செய்யும் நன்றிக்கடன்?''

''இவ்வளவு சீக்கிரம் நீங்கள் சம்மதிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை''

''அது இருக்கட்டும். உன்னிடம் நான் சில விஷயங்களைக் கேட்டு உறுதிசெய்து கொள்ளவேண்டும்''

''கேளுங்களேன்''

''நீ என்னிடம் விரும்புவது என்ன?''

''இது என்ன விந்தையான கேள்வி?''

''எனக்குப் புரியாததால் கேட்கிறேன். மரக்கலம் ஏறக்குறைய தயார் நிலைக்கு வந்துவிட்டது. என் தேவைகளும் பூர்த்தியாகிவிட்டன. நாளை மறுநாள் புறப்படலாம் என்று திட்டமிட்டிருக்கிறேன். ஆகவே தான் இக்கேள்வியைக் கேட்கிறேன்''

''இதில் புரியாமல் போக என்ன இருக்கிறது? நீங்கள் புறப்படுகிறீர்கள் என்றால் எனக்கென்ன இங்கே வேலை? நானும் உங்களோடு வந்துவிட வேண்டியதுதான்.''

''நல்லது'' என்று சொன்ன விஜயன் ''அப்படியானால் இன்றைக்கே நீ மரக்கலத்திற்கு வந்துவிடு. இங்கு எதற்காக இருக்க வேண்டும்?'' என்றான்.

''நான் தயார்'' என்றாள் அவள்.

''நீ கப்பலுக்கு வந்துவிட்டால் அங்கிருந்து உத்தரவுகளை உன்னால் வாங்க முடியுமா?''

''என்ன உத்தரவு வேண்டும் உங்களுக்கு?''

''கப்பலை துறைமுகத்திலிருந்து வெளியேற்ற உத்தரவு வேண்டாமா?''

''அதை நான் வாங்கித் தருகிறேன் போதுமா?''

''உன் துணைக்கு யாரையாவது சிலரை அழைத்துக்கொள்''

''நீங்களே துணையாக இருக்கும்போது எனக்கெதற்கு வேறு துணை?''

''ஸ்ரீவிஜயா, நான் மாலுமிகள் சிலரைக் கேட்டிருந்தேன் இல்லையா? அவர்களுக்கு பதிலாக வைத்தியர்களை மருந்துகளுடன் அனுப்பி வைத்தால் நல்லது''

''அப்படியே ஆகட்டும்''

ஸ்ரீவிஜயா இப்படி கூறிவிட்டு கைகளைத் தட்டி பணிப்பெண்களை அழைத்து அவர்களிடம் ஏதேதோ கட்டளைகளையிட்டாள்.

''என்ன சொன்னாய் அவர்களிடம்?'' கேட்டான் விஜயன்.

'நீங்கள் கேட்ட விஷயங்கள் சம்மந்தமாகத்தான்''

''ஒரு விஷயம். நானிங்கு வருவதற்கு முன் என் தளபதி ஒருவனை வங்க தேசத்துக் கப்பலில் அனுப்பினேன். கர்ணபத்ர பங்கம் என்ற விலையுயர்ந்த ஆபரணங்கள் அடங்கிய பெட்டிகளை விற்பதற்காக இங்கே அனுப்பி வைத்தேன். இதுவரையில் எனக்கு எந்த விவரமும் கிடைக்கவில்லை. அவன் உன்னைச் சந்தித்தானா?'' என்று கேட்டான் விஜயன்.

ஸ்ரீவிஜயா சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு ''உங்கள் தளபதியின் பெயர் ராகுலனா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். உன்னிடம் வந்தானா?''

''வந்தான். வஞ்சகன். அயோக்கியன். என்னை ஏமாற்றி விட்டான். என் வாழ்க்கையில் என்னை இதுவரை யாரும் ஏமாற்றியதில்லை. அவன் மட்டும் என் கண்ணில் பட்டால் வெட்டிப் போட்டுவிட்டுதான் மறுவேலை பார்ப்பேன்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''என் தளபதிகளைப் பற்றி அபாண்டமாகச் சொல்கிறாய் ஸ்ரீவிஜயா. இதை நான் அனுமதிக்க முடியாது'' என்றான் விஜயன் சற்றே முரட்டுத்தனமான குரலில்.

''தளபதியும் மனிதர் தான் விஜயரே. அவனிடம் அளவுக்கதிமான செல்வங்களைக் கொடுத்து விற்கும்படி சொன்னால் அவனது பேராசையைத் தூண்டி விடுகிறீர்கள் என்று அர்த்தம். தன்னைக் கேட்க யாருமில்லாத நிலையில் அவன் உங்களுக்குத் துரோகம் செய்திருக்கிறான். இது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''நடந்தது என்ன?''

''ராகுலன் தன்னுடன் இரண்டு வணிகர்களை அழைத்துக் கொண்டு என்னிடம் பேரம் பேசவந்தது உண்மை. ஆனால் உங்களைப் பற்றியோ உங்கள் வங்க நாட்டைப் பற்றியோ எதுவும் கூறவில்லை. ஆபரணங்கள் கப்பலில் இருப்பதாகவும் கப்பலுக்கு வந்து பார்வையிட்ட பின் விலை பேசும் படியும் சொன்னான். நானும் போனேன். கர்ணபத்ர பங்கப் பெட்டிகளைத் திறந்து பார்த்தேன். ஒரு நாட்டையே விலைக்கு

வாங்கக்கூடிய நகைகள் இருந்ததைக் கண்டு மலைத்துப் போனேன். தனி ஒருமனிதனாக அத்தனை செல்வத்தைக் கொண்டு வந்தது எனக்குச் சந்தேகத்தை உண்டாக்கியது. அதற்கு ஏற்ற மாதிரி அவனது பார்வையும் சரியாக இல்லை. நான் கேட்ட கேள்விகளுக்கு அவன் சொன்ன பதில்கள் திருப்திகரமாக இல்லை. அது அவனுக்கே புரிந்திருக்க வேண்டும். திடீரென தனது வேலையை மறந்து என்னைக் கட்டிப்பிடித்து கெடுக்க முயன்றான். அவனிடம் போராடித் தப்பித்த நான் கடலில் குதித்தேன். அவன் கப்பலை நகர்த்தி தப்பித்துவிட்டான்''

''அவன் கப்பலை நகர்த்தியிருந்தாலும் எவ்வளவு தூரத்திற்கு ஓடிவிட முடியும்? நீ முயன்றால் அவனை விரட்டிப் பிடித்திருக்கலாம் அல்லவா?''

''எனக்கு ஏற்பட்ட அவமானத்தை வெளியே சொல்ல பிடிக்கவில்லை. ஆகவே அந்த விஷயத்தை அதோடு விட்டு விட்டேன்''

''நீ சொல்வது உண்மையென்றால் அவனை நீ பழிவாங்கி யிருக்க வேண்டும்'' என்று சொன்ன விஜயன் ''ராகுலன் எங்கே போயிருப்பான் அவ்வளவு செல்வங்களுடன்?'' என்று கேட்டான்.

''அவனைப் போன்ற கீழ்த்தரமானவர்களுக்கு புகலிடம் சாவகம்தான். அங்கே இருக்கும் கள்ளக் கடத்தல்காரர்களிடம் போய் கலந்திருப்பான்''

''கள்ளக் கடத்தல்காரர்களா?''

''ஆம். சாவகத்தின் கிழக்கு கடற்கரை கள்ளக்கடத்தல் செய்யும் கொள்ளைக்காரர்கள் வசம் இருக்கிறது. ராகுலனும் கள்ளக் கடத்தல் காரனாக மாறியிருப்பான்''

''கடத்தல் காரர்களிடம் அவனால் பேரம் பேசமுடியுமா?''

''முடியாது தான். ஆனால் கிடைத்த வரை லாபம் தானே?''

''ஸ்ரீவிஜயா, ராகுலன் உனக்கு மட்டும் துரோகம் செய்யவில்லை. எனக்கும் செய்திருக்கிறான். இனி அவன் நம் பொது எதிரி''

''அதனால் என்ன? அவனைத்தேடிச் சாவகம் போகலாம் என்கிறீர்களா?''

''வேண்டாமா? எனது பெரும் செல்வம் அபாண்டமாக பறிபோய் விட்டதே அதை மீட்க வேண்டாமா?''

''யாரிடமிருந்து மீட்கப் போகிறீர்கள்?''

''ராகுலனிடமிருந்து தான்''

''அவன் கடத்தல் காரர்களோடு கலந்து விட்டிருப்பான்''

''அப்படியானால் கடத்தல் காரர்களிடம் மோத வேண்டியது தான்''

''கடத்தல்காரர்களிடம் மோதுவதா? அசட்டுத்தனமாகப் பேசாதீர்கள். அவர்களெல்லாம் அரக்கர்களைவிட மோசமானவர்கள். அவர்களிடம் மோதி இருக்கும் கப்பலையும் இழக்காதீர்கள்''

''இதென்ன இப்படிச் சொல்கிறாய்? நான் வீரனாகச் செயல்பட வேண்டும் என்று சொன்ன நீயே இப்படிச் சொன்னால் எப்படி?''

''நீங்கள் சிங்கம்தான். ஆனால் சிங்கம் நரிகளோடு மோதமுடியாது. மோதினால் சேதாரமாகிப் போவீர்கள்''

''ரொம்பவும் பயமுறுத்த முயலாதே ஸ்ரீவிஜயா. நாகர்மலைத் தீவில் மனிதர்களை உண்ணும் காட்டு மிராண்டிகளிடம் சிக்கி மீண்டிருக்கிறேன் நான்''

''காட்டு மிராண்டிகளிடம் அறிவு இருக்காது. கடத்தல் காரர்களிடம் அது விசாலமாக இருக்கும். விஷப் பரீட்சையில் இறங்காதீர்கள்''

''சரி. நீ இவ்வளவு சொல்லும்போது நான் ஏன் விதண்டா வாதம் செய்யவேண்டும்?'' என்று கூறிய விஜயன் மற்றொரு கேள்வியைக் கேட்டான்.

ஸ்ரீவிஜயா அவனை ஒருமாதிரியாகப் பார்த்தாள்.

◈◈◈

## அத்தியாயம் ஐம்பத்தொன்பது

# தீவுக்கப்பலில் ஒரு புரட்சி

பலவிதங்களில் திறமை பெற்றவளான ஸ்ரீவிஜயா சாவகத்தின் கடத்தல்காரர்களைப் பற்றி அச்சத்தை வெளிப்படுத்தி அதை வலியுறுத்தியதைக் கண்ட விஜயன் மேற்கொண்டு அதுபற்றி விவாதிக்காமல் ''இன்னொரு விஷயம் ஸ்ரீவிஜயா. ஆரம்பத்திலேயே அதைப்பற்றிக் கேட்க நினைத்து மறந்துவிட்டேன். இப்போது கேட்கிறேன்'' என்று சொல்லிவிட்டு ''பறக்கும் குரங்கு எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான்.

இக்கேள்வியைக் கேட்டதும் அவனை ஒருமாதிரியாகப் பார்த்தாள் ஸ்ரீவிஜயா.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? அசுவநாவிகரிடம் பறக்கும் குரங்கைப்பற்றி நீதானே சொன்னாய்? பயமுறுத்தியதாகவும் சொன்னாரே அவர்?'' என்றான் விஜயன்.

அவள் சற்று யோசித்துவிட்டு ''பறக்கும் குரங்கு பற்றி ஒரு பேச்சு நீண்ட காலமாக இருப்பது உண்மைதான். ஆனால் யாரும் அதைப் பார்த்ததில்லை. பார்க்காததால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி பேசி வருகிறார்கள்'' என்றாள்.

''மற்றவர்கள் பேசுவது இருக்கட்டும். நீ எப்படிப் பேசினாய்?''

''எனக்கு வேண்டாதவர்கள் என்னையும் பறக்கும் குரங்கையும் சம்மந்தப்படுத்திப் பேசினார்கள். அதை நான் ஏவி விடுவதாகச் சொல்லி அச்சத்தை உருவாக்கி விட்டார்கள். அதையே நானும் பயன்படுத்திக் கொண்டேன்''

''சாமர்த்தியம் தான். இனி அதற்கு வேலையில்லை. வா போவோம் மரக்கலத்திற்கு''

''அது கிடையாதா?''

''எது?''

''அதுதான்''

''அதுவா? அதை மரக்கலத்திலேயே வைத்துக் கொள்ளலாம். சம்மதம்தானே?''

ஸ்ரீவிஜயா எதுவும் பேசவில்லை. அவனுடன் மரக்கலத்திற்குச் சென்றாள்.

அங்கு சென்றவுடன் மரக்கலத்தின் எல்லா பகுதிகளையும் காட்டிய விஜயன் ''கப்பலின் இந்தப் பொலிவிற்கு நீதான் காரணம்'' என்று கூறினான். உபதலைவர்களை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

அன்று மாலை மரக்கலத்தின் மேல்தளத்தில் எல்லோரையும் கூட்டினான் விஜயன். ஸ்ரீவிஜயாவும் அவனருகில் இருந்தாள். விஜயன் எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டான். மரக்கலம் மறுநாளைக்கு மறுநாள் காலை புறப்படும் என்றான்.

அன்றிரவு அனைவரும் ஸ்ரீவிஜயாவைப் பாராட்டி புகழ்ந்து கொண்டாடினார்கள்.

அதேசமயம் விஜயன் மரக்கலத்தைவிட்டு இறங்கிச் சென்றான். அவனைப் பற்றிய நினைவே வராதபடி கப்பலில் இருந்தவர்கள் கும்மாளம் போட்டு ஸ்ரீவிஜயாவை ஆனந்தத்தில் மூழ்கடித்தார்கள். மறுநாள் மதியம் மரக்கலத்துக்கு வந்து சேர்ந்த விஜயன் அங்கே மருத்துவர்கள் ஐவர் ஏராளமான மருத்துவப் பொருட்கள் வந்திருப்பதைக் கண்டான். அதோடு உணவுப் பொருட்களும் ஒரு மாதத்திற்குத் தேவையான அளவு வந்து சேர்ந்து விட்டதையும் கவனித்தான்.

பிறகு ஸ்ரீவிஜயாவை வரச்சொல்லிவிட்டு உதயணனையும் அழைத்து அவனிடமிருந்து பட்டியல் ஒன்றை வாங்கி அவளிடம் காட்டினான்.

''இது என்ன?'' - கேட்டாள் அவள்.

''எங்கள் கப்பலில் இருந்த சரக்குகளின் மதிப்பும் இந்தக் கப்பலுக்கு நாங்கள் வாங்கிய பொருட்களுக்குரிய மதிப்பும்

இப்பட்டியலில் இருக்கின்றன. நீ என் சரக்குகளுக்கு அதிக விலை கொடுத்திருக்கிறாய். நான் வாங்கிய பொருள்களுக்கு குறைந்த விலையை நிர்ணயித்திருக்கிறாய். அதனால் எங்கள் சரக்குகளின் மதிப்பைவிட வாங்கியவற்றின் மதிப்பு குறைவாக இருக்கிறது. வித்தியாசம் இவ்வளவு'' என்றான் விஜயன்.

இதைக்கேட்டு ஸ்ரீவிஜயாவும் உதயணனும் சிரித்தார்கள்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''இந்த கணக்கையெல்லாம் யார் கேட்டது? நான் கேட்டேனா?'' என்று கேட்டாள் ஸ்ரீவிஜயா.

''கேட்டால் தான் கணக்கு காட்டவேண்டும் என்பது தவறு. அது மேல்மேலும் தவறுகளுக்கு வழி வகுத்துவிடும். வணிகத்தைப் பொறுத்தவரை கணக்கு வழக்குகள் முக்கியம்'' என்றான் விஜயன்.

''தலைவரே, நீங்கள் ஒரு பக்கம் கணக்கு பார்க்கிறீர்கள். மறுபக்கத்தில் இவரோ கணக்கைப் பற்றிக் கவலைப்படாமல் நம் தேவைகளுக்காக இரண்டு மூட்டை நிறைய தங்கக் காசுகளை இங்கே வரவழைத்திருக்கிறார். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான் உதயணன்.

''இது எதற்கு ஸ்ரீவிஜயா? எங்களிடம் உபரியாகவே நான்கு மூட்டைகள் நிறைய தங்க நாணயங்கள் இருக்கின்றனவே! நீ வேறு எதற்காகக் கொண்டு வந்தாய்?''

''என் செலவுக்கு என்று வைத்துக் கொள்ளுங்களேன்'' என்று கூறிச் சிரித்த அவள் ''கடலில் போகும்போது பொன் சற்று கூட இருப்பது நல்லது தானே? சந்தோஷப்படுவதை விட்டுவிட்டு கவலைப்படுகிறீர்களே?'' என்று கேட்டாள்.

''அப்படிச் சொல்லுங்கள். இவருக்குக் கவலைப்படுவது தான் வேலை'' என்றான் உதயணன் கேலியான குரலில்.

அன்று மாலை மரக்கலம் துறைமுகத்தை விட்டுப் புறப்படுவதற்கான அனுமதி முத்திரை விஜயனுக்கு வந்து சேர்ந்தது.

''ரொம்பவும் நன்றி ஸ்ரீவிஜயா. எல்லாம் நல்லபடியாக முடிந்தது'' என்றான் விஜயன்.

''எல்லாம் இன்னும் முடியவில்லை'' என்றாள் ஸ்ரீவிஜயா அந்தரங்க உணர்வு மேலிட.

''எந்த நிமிடமும் அது முடியலாம்'' என்றான் விஜயன்.

அன்றிரவு அந்த நிமிடத்தை எதிர்பார்த்தாள் ஸ்ரீவிஜயா. ஆனால் அது வரவில்லை.

அன்றிரவும் அவளை ஆனந்தப்படுத்தும் கொண்டாட்டம் தொடர்ந்தது.

விஜயன் தனஞ்ஜெயனோடு நீண்டநேரம் ஆலோசனையில் ஈடுபட்டான்.

மறுநாள் காலை தனஞ்ஜெயன் சங்கை முழக்கியதும் நங்கூரங்கள் நீக்கப்பட்டு அடிமைகள் துடுப்பைத் துழாவினார்கள். தீவுக்கப்பல் போர்க்கப்பலான கம்பீரத்துடன் நகரத் தொடங்கியது.

அன்று மதியம் விஜயன் நவ வீரர்களை அழைத்து கட்டளையொன்றையிட்டான்.

அதை நவ வீரர்கள் உடனடியாக நிறைவேற்றியபோது கப்பலில் இருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள்.

ஸ்ரீவிஜயா கப்பலின் கீழ்தள அறையில் சங்கிலிகளால் பிணிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டாள்.

இந்தச் சம்பவம் கப்பலில் இருந்த அனைவருக்கும் காட்டுத் தீ போலப் பரவியது.

அன்றிரவு விஜயன் இருந்த அறையின் கதவைத் தட்டினான் உதயணன்.

விஜயன் கதவைத் திறந்தபோது வெளியே உதயணன் மட்டுமில்லை. ஏறக்குறைய எல்லோருமே மேல்தளத்தில் கூடியிருக்க அவர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்கள் நவ வீரர்கள்.

விஜயன் தன் முகத்தைத் துடைத்தபடி வெளியே வந்து எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டு ''என்ன ஆயிற்று உதயணா? ஏன் எல்லோருமாக இந்த நேரத்தில் கூடியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''தலைவரே! உங்களைப் போன்ற நன்றி கெட்டவரை நாங்கள் பார்த்ததே இல்லை''- என்றான் உதயணன் உணர்ச்சி மேலிட்டவனாய்.

''ஏன், என்ன ஆகிவிட்டது இப்போது? நான் எப்படி நன்றி கெட்டவன் ஆனேன்?'' - சாதாரணமாகவே கேட்டான்.

''நமக்கு யாரும் செய்யமுடியாத அரியபெரிய உதவிகளைச் செய்தவர் ஸ்ரீவிஜயா. அவருக்கு விலங்கிட்டு சிறை வைத்திருக்கிறீர்கள். இதுதான் நன்றியுடைமையா?'' கேட்டான் உதயணன்.

''உதயணா, இத்தனை காலமாக என்னோடு பழகும் உனக்கு நான் எது செய்தாலும் காரணத்துடன்தான் செய்வேன் என்பது உனக்குத் தெரியாதா?''

''பழங்கதைகள் எல்லாம் வேண்டாம் தலைவரே. தற்போதைய அநீதிக்குப் பதில் சொல்லுங்கள்''

விஜயன் சிறிது மௌனமாக இருந்துவிட்டு ''மரக்கலத் தலைவனை கேள்வி கேட்கும் உரிமை யாருக்கும் கிடையாது என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டான்.

''தெரியும்''

''அப்படி கேள்வி கேட்டால் கேள்வி கேட்டவனைச் சிரச்சேதம் செய்ய மரக்கலத்தலைவனுக்கு உரிமை உண்டு என்பதும் தெரியுமல்லவா?''

''தெரியும். சிரச்சேதத்திற்கு நான் தயார்''

''எல்லோரும் தயாரா?''

''தயார்! தயார்'' என்று பலரும் கூறினார்கள்.

விஜயன் உணர்ச்சி வசப்படவில்லை. ''உங்கள் விருப்பம் தான் என்ன? ஸ்ரீவிஜயாவை விடுவிக்க வேண்டுமா?'' என்று கேட்டான்.

''நாங்களே அவரை விடுவித்து விட்டோம்'' என்றான் உதயணன்.

அதுவரை பின்னாலிருந்த ஸ்ரீவிஜயா முன்னால் வந்தாள். கைகளைக் கட்டிக்கொண்டு ஒரு தோரணையுடன் அவனைப் பார்த்தாள்.

''தலைவரே'' என்று விளித்த உதயணன் ''நீங்கள் இவரை மணக்க வேண்டும். நாகதீபத்தின் அரியணையில் ராணியாக அமர்த்த வேண்டும்'' என்றான்.

''இது உங்கள் விருப்பமா அல்லது இவளது விருப்பமா?''

''நியாயமான விருப்பம் தலைவரே''

''நான் கேட்டதற்கு பதில்சொல் உதயணா''

''அவர் விருப்பமும் இதுதான். எங்கள் விருப்பமும் இதுதான்''

''உங்கள் விருப்பத்தை நான் ஏற்கவில்லையென்றால்?''

''உங்களுக்கு நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம். உங்களுக்கு எதிராக எதை வேண்டுமானாலும் செய்வோம்''

''இதுதான் உங்கள் முடிவா?''

''ஆமாம்''

''சரி. என் முடிவை நாளைக்கு சொல்கிறேன். அதற்கு முன் ஸ்ரீவிஜயா ஒரு சத்தியம் செய்யவேண்டும்?''

''என்ன சத்தியம்?''

''அதை நாளைக்குச் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அறையின் பக்கமாகத் திரும்பினான் விஜயன்.

''நாளை திருமணம் நடக்கும்வரை இவர் எங்கள் பொறுப்பிலேயே இருக்கட்டும்'' என்றான் உதயணன்.

விஜயன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான். நவ வீரர்கள் வெளியே காவலுக்கு நின்றார்கள்.

உதயணனும் மற்றவர்களும் சிறிதுநேரம் வரை அங்கே நின்று விட்டு அகன்றார்கள்.

மறுநாள் காலை எல்லோரும் அதே தளத்தில் கூடினார்கள். ஸ்ரீவிஜயாவுக்கு ஓர் ஆசனம் போடப்பட்டு அதில் அவள் அமர்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த விஜயன் ''உதயணன் நேற்று வெளியிட்ட கோரிக்கைக்கு ஆதரவு அளிக்காதவர்கள் யாராவது இருக்கிறீர்களா?'' என்று கேட்டதும் உபதலைவன் தனஞ்ஜெயனும் நவ வீரர்களும் விஜயனின் பக்கத்தில் வந்து நின்றார்கள்.

தனஞ்ஜெயனை அனுதாபத்துடன் பார்த்த விஜயன், ''தனஞ்ஜெயா, நீ ஆதரிக்கவில்லையா?'' என்று கேட்டான்.

''தலைவரே, என் கடமை மரக்கலத்தை இயக்குவது. அதிலிருந்து நான் தவற மாட்டேன். சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிடவும் மாட்டேன்'' என்றான் தனஞ்ஜெயன்.

விஜயன் எல்லோரையும் ஒருமுறை பார்த்தான். பிறகு தனஞ்ஜெயனை நோக்கி ''தனஞ்ஜெயா, ஸ்ரீவிஜயாவை மணப்பதும் அவளை ராணியாக்குவதும் என் சொந்த விஷயம். அதில் குறிக்கிடும் உரிமை யாருக்கும் இல்லை. ஆனால் இவர்களெல்லாம் உரிமை இருப்பதாக எண்ணி என்னைக் கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்கள் இஷ்டப்படி நான் நடந்து கொள்ளாவிட்டால் எனக்கு ஒத்துழைப்பு தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். இது நியாயமா சொல்'' என்றான்.

''தலைவரே, அவர்களது கோரிக்கை சரியல்ல என்பது எனக்குத் தெரியும். எது எப்படி இருந்தாலும் என் கடமையைத் தவிர வேறு எதிலும் கவனம் செலுத்தமாட்டேன்'' என்றான் தனஞ்ஜெயன்.

''தனஞ்ஜெயா, நான் என் மனைவி விஷயத்தில் எப்படி நடந்து கொண்டேன் என்பது உனக்குத் தெரியும். என்னிடம் பாரபட்சம் கிடையாது. மரக்கலத் தலைவனுக்கு எதிராக செயல்படுவர்களைச் சிரச்சேதம் செய்யும் உரிமை எனக்கு

உண்டு. இவர்கள் எல்லோரையும் அவ்வாறு தண்டிக்க என்னால் முடியும். இந்த விவரங்களையெல்லாம் தெரிந்த இவர்கள் தண்டனையைப் பற்றிய கவலையில்லை என்று கூச்சல் போடுகிறார்கள். அவர்களைப் போல நான் உணர்ச்சி வசப்படமாட்டேன். இத்தனைபேரை கொல்ல நான் விரும்பவில்லை தனஞ்ஜெயா. என்னை நிர்பந்திக்கிறவர் களையும் எனக்கு ஒத்துழைக்க மறுக்கிறவர்களையும் நான் ஏன் அழைத்துச் செல்லவேண்டும்? கப்பலை சொர்ணதீவுக்கு திருப்பு. இவர்களையெல்லாம் தீவிலேயே இறக்கிவிட்டு நாம் போகலாம்'' என்றான் விஜயன்.

அவன் பேச்சைக் கேட்டதும் அசுவநாவிகரும் டெமிட்ரியஸும் அவனிடம் வந்து பணிந்து ''எங்களை மன்னித்து விடுங்கள் தலைவரே. உதயணன் மிரட்டியதால் அவனோடு சேர்ந்தோம்'' என்றார்கள்.

''அசுவநாவிகரே, எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து விட்டால் கூட்டத்தைக் கண்டு நான் அஞ்சிவிடுவேன் என்றும் பணிந்து விடுவேன் என்றும் நினைத்து விட்டீர்களா?''

அப்போது உதயணன் குறுக்கிட்டு ''தலைவரே, நீங்கள் இவரிடம் ஏதோ சத்தியம் கேட்கப் போவதாக நேற்றிரவு சொன்னீர்கள். அதுபற்றி பேசாமல் ஏதேதோ பேசுகிறீர்கள்'' என்றான்.

''உதயணா, உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?'' என்று கேட்டான் விஜயன்.

''இல்லை''

''உன்னோடு இருப்பவர்களுக்கு ஆகிவிட்டதா?''

''பெரும்பாலானவர்களுக்கு ஆகவில்லை''

''நீங்களெல்லாம் திருமணம் செய்து கொள்ள விரும்புவீர்கள் அல்லவா?''

''தலைவரே, இதெல்லாம் எதற்கு?''

''கேட்டதற்கு பதில்சொல்''

''ஆமாம். விரும்புவோம்''

''எப்படிப்பட்ட பெண்ணை விரும்புவீர்கள்?''

''அது... அமைவதைப் பொறுத்தது''

''குருட்டுப் பெண்ணாக இருந்தால் ஏற்பீர்களா?''

''ஏற்றாலும் ஏற்போம்''

''ஊமையாக இருந்தால்?''

''ஏற்றாலும் ஏற்போம்''

''கைகால் போனவர்களாக இருந்தாலும் ஏற்பீர்கள். போகட்டும். கெட்டுப் போனவளாக இருந்தால் ஏற்பீர்களா?''

''கெட்டுப்போனவளை ஏற்பது கஷ்டம்''

''ஏன்?''

''ஊனமுற்றவர்களை அனுதாபத்தில் ஏற்கமுடியும். ஆனால்...''

''ஆனாலென்ன? கெட்டுப் போனவளையும் அனுதாபத்தில் ஏற்க முடியாதா?''

''ஏற்கலாம். ஆனால் ஒரு கட்டத்திற்குப் பிறகு உறுத்தல் ஏற்படும். வாழமுடியாது''

''நல்லது உதயணா. உங்கள் தலைவி ஸ்ரீவிஜயா சொர்ணபூமி மன்னரின் மகள் என்று உங்களுக்கெல்லாம் தெரியும். அவளை தான் 'மன்னரின் மகள் தான்' என்று இங்கே சத்தியம் செய்யச் சொல்லுங்கள்''

''தலைவரே, இதென்ன தேவையில்லாத சத்தியம்?''

''தேவை இருப்பதால் தான் கேட்கிறேன். அவளைச் சத்தியம் செய்யச் சொல்''

உதயணன் ஸ்ரீவிஜயாவின் பக்கம் திரும்பினான். அவளோ பதில் பேச முடியாமல் வியர்த்துப்போய் அங்கிருந்து ஓட முற்பட்டாள்.

விஜயன் நவ வீரர்களைப் பார்த்து ''பிடியுங்கள். கால்களில் பிணியுங்கள் விலங்குகளை'' என்றான்.

நவ வீரர்கள் அவளை மடக்கிப் பிடித்து கால்களில் விலங்கிட்டு விஜயனின் முன்னால் நிற்க வைத்தார்கள். இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் எல்லோருமே அதிர்ச்சி யடைந்தார்கள்.

விஜயன் எழுந்து நின்று ''அசுவநாவிகரிடம் இவள் தன்னைச் சொர்ணபூமியின் மன்னனுடைய மகள் என்றும் அரசகுமாரி என்றும் கூறினாள். எல்லோரும் நம்பினீர்கள். முதலில் நானும் நம்பினேன். ஆனால் அவளிடம் இந்த உறவு பற்றி நான் பேசிய போதெல்லாம் அவள் வெறுப்படைந்தாள். நான் சந்தேகப் பட்டேன். அசுவநாவிகரை வைத்து கடத்திப் போகப் போவதாகச் சொல்லச் சொன்னேன். அவரும் சொன்னார். இவள் மட்டும் உண்மையிலேயே மன்னன் மகளாக இருந்திருந்தால் இச்செய்தியைக் கேட்டதும் மன்னன் பொங்கியெழுந்திருக்க வேண்டும். என்னைச் சிறை செய்ய முயன்றிருக்க வேண்டும். ஆனால் மன்னனோ 'தாராளமாக கடத்திச் செல்லட்டும்' என்று ஆனந்தமாகச் சொல்லி யிருக்கிறார். என் சந்தேகம் வலுத்தது. அந்தப்புரத்திற்குள் பணிப்பெண் வேடத்தில் நுழைந்தேன். உண்மை புரிந்தது. ஸ்ரீவிஜயா மன்னன் மகளல்ல. மன்னனின் ஆசை நாயகி. சொர்ணத்தீவின் முன்னாள் கடற்படைத் தளபதி பண்டோராவுக்கும் யவன நாட்டுப் பெண்ணிற்கும் பிறந்தவள் இவள். எப்படியோ மன்னனை தன் வலையில் வீழ்த்தி தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு மன்னனுக்கு இணையாகத் தரகர் பதவியை அமைத்துக் கொண்டு கொள்ளையடித்து வந்தவள். இப்படி உடலாலும் மனதாலும் சோரம் போனவளையா நான் மணம் புரிந்துகொண்டு ராணியாக்க வேண்டும்?'' என்று கேட்டுவிட்டு ''நான் இவளை மணக்க விரும்பாததற்கு வேறொரு முக்கிய காரணமும் உண்டு'' என்றான்.

கப்பலின் தளத்தில் நின்றிருந்த அனைவரும் ஏதோ கதையைக் கேட்டு ஸ்தம்பித்தவர்களைப் போல் சிலையாக நின்றார்கள். அவர்களது அதிர்ச்சியைப் பேரதிர்ச்சியாக்கும் சம்பவம் ஒன்று நடந்தது. திடீரென வானம் இருண்டு போயிற்று. இது எப்படி சாத்தியம் என்ற எண்ணத்துடன் எல்லோரும் வானத்தைப் பார்த்த போது மிரண்டு போனார்கள்.

வானத்தில் தீவுக்கப்பலுக்கு மேலே இறக்கையை விரித்தபடி காட்சியளித்தது பறக்கும் குரங்கு.

◈◈◈

அத்தியாயம் அறுபது

# ஸ்ரீவிஜயாவின் விவரணம்

மெய்சிலிர்க்கும்படியான காட்சியைக் கண்டார்கள் தீவுக்கப்பல் வாசிகள். தங்களுக்கு மேலே வானில் பறந்த விநோதமான விலங்கானது குரங்கின் முகத்தையும் உடலையும் கொண்டிருந்தது. அதன் இருபுறமும் விரிந்திருந்த இறக்கைகள் பன்னிரண்டு அடிக்கு மேற்பட்டதாக இருந்தது. அதேசமயம் குரங்கிற்கு இருப்பதுபோல் அல்லாமல் இரண்டு கால்கள் மட்டுமே இருந்தன. குன்று போன்ற உடலைத் தாங்கக்கூடிய அளவிற்கு அவை நீண்டும் பலமாகவும் இருந்தன. நீண்டதொரு வால் கீழே தொங்கியது. வாயைத் திறந்து பற்களைக் காட்டியபடி பறந்த அந்த விலங்கு தீவுக்கப்பலை வட்டமிடத் தொடங்கியது.* கன்னங்கரேலென்று பிரம்மாண்டமாய் வானத்தையே மறைத்துப் பறந்த அக்குரங்கைக் கண்டு சிலிர்ப்படைந்த தீவுக்கப்பல்வாசிகள் மறுகணம் பேரச்சம் கொண்டு அதை வீழ்த்தும் தீர்மானத்துடன் அம்பெய்ய முற்பட்டார்கள். அதைக் கண்ட விஜயன் ''நில்லுங்கள். யாரும் அதை ஒன்றும் செய்யவேண்டாம்'' என்றான்.

''தலைவரே, இது தரகரால் நம்மை அழிக்க ஏவி விடப்பட்டிருக்கிறது. அது முந்திக் கொள்வதற்கு முன் நாம் அதை வீழ்த்திவிட வேண்டும்'' என்றான் உதயணன்.

---

* இதுபோன்ற விலங்கை நேரில் பார்த்ததாக ஆராய்ச்சியாளர் தெரிவித்திருப்பது பற்றிய விவரங்களை கீழ்கண்ட நூலில் காணலாம். இதுபோன்ற வரலாற்று காலத்திற்கு முந்திய காலங்களில் வாழ்ந்த விநோத உயிரினங்கள் தற்காலத்திலும் உலகில் பல இடங்களில் இருப்பதாகவும் அதைப் பற்றி விஞ்ஞானம் சரிவர ஆராய்ச்சியை நடத்தவில்லை என்றும் இந்த நூல் கூறுகிறது.

'The unexplained' by Dr. Karl P.N. Shukar Page 93.

''இத்தகைய பிரம்மாண்டமான விலங்கை ஏவிவிடுவதற்கு ஸ்ரீவிஜயா ஒன்றும் மந்திரவாதியல்ல. இக்குரங்கைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. அவளே இதை இப்போது தான் பார்க்கிறாள். ஆகவே அவசரப்பட வேண்டாம். இவ்விலங்கு நம்மைத் தாக்குவதற்கு எந்தவிதமான முகாந்தரமும் இல்லை'' என்றான் விஜயன்.

அவனது கூற்றை மெய்ப்பிப்பது போல் அக்குரங்கு தீவுக் கப்பலுக்கு மேலே இரண்டுமுறை சுற்றிவிட்டு கடல் பகுதியை நோக்கிப் பறந்தது. அதனுடைய நீண்ட வால்பகுதி தீவுக் கப்பலின் பாய்மரம் ஒன்றில் பட்டு அதைக் கிழித்தது. வேறு எந்த சேதமும் விளைவிக்காமல் அக்குரங்கு கடலுக்கு மேலே பறந்து போய்க் கொண்டிருந்ததை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார்கள் தீவுக்கப்பல்வாசிகள். வானமும் கருமையிலிருந்து விடுபட்டது. உதயணனும் தோழர்களும் கூட அந்நிலையை அடைந்திருந்தார்கள். அச்சமயத்தில் விஜயன் ஸ்ரீவிஜயாவை மணக்க விரும்பாதற்குத் தடையாக இருக்கும் மற்றொரு காரணத்தைத் கூறியபோது தோழர்கள் அசந்து போனார்கள். மிகவும் மோசமான ஒரு நிகழ்ச்சி நடைபெறாமல் போனதை எண்ணிப் பெருமூச்சுவிட்ட அவர்கள் அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அவசரம் காட்டிய தங்கள் முட்டாள் தனத்தை எண்ணி நொந்து கொண்டார்கள். விஜயனிடம் அனைவரும் பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுவிட்டு ''இக்கிராதகியை உடனே கொல்ல வேண்டும். அனுமதி கொடுங்கள். இவளை எங்கள் காலாலேயே மிதித்துத் துவைத்துவிடுகிறோம்'' என்றார்கள்.

''எதற்கெடுத்தாலும் அவசரப்படுவதையும் உணர்ச்சி வசப்பட்டுத் தவறான முடிவுகள் எடுப்பதையும் இதோடு விடுங்கள். இவளைப் பழையபடி அடித்தள அறையில் சிறை வையுங்கள். இவள் நமக்குத் தேவை. இவளை காவல் செய்ய வேண்டியது உங்கள் எல்லோரது கடமை'' என்றான் விஜயன்.

தோழர்கள் ஸ்ரீவிஜயாவை ஆசனத்துடன் தூக்கிச் சென்றார்கள்.

விஜயன் நவவீரன் ஒருவனிடம் எதையோ கூறிவிட்டு தனஞ்ஜெயனுடன் ஆலோசனையில் இறங்கினான். இரவு நேரம் தலைகாட்டத் துவங்கியது.

தனஞ்ஜெயனோடு ஆலோசித்து முடித்தபின் தீவுக்கப்பலை சாவகத்தீவை நோக்கி செலுத்தும்படி கூறிவிட்டு ஸ்ரீவிஜயா இருந்த அறைக்குச் சென்றான் விஜயன். பூட்டிக் கிடந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். உள்ளே கால்களில் விலங்கிட்டிருந்த நிலையில் கட்டிலில் படுத்திருந்த ஸ்ரீவிஜயா தூங்கவில்லை. விஜயனைத் கண்டதுமே எழுந்து மரக்கட்டிலில் அமர்ந்து கொண்டாள். அவளது முகம் இறுகியிருந்தது. மிகவும் சாமர்த்தியமாகச் செயல்பட்டு ஏறக்குறைய ஓராண்டு காலமாக சொர்ணத்தீவின் மன்னன் சொர்ணேஸ்வரனின் ஆசைநாயகி யாய் முடிசூடாத ராணியாக இருந்து தீவையே கலக்கிக் கொண்டிருந்த தன்னை எங்கிருந்தோ வந்த விஜயன் செல்லாக்காசாக்கிவிட்ட விதம் அவளால் நம்ப முடியாத விஷயமாக இருந்தது. எத்தனையோ சாமர்த்தியமாக ஆடவர்களைச் செல்லாக் காசாக்கியிருந்த அவள் தனக்கு அந்த நிலை அப்படியே திரும்பும் என்று சிறிதும் எதிர் பார்க்கவில்லை. சொர்ணத்தீவில் தன் செல்வாக்கு நாளுக்கு நாள் உயர்வதை மட்டுமே கண்டு ஆனந்த கர்வமடைந்து கொண்டிருந்த அவளுக்கு இந்த அளவிற்கு தனது செல்வாக்கு சேதமடைந்து உருத்தெரியாமல் போனதை ஜீரணிக்க முடியவில்லை. தான் யார் என்பதை விஜயனுக்கு முன்னால் வந்த யாரும் அறிந்து கொள்ளவில்லை. அறிய முற்பட்டவர்களின் தலைகளை அவள் அரிந்துவிட்ட காரணத்தினால் அறிவதற்கு யாரும் துணியவில்லை. விஜயன் அறிய முற்பட்டபோது அவனை எதுவும் செய்யமுடியாமல் அவன் மீதான அவளது ஆசை அவளைத் தடுத்துவிட்டது. முன்னாள் கடற்படை தளபதி பண்டோராவின் மகள் என்ற விஷயமும் மன்னனின் ஆசைநாயகி என்ற விஷயமும் விஜயனுக்குத் தெரிந்தது அவளை அதிகமாக பாதிக்கவில்லை. சாவகத்தீவில் இருக்கும் கடத்தல்காரன் திலீபனின் மனைவி தான் என்பதை விஜயன் அறிந்து கொண்டு தீவுக்கப்பல் வாசிகளுக்கு தெரிவித்த விஷயம்தான் அவளை ஆழமாகப் பாதித்திருந்தது. தீவுக்கப்பலுக்கு வந்ததும் அங்கே இருந்தவர்கள் தன்னை மலையாக எண்ணி மதிக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட அவள் அவர்களிடம் தனது ஆசையை வெளியிட்டாள். விஜயன் யார், எதற்காக சொர்ணத் தீவுக்கு வந்தான், அவனது

லட்சியம் என்ன என்பதையெல்லாம் தோழர்கள் மூலமாகவே அறிந்து கொண்டிருந்த அவள் நாகதீபத்தில் அமர்வது தான் தன் ஆசை என்பதை வெளியிட்டபோது அவளது ரிஷிமூலம் அறியாத தோழர்கள் அவளை ஆதரித்தார்கள். அவள் செய்த உதவிகள் ஒரு பக்கம் - அவள் மன்னன் மகள் என்ற தகவல் மறுபக்கம் - ஆக இந்த இரண்டு விஷயங்களும் தோழர்களுக்குத் திருப்தியாக இருந்ததால் அவள் விஜயனை மணப்பது சரியானது என்று அனுமானித்து அவள் பக்கம் சாய்ந்தார்கள். விஜயனுக்கு எதிராக அணிதிரண்டார்கள். அதுவரையில் தனது கணக்குகளும் கனவுகளும் பலித்ததை எண்ணிக் குதூகலித்த அவளுக்கு விஜயன் தன் கால்களுக்கு விலங்கிடச் சொன்னபோது வியப்பாக இருந்தது. ஆனால் தோழர்கள் அவள் பக்கம் நின்று அவளை விடுதலை செய்தபோது தனது வெற்றி உறுதி என்று இறுமாந்தாள் ஸ்ரீவிஜயா. தனது சாமர்த்தியங்கள் தனது இலக்கை அடைந்து விட்டதாக மகிழ்ந்தாள். ஆனால் தனது சாமர்த்தியத்தைவிட விஜயனின் சாமர்த்தியம் சிறப்பானது என்பதைக் கண்கூடாகக் கண்டபின் கலகலத்துப் போனாள். தனக்காக உயிரையும் விட முன்வந்த தோழர்கள் உண்மை தெரிந்தபின் தன்னைக் கொல்லத் துடித்ததைக் கண்டதும் தான் சகலவிதங்களிலும் தோற்றுப்போய் விட்டதை உணர்ந்தாள். அதுநாள் வரை அவளைக் காப்பாற்றி வந்த பொய்கள் உண்மையால் சாயம் வெளுத்த நிலைக்கு வந்துவிட்டதால் தன் கதி அதோ கதிதான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அந்த நிர்க்கதி நினைவுக்கு வரவே ''என்னை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டாள் விஜயனை நோக்கி.

''அது நீ நடந்து கொள்வதில் இருக்கிறது'' என்றான் விஜயன்.

''இன்னும் என்ன இருக்கிறது? அளவுக்கு மீறி உங்களுக்கு உதவியதின் பலனைத்தானே இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்?'' என்றாள் சற்றே வருத்தமும் தாபமும் மிகுந்தவளாய்.

''சரியாகச் சொன்னாய் ஸ்ரீவிஜயா. நீ செய்த உதவிகள் தான் உன் உயிரைக் காப்பாற்றி இருக்கின்றன''

''வேறு என்ன செய்யவேண்டும் நான்?''

''நீ செய்த உதவிகளையெல்லாம் அர்த்தமற்றதாக்கி விட்ட உன் துரோகம் உனக்கு மறந்துவிட்டதா?''

''துரோகமா?''

''நடிக்க வேண்டாம் ஸ்ரீவிஜயா. எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டு தான் நான் பேசுகிறேன்''

''என்ன சொல்கிறீர்ககள்?''

''ராகுலன் உன்னை ஏமாற்றிவிட்டதாக அடுக்கடுக்காக நீ சொன்ன பொய்களையெல்லாம் நினைவு படுத்திப்பார். அவன் உன்னை ஏமாற்றவில்லை. நீதான் அவனை ஏமாற்றி யிருக்கிறாய். அவன் காண்பித்த பொக்கிஷத்தைக் கண்டதும் உன்னிடம் மூண்டது பேராசை. கடத்தல் மன்னனின் மனைவியான உனக்குள் உண்டாகியது திட்டம். நல்லவிலை தருவதாகக் கூறி நகைப் பெட்டிகளையும் ராகுலனையும் உன் மாளிகைக்கு வரவழைத்தாய். ராகுலனைக் கொன்றுவிட்டு வழக்கம்போல கொலைப் பழியை பறக்கும் குரங்கு பேரில் போட்டாய். ராகுலனைப் பற்றி கேட்பதற்கு யாரும் இல்லாததால் கொலை அமுங்கிவிட்டது. நீ நகைப்பெட்டிகளை உன் கடத்தல் கணவனுக்கு அனுப்பிவிட்டாய். எனக்கு உரிய பொக்கிஷத்தை ராகுலன் கவர்ந்தான். அதை அவனைக்கொன்று கவர்ந்தாய். சாவகத்திற்கு அனுப்பிவிட்டாய். அதை நான் மீட்க வேண்டாமா?''

ஸ்ரீவிஜயா உடனடியாக எதுவும் பேசவில்லை. ''எப்படி எல்லா விஷயங்களும் இவனுக்குத் தெரிந்தது?'' என்ற வியப்பு அவளது வாயை அடைத்தது. ஒருவாறு சுதாரித்துக் கொண்டு ''எப்படி மீட்பதாக உத்தேசம்?'' என்று கேட்டாள்.

''இதென்ன கேள்வி? உன் மூலமாகத்தான்''

''என் மூலமாகவா?''

''ஆம். பொக்கிஷத்தை சாவகத்திற்கு அனுப்பியது நீ. ஆகவே அதை நீதான் மீட்க வேண்டும்''

''நான் மறுத்தால்?''

''உயிரோடு இருக்கமுடியாது''

''உயிரை இழக்கத் தயாராக இருந்தால்?''

''உயிரை உடனடியாக எடுக்க மாட்டோம். உன் கைகால் விரல்களை ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொன்றாக் வெட்டுவோம். சிகிச்சை கிடையாது. அதற்கு மேலும் நீ படியவில்லை என்றால் ஒரு காலை வெட்டுவோம். அதற்குப் பிறகு கை, அப்போதும் வழிக்கு வரவில்லையென்றால் நடுமுதுகில் தோலை உரித்து தினமும் அதில் உப்பைத் தடவுவோம்''

''அதையும் நான் சகித்துக் கொண்டால்?''

''முயன்று பார்'' என்று கூறி எழுந்து கொண்ட விஜயன் அறையைவிட்டு வெளியே முற்பட்டபோது ''நில்லுங்கள்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

திரும்பி நின்ற விஜயன் ''என்ன?'' என்றான்.

''நான் விரும்பினாலும் இந்த விஷயத்தில் என்னால் உதவ முடியாது'' என்றாள்.

''ஏன்?''

''என் கணவரிடம் பொக்கிஷம் போய் சேர்ந்து விட்டதென்றால் முதலையின் வாயில் போய்விட்ட மாதிரி. அதை மீட்க முடியாது''

''பொக்கிஷத்தை என்ன செய்துவிடுவான் உன் கணவன்?''

''விற்று விடுவார்''

''யாருக்கு?''

''உங்கள் பொக்கிஷத்தைப் பொறுத்தவரை சாவக மன்னருக்குத்தான் விற்க முடியும்?''

''யாருக்கு விற்றால் என்ன? வாங்கிய விலையைத் திருப்பி பொருளைத் திரும்பப் பெறவேண்டியது தானே?''

''நீங்கள் சொல்வது போலெல்லாம் நடக்க இது ஒன்றும் வங்கதேசத்து அங்காடியல்ல''

''வங்கதேசத்து அங்காடிகளைப் பற்றி பேச உனக்கு அருகதையில்லை. பலரை ஏமாற்றி கொள்ளையடிக்கும்

சாமர்த்தியசாலி நீ. உன்னால் பொக்கிஷத்தை மீட்க முடியாது என்பதை நான் ஒப்புக் கொள்ளமுடியாது''

''என் சாமர்த்தியங்கள் அவரது அடாவடிக்குமுன் எடுபடாது. அதோடு அவர் தனியாக இல்லை. அவரைச்சுற்றி பெருங்கூட்டமே இருக்கிறது''

''சரி. இதுபற்றி நாளைக்கு மீண்டும் பேசுவோம்'' என்று கூறிவிட்டு அகன்றான் விஜயன்.

மறுநாள் அசுவநாவிகரையும் தனஞ்ஜெயனையும் அழைத்து ஸ்ரீவிஜயா ராகுலனைக் கொன்றுவிட்டதையும் கர்ணபத்ரபங்கப் பெட்டிகளை சாவகத்திற்கு அனுப்பி விட்டதையும் விஜயன் விவரித்தபோது இரண்டு பேரும் அரண்டு போனார்கள்.

''இவளைப் போன்ற ராட்ஷஷியை நான் பார்த்ததே இல்லை'' என்றார் அசுவநாவிகர்.

''அதெல்லாம் இருக்கட்டும். நமது பொக்கிஷம் நம்மிடமிருந்து ராகுலனுக்கு மாறி அவனிடமிருந்து ஸ்ரீவிஜயாவுக்கு மாறி கடைசியாக சாவகத்தில் உள்ள கடத்தல் காரர்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. இதுவரை பொக்கிஷத்தின் இருப்பிடம் பற்றி எதுவும் தெரியாமலிருந்து தற்போது தெரிந்துவிட்டது. அதை எப்படியாவது மீட்க வேண்டும்'' என்றான் விஜயன்.

அதைக்கேட்ட இருவருக்குமே பொக்கிஷத்தை எப்படி மீட்க முடியும் என்ற கேள்வி எழுந்தது.

அவர்களின் எண்ணங்களை ஓரளவிற்கு ஊகித்த விஜயன் ''உங்கள் சந்தேகம் எனக்குத் தெரிகிறது. அசுவநாவிகரே, நீங்கள் நாகர்மலைத்தீவில் இருந்தபோது ராகுலன் நமது பொக்கிஷத்தை சாவகத்திற்கு கொண்டுபோய் விற்பார்கள் என்று சொன்னீர்கள். ஸ்ரீவிஜயாவின் கூற்றுப்படி அது கடத்தல் காரர்களிடம் போய்ச் சேர்ந்துவிட்டது. சாவகத்தில் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? சாவகத்தின் நிலைமை என்ன?'' என்று கேட்டான்.

''தலைவரே, கடத்தல்காரர்கள் சாவகத்தின் கிழக்குக் கடற்கரையில் இருக்கிறார்கள். சாதாரணமாக பகிரங்கமாகவும்

அதிகாரப்பூர்வமாகவும் விற்க முடியாத பொருட்களை வாங்குவதும் விற்பதும் இவர்களது தொழில். ஸ்ரீவிஜயாவுக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. ஸ்ரீவிஜயா தனியாளாக இருந்துகொண்டு இதே வேலையைச் செய்து வந்தாள். மன்னனுக்குத் தெரிந்து பகிரங்கமாகவே செய்தாள். மன்னன் அவளை அடக்கியிருக்கலாம். ஆனால் அவனது ஆசைநாயகியாக இருந்தபடியால் அவளது காமத்தில் கண்களை இழந்து செயலற்றுப் போய்விட்டான் சொர்ணத்தீவின் மன்னன். சாவகத்தைப் பொறுத்தவரை மன்னன் கடத்தல்காரர்களை ஏற்கவில்லை. அடிக்கடி அவனுக்கும் அவர்களுக்கும் மோதல்கள் நடைபெறுவதுண்டு. அப்போதெல்லாம் கடத்தல் காரர்கள் மன்னனுக்குப் பெரும் பரிசுகளைக் கொடுத்து பின் வாங்கச் செய்து விடுகிறார்கள். அதுமட்டுமின்றி கடத்தல் காரர்களை ஆதரிக்கும் பலர் நிர்வாகத்திலும் இருப்பதால் அவனால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. இக்கடத்தல் காரர்கள் கடற்படையையும் அவ்வப்போது பரிசுகளைக் கொடுத்து சரிகட்டி வருவதால் அவர்களும் கடத்தல் காரர்களைக் கண்டு கொள்வதில்லை. எனக்குத் தெரிந்து இதுதான் நிலவரம்'' என்றார் அசுவநாவிகர்.

''அப்படியானால் கடத்தல்காரர்களை நாம் தாக்குவோம்'' என்றான் விஜயன்.

''கடத்தல்காரர்களைத் தாக்குவதா? தலைவர் கூறுவது புரியவில்லை''

''இதில் புரியாமல் போக எதுவுமில்லை அசுவநாவிகரே. கடத்தல்காரர்களை மன்னனாலும் கடற்படையாலும் தாக்கி அழிக்கமுடியும். ஆனால் அவர்கள் தரும் பரிசுகள் காரணமாக தாக்குவதற்கு முயலாமல் இருக்கிறார்கள். முயலாமல் இருப்பது வேறு. முடியாமல் இருப்பது வேறு''

''அதனால் என்ன?''

''இந்தச் சமயத்தில் கடத்தல்காரர்களைத் தாக்கினால் மன்னரும் கடற்படையும் நம்மை எதிர்க்காது அல்லவா?''

''ஏன் எதிர்க்காது? தனக்கு வரும் பரிசுகள் அழிந்து போவதை விரும்புவார்களா?''

''அசுவநாவிகரே, கடத்தல்காரர்களிடம் பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொண்டு அவர்களை கண்டு கொள்ளாமல் இருப்பதென்பது நீண்டகாலத்திற்கு நீடிக்க முடியாது. கடத்தல்காரர்கள் என்பது ஒரு தீயசக்தி. நோய். அதை வளரவிடுவது தங்களுக்கு ஆபத்து என்பதை மன்னர் உணரும் காலம் வரும் இப்போதைய மன்னரோ அல்லது கடற்படைத் தளபதியோ மாறும்போது நிலைமைகள் மாறலாம். தற்போதைக்கு கடத்தல்காரர்களைத் தாக்க அவர்கள் தயங்குவது பரிசு பொருட்களை பெறுவதால்தான். நமக்கு அந்த நிலைமை இல்லை. நாம் தாக்கினால் அவர்கள் எதிர்க்க மாட்டார்கள்''

''அதெல்லாம் சரிதான். கடத்தல்காரர்களை நாம் ஏன் தாக்கவேண்டும்?''

''நமது பொக்கிஷத்தை மீட்க அவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்த முடியுமா?''

''முடியாது தான். அதேசமயம் தாக்குதலால் பயன் இருக்க முடியுமா என்று தோன்றவில்லை''

''அசுவநாவிகரே, கடத்தல்காரன் திலீபனின் மனைவி ஸ்ரீவிஜயா நம்மிடம் இப்போது பணயக் கைதியாக இருப்பதை மறந்து விட்டீர்களா?''

''அதாவது''

''ஸ்ரீவிஜயாவை எப்போது எப்படி சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி பிறகு சொல்கிறேன்'' என்றான் விஜயன்.

அசுவநாவிகர் அரைகுறை மனத்துடன் தலையை ஆட்டினார்.

தீவுக்கப்பலும் சாவகத்தின் தெற்கு கடற்கரையை நெருங்கியது.

அதேசமயம் கடற்கரைப் பகுதியில் பல இடங்களில் வெளிச்சங்கள் உண்டாயின.

இரண்டு மரக்கலங்கள் தீவுக்கப்பலை நோக்கி வேகமாக வரவும் செய்தன.

## அத்தியாயம் அறுபத்தொன்று

# மெய்சிலிர்க்கும் பயங்கரம்

அசுவநாவிகர் விஜயன் சொன்ன விஷயங்களை அரைகுறையாக ஏற்றுக்கொண்டு அதுசம்பந்தமாக எதுவும் பேசவில்லை. தனஞ்ஜெயன் அகன்ற பிறகு விஜயனிடம் ''தலைவரே, எனக்கொரு சந்தேகம்'' என்றார்.

''எதைப் பற்றி?''

''தரகர் ஸ்ரீவிஜயாவைப் பற்றி உங்களுக்கு சந்தேகம் வந்ததும் மன்னனிடம் என்னை அனுப்பினீர்கள். மன்னன் சொன்ன பதிலை வைத்து அவள் மன்னனின் மகளாக இருக்க முடியாது என்று நினைத்தீர்கள். பிறகு இல்லாத ஒரு பிரச்சினையைச் சொல்லி அவளை மன்னனிடம் போகும்படிச் செய்தீர்கள். அரண்மனைக்குள் பணிப்பெண்ணாகச் சென்று அவள் மன்னனின் ஆசைநாயகி என்பதை அறிந்தீர்கள். மற்ற விஷயங்களை எப்படி அறிந்தீர்கள்?''

''அசுவநாவிகரே, ஸ்ரீவிஜயா மன்னனின் ஆசை நாயகியாக இருந்து கொண்டு மன்னனின் மகள் என்று பொய் சொன்னது எனக்கு அவள்மீது வெறுப்பையும் சந்தேகத்தையும் அதிகரித்தன. அவள் ஏதோ சதி செய்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அரண்மனைக்கு சென்று வந்த நான் மறுநாள் அவள் மாளிகைக்குப் போனபோது அவளங்கு இல்லை. ஏதோ ஒரு பொறி தட்டவே அவளது அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் அவளுக்காகக் காத்திருந்தேன். இவள் சதிகாரியாக இருக்கும்பட்சத்தில் இவளுக்கு ரகசியத் தொடர்புகள் இருக்கலாம் என்று நினைத்தேன். அப்படி இருக்குமானால் அதற்கு ரகசிய வழிகள் இருக்கலாம் என்று தோன்றியதால் அறையை ஆராய்ந்தேன். நான் எதிர்பார்த்த மாதிரி அவளது கட்டிலுக்குக் கீழே சுரங்கம் இருந்தது. அதைக் கண்டுபிடித்து உள்ளே இறங்கிச் சென்றேன். சுரங்கப் பாதையில்

பல இடங்களில் மண்டைஓடுகளும் எலும்புகளும் இருப்பதைப் பார்த்தேன். ஸ்ரீவிஜயா தன்னிடம் வரும் பெரும் புள்ளிகளை மயக்கிச் சுரங்கப் பாதையில் கொண்டு சென்று கொலை செய்திருக்க வேண்டும் என்று தோன்றியது. அதை உறுதி செய்தான் அங்கே நான் கண்டதொரு கோர சொரூபன். என்னைக் கண்டதும் அதிர்ச்சியடைந்த அவன் என்னைத் தாக்கினான். இருவரும் சண்டையிட்டோம். அவனது தாக்குதலில் முரட்டுத்தனம் இருந்ததே தவிர முறை இல்லை. எனவே விரைவிலேயே அவனை மடக்கி கழுத்தை வளைத்து இறுக்கியபோது அவன் உண்மைகளைச் சொன்னான்.

''ஸ்ரீவிஜயா முன்னாள் கடற்படைத் தளபதியின் மகள் என்பதும் தனது தந்தைக்கு மன்னன் செய்திருந்த அவமானத்திற்குப் பழிவாங்கவே மன்னனின் ஆசை நாயகியானாள் என்பதும் அந்த உறவினால் தரகர் பதவி பெற்று கொள்ளையடிக்க முற்பட்டாள் என்பதும் தெரிந்தன. மன்னனின் ஆசைநாயகியாக ஆனாலும் அவள் தன்னிடம் தரகு பேச வந்த சாவகத்தின் கடத்தல்காரன் திலீபனை மணந்து கொண்டு அவனோடு கடத்தல்களை தடங்கலின்றிச் செய்து வந்திருக்கிறாள். அப்போதுதான் ராகுலன் அவளிடம் சிக்கியிருக்கிறான். அவனை மயக்கி சுரங்கப்பாதைக்குக் கொண்டு சென்று கொன்றுவிட்டு பொக்கிஷத்தை சாவகத்தில் இருக்கும் தன் கடத்தல் கணவனுக்கு அனுப்பியிருக்கிறாள். இதையெல்லாம் அறிந்து கொண்ட நான் அவனை அங்கேயே கட்டிப்போட்டுவிட்டு அறைக்குத் திரும்பினேன். அப்போதும் அவள் வந்திருக்கவில்லை. வந்தபின் அவளிடம் எதையும் காட்டிக்கொள்ளாமல் அதேசமயம் அவளை அங்கேவிட்டு வைத்தால் சுரங்கத்திற்குள் செல்வாள் என்பதையும் சென்றால் நான் அவளைப் பற்றிய ரகசியங்களை அறிந்தது பற்றி தெரிந்து கொள்வாள் என்பதையும் உணர்ந்த நான் கையோடு மரக்கலத்திற்கு அழைத்து வந்தேன். மரக்கலத்தை விட்டு அவள் போகாதவாறு தோழர்களிடம் கூறியிருந்ததால் அவர்கள் கொண்டாட்டம் கும்மாளம் என்று அவளை அங்கேயே வைத்துக் கொண்டார்கள். அந்த சமயத்தில் நான் மன்னரைப் போய் அதிரடியாகச் சந்தித்து ஸ்ரீவிஜயாவைப் பற்றிய

உண்மைகளைச் சொன்னேன். அவர் மிகவும் ஆத்திரப்பட்டு அவளைக் கொல்லத்துடித்தார். நான் நமது பொக்கிஷங்கள் அவளால் சாவகத்திற்கு கடத்தப்பட்டிருப்பதால் அதை மீட்க அவள் தேவை என்றும் என்னோடு அவளை அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கோரினேன். காதகி எப்படியாவது தொலைந்தால் சரி என்று கருதிய அவர் அனுமதியளித்தார். இதுதான் நடந்தது'' என்றான்.

''இப்பேர்பட்ட கைகாரியான இவள் உங்களுக்கு மட்டும் ஏன் அபரிமிதமான உதவிகளைச் செய்யவேண்டும்?'' என்று கேட்டார் அசுவநாவிகர்.

''இந்தக் காதல் இருக்கிறதே அது சில நேரங்களில் விசித்திரமாக இருக்கிறது. சில நேரங்களில் விவஸ்தை யில்லாமல் இருக்கிறது. அவளுக்குத் தெரியாது என்றாலும் உங்களுக்குத் தெரியும் நான் மணமானவன் என்பது. ஆனால் நாகர்மலைத் தீவில் நாகநந்தினியைக் காதலித்தேன். அது எனக்கு விசித்திரமாக இருந்தது. ஸ்ரீவிஜயா மணமானவள் மட்டுமல்ல. மன்னனின் ஆசைநாயகியும்கூட. பல ஆண்களோடு உறவாடியவள். அப்படிப்பட்டவளுக்கு என்மீது காதல் வந்ததென்றால் அக்காதல் விவஸ்தையற்றது. இக்காதல் தான் அவள் உதவிகளுக்குக் காரணம்''

''எது எப்படியானாலும் அவள் உங்களைக் காதலித்தது உண்மைதானே? உண்மையாகவே காதலித்தாள் என்பதும் உண்மைதானே?''

''உண்மைதான்''

''அதை நிராகரித்து விட்டீர்களே அது ஏன்?''

''இது கூடவா உங்களுக்குத் தெரியவில்லை? என்னை உண்மையாகக் காதலிக்கும் அவள் எப்படிப்பட்டவள் என்பதைப் பாருங்கள். திலீபனுக்கு மனைவி, மன்னனுக்கு ஆசைநாயகி என்பது அவள் நிலை. இது இருவருக்குமே துரோகம் செய்யும் காரியம் இல்லையா? இப்படிப்பட்டவள் என்னை உண்மையாக விரும்புவது என்பது விவஸ்தையற்றது மட்டுமல்ல. அர்த்தமற்றதும் கூட''

''தலைவரே, பழைய வாழ்க்கையை மறந்துவிட்டு பழைய வாசனைகளைத் துறந்துவிட்டு உங்களோடு புது வாழ்க்கையைத் துவங்க அவள் விரும்பியிருக்கலாம் அல்லவா?''

''மறுப்பது என்பதும் துறப்பதும் என்பதும் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அதுவல்ல பிரச்சினை. புதுவாழ்வை விரும்புகிறவளின் யோக்கியதையை சற்று யோசித்துப் பாருங்கள். பொய், பித்தலாட்டம், கொலை, கொள்ளை, கடத்தல், துரோகம் ஆகியவற்றைச் செய்தவள் என்று பார்த்தால் அவற்றை நானும் செய்திருக்கிறேன். ஆனால் யாருக்காக? மக்களுக்காக. கொடிய மன்னனிடம் சிக்கித் தவித்த மக்களைக் காப்பாற்றுவதற்காக. ஆனால் ஸ்ரீவிஜயா இந்தப் பாதகங்களை எதற்காகச் செய்தாள்? சுயநலம்-சுயயோகம்-சுயலாபம் - இவைகளுக்காகத்தானே செய்தாள்? இவள் தண்டனைக்கு உரியவளேயன்றி புதுவாழ்வுக்கு ஏற்றவள் அல்ல''

இச்சமயத்தில் நவவீரர்கள் அங்கே வந்தார்கள்.

''தலைவரே, நீங்கள் கூறியபடி கணக்கெடுப்பை நடத்திவிட்டோம். சொர்ணத்தீவுக்கு வருவததற்கு முன்பு நம் கப்பலில் 82 பேர் இருந்தார்கள். இங்கு வந்த பின் அடிமைகள் 151 பேர் வைத்தியர்கள் 5 பேர் மற்றும் அந்தத் தரகர் பெண்மணி ஆகிய 157 பேர் கூடுதலாக இருக்கிறார்கள். மொத்தம் 977 பேர் தற்போது மரக்கலத்தில் இருக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்கள்.

விஜயன் உபதலைவர்களை அழைத்து இந்தக் கணக்கைச் சொன்னான். பிறகு அவர்களைப் பார்த்து ''இந்த நவ வீரர்கள் என் நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பார்கள். இவர்கள் ஆண்பெண் பணியாளர்கள், மருத்துவர்கள் மற்றும் ஸ்ரீவிஜயா ஆகியோரை கவனித்து வைத்திருப்பார்கள். மற்றபடி உங்கள் ஒவ்வொருவரது கட்டுப்பாட்டில் யார் யார் இருக்க வேண்டும் என்று நான் முன்பு சொன்னேனோ அக்கணக்கு தொடரும். உதயணனின் கட்டுப்பாட்டில் இதுவரை 149 அடிமைகள் இருந்தார்கள். இப்போது 300 பேர் இருப்பார்கள். இனி அவர்களது எண்ணிக்கை மற்றும் செயல்பாடுகளை நீங்கள் தான்

கவனித்துக்கொள்ள வேண்டும். எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டால் அதை ஆராய்வதும் சரிசெய்வதும் உங்கள் கடமை'' என்று கூறிவிட்டு அனைத்து தோழர்களையும் அழைத்தான்.

''தோழர்களே! உணர்ச்சிவசப்பட்டு செயல்களில் இறங்குவது மற்றும் என் உரிமைகளில் தலையிடுவது ஆகியவற்றை நீங்கள் இதோடு விட்டுவிட வேண்டும். இங்கே உணர்ச்சிகளுக்கோ, கேள்விகளுக்கோ புரட்சிகளுக்கோ இடமில்லை. கடமைகளுக்கு மட்டும்தான் இடம். நீங்களெல்லாம் என் உயிரைக் காப்பாற்றுவதற்காக பிரக்ஞை எடுத்துக் கொண்டவர்கள். ஆனால் ஒரு பெண்ணுக்கு முன்னால் அதை மறந்து எனக்கு எதிராக நின்றீர்கள். நீங்கள் அனைவரும் தண்டனைக்கு உரியவர்கள்தான். அந்த தண்டனை என் லட்சியத்தைச் சிதைத்துவிடும் என்ற ஒரே காரணத்திற்காக உங்களை மன்னிக்கிறேன். ஆனால் என் பொறுப்பிலிருந்து - அதாவது உங்களைத் தண்டிக்கும் பொறுப்பிலிருந்து நான் தவறியதால் எனக்கு நானே தண்டனை வழங்கிக் கொள்கிறேன். இன்று முதல் ஐந்து நாட்களுக்கு எனக்கு உணவு ஏதும் வழங்க வேண்டாம்'' என்றான்.

''தலைவரே, அது வேண்டாம். எங்களுக்கே தண்டனை வழங்குங்கள். ஏற்றுக் கொள்கிறோம்'' என்று தோழர்கள் குரல் கொடுத்தார்கள்.

விஜயனோ அதைக் காதல் வாங்கிக் கொள்ளவில்லை. நவ வீரர்களை அழைத்து ''ஸ்ரீவிஜயாவை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். காலில் இருக்கும் சங்கிலியை அகற்ற வேண்டாம். சிறையிருக்கும் நிலையிலும் மாற்றமில்லை. மற்றபடி அவளுக்கு உணவளிப்பதிலோ அவளது உடல் நலத்திலோ எந்தக் குறைவும் வந்துவிடக் கூடாது'' என்று கூறிவிட்டு தனது அறைக்குச் சென்று தாழிட்டுக் கொண்டான்.

மறுநாள் வழக்கம்போல எழுந்து தன் பணிகளை மேற்கொண்டான். பட்டினியைக் காரணம் காட்டி அறையிலேயே முடங்கிக் கிடந்தால் யாராலும்அவனைக் குறை சொல்ல முடியாதுதான். ஆனால் அவனோ அதை ஒரு பிரச்சினையாகவோ கவசமாகவோ எண்ணாமல்

சோர்வுணர்வின்றி வழக்கப்படி செயல்பட்டதைக் கண்ட தோழர்களுக்கு மலைப்பாக இருந்தது. வங்கதேசத்தை விட்டு புறப்பட்டு விட்ட பின் ஏதோ ஒரு சக்தி விஜயனிடம் உருவாகி நாளுக்கு நாள் வளர்ந்து அவனை உறுதியானதொரு மனிதனாக உருவாக்கி வருவதை அவர்கள் உணர்ந்தார்கள். அப்படிப்பட்டவனிடம் பணி புரிவது அவர்களுக்குப் பெருமையாக இருந்தது.

விஜயன் இவ்வாறு தனக்குத்தானே தண்டனை கொடுத்துக் கொண்டு மூன்று நாட்கள் முடிந்து நாட்கள் நான்காயின. இந்த விஷயம் ஸ்ரீவிஜயாவுக்கும் தெரியவந்தது. ஒருபுறம் வேதனை அவளை வாட்டினாலும் என்ன காரணத்தாலோ அவளுக்குள் ஒரு வித பூரிப்பும் உண்டாகியிருந்தது. அவனிடம் பேசவேண்டும் என்று தோன்றியதால் காவலுக்கு நின்ற நவவீரர்களில் ஒருவனான அபயனிடம் தன் விருப்பத்தை தெரிவித்தாள். அபயன் அதை விஜயனிடம் சொல்ல அவனும் எந்த மறுப்பும் சொல்லாமல் அவளை வந்து சந்தித்தான்.

''என் விருப்பத்தை உதாசீனம் செய்யாமல் வந்து சந்தித்ததற்கு என் நன்றி அரசகுமாரரே'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''கைதிகளுக்கு விருப்பம் இருப்பதும் கைதிகளை பிறர் வந்து சந்திப்பதும் சாதாரண விஷயங்கள்தான். இதில் நன்றி தெரிவிக்க எதுவுமில்லை. எதற்காக அழைத்தாய் சொல்'' என்றான் விஜயன் சாதாரணமாக.

''உங்களை விரும்பிய நான் தோற்றுப் போனாலும் உங்களை விரும்பியதற்காகப் பெருமைப்படுகிறேன். நீங்கள் மகத்தானவர் என்பதை உணர்கிறேன்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''நீ உணர வேண்டியது இதையல்ல ஸ்ரீவிஜயா''

''வேறு எதை?''

''நீ வந்த வழியை. நீ வாழ்ந்த வாழ்க்கையை''

''உண்மைதான் அரசகுமாரரே, அதை நான் உணரத் தொடங்கிவிட்டேன். நினைக்க நினைக்க கசப்பாக இருக்கிறது''

''கசக்கும் மருந்துகள் இனிப்பான விளைவைத்தரும்.''

''அரசகுமாரரே''

''சொல்''

''கடத்தல்காரர்களைத் தாக்கப் போவதாகக் கேள்விப் பட்டேன். அது உண்மையா?''

''ஆமாம்.''

''சாவகத்தின் கிழக்குக் கரை முழுதும் பற்பல குழுக்களாக அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடம் எல்லாவிதமான ஆயுதங்களும் இருக்கின்றன. அவர்கள் ஈவு இரக்கமற்றவர்கள். அவர்களைத் தாக்குவதும் வெற்றி கொள்வதும் மிகவும் கஷ்டம்''

''கஷ்டமில்லாத விஷயங்களில் சாதிப்பதற்கு என்ன இருக்கிறது? கஷ்டங்கள், தடைகள், ஆபத்துகள் இவற்றை நான் வரவேற்கிறேன். இவை என்னை மருட்டுவதில்லை. மகிழவே செய்கின்றன'' என்று சொன்ன விஜயன் ''உன் கணவன் இருக்கும் இடம் எது என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''அவர் இருக்கும் இடம் தெரிந்தால் என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அங்கே உன்னை அனுப்பிவிடலாம் அல்லவா?''

''என்னைப் பிணைக் கைதியாகப் பயன்படுத்துவீர்கள் என்று தானே கேள்விப்பட்டேன்.''

''அப்படி நினைத்தது உண்மை. அந்த நினைப்பைக் கைவிட்டு விட்டதும் உண்மை''

''ஏன் அரசகுமாரரே?''

''பெண்ணை ஆயுதமாகப் பயன்படுத்தி வெற்றிபெற எனக்குப் பிடிக்கவில்லை. அது வீரத்திற்கு இழுக்கு''

''பெண் ஜென்மமாயிருந்த சிகண்டியை தேரில் வைத்துக் கொண்டு பீஷ்மரை வீழ்த்தினான் அர்ஜுனன். அவனை யாரும் கோழை என்று சொன்னதில்லை. வீரத்தில் வித்தகன் என்று தான் சொல்கிறார்கள்''

''நான் எதிர்க்கப் போவது பீஷ்மரையல்ல. கடத்தல் காரனை. அவனை எதிர்க்க பெண் என்ற ஆயுதம் தேவை யில்லை''

''அரசகுமாரரே, எனது கடைசி விருப்பத்தையாவது நிறைவேற்றுவீர்களா?''

இப்படி ஸ்ரீவிஜயா சொல்லிக் கொண்டிருக்கும் போதே நவ வீரர்களில் ஒருவன் வந்து விஜயனின் காதில் ஏதோ சொல்லவே அங்கிருந்து புறப்பட்டு மேல் தளத்திற்கு வந்தான் விஜயன். அப்போது இரவு நேரமாகி விட்டிருந்ததால் தீவுக்கப்பலில் எல்லா தளங்களிலும் விளக்குகளை ஏற்றியிருந்தார்கள். விஜயன் மேல்தளத்திற்கு வந்தபோது அங்கே எல்லா உபதலைவர்களும் கூடியிருந்தார்கள்.

அவர்கள் அனைவரும் நோக்கிய பகுதி முதலில் இருளில் மூழ்கியிருந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஆங்காங்கே வெளிச்சங்கள் தோன்றின.

''நாம் காண்பது கடத்தல்காரர்களின் பகுதி தலைவரே. விளக்குகளோடு வந்து கொண்டிருக்கும் நமது மரக்கலத்தை அவர்கள் கண்டிருக்க வேண்டும். தூங்கிக் கொண்டிருந்த அப்பகுதி விழித்துக் கொண்டதற்கு அடையாளமாக அவர்கள் விளக்குகளை ஏற்றுகிறார்கள்'' என்றான் தனஞ்ஜெயன்.

''அசுவநாவிகரே, கடத்தல்காரர்களின் இந்த நடவடிக்கை உங்களுக்கு. ஏதாவது உணர்த்துகிறதா?'' என்று கேட்டான் விஜயன்.

''சாதாரணமாக இரவுக் காலங்களில் அவர்களது பகுதி இருண்டு தான் கிடக்கும். அப்பகுதியில் மரக்கலம் ஏதாவது வந்தால் தங்களது இருப்பை உணர்த்துவதற்காக விளக்குகளை ஏற்றுவதுண்டு'' என்றார் அசுவநாவிகர்.

''அதாவது இப்பகுதியில் சாதாரணமாக மரக்கலங்கள் வராது. கள்ளத்தனமாக கடத்தல் பொருட்களை விற்பதற்காக வரும் மரக்கலங்கள் மட்டுமே வரும். இரவில் அத்தகைய மரக்கலங்கள் வரும்போது அவற்றை வரவேற்க இப்படி விளக்கேற்றுகிறார்கள். இல்லையா?''

''ஆமாம்''

''அப்படியானால் நாமும் ஏதாவது அடையாளம் காட்ட வேண்டும் அல்லவா?''

''ஆமாம். ஆனால் அடையாளம் என்னவென்று தெரியாதே''

''அதனால் என்ன? முறையற்ற சரக்குகளோடு வரும் கப்பல்கள் என்ன அடையாளத்தைக் காட்ட முடியும்? சிவப்பு நிறத்தைத்தான். ஆகவே இந்த தளத்திலிருந்து விளக்கிற்கு சிவப்புத் துணியைக் கட்டி கடற்கரையை நோக்கி ஆட்டுங்கள்'' என்றான் விஜயன்.

நவவீரர்களில் ஒருவன் அவ்வாறே செய்தபோது ''அதோ பாருங்கள் தலைவரே. விளக்குகள் அசைகின்றன'' என்றார். அசுவநாவிகர். அப்படிச் சொல்லிவிட்டு ''அவை மரக்கலங்கள் தான்'' என்றும் சொன்னார்.

''கடத்தல்காரர்களிடம் மரக்கலங்கள் இருக்கின்றனவா?'' என்று கேட்டான் விஜயன்.

அப்போது உதயணன் எதையோ சுட்டிக்காட்டி ''தலைவரே, அங்கே பாருங்கள்'' என்றான் பரபரப்புடன்.

விஜயனும் மற்றவர்களும் அங்கே நோக்கினார்கள்.

அங்கே தெரிந்தது மெய்சிலிர்க்கும் படியான ஒரு பயங்கரம்.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்திரண்டு

# கொள்ளையன் திலீபன்

கடத்தல்காரர்கள் குடியிருப்புக்கு அப்பால் கடற்கரைப் பகுதியிலேயே இருந்த எரிமலையொன்று வெடித்து வாயைத் திறந்ததால் வெளிப்பட்ட அக்கினிக் குழம்பு நீர்வீழ்ச்சி போல வழிந்து காட்டாறு போல கரையில் ஓடி ஆர்ப்பரிக்கும் கடலில் வந்து கலந்த விதமானது தீவுக்கப்பலில் இருந்த அனைவரையும் மெய்ச்சிலிர்க்க வைத்தது. இரவு நேரமாக இருந்ததால் இருண்ட

பகுதியிலிருந்து சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறத்தில் வெளிப்பட்ட அக்கினிக் குழம்பு தெளிவாகத் தெரிந்தது. மலைவாயிலிருந்து வெகுவேகமாக உருண்டோடி வந்த அந்தக் கொதிக்கும் குழம்பும் அலைகளால் சீறிய கடலில் வந்து கலந்த போது நீரும் நெருப்பும் உக்கிரமாகத் தாக்கிக் கொள்வது போல் எண்ணவைத்தது கடலில் கலக்கும் அக்குழம்பு அப்படியே இறுகி பாறையாக மாறப்போகிறது என்பதை அனைவருமே அறிந்திருந்தார்கள். வங்கக் கடலில் பயணத்தைத் தொடங்கிய திலிருந்து இயற்கையின் பல்வேறு வினோதங்களைக் கண்டிருந்த தீவுக்கப்பல்வாசிகள் அவற்றில் அழகும் பயங்கரமும் சேர்ந்திருந்ததைக் கண்டார்கள்.

இயற்கையின் இந்தச் சீற்றம் மிகுந்தச் சீரழகைக் கண்ட தனஞ்ஜெயன், ''சாவகத் தீவிலும் அதையடுத்த கிழக்குத் தீவுகளிலும் ஜீவ எரிமலைகள் சில இருக்கின்றன தலைவரே. அவை அடிக்கடி இப்படிச் சீறும் என்று கேள்விப்பட்டிருக் கிறேன். அதோடு சொர்ணபூமியிலிருந்து நீளும் இப்பகுதியில் பூமியின் மேலோடு மிகவும் கனமில்லாமல் இருப்பதால் பூகம்பங்களும் உண்டாகின்றன'' என்றான்.

''நம்மால் இத்தகைய இயற்கை சீற்றங்களை வெல்ல முடியுமா தனஞ்ஜெயா? எதை எதையோ வெற்றி கொள்வதாக மனிதன் பெருமைப்பட்டுக் கொண்டாலும்இங்கே ரசிப்பதைத் தவிர என்ன செய்யமுடியும்?'' என்று சொன்ன விஜயன் ''நாம் இப்போது கடத்தல்காரர்களை கவனிப்போம். எரிமலை பயங்கரமானாலும் நம்மைத் தாக்க வரவில்லை. இவர்கள் வருகிறார்கள்'' என்று சொல்லிவிட்டு கடற்கரையிலிருந்து புறப்பட்ட மரக்கலங்களை கவனித்தான். பிறகு தனஞ்செயனைப் பார்த்து ''தனஞ்ஜெயா, சுக்கானை திருப்பு., கப்பல் நடுக்கடலை நோக்கி ஓடட்டும்'' என்றான்.

இதைக்கேட்ட அசுவநாவிகருக்கு அதிர்ச்சியாக இருந்தது. கடல்போர் எதிலும் இதுவரை ஈடுபடாததால் விஜயன் எக்கு தப்பாக எதையோ செய்வதாக நினைத்தார் அவர். அதை விஜயனிடம் கேட்க முற்பட்டு ''தலைவரே, எதிரிகள் நம்மை நோக்கி வரும்போது நாம் புறமுதுகு காட்டி ஓடுவது விவேகமா?'' என்று கேட்டான்.

விஜயன் பதட்டப்படவில்லை. ''அசுவநாவிகரே, நாம் கடத்தல் காரர்களுக்கு மாற்று அடையாளம் காட்டிய பிறகும் ஏன் நம்மைத் தாக்க வருகிறார்கள். வியாபாரம் செய்யும் இவர்கள் தாக்க வேண்டிய அவசியம் என்ன? நாம் காட்டிய அடையாளம் அவர்களுக்குத் தவறான அர்த்தத்தைக் கொடுத்து விட்டதா?'' என்று கேட்டான்.

''எது எப்படியானாலும் அவர்கள் தாக்க வருவது உண்மை. அவர்களைத் திருப்பித் தாக்காமல் நடுக்கடலுக்கு ஓடுவது வீரமான காரியமா?'' - கேட்டார் அசுவநாவிகர்.

''அசுவநாவிகரே, கடத்தல்காரர்களுக்குப் பயந்தா நடுக்கடலுக்கு ஓடுகிறேன் நான்? இல்லை. நடுக்கடலுக்கு அவர்களை இழுத்து விட்டால் கடற்கரையிலிருந்து வெகுதூரத்திற்கு வந்து விடுவார்கள். அங்கிருந்து எளிதில் யாரும் அவர்களுக்கு உதவமுடியாது. அப்போது அவர்களைத் தாக்குவது விவேகமானதல்லவா?''

விஜயனின் அந்தப் பேச்சைக் கேட்டு அசந்து போனார் அசுவநாவிகர்.

அடுத்து உபதலைவர்கள் எல்லோரையும் பார்த்து ''என் திட்டம் உங்கள் எல்லோருக்கும் புரிகிறது என்று நினைக்கிறேன். நாம் நடுக்கடலுக்குப் போவோம். கடத்தல் காரர்கள் நம் இழுப்புக்கு வருகிறார்களா என்று பார்ப்போம். ஏனென்றால் நமது திட்டம் அவர்களுக்கும் புரியக்கூடிய திட்டம் தான். புரிந்து கொண்டால் நம்மை நோக்கி வரமாட்டார்கள். நம்மை கரைக்கு இழுக்கப் பார்ப்பார்கள்'' என்று சொன்னதும் தீவுக் கப்பலின் சுக்கான் திருப்பப்பட்டு நடுக்கடலை நோக்கி விரையலாயிற்று.

கடத்தல்காரர்களின் இரண்டு கப்பல்கள் தீவுக்கப்பலை நோக்கி வேகமாக வருவதைக் கண்ட அசுவநாவிகர் ''நமது திட்டம் அவர்களுக்குப் புரியவில்லையா?'' என்று கேட்டார்.

''அப்படியும் இருக்கலாம். வேறொரு காரணமும் இருக்கிறது'' என்றான் விஜயன்.

''எதைச் சொல்கிறீர்கள்?''

''நமது கப்பலின் பிரம்மாண்டம் அவர்களுக்குத் தெரிந்திருக்க - நியாயமில்லை. சாதாரணமான கப்பலாக இதை நினைக்கிறார்கள். தங்கள் வசம் இரண்டு கப்பல்கள் இருப்பதால் நம்மை எளிதாகப் பிடித்துவிடலாம் என்று கருதுகிறார்கள். அவர்கள் இரண்டாகப் பிரிந்து வருவதிலிருந்து இதை நாம் அறியலாம். நமது கப்பலுக்கு இருபுறத்திலும் அவர்களது மரக்கலங்கள் வந்து தாக்கினால் நம்மைப் பிடித்து விடலாம் என்பது அவர்களது தீர்மானம்'' என்று கூறிய விஜயன் ''நமது கப்பலை பழையபடி திருப்புங்கள். கப்பலில் இருக்கும் விளக்குகளை அணைத்துவிடுங்கள். இக்கப்பலில் எழுநூறு பேர் இருப்பது அவர்களுக்குத் தெரியவேண்டாம். அக்கப்பல்கள் நமது இருபுறங்களில் வந்தும் அவற்றை நோக்கிச் சரமாரியாக தீயம்புகளையும் விஷ அம்புகளையும் எரியுங்கள். எப்படிப் பார்த்தாலும் அந்த இரண்டு மரக்கலங்களிலும் இருநூறு பேர்களுக்கு மேல் இருக்க முடியாது. எனவே நமது தாக்குதலை அவர்களால் தாங்க முடியாது. இருபுறமும் நாம் சங்கிலிகளை வீசி கப்பல்களை நம்பக்கம் இழுத்து அவற்றில் தாவிச் சென்று கண்ணில் பட்டவர்களை வெட்டுவோம். ஒருவரைக் கூட விட வேண்டாம்'' என்றான் விஜயன்.

எல்லாம் அவன் எதிர்பார்த்தபடியே நடந்தன. கடத்தல் காரர்கள் தீவுக்கப்பலின் இருபுறங்களிலும் வந்தபோது தான் அதன் பிரம்மாண்டம் அவர்களுக்குத் தெரிந்தது. ஐந்து தளங்களைக் கொண்ட அத்தீவுக்கப்பலைக் கண்டு அசந்து போனார்கள். சங்கிலிகளை வீசி அக்கலத்தை நிலைகுலைய வைத்து விடலாம் என்று எண்ணியிருந்த அவர்களுக்கு அதிர்ச்சியே காத்திருந்தது. தீவுக்கப்பலிலிருந்து ஏகப்பட்ட விஷ அம்புகளும் தீயம்புகளும் தங்கள் மரக்கலங்களின் மீது விழவே அதைச் சமாளிக்கவே அவர்கள் போராட வேண்டியிருந்தது. தீவுக்கப்பலின் மீது அவர்களும் அம்பெய்தார்கள். ஆனால் அது பலனளிக்கவில்லை. அவர்களது மரக்கலங்கள் சில இடங்களில் தீப்பிடித்து எரிந்தன. அதோடு தீவுக்கப்பலிலிருந்து பெரும் சங்கிலிகள் வந்து விழுந்து இழுக்கத் தொடங்கியதால் கடத்தல் காரர்கள் பெரிதும் தடுமாறினார்கள். இந்நிலையில் அவர்களது மரக்கலங்களைச் சங்கிலிகளால் இழுத்த தீவுக்கப்பல் வாசிகள்

அவற்றுக்குத் தாவவும் தொடங்கினார்கள். அதையடுத்து மூர்க்கமான வாள் தாக்குதல் ஆரம்பமாயிற்று. விஜயனின் உபதலைவர்களும் தோழர்களும் தாங்கள் ஈடுபடுவது முதல் கடல்போர் என்பதாலும் சொர்ணத் தீவில் போர் பயிற்சியைப் பெற்றிருந்ததாலும் லகுவாகப் போரிட்டு கடத்தல் காரர்களை வெட்டிப்போட முடிந்தது. விஜயன் எதிர்பார்த்தது போலவே அந்த மரக்கலங்களில் கடத்தல்காரர்களின் தொகை அதிகமாக இல்லாததால் விஜயனின் வீரர்கள் அவர்களை துவம்சம் செய்த காரணத்தால் இரண்டு மரக்கலங்களிலிருந்தும் மரண ஓலங்கள் எழுந்தன. போர் தொடர்ந்தால் தாங்கள் அனைவரும் அழிக்கப்படுவோம் என்பதை உணர்ந்த கடத்தல்காரர்கள் சமாதானத் தாரைகளை ஊதினார்கள். ஆனால் விஜயனிடமிருந்து அடையாளம் எதுவும் கிடைக்காததால் தாக்குதல் தொடர்ந்தது- இந்நிலையில் கடத்தல் கூட்டத்தின் தலைவன் விஜயனின் வீரர்களிடம் மன்றாடவே உபதலைவர்கள் தாக்குதலை நிறுத்திவிட்டு அதை அறிவிக்கும் சங்கொலியை எழுப்ப விஜயனும் அதை அங்கீகரிக்கும் விதமாக இரண்டு விளக்குகளை ஆட்டச் செய்தான்.

உபதலைவர்கள் மாண்டுபோன கடத்தல்காரர்களின் சடலங்களை கடலில் எரிந்துவிட்டு உயிரோடிருந்தவர்களைப் பிடித்து அவர்கள் கையிலும் கால்களிலும் விலங்கிட்டு மரக்கலத்தில் கிடத்திவிட்டு 'யார் உங்கள் தலைவன்?'' என்று வினவியபோது தலைவன் வந்து சரணடைந்தான். அவனை அழைத்துக் கொண்டு தீவுக்கப்பலுக்கு வந்தார்கள்.

கடத்தல்காரர்களின் தலைவனைக் கண்ட விஜயன் ''உன் பெயர் என்ன?'' என்று வினவினான்.

''திலீபன்'' என்றான் தலைவன்.

''உன் மனைவியின் பெயர் என்ன?''

இதைக் கேட்டதும் வியந்துபோன திலீபன் ''உங்கள் கேள்வி வினோதமாக இருக்கிறது'' என்றான்.

''இருக்கட்டும். கேட்டதற்கு பதில்சொல்'' என்றான் விஜயன்.

''ஸ்ரீவிஜயா''

''மரக்கலங்களில் எத்தனை பேர் வந்தீர்கள்?''

''எண்பது பேர்''

''இறந்தது?''

''தெரியவில்லை''

''அறுபத்தைந்து பேர்'' என்றான் உதயணன்.

''நீங்கள் கடத்தல்காரர்களா?''

''ஆமாம்''

''விளக்கமாகச் சொல்''

''சாவகத்திலிருந்து பல பொருட்களை பிற நாடுகளுக்கு கடத்துவோம். அதேபோல் பிற நாடுகளிலிருந்தும் பல பொருட்களை இங்கே கடத்திவருவோம்''

''உங்களிடம் பொருட்களை வாங்குபவர்கள் இருப்பார்கள். விற்பவர்கள் இருக்கிறார்களா?''

''இருக்கிறார்கள். வேற்று நாட்டு வணிகர்களும் என் போன்றவர்களும் தங்கள் கடத்தல் பொருட்களை எங்களிடம் விற்க வருவார்கள்''

''அந்த விதத்தில் வங்க தேசத்திலிருந்து கர்ண பத்ரபங்கம் அடங்கிய பெட்டிகளை விற்க யாராவது உங்களிடம் வந்தார்களா?''

''இல்லை?''

திலீபனின் இந்த பதில் விஜயனுக்கு ஏமாற்றமளித்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''எங்கள் மரக்கலத்தை எதற்காக நீங்கள் தாக்க வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

''சிலநேரங்களில் தனியாக வரும் மரக்கலங்களைத் தாக்கி கொள்ளையடிப்பதும் உண்டு''

விஜயன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் உதயணனைப் பார்த்து ''உதயணா, இவனது சகாக்களை உயிரோடுவிட வேண்டாம். தலைகளை வெட்டி உடலோடு கடலில் வீசிவிடு.

இவனது தோலை உரித்து நம் கப்பலின் பாய்மரத்தில் கட்டிவிடு'' என்றான்.

இதைக் கேட்டதும் ''இது அநியாயம். முறையல்ல'' என்று அலறினான் திலீபன்.

''கள்ளக் கடத்தல் செய்வதும் கடற்கொள்ளையில் ஈடுபடுவதும் நியாயம் என்றால் இதுவும் நியாயம்தான்'' என்றான் விஜயன்.

''ஐயா, அவசரப் படாதீர்கள். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். அதற்குப் பிறகு என்ன முடிவை வேண்டுமானாலும் எடுங்கள்'' - என்று கெஞ்சினான் திலீபன்.

''இதோ பார் திலீபா, உன்னிடம் நான் கதை கேட்க வரவில்லை. அதோடு நீ பொய் சொல்கிறாய் என்பது தெரிந்த பின் உன்னோடு பேசுவதற்கும் நான் தயாராக இல்லை'' என்றான் விஜயன்.

''நான் பொய் எதுவும் சொல்லவில்லை''

''ஈவிரக்கமற்ற கடத்தல்காரர்களுக்கு பொய்க்கும் உண்மைக்கும் வித்தியாசம் தெரியுமா?''

''ஐயா, நீங்கள் நினைப்பதுபோல இப்போது நாங்கள் இல்லை. சோற்றுக்கே அல்லாடுகிறோம்''

''அதனால் தான் எங்கள் கப்பலைத் தாக்க வந்தீர்களா?''

''உண்மையிலேயே அதுதான் காரணம்''

''என்ன உளறுகிறாய்?''

''உளறவில்லை ஐயா. கடத்தல்காரர்களாக இருக்கும் நாங்கள் ஒரு வகையில் வணிகர்கள்தான். எங்களை நாடி வருபவர்களிடம் கூலி வாங்கிக் கொண்டு சரக்குகளை விற்றுத் தருவதே எங்கள் வேலை. அதைத்தான் ஒரு வருடகாலமாக ஓகோ என்று செய்து வந்தோம். மன்னரும் சரி அவரது கடற்படையும் சரி எங்களிடம் பயந்தகாலம் அது. ஆனால் இப்போது நாங்கள் அந்த நிலையில் இல்லை. தினசரி பிழைப்பிற்கே திண்டாடுகிறோம்''

''இது என்ன புதுக்கதை?''

''புதுக்கதை தான். இதற்கு முன் எங்கள் பழைய கதையைக் கொஞ்சம் கேளுங்கள்''

''சொல்''

''நாங்கள் பிறவியிலேயே கடத்தல்காரர்கள் அல்ல. அதோடு சாவகத்தைச் சேர்ந்தவர்களும் கிடையாது நாங்கள் பாலித் தீவைச் சேர்ந்த பழங்குடிகள். இரண்டு வருடங்களுக்கு முன்பு அங்கே பயங்கர பூகம்பம் ஏற்பட்டபோது நாங்கள் இங்கே குடிபெயர்ந்தோம். ஆனால் மன்னன் எங்களை ஏற்காமல் அடித்து விரட்டினான். பாலித்தீவுக்குத் திரும்பினோம். அங்கே போன சில நாட்களில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் இங்கே தஞ்சமடைந்தோம். அப்போதும் மன்னன் இரக்கமில்லாமல் எங்களை விரட்டியடித்தான். இதுபோல நான்கு முறை நடந்துவிட்டது. பாலித்தீவில் வாழமுடியாத நிலை. வேறு எங்கும் குடிபெயர முடியாது என்ற இக்கெட்டு. சாவகத்தைவிட்டால் வேறு வழியில்லை என்பதை உணர்ந்த நாங்கள் மன்னனுக்கு புத்திபுகட்ட நினைத்தோம். ஐந்தாவது முறை நாங்கள் அகதிகளாக வரவில்லை. சிறு சிறு குழுக்களாக வந்து சாவக மக்களோடு கலந்தோம். மன்னனுக்கு இது தெரியவில்லை. இப்படிக் குழுக்களாகப் பிரிந்த நாங்கள் ஆயுதங்களை திரட்டுவதற்காக சிறுசிறு காரியங்களைச் செய்தோம். நாங்கள் சாவகத்தில் இனி யாராக இருக்க வேண்டும் என்பது அப்போது முடிவாயிற்று. அப்போது எடுத்த முடிவில் தான் நாங்கள் கடத்தல் தொழிலுக்கு வந்தோம். அதிகாரிகளில் பலர், செல்வந்தர்களில் பலர், கடற்படையில் பலர் இப்படி பலபேர் தங்கள் திருட்டுச் சரக்குகளைத் திருட்டுத்தனமாக விற்க எங்கள் உதவியை நாடினர். நாங்கள் கூலியைப் பெற்றுக் கொண்டு கடத்தல் பொருட்களை விற்கத் தொடங்கினோம். அதற்கு எங்களுக்குச் சில படகுகளும் இரண்டு கப்பல்களும் தேவைப்பட்டன. அதற்கு கடற்படையினரே முன்வந்து பழுதான இரண்டு மரக்கலங்களையும் சில படகுகளையும் எங்களுக்கு விற்றனர். அவற்றை வாங்கிய நாங்கள் பழுது பார்த்து செப்பனிட்டோம். அதற்குப் பிறகு எங்கள் தொழில்

நன்றாக வளர்ந்து எங்களிடம் செல்வம் குவிய லாயிற்று. எனவே மன்னனுக்கும் கடற்படைக்கும் சவாலிட்டோம். ஆனால் மன்னன் முதல் பலரும் எங்கள் தயவை நாடிவந்தவர்களாதலால் அவர்களால் எங்களை அழிக்க முடியவில்லை. அழிக்க முயல்வது போல் முயலுவார்கள். ஆனால் நான் அவர்களுக்கு ஏதாவது பரிசுகளைக் கொடுத்து சரிகட்டி விடுவேன். இதுபோல நாடகங்கள் அடிக்கடி நடக்கும். இதுதான் இரண்டு மாதங்களுக்கு முன்புவரை இருந்த நிலை'' என்று சொல்லி பெருமூச்செறிந்தான் திலீபன்.

பிறகு அவனே தொடர்ந்து ''திடீரென இரண்டு மாதங்களுக்கு முன்னால் கடற்படையினர் எங்கள் இரண்டு கப்பல்களையும் களவாடிச் சென்றுவிட்டார்கள். அடிக்கடி மறைமுகத் தாக்குதலைத் செய்த மன்னனின் ராணுவ வீரர்கள் எங்களில் பலரைக் கொன்றதோடு எங்கள் செல்வங்களைச் சூறையாடினார்கள். உயிருக்குப் பயந்த நாங்கள் பல இடங்களில் ஓடி ஒளிந்தோம். சிதறுண்ட நிலையில் இருந்த நாங்கள் ரகசிய இடங்களில் சந்தித்துக் கொண்டோம். அதிகாரிகள் சிலரது குழந்தைகளை கடத்தி வைத்துக்கொண்டு மன்னனை மிரட்டினோம். எங்கள் கப்பல்கள் இரண்டை திருப்பிக் கேட்டோம். அதிகாரிகள் மன்னனிடம் மன்றாடினார்கள். சென்ற மாதம் இரண்டு மரக்கலங்களும் எங்களுக்குக் கிடைத்தன. ஐந்து குழந்தைகளில் இரண்டை மட்டும் விடுவித்து விட்டு மீதமுள்ள மூன்று குழந்தைகளையும் எனது சகாக்கள் பலரையும் மரக்கலங்களுக்கு அனுப்பி கடலில் திரியவிட்டோம். மன்னனிடம் நானே பேசினேன். எங்கள் மீதான தாக்குதலுக்கான காரணத்தையும் கேட்டேன்.

''காலம் காலமாக உங்களை இங்கே வாழ அனுமதிக்க முடியாது திலீபா. அப்படி அனுமதித்தால் பிற நாடுகள் எங்களைத் தூற்றும்'' என்றான் மன்னன்.

''இத்தனை காலமாக நீங்கள் நடந்து கொண்ட முறைக்கு பிற நாடுகள் தூற்றாதா?'' என்று கேட்டேன் நான்.

''தவறுகள் திருத்தப்பட்டபின் தவறுகளை யாரும் சுட்டிக் காட்டவோ தூற்றவோ முயலமாட்டார்கள்''

''அதற்காக நீங்கள் மேற்கொண்ட முறை எப்படி நியாயமாகும்? தர்மமாகும்''

''ஏன் ஆகாது? என்ன முறையை நீ எதிர்பார்க்கிறாய்?''

''நல்லமுறையில் எங்களை அணுகியிருந்தால் நாங்களாகவே விலகி விட்டிருப்போம்''

''விலக மாட்டீர்கள். ருசிகண்ட பூனைகள் தாமாக விலகாது. அதோடு உங்களைப் போன்ற களைப்பயிர்களை நாங்கள் வளர்த்தோம். ஆகவே அவற்றை நீக்க எந்த முறை சரியானது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்''

''ஐயா, நாங்கள் உங்கள் நாட்டில் பயிராக வளர்ந்து பலன்தரவே வந்தோம். எங்களைக் களைப் பயிராக மாற்றியது நீங்கள் தான்''

''என்ன சொல்கிறாய்?''

''நாங்கள் பாலித்தீவின் பூர்வக் குடிகள். அங்கே பூகம்பம் ஏற்பட்டதால் உங்கள் நாட்டில் தஞ்சம் அடைந்தோம். நீங்களோ இரக்கமில்லாமல் விரட்டினீர்கள். மீண்டும் மீண்டும் நாங்கள் வந்தபோதும் நீங்கள் கருணைகாட்டவில்லை. அதற்குப் பிறகு நாங்கள் இங்கே அகதிகளாக வராமல் அந்நியர்களாகவே வந்து உங்கள் நாட்டில் ஊடுறுவி கடத்தல்காரர்களாக மாறினோம். உங்களுக்கும் உங்கள் அதிகாரிகளுக்கும் கடற்படையினருக்கும் உதவினோம். அப்போதெல்லாம் இனித்த நாங்கள் இப்போது கசந்துபோய் விட்டோம். இல்லையா மன்னரே''

''மொத்தத்தில் நாங்கள் செய்த எல்லாத் தவறுகளும் இப்போது சரிசெய்யப்பட்டுவிட்டது. இது மன்னன் என்ற முறையில் எனது கடமை. அது போகட்டும். இதுவரை பொருட்களை கடத்தி வந்த நீ இப்போது மனிதஉயிர்களை கடத்த ஆரம்பித்து விட்டாய். அதுவும் குழந்தைகளை''

''ஐயா, மன்னருக்கு ஒரு நியாயம் இருந்தால் கடத்தல் காரனுக்கும் ஒரு நியாயம் இருக்காதா? கடத்தல் எங்கள் தொழில். அதைத்தான் நாங்கள் செய்கிறோம்''

''உன்னால் மீதமுள்ள மூன்று குழந்தைகளை விடுவிக்க முடியுமா முடியாதா?''

''முடியாது''

''உன் உயிர் போய்விடும்''

''உயிரைப் பற்றிய கவலை இருந்தால் உங்கள் முன் வந்திருக்க மாட்டேன். என் உயிர் இங்கே போனால் நடுக்கடலில் கப்பலில் உள்ள குழந்தைகளின் உயிர்போகும். அது மட்டுமல்ல''

''வேறு என்ன?''

''எனது சகாக்கள் பலர் மாறுவேடங்களில் இங்கே அலைகிறார்கள். இந்நேரம் யார் யாரைக் கடத்தியிருப்பார்களோ எனக்குத் தெரியாது. உங்கள் இனிய மகளை - ராஜகுமாரியைக் கூட கடத்தச் சொல்லியிருக்கிறேன். என்னைக் கொன்றால் இவர்களும் கொல்லப்படுவார்கள். இது தொடர்கதையாகத் தொடரும்''

மன்னன் சிறிது யோசித்துவிட்டு'' உன்தேவை என்ன?'' என்று கேட்டான்.

''என் மரக்கலங்களைக் கொடுத்துவிட்டீர்கள். என் செல்வங்களையும் கொடுத்து விடுங்கள். நாங்கள் பாலித் தீவுக்கே போய் விடுகிறோம்''

''மன்னன் இதற்கு ஒப்புக் கொண்டு செல்வங்களில் சிறிய பகுதியை முதலில் கொடுத்து மூன்று குழந்தைகளை மீட்டான். அதற்குப் பிறகு எதையும் தரவில்லை. அதே சமயம் திலீபனின் சகாக்கள் யாரையாவது கடத்தக்கூடும் என்ற பயத்தில் திலீபன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்தான். இதற்கிடையில் அரசியல் பிரமுகர் ஒருவர் காணாமல் போகவே அவரை திலீபன் தான் கடத்தியிருப்பான் என்று கருதிய மன்னன் கையைப் பிசைந்து கொண்டிருந்தான். அதேசமயம் கையில் இருந்த செல்வம் கரைந்து போய்விட்டதாலும் கடத்தலுக்கு சரக்குகள் வராததாலும் தினசரி வாழ்க்கைக்கே சிரமப்படும் நிலைக்கு வந்தான் திலீபன். அவனது சகாக்களும் குடும்பங்களும் கலங்கினார்கள். அந்தச் சமயத்தில் தீவுக் கப்பல் வரவே அதைக் கொள்ளையடிக்க முற்பட்டான் திலீபன்.

★★★

திலீபன் தனது கதையைக் கூறி முடித்துவிட்டு ''இப்போதாவது என்னை நம்புகிறீர்களா'' என்று கேட்டான்.

''எப்படி நம்புவது? முக்கியமான விஷயத்தை நீ சொல்லவில்லையே?''

''எதைச் சொல்கிறீர்கள்?''

''எங்கள் வங்கதேசத்து பொக்கிஷமான கர்ணபத்ர பங்கம் அடங்கிய ஆறு பெட்டிகள் உன்னிடம் வந்திருக்கின்றன. நீயோ இல்லை என்று பொய் சொல்கிறாய்?''

''இல்லை நான் சொல்வது உண்மை''

''நான் சாட்சியை வைத்துக் கொண்டு சொல்கிறேன்''

''சாட்சியா?''

''பொக்கிஷத்தை அனுப்பிய நபர் எங்களோடு இருக்கிறார்''

''யாரது?''

சிலநிமிடங்களில் ஸ்ரீவிஜயா அங்கு வரவழைக்கப்பட்டாள்.

சாட்சியின் காட்சியைக் கண்டு அரண்டான் திலீபன்.

## அத்தியாயம் அறுபத்து மூன்று

# சாவகம்

தனக்கு முன்னால் தன் மனைவி வந்து நின்றவுடன் அரண்டு போனான் திலீபன். ஒருகணம் அவனது மனத்தில் மலரும் நினைவுகள் வந்து சென்றன. சாவகத்தீவுக்கு வந்து சிறிது காலத்தில் ஒருமுறை கடத்தல் சரக்குகளோடு வந்த ஸ்ரீவிஜயாவைக் கண்ட நேரத்திலேயே காமம் கொண்ட திலீபன் அவளை உடனடியாக அனுபவித்துவிடத் துடித்தான். அவளோ அதற்குத் தயாராக இல்லை. அதேசமயம் தன்னை சொர்ணத்தீவின் மன்னன் அந்தப்புரத்தில் சேர்த்துக் கொள்ளத் துடிக்கிறான் என்பதும் அவளுக்கு நினைவுக்கு வந்தது. திலீபனின் செல்வாக்கு பற்றியும் அறிந்து கொண்டாள். தன்னை

அடையத்துடிக்கும் இருவரையும் சரியானபடி பயன்படுத்திக் கொண்டால் பணத்தைக் குவிக்கலாம் என்று அவளுக்குத் தோன்றியது. இருவரிடமும் காமப்பாவையாய் இருக்க அவளுக்குச் சம்மதமில்லை. யாரையாவது ஒருவரை மணந்து கொள்வதே சரி என்று நினைத்தாள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை சொர்ணத்தீவு மன்னனுக்கு ராணி இருந்தாளாதால் அவனை மணக்க முடியாதாகையால் திலீபனை மணந்து கணவனாக்கிக் கொண்டு சொர்ணத்தீவு மன்னனுக்கு ஆசைநாயகி விட்டால் நினைத்ததை சாதிக்கலாம் என்று நினைத்தாள்.

திலீபனுக்கோ அப்படிப்பட்ட வஞ்சக எண்ணங்கள் இல்லை. சாவக மன்னனை பழிவாங்கும் எண்ணம் காரணமாக தனது வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வதில் மட்டுமே முனைப்பாக இருந்தான். பெண்கள் விஷயத்தில் அவனுக்கு ஈடுபாடு இல்லாமல் இருந்தது. ஆனால் ஸ்ரீவிஜயாவைக் கண்டதும் எங்கிருந்தோ அந்த ஈடுபாடு அவனிடம் வந்து ஒட்டிக் கொண்டது. அந்த ஈடுபாடு முதலில் அவளது வாளிப்பான உடல் மீது வந்ததால் அவளை அனுபவிக்க மட்டும் ஆவலாய் இருந்தான். இச்சமயத்தில் அவள் அவனை மணக்கச் சம்மதித்ததால் அவள்மீது உடலால் மட்டுமின்றி உள்ளத்தாலும் ஒன்றிய திலீபன் மகிழ்ச்சியோடு அவளை மணந்து சந்தோஷ வாழ்க்கையைத் தொடங்கினான். அவனது நிலையும் உயர்ந்தது. மன்னனுக்குச் சவால் விடும் நிலைக்கு வந்தான். இந்த நிலையில் ஸ்ரீவிஜயாவுக்கும் அதுபோன்ற ஆசை உண்டாயிற்று. தான் சொர்ணபூமிக்குச் சென்றுவிட்டு வருவ்தாகச் சொல்லி சாவகத்திலிருந்து புறப்பட்ட ஸ்ரீவிஜயா சொர்ணபூமிக்கு வந்ததும் மன்னனின் ஆசைநாயகியாகி அவனைத் தன் வலைக்குள் போட்டுக் கொண்டு தரகர் பதவியைப் பெற்று திலீபனைப் போலவே தனி சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொண்டு கொள்ளைடித்து வந்தாள். ஓரிருமுறை திலீபன் நேரில் வந்தபோது அவனது உடல் பசியைப் போக்கி நிறைய பணத்தைக் கொடுத்து அனுப்பினாள். இந்த நிலையில் வங்கதேசத்து படைத்தலைவன் ராகுலன் பொக்கிஷங்களை விற்க வந்தபோது பேராசையால் தூண்டப்பட்ட அவள்

அவனைக் கொலை செய்துவிட்டு அவனது கப்பலிலேயே பொக்கிஷத்தை திலீபனுக்கு அனுப்பி வைத்தாள்.

தனது மஃனைவியை இப்படி நடுக்கடலில் கண்டு அரண்டு போன திலீபன் அவள் செழிப்பாக இருந்தாலும் கால்களில் விலங்கு போடப்பட்டிருந்ததைக் கண்டதும் அதற்குக் காரணம் புரியாமல் தவித்தான். ஸ்ரீவிஜயாவோ அவனைப் பார்த்த பிறகும் எந்தவிதமான உணர்ச்சியையும் காட்டவில்லை.

இருவரது உணர்வுகளைப் பொருட்படுத்தாமல் திலீபனை நோக்கிய விஜயன் ''இவளை மறந்திருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். எங்கள் நாட்டு பொக்கிஷப் பெட்டிகளை உன்னிடம் அனுப்பியதே இவள்தான்'' என்று கூறிவிட்டு ''சொல்'' என்றான் ஸ்ரீவிஜயாவிடம்.

''இவர் சொல்வது உண்மைதான். நான்தான் அவற்றை அனுப்பி வைத்தேன்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''இல்லவே இல்லை. ஒரு துரும்புகூட எனக்குக் கிடைக்கவில்லை'' என்றான் திலீபன்.

''இவள் அனுப்பிய மரக்கலமாவது வந்ததா?'' என்றான் விஜயன்.

''எதுவும் வரவில்லை'' என்று சொன்ன திலிபன் எதையோ எண்ணிக் கொண்டவனாய் ஸ்ரீவிஜயாவிடம் ''எப்போது அனுப்பி வைத்தாய்?'' என்று கேட்டான்.

''ஒரு மாதம் இருக்கும்''

திலீபன் விஜயாவைப் பார்த்து ''ஐயா, இவள் கூறியதைக் கேட்டீர்களா? ஒரு மாதத்திற்கு முன்பு அனுப்பினாளாம். நான் என் செல்வாக்கை இழந்து இரண்டு மாதங்களாகின்றன. இவள் அனுப்பிய மரக்கலமோ பொக்கிஷமோ என்னிடம் எப்படி வந்திருக்க முடியும்?'' என்று கேட்டான்.

''பிறகு வேறு எங்கே போயிற்று?'' - கேட்டான் விஜயன்.

''சந்தேகமே இல்லை. உங்கள் பொக்கிஷம் சாவக மன்னனிடம் போய்விட்டது'' என்று உறுதியாகச் சொன்னான் திலீபன்.

இதற்கிடையில் உபதலைவர்கள் தங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்து விஜயனிடம் வந்து தெரிவித்தார்கள். கப்பல்களில் உண்டான ரத்தக் கறைகளை துடைத்து சுத்தம் செய்து விட்டதாகச் சொன்ன உபதலைவன் நரசிம்மன் கடத்தல் காரர்களின் இரண்டு மரக்கலங்களின் அமைப்பைப் பற்றி எடுத்துக்கூறி ''அவற்றில் ஆயுதங்களோ பொறிகளோ எதுவும் இல்லை. நம் கலத்திலிருந்து சிலவற்றை அவைகளுக்கு மாற்றலாமா?'' என்று கேட்டான்.

''இப்போது எந்த மாற்றமும் தேவையில்லை. மூன்று மரக்கலங்களும் நடுக்கடலிலேயே சஞ்சரிக்கட்டும். விளக்குகளையும் ஏற்றுங்கள். திலீபனின் மரக்கலங்களை இயக்க இரண்டு உபதலைவர்களையும் துணைக்கு நான்கு தோழர்களையும் அனுப்புங்கள்'' என்று சொன்ன விஜயன் ''நம் தரப்பில் உயிர்ச்சேதம் உண்டா?'' என்று கேட்டபோது ''உயிர்ச்சேதம் எதுவும் இல்லை தலைவரே. ஒரே ஒரு தோழருக்கு மட்டும் காயம் ஏற்பட்டிருக்கிறது. வைத்தியர்கள் சிகிக்சையளித்திருக்கிறார்கள்'' என்றான் நரசிம்மன்.

உபதலைவர்கள், ஸ்ரீவிஜயா ஆகியோரை அங்கிருந்து அனுப்பி விட்டான் விஜயன். ஐந்தாவது தளத்தில் அப்போது அவனுடன் நவ வீரர்களும் திலீபனும் மட்டுமே இருந்தார்கள்'' நவ வீரர்களிடம் ''புரவிகள் பத்திரமாக இருக்கின்றனவா?'' என்று கேட்டான்.

''பிரச்சினையில்லை'' என்றார்கள் நவவீரர்கள்.

பிறகு யோசனையில் ஆழ்ந்த விஜயன் திலீபன் கூறிய விஷயங்களை அசைபோட்டான். திலீபன் கூறியவை உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. பொக்கிஷங்கள் அவனுக்குப் போய்ச் சேரவில்லை என்பதையும் அவனால் சந்தேகிக்க முடியவில்லை. ஆனால் அவனுக்குப் போகாத பொக்கிஷங்கள் மன்னனிடம் போய்விட்டதாக திலீபன் சொன்னதை அவனால் நம்ப முடியவில்லை.

எனவே அதை அவனிடமே கேட்டான். ''திலீபா, உன்னிடம் வந்து சேராத பொக்கிஷங்கள் மன்னனிடம் போய்ச்

சேர்ந்து விட்டதாக எப்படி உறுதியாகச் சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''ஐயா, நான் பலவீனமாகிவிட்ட நிலையில் எனக்கு அனுப்பப்பட்ட சரக்குகளை வேறு யாரும் அபகரிக்க வழியில்லை'' என்றான் திலீபன்.

''எப்படிச் சொல்கிறாய்?''

''நானிருக்கும் கிழக்குக் கடற்கரைக்கு ஒரு மரக்கலம் வரவேண்டுமென்றால் சாவகத்தின் கடல்படை துறைமுகத்தைக் கடந்து தான் வரவேண்டும். பொக்கிஷங்களுடன் வந்த வங்க தேசக் கப்பலும் அப்படித்தான் வந்திருக்க வேண்டும். நான் சேதாரப்பட்டிருந்ததால் கடற்படை அம்மரக்கலத்தை மடக்கியிருக்க வேண்டும்''

விஜயன் தனஞ்ஜெயனை அழைத்து ''தனஞ்ஜெயா, நாம் திலீபனின் இருப்பிடத்திற்கு வரும் வழியில் சாவகத்தின் கடற்படைத் துறைமுகத்தைக் கடந்தா வந்தோம்? என் கண்ணில் எதுவும் படவில்லையே?'' என்று கேட்டான்.

''நீங்கள் திலீபன் இருக்கும் கிழக்கு கடற்கரைக்குப் போகச் சொன்னபோது அசுவநாவிகரிடம் சாவகத்தீவின் அமைப்பு பற்றி கேட்டேன். திலீபனின் பகுதிக்குப் போகவேண்டும் என்றால் கடற்படை துறைமுகத்தைத் தாண்ட வேண்டும் என்றார். கடற்படையின் கண்களில் நாம் ஏன் படவேண்டும் என்று நடுக்கடலிலேயே கப்பலைத்திருப்பி கடற்படை அறியாத வண்ணம் தெற்கு கடற்கரைபகுதிக்கு வந்தேன்'' என்றான் தனஞ்ஜெயன்.

தன் சந்தேகம் தீர்ந்து விடவே தனஞ்ஜெயனை அனுப்பி விட்டு விஜயன் திலீபனிடம்-கேட்டான்.

''நீ முன்பு கூறிய தகவலின் படி மன்னரும் கடற்படையும் உன்னிடம் தனித்தனியாகப் பரிசுகளை பெற்று வந்திருக் கிறார்கள். அதிலிருந்து கடற்படை சுயேச்சையாக இயங்கி வந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன்''

''சுயேச்சையாக இயங்கவில்லை ஐயா. அவர்களுக்கும் பரிசுகளைப் பெற ஆசை இருந்ததால் அவர்கள் தனியாக

எங்களை மிரட்டி வந்தார்கள். ஆனால் கடற்படையின் நிலைமை இரண்டு மாதங்களுக்கு முன்னால் அடியோடு மாறிவிட்டது. கடற்படைக்குப் புதிய தளபதி வந்து விட்டான். கிரேக்க நாட்டவன். பெயர் டாரியஸ். மிகவும் திறமை வாய்ந்தவன் என்றும் நேர்மையானவன் என்பதும் அவனைப் பற்றிச் சொல்லப்படுகிறது. அவன் பதவியேற்ற பிறகுதான் உங்களது வங்க மரக்கலம் வந்திருக்க வேண்டும். நேர்மையான டாரியஸ் அதிலிருந்த பொக்கிஷங்களைக் கைப்பற்றி மன்னனுக்கு அனுப்பியிருப்பான்''

''நீ சொல்வது சரியாக இருந்தாலும் அவை ஊகங்கள்தான். ஊகங்களை நம்பி நான் செயல்பட முடியாது''

''ஐயா, தாங்கள் செய்யப் போவது என்ன?''

''எங்கள் நாட்டு பொக்கிஷம் சாவகநாட்டு மன்னனிடம் போயிருந்தால் அவனிடம் போரிட்டாவது அதை மீட்க வேண்டும். அது லேசான காரியமல்ல. ஆனாலும் அதைச் செய்ய வேண்டும் என்றால் பொக்கிஷம் அவனிடம்தான் இருக்கின்றன என்பது உறுதியாகத் தெரியவேண்டும்''

''அந்தப் பொறுப்பை என்னிடம் விடுங்கள். நான் உறுதிப் படுத்துகிறேன்''

''எப்படி உறுதிப்படுத்துவாய்?''

''கடந்த சில நாட்களாக மன்னனுக்கு வேண்டிய அரசியல் பிரமுகர் காணவில்லை. அவரை நான்தான் கடத்தி வைத்திருப்பதாக கடற்படையிடம் என்னை ஒப்படைத்துக் கொள்கிறேன். என்னை மன்னனிடம் கொண்டு போவார்கள். அப்போது நான் அவனிடமே பொக்கிஷத்தைப் பற்றிக் கேட்கிறேன். அவன் பொக்கிஷத்தை தருகிறானோ இல்லையோ அதைப்பற்றிய உண்மையாவது சொல்வான் இல்லையா? அதை அறிந்து வந்து உங்களிடம் சொல்கிறேன்''

''கடத்தல்காரனுக்கு இருக்கும் புத்திதான் உனக்கு இருக்கிறது. அதோடு நீ சொன்னதில் விவேகம் கொஞ்சம் கூட இல்லை. அரசியல் பிரமுகரை நீ கடத்தாத பட்சத்தில் நீ கடத்தி வைத்திருப்பதாகச் சொல்வது அறிவீனம். நீ அவ்வாறு

சொல்லும் பட்சத்தில் அவர் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் உன் நிலை என்னவாகும்? ஒருவேளை நீ செல்லும் வரை அவர் கண்டுபிடிக்கப்படவில்லை என்று வைத்துக் கொண்டாலும் கடற்படை தளபதி உன்னை மன்னனிடம் அனுப்புவான் என்று என்ன நிச்சயம்? அவனைப்பற்றி நீ கூறியது உண்மை என்றால் நிச்சயமாக அவள் உன்னை மன்னனிடம் அனுப்ப மாட்டான். கப்பலிலேயே உன்னை கட்டிவைத்து சித்ரவதை செய்வான். கடைசியில் நீ தேவையில்லாத உண்மைகளைக் கூடச் சொல்லும்படி இருக்கும். கடத்துவதும் பிணைக் கைதியாக வைப்பதும் எப்போதும் பயனளிக்காது. இந்தமுறை நீ சிக்கினால் உன்னை யாரும் உயிரோடு வைக்க மாட்டார்கள்'' என்று சொன்ன விஜயன் ''சாவகத்தின் போர்த் துறைமுகத்தைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்'' என்றான்.

''சாவகத்தீவிற்கு இயற்கை துறைமுகம் எதுவும் இல்லை. எனவே கரையோரத்தில் இருந்த மலையை வெட்டி இருபுறங்களிலும் வாயில்களைப் போல அமைத்திருக்கிறார்கள். அந்த இருபுறங்களிலும் உள்ள மலைகள் நன்றாகக் குடையப்பட்டு ஆழப்படுத்தப்பட்டு கடல்நீர் உள்ளே வருவதற்கும் வழி செய்யப்பட்டுள்ளன. அதில் போர் மரக்கலங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பக்கமும் பதினைந்து மரக்கலங்கள் இருப்பதாகக் கேள்வி. ஆக முப்பது மரக்கலங்களை மீறி எதிரிகள் யாரும் நுழையமுடியாது. நம்மிடம் இருப்பது மூன்று மரக்கலங்கள். அவற்றில் என்னுடைய இரண்டு மரக்கலங்கள் போர்க்கலங்கள் அல்ல. உங்கள் மரக்கலம் ஒன்றுதான் இருக்கிறது. இந்த ஒரே ஒரு மரக்கலம் முப்பது மரக்கலங்களைச் சமாளிக்க முடியாது. ஆனால் அவை இம்மரக்கலத்தை வினாடி நேரத்தில் அழிக்க முடியும்''

''சாவகத்திற்குள் நுழைய இது ஒன்றுதான் வழியா?''

''நாங்கள் வாழும் பகுதி வழியாக வரலாம். இப்போதைய நிலையில் அது முடியாது. அப்படியே வந்தாலும் கப்பலில் இருந்து கொண்டு எதையும் செய்யமுடியாது. கரையில் இறங்கி போர் செய்யவேண்டும். அந்த நிலைமை வரும்போது

மன்னரின் நிலப் போருக்குரிய ராணுவம் வரும். வந்தால் நாம் நிற்க முடியாது. இப்பகுதியை விட்டால் தீவின் வேறு எந்தப் பகுதியிலும் நுழையமுடியாது. செங்குத்தான மலைகளும் காடுகளும் தான் இருக்கின்றன. இதையெல்லாம் யோசித்துத் தான் நாங்கள் அவர்களோடு நேருக்கு நேர் மோதாமல் கொஞ்சம் கொஞ்சமாக நகருக்குள் ஊடுறுவி ஆயுதங்களைச் சேகரித்து பலரிடம் தொடர்பு வைத்து கள்ளக்கடத்தல் தொழிலைத் துவங்கினோம். நீங்களும் அதுபோல ஏதாவது சூழ்ச்சி செய்தால் தான் மன்னரைச் சந்திக்க முடியும். பொக்கிஷத்தைப் பற்றி அறியவும் மீட்கவும் முடியும்''

திலீபன் கூறியதிலிருந்து தனது கையறுநிலை தெளிவாகப் புரிந்தது விஜயனுக்கு.

மறுநாள் உபதலைவர்களிடம் இதுபற்றி தெரிவித்தபோது அவர்களுக்கும் இந்நிலை புரிந்ததால் அவர்கள் முகத்தில் ஈயாட வில்லை.

இதர உபதலைவர்களைவிட அசுவநாவிகர் சற்று அதிகமாக பயந்ததால் ''தலைவரே, சாவகம் விவகாரத்தில் நாம் மறுபரிசீலனை செய்வது நல்லது. நாகர்மலைத் தீவை விட்டு புறப்பட்டபோது நமக்கு பொக்கிஷத்தைவிட அதைக் களவாடிய ராகுலனைக் கண்டுபிடித்து தண்டிப்பது முக்கிய நோக்கமாக இருந்தது. சொர்ணத்தீவுக்கு வந்தபோது நாம் தண்டிக்க நினைத்த நபர் கொலைசெய்யப்பட்டு விட்ட விஷயம் தெரிந்தது. அப்போதே நாம் சாவகம் செல்வதை தவிர்த்திருக்க வேண்டும். ஆனால் பொக்கிஷமானது கடத்தல்காரனும் ஸ்ரீவிஜயாவின் கணவனுமான திலீபனுக்குப் போய்விட்டது என்பதை அறிந்ததும் அவனைத் தாக்கி அவனிடமிருந்தோ அல்லது அவன் மூலமாகவோ பொக்கிஷத்தை மீட்க நினைத்தோம். சாவகத்திற்கு வந்தபின் பொக்கிஷம் திலீபனுக்கு வந்து சேரவில்லை என்பதும் சாவக மன்னர் வசம் போயிருக்கலாம் என்பது தெரிந்துவிட்டது. மன்னரிடமிருந்து அதைப் பெற வேண்டுமானால் சாவகத்தின் கடற்படையுடன் மோதி வெற்றி பெற்றால்தான் முடியும். கடற்படையின் பலமோ முப்பது மரக்கலங்கள். நம்மிடம் இருப்பதோ மூன்று

இந்த நிலையில் அதாவது நிச்சயமாக வெற்றி பெறமுடியாது என்ற நிலையில் நாம் பொக்கிஷத்தைப் பெறுவதற்காக சிங்கத்தின் வாயில் தலையை நீட்ட வேண்டுமா? நம் கைவசம் உள்ள நிதி போதாதா? நாகதீபத்துக்குப் போக இந்த பொக்கிஷம் அவசியம் தானா?'' என்று கேட்டார்.

''அசுவநாவிகர் சொல்வது சரியாகத்தான் படுகிறது. நமக்கும் சாவக மன்னருக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை. இந்த நிலையில் எப்படி அவரிடம் போய் பொக்கிஷத்தைக் கோரமுடியும்? அதற்கு முன்னால் கடற்படையை எப்படி முறியடிப்பது?'' என்று கேட்டான் விதுரன். அதை ஆமோதித்தான் பகீரதன்

''கடல் வழி என்பது மரணவழி என்று தெரிகிறது. அங்கே போய் மரணமடைவதைவிட நாகர்மலைத் தீவு மற்றும் சொர்ணத்தீவு ஆகியவற்றில் நீங்கள் கையாண்ட தந்திரங்களை இங்கேயும் கையாண்டு பொக்கிஷத்தைக் கைப்பற்றுவது தான் சரியானது'' என்றான் உதயணன்.

வேறு யாரும் பேசவில்லை.

விஜயனே பேசத்தொடங்கி ''நாகர்மலைத் தீவில் நாம் சிக்கிக் கொண்டோம். அதிலிருந்து விடுபட போரிட முடியாது என்பதால் தான் தந்திரத்தைக் கையாண்டோம். அதேபோல சொர்ணத்தீவில் நமது சரக்குகளை விற்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஸ்ரீவிஜயாவிடம் சிக்கிக் கொள்ள நேர்ந்தது. இந்த இரண்டு இடங்களிலும் நமது கப்பல் பாதுகாப்பாக இருக்க வழி இருந்தது. நாகர்மலைத் தீவில் கப்பலை பழுது பார்த்தோம். சொர்ணத்தீவில் வணிகத் துறைமுகம் என்று தனியாக இருந்ததால் நமது தீவுக்கப்பல் பாதுகாப்பாக இருந்தது. ஸ்ரீவிஜயாவும் உதவினாள். சாவகத்தில் நிலைமை வேறு. நீங்கள் கூறுகிற தந்திரங்களைச் செய்து வெற்றி பெறும் வரை தீவுக்கப்பலை எங்கே நிறுத்துவது? திலீபன் கலங்களை என்ன செய்வது? நடுக்கடலிலேயே திரிய வைத்துக் கொண்டிருக்க முடியுமா?'' என்று கேட்டான்.

அப்போது திலீபன் குறுக்கிட்டு ''ஐயா, மரக்கலங்களை நிறுத்தி பாதுகாப்பதுதான் பிரச்சினை என்றால் அவற்றை

பாலித்தீவில் நிறுத்திக்கொண்டு சிலர் மட்டும் இங்கே வந்து பொக்கிஷத்தைக் கைப்பற்றலாம். நான் வேண்டுமானால் உதவுகிறேன்'' என்றான்.

''நல்ல யோசனை. அப்படியே செய்யலாம்'' என்றார்கள் உபதலைவர்கள்.

''நீ என்ன சொல்கிறாய் தனஞ்ஜெயா?'' என்று கேட்டான் விஜயன்.

''தலைவரே, நான் இதுபற்றி ஏற்கனவே டெமிட்ரியஸிடம் கேட்டபோது சாவகத்திற்கும் பாலித்தீவிற்கும் இடையே உள்ள தூரம் ஒருநாள் தூரம் என்று தெரிந்தது. அத்தனை தூரத்தில் நமது கப்பலைவிட்டு வைப்பது ஆபத்தானது. தந்திர வேலைகள் முடிந்து கப்பலை மீண்டும் இயக்க கணிசமான காலம் ஆகலாம். அதுவரை தீவுக்கப்பல் பாலித்தீவில் இருப்பது சரியாகப் படவில்லை. பாலித்தீவின் தற்போதைய நிலைமை நமக்குத் தெரியாது. அதோடு நமது கப்பல் அங்கிருப்பது தெரிந்தால் சாவகத்தின் கடற்படை வந்து அழித்துவிடும். கப்பல் அழிந்தபின் நாம் என்ன செய்யமுடியும்?'' என்றான் தனஞ்ஜெயன்.

''தனஞ்ஜெயன் சொல்வதில் உண்மையிருக்கிறது'' என்ற விஜயன் ''தந்திர வேலைகளில் நாம் இறங்கினால் அவை எப்போது முடியும்என்பதை நாம் முன்கூட்டியே நிர்ணயம் செய்ய முடியாது. அதிக நாட்கள் தேவைப்படலாம். அச்சமயத்தில் கப்பலுக்கு ஆபத்து வந்து விட்டால் எல்லாமே சிதைந்துவிடும். நம் லட்சியத்திற்கு தீவுக்கப்பல் தான் ஆதாரம். அதைக் காப்பாற்றாமல் எதையும் மேற்கொள்ள முடியாது. இதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்'' என்று உறுதியான குரலில் சொன்ன விஜயன் எல்லோரையும் பார்த்தான்.

எல்லோருமே அவன் என்ன சொல்கிறான் என்பதை அறிய ஆர்வமாக இருந்தார்கள்.

''தேவையான தகவல்களை பெறும் வரை நமது பயணங்கள் நீண்டு கொண்டு போவது தவறல்ல. தகவல்கள்

திட்டவட்டமாகத் தெரிந்து விட்டபின் ஒருநாள் தாமதம் செய்வதும் வீண்- என்னைப் பொறுத்தவரை சாவகத்தில் தந்திரங்களில் இறங்கி நாட்களை கடத்துவது விவேகமான காரியம் அல்ல. உங்களது பயம் நியாயமற்றது என்று நான் சொல்லவில்லை. அசுவநாவிகர் சொன்னது போல பொக்கிஷம் இருந்தால் தான் நாம் நாகதீபத்திற்குப் போகமுடியும் என்றும் நான் சொல்வதாக இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை எண்ணிப் பாருங்கள். இந்த பொக்கிஷத்தைப் பெற வங்கதேசத்தில் எத்தனை கஷ்டப்பட்டோம் என்பதை டெமிட்ரியஸைக் கேட்டுப் பாருங்கள். அது நமது உடமை. எத்தனை கை மாறியிருந்தாலும் அதுதான் நிலை. இதுவரை தெரியாதிருந்த அதன் இருப்பிடம் தற்போது தெரிந்துவிட்டது. இப்போது அதை விட்டுவிட்டுப் போவது சரியா? வீரர்களான நாம் சாகசங்களுக்குப் பயிலவேண்டுமே தவிர தயக்கங்களுக்கும் அச்சத்திற்கும் பயிலக்கூடாது. நாக தீபத்திற்குப் போய் ஒரு ராஜவம்சத்தை உருவாக்கப் போகிறவர்கள் நாம். சாவகத்தில் ஒரு சாகசத்தைச் செய்து காட்டிவிட்டு நாகதீபத்துக்குப் போவது நமக்குப் பெருமையில்லையா? சாவகக் கடற்படையை எப்படி முறியடிப்பது என்று நான் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு திட்டத்தைச் சொன்னான் விஜயன்.

உபதலைவர்கள் அசந்து போனார்கள்.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்து நான்கு

# சாவகப்போர்

**விஜயன்** திட்டத்தை அறிவித்ததுமே எல்லோரும் நினைத்தது ''இது நடக்குமா?''' என்பதுதான். மூன்று மரக்கலங்களை வைத்துக் கொண்டு முப்பது மரக்கலங்களோடு மோதுவது என்பது எண்ண அளவிலேயே ஏற்கமுடியாத அம்சமாக இருந்தது. ஆனால் விஜயனை நினைத்தபோது நடக்கலாமோ என்று தோன்றியது. அசுவநாவிகர், டெமிட்ரியஸ், தனஞ்ஜெயன் ஆகியோர் கடல் போர் பற்றி கேள்விப்பட்டிருந்தார்களாதலால் விஜயனின் திட்டம் வெற்றி

பெறுவதென்பது ஹெர்க்குலீஸின் சாதனையாகத்தான் அமையும் என்று நினைத்தார்கள். அதோடு விஜயன் கடல் போர்களுக்கு பிரசித்தமானவனல்ல. திலீபனை வெற்றி கொண்ட கடல்போர் சர்வசாதாரணமான ஒன்று. இந்த நிலையில் சாவகத்தின் மகத்தான கடற்படையுடன் விஜயன் மோத நினைப்பது சற்று அதீத நம்பிக்கைக்குரிய எண்ணமாகவே கருதினார்கள். ஆனாலும் வங்கதேசத்தில் புறப்பட்டதிலிருந்து விஜயனுக்கு வெற்றியே வந்த காரணத்தால் அந்த வெற்றி ராசி சாவகத்திலும் தொடரும் என்று ஒரு சதவிகிதம் நம்பினார்கள். விஜயனோ தன் பெயரிலேயே வெற்றி இருக்கிறதென்றும் இப்போரில் தன்னால் வெற்றி பெற முடியாமல் போனால் விஜயன் என்ற தன் பெயரை கைவிட்டு விடுவதாகவும் சொன்னான். தோழர்கள் அவனது திட்டத்தைக் கேட்டு மலைத்தாலும் உபதலைவர்களால் மாற்று திட்டம் எதுவும் கூற முடியவில்லை என்பதை அறிந்தபோது மறுபேச்சு பேசாமல் விஜயன் கூறிய ஏற்பாடுகளில் விடுவிடுவென இறங்கினார்கள். அன்று நள்ளிரவு சாவகத்தின் துறைமுகத்தைத் தாக்குவது என்று முடிவாயிருந்தது.

இதற்கிடையில் திலீபனையும் ஸ்ரீவிஜயாவையும் அழைத்தான் விஜயன். அவளைப் பார்த்து ''ஸ்ரீவிஜயா, நீ வரவேண்டிய இடம் வந்து விட்டது. இதற்குமேல் உன்னை இங்கு விலங்கிட்டு சிறைவைக்க நான் தயாராக இல்லை. உங்களுக்கு படகொன்று தருகிறேன். கணவனோடு படகில் சென்று உங்கள் இருப்பிடத்திற்குப் போய்ச் சேருங்கள்'' என்றான்.

''அரசகுமாரரே, தங்களிடம் எனது கடைசி விருப்பம் என்ன என்பதைச் சொல்லவந்தேன். அதைக் கேட்பதற்குள் வேலை வந்து விடவே நீங்கள் போய் விட்டீர்கள்'' என்றாள் ஸ்ரீவிஜயா.

''உன்னுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியவன் உன் கணவனேயன்றி நானல்ல''

''என் கடைசி விருப்பம் என் கணவரோடு சேரக்கூடாது என்று இருக்கும்போது அதை அவர் எப்படி நிறைவேற்ற முடியும்?''

''இதோ பார் ஸ்ரீவிஜயா! திலீபா! கடுமையான போர் என்னை எதிர்நோக்கி இருக்கிறது. அதில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். இதற்கிடையில் உங்கள் அர்த்தமற்ற விருப்பங்களை நான் ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது''

திலீபன் பேசமுற்பட்டு ''எங்களைப் பற்றிய கவலையை விடுங்கள் ஐயா. போர் முடியும் வரை அவள் சிறையிலிருக்கட்டும். என்னை தயவுசெய்து போருக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் திட்டப்படி முதலில் நுழையும் என் மரக்கலங்கள் இரண்டை நானும் என் சகாக்களும் இயக்குகிறோம். எங்களுக்கு அது பிராயச்சித்தமாக இருக்கும்'' என்றான்.

''திலீபா, உங்களை பலியாடுகளாக அனுப்பி சந்தோஷப்படுவோம் என்பது தான் உன் எண்ணமா?''

''இல்லை ஐயா, இப்போரைப் பொறுத்தவரை எல்லோருமே பலியாடுகள் தான். யாருக்கு என்ன ஆகும் என்று சொல்லமுடியாது. ஆகவே என் கோரிக்கையை ஏற்று கொள்ளுங்கள்''

சிறிதுநேரம் யோசித்தான் விஜயன். பிறகு திலீபனுக்கு சம்மதம் அளித்து உபதலைவர்களிடமும் தெரிவித்தான். ஸ்ரீவிஜயா பழையபடி அறையில் வைத்துப் பூட்டப்பட்டாள். விஜயன் உட்பட கப்பலில் இருந்த அனைவரும் பூரணகவசம் அணிந்தார்கள். விஜயன் திட்டமிட்டபடி அனைவருமே 'எரிநட்சத்திர' உருண்டைகளைத் தயார்படுத்திக் கொண்டார்கள். திலீபனின் மரக்கலங்கள் இரண்டிலும் திலீபனும் அவனது சகாக்களும் இருந்தார்கள். அவையிரண்டும் இருபக்கங்களில் வர நடுவில் தீவுக்கப்பல் கம்பீரமாகத் தவழ்ந்தது. எந்த மரக்கலத்திலும் விளக்குகள் ஏற்றப்படவில்லை. ஏறக்குறைய நள்ளிரவுக்குச் சற்று முன்னால் சாவகத்தின் துறைமுகம் கண்ணில் தெரியும்படியான இடத்திற்கு வந்து சேர்ந்தன அந்த மூன்று மரக்கலங்கள். வானம் இருண்டு கிடந்ததால் தன்னைச் சுற்றிலும் அடர்ந்த இருள் சூழ்ந்து கிடந்ததை உணர்ந்த விஜயன் துறைமுகத்தைக் கவனித்தான்.

ஜாவா என்று தற்போது வழங்கப்படும் சாவகத்தின் துறைமுக வாயில் போதுமான அகலம் இருந்தது. இரு பக்கங்களிலும் மலைகள் குடையப்பட்டிருந்ததால் குடையப்பட்ட மலை விளிம்புகள் துறைமுகத்திற்குத் தோரணவாயில் போல் அமைந்திருந்தன. குடையப்பட்ட மலைகளுக்குள் இரு புறங்களிலும் சாவக மரக்கலங்கள் அணிவகுத்திருந்ததற்கு அடையாளமாக விளக்கொளிகள் நட்சத்திரங்களைப் போல காட்சியளித்தது. துறைமுகத்திற்கு அப்பால் சாவகத்தீவு பிசாசு போல விரிந்து கிடந்தது. அக்காலத்தில் கிழக்குக் கடலில் இருந்த பெரிய தீவுகள் மற்றும் நகரங்கள் கோட்டைகளால் பாதுகாக்கப்படவில்லை. திறந்த புத்தகங்களாகவே இருந்தன. பெரும்பாலான நகரங்கள் மலைகளாலும் அடர்ந்த காடுகளாலும் இயற்கையாக பாதுகாக்கப்பட்டிருந்தன. கடற்படை ஒன்றே காவல் அரணாக அமைந்தது. சாவகத்தின் நிலையும் அவ்வாறாகவே இருந்தது. கடற்கரை பகுதியில் கலங்கரை விளக்கம் எதுவும் இல்லை. மாறாக ஊர்ப்பகுதியில் தெரிந்த சிவப்பு விளக்கொன்று ''ஜாக்கிரதை! எங்கள் பக்கம் யாரும் வரவேண்டாம்'' என்று எச்சரிப்பது போல விளங்கியது.

அந்த நிலையைக் கண்ட விஜயன் தனஞ்ஜெயனை நோக்கி ''சாதாரணமாக போர்த் துறைமுகத்தின் வாயில் மரக்கலங்களால் சுவரைப்போல அடைபட்டிருக்கும். அவற்றை அழித்த பின்பே எதிரிகள் உள்ளே நுழையமுடியும். இங்கே அதுபோன்ற மரக்கலச் சுவர் எதுவும் காணவில்லையே ஏன்?'' என்று கேட்டான்.

''துறைமுகத்தின் இரண்டு பக்கங்களிலும் தான் பதினைந்து பதினைந்தாக முப்பது மரக்கலங்கள் உள்ளதே அவை போதாதா? துறைமுகத்தில் நுழையும் எதிரிகளை அழிக்க இவற்றால் முடியாதா? அதோடு நம்மிடம் இருப்பது மூன்று கப்பல்கள் தானே?'' என்றான் தனஞ்ஜெயன்.

''எல்லோருமே அவநம்பிக்கையில் ஒற்றுமையாய் இருக்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று சொல்லிக்கொண்ட விஜயன் ஏதோ பேசமுற்பட்டபோது ''நமது பொக்கிஷங்கள் சாவகத்தின் மன்னரிடம்தான் இருக்கின்றன என்று உறுதி செய்துவிட்டீர்களா?'' என்று கேட்டார் அசுவநாவிகர்.

''முதலில் சந்தேகமாக இருந்தாலும் பிறகு திலீபன் சொன்னது தான் சரியாக இருக்கும் என்று தோன்றியது. நமது மரக்கலம் கடற்படையின் கண்ணில் படாமல் திலீபன் இருந்த கிழக்கு கடற்கரையை அடைந்தது. ஸ்ரீவிஜயா அனுப்பிய கப்பல் அவ்வாறின்றி கடற்படையின் கண்ணில் சிக்கியிருக்க வேண்டும். பழைய கப்பல் படை தளபதியாக இருந்திருந்தால் அம்மரக்கலத்தில் இருந்த பொக்கிஷத்தைக் கவரவும் திலீபனிடம்பேரம் பேசவும் முயன்றிருப்பான். ஆனால் புதிய தளபதியான டாரியஸ் நேர்மையானவனாதலால் பொக்கிஷத்தைக் கைப்பற்றி மன்னனிடம் அனுப்பியிருப்பான். அதை மன்னனிடமிருந்து பெற நாம் தூது அனுப்ப முடியாது. போர் ஒன்றுதான் வழி'' என்று கூறிய விஜயன் ''சரி சரி, துறைமுகம் நெருங்கிவிட்டது. வானம் இருண்டு கிடப்பது நமக்கு அனுகூலம். கடலின் பேரலைகள் துறைமுகத்திற்குள் வேகமாக நுழைந்து பின்வாங்குவதால் நாம் துடுப்புகளைத் துழாவாமல் நுழையவேண்டும். மற்றவை நான் சொன்னபடி'' என்று கூறிவிட்டு சப்பையான குரல் கொடுக்கும் கொம்பை ஊதியதும் மூன்று மரக்கலங்களும் தயாராகின.

அதுவரை தீவுக்கப்பலின் இருபக்கங்களில் வந்து கொண்டிருந்த திலீபனின் இரண்டு மரக்கலங்களும் ஒரே பக்கமாய் ஒன்றின் பின் ஒன்றாக வந்து துறைமுகத்தின் இடது புறத்தில் நுழைந்தன. நுழைந்த சிறிது நேரத்திலேயே அவற்றில் பொறுத்தப்பட்டிருந்த கரடிகை யந்திரங்கள் இயக்கப்பட்டதால் காதுகளை செவிடாக்கும் ஒலி எழுந்தது. அதேசமயம் தீவுக்கப்பல் துறைமுகத்தின் வலதுபுறத்தில் நுழைந்தது அதிலிருந்த வீரர்கள் நாகர்மலைத் தீவில் கைப்பற்றிய எரிநட்சத்திர உருண்டைகளை (பாஸ்பரஸைப் போன்ற பொருள்) கொளுத்தி சாவகக் கப்பல்கள் மீது சரமாரியாக வீசினார்கள். எரிநட்ச்த்திர உருண்டைகள் அம்மரக்கலங்களில் கண்டபடி விழுந்து அவற்றில் தீயை உண்டாக்கியதோடு வெகு வேகமாகப் பரவச் செய்ததால் சிலநிமிடங்களிலேயே துறைமுகத்தின் வலதுபுற மலைக்குகையில் திரண்டிருந்த மரக்கலங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்ததால் ஒரு ஊரே பற்றி எரிவது போல் பெரும் தீ உண்டாகியது. அந்த திடீர்

தீயினால் மாண்டவர்களின் மரண ஓலம் அப்பகுதியில் எழுந்தது. இப்படி சில நிமிடங்களிலேயே பதினைந்து மரக்கலங்களும் நகரவும் முடியாமல் பற்றி எரிந்ததைக் கண்ட விஜயனின் வீரர்கள் அவனது போர்த்திட்டத்தின் முதற்பகுதி வெற்றி பெற்றதைக் கண்டு குதூகலித்தார்கள்.

இதேசமயம் இடதுபுறத்தில் நுழைந்த திலீபனின் இரண்டு மரக்கலங்களும் காதுகளைச் செவிடாக்கும் ஒலிகளை எழுப்பிக் கொண்டு நரிநட்சத்திர உருண்டைகளை கொளுத்தி சாவக மரக்கலங்கள் மீது வீசின. ஆனால் அம்மரக்கலங்களில் சொற்பமானவர்களே இருந்ததால் தீவுக்கப்பலைப் போல பெரும் சேதத்தை உண்டாக்க முடியவில்லை. இரண்டு மரக்கலங்கள் தீப்பற்றிக் கொண்டன. சில நிமிடங்களில் உண்டான அதிர்ச்சியாலும் கரடிகை யந்திரங்கள் எழுப்பிய ஒலியாலும் குழம்பிப்போன சாவகக் கப்பல்கள் சற்றே சுதாரித்து திலீபனின் மரக்கலங்களை நோக்கி வந்தபோது ஏற்கனவே விஜயன் திட்டமிட்டிருந்தபடி அம்மரக்கலங்களின் அடிப்பாகத்தை திலீபனின் சகாக்களே பிளந்து விட்டபடியால் அந்த இரண்டு மரக்கலங்களும் மூழ்கத் தொடங்கின. அவற்றில் இருந்த திலீபனின் ஆட்கள் கடலில் குதித்தார்கள். இப்படி திலீபனின் இரண்டு மரக்கலங்களும் துறைமுகத்திற்குள் மூழ்கிவிட்டதால் பாதை அடைபட்டது. கரடிகை ஒலியும் கப்பலோடு கடலில் கரைந்தது. இதனால் சாவகக் கப்பல்கள் முன்னேற முடியாமல் தத்தளித்தன.

இந்த நிலையை ஏற்கனவே தன் திட்டத்தில் விஜயன் விளக்கியிருந்தானாதலால் அந்தச் சந்தர்ப்பம் உண்டானதுமே எரிநட்சத்திர உருண்டைகளை துறைமுகத்தின் இடதுபுறம் தடுமாறிக் கொண்டிருந்த சாவகக் கப்பல்கள் மீது எறியச் செய்தான். அதையடுத்து எரியம்புகளும் தீவாளிகளும் வீசப்பட்டன. இதனால் இடதுபுறத்தில் இருந்த சாவகக் கப்பல்கள் பல தீப்பற்றி எரியலாயின.

நம்பமுடியாத இந்தத் திருப்பத்தை தன் மரக்கலத்திலிருந்து கண்ட சாவக கடற்படைத் தளபதி டாரியஸ் பெரிதும் திகைப்படைந்தான். கிரேக்க நாட்டு கடலோடியும் பலகடற் போர்களில் பங்கு பெற்றுவனுமான அவனுக்கு தற்போதைய

நிலை அதிர்ச்சியான அதிசயமாக இருந்தது. பெரிய அளவில் தாக்குதல் நடத்துவதற்கு முன்பாகவே துறைமுகத்தின் வலது பக்கமிருந்த பதினைந்து போர்க்கப்பல்களும் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்ததை அவனது கண்கள் பார்த்துப் பார்த்து விரிந்தன. தானிருந்த இடது பக்கத்திலும் ஏழெட்டு மரக்கலங்கள் பற்றி எரிந்ததால் மீதமிருந்த கப்பல்களை காப்பாற்றும் நோக்கத்துடன் கொம்பொன்றை ஊதினான். அதையடுத்து ஏழுமரக்கலங்கள் துறைமுகத்தைவிட்டு வெளியேற முயன்றன. துறைமுகத்தைவிட்டு வெளியேறி விட்டால் தீவுக்கப்பலை துறைமுகத்திற்குள் சிறைசெய்து விடலாம் என்று கணக்கிட்டான் டாரியஸ்.

ஆனால் விஜயன் அதற்கு இடமளிக்கவில்லை. பேரலைகள் எழுந்த நேரத்தில் துடுப்பை துழாவச் செய்து துறைமுகத்தை விட்டு தனது கப்பலை வெளியேறச் செய்த அவன் பேரலைகள் மீண்டும் திரும்பியபோது துறைமுகத்தை நோக்கி துடுப்பைப் போடச் செய்தான். அலைகளின் வேகத்தில் இயங்கிய அவனது கப்பல் டாரியஸின் மரக்கலத்தோடு மோதியது. தீவுக்கப்பலின் கீழ்ப்புறம் இருந்த இரும்புச் சலாகைகள் வெளிப்பட்டு டாரியஸின் மரக்கலத்தின் அடிப்பாகத்தை பிளந்தது. அலைகளின் வேகமும் தீவுக்கப்பலின் எடையும் சேர்ந்து சலாகைகளுக்குப் பலமளித்ததால் டாரியஸின் மரக்கலம் பெரும் சத்தத்துடன் பிளந்து நீரில் மூழ்கலாயிற்று. அதனால் அக்கப்பலுக்குப் பின்னால் இருந்த மரக்கலங்களால் முன்னேற முடியவில்லை. ஒரு பக்கம் டாரியஸின் மரக்கலம் மூழ்கிய தாலும் மறுபக்கம் திலீபனின் இரண்டு மரக்கலங்கள் மூழ்கிக் கிடந்ததாலும் சாவகக் கடற்படையின் ஆறு மரக்கலங்கள் முன்னேற முடியாமல் தவித்தன.

மூழ்கிய மரக்கலத்திலிருந்து மீண்டு வந்து தவித்துக் கொண்டிருந்த ஆறு மரக்கலங்களில் ஒன்றுக்கு வந்து சேர்ந்த டாரியஸ் தன் கப்பல்கள் சிறைபட்டு விட்டதை உணர்ந்தான். ஆனாலும் முயற்சியைக் கைவிடாமல் ஆறு மரக்கலங்களி லிருந்தும் தீவாளிகளையும் எரிவாளிகளையும் வீசச் செய்தான் தீவுக்கப்பலின் மீது. இதற்கிடையில் டாரியஸ் கப்பலை மூழ்கடித்து வழியை அடைத்துவிட்ட தீவுக்கப்பல் பின்னோக்கி

நகர்ந்து பழையபடி துறைமுகத்தின் வலதுபுறத்தில் மீண்டும் நுழைந்தது. முன்னேற முடியாமல் சிக்கிக் கொண்ட சாவகக் கப்பல்கள் மீது எரிநட்சத்திர உருண்டைகள் வீசப்பட்டன. விற்பொறிகள் அம்புகளை எய்தன. தாக்குதல்கள் இரண்டு பக்கங்களிலிருந்தும் நடைபெற்றாலும் தீவுக்கப்பலிலிருந்து வெளிப்பட்ட எரிநட்சத்திர உருண்டைகளின் தீவிரம் அதிகமாக இருந்ததால் சிறைப்பட்டுக் கிடந்த ஆறு மரக்கலங்களும் பற்றி எரிந்தன. அவற்றில் இருந்த வீரர்களும் எரிந்து அலறினார்கள். இதைத் தொடரவிட்டால் வெறும் சாம்பல் தான் மிஞ்சும் என்பதை உணர்ந்து கொண்ட கடற்படைத் தளபதி டாரியஸ் சமாதானத்தாரைகளை ஊதியதால் விஜயனும் எரிநட்சத்திர உருண்டைகளை வீசுவதை நிறுத்தும்படி உத்திரவிட்டான். எரிந்து கொண்டிருந்த கப்பல்களில் மிஞ்சியவர்கள் தீயை அணைப்பதில் ஈடுபட்டார்கள்.

அதேசமயம் விஜயன் நவவீரர்களை அழைத்து சாவகத்தின் கடற்படை தளபதியை உடனடியாகத் தன்னிடம் வந்து சரணடையும்படியும் தாமதித்தால் மீதமுள்ள மரக்கலங்களும் கொளுத்தப்படும் என்று அறிவிக்கச் செய்தான்.

தீவுக்கப்பல் தலைவனைச் சந்திக்கும் ஆவலில் இருந்த டாரியஸ் நவவீரர்களிடமிருந்து அறிவிப்பு எழுந்ததுமே தன் வீரர்களிடம் கூறிவிட்டு விரைவாகவே தீவுக்கப்பலுக்கு வந்தான். அங்கே உதயணன் டெமிட்ரியஸ், அசுவநாவிகர் முதலானவர்களோடு ஐந்தாவது தளத்தில் அமர்ந்திருந்தான் விஜயன். தளங்கள் முழுவதும் விளக்குகள் ஏற்றப்பட்டு தீவுக்கப்பலானது பிரகாசமான ஜலதீபம் போல மின்னியது.

விஜயனிடம் அழைத்துவரப்பட்டத் தளபதி தீவுக்கப்பலின் பிரம்மாண்டத்தைக் கண்டு வியந்தான். ஆனாலும் அந்த ஒரு கப்பல் தனது கடற்படையை நிர்மூலமாக்கியவிதம் அவனுக்குள் பொறாமையை உண்டாக்கியது. அதை மறைத்துக் கொண்டு விஜயனுக்கு முன்னால் வந்து அங்கு போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்த தளபதி ''இப்படிப்பட்ட கடற்போரை நான் கண்டதில்லை'' என்று தனது பாராட்டை வெளிப்படையாகவே தெரிவித்தான்.

விஜயனோ அப்பாராட்டால் மூழ்கி விடாமல் ''இதோ பார் டாரியஸ், சம்பிரதாய பேச்சுக்களுக்கும் உபசரிப்புகளுக்கும் எனக்கு நேரமும் இல்லை. அவற்றை நான் விரும்பவும் இல்லை. கேட்பதற்கு மட்டும் பதில் சொல். சொர்ணத் தீவிலிருந்து வங்கதேசத்து கப்பலில் அனுப்பப்பட்ட எங்கள் பொக்கிஷப் பெட்டிகள் எங்கே இருக்கின்றன? உன்னிடமா அல்லது மன்னரிடமா?'' என்று கேட்டான்.

தனது பாராட்டைக்கூட அங்கீகரிக்காமல் குற்றவாளியை மிரட்டுவது போல் விஜயன் பேசியதை சகிக்க முடியாத கடற்படைத் தளபதி ''மிரட்டும் வேலை என்னிடம் வேண்டாம்'' என்றான் கோபமாக.

விஜயன் சுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு அங்கே உபதலைவர்களோடு நின்றிருந்த திலீபனிடம் ''திலீபா, டாரியஸை கப்பலின் பாய்மரத்தண்டில் தலைகீழாகக் கட்டி தோலை உரித்துவிடு'' என்று கூறிவிட்டு உதயணனிடம் ''உதயணா, நம் தோழர்களிடம் எரிநட்சத்திர உருண்டைகளை மீதமிருக்கும் சாவகக் கப்பல்கள் மீது எரிந்து கொளுத்தச் சொல்'' என்றான்.

இதைக் கேட்டதும் ''வேண்டாம். வேண்டாம். ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட நாசத்திற்கு மன்னரிடம் நான் பதில் சொல்லியாக வேண்டும். இந்நிலையில் மீதமுள்ளவைகளையும் அழிக்க வேண்டாம். நீங்கள் சம்பிரதாய பேச்சுக்களை விரும்பா விட்டாலும் நியாயமான விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும்'' என்றான் டாரியஸ்.

''என்ன நியாயத்தைச் சொல்லப்போகிறாய்?'' என்று கேட்டான் விஜயன் கறாரான குரலில்.

''எங்கள் பிராந்தியத்தில் அத்துமீறி நுழைந்த வங்கக் கப்பலை சிறைசெய்வது என் கடமை. அதில் உள்ள மனிதர்களையும் பொருட்களையும் எங்கள் வசப்படுத்துவதும் எங்கள் உரிமை'' என்றான் தளபதி.

''எங்களுக்கு எங்கள் பொக்கிஷத்தை மீட்பதும் கடமை தானே? அதற்கு எங்களுக்குரிய உரிமையை யார் மறுக்கமுடியும்?'' என்று கேட்டான் விஜயன்.

''உங்கள் உரிமையை வெளிப்படுத்த எங்கள் படை முழுவதையுமே ஏறக்குறைய அழித்திருக்கிறீர்கள். இது எப்படி நியாயமாகும்?''

''நிலவுகிற நிலைமைக்கு ஏற்பத்தான் நியாயம் இருக்கமுடியும். உங்களிடம் முப்பது போர்க்கப்பல்கள் இருந்தன. என்னிடம் இருந்ததோ ஒரே மரக்கலம். இந்த நிலையில் என் நடவடிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நான் தான் முடிவு செய்யவேண்டும். அதைத்தான் செய்தேன். மாறாக நான் தூதுவனாக உள்ளே வர நினைத்தால் என்ன நடந்திருக்கும்? அழைத்து வைத்துப் பேசுவீர்களா? உங்கள் கடற்பகுதியில் அத்துமீறி எங்கள் கப்பல் நுழைந்து விட்டதாகச் சொல்லி இக்கப்பலைச் சிறைபிடிப்பீர்கள் அல்லது அழிப்பீர்கள்? அப்படிச் சிறைப்பட்டு அழிவதைவிட போரிட்டு அழிந்தால் பரவாயில்லை என்று நினைத்து போரில் இறங்கினேன். உங்கள் கைகளை யாரும் கட்டிப் போட வில்லை. நீங்கள் எங்களை வென்றிருக்கலாம் அல்லவா?''

தளபதி உடனடியாக இதற்கு பதில் சொல்ல முடியாமல் தடுமாறினான்.

விஜயனே, பேச்சைத் தொடர்ந்து ''ஒரு கப்பலை வைத்துக் கொண்டு உங்கள் மகத்தான கடற்படையை எதிர்கொள்ள நான் முன்வந்தேன் என்றால் அதற்கு முட்டாள்தனமா காரணமாக இருக்கமுடியும்? எங்கள் உயிரைவிட எங்கள் நாட்டு பொக்கிஷத்தைப் பெரிதாக எண்ணியது தான் காரணம். இந்த பொக்கிஷம் எங்கள் மரக்கலத்திலிருந்து துரோகிகளால் களவாடப்பட்டது. பிறகு அந்தத் துரோகிகளிடமிருந்து சொர்ணபூமியில் திலீபனின் மனைவியால் பறிக்கப்பட்டது. பின் அவள் மூலம் இங்கேயுள்ள - நீங்களும் மன்னரும் வளர்த்து விட்ட கடத்தல் காரர்களுக்கு அனுப்பப்பட்டது. ஆகவே அதை மீட்க நான் கடத்தல்காரர்களைத்தான் தாக்கினேன். அதற்கு இதோ நிற்கும் திலீபனே சாட்சி. பொக்கிஷத்தை அவன் கைப்பற்றியிருந்தால் எங்கள் வழிமுறை வேறாக இருந்திருக்கும். மாறாக அது உங்கள் வசம் வந்து விட்டதால் உங்கள் படையோடு மோத வேண்டியதாயிற்று. இப்போது சொல். எங்கே எங்கள் பொக்கிஷம்?'' என்று கேட்டான்.

''கைப்பற்றிய உடனே அதை மன்னரிடம் சேர்த்துவிட்டேன்''

''அப்படியானால் மன்னரை உடனடியாக இங்கே வரச்சொல்''

''இப்போதா?''

''ஆமாம்''

''நாம் போய் மன்னரைச் சந்திக்கலாமே?''

''முட்டாள் தனம் எனக்குப் பிடிக்காது டாரியஸ்''

''மன்னரைச் சந்திக்க அச்சமா?''

''அச்சம் யாருக்கு என்று இன்னுமா நீ உணரவில்லை? வீரத்தைக் காட்டுவதற்கும் முட்டாள்தனமாக நடந்து கொள்வதற்கும் வித்தியாசம் உண்டு. கடல் போரில் காட்டியது வீரம். நீ வழிகாட்டுவது முட்டாள்தனம்'' என்றான் விஜயன்.

அதேசமயம் கடற்கரைப் பகுதியில் பெரும் ஆரவாரம் எழுந்தது. விளக்கொளியானது திடீரென்று அங்கே உண்டாயிற்று. வேட்டுக்களும் கொம்புகளும் ஒலித்தன.

''மன்னர் வந்து விட்டார்'' என்றான் டாரியஸ்.

அவன் குரலில் அச்சம் தெரிந்தது.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்தைந்து

# உதயணனின் ஆசை

கடற்கரை ஆரவாரத்திற்குக் காரணம் சாவக மன்னரின் வரவுதான் என்று ஒருவித அச்சத்துடன் கடற்படைத் தளபதி தெரிவித்ததும் கடற்கரைப் பகுதியை நோக்கினான் விஜயன். மன்னன் புரவியில்வர அவனைச் சுற்றி பெருங்கூட்டம் ஒன்று வந்து கொண்டிருந்தது. அக்கூட்டம் நூற்றுக்கணக்கில் இருக்கலாம் என்றும் தெரிந்தது. கடற்படை சொற்ப நேரத்தில் சுடுகாடாகிப்போன விஷயம் மன்னனுக்குத் தெரிந்து அந்த அவலத்தைக் காண அவனே நேரில் வந்திருக்க வேண்டும் என்று

நினைத்த விஜயன் கடற்படைத் தளபதியை பார்த்து ''டாரியஸ், மன்னரை மட்டும் நமது மரக்கலத்திற்கு அழைத்துவா. உன்னையும் அவ்ரையும் தவிர யார் வந்தாலும் அழிக்கப் படுவார்கள். மீதமிருக்கும் கப்பல்களும் எரிக்கப்படும்'' என்று கூறி டாரியஸை படகில் அனுப்பி வைத்தான். அவன் கடற்கரைக்கு வருவதை அறிவிக்க கொம்பொன்றும் நான்கு முறை ஊதப்பட்டது.

சில நிமிடங்களிலேயே கடற்கரையைச் சென்றடைந்த டாரியஸுக்கும் மன்னனுக்கும் சிறிதுநேரம் வாக்குவாதம் நடந்ததை தீவுக்கப்பலிலிருந்த விஜயனும் மற்றவர்களும் மௌனமாகக் கவனித்தார்கள். அரை நாழிகை கழித்து மன்னனும் தளபதியும் ஒரு படகில் புறப்பட்டதையும் அவர்களால் பார்க்க முடிந்தது.

தீவுக்கப்பலில் நூலேணி மூலம் ஏறிவந்த சாவக மன்னனை மங்கல வாத்தியங்கள் முழங்க வரவேற்று உபசரித்தான் விஜயன். சாவகமன்னன் விஜயனோடு உடனடியாகப் பேசாமல் தளத்தில் இருந்தபடி சுற்றிலும் பார்த்தான். கடற்கரையைவிட கப்பல் தளத்திலிருந்து பார்த்தபோது கடற்படையின் நாசம் நன்றாகத் தெரிந்தது. மன்னனின் கண்களில் வியப்பும் கோபமும் மாறி மாறி வெளிப்பட்டது. ஐம்பது வருடங்களுக்கு மேலாக யாராலும் தொடமுடியாத அரணாக இருந்த மகத்தான கடற்படை தற்போது திடீரென அழிக்கப்பட்டது அவனை உறுத்தியதென்றால் அந்த அழிவு ஒரே ஒரு மரக்கலத்தால் உண்டாக்கப்பட்டவிதமோ அவனை ஜீரணிக்க முடியாமல் வாட்டியது. சாவகத்தைத்தேடி ஐம்பது ஆண்டுகளாக எந்த எதிரியும் வராததால் கடற்படைக்கு வேலையில்லாமல் போயிருந்தது. அதன் காரணமாகவும் எதிரி இனி எவன் வரப்போகிறான் என்ற எண்ணம் காரணமாகவும் சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டிய தனது கடற்படை சர்வ அலட்சியமாக இருந்து விட்டதால்தான் இப்பேரழிவு உண்டாகியிருக்க வேண்டும் என்று நினைத்தான் மன்னன். அதோடு இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை பல்வேறு சூழல் தளபதிகள் இருந்த போதெல்லாம் வராதச் சரிவு நேர்மையும்

திறமையும் கொண்ட டாரியஸ் வந்த இரண்டே மாதங்களில் வந்து சேர்ந்ததைக் கண்டபோது நிச்சயமாக இது சாவகத்தின் துரதிஷ்டம்தான் என்று கருதினான். கடத்தல்காரர்களின் முன்னணி காரணமாகச் சாவகத்திற்கு உண்டாகியிருந்த கெட்டப் பெயரை விலக்கும் முயற்சியில் வெற்றி பெற்றுக் கொண்டிருந்தான் மன்னன். இந்த நேரத்தில் போய் கடற்படை இப்படியொரு தோல்வியைத் தழுவியது அண்டை நாடுகளுக் கிடையில் பெருத்த அவமானத்தை உண்டாக்கிவிடும் என்பதை உணர்ந்தபோது அவனது முகம் சுருங்கியது. பாரத நாட்டு வீரம் பற்றியும் அந்நாட்டு மன்னர்களின் ஆற்றல் பற்றியும் அவன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் அதை நேரில் கண்டபோது கோபமே உண்டாயிற்று அவனிடம். சாவகத்தின் முக்கியமான ஒரே அரண் எரிந்து போய்விட்டதால் அதைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் ஒருபுறமும் அதற்கு உண்டாகக் கூடிய செலவு மறுபுறமும் அவனை மருட்டின.

விஜயனுக்காகத் திரும்பிய மன்னன் ''வங்கதேசத்து மன்னனே! விஜயபாகு! நீ இங்கே உண்டாக்கியிருக்கும் சேதம் மிக அதிகம். அதேசமயம் உன்னை அழிக்க இப்போது எங்களால் இயலாது. ஆனால் ஒன்று நிச்சயம். உன் செயலுக்கு நிச்சயமாக ஒரு நாள் பழிவாங்கியே தீருவோம்'' என்றான் அச்சமற்ற குரலில்.

''மன்னரின் சூளுரை பாராட்டிற்குரியது. உங்களது சவாலை ஏற்க நான் எப்போதும் தயாராக இருப்பேன்'' என்றான் விஜயன்.

இதற்கிடையில் மன்னனின் ஆணைப்படி படகுகளில் வந்த ஆறு பொக்கிஷப் பெட்டிகள் விஜயனுக்கு முன்னால் கொண்டு வந்து வைக்கப்பட்டதும் ''இதோ உன் பொக்கிஷப் பெட்டிகள்'' என்றான் மன்னன்.

''டெமிட்ரியஸ், பெட்டிகளைத் திறந்து எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்'' என்றான் விஜயன்.

டெமிட்ரியஸும் எல்லா பெட்டிகளையும் திறந்து பார்த்து சோதனை செய்துவிட்டு ''சரியாக இருக்கிறது தலைவரே'' என்றான்.

விஜயன் சாவக மன்னரைப் பார்த்து ''மன்னவா, நான் இந்தத் தாக்குதலை இந்த பொக்கிஷப் பெட்டிகளுக்காகத் தொடங்கப் போவதாகச் சொன்னபோது எல்லோரும் பயந்தார்கள். அந்த பயத்தை சாகசத்தால் முறியடிக்க வேண்டும் என்று நினைத்தேன். இந்த பொக்கிஷத்தின் மதிப்பு உங்களுக்குத் தெரிந்திருக்கும். இதைக் கொண்டு ஒரு நாட்டையே உருவாக்க முடியும். எனது உபதலைவர்களோ இதைத் தேவையில்லை என்று நினைத்தார்கள். பொக்கிஷத்தின் மதிப்பை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்று நினைத்தேன். இந்த இரண்டு காரணங்களால்தான் கடற்படையோடு மோதினேன். அழித்தேன். மற்றபடி உங்கள் மீதோ உங்கள் நாட்டின் மீதோ எனக்கு வெறுப்பும் இல்லை. பகையும் இல்லை. எனக்கு மறுப்பு எதுவுமில்லை. ஆனால் இப்போது நாம் நண்பர்களாகப் பிரிவதையே நான் விரும்புகிறேன். துரோகத்தால் களவாடப்பட்ட பொக்கிஷத்தை நான் பார்த்துவிட்டேன். என் தோழர்களும் பார்த்துவிட்டார்கள். அதுபோதும் எனக்கு. இந்த பொக்கிஷத்தில் பாதியை உங்களுக்குத் தருகிறேன். எந்த பொக்கிஷம் காரணமாக உங்கள் கடற்படை அழிந்ததோ அந்தப் படையை இதே பொக்கிஷத்தைக் கொண்டு நீங்கள் உருவாக்கிக் கொள்ளுங்கள். இது பிச்சையல்ல. நண்பனின் அன்பு. இதை நீங்கள் மறுக்கக்கூடாது'' என்றான்.

''பொக்கிஷத்தைக் கொண்டு கப்பல்களை உருவாக்கி விடலாம். இறந்தவர்களை மீட்க முடியுமா?''- கேட்டான் சாவக மன்னன்.

''போரில் மீட்க முடியாதது உயிர்களைத்தான். இதற்கு யாரும் விதிவிலக்கல்ல'' என்றான் விஜயன்.

மன்னனின் முகத்தில் லேசாகப் புன்னகை வெளிப்பட்டது.

''என்னிடம் இருந்தவற்றை எனக்கே தந்து அதை அன்பு என்று கூறுவது கேலிக்குரியதாக இல்லையா?''

''இல்லை. இப்பொக்கிஷம் எங்கள் நாட்டைச் சேர்ந்தது. தங்கள் படையால் கவரப்பட்டது. இதைப் பயன்படுத்தும் போது உங்களுக்குள் உறுத்தல்கள் வரலாம். ஆனால் இப்போது வருமா?'' என்று கேட்டான் விஜயன்.

இதைக்கேட்டு இடியெனச் சிரித்த சாவக மன்னன் ''பாரத நாட்டுக்காரர்கள் பேச்சிலும் வல்லவர்கள்'' என்று கூறி விஜயனை அணைத்துக் கொண்டான்.

இதையடுத்து விஜயனும் சாவக மன்னனும் நண்பர்களாகி விட்டதால் விஜயனையும் தோழர்களையும் இரண்டு நாட்களாவது தங்கியிருக்கும்படிக் கேட்டுக் கொண்டான் மன்னன். தோழர்களும் நிலப்பகுதியில் சுதந்திரமாக உலவப் பிரியப்பட்டார்கள். அதோடு மரக்கலத்தில் நீரும் உணவும் சேமிக்க வேண்டியிருந்தது. எனவே விஜயன் சம்மதித்தான். எல்லா ஏற்பாடுகளும் முடிந்து தீவுக்கப்பல் சாவகத்தை விட்டுப் புறப்பட ஐந்து நாட்கள் ஆகிவிட்டன. தீவுக்கப்பலைப் பொறுத்தவரை மூன்று தோழர்கள் மட்டுமே காயமடைந் திருந்தார்களாதலால் வைத்தியர்கள் அவர்களுக்குச் சிகிச்சை யளிக்கலானார்கள்.

தீவுக்கப்பலில் ஏறுவதற்கு முன் கடல் போரில் ஈடுபட்டு உயிர் பிழைத்த திலீபனின் சகாக்கள், திலீபன் மற்றும் ஸ்ரீவிஜயா ஆகியோரைக் கூட்டிய விஜயன் அவர்களது விருப்பத்தைக் கேட்டபோது சகாக்கள் சாவகத் தீவிலேயே இருந்து விடுவதாகத் தெரிவித்தார்கள். அவர்களுக்கு சில பொற்காசுகளை அளித்து விடுவித்த விஜயன் திலீபனையும் ஸ்ரீவிஜயாவையும் அவ்வாறே தீவில் தங்கி வாழ்க்கையைத் தொடரும்படிச் சொன்னபோது இருவருமே மறுத்தார்கள்.

''ஐயா, சாவகத்தில் எனக்கு எதுவும் கிடையாது. சரிந்து போன கடத்தலை உயிர்ப்பித்து கடத்தல்காரர்களாகவே தொடர்ந்து வாழ நான் விரும்பவில்லை. மனம் திருந்தி வாழவும் உங்களிடம் பணியாற்றவுமே விரும்புகிறேன். எனவே உங்களுடன் என்னை அழைத்துச் செல்லுங்கள்'' என்றான் திலீபன்.

''ஒழுக்கம் கெட்டவர்களை உடன் வைத்துக் கொள்வ தென்பது மடியில் நெருப்பை எடுத்துக் கட்டிக் கொள்வதைப் போன்றது. நீயும் ஸ்ரீவிஜயாவும் எப்படிப் பட்டவர்கள் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. எப்போது வேண்டு

மானாலும் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய உங்கள் இருவரையும் எப்படி என் பக்கத்தில் வைத்துக்கொள்ள முடியும்?'' என்று கேட்டான் விஜயன்.

''ஐயா, நான் ஒன்று சொன்னால் நீங்கள் தவறாக எண்ண மாட்டீர்களே?''

''சொல்''

''உங்களுடன் இருந்தவர்கள் ஸ்ரீவிஜயாவுக்கு ஆதரவளித்து உங்களுடன் ஒத்துழைக்க மறுத்தார்களே அதற்குப் பெயர் என்ன? ஒழுக்கக்கேடுதானே?''

''அதனால்?''

''ஒழுக்கக்கேடு என்பது பிறவிக் குணமல்ல ஐயா. அது யாருக்கும் வரும். எப்போதும் வரும். அதற்குச் சந்தர்ப்பமே முக்கியமானது. நண்பர்களாக இருந்தவர்களிடம் ஒழுக்கக்கேடு வருவதும் ஒழுக்கக்கேடு உடையவர்கள் நண்பர்களாக மாறுவதும் வியப்பிற்குரிய விஷயங்களா?''

''சாதுர்யமான பேச்சுதான். ஆனால் இதுபோன்ற பேச்சை வஞ்சகர்களும் பயன்படுத்துவதுண்டு'' என்று சொன்ன விஜயன் ''உங்கள் இருவரையும் இப்போதைக்கு மரக்கலத்தில் அனுமதிக்கிறேன். அதில் தொடர்வது என்பது உங்கள் நடத்தையைப் பொறுத்தது'' என்றான்

அதற்குப் பிறகு அவர்கள் இருவருடன் தீவுக்கப்பல் புறப்பட்டது. கப்பலின் பயணம் குறித்து உபதலைவர்களை கூட்டி விவாதித்தான் விஜயன்.

தனஞ்ஜெயன் பேசமுற்பட்டு ''தலைவரே, இனி நமது இலக்கு நாகதீபம் தான். அதற்கு வந்த வழியாகவே பயணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நமக்குத் தெற்கே சாவகக் கடலைத் தாண்டினால் இந்து மகா சமுத்திரத்தின் ஆழமான கடல்பகுதி வருகிறது. அங்கிருந்து வடமேற்கில் பயணம் செய்தால் நாகர்மலைத் தீவுகளை அணுகாமல் அவற்றுக்குத் தெற்கே பயணம் செய்து நாக தீபத்தை அடையலாம்'' என்று சொல்லி சீலையொன்றையும் காட்டினான்.

அதில் அவன் சொன்ன பயணப் பாதை தெளிவாக வரையப்பட்டிருந்தது. அதை அனைவரும் ஊன்றி கவனித்தார்கள்.

''நேராக மூக்கைத் தொட்டிருக்க வேண்டும். ராகுலனால் சுற்றிக் கொண்டு மூக்கைத் தொடும்படி ஆகிவிட்டது. எப்படி பார்த்தாலும் வங்கதேசத்திற்கும் நாக தீபத்திற்கும் உள்ள தூரத்தைப் போல நான்கு மடங்கு தூரத்திற்கு நமது பயணம் நீண்டு விட்டது'' என்று சொன்ன விஜயன் ''இந்த வழியின் மூலம் பயணத்தை தொடர்ந்தால் நாகதீபத்தை அடைய எவ்வளவு காலமாகலாம்?'' என்று கேட்டான்.

தனஞ்ஜெயன் ஏதோ கணக்குகளைப் போட்டு ''மூன்று மாதங்கள் ஆகலாம்'' என்றான்.

''நம்மிடம் இருக்கும் உணவுப் பொருட்களும் தண்ணீரும் போதுமா?''

''தண்ணீர் தேவைப்படலாம். அதைச் சேரிக்க ஏதாவது தீவில் ஒதுங்க வேண்டும்''

''உன் வரைபடத்தில் அப்படி ஏதாவது இருக்கிறதா?''

இதைக்கேட்டதும் தனஞ்ஜெயன் வரைபடத்தைக் காட்டி ''இதைப் பாருங்கள் தலைவரே. நாம் இங்கிருந்து செல்லும் கடல்பகுதியில் மலையடுக்குகள் நிரம்ப உள்ளன. அதனால் தீவுப்பகுதிகளுக்கு குறைவிருக்காது. வரைபடத்தின்படி கோகோஸ் தீவு இருப்பதைப் பார்க்க முடிகிறது. அங்கே எது இல்லையென்றாலும் தண்ணீருக்குப் பஞ்சமிருக்க முடியாது'' என்றான்.

விஜயன் உட்பட அனைவரும் ஓரளவிற்கு திருப்தியடைந்தார்கள்.

தனஞ்ஜெயனும் சாவகத்தீவில் வாங்கிய அடிமைகளும் எத்தனைத் திறமையானவர்கள் என்பதை வெளிப்படுத்திய காரணத்தால் முதல் மாத பயணம் எந்தவிதமான இடையூறுமின்றி நடந்தது. பயணிகள் எல்லோரும் ஒழுங்கு கட்டுப்பாடுகளை மீறாமலும் சுவாதீனமாகவும் நிம்மதியாகவும் நடந்து கொண்டார்கள்.

இந்த நிலையில் திடீரென ஒருநாள் திலீபன் பின் மண்டையில் பலமாகத் தாக்கப்பட்டு கொலையுண்டு கிடந்தான். விஷயம் விஜயனுக்குத் தெரிவிக்கப்பட்டபோது நேரில் வந்து பார்த்த அவன் ஸ்ரீவிஜயாவைப் பார்த்தான். தன் கணவன் இறந்துவிட்ட வருத்தம் அவள் முகத்தில் இல்லை. அது அவளது மனஉறுதியைக் காட்டுவதாகவே நினைத்தான் விஜயன். பிறகு அவளது சம்மதத்துடன் திலீபனின் உடலை கடலில் எரிந்துவிட்டு இரத்தக் கறைகளை சுத்தம் செய்யும்படிக் கட்டளையிட்டான்.

அன்று முழுவதும் இதைப் பற்றியச் சிந்தனையிலேயே இருந்தான். தனது கடைசி விருப்பம் என்று ஸ்ரீவிஜயா கூறியபோது அதை திலீபனிடம் கூறும்படிச் சொல்லியிருந்தான் விஜயன். அவளோ திலீபனோடு மீண்டும் வாழமுடியாது என்பது விருப்பமாக இருக்கும்போது அவனிடம் எப்படிச் சொல்ல முடியும் என்று கேட்டிருந்தாள். அதை தற்போது நினைவூட்டியபோது ஸ்ரீவிஜயா தான் திலீபனைக் கொன்றிருக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு. திலீபனைக் கொல்ல வேறு யாருக்கும் காரணம் இல்லை என்பதால் ஸ்ரீவிஜயாவை அழைத்தான் விஜயன்.

''உண்மையைச் சொல் ஸ்ரீவிஜயா. திலீபனைக் கொன்றது நீ தானே?''

''இல்லை அரசகுமாரரே. நான் கொல்லவில்லை''

''இதோபார். திலீபன் இறந்தது குறித்து இங்கே யாருக்கும் வருத்தம் கிடையாது. நீ உண்மையை ஒப்புக் கொண்டால் அதோடு பிரச்சினை முடிந்துவிடும்''

''நிச்சயமாக நான் கொலை செய்யவில்லை ஐயா''

''திலீபனை வெறுத்தவள் நீ. அவனோடு வாழ விரும்பவில்லை என்று சொன்னவள் நீ. உன் விருப்பத்திற்கு மாறாக அவன் உன்னோடு வந்துவிட்டான். அது பிடிக்காமல் நீ அவனைக் கொன்றுவிட்டாய். இதுதான் என் சந்தேகம்''

''உங்கள் சந்தேகம் சரிதான் ஐயா. ஆனால் அவரை நான் கொல்லவில்லை. சத்தியம் வேண்டுமானாலும் செய்கிறேன்''

''உன் சத்தியத்தை நம்பமுடியாத நிலையில் நானிருக்கிறேன் ஸ்ரீவிஜயா. உன்னைச் சித்திரவதை செய்யும் நிலைக்கு என்னை ஆளாக்காதே.''

''என்னை நீங்கள் நம்பாதது எனது துரதிஷ்டம்தான். அதற்காக கொலை செய்ததாகப் பொய் சொல்ல முடியாது ஐயா''

இந்நிலையில் குறுக்கிட்ட உதயணன் ''தலைவரே, ஸ்ரீவிஜயாவை என்னிடம் விடுங்கள். நான் உண்மையை அறிந்து சொல்கிறேன்'' என்றான்.

''வேண்டாம். இவளுக்கு நான்கு நாட்கள் அவகாசம் கொடுக்கிறேன். அவளே ஒரு முடிவுக்கு வரட்டும்'' என்று கூறிய விஜயன் ஸ்ரீவிஜயாவை அனுப்பிவிட்டு நவ வீரர்களிடம் ''இவளுக்கும் இவளது கணவனுக்கும் என்ன பணிகள் ஒதுக்கப்பட்டன? என்று கேட்டான்.

''திலீபனுக்கு துடுப்பு போடும் அடிமைகளை கண்காணிக்கும் பணி தரப்பட்டது. ஸ்ரீவிஜயாவுக்கு உணவு பங்கிடும் பிரிவில் பணி தரப்பட்டது.

''இருவரும் ஒரே அறையில் தங்கினார்களா?''

''கணவன் மனைவி என்பதால் ஒரே அறையில் தங்குவதற்கு அனுமதித்தார் அசுவநாவிகர் அது சரிதானே?''

''சரிதான். அசுவநாவிகர் குடும்பஸ்தர். உணர்வுப் பூர்வமாக அவர்களைச் சேர்த்திருக்கிறார். அதில் பிரச்சினையில்லை'' என்று சொன்ன விஜயன் ''ஸ்ரீவிஜயாவை யாரும் கண்காணிக்க வேண்டாம். அவள் இருக்கும்படி இருக்கட்டும். கொலையுண்டவன் அவளது கணவன். நமக்குத் தேவையில்லாதவன். அவளுக்கும் தேவையில்லாதவன். அவன் இறந்தது நல்லது. அதை யாரும் பிரச்சினையாக்க வேண்டாம்'' என்றான்.

''பிறகு ஏன் அவளுக்கு நான்கு நாள் அவகாசம் அளித்தீர்கள்?''

''அதனால் ஒன்றும் பாதகமில்லை'' என்றான் விஜயன்.

அவனே ஸ்ரீவிஜயாவை கண்காணிக்க வேண்டாம் என்று கூறிவிட்டதால் ஒருவனைத் தவிர யாரும் பொருட்படுத்த வில்லை. தங்கள் வேலைகளில் ஈடுபட்டார்கள்.

உதயணனுக்கு மட்டும் உறுத்தவே விஜயனிடம் வந்து ''தலைவரே, நீங்கள் செய்வது நியாயமா? திலீபனைக் கொன்றது யார் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டாமா?'' என்று கேட்டான்.

''நமக்கு வேண்டாதவன் விலகிவிட்டான். அதை எதற்காகக் கிளறவேண்டும்? நமக்கு இப்போது இந்தப் பிரச்சினைகள் தேவையில்லை'' என்றான் உதயணன்.

''நம்மவரில் யாராவது கொலையுண்டிருந்தாலும் இப்படித்தான் விட்டு விடுவீர்களா?''

''நடக்காததைப் பற்றிய பேச்சு எதற்கு?''

''தலைவரே, கொலைகாரன் கண்டுபிடிக்கப்படாவிட்டால் மறுபடியும் கொலைகள் நடைபெறலாம்''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம். போய் வா''

உதயணனால் மேற்கொண்டு கேள்வி கேட்க முடியாததால் அதிருப்தியோடு அகன்றான்.

சொர்ணத்தீவில் விஜயனோடு முதன் முறையாக ஸ்ரீவிஜயாவைப் பார்த்தபோது வாழ்க்கையிலேயே முதன் முதலாக அவள்மீது ஆசை ஏற்பட்டது. அவளது அழகில் மிகவும் கிறங்கிப்போனான். தனது ஆசையை விஜயனிடமே சொல்லி நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நினைத்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி செயல்பாடுகள் அமையவில்லை. அதோடு மட்டுமின்றி ஸ்ரீவிஜயா விஜயனை விரும்புவதாகவும் தெரியவந்தது. இந்நிலையில் தனது ஆசைகளை வெளிப் படுத்தினால் பிரச்சினைகள்தான் வரும் என்பதால் தன் ஆசைகளை மறைத்துக்கொண்டான். ஸ்ரீவிஜயா மரக்கலத்திற்கு வந்தபோது அவளோடு பேசவும் பழகவும் உதயணனுக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆசையைக் காட்டமுடியாமலும் அழிக்க முடியாமலும் தவித்த அவன் ஸ்ரீவிஜயா தன்னை விஜயனின் மனைவியாக்கவும் நாகதீபத்தில் ராணியாக்கவும் உதவும்படி

கேட்டுக்கொண்டபோது அந்தப் பிரச்சினையில் தன்னைக் கதாநாயகனாக காட்டிக்கொள்ள விரும்பி தோழர்கள் எல்லோரது ஆதரவையும் திரட்டினான். விஜயனுக்கு எதிராகப் போர்க்கொடியும் பிடித்தான். ஆனால் விஜயனுக்கு முன்னால் அவன் கதாநாயகனாக முடியவில்லை. அவனது முயற்சி தோற்றது மட்டுமின்றி ஸ்ரீவிஜயாவின் உண்மையான சொரூபம் வெளிப்பட்டபோது அவனது மனம் வறண்டு போயிற்று. இந்த நிலையில் அவளது கணவனைத்தேடி சாவகத்திற்குப் புறப்பட்டது அவனுக்கு அறவே பிடிக்கவில்லை. சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தாலும் ஆகார விஷயங்களில் குறைவேதும் இல்லாததால் ஸ்ரீவிஜயா வாடிப்போகாமல் புஷ்டியாகவே இருந்ததால் அவளைத் தினமும் பார்த்துப் பார்த்து ஏங்கினான் உதயணன். கெட்டுப்போனவளை மணக்க முடியாது என்று அனைவருக்கும் முன்னால் விஜயனிடம் அவன் கூறியிருந்தானாதலால் அவனிடமே போய் தனது ஆசைகளை வெளிப்படுத்த அவனால் முடியவில்லை. இந்நிலையில் அவளது கணவன் திலீபனை கண்டுபிடித்தபோது அவனைக் காணவே உதயணனுக்குப் பிடிக்கவில்லை. அவனைக் கொன்றுவிட வேண்டும் என்று வெறி ஏற்பட்டது அவனிடம். இருப்பினும் அடக்கிக் கொண்டு அவளது அழகைப் பருகுவதை மட்டும் தொடர்ந்தான். பிறகு சாவகத்திலிருந்து மீண்ட நிலையில் திலீபனோடு வாழ தனக்கு விருப்பமில்லை என்று ஸ்ரீவிஜயா கூறியபோது இழந்துபோன சொர்க்கம் கிடைப்பது போல இனித்தது உதயணனுக்கு. இங்கேயும் விஜயன் சரிவர நடந்து கொள்ளாமல் திலீபனையும் தீவுக்கப்பலில் அனுமதித்து விட்டதாக எண்ணி விஜயனின் மீது கோபமடைந்தான். ''இந்தச் சண்டாளன் திலீபன் சாகும்வரை தன்னால் சாபல்யம் அடைய முடியாது'' என்று தீர்மானித்த அவன் சமயம் பார்த்து திலீபனை வேலை தீர்த்துவிடவும் விரும்பினான். ஆனால் விதி வேறு மாதிரி விளையாடியது. அவன் முயற்சி செய்யாமலேயே திலீபன் கொலை செய்யப்பட்டு விட்டதால் வாடிப்போன ஆசை துளிர்த்தது. ஸ்ரீவிஜயா திலீபனைக் கொல்லவில்லை என்று சொல்லியிருந்தாலும் உதயணனுக்கென்னவோ அவள் தான் செய்திருப்பாள் என்று தோன்றியது. எனவே அவளைத்தன் வசம்

வைத்துக்கொண்டு தன் ஆசையைத் தீர்த்துக்கொள்ள முற்பட்டு விஜயனிடம் கோரியபோது அதற்கு விஜயன் சம்மதிக்காததால் விஜயனை உள்ளுக்குள் சபித்துக் கொண்டான்.

ஆசையின் இயல்பு அடையும்வரை ஆட்டம்போடுவது தான். மறைவது போலவும் வாடுவது போலவும் அது அடங்கினாலும் அடையும் வரை மீண்டும் மீண்டும் துளிர்க்கும். விஜயன் மட்டும் ஸ்ரீவிஜயாவை மணந்திருந்தாலோ அல்லது சாவகத்தில் கைவிட்டுவிட்டு வந்திருந்தாலோ அவனது ஆசை துளிர்க்க முடியாமல் கருகியிருக்கும். அது நடக்காததால் தற்போது மீண்டும் துளிர்த்தது.

அவளிடம் பேசிப் பார்க்கலாம் என்று தீர்மானம் செய்து கொண்டு இரவு நேரம் வரை காத்திருந்தான். நள்ளிரவு நேரம் வந்து கப்பலும் அமைதியாகிவிட்ட நிலையில் பதுங்கிப் பதுங்கிச் சென்ற உதயணன் அவள் இருந்த கீழ்த்தளத்தின் அறையை அடைந்தான். கதவைத் தட்ட முயற்சித்தபோது உள்ளேயிருந்த இருவரது சிரிப்பொலி கேட்கவே அதிர்ந்து போனான் உதயணன்.

ஒருவரது குரல் ஸ்ரீவிஜயாவுடையது.

இன்னொருவரது குரல்?

◈◈◈

## அத்தியாயம் அறுபத்தாறு

# ஸ்ரீவிஜயாவின் போக்கு

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? ஆச்சரியமாக இருக்கிறதா?''

''இல்லை. ஆச்சரியமாக இல்லை. பல ஆச்சரியங்களை நான் பார்த்துவிட்டேன்''

''பிறகென்ன?''

''விசித்திரமாக இருக்கிறது. விநோதமாக இருக்கிறது''

''எது?''-

''சம்பிரதாயத்திற்காகத் திலீபனை மணந்தேன். செல்வத்திற்கும் செல்வாக்கிற்காகவும் சொர்ணபூமி மன்னரின் ஆசைநாயகியானேன். மற்றபடி இடையே வந்த வாலிபர்கள் யாரையும் நான் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அப்போது தான் விஜயன் வந்தார். என்னை வியக்க வைத்தார். வியர்க்க வைத்தார். அவர்மீது தான் முதன் முதலாக எனக்கு காதல் பிறந்தது. அந்த வார்த்தையின் அர்த்தத்தையே அவர் மூலம் தான் உணர்ந்தேன். அவரோ என்னை நிராகரித்து எனக்கு ஆச்சரியமாகிப் போனார். அதற்குப் பின் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. அதுவும் உங்களை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. அதுமட்டுல்ல.''

''வேறென்ன?''

''உங்களிடம் என்னை ஒப்படைப்பேன் என்று கனவிலும் கருதவில்லை''

''ஆனால் என் கனவெல்லாம் நீயாகவே இருந்தாய். கனவு கலைந்து நினைவு வந்த போதும் நீயே வலம் வந்தாய். உன்னை அடைந்தே தீருவது என்று தீர்மானித்தேன்.· அதற்குத்தடை யார் என்று அறிந்தேன். தடையை நீக்கிவிட்டு உன்னிடம் வந்தேன்''

''என்னிடம் வந்த உங்களை நான் ஏன் ஏற்றேன் தெரியுமா?''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்காதவன் என்னுடனேயே இருந்தான். அவனை நீ அகற்றினாய். அந்த துணிச்சல் தான் உங்களை ஏற்கும்படி என் மனம் கூறியது''

''ஆமாம், திலீபனை உனக்கு ஏன் பிடிக்கவில்லை?''

''அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம். அதைப்பற்றி எதுவும் கேட்க வேண்டாம்.

''கேட்க மாட்டேன். சொல்வதற்கு நீ விரும்பவில்லை என்றால் எனக்கு அதைக் கேட்கவும் விருப்பமில்லை''

''உங்களுக்கு நான் இணங்கியதில் திருப்திதானே?''

''பரமதிருப்தி''

''இனி என்ன செய்யப்போகிறீர்கள்?''

''நீயே பார்'' என்று கூறி ஸ்ரீவிஜயாவின் உடலைப் புரட்டும் ஓசையை அறைக்கு வெளியே இருந்த உதயணன் உணர்ந்து அதிர்ந்தான்.

எப்படியாவது அணுகி பேசிப் பார்த்து ஸ்ரீவிஜயாவை தன் வசப்படுத்தி விடலாம் என்று பெருங் கனவுகளோடு வந்த உதயணனுக்கு அவனது கனவுக் கன்னி கேவலம் ஐம்பது வயதை தாண்டிவிட்டவரான அசுவநாவிகருக்கு வசமானது வெறுப்பையும் அறுவறுப்பையும் அளித்தது. அதோடு அந்தக் கிழட்டு மனிதன் ஸ்ரீவிஜயாவை அடைய அவளது கணவன் திலீபனை கொலை செய்துவிட்டு சர்வ சகஜமாக அவளோடு சரசமாடிக் கொண்டிருந்தது அவனுக்கு மகா எரிச்சலைக் கிளப்பி விடவே நேராக மேல்தளத்திற்குச் சென்று உறங்கிக் கொண்டிருருந்த விஜயனை எழுப்பி ''தலைவரே, எழுந்திருங்கள். என்னோடு வாருங்கள்'' என்றான்.

உறக்கம் திடீரெனக் கலைந்த நிலையில் எழுந்த விஜயன் சற்று தெளிவடைந்து ''என்ன உதயணா? என்ன ஆயிற்று?'' என்று கேட்டான்.

''நீங்கள் சிரச்சேதம் செய்ய வேண்டிய இருவர் சரசமாடிக் கொண்டிருக்கிறார்கள். வந்து பாருங்கள்''

விஜயன் எதுவும் பேசாமல் உதயணனுடன் கீழ்த்தளத்திற்குச் சென்றான். அவனுடன் நவ வீரர்களும் சென்றார்கள்.

அறைக் கதவைத் தட்டினான் உதயணன்.

கதவு திறந்தது.

அசுவநாவிகரும் ஸ்ரீவிஜயாவும் ஆடைகளை சரிசெய்து கொண்டு வந்து நின்றார்கள்.

''தலைவரே, பார்த்தீர்களா கயவர்களை? திலீபனைக் கொன்ற மாபாதகன் இவன் தான். இவளை அடைவதற்காகவே இக்கிழவன் இக்கொலையைச் செய்திருக்கிறான். இருவரையும் சிரச்சேதம் செய்து கடலில் எரியுங்கள்'' என்று கடுங் கோபத்துடன் கத்தினான் உதயணன்.

''இவன் கூறுவது உண்மையா அசுவநாவிகரே? என்று கேட்டான் விஜயன்.

''அப்பட்டமான பொய்'' என்றார் அசுவநாவிகர்.

மறுநாள் விஜயனை நச்சரித்தான் உதயணன்.

அவனது போக்கு பிடிக்காத விஜயன் ''எதற்காக உனக்கிந்த பரபரப்பு? அவசரம்?'' என்று வினவினான்.

''அவர்களைத் தான் நேரில் பார்த்து விட்டீர்களே! தண்டிக்க வில்லையா? விசாரணை கூட நட்த்தவில்லையே!

''எதற்கு விசாரணை?''

''அசுவநாவிகர் திலீபனை கொலை செய்திருக்கிறார்''

''உதயணா, ஏற்கனவே உன்னிடம் சொல்லிவிட்டேன். வேண்டாம் திலீபன் சாவு பற்றி பிரச்சினை செய்ய வேண்டாம் என்று கூறியது உங்களுக்கெல்லாம் மறந்து போய் விட்டதா?''

'கொலை செய்தவன் யாரென்று தெரிந்த பிறகும் விசாரணை இல்லையா? தண்டனை இல்லையா?''

''தான் கொலை செய்யவில்லை என்று அசுவநாவிகர் சொல்லிவிட்டார்''

''அவர் இல்லை என்று சொல்லிவிட்டால் விட்டுவிட வேண்டியது தானா?''

''ஆதாரம் இருந்தால் நீ சொல்''

''ஸ்ரீவிஜயாவிடம் அவரே அதைச் சொன்னார். அதை நானே காதால் கேட்டேன்.

''ஸ்ரீவிஜயா இல்லை என்கிறாள்''

''அவள் கைகாரி. இக்கொலைக்குத் தூண்டியவளே அவள் தான்''

''நீதான் அப்படியெல்லாம் சொல்கிறாய். அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை''

''அவர்கள் இருவரும் ஒரே அறையில் இருந்ததை நீங்கள் பார்க்கவில்லையா?''

''இருவரும் ஒரே அறையில் இருந்தது தவறில்லை உதயணா''

''தலைவரே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''அசுவநாவிகர் அவளை விரும்புகிறார். அவரை ஸ்ரீவிஜயா விரும்புகிறாள். இருவரும் ஒரே அறையில் அதுவும் இரவில் சந்தோஷமாக இருக்கிறார்கள். இதில் தவறென்ன?''

''இல்லை. அசுவநாவிகர் அவளைக் கட்டாயப்படுத்தி யிருக்கிறார்''

''அப்படிப்பட்ட புகார் எதையும் ஸ்ரீவிஜயா சொல்லவில்லை''

உதயணனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஸ்ரீவிஜயா தனக்கு கிடைக்காததாலும் அசுவநாவிகர் அவளைக் கைப்பற்றி விட்டதாலும் அசூயை காரணமாக அவர்களைத் தண்டிக்கத் துடித்தான். அது நடக்காமல் போகவே நிதானத்தை இழந்து ''இங்கே வேண்டாதவன் திலீபன் மட்டும் தானா? வேறு யாராவது அந்தப் பட்டியலில் இருக்கிறார்களா? ஒருவேளை என் பெயரும் அதில் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''உதயணா! எல்லைமீறிப் பேசாதே. உனக்குத் தேவை நிதானமும் விவேகமும். உன்னை எச்சரிக்கிறேன். ஸ்ரீவிஜயாவை உன்னிடம் ஒப்படைக்கும்படி நீ கேட்டாய். அதைப் பார்க்கும்போது நீயேகூட திலீபனைக் கொன்றிருக்க லாமோ என்ற சந்தேகம் வருகிறது. சந்தேகங்களைக் கொண்டு தண்டிப்பதென்றால் உன்னையும் தண்டிக்க முடியும். கடைசி முறையாகச் சொல்லிக் கொள்கிறேன். திலீபன் கொலைபற்றி யாரும் என்னிடம் பேசவேண்டியதில்லை'' என்றான் விஜயன் நிர்தாட்சண்யமான குரலில்.

இதற்கு மேல் விஜயனிடம் உதயணன் எதுவும் பேசவில்லை என்றாலும் விஜயன் பாரபட்சமாக நடந்து கொள்கிறான் என்ற நினைப்பை மட்டும் விடவில்லை. இந்த விவகாரம் கப்பலில் இருந்த அனைவருக்கும் தெரிந்தது. அசுவநாவிகருக்கு விஜயன் தண்டனை வழங்காதது பற்றி யாரும் அதிகமாக பிரஸ்தாபிக்க வில்லை. அப்படி தண்டனை வழங்காததற்கு ஏதாவது காரணம்

இருக்கலாம் என்று கருதினார்கள். ஆனால் ஐம்பது வயதை தாண்டிய புரவி வணிகரின் காமக் கூத்தை மட்டும் யாரும் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வாலிபர்கள் அடக்கி வாசித்துக் கொண்டிருந்த நிலையில் கிழவருக்கு வந்த விவஸ்தையற்ற ஆசையை அவர்கள் ஏற்கத் தயாராக இல்லாததால் அவரிடம் பேசுவதையும் பழகுவதையும் பெரும்பாலானவர்கள் தவிர்த்தார்கள். ஸ்ரீவிஜயா ஏற்கனவே பாலியல் விஷயத்தில் ஒரு மாதிரியானவள் என்பதை தோழர்கள் ஏற்கனவே அறிந்திருந்தாலும் அசுவநாவிகரைப்போய் காமத்திற்கு ஏற்றுக் கொண்டதை வெறுத்தார்கள். இவளை விஜயன் நிராகரித்தது எத்தனை சரியானது என்று எண்ணி விஜயனை மனதிற்குள் பாராட்டிக் கொள்ளவும் செய்தார்கள்.

உதயணனின் நிலையோ பெரும் கொந்தளிப்பாக இருந்தது. தான் ஆசைப்பட்ட ஸ்ரீவிஜயாவை கவர்ந்து கொண்ட அசுவநாவிகரின் மீது அவனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. ஸ்ரீவிஜயாவை வசப்படுத்திக் கொண்டது ஒருபுறமும், அவரை விஜயன் தண்டிக்காதது மறுபுறமும் அவனை வாட்டியது. அசுவநாவிகரும் சரி ஸ்ரீவிஜயாவும் சரி யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. மரக்கலத்தில் இஷ்டப்படி திரிந்தார்கள். இரவு நேரங்களில் கீழ்தள அறையில் கும்மாளமடித்தார்கள். தன்னைக் கொலைகாரன் என்று சொன்ன பிறகும் அசுவநாவிகரை விஜயன் தண்டிக்காததால் தனக்கு கொடுத்திருந்த அவகாசத்தைப் பற்றி ஸ்ரீவிஜயாவும் கவலைப்படவில்லை. அதுபற்றி யாரும் கவலைப்படவில்லை. விஜயனும் பொருட்படுத்தவில்லை. ஆனால் மற்றவர்களைப் போல விஜயன் அந்த இருவரையும் புறக்கணிக்கவில்லை. வழக்கம் போலவே பேசினான். பழகினான். பணிகளை கண்காணித்தான். உணவுப் பொருள் பகிர்வில் எந்த அத்து மீறலும் நடக்காமல் பார்த்துக் கொண்டான். இந்த விஷயம் மறந்து போகும் அளவிற்கு எல்லோரிடமும் வேறு விஷயங்களைப் பேசியும் விவாதித்தும் பொழுதைப் போக்கினான்.

ஆனால் ஒரு கட்டத்தில் விஜயனின் சர்வ சாதாரணமான போக்கு அசுவநாவிகருக்கே அச்சத்தை தந்தது.

''தலைவரின் போக்கு எனக்குப் பிடிபடவில்லை'' என்றார் ஸ்ரீவிஜயாவிடம்.

''என்ன பிடிபடவில்லை?'' - கேட்டாள் ஸ்ரீவிஜயா அலட்சியமாக.

''தவறு செய்பவர்களிடம் அவர் பாரபட்சம் காட்டியதில்லை. தன் மனைவி மாயாவைக்கூட அவர் மன்னிக்க வில்லை. எல்லோருக்கும் ஒரே நியாயம் தான்''

''அதற்கென்ன இப்போது?''

''நான் உன் கணவனைக் கொலை செய்தவன். ஆனால் என்னை தண்டிக்கவில்லை''

''ஆதாரம் வேண்டாமா?''

''விசாரணை கூட செய்யவில்லை''

''எந்த அடிப்படையில் விசாரணை செய்வார்?''

''உன்னை விசாரித்தாரே அது எந்த அடிப்படையில்?''

''என்னை விசாரிக்க என்மீது நியாயமான சந்தேகம் இருந்தது. உங்கள்மீது அப்படி சந்தேகம் வரவழியில்லை''

''அப்படி நினைக்காதே ஸ்ரீவிஜயா. எங்கள் மரக்கலத்தில் ஒருவர் ஒருவராகக் கொலையுண்ட போது நானும் உன்னை மாதிரிதான் நினைத்தேன். அவரோ யாரிடமும் சொல்லாமல் ஆதாரங்களைச் சேகரித்தார். அதைக்கொண்டு தான் மாயாவை தண்டித்தார். ராகுலனையும் தண்டித்திருப்பார். ஆனால் அவன் தப்பி விட்டான்''

''அதெல்லாம் பழையகதை அசுவநாவிகரே. சொர்ணத் தீவுக்கு வந்ததிலிருந்து அவரது போக்கு மாறியிருப்பது உங்களுக்குப் புரியவில்லையா? தப்பு செய்த என்னை தண்டிக்கவில்லை. திலீபனைத் தண்டிக்கவில்லை. ஏன்- எனக்கு ஆதரவாக நின்று அவரை எதிர்த்த எல்லோரையும் ஏதோ சொல்லி தண்டிக்காமல் விட்டுவிட்டார். உங்கள் விஷயமும் அப்படித்தான். கடல் பயணத்தில் ஒவ்வொருவராகத் தண்டித்துக் கொண்டே இருந்தால் அவர் மட்டும்தான் மிஞ்சுவார். அந்த

நிலையை எந்த மரக்கலத் தலைவரும் உருவாக்க மாட்டார். உங்கள் தலைவரும் அப்படித்தான்''

''நீ சொல்வதும் சரிதான் ஸ்ரீவிஜயா. ஆனாலும் விஜயரை எளிதாக எடை போடுவது ஆபத்து'' என்றார் அசுவநாவிகர்.

''தைரியமாகத் திலீபனைக் கொன்ற நீங்கள் விஜயரை நினைத்து பயப்படுவது எனக்கு வெட்கமாக இருக்கிறது. உங்கள் பயத்தை நான் போக்கிக் காட்டுகிறேன்''

''எப்படி?''

''ஆண்கள் அசரும் சந்தர்ப்பம் உண்டு. அதைக் கண்டுபிடித்து அவரை மடக்குகிறேன். என்னைப் பலாத்காரம் செய்ததாக அவரையே குற்றவாளியாக்கி தண்டனை வழங்க உன்னை நியமிக்கிறேன்''

''ஸ்ரீவிஜயா, இதெல்லாம் வீண் கனவு. வேண்டாம்'' என்றார் அசுவநாவிகர்.

''பயந்து சாகாதீர்கள். சாகசங்கள் ஆண்களுக்கு மட்டுமே உரியதல்ல. பெண்களுக்கும் உண்டு. அவற்றில் ஏற்கனவே கைதேர்ந்தவள் நான்''

ஸ்ரீவிஜயாவின் பேச்சைக் கேட்டபோது அசுவநாவிகருக்கு ஆனந்தமாகவும் இருந்தது. அச்சமாகவும் இருந்தது. விஜயனும் சரி ஸ்ரீவிஜயாவும் சரி தத்தம் அளவில் திறமை வாய்ந்தவர்கள் என்று நினைத்த அவர் எப்படிப்பட்ட ஆடவனும் ஏமாறக்கூடிய நிலை வரும் என்று ஸ்ரீவிஜயா கூறியதையும் மறுதளிக்க முடியவில்லை அவளால். எனவே அவளால் ஏதாவது செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் விஜயனை ஏன் அவ்வாறு குற்றவாளியாக்க வேண்டும் என்ற கேள்வி மட்டும் அவருக்குள் எழவே இல்லை.

அவரிடம் சவாலிட்டிருந்த ஸ்ரீவிஜயாவும் விஜயனைக் கவிழ்ப்பதற்குச் சமயம் பார்த்தபடி இருந்தாள். அவனது நடவடிக்கைகளை கண்காணித்தாள். ஓரிருமுறை அவனிடம் வலுவில் போய் பேசினாள்.

''நான் அசுவநாவிகருடன் பழகுவதை தவறாக நினைக்கிறீர்களா?'' என்று கேட்டபோது -

''தவறில்லை என்று பலருக்கும் சொல்லிவிட்டேன்'' என்றான் விஜயன்.

''நீங்கள் மட்டும் சம்மதித்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது'' என்று சொன்னபோது -

''நான் சம்மதிக்காததன் காரணத்தையும் எல்லோருக்கும் ஏற்கனவே சொல்லிவிட்டேன்'' என்றான் விஜயன்.

அவன் இப்படி பிசிறில்லாமல் பேசியது அவளுக்குப் பிடிக்கவில்லை.

''நீங்கள் துறவியாகியிருக்க வேண்டியவர்'' என்று சீண்டிப் பார்த்தாள்.

''மன்னனாக உருவெடுக்கத் துறவியால் அனுப்பப்பட்ட நான் எப்படித் துறவியாக முடியும்?'' என்று கேட்டான் விஜயன்.

பேச்சுக்களால் தன்னைப் பேச்சு மூச்சற்றவளாக மாற்றத் தெரிந்த விஜயனை உணர்ந்து வெதும்பிய அவள் ''இப்போதெல்லாம் நீங்கள் ரொம்பவும் கனிந்து விட்டீர்கள். தண்டனைகளைக்கூட வழங்குவதில்லை. மன்னித்து விடுகிறீர்கள்'' என்றாள்.

''மன்னிப்பது கூட சிலநேரங்களில் தண்டனைகளாக அமையும்'' என்று விஜயன் பதில் கூறியபோது அவனிடம் பேசுவதை வெறுத்தாள் ஸ்ரீவிஜயா.

ஒருநாள் நள்ளிரவு நேரத்தில் மரக்கலத்தின் ஐந்தாவது தளத்திற்கு வந்த அவள் விஜயனின் அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு ''காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள். தலைவர் என்னை பலாத்காரம் செய்கிறார். வாருங்களேன்'' என்று உரக்கக் கத்தினாள்.

அவளது குரலைக் கேட்டு கப்பலில் இருந்தவர்கள் மேலே வந்தார்கள்.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்தேழு

# கரடித்தீவு

ஸ்ரீவிஜயாவின் கூக்குரலைக் கேட்டதும் தூக்கத்தில் இருந்த தோழர்கள் அதிர்ந்து எழுந்து ஐந்தாவது தளத்தில் கூடினார்கள். விஜயனின் அறைக்குள்ளிருந்து வந்த அவளது குரல் வெளிப்படுத்திய செய்தி விபரீதமானதாக இருந்ததால் அதிர்ச்சியடைந்த அவர்கள் அறைக் கதவை நெருங்கினார்கள். கூட்டத்தோடு கூட்டமாய் நின்றபடி கவனித்து கொண்டிருந்த அசுவநாவிகருக்கு வானில் பறப்பதுபோல இருந்தது. ''ஸ்ரீவிஜயா சரியான சாகசக்காரிதான். சவாலிட்டது போலவே கலக்கிவிட்டாள். விஜயனின் கதி அதோகதிதான். அறையைவிட்டு வெளியே வரட்டும். அவனை கால்களில் விலங்கைப் பிணித்துக் கண்களைத் தோண்டியெடுத்து விடுகிறேன்'' என்று கறுவிக் கொண்டார்.

அப்போது அவரது தோள்களை யாரோ தொடவே திரும்பினார் அசுவநாவிகர்.

அவரது முகம் சவமென வெளுத்து வியர்த்தது.

அங்கே நின்றிருந்த விஜயன் ''அசுவநாவிகரே என்ன பிரச்சினை? ஏன் எல்லோரும் என் அறைக்கு முன்பு திரண்டிருக்கிறார்கள் அதுவும் இந்த நேரத்தில்?'' என்று கேட்டான்.

அவருக்கோ பேச நா வரவில்லை.

அதேசமயம் அருகில் இருந்த டெமிட்ரியஸும் சிலதோழர்களும் விஜயனைப் பார்த்ததும் வியப்படைந்து ''தலைவரே, நீங்கள் அறையில் இல்லையா?'' என்று அர்த்தமில்லாமல் கேட்டார்கள்.

''நீங்கள் இங்கு இருக்கும்போது ஸ்ரீவிஜயா எப்படி அங்கே அலறினாள்?'' என்று கேட்டான் டெமிட்ரியஸ்.

''எதற்காக அவள் அலறினாள் டெமிட்ரியஸ்?'' கேட்டான் விஜயன்.

''நீங்கள் அறையில் இருப்பதாகவும் அவளை பலாத்காரம் செய்ய முயல்வதாகவுமல்லவா கூச்சல் போட்டாள்?''

இதைக்கேட்டுச் சிரித்த விஜயன் ''என்னை விரும்பியவள் அவள். என்னை மணப்பதற்கு உங்கள் எல்லோரது ஆதரவையும் திரட்டியவள் அவள். அவளைப் போய் நான் ஏன் பலாத்காரம் செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

''பிறகு ஏன் இந்த அலறல்?''

''ஆத்திரக்காரனுக்கு புத்தி குறைவு'' என்றான் விஜயன்.

இதற்கிடையில் அறைக்கதவைத் திருந்து கொண்டு வெளியே வந்தாள் ஸ்ரீவிஜயா.

தனது தந்திரம் தோற்றுவிட்டதால் அவளது முகம் கறுத்துப் போயிருந்தது.

தோழர்களுக்கு விஜயன் வெளியில் இருப்பது தெரியவரவே ஸ்ரீவிஜயாவைச் சூழ்ந்து கொண்டு ''எதற்காக நாடகமாடினாய்? யாரை ஏமாற்ற இந்த நாடகம்? சொல்'' என்று மிரட்டத் தொடங்கினார்கள்.

அவளோ பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

இந்த நிலையில் அங்கு வந்து சேர்ந்த விஜயன் ''ஏதோ நாடகம் ஆடி முடிந்துவிட்டது. துர்ச்சம்பவம் தான் நடக்க வில்லையே! எதற்காக அவளைத் துன்புறுத்துகிறீர்கள்? எல்லோரும் கலைந்து செல்லுங்கள்'' என்று கூடியிருந்தவர் களை அனுப்பிவைத்து விட்டு ஸ்ரீவிஜயாவைப் பார்த்து ''நீ ஏன் நிற்கிறாய்? நீயும் போக வேண்டியதுதானே? போ உன் இடத்திற்கு. இனிமேல் இதுமாதிரி பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்ளாதே'' என்று சொல்லிவிட்டு அறைக்குள் சென்றான்.

ரசாபாசம் எதுவுமின்றி இரவு கழிந்து விட்டாலும் ஸ்ரீவிஜயாவுக்கும் அகவநாவிகருக்கும் பெருத்த ஏமாற்றமாகவும் அவமானமாகவும் இருந்தது.

''இப்போதாவது விஜயன் யார் என்பதை அறிந்து கொண்டாயா? அவரை எண்ணி நான் அஞ்சுவது அர்த்தமுள்ளது தான் என்பதைப் புரிந்து கொண்டாயா?'' என்று ஸ்ரீவிஜயாவிடம் எரிந்து விழுந்தார் அசுவநாவிகர்.

''அவர் அறைக்குள் சென்றதைப் பார்த்த பிறகு தானே நான் உள்ளே நுழைந்தேன்? அவரெப்படி வெளியே வரமுடியும்?'' என்று குழப்பத்துடன் கேட்டாள் ஸ்ரீவிஜயா.

''உள்ளே போனவன் மாயமாய் மறைய சுரங்கமா இருக்கிறது? இது ஒன்றும் உன் மாளிகையல்ல. மரக்கலம். தூக்கக் கலக்கத்தில் சரிவர கவனிக்காமல் ஆளில்லாத அறையில் நுழைந்துவிட்டு அவசரமாகக் கத்திவிட்டாய். நுழைந்தது தான் நுழைந்தாயே உள்ளே அவர் இருக்கிறாரா என்று கூடவா பார்க்கவில்லை?''

''கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த மாதிரி தோன்றவே அவர் இருப்பதாக எண்ணி கத்திவிட்டேன். ஆனால் அவர் கட்டிலில் இல்லை என்பதும் படுத்திருப்பது போல் தலையணைகளைப் போர்த்து விட்டிருந்தார் என்பதும் கத்திய பிறகுதான் தெரிந்தது. அதற்குள் எல்லோரும் வந்து விட்டார்கள்''

''எல்லோரையும் வரவழைக்கத்தானே அந்தச் கூச்சலைப் போட்டாய் நீ? வராமல் எப்படி இருப்பார்கள்? ஆகா! உன் கூச்சலையும் இவர்கள் கூட்டத்தையும் பார்த்ததும் நான் என்னென்ன கணக்குகளைப் போட்டேன் தெரியுமா? எல்லாவற்றையும் நீ கெடுத்து விட்டாய். என்ன விஷயம் என்று தலைவரே என் தோளைத் தொட்டு விசாரித்தபோது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? ஒரு நிமிடம் நான் செத்தே விட்டேன். இனிமேல் என்ன நடக்குமோ தெரியாது''

''இந்தமுறை நான் செய்த காரியம் உள்நோக்கம் கொண்டது என்பது எல்லோருக்கும் புரிந்துவிட்டது. புரியும்படிச் செய்துவிட்டார் அவர். எனக்கு தண்டனை நிச்சயம்''

''வீணாகக் கற்பனை செய்யாதே. தண்டிப்பதாக இருந்தால் எல்லோரையும் கலைந்து போகச் சொல்வானேன்? எல்லோரையும் சாட்சியாக வைத்தே உன் தலையைச் சீவியிருக்கலாமே!

''அப்படியானால் விஷயம் இதோடு முடிந்துவிட்டது என்கிறீர்களா?''

''நீ தானே சொன்னாய்? விஜயன் மாறிவிட்டதாகவும் தண்டனைகளை வழங்க விரும்பவில்லை என்றும் நீ தானே சொன்னாய்? இப்போதும் அப்படியே நினைத்துக் கொள்''

''எனக்கு பயமாக இருக்கிறது''

''தோற்றுப் போகும்போது பயம் வருவது சகஜம்தான். எனக்கும் கூட பயம் வரும். எல்லாம் இரண்டு நாட்களுக்கு இருக்கும். பிறகு சரியாகிவிடும். கவலைப்படாதே. அடுத்தமுறை துல்லியமாக திட்டம் தீட்டுவோம்'' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினார் அசுவநாவிகர்.

இதேசமயத்தில் விஜயனைச் சந்தித்த தனஞ்ஜெயன் ''உங்களுக்கு மாயா ஜாலம் தெரியுமா தலைவரே?'' என்று கேட்டான்.

''தெரியாது தனஞ்ஜெயா''

''பிறகு எப்படி அறையிலிருந்து மறைந்தீர்கள். நீங்கள் அறைக்குள் போனதை நானும் பார்த்தேனே?''

''இதில் மாயாஜாலம் எதுவுமில்லை தனஞ்ஜெயா. என் அறையிலிருந்து கீழ்தளத்திற்குச் செல்ல ஒரு துவாரம் இருக்கிறது. நீ இதை கவனித்திருக்க மாட்டாய். மரக்கலத் தலைவன் அறைகளில் மட்டும் இந்த துவாரம் இருக்கும். இதே தளத்தில் எதிர்முனையில் இருக்கும் அறையில் முன்பு பாரடைஸ் இருந்தான். இப்போது நீ இருக்கிறாய். அங்கேயும் துவாரம் இருக்கிறது. நீ பார்க்கவில்லை. அவசரமான மற்றும் அபாயமான வேளைகளில் தலைவன் தப்புவதற்கு இந்த அமைப்பு உண்டு. நானோ அதை துப்பறிவதற்கு பயன்படுத்திக் கொள்கிறேன். தினமும் நள்ளிரவில் அறைக்குள் நுழையும் நான் கட்டிலில் நான் இருப்பதுபோல் அமைப்பை உருவாக்கிவிட்டு துவாரத்தின் வழியாக நான்காவது தளத்திற்கு வந்து கப்பலை ஒரு நோட்டம் விடுவேன். நான் ஓய்வெடுக்கச் சென்று விட்டதாக நினைத்து ஒருசிலர் ரகசிய காரியங்களில் ஈடுபடுவார்கள். அதை

அறியவே அப்படிச் செய்தேன் நான். திலீபன் கொலையுண்டதிற்குப் பிறகு இதை தினமும் செய்து வருகிறேன். அது தெரியாமல் ஸ்ரீவிஜயா அறைக்குள் புகுந்திருக்கிறாள்''

''கதவைத் தாளிடவில்லையா?''

''எப்போதுமே தாளிடுவதில்லை''

''அது ஆபத்தல்லவா?''

''ஆபத்து என் வரவு. வீரம் என் செலவு''

''தலைவரே, ஸ்ரீவிஜயாவை தண்டிப்பதும் தண்டிக்காமல் விடுவதும் உங்கள் விருப்பம். அதுபற்றி நான் கேட்கமாட்டேன். ஆனால் ஸ்ரீவிஜயாவின் நடவடிக்கையின் உள் நோக்கத்தைப் பற்றி மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். என்றைக்கோ தண்டிக்கப்பட வேண்டியவள் அவள். ஆனால் நீங்களோ மன்னித்தீர்கள். இந்த நிலையில் உங்கள் மீது அவதூறு பரப்ப அவள் எப்படி முயன்றாள்?''

''தனஞ்ஜெயா, நம்மிடையே நல்லவர்களும் இருக்கிறார்கள். கெட்டவர்களும் இருக்கிறார்கள். எங்கேயும் இப்படி இருப்பார்கள். கெட்டவர்களுக்குத் திருந்துவதற்கு வாய்ப்பு கிடைக்கும். சிலர் பயன்படுத்திக் கொள்வார்கள். சிலர் பயன்படுத்திக் கொள்ளமாட்டார்கள். ஸ்ரீவிஜயா இதில் இரண்டாவது ரகம். அவ்வளவுதான்''

''ஆபத்தான அவளை விட்டு விடுவது நல்லதா தலைவரே?''

''இதையெல்லாம் நீயே அறிந்து கொள்வாய்'' என்று சொன்ன விஜயன் ''தனஞ்ஜெயா, சாவகத்தை விட்டுப் புறப்பட்டு நாற்பது நாட்கள் ஆகிவிட்டன. நமது பயணத்தில் தீவுகள் எதுவும் தட்டுப்படவில்லையே?'' என்று கேட்டான்.

''தலைவரே, அந்தக் கவலை எனக்கு இல்லாமலில்லை. நானும் அடிக்கடி பறவைகளை விட்டுப் பார்க்கிறேன். ஆனால் அவை நெடுந்தூரம் பறந்து திரும்பிவிடுகின்றன. அவற்றின் கண்களுக்கு நிலம் புலப்படாவிட்டால் இப்படித்தான் திரும்பிவிடும்'' என்றான் தனஞ்ஜெயன்.

''நீ விழித்திருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது தனஞ்ஜெயா'' என்று சொன்ன விஜயன் ''உதயணனை நாளை என்னை வந்து பார்க்கும்படிச்சொல்'' என்றான்.

மறுநாள் உதயணன் வந்ததும் அவனை அமரச் சொன்ன விஜயன் ''உதயணா, கொஞ்ச நாளாக என்னோடு நீ பேசவே இல்லையே ஏன்? என்ன கோபம் உனக்கு?'' என்று சாந்தமாகக் கேட்டான்.

''பேசாமலிருப்பது குற்றமாயிருந்தால் தண்டனை கொடுங்கள் தலைவரே. ஏற்றுக் கொள்கிறேன். மற்றபடி என் கடமைகளை நான் தட்டாமல் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றான் உதயணன் விரக்தியோடு.

''உபதலைவனாக நீ நடந்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சிதான்., ஆனால் உபதலைவன் யந்திரமல்ல. மனிதன். அதை மறந்துவிட்டாயா?''

''மனித உணர்வுகள் மதிக்கப்படாமல் மிதிக்கப்படும்போது மனிதன் யந்திரமாகச் செயல்படுவது தவிர்க்க முடியாதது தலைவரே''

'உன் உணர்வுகளை மதிக்காமல் மிதித்து விட்டேனா நான்? எப்போது?''

''நீங்கள் இப்படிக் கேட்பது துரதிஷ்டமானது''

''எப்படி?''

''மிதித்தவர் நீங்கள். அதை மறந்துவிட்டுப் பேசுவது துரதிஷ்டம் தானே?''

''அப்படியே இருக்கட்டும். உன் கவலை என்ன என்பதைச் சொல்''

''குற்றவாளிகளை நீங்கள் தண்டிக்காதது எனக்கு கவலையாக இருக்கிறது. என்னை அவமரியாதை செய்தது போல் இருக்கிறது''

''நீ சொன்னபடி நான் நடவடிக்கை எடுக்காமல் விட்டது உனக்கு அவமானமாக இருக்கிறதா?''

''அவமானம் என்று சொன்னது என் நஷ்டத்தை அல்ல. உங்கள் நஷ்டத்தை. என் நண்பனான உங்களுக்கு ஏற்பட்ட அகெளரவத்தை''

''எனக்கென்ன அகெளரவம் வந்துவிட்டது?''

''என் நண்பனான நீங்கள் குற்றவாளிகளிடம் பாரபட்சம் காட்டுவது உங்களுக்கு அகெளரவம் தான்''

''எல்லா விஷயத்திலும் உணர்ச்சி வசப்படுவதும் கனவில் மிதப்பதும் தான் உன் வாடிக்கையாக இருக்கிறது. அடிப்படை விஷயத்தை மறந்துவிட்டுப் பேசுகிறாய் உதயணா. மரக்கலத்தைப் பொறுத்தவரை குற்றங்கள் நிகழும்போது அது விஷயமாக முடிவு செய்யவேண்டியது தலைவன் மட்டும் தான். இதில் அவன் யாருடைய பேச்சையும் கேட்டு நடக்க முடியாது''

''என் பேச்சு என்பதால் ஏற்கும்படி நான் சொல்லவில்லை. நியாயம் என்பதால் தான் ஏற்கும்படியும் தண்டிக்கும்படியும் சொன்னேன்''

''நியாயம் எது என்று கண்டுபிடிக்க முடியாத குழப்பம் எனக்கு இல்லாதபோது மற்றவர்கள் வலியுறுத்த வேண்டிய அவசியம் வரவில்லை. நீ உணர வேண்டியது இதைத்தான். ஆகவே இல்லாத பிரச்சினைகளையும் அவமானங்களையும் சுமந்து கொண்டு யந்திரமாக நீ நடந்து கொள்ளாதே. இதை நான் மரக்கலத் தலைவனாகவும் சொல்கிறேன். உன் நண்பனாகவும் சொல்கிறேன்''

''ஸ்ரீவிஜயா, உங்கள் அறைக்குள் வந்து அநாகரீகமாக் நடந்து கொண்டதையும் மன்னித்து விட்டீர்களா?''

''மன்னிப்பதோ-தண்டிப்பதோ எதுவானாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் கவலைப்படாதே. நீ போய் வா''

உதயணன் வேறு எதுவும் பேச முடியாமல் அகன்ற மறுநிமிடம் விஜயனுக்கு முன்னே வந்து மண்டியிட்டாள் ஸ்ரீவிஜயா. அவளது கண்கள் கலங்கியிருந்தன.

''என்னை ம்ன்னித்துவிடுங்கள் அரசகுமாரரே. அசுவநாவிகரின் தூண்டுதலால் தான் நான் அவ்வாறு நடந்து

கொண்டேன். மற்றபடி அது மாதிரியான எண்ணங்கள் எதுவும் எனக்கில்லை. என் கணவரைக் கொன்றது அசுவநாவிகர் தான். இது சத்தியம்'' என்று சொன்னாள்.

''அவர் கொலை செய்ததை நீ கண்ணால் பார்த்தாயா?''

''ஆமாம். பார்த்தேன்''

''அப்போதே என்னிடம் ஏன் புகார் செய்யவில்லை?''

''என்னையும் கொன்று விடுவதாக அவர் மிரட்டியதால் புகார் சொல்லவில்லை''

''அவர் மிரட்டினால் என்ன? உன் உயிரை நான் காப்பாற்ற மாட்டேனா?''

''ஆகவே தான் இப்போது புகார் செய்கிறேன்''

''சரி நீ போ''

★★★

இது நடந்து முடிந்து இரண்டாம் நாள் விஜயனிடம் ஓடிவந்த தனஞ்ஜெயன் ''தலைவரே, நிலப்பகுதி நமக்கு அருகில் இருக்கிறது'' என்றான் பரபரப்புடன்.

விஜயன் ''எப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''அதோ பாய்மர உச்சியைப் பாருங்கள். நான் அனுப்பிய பறவை திரும்பி வந்து அமர்ந்திருக்கிறது''

''திரும்பி வந்தால் நிலம் அருகில் இல்லை என்றுதானே அர்த்தம்?''

''உண்மைதான் தலைவரே. ஆனால் திரும்பி வந்த இந்தப் பறவை வெறுமனே வரவில்லை''

''வேறெப்படி வந்திருக்கிறது?''

''அதன் மூக்கை கவனியுங்கள். ஏதோ பச்சை புற்களை கவ்விக்கொண்டு இருக்கிறதே பார்த்தீர்களா? பச்சைப்புல் எங்கே கிடைத்திருக்கும்? அருகில் நிலப்பகுதி இருந்தால் தானே கிடைக்கும்?''

''இப்பறவை அதை ஏன் கொண்டு வந்திருக்கிறது?''

''அதோ பாய்மர உச்சியின் கீழே கவனியுங்கள். அங்கே இப்பறவை கூடு ஒன்றைக் கட்டத்துவங்கியிருக்கிறது. அக்கூட்டைப் பலப்படுத்தவே பச்சைப் புற்களைக் கொண்டு வந்திருக்கிறது. அருகில் நிலம் இருப்பது நிச்சயம்''

''உன் கூர்மையான அறிவு பாராட்டத்தக்கது தனஞ்ஜெயா''

தனஞ்ஜெயன் விஜயனின் பாராட்டைக் கவனிக்காமல் வேறெதையோ கவனித்துவிட்டு ''தலைவரே, காற்றில் மண் வாசனை வீசுவதை உணருங்கள்'' என்று கூறிவிட்டு பாய்மரத்தண்டை பற்றி ஏறி அதன் உச்சியை அடைந்தான். அவன் கண்களுக்கு தூரத்தில் நிலப்பரப்பு கோடு போலத் தெரிந்தது. அங்கிருந்தே அதை விஜயனுக்குத் தெரிவித்த தனஞ்ஜெயன் சுக்கானை அந்த நிலப்பரப்பை நோக்கித் திருப்பும்படிச் சொல்லிவிட்டு கீழே இறங்கினான்.

மரக்கலமானது விரைவிலேயே நிலப்பகுதியை நெருங்கியது.

அதைக் கண்டதும் தீவுக்கப்பல்வாசிகள் குதூகலப் பட்டார்கள்.

விஜயன் உபதலைவர்களையெல்லாம் அழைத்தான்.

தனஞ்ஜெயனைப் பார்த்து ''தனஞ்ஜெயா, உனது வரைபடத்தில் இந்த நிலப்பரப்பு இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''இல்லை தலைவரே, அதோடு வரைபடத்தில் நான் காட்டிய கோகோஸ் தீவை நாம் கடந்து விட்டதாகவும் தோன்றுகிறது. அநேகமாக இந்தத்தீவு கரடித் தீவாக இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றான் தனஞ்ஜெயன்.

''கரடித்தீவா?''

''ஆம் தலைவரே. கரடிகள் அதிகமாக வாழும் தீவாக இது இருக்கவேண்டும். நான் கேள்விப்பட்ட செய்தி இதுதான்''

''கரடிகள் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கட்டும். மனிதர்கள் இருப்பார்களா என்பது தான் என் கேள்வி''

''அது தெரியவில்லை''

''அப்படியானால் அதைப்பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளும்வரை தீவில் நாம் இறங்க வேண்டாம். நாகர்மலைத் தீவின் கதை இங்கேயும் நடந்துவிடக் கூடாது'' என்று கூறிய விஜயன் தோழர்களிடம் எரிநட்சத்திர உருண்டைகளைக் கொளுத்தி தீவில் எரியும்படிச் செய்தான். வேட்டுக்களை ஒலிக்கவும் செய்தான். ஆனால் அரைநாள் பொழுது கழிந்த போதும் தீவிலிருந்து மனிதர்கள் யாரும் தலைகாட்டவில்லை.

இது மனிதர்கள் இல்லாத தீவாகத்தான் இருக்கவேண்டும். ''நீ சொன்னபடி கரடிகள் மட்டுமே வாழும் இடமாக இருக்கலாம். கரடிகளை நம்பித்தீவில் இறங்கலாம். காட்டு மிராண்டிகளைத் தான் நம்பமுடியாது'' என்று கூறிய விஜயன் தீவில் கால் பதிப்பதற்கு உத்திரவிட்டான்.

தீவில் கால் பதிக்க விஜயன் ஆணையிட்டபோது மரக்கல வாசிகள் ஆனந்தமடைந்தார்கள்.

அதே தீவுக்கப்பல்வாசிகள் தீவைவிட்டுப் புறப்பட்டபோது விஜயன் எடுத்த நடவடிக்கையைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார்கள்.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்தெட்டு

# கிழவரின் சரசம்

கரடித் தீவிலிருந்து மர்க்கலப் பயணத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெறவேண்டிய கட்டாயத்தினால் அத்தீவில் இறங்குவது என்று முடிவு செய்த விஜயன் உபதலைவர்களிடம் ''இங்கே நாம் கால் பதிப்பது இரண்டே காரணங்களுக்காகத் தான். ஒன்று நீரைப் பெறுவது. இரண்டாவது எல்லோரும் கொஞ்சம் நில வாசத்தை அனுபவிப்பது. ஆகவே இதற்காக மொத்தம் மூன்று நாட்களை மட்டுமே ஒதுக்குகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அவகாசம் நீடிக்கப்பட மாட்டாது'' என்றான்.

யாரும் அதற்கு ஆட்சேபணை கூறவில்லை. தீவுக்கப்பல் நங்கூரமிடப்பட்டு படகுகள் இறக்கப்பட்டன. விஜயனே நவவீரர்களோடு முதலில் இறங்கி தீவுக்குச் சென்றான். தீவின் முகப்பில் மணற்பரப்பிற்கு அடையாளமாக எதையும் காணமுடியவில்லை. கடற்கரைக்கு வந்து சேர்ந்த பிறகும் வேட்டுக்களை முழங்கச் செய்தான் விஜயன். ஆனால் தீவுக்குள்ளிருந்து யாரும் வெளிப்படவில்லை. ஒருவாறு திருப்தியடைந்த விஜயன் கைகளை ஆட்டியதும் கப்பலில் இருந்த மற்றவர்களும் படகுகளில் இறங்கினார்கள்.

நவவீரர்களைப் பார்த்து "நீங்கள் மரக்கலத்திற்குப் போய் நமது புரவிகளையும் தீவுக்குக் கொண்டு வாருங்கள். அவற்றுக்கும் இடமாற்றம் அவசியம். அதோடு நாமும் ஒருமுறை தீவில் புரவிச் சவாரி செய்துவிட்டு வரலாம். நீர்நிலைகள் இருக்கும் இடத்தையும் அறிந்து கொள்ளலாம்" என்றான்.

அதற்குப் பிறகு வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன. கடற்கரைக்கு வந்த தோழர்கள் முதல் வேலையாக கடற்கரையைச் சீர்ப்படுத்தி இரவில் தங்குவதற்கு ஏதுவாக மாற்றியமைத்தார்கள். கப்பலில் துடுப்பு தள்ளும் அடிமைகளை இப்பணிகளுக்கு உதவச் செய்த உதயணன் அவர்களது கால்களுக்கு விலங்கிட்டு பாதுகாவல் செய்தான். அவனும் நவவீரர்களும் புரவியில் ஏறி தீவுக்குள் சென்று நீர்நிலைகளைக் கண்டறிந்ததால் நீர்க்குடங்கள் அங்கே கொண்டு செல்லப்பட்டு அவற்றில் நீரைநிரப்பும் பணி தொடங்கியது. கப்பலில் இருந்து கொண்டு வந்த உணவுப் பொருட்களை கடற்கரையில் அடுப்பை மூட்டிச் சமைக்கவும் சிலர் ஈடுபாட்டார்கள். வேறு சிலர் தீவுக்குள் கிடைத்த பழங்களையும் காய்களையும் திரட்டினார்கள். சிலர் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் மீன்களைப் பிடித்தார்கள். அன்றைக்கு அந்த அளவில் இரவு நேரம் வந்து விட்டதால் அனைவரும் கடற்கரைப் பகுதியில் உண்டாகியிருந்த கூடாரங்களில் பந்தங்களை நட்டு உணவை உண்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். இரவு நேரக் காவலுக்கு நூறுபேர் போக மீதமிருந்தவர்கள் நில சுவாசத்தை அனுபவித்து அன்றிரவு முழுமையாகத் தூங்கினார்கள். கரடிகள்

அதிகமிருக்கும் தீவு என்று சொல்லப்பட்டாலும் கடற்கரைப் பகுதியிலோ அதற்கடுத்த காட்டுப்பகுதியிலோ கரடிகள் எதுவும் தலைகாட்டவில்லை.

இது யாருக்கு மகிழ்ச்சியை அளித்ததோ இல்லையோ-

அசுவநாவிகருக்கும் ஸ்ரீவிஜயாவிற்கும் ஆனந்தத்தை அளித்தது.

அதிலும் அசுவநாவிகர் பேரானந்தம் அடைந்தார்.

ஸ்ரீவிஜயாவை வசப்படுத்தி சந்தோஷமடைந்திருந்தாலும் மரக்கலத்தில் இருந்த காரணத்தால் அந்த சந்தோஷத்தை இஷ்டப்படி அடைய அவரால் முடியவில்லை. அவர் கடல் பயணத்தில் ஈடுபடுவதற்கு முன்பு சதுர்வேதியுடன் நிலப்பகுதியில் இருந்த காலத்திலேயே பெண் சுகத்தை அதிகம் அனுபவித்ததில்லை. ஏறக்குறைய ஆசிரம வாழ்க்கை சூழ்ந்திருந்த காரணத்தாலும், திருமணமான இரண்டாம் ஆண்டிலேயே மனைவி இறந்துவிட்டபடியாலும் அவருக்குக் கிடைக்க வேண்டிய காமச்சுகம் கடலளவாக இல்லாமல் கிணற்றளவே கிடைத்ததால் தவம் பாதி தாபம் பாதி என்று நாட்களை ஓட்டிவந்தார். சுகத்திற்கான வாய்ப்புகள் அவருக்குச் சரிவர அமையவில்லை. நாகர்மலைத் தீவில் இருந்தபோது பெண்கள் பலரை நிர்வாணமாகக் காண நேர்ந்தாலும் அவர்களெல்லாம் கறுத்து காட்டு மிராண்டிகளாக இருந்ததாலும் அவர்களது முகங்கள் அழகற்று விளங்கியதாலும் அங்கே அவர் தன் ஆசைகளை வெளிப்படுத்த முடியவில்லை. அதோடு உதயணனோடு சென்று விநோதத் தீவில் பல நாட்கள் மயக்க நிலையில் இருந்து விட்டதால் அவருக்கு அரிதான வாய்ப்பே கிட்டியது. சொர்ணத்தீவுக்கு வந்து ஸ்ரீவிஜயாவைப் பார்த்தார். ஆனால் அவளோ அவரை விஜயனோடு தன்னைச் சேர்ப்பதற்கான பணியில் இறக்கி பறக்கும் குரங்கைப் பற்றிய கிலியைக் கிளப்பி விட்டதால், அங்கேயும் ஆசையைக் காட்ட முடியவில்லை. விஜயனால் நிராகரிக்கப்பட்டு விலங்கிடப்பட்டு மரக்கல அறையில் அவள் சிறை வைக்கப்பட்ட நிலையில் தான் அவரது ஆசைக் கதவுகள் திறந்தன. ஆனால் வயது காரணமாக அவளை நெருங்க

முடியாமல் ஏக்கங்களால் நொறுங்கிக் கொண்டிருந்தார். சாவகத்தில் அவளது கணவன் கிடைத்தபோது அவனோடு ஸ்ரீவிஜயாவை சேர்த்து வைக்க முயன்றான் விஜயன். விஜயன் செய்தது நியாயமாக இருக்க அசுவநாவிகரோ நியாயமில்லலாமல் அவன் மீது கோபம் கொண்டு சபித்தார். ''இவனுக்கு ஏன் இந்த வீண் வேலை?'' என்று கடுகடுத்து கொண்டார். விஜயனோடு தான் எதற்காக வந்தோம் என்பதைப் பற்றியோ விஜயனின் லட்சியத்தைப் பற்றியோ அவர் நினைக்கவும் இல்லை. கவலைப்படவுமில்லை. ஸ்ரீவிஜயாவை பற்றியே நினைத்துக் கவலைப்பட்டார். அவளது வாளிப்பான உடலும் செழிப்பான அங்கங்களும் அவரைத் தூங்கவிடாமல் செய்தன.

அப்போதுதான் அவருக்கு விபரீதமான எண்ணம் உண்டாயிற்று. ஸ்ரீவிஜயாவை அடைவதற்கு தடையாக அமையக் கூடிய ஒரே மனிதன் அவளது கணவன் திலீபன் தான் என்பதை உணர்ந்தார். ஸ்ரீவிஜயாவுக்கு திலீபனைப் பிடிக்கவில்லை என்பதும் தீவுக்கப்பலைப் பொறுத்தவரை அவன் வேண்டாத மனிதன் என்பதும் அவருக்குச் சாதகமான அம்சங்களாக இருந்தன. அவனை வேலை தீர்த்துவிட்டால் கவலைப்படவோ கேள்வி கேட்கவோ யாரும் வரமாட்டார்கள் என்றும் விஜயன் கூட அதில் அதிக அக்கறை காட்டமாட்டான் என்றும் கணக்கு போட்டார். தனது தீர்மானத்தைப் பலப்படுத்திக் கொண்ட அவர் திலீபனை தான் கொன்றால் அந்தப் பழி ஸ்ரீவிஜயாவின் மீது விழும் என்றும் அந்த நிலை உருவாகும்போது அவளை அதை வைத்தே பயமுறுத்தி தன்வசப்படுத்தலாம் என்றும் முடிவு செய்து ஒருநாள் இரவு திலீபன் தூங்கிக் கொண்டிருந்த போது அவனது பின் மண்டையில் பலமாக அடித்து மண்டையைப் பிளந்து கொன்றார்.

அதன் பிறகு நிகழ்ச்சிகள் அவர் எதிர்பார்த்த மாதிரியே நடந்தன. உதயணன் குறுக்கிட்டு தன் மீது கொலைக் குற்றத்தைச் சுமத்தியபோது கூட விஜயன் அக்கறை எதுவும் காட்டாததால் துணிவுடன் ஸ்ரீவிஜயாவை அணுகினார் அசுவநாவிகர்.

ஸ்ரீவிஜயா அவரது ஆசையைக் கேட்டு 'க்ளுக்'கென்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய் பெண்ணே?''

''இந்த மரக்கலத்தில் அரசகுமாரர் இருக்கிறார். வாலிபர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் என்னைப் புறக்கணிக்கும்போது வயதான நீங்கள் எப்படி என்னிடம் இப்படிப் பேசுகிறீர்கள்?''

''உன்னை வயதானவர்கள் அணுகியதில்லையா? நீ ஏற்றதில்லையா?''

''சொர்ணத்தீவின் மன்னரைச் சொல்கிறீர்கள் போலிருக்கிறது''

''ஆமாம். அவன் வயதானவன் தானே?''

''வயதானவர் தான் ஆனால் மன்னர்''

''நானும் மன்னனாக இருந்தால்தான் என்னையும் ஏற்பாயா?''

ஸ்ரீவிஜயா இதற்கு பதிலேதும் சொல்லாமல் ஏதோ யோசிக்கவே ''என்ன யோசிக்கிறாய்?'' என்று கேட்டார் அசுவநாவிகர்.

''அன்றைய நாளை எண்ணிப்பார்க்கிறேன்''

''அது என்ன நாள்?''

''விஜயனையும் என்னையும் சேர்த்து வைக்கும்படி உங்களை அன்று மிரட்டினேன். நிலைமை இப்போது தலைகீழாக மாறிவிட்டதல்லவா? விஜயன் என்னை மறுத்து விட்டார். அவரோடு என்னைச் சேர்க்க வேண்டிய நீங்களோ என்மீது ஆசைப்படுகிறீர்கள். இதைத்தான் எண்ணிப் பார்க்கிறேன்''

''சூழ்நிலைகள் மாறும். அதற்காக கவலைப்பட வேண்டியதில்லை. ஆகவே என்னை நீ மறுக்க வேண்டிய அவசியமில்லை''

''அந்த உத்தேசம் எனக்கில்லை. வாலிபர்களால் முடியாத கொலையை நீங்கள் செய்திருக்கிறீர்கள். அதுவும் நான் விரும்பிய ஒன்றையே செய்திருக்கிறீர்கள். அதற்காகவே என்னை உங்களுக்கு கொடுக்கிறேன்'' என்று சொல்லி தன்னைக் கொடுத்தாள் ஸ்ரீவிஜயா.

★★★

கரடித் தீவுக்கு வந்ததும் அங்கே இருக்கும் மூன்று நாட்களிலும் ஸ்ரீவிஜயாவிடம் சொர்க்கானுபவத்தை சுகித்துப் பார்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்து கொண்ட அசுவநாவிகர் தீவுக்கு வந்த முதல் நாள் இரவிலேயே அவளை அழைத்துக்கொண்டு தீவுக்குள் சென்றார். ஆசை பயமறியாது ஆகையால் கரடிகளைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. மோகம் முற்றிலும் மோசம் என்பதால் அவர் எதைப்பற்றியும் அஞ்சவில்லை. தனக்குள் காமத்தீயை மூட்டிக்கொண்டு அதில் அவளைப் போட்டுத் தீய்க்கத் தொடங்கினார். தன்னிடம் உறவு கொண்ட கணவனும் சரி, சொர்ணத்தீவின் மன்னனும் சரி, உறவு கொள்ளாமல் திணற வைத்த விஜயனும் சரி யாருமே வெளிப்படுத்தாத காமத்தை அசுவநாவிகர் வெளிப்படுத்திய போது ''இவர் கிழவரேயல்ல'' என்று சொல்லிக் கொண்டாள் ஸ்ரீவிஜயா. மரக்கலத்தில் காட்ட முடியாத வேகங்களையும் வக்கிரங்களையும் சுதந்திரமான தீவுப் பகுதியில் அவர் காட்டிய போது 'இவருக்கு உருவம்தான் மனித உருவமே தவிர உணர்வுகளெல்லாம் மிருக உணர்வுகள்' என்பதை உணர்ந்து கொண்டாள். அவரது வேகமும் வக்கிரமும் அவளுக்கும் தேவையாக இருந்தது. தனது நிகரற்ற அழகுகளாகக் கருதிக் கொண்டிருந்த அங்கங்களை விஜயன் உதாசீனப்படுத்தி விட்டதால் உண்டான ஆத்திரமும் வெறுப்பும் அவளது உணர்ச்சிகளை வெகுவாக உசுப்பிவிட்டபடியால் அவளும் மிருகமானாள். இஷ்டம் போல் அனுபவித்து வந்த இன்பம் இடைக்காலத்தில் காணாமல் போய் தற்போது திரும்பியிருந்ததால் புத்துணர்வுடன் ஈடுபட்டாள் ஸ்ரீவிஜயா. அவளது வெளிப்பாடுகளை உணர்ந்தபோது அசுவநாவிகர் பரமானந்தமடைந்தார்.

மறுநாள் இரவும் அவளைப் பிழிந்தெடுத்தார். அவளும் அவரிடம் பழமாக மாறினாள். அவர்கள் இரவு நேரங்களில் பிரிந்து சென்று சந்தோஷமாக பொழுதைக் கழித்து வந்தது விஜயன் உட்பட எல்லோருக்குமே தெரிந்திருந்தாலும் இயல்பாகவே இருந்தார்கள். மனம் ஒன்றிய இருவர் இன்பமாய் இருப்பது தவறில்லை என்று நினைத்தார்களோ என்னவோ! உதயணன் மட்டுமே அவர்களை நினைத்து நினைத்து வெதும்பினான். இலவு காத்த கிளியாக தான் ஏமாந்து விட்டதும் தனது கனவுலக அழகி ஸ்ரீவிஜயாவை அசுவநாவிகர் கவர்ந்துபோய் களியாட்டம் போட்டதும் அவனுக்குச் சகிக்க முடியாத சம்பவங்களாக இருந்தன. ''இந்தக் கிழவன் செத்துத் தொலைக்கக்கூடாதா? ஏதாவது ஒரு கரடி வந்து அவனைப் பிராண்டி கடிக்கக்கூடாதா?'' என்றெல்லாம் சபித்தான்.

இரண்டாவது நாளில் மரக்கலத்திற்குத் தேவையான தண்ணீர் நீர்க்குடங்களில் நிரப்பி கப்பலுக்கு அனுப்பப்பட்டது. பழங்கள் போன்ற உணவுப் பொருட்களும் கிடைத்தவரை சேமிக்கப்பட்டன. மூன்றாவது நாள் அனைவரும் நிம்மதியாக பொழுதைக் கழித்துக் கொண்டாடினார்கள். அடிமைகளுக்கு நல்ல உணவு வழங்கப்பட்டது. அன்றிரவு மரக்கலம் புறப்படுவது என்று தீர்மானமும் ஆயிற்று. இரவு மரக்கலம் நங்கூரத்தை எடுத்து அசையவும் தொடங்கியது.

தோழர்கள் சிலர் பரபரப்புடன் விஜயனிடம் வந்து ''தலைவரே, அசுவநாவிகரும் ஸ்ரீவிஜயாவும் இன்னும் மரக்கலத்திற்கு வரவில்லை'' என்றார்கள்.

''வரமாட்டார்கள்'' என்றான் விஜயன்.

''வரமாட்டார்களா? தலைவரே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''காதல் பறவைகளுக்கு நாம் ஏன் தடையாக இருக்க வேண்டும்? சுதந்திரமாக இத்தீவில் ஆடிப் பாடட்டுமே?''

விஜயன் கூறியது காதல் பறவைகளுக்கு அளிக்கபட்டச் சுதந்திரமல்ல தண்டனை என்பதை தோழர்களும் மற்றவர்களும் சந்தேகமின்றித் தெரிந்து கொண்டார்கள். அசுவநாவிகருக்கும்

ஸ்ரீவிஜயாவிற்கும் இது பொறுத்தமான தண்டனைதான் என்று எல்லோருக்கும் தோன்றியது. ஆனால் இப்படியொரு தண்டனையை அளிப்பது பற்றி யாரிடமும் தெரிவிக்காமல் தண்டனையே இல்லை என்பது போன்றதொரு பிரமையை எல்லோருக்கும் உண்டாக்கிவிட்டு சரியான நேரம் பார்த்து அவ்விருவருக்கும் சரியான தண்டனையை அளித்துவிட்ட விஜயனின் செயல்பாட்டை நினைத்து எல்லோருமே பாராட்டினார்கள். உதயணன் இதை அறிந்துமிகவும் சந்தோஷப் பட்டு விஜயனை நேரிலேயே வந்து பாராட்டினான். ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தி விட்டீர்கள் தலைவரே'' என்று புகழ்ந்தான். அவனைப் பொறுத்தவரை தனக்கு கிடைக்காமல் போனவளும் அதற்குக் காரண மானவனும் ஒழிந்ததாக நினைத்து மகிழ்ந்தான்.

விஜயனோ தான் செய்த காரியம் சரியானது என்ற அளவில் அமைதியடைந்தானே தவிர தோழர்களின் பாராட்டுகளில் குளிர் காயவில்லை.

பிரச்சினை எதுவாக இருந்தாலும் அதைத் தீர்ப்பதில் விஜயனுக்கிருந்த திறமையும், விவேகமும், உறுதியும் தீவுக் கப்பல்வாசிகளுக்குச் சந்தேகமறத் தெரிந்து விட்டதால் அனைவரும் ஒழுங்காக நடந்து கொண்டதால் எந்தப் பிரச்சினையும் மரக்கலத்தில் உருவாகவில்லை. ஒருமாத காலம் நிம்மதியாகக் கழிந்தது. அந்த அமைதிக்கு திருஷ்டி வந்துவிட்ட மாதிரி புதியதொரு பிரச்சினையை உண்டாக்கியது கடல்.

நடுக்கடலில் அலைகள் எழும்புவது வியப்பிற்குரிய விஷயமில்லையென்றால் அன்றென்னவோ அலைகளின் எழுச்சி அசாதாரணமாக இருந்தது. சாதாரணமாக எழும்பும் உயரத்தைவிட அதிகமாக அலைகள் எழுந்தன. அந்த அலை எழுச்சி கண்ணுக்கெட்டியவரை நாற்புரமும் காணப்பட்டது. சில சமயங்களில் இருபதடி உயரத்திற்கு எழுந்தன. கடலுக்குள் ஏதோ கலக்கமடைந்தது போலவே கடலுக்குள்ளேயே அலைகள் குடைவது போலவும் இருந்தது. அலைகளுக்கு அசராத பிரம்மாண்டமான தீவுக்கப்பல் இந்த அசாதாரண ராட்சத அலைகளால் ஆடியது.

இந்த அலைகளின் பேரெழுச்சியை சிறிது நேரம் வரை கவனித்த விஜயன் அருகிலிருந்த தனஞ்ஜெயனிடம் ''கண்டாயா? நமது மரக்கலமே ஆடுகிறதே?'' என்று கேட்டான்.

''தலைவரே, சாதாரணமாக காற்றினால் உண்டாகும் அலைகள் இந்த அளவிற்கு எழுவதில்லை. அதோடு அந்த அலைகள் கடலின் உள்ளே ஐநூறு அடி ஆழம் வரை பாதிக்கக் கூடியதாக மட்டுமே இருக்கும். இந்த அலைகள் அப்படிப்பட்டதல்ல. இது கடலுக்குள்ளே இருக்கும் நில அதிர்வினால் உண்டாகும் காரணத்தினால் இதன் எழுச்சி மிகவும் அதிகம். இதன் அதிர்வுகள் கடலின் அடிமட்டம் வரை உணரப்படும். இக்கடல் பகுதியின் அடியில் நீண்டமலைத் தொடர்கள் அமிழ்ந்திருப்பதால் அவற்றின் அதிர்வுகள் நீரைப் புரட்டுகின்றன. அதனால் உண்டாகும் இந்த அலைகளுக்கு பொங்கு அலைகள் என்று பெயர். இந்தப் பொங்கு அலைகள் கடல்நீரைப் புரட்டிப் போடுவதால் நீரடியில் உள்ள உணவுப் பொருட்களை வெளியே வீசுகின்றன. கரைகள் அருகில் இருந்தால் அவ்வுணவுப் பொருட்கள் கரையில் வீசப்பட்டு கரையோர ஜீவராசிகளுக்கு உணவாகின்றன. இப்பொங்கு அலைகளால் கடல்நீர் ஒடுக்கப்பட்டு சுழல்கள் ஏற்படும். அச்சுழலில் மரக்கலங்கள் சிக்கினால் மீள்வது சிரமம்தான்'' என்றான் தனஞ்ஜெயன்.

''அப்படியானால் நம் நிலை ஆபத்தானதுதான் இல்லையா?'' என்று கேட்டான் விஜயன்.

''அது பொங்கு அலைகள் எவ்வளவு நேரம் நீடிக்கிறது என்பதைப் பொறுத்தது. இந்த அலைகளின் எழுச்சி இதே அளவில் தொடராமல் மேலும் அதிகமானால் நமது கப்பலுக்கு சிரமம் ஏற்படலாம். சுழல் உண்டாகாமல் இருந்தால் நல்லது'' என்றான் தனஞ்ஜெயன்.

''பொங்கு அலைகளின் ஆபத்து பற்றி எல்லோரிடமும் கூற வேண்டாம். என்ன ஆகிறதென்று பார்ப்போம்'' என்றான் விஜயன்.

தனஞ்ஜெயன் கூறியதுபோல் பொங்கு அலைகளின் ஆட்டம் நீடிக்கலாயிற்று. எங்கு பார்த்தாலும் கடல் பொங்கி

மேலெழுவது போல் அலைகள் மேலெழுந்து திரைகளைப் போலத் தோன்றி கடல் நீரிலேயே விழுந்தன. அப்படி விழுந்த போது கடல் மட்டத்தில் பள்ளங்கள் எழுந்தன. அப்பள்ளங்கள் சுழன்று மரக்கலத்தை உள்ளுக்கு இழுத்தபோது மரக்கலம் மூழ்கி விட்டமாதிரி தோன்றவே தோழர்கள் அச்சப்பட்டார்கள். ஆனால் மறுநிமிடமே அப்பள்ளத்திலிருந்த கடல்நீரே பேரலையாக மேலெழுந்ததால் மரக்கலம் கடலிலிருந்து வானத்தை நோக்கி தூக்கப்பட்டது. இப்படி பொங்கு அலைகள் கடலுக்குள் அமிழ்ந்தும் வானத்திற்கு உயர்ந்தும் மாறி மாறி அலைக்கழிக்கப்பட்டதால் மரக்கலம் படாதபாடு பட்டது.

''நமது கப்பலே இப்படி அலைக்கழிக்கப்படுகிறதென்றால் சாதாரண கப்பல்களின் நிலை என்ன?'' என்று தனஞ்ஜெயனைக் கேட்டான் விஜயன்.

''சாதாரண மரக்கலங்களும் இதர சிறிய கப்பல்களும் இந்த பொங்கு அலைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கவிழ்ந்து விடும். நமக்கு அந்த ஆபத்து இல்லையென்றாலும் கடலுக்குள் மறைந்திருக்கும் பாறைகள் பக்கம் போகாமல் இருக்க வேண்டியது அவசியம். அப்படி ஏதாவது பாறைகள் இருந்த சுவற்றின் மீது பொங்கு அலைகள் நம் கப்பலை வீசி விட்டால் கப்பல் நொறுங்கித் தூளாகிவிடும்'' என்றான் தனஞ்ஜெயன்.

கடலுக்குள் போய்விட்டால் நல்லதையும் கெட்டதையும் கடல்தான் தீர்மானிக்கும் என்பதை பொங்கு அலைகள் மூலம் தெளிவாகப் புரிந்து கொண்டான் விஜயன். கடலையும் கடல் நிகழ்வுகளையும் எதிர்த்து மனிதன் எதையும் சாதித்து விடமுடியாது என்பதையும் உணர்ந்தான் அவன். இரண்டு நாட்கள் வரை பொங்கு அலைகள் அம்மரக்கலத்தை தங்கள் ஆசை தீரும் அளவிற்கு விளையாடி அதில் இருந்தவர்களை ஆட்டிப்படைத்துவிட்டது. நிச்சயமில்லாத சூழ்நிலை உண்டாவது உண்மையென்றாலும் தனஞ்ஜெயன் பயந்தமாதிரி சுழல்கள் உண்டாகவில்லை. பாறைகளில் மோதவில்லை.

இரண்டு நாட்களுக்குப்பின் பொங்கு அலைகள் சுவடு தெரியாமல் மறைந்தன. கடல் பகுதி ஒன்றும் தெரியாத பேதைப் பெண்ணைப்போல அமைதியாக இருந்தது. சாதாரண

அலைகள்கூட குறைந்துபோன பிரமை உண்டாகியிருந்தது. இரண்டு நாட்களாக பாய்மரங்கள் இறக்கப்பட்டும் துடுப்பு போடாமலும் அலைகளால் மரக்கலம் அழைத்துச் செல்லப்பட்டது. அனைத்தும் தற்போது அடங்கி விட்டதால் மரக்கலப் பாதையை சரிசெய்த தனஞ்ஜெயன் மரக்கலம் வேகமாக இயங்க துடுப்புகளை வேகமாகத் துழாவுவதற்காக அடிமைகளுக்கு சமிக்ஞைகளை சங்கொலிகள் மூலம் அறிவித்தான்.

ஆனால் அந்த அறிவிப்பு வெளியாகி பல நிமிடங்களாகியும் மரக்கலம் நகரவில்லை.

''தலைவரே, கப்பல் நகரவில்லை'' என்றான் தனஞ்ஜெயன்.

''ஏன்?'' - கேட்டான் விஜயன்.

அதற்கு பதில் சொல்வது போல் அங்கு வந்த உபதலைவன் நரசிம்மன் ''தலைவரே, அடிமைகள் புரட்சி செய்கிறார்கள். உதயணன் அபாய நிலையில் இருக்கிறான்'' என்று தெரிவித்தான்.

◈◈◈

## அத்தியாயம் அறுபத்தொன்பது

# நாகதீபம்

நரசிம்மன் வந்து அடிமைகள் புரட்சி செய்வதாகச் சொன்னபோது ''இவர்கள் வேறு பிரச்சினையா?'' என்று எண்ணிக் கொண்டு உபதன்லவனிடம் ஏதோ கூறிவிட்டு நவ வீரர்களை அழைத்துக் கொண்டு கீழ்த்தளத்திற்குச் சென்றான் விஜயன். அங்கே சுமார் முப்பது அடிமைகள் உதயணனை வளைத்துக் கொண்டு மிரட்டிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டதும் பெருங்கோபம் வந்துவிட்டது விஜயனுக்கு.

''விடுங்கள் உபதலைவனை. அகலுங்கள் எல்லோரும். இல்லையென்றால் அனைவரையும் வெட்டிப் போடுவேன்'' என்று கர்ஜித்தான்.

அடிமைகள் அவனைப் பார்த்தார்களே தவிர அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை.

அதைக் கண்ட விஜயன் ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் பாய்ந்து சென்று வாளை எடுத்து வீசவே வினாடி நேரத்தில் இரண்டு அடிமைகளின் தலைகள் அறுந்து விழுந்து துடித்தன. நவவீரர்களும் செயல்பட்டதால் ஓரிரு நிமிடங்களில் பத்து அடிமைகள் தலையறுப்பட்டு மாண்டு விடவே அரண்டுபோன அடிமைகள் உதயணனை விட்டு விட்டு ஓடினார்கள். இதற்கிடையில் விஜயன் கூறியபடி நரசிம்மன் தனது தோழர்களுடன் அங்கு வந்து சேர்ந்தான். அவர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த சாட்டைகளை அடிமைகள் மீது சுளீர் சுளீரென வீசியதால் கண்டபடி அடிபட்ட அவர்கள் அலறினார்கள். ''விடாதீர்கள். இவர்கள் எல்லோரும் ஒழிந்தாலும் பரவாயில்லை. உடலிலிருக்கும் ரத்தத்தை யெல்லாம் எடுங்கள்'' என்று கூறினான் விஜயன். ஏற்கனவே இருவரை வெட்டியதால் தெறித்த ரத்தத் துளிகள் அவனது முகத்தில் சிவப்பு முத்துக்களாக விளங்க அவனது கண்கள் கடுங்கோபத்தில் சிவந்து போயிருந்ததால் காலருத்திரனைப் போலக் காட்சியளித்தான் விஜயன். அவனை அப்படியொரு கோலத்தில் உதயணன் உட்பட யாரும் கண்டதில்லையாதலால் தற்போது புதிய விஜயனைக் கண்டார்கள் அவர்கள்.

அடிமைகளால் சற்றே காயம் பட்டிருந்த உதயணன் பேச முற்பட்டு ''இவர்களது பிரச்சினை என்னவென்றால்...'' என்று ஆரம்பித்தபோது ''அடிமைகளின் வேலை அடிபணிய வேண்டியது மட்டும்தான். அவர்களுக்குப் பிரச்சினைகளை எழுப்ப உரிமையில்லை. இதை நீ உணர்ந்து ஆரம்பத்திலேயே தோழர்களை அழைத்து சாட்டையடி கொடுத்திருக்க வேண்டும். பிரச்சினைகளை காது கொடுத்து கேட்க ஆரம்பித்துவிட்டாய். அவர்களுக்கு கொழுப்பேறிவிட்டது. நீ வைத்தியரிடம் போய் சிகிச்சை செய்துகொள்'' என்று கூறிய விஜயன் தோழர்களிடம் சாட்டையடியை நிறுத்தும்படிச் சொன்னான்.

''இந்த உடல்களைக் கடலில் எறியுங்கள். இடத்தைச் சுத்தம் செய்யுங்கள். ஐம்பது பேர் இங்கேயே இருங்கள். அடிமைகள்

சற்று முரண்பட்டாலும் சாட்டையைப் பயன்படுத்துங்கள். இன்று அவர்களுக்கு உணவு தரவேண்டாம்'' என்று கூறிவிட்டு தன் அறைக்கு வந்து முகத்தைச் சுத்தம் செய்து கொண்ட விஜயன் வைத்தியர்களை அழைத்து ''இன்று எந்த அடிமைகளையும் கண்டுகொள்ளாதீர்கள். அவர்கள் கொழுப்பு அடங்கட்டும். நாளைக்கு உணவளித்து காயங்களுக்கு மருந்து போடுங்கள்'' என்றான்.

பிரச்சினை செய்பவர்களுக்கு ஏற்ப தனது அணுகுமுறைகளை விஜயன் மிகப் பொறுத்தமாக மாற்றிக் கொள்வதைக் கண்டு தீவுக்கப்பல்வாசிகள் மிகச் சிறந்த தலைவனிடம் பணிபுரிவதை உணர்ந்து பூரித்துப் போனார்கள்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அடிமைகள் ஒழுங்கிற்கு வந்தார்கள்.

மூன்று மாதங்களாக இந்தியப் பெருங்கடலில் பயணம் செய்த தீவுக்கப்பல் பூர்வக் கடல் பகுதிக்கு வந்தபோது சூறாவளியைச் சந்திக்க நேர்ந்தது. அதுவரை கடலில் எண்ணிப் பார்க்காத பயங்கரங்களைச் சந்திருந்த தீவுக்கப்பல் வாசிகள் கடலின் இந்த பயங்கரத்தையும் திறமையாகச் சந்தித்து மீண்டார்கள். சூறாவளியிலிருந்து மீண்ட தீவுக்கப்பல் அடுத்த பதினைந்து நாட்களுக்கு அமைதியாகப் பயணம் செய்து சித்திரை மாதத்து மாலை நேரத்தில் நாகதீபத்தின் வடக்கு முனையான மணிபல்லவத்தை அடைந்தது.*

தனது லட்சியம் நிறைவேற வேண்டிய தேசத்தைக் கண்ணால் கண்டபோது விஜயனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் முத்துக்கள் பூத்தன. அந்த தேசமொன்றும் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு விஜயனை வரவேற்கவில்லை. அந்த பூமியில் யார் யார் இருப்பார்கள் என்றோ எப்படி நடந்து கொள்வார்களோ என்பதெல்லாம் தெரியாத நிலை என்றாலும் நாகர்மலைத்தீவிலிருந்து அனுபவித்த பல்வேறு பிரச்சினைகளை யெல்லாம் கடந்து நாகதீபத்தை

* பக்கம் 7 மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் by வித்துவான் சா.கி. கமலநாதன் மற்றும் கமலா கமலநாதன்.

அடைந்திருந்ததால் தனது லட்சியத்தை அடைந்து விட்டமாதிரியே இருந்தது விஜயனுக்கு.

நாகதீபம் என்றும் நாகர்முனை என்றும் மட்டக்களப்பு என்றும் உன்னாசகரி என்றும் மண்முனை என்றும் த்வீப ராவணி என்றும் பலரால் அழைக்கப்பட்ட நாகதீபத்தில் விஜயன் காலடி எடுத்து வைத்த இடம் குறித்து சரித்திர ஆராய்ச்சியாளர்களிடம் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்* இவன் நாகதீபத்தின் வடபகுதியில் இருந்த மணல் திட்டுக்கு வந்தடைந்ததாகக் கூறுகிறது. மகாவம்சம் போன்ற வேறு சில நூல்கள் இன்றைய அனுராதபுரத்தையடுத்த தாமிர பன்னியில் வந்து இறங்கியதாகக் கூறுகின்றன.** அதே சமயம் தாமிரபன்னி என்ற பெயரையே விஜயன் சூட்டினான் என்றும் சிலர் கூறுகிறார்கள்.*** இக்கதையைப் பொறுத்தவரை நாகதீபத்தின் வடஎல்லையான அக்காலத்தில் பிரசித்திப் பெற்றிருந்த மணிபல்லவம் என்ற துறைமுகத்தில் விஜயன் இறங்கியதாகவே வைத்துக் கொள்வோம். பாரத தேசத்திலிருந்து அக்காலத்தில் சாவகம் போன்ற நாடுகளுக்கு கடல்மூலம் செல்பவர்கள் தண்ணீர் சேகரித்துக் கொண்டு பயணத்தைத் தொடரும் இடமாக மணிபல்லவம் இருந்திருக்கிறது. அத்துறைமுகத்தை தீவுக் கப்பலிலிருந்து கண்ட விஜயன் சற்றே மதிமயங்கினான். மாலை நேரத்தில் அத்துறைமுகம் கதிரவனின் சித்திரை மாதத்துச் சீரிய கதிர்களால் பிரகாசமாக விளங்கியது. தன் எதிர்காலமும் அப்படி இருக்க வேண்டும் என்று விரும்பியவனாய் மரக்கலத்தை நங்கூரமிடச் செய்து நாக தீப பூமியில் அனைவரையும் இறங்குவதற்கு கட்டளையிட்டான் விஜயன். ஜெம்புகெலப் பட்டிணம் என்று அழைக்கப்பட்டு வந்த மணிபல்லவம் விஸ்தாரமான மணற்பரப்பைக் கொண்ட துறைமுகமாக இருந்தது. வங்கதேசத்தை விட்டு புறப்பட்ட பின் தான் கண்ட வேறு எந்த தேசத்திலும் காணாத அகன்ற

* பக்கம் 7 மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

** பக்கம் 55 மகாவம்சம் by மகாநாமதேரா மற்றும் பக்கம் 286 தொகுப்பு நூல்கள் by மயிலை. சீனி. வேங்கடசாமி.

*** பக்கம் 274 பெரிப்ளூஸ் தொகுப்பு. ராகவன்

கடற்கரையை இந்த நாக தேசத்தில் கண்டான் விஜயன். அனைவரும் கரையை அடைவதற்கு இரவாகி விட்டதால் இரவுப் பொழுதைத் துறைமுகப் பகுதியிலேயே கழிக்கத் தீர்மானித்தான்.

கூடாரமோ பந்தலோ போட முற்படாமல் திறந்த வெளியிலேயே எல்லோரும் தங்கினார்கள். ஆனால் அன்று இரவும் சரி மறுநாள் பகலும் சரி மனிதர்கள் யாரும் துறைமுகத்திலோ அதையடுத்து கடற்கரையிலோ தலைகாட்ட வில்லை. மணி பல்லவத்தில் மனிதர்கள் யாரும் குடியிருக்க வில்லை என்பதை பிறகு தான் தெரிந்து கொண்டான் விஜயன்.

மறுநாள் நண்பகலின் போது எல்லோரையும் கடற்கரையில் கூட்டிய விஜயன். ''நல்லவேளையாக நாகதீபத்தில் நாம் காலூன்றிய இடத்தில் எதிர்ப்பதற்கு மனிதர்கள் யாருமில்லை. இது ஒரு வகையில் நமக்கு நல்லது தான். இந்த தேசத்தில் இனி நமது நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டும் என்பதை இங்கேயே தீர்மானித்துக் கொள்வது நல்லது. உங்களில் யாராவது இந்த நாட்டிற்கு இதற்கு முன்பு வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

அவனுக்குச் சரியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே நவவீரர்களை அழைத்து ''நீங்கள் ஒன்பது பேரும் இன்றிரவு புறப்பட்டுச் சென்று மணிபல்லவத்திற்கு தெற்கே மனிதர் குடியிருக்கும் பகுதி பற்றி தெரிந்து கொண்டு வரவேண்டும்'' என்றான் விஜயன்.

அதன்படி நவவீரர்கள் புரவிகளில் அன்றிரவு புறப்பட்டுச் சென்றார்கள்.

மறுநாள் காலை பொழுது விடிந்து நெடுநேரம் கழித்தே திரும்பிய அவர்கள் ''தலைவரே, இங்கிருந்து தெற்கே மூன்று* யோசனை தூரத்திற்குச் சென்றால் மக்கள் வாழும் பகுதி இருக்கிறது. அதன் பெயர் ஆனைக்கோட்டை'' என்றார்கள்.

---

* ஒரு யோசனை என்பது 15 கிலோமீட்டர் தூரமுடையது. பக்கம் 16 மகாவம்சம் by மகாநாம தேரா

அப்படிச் சொன்னவர்கள் ''அங்கேயிருந்து ஒரு மனிதனை அழைத்து வந்திருக்கிறோம்'' என்றார்கள்.

அதையடுத்து விஜயனின் முன்னால் வந்து நின்ற மனிதன் நாகரீகமானவனாகத் தோன்றினான். நல்ல உடல்கட்டும் தெளிந்த முகமும் கொண்டிருந்த அவனது கழுத்தில் நாகமணி மாலை ஒன்று காணப்பட்டது.

''வாலிபனே! உன் பெயர் என்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''நாகமுத்து'' என்று சொன்ன அந்த வாலிபன் ''தாங்கள் யார்? உங்களோடு படைவீரர்கள் வந்திருப்பதைப் பார்த்தால் நீங்கள் நாக நாட்டுடன் போரிட வந்திருப்பதாகத் தோன்றுகிறது'' என்றான்.

''நீங்கள் நாகர்களா? நாகதீபத்தை நீங்கள் தான் ஆட்சி செய்கிறீர்களா?'' என்று கேட்டான் விஜயன்.

''ஐயா, இந்த நாட்டில் முதலில் இருந்தவர்கள் நாங்களும் எங்கள் இனமும் தான். எங்களை ஒட்டித்தான் இந்த நாட்டிற்கு நாக தீபம் என்ற பெயரே ஏற்பட்டது. ஆனால் அந்த நிலை தற்போது மாறிவிட்டது. பெயரென்னவோ நாகதீபம் என்று இருக்கிறதே தவிர நாங்கள் இந்த தேசத்தை முழுவதுமாக ஆளவில்லை. வட பகுதியை நாங்கள் ஆள்கிறோம். மத்திய நாட்டை இயக்கர்களும் தெற்கு பகுதியை வேடர்களும் ஆள்கிறார்கள். எங்கள் இனம் பொதுவாக ஒரே மொழி பேசும் தமிழர் இனமாக இருந்தாலும் ஆட்சி புரியும் உரிமையின் அடிப்படையில் மூன்று இனமாகப் பிரிந்திருக்கிறோம்'' என்றான் நாகமுத்து.

''உன் விளக்கங்களுக்கு மிகவும் நன்றி வாலிபனே! இப்போது உங்கள் நாக நாட்டை ஆளும் அரசரின் பெயரென்ன?'' என்று கேட்டான் விஜயன்.

''அரசர் பெயர் பரிசி''

''நல்லது நாகமுத்து. நாங்கள் பாரத தேசத்தவர். வங்க நாட்டிலிருந்து வந்திருக்கிறோம். என் பெயர் விஜயபாகு. நீ

போய் உன் மன்னனிடம் சொல். இரண்டு நாட்களில் எங்கள் படை உங்கள் ஊரைத் தாக்கும்''

''ஐயா, நாடு விட்டு நாடு வந்திருக்கிறீர்கள். இந்த நாட்டைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியுமோ சொல்ல முடியாது. நீங்கள் உங்கள் நோக்கத்தைச் சொல்லியது போல் நானும் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். நாகநாட்டை நீங்கள் தாக்க வேண்டாம்''

''ஏன்?''

''நாகநாட்டுத் தலைநகரான ஆனைக் கோட்டை அரையோசனை விஸ்தீரணம் உள்ள சிறிய ஊர்தான். ஆனாலும் தாக்க முற்பட வேண்டாம்''

''ஒருவேளை சமாதானம் பேசச் சொல்கிறானோ?'' என்று சற்று அலட்சியமாக நினைத்த விஜயன் ''தாக்க வேண்டாம் என்றால் சமாதானம் செய்யச் சொல்கிறாயா?'' என்று கேட்டான்.

இதைக் கேட்டுச் சிரித்தான் நாகமுத்து.

''எதற்காகச் சிரிக்கிறாய்?''

''சமாதானம் என்று சொன்னீர்களே அதற்காகச் சிரித்தேன்''

''அதற்கென்ன?''

''நாகர்களைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது போலிருக்கிறது''

''தெரியாது என்றே வைத்துக்கொள்''

''அதனால் தான் தாக்க வேண்டாம் என்று சொன்னேன். தாக்கினால் தோற்றுப் போவீர்கள்'' என்று சொல்லிவிட்டு அலட்சியமாக நடந்து சென்றான் நாகமுத்து.

நாக நாட்டு மனிதன் இவ்வாறு கூறியதைக் கேட்டு வியப்படைந்தார்கள் உபதலைவர்கள்.

''யானையைப் பார்த்து பூனை அச்சுறுத்துகிறது பாவம்'' என்றான் உபதலைவன் விதுரன்.

''அரையோசனை விஸ்தீரணமே கொண்ட ஒரு நாடு. அது நம்மை மிரட்டுகிறது. வேடிக்கைதான்'' என்றான் பகீரதன்.

''ஒரே மரக்கலத்தைக் கொண்டு முப்பது மரக்கலங்களைக் கொண்ட சாவகக் கடற்படையைச் சின்னாபின்னமாக்கிய உங்களைப் போய் இவன் இப்படிப் பேசியது கேவலம். ஆழம் தெரியாமல் காலைவிட்ட கதையாக அறியாமல் உளறிவிட்டான்'' என்றான் டெமிட்ரியஸ்.

விஜயனும் ஏறக்குறைய அப்படித்தான் நினைத்தான் என்றாலும் அதிலேயே நின்று விடாமல் வேறுவிதமாக நினைத்துப் பார்த்தான்.

''நாகமுத்துவின் பேச்சை நீங்களெல்லாம் உளறல் என்று கூறுகிறீர்களா?'' என்று கேட்டான்.

''அதிலென்ன சந்தேகம்?'' என்று சொன்ன விதுரன்'' உங்களது ஆற்றல்களை அறிந்திருந்தால் இப்படி அவன் முட்டாள்தனமாகப் பேசியிருக்க மாட்டான்'' என்றான்.

''என்னைப் பற்றிய விவரங்களைத் தெரிந்திருந்தாலும் அவன் இப்படித்தான் பேசியிருப்பான்''

'எப்படிச் சொல்கிறீர்கள்?''

''உண்மையைப் பேசுவதற்கு தயக்கம் எதற்கு?''

''அவன் சொன்னது உண்மை என்கிறீர்களா?''

''ஏன்? இருக்கக் கூடாதா?''

''எதை வைத்துச் சொல்கிறீர்கள்?''

''என்னை யானை என்கிறீர்கள். யானை முதலையின் வாயில் சிக்கிக் கொண்டபோது அதைக் காக்க இறைவனே வரவேண்டியதாயிற்று''

''அப்படியானால் ஆனைக் கோட்டையை முதலை என்கிறீர்களா?''

''இருக்கலாம் என்பதுதான் சந்தேகம். அது மட்டுமல்ல. நான் வங்கதேசத்திலிருந்து இமாலயத்திற்கு கடத்தப்பட்ட போது மலைப்பாம்பு ஒன்று யானையை வீழ்த்தியதைக் கண்டிருக்கிறேன். ஆகவே நாம் யானையா பூனையா என்பதல்ல பிரச்சினை. எதிரி எப்படிப்பட்டவன் என்பதுதான் முக்கியம். சொர்ணத்தீவை வைத்தோ சாவகத்தை வைத்தோ அல்லது

நாகர்மலைத் தீவுகளை வைத்தோ நாக தீபத்தை எடை போடுவது தவறு. யானைக்கும் அடிசறுக்கும் என்பதை மறந்து விடுவார்கள். ஆனைக் கோட்டையில் நம்மைத் தோல்வி யடையச் செய்யும் அம்சம் ஏதோ இருக்கிறது. ஒன்றுமே இல்லாமல் ஒருவன் வெற்று எச்சரிக்கை விடமாட்டான். ஒருவகையில் நாகமுத்துவை நாம் பாராட்ட வேண்டும். அவன் மட்டும் எச்சரிக்கை செய்யவில்லை என்றால் நாம் சர்வ அலட்சியமாக இருந்திருப்போம். அவன் கூறியபடி தோல்வியையும் அடைந்திருக்கலாம்'' என்று சொன்ன விஜயன் நவவீரர்களை நோக்கி ''நீங்கள் ஆனைக்கோட்டையைப் பார்த்தீர்களா?'' என்று கேட்டான்.

''இல்லை'' என்றார்கள் அவர்கள்.

''நேரிலேயே பார்த்து தெரிந்து கொள்வோம்'' என்று கூறிய விஜயன் ''தோழர்களே, இதுவரை நாம் கடலிலும் கடல் சார்ந்த பகுதியிலும் சம்மந்தப்பட்டிருந்தோம். சாவகக் கடல்போர் ஒன்றைத்தவிர வேறு எங்கேயும் நாம் படையாக செயல்பட்டுப் போரிடவில்லை. வங்க தேசத்திலேயே நாம் போரில் ஈடுபட வில்லை. முதன் முறையாக நாகதீபத்தில் ஈடுபடப் போகிறோம். நமக்குப் பெரிய அளவில் படை எதுவும் இல்லை. மொத்தத்தில் எழுநூறு பேர்தான் இருக்கிறோம். அடிமைகளைப் போரில் ஈடுபடுத்த முடியாது. ஆகவே நாகர்படை நமது படையைவிட எப்படிப் பார்த்தாலும் அதிகமாகத்தான் இருக்கும். ஆகவே நாம் திறம்பட செயல்பட வேண்டியது மட்டுமல்ல. நம்மில் யாரையும் இழக்கக் கூடாது'' என்றான்.

விஜயனின் விளக்கத்திற்குப் பின்பே நிலைமையின் கடுமையை அனைவரும் உணர்ந்தார்கள்.

அன்றிரவே ஆனைக்கோட்டையை நோக்கிப் புறப்பட்டான் விஜயன்.

மறுநாளுக்கு மறுநாள் ஆனைக்கோட்டையை அடைந்தான் விஜயன்.

ஆனால் ஆனைக்கோட்டை இப்படி இருக்கும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

◈◈◈

## அத்தியாயம் எழுபது

# ஆனைக்கோட்டை

மணிபல்லவத்திலிருந்து மூன்று யோசனை தூரத்தில் இருந்த ஆனைக்கோட்டையை அடைய இரண்டு நாட்களாகும் என்று கணக்கிட்டான் விஜயன். எனவே அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்து கொண்டான். தீவுக் கப்பலில் இருந்த உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் இதர பொருட்களையும் இறக்கினான். மரக்கிளைகளை வெட்டி தட்டிகளாகக் கட்டி அவற்றின்மீது அவற்றை மூட்டைகளாக வைத்து அடிமைகளைத் தூக்கிச் சுமக்கச் செய்தான். மொத்தம் இருந்த தோழர்களை உபதலைவர்களுக்கு சமமாக ஒதுக்கி அவர்கள் தலைமையின் கீழ் அவர்களை அணிவகுத்து வரும்படிச் செய்தான். ஏறக்குறைய தொண்ணூறு தோழர்கள் உதயணன், டெமிட்ரியஸ், விதுரன் பகீரதன், நரசிம்மன், தனஞ்ஜெயன் மற்றும் விகர்ணன் தலைமையில் பூரண ஆயுதபாணிகளாக அணிவகுத்தார்கள். நவவீரர்கள் முகப்பில் செல்ல அவர்களுக்குப் பின் விஜயனும், பணியாளர்களும், அடிமைகளும் கடைசியில் தோழர்கள் படையுமாக புறப்பட்டார்கள். வழியில் மூன்று இடங்களில் தங்கி உணவுண்ணவும் இளைப்பாறவும் அனுமதியளித்தான் விஜயன். எனவே படை எந்தவித அசதியுமின்றி பயணம் செய்தது. விஜயனுக்கு முன்னால் புரவியில் சென்ற வீரர்கள் பறைகளைக் கொட்டியபடிச் சென்றார்கள். இரண்டாம் நாள் இரவு ஆனைக் கோட்டையை அடைந்தது படை. அங்கு சென்றதுமே பறைகள் கொட்டுவதை நிறுத்தச் சொன்னான் விஜயன். அங்கு வரும்வரை ஆனைக்கோட்டையைப் பற்றி பிரமாதமான அபிப்ராயம் எதுவும் அவனிடமில்லை. ஏதோ பழங்காலத்திலிருந்து அப்பெயர் வழங்கி வந்திருக்கலாம் என்றுதான் எண்ணி யிருந்தான். ஆனால் அங்கு வந்து பார்த்த பிறகுதான் இப்படியொரு எண்ணம் தனக்கு வராமல் போய்விட்டதே என்று வியந்தான். ஆனைக்கோட்டையைச் சுற்றி யானைகள் வட்ட

வடிவில் நிறுத்தப்பட்டிருந்ததை அந்த இரவுப் பொழுதில் கண்டபோது யானைகளால் காக்கப்படுவதால்தான் இதற்கு ஆனைக்கோட்டை என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்று நினைத்த அவன் உபதலைவர்களைப் பார்த்து ''பார்த்தீர்களா?'' என்று கேட்டான்.

''முட்டாள்தனமாக அல்லவா இருக்கிறது? ஊரைச் சுற்றி இப்படி யானைகளை நிறுத்துவது முட்டாள்தனமில்லையா தலைவரே? நாம் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு யானைகளின் மீது அம்பு மழையைப் பெய்தால் யானைகள் ஊரை நோக்கித்தானே திரும்பி ஓடும்? அவற்றைத் துரத்தி நாமும் போனால் நாம் செய்ய வேண்டிய சேதத்தை யானைகளே செய்து விடுமல்லவா?'' என்று கேட்டான் விதுரன்.

விஜயன் அதற்கு பதில் சொல்லாமல் ''நாகர்கள் தலைநகரத்திற்கு கோட்டை எதுவுமில்லை. கோட்டைச் சுவற்றைப் போல் யானைகளை நிறுத்தியிருக்கிறார்கள்'' என்று சொல்லிவிட்டு ''யானைகளுக்குப் பின்னால் நாகர் படை இருந்து யானைகளை நம்மீது விரட்டி பின்னாலிருந்து கொண்டு தாக்கினால் நாம் அழிந்துபோக வாய்ப்பிருக்கிறது அல்லவா?'' என்று கேட்டான்.

''தாங்கள் கூறுவது உண்மையாகவே இருக்கட்டும். நாம் இங்கு வந்து சேர்ந்து விட்டது நாகர்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லவா? ஏன் நம்மை வந்து தாக்கவில்லை?'' என்று கேட்டான் பகீரதன்.

''நாக முத்துவிடம் நாம் தானே தாக்குவதாகச் சொன்னோம்? அதனால்தான் அவர்கள் தாக்கவில்லை'' என்று சொன்ன விஜயன் ''நமது எண்ணிக்கை கப்பலுக்குள் மிகவும் அதிகம். இங்கேயோ மிகவும் சொற்பம். சொற்பமான நமக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். தங்கள் மீதுள்ள நம்பிக்கையால் தாக்காமல் இருக்கிறார்கள்'' என்றான்.

''அதுதான் உண்மையென்றால் அவர்களைத் தாக்க இதுதான் தகுந்த நேரம். கோட்டை இருண்டு கிடக்கிறது. நாம் அம்பு மழைகளை யானைகள் மீது எறிந்து அவற்றை ஊருக்குள் துரத்தி

பின் தொடருவோம்'' என்றான் விதுரன். பகீரதனும் அதை ஆமோதித்தான்.

ஆனால் விஜயன் அவர்களது விருப்பங்களை நிறைவேற்றாமல் ஆனைக்கோட்டையை ஆராய்ச்சிக் கண்களுடன் பார்த்தான். எங்கேயும் விளக்கு எதுவும் காணப்படாததால் இருட்டே வியாபித்துக் கிடந்தது. தனது நவவீரர்களில் ஒருவனை அழைத்து ''நமக்கு யானைகளுக்கும் உள்ள தூரம் எவ்வளவு இருக்கும்? இங்கிருந்து ஓர் அம்பை எறிந்தால் அது யானையின் மீது போய் விழுமா?'' என்று கேட்டான்.

''அதற்குச் சற்று முன்நோக்கிப் போக வேண்டும்'' என்றான் நவவீரர்களில் ஒருவனான அபயன்.

''அப்படியானால் நீ மட்டும் சற்று முன்னேறி யானையின் மீது அம்பெறிந்து பார்'' என்றான் விஜயன்.

விஜயனின் போக்கு உபதலைவர்களுக்குப் பிடிபடவில்லை. எதற்கு இதெல்லாம் என்பதுபோல் நினைத்தார்கள்.

இதற்கிடையில் அபயன் சற்று முன்னால் சென்று அம்பெறிந்துவிட்டு வந்தான்.

ஆனால் யானைகள் இருந்த பகுதியிலிருந்து எந்த அசைவையும் காணோம்.

விஜயன் தோழர்களிடம் பந்தங்களைக் கொளுத்தச் சொல்லிவிட்டு அடிமைகள் ஐம்பது பேரை அழைத்து அவர்களிடம் வேல்களைக் கொடுத்து யானைகளை நெருங்கிப் போய் தாக்குங்கள் என்று கூறிவிட்டு சங்கொன்றை எடுத்து லேசாக ஒலித்தான்.

பந்த ஒளி விரைவிலேயே அங்கு பிரகாசத்தைத் தந்தன.

அடிமைகள் யானைகளை நெருங்கி வேல்களை எறிந்து கூச்சலிட்டபோது யானைகளின் வயிற்றுப் பகுதி திறந்து. அதிலிருந்து சரமாரியாக அம்புகள் புறப்பட்டன. அதைக் கண்டு அடிமைகள் திரும்பி ஓடினார்கள்.

அதோடு யானையின் வயிற்றுப் பகுதி மூடிக்கொண்டது.

''பார்த்தீர்களா நடந்ததை? நாமெல்லாம் நாகரது ஊரை யானைகள் நின்று சுவரைப் போல பாதுகாப்பதாக நினைத்தோம். அவற்றைத் தாக்குவது பற்றி பேசினோம். எனக்கு மட்டும் உள்ளூரச் சந்தேகம் இருந்தது. அவை உயிருள்ள யானைகளாக இருந்தால் ஒன்று கூடவா சத்தம் போடாது அதை உறுதி செய்து கொள்ளத்தான் அபயனை முன்னேறிப்போய் அம்பெறியும்படிச் சொன்னேன். அந்த அம்பு மட்டும் உயிருள்ள யானை மீது பட்டிருந்தால் அது பிளிறியிருக்கும். அப்படி எதுவும் நடக்காததால் எனது சந்தேகம் அதிகரித்தது. ஆகவே தான் உங்களை அனுப்பாமல் அடிமைகளை அனுப்பி வேலெறியச் சொன்னேன். அதிக அளவில் நாம் தாக்கியதால் நாகர்களும் பதிலடி கொடுத்தார்கள். ஊரைச் சுற்றி நிற்பது யானைகளல்ல. இரும்பாலான பொறியை அமைத்திருக்கிறார்கள். அப்பொறிக்குச் சதக்னி* என்று பெயர். அதை இயக்கினால் நூறு அம்புகள் எதிரே பாய்ந்து வந்துவிழும். இப்படி ஒவ்வொரு யானையின் வயிற்றிலும் ஒரு சதக்னி இருக்கும். நாம் இந்த இரவில் அவசரப்பட்டு யானைகளை நெருங்கிப் போய் தாக்க முற்பட்டிருந்தால் சதக்னிகள் நம்மை அழித்திருக்கும். அவர்களாகத் தாக்க முற்படாததற்கு காரணமும் இதுதான்'' என்று சொன்ன விஜயன் ''அவசரமோ அலட்சியமோ வேண்டாம். நாகர்களைத் தாக்குவது பற்றி இப்போது சிந்திப்போம். விடிந்த பிறகு நடவடிக்கை எடுப்போம். அதேசமயம் எதிரியை கண்காணிப்பதில் அலட்சியம் வேண்டாம்'' என்றான்.

விஜயன் ஆனைக்கோட்டையைத் தாக்குவது பற்றி முனைந்தபோது உபதலைவர்களுக்கு வியப்பாக இருந்தது. சாவகத்தின் கடற்படையை முறியடிக்க முனைந்தபோது கூட அவ்வளவாகத் தேவைப்படாத ஆலோசனை அரை யோசனை விஸ்தீரணமே உள்ள ஆனைக்கோட்டையைத் தாக்கத் தேவைப்பட்டது அவர்களுக்கு ஜீரணிக்க முடியாததாக

* சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் பாகம் 2 அத்தியாம் 18 பக்கம் 240 தமிழாக்கம் ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா

இருந்தது. இருந்தாலும் விஜயனின் நிதானத்தை மதித்து அவன் கூறியதைக் கேட்கலானார்கள்.

''தோழர்களே, இப்போதைய நிலையில் நமக்கு எதிரியின் தரப்பில் தெரியும் வெளிப்படையான ஆயுதம் எந்திர யானைகள் தான். அவை மொத்தம் எத்தனை என்பது நமக்குத் தெரியாது. ஊரைச்சுற்றிலும் இந்த எந்திரயானைகள் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. ஏனென்றால் இந்த யந்திரயானைகள் சிலைகளல்ல. பொறிகள். அவற்றை நகர்த்த முடியும். தேவையானபடி நகர்த்தியும் திருப்பியும் சதக்னியை இயக்க முடியும். அவற்றையும் இயக்கி அவைகளுக்குப் பின்னால் நாகர் படையும் வந்தால் சொற்ப எண்ணிக்கையில் உள்ள நாம் அழிவது நிச்சயம்'' என்றான் விஜயன். இவ்வாறு சொன்ன விஜயன் ''நம்மிடம் எரிநட்சத்திர பொருள் கையிருப்பில் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''எதுவுமில்லை தலைவரே'' என்றான் ஆயுதங்களுக்கு பொறுப்பு வகித்தவனான உபதலைவன் நரசிம்மன்.

''எரிநட்சத்திரப் பொருள் மட்டும் நம்மிடம் இல்லாது போயிருந்தால் சாவகக் கப்பல்களை நாம் அழித்திருக்க முடியுமா? அதேசமயம் அது இப்போது நம் கைவசம் இருந்தால் பெரிதாக எதையும் சாதிக்க முடியுமா?'' என்று கேட்ட விஜயன் ''நாமாக நாகரைப் போய் தாக்க வழியில்லை. அவர்கள் தாக்க வேண்டும். நம்மை நோக்கி இழுக்கவேண்டும். அவர்களது படையைப் பிரித்து தாக்கவேண்டும். அதுபற்றி விடிந்த பின் முடிவுக்கு வரலாம்'' என்று கூறிவிட்டு அனைவரையும் அனுப்பி வைத்தான்.

மறுநாள் காலை பொழுது விடிந்ததுமே விஜயன் இருந்த பகுதியில் ஆனைக்கோட்டையிலிருந்து வந்து விழுந்தது ஓலை தாங்கிய ஓர் அம்பு. அதையெடுத்து படிக்கச் சொன்னான் விஜயன்.

''விஜயபாகு! வீண் கற்பனையும் வேண்டாத வேலையும் வேண்டாம். ஆனைக்கோட்டையைப் பிடிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு இங்கிருந்து சென்று விடுவதானால்

அனுமதிக்கிறேன். இல்லையென்றால் அழிவுதான்'' என்று நாகஅரசன் பரீசி செய்தியனுப்பியிருந்தான்.

அவனது ஓலை படிக்கப்பட்ட மறுநிமிடத்தில் வானத்திற்கு வந்தது ஒரு பறவை. அது தனது மூக்கில் கவ்வியிருந்ததொரு பொருளை கீழே எறிந்துவிட்டுப் பறந்தது. அதை அடிமையொருவன் எடுத்தான். அவன் அதை தொட்டதுமே அப்பொருள் பிரகாசமான ஒளியை உண்டாக்கி வெடித்தது. அதில் அந்த அடிமையும் வெடித்துச் சிதறினான். அதையடுத்து ஆனைக்கோட்டையிலிருந்து அதே போன்ற பொருட்கள் இரண்டு வந்துவிழுந்தன. அதை மற்றொரு அடிமை தொட அவனும் முன்பு நடந்தது போலவே ஒளிவெள்ளத்தில் வெடித்துச் சிதறினான். அவனைப் போலவே கழுகொன்று அப்பொருளைக் கவ்வியதும் வெடித்துச் சிதறியது. அதுபோன்ற பொருட்கள் மேன்மேலும் ஆனைக்கோட்டையிலிருந்து வீசப்பட்டன.

''யாரும் அதை நெருங்க வேண்டாம். தொட வேண்டாம்' என்று பெரிதாகக் குரல் கொடுத்தான் விஜயன்.

''இப்பொருளை மகத நாட்டில் கேள்விப்பட்டிருக்கிறேன். இதற்கு அக்னியோகம் என்று பெயர். பல பொருட்களால் வடிவமைக்கப்பட்ட இப்பொருள் தீக்குச்சியைப் போன்றது. பிறபொருட்கள் பட்டாலோ அல்லது உரசினாலோ இதுபோல பிரகாசத்தை வெளிப்படுத்தி வெடிக்கும்.* ஆகவே யாரும் அவற்றைத் தொடவேண்டாம்'' என்றான் விஜயன்.

அவன் யோசித்துச் செயல்பட இடமளிக்காத எதிரிகள் அடுத்து அதேவிதமான பொருட்களை அம்புகள் மூலம் எய்தார்கள். அது பூமியில் பட்டு தைத்த இடம் பிளவுபட்டு பிரகாசமாக எரிந்தது. வெற்றுத் தரையில் இதுபோல பல இடங்களில் தீப்பற்றி எரிந்தன. யந்திர யானைகள் நகரத் துவங்கி அவற்றின் வயிற்றுப் பகுதி திறந்தது. உள்ளேயிருந்து சதக்னி அம்பு மழையைப் பொழிந்தது. சுமார் ஆறு யந்திர யானைகள் அவ்வாறு அசைந்து அம்புகளை எய்யவே தனது படைகளைப்

* சாணக்கியரின் அர்த்தசாஸ்திரம் பாகம் 13 அத்தியாயம் 4

பின்வாங்கச் செய்தான் விஜயன். அதேசமயம் யந்திர யானைகளுக்குப் பின்னால் நாகர்களின் புரவிப்படை வெளிப்பட்டதைக் கண்டான். இனி தாக்குதலுக்கு இடமில்லை என்பதைப் புரிந்து கொண்டு சமாதானத்தை விரும்பும் தாரைகளை ஊதச் சொல்லியும் வெள்ளைக் கொடிகளை ஆட்டச் சொல்லியும் கட்டளையிட்டான்.

அவனது முயற்சிக்கு உடனடியாக பதில் கிடைத்தது. யந்திர யானைகள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பின. அம்பு மழை நின்றது. தீப்பற்றும் உருண்டைகள் எரிவதும் நிறுத்தப்பட்டன. புரவி வீரர்கள் பின்வாங்கிக் கொண்டார்கள். ஆனைக்கோட்டையிலிருந்து நாகக் கொடிகளைத் தாங்கிய பத்து வீரர்கள் வெளிப்பட்டார்கள். விஜயனிடம் வந்த அவர்கள் ''இங்கேயே இருங்கள். நாக அரசர் உங்களை வந்து சந்திப்பார்'' என்று கூறி அணிவகுத்து நின்றார்கள்.

சில நிமிடங்களில் வெள்ளைப் புரவிகள் பல வெளிப்பட்டன. அவற்றில் ஒன்றில் கம்பீரமாக அமர்ந்தபடி வந்தான் நாக அரசன் பரீசி.

விஜயனுக்கு அருகில் வந்ததும் புரவியைவிட்டு இறங்கிய அவன் இரு தரப்பிலும் எல்லோரையும் கணிசமான தூரத்திற்கு விலகியிருக்கும்படி கூறினான். தன் தோழர்களுக்கு விஜயனும் சைகைகாட்டவே அவர்களும் ஒதுங்கி நின்றார்கள்.

நாகஅரசன் பரீசி வயதானவனாக இருந்தான். இருந்தாலும் வயதை மீறிய மிடுக்கு அவனிடம் இருந்தது. கண்கள் கூர்மையாக இருந்தன. நீண்ட தாடியும் முறுக்கேறிய மீசையும் நெற்றியில் வரையப்பட்டிருந்த நாக உருவமும் அவனுக்குக் கம்பீரத்தைத் தந்திருந்தன.

அருகில் இருந்த பாறையில் சகஜமாக அமர்ந்து கொண்ட அவன் விஜயனையும் அமரச் சொன்னான். விஜயன் அமர்ந்ததும் ''ஏன் போரை நிறுத்திவிட்டாய் விஜயபாகு? பயந்து விட்டாயா?'' என்று கேட்டான் நாக அரசன்.

''நான் போரைத் துவங்கவே இல்லை. துவங்காத போரை எப்படி நிறுத்தமுடியும்?'' என்று கேட்டான் விஜயன். அவன் குரலில் உணர்ச்சியும் இல்லை.

''நிறுத்தும்படி தாரைகளை ஊதினாயே?''- விஜயனின் கண்களை ஊடுறுவும்படி பார்த்துவிட்டுக் கேட்டான் நாகஅரசன்.

''போரிட வேண்டாம் என்று எங்களுக்கு ஓலை அனுப்பிவிட்டு நீங்கள் போரை துவக்கிவிட்டீர்கள். அதை நிறுத்தவே தாரைகளை ஊதச்சொன்னேன்.''

''சமாதானத் தாரைகள் தானே அவை?''

''ஆமாம்''

''சமாதானம் கோரியதற்குக் காரணம் பயம் தானே?''

''நீங்கள் அந்த வார்த்தையில் அழைக்க விரும்பினால் எனக்கு ஆட்சேபனை இல்லை''

''சாதுரியமாக தோல்வியை மறுக்கிறாய். ஆனாலும் நீ விவேகி''

''நீங்கள் எங்களுக்கு எச்சரிக்கை விடுத்தபோது நான் விவேகியாக இல்லை. ஆனால் உண்மை நிலையை அறிந்தபோது போரைத் தவிர்க்க விரும்பினேன். தோல்விகள் எனக்குப் பிடிக்காது என்றாலும் இல்லாத வெற்றிகளைத் தேடி வீண் முயற்சியில் இறங்க மாட்டேன்''

''நான் பயன்படுத்திய ஆயுதங்கள் குறைவு. முழுமையாகப் பயன்படுத்தியிருந்தால் உங்களில் ஒருவன் கூட மீண்டிருக்க மாட்டீர்கள். அந்த வகையில் எங்களிடம் அபூர்வ ஆற்றலுடைய ஆயுதங்கள் இருக்கின்றன.*

''இப்படி அபூர்வ ஆயுதங்களைக் கொண்ட நீங்கள் இந்த நாட்டை ஏன் முழுவதுமாக ஆளவில்லை? இயக்கர்களை ஏன் வெல்லவில்லை?''

''சரியான கேள்வியைத் தான் கேட்டாய் விஜயபாகு. உங்கள் எண்ணிக்கை வெறும் கையளவு. உங்களை அழிக்க என் ஆயுதங்கள் போதும். ஆனால் இயக்கர்கள் நிலை அதுவல்ல.

* பக்கம் 16 மகாவம்சம் தொகுப்பு-மகாநாம தேரா தமிழில் ஆர்.பி.சாரதி

ஆயிரக்கணக்கில் கூட்டம் கூட்டமாக இருக்கிறார்கள். அவர்களை எதிர்ப்பதும் அழிப்பதும் எளிதல்ல. அதோடு நாங்கள் பிரிந்து கிடந்தாலும் இனத்தாலும் மொழியாலும் ஒன்று பட்டவர்கள். ஆகவே நான் என் இனத்தாரோடு நாகதீபத்தை இங்கே உருவாக்கிக் கொண்டேன். அதற்கு முக்கிய காரணம் இன்னொன்றிருக்கிறது''

''அதென்ன காரணம்?''

சொன்னான் நாகஅரசன்.

வியந்தான் விஜயன்.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்தொன்று

# பரீசியின் உதவி

நாகர்கள் அரசை வடக்குப் பகுதியைத் தாண்டி விஸ்தரிக்க விரும்பாததற்கு மற்றொரு காரணம் இருப்பதாகச் சொன்ன நாகஅரசன் பரீதி விஜயனைப் பார்த்து'' என்னைக் கட்டுப்படுத்தியவர் பகவான் புத்தர்'' என்றான்.

இதைக்கேட்டு பெரும் வியப்பிற்கு ஆளான விஜயன் ''அவரா? பகவான் புத்தரா? அவரா உங்களைக் கட்டுப் படுத்தியது?'' என்று கண்கள் விரிய கேட்டான்.

''ஆம். புத்தபிரான் இந்த நாகதீபத்திற்கு உபதேசம் செய்வதற்காக மூன்று முறை இத்தீவிற்கு வானகம் மூலம் வந்தார். முதலில் வந்தது எங்களது மணிபல்லவத்திற்குத்தான். அங்கே எல்லோருமாக அவரை வணங்கி வரவேற்று ஆனைக் கோட்டைக்கு அழைத்துச் சென்றோம். இரண்டு நாட்களுக்கு மகா உபதேசம் செய்த பகவானிடம் நான் என் நாட்டை விஸ்தரிக்க விரும்புவதாகச் சொன்னபோது ''ஆசையை விடும்படி நான் உபதேசித்தேன். நீயோ ஆசையை நிறைவேற்ற விரும்புகிறாய். இது முரண்பாடு அல்லவா?'' என்று என் அறியாமையைச் சுட்டிக்காட்டிய அவர் ''இருக்கும் இடமே போதும். இங்கிருந்தபடி என் உபதேசங்களைப் பின்பற்றி

நடவுங்கள். ஆசையைவிட ஆசையாய் இருங்கள்'' என்று அறிவுறுத்தினார். தெய்வவாக்கு அது. அதை நான் மீறத் தயாராக இல்லை'' என்றான் நாகஅரசன்.

விஜயனுக்கு தனது லட்சியம் பற்றியும் அது குறித்து இமாலயத்தில் தேவ புத்தர் இட்ட கட்டளை பற்றியும் நினைவுக்கு வந்தது. தேவ புத்தரைப் போல நாகநாட்டு அரசனும் புத்தரை நேரில் சந்தித்ததாகக் கூறியதால் அவனையும் தேவ புத்தராகவே நினைத்த விஜயன் தன்னைப் பற்றியும் தனக்கு தரப்பட்ட லட்சியம் பற்றியும் தனது கடல்பயணம் பற்றியும் ஒன்று விடாமல் கூறினான்.

தற்போது பரீசிக்கு பெருவியப்பு உண்டாயிற்று.

''அதிசயம்! அதிசயம்! நீ இப்படிப்பட்டவனாக இருப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சாகசங்களைப் புரியும் வீரம் மட்டும் உன்னிடம் இல்லை. சமரசத்திற்குரிய விவேகமும் இருக்கிறது. நீ எடுத்துக்கொண்ட லட்சியத்திற்கு நீ பொறுத்த மானவன். வா. கோட்டைக்குள் போவோம்'' என்று கூறிய நாகஅரசன் விஜயனின் படைகளை மரியாதையோடு உள்ளே அழைத்து வரும்படி தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

அன்று நண்பகலில் அனைவருக்கும் சுவையான விருந்தளித்தான் நாகஅரசன். பலமாதங்களுக்குப் பின் அறுசுவை விருந்தைக் கண்டதும் தோழர்கள் ஆனந்தத்துடன் வயிறார உண்டார்கள். போரைப் பற்றிய கலக்கத்தில் விடிந்த பொழுதானது இப்படி போரே இல்லாமல் விருந்தில் முடிந்தவிதம் அவர்களுக்கெல்லாம் இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அதேசமயம் மகாவீரனான விஜயன் வீரத்தைக் காட்ட வேண்டிய இடங்களில் காட்டி தந்திரங்களைப் புரியவேண்டிய இடங்களில் புரிந்தாலும் சண்டைபோட வந்த இடத்தில் சமாதானத்திற்கு முன்வரத் தயங்காததைக் கண்டபோது ''இவன் லேசுப்பட்டவன் அல்ல. சாம்ராஜ்யத்தை உருவாக்கப் பிறந்தவன்'' என்று சிலாகித்தார்கள். இவன் நாகஅரசனிடம் சமாதானம் கோரியதுகூட ஒருவகையில் வெற்றி தான் என்று கருதினார்கள்.

விருந்து முடிந்தபின் தனது சிறிய அரண்மனைக்கு அழைத்துச் சென்ற நாகஅரசன் ''அங்கே முத்துக்களாலான பிரதான ஆசனத்தில் அமராமல் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்தபோது தங்கள் ஆசனத்தில் ''தாங்கள் ஏன் அமரவில்லை?'' என்று கேட்டான் விஜயன்.

''உட்கார முடியாது விஜயபாகு. அதில் புத்தர் வீற்றிருக்கிறார்'' என்றான் நாகஅரசன்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''இந்த ஆசனத்திற்கு மணிபல்லங்கம் என்று பெயர். மகான் புத்தர் இங்கே வருகை தந்தபோது அவருக்காக அளிக்கப் பட்டது.* ஆனால் மகான் அதில் அமரவில்லை. ஆசனத்தை தொட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அன்றிலிருந்து அவர் இந்த் ஆசனத்தில் சூட்சுமமாக வீற்றிருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம். இதற்கு ராஜமரியாதையை அளித்து தினமும் நாங்கள் வணங்குகிறோம்''

இதைக் கேட்டதும் மணிபல்லங்கத்தை வணங்கினான் விஜயன்.

பிறகு நாகஅரசனைப் பார்த்து ''தாங்கள் தான் என் லட்சியம் நிறைவேற உதவவேண்டும்'' என்று கேட்டான்.

''என்ன உதவி வேண்டும்?''என்று கேட்டான் நாகஅரசன்.

''நானும் என்படைகளும் புரவிப் படையாக மாறவேண்டும். அதற்குப் புரவிகள் வேண்டும். ஆயுதங்களையும் உணவுப் பொருட்களையும் கொண்டு செல்ல வண்டிகள் வேண்டும். அனைத்திற்கும் என்ன விலை உண்டோ அதைத் தந்துவிடுகிறேன்''

''எப்போது நீ மகான் புத்தரின் தூதுவனாக வந்தாயோ அப்போதே நாம் நண்பர்களாகி விட்டோம். நண்பர்கள் உதவிகளை விற்பனை செய்வது கிடையாது. உனக்கு

* பக்கம் 78 ஆய்வுக் கட்டுரைகள் by மயிலை. சீனி. வேங்கடசாமி.

வேண்டியவை கிடைக்கும். உன் லட்சியத்திற்கு நான் தரும் பரிசாக அவற்றை ஏற்றுக்கொள்''

இவ்வாறு சொன்ன நாகஅரசன் இரண்டு நாட்களில் எல்லாவற்றையும் தருவித்தான். விஜயனின் தலைமையில் கம்பீரமான புரவிப்படை தயாராக நின்றது. ஆயுதங்களும் உணவுப் பொருட்களும் பாரவண்டியில் ஏற்றப்பட்டு அவற்றை அடிமைகள் இயக்கினார்கள்.

விஜயனைக் கட்டித்தழுவி விடைகொடுத்த நாகஅரசன் ''விஜயபாகு! நீ செல்லும் வழி காட்டாறுகளும் முரட்டு மலைகளும் அடர்ந்த காடுகளும் நிறைந்தது. இதில் பயணம் செய்வதே சாகசமானதாக இருக்கலாம். உனக்கு வழிகாட்ட பத்து பேர்களை அனுப்புகிறேன். அவர்களைப் பின்பற்றிச் செல். முறையான பாதைகள் இல்லாததால் ஒருநாளைக்கு இரண்டு யோசனை தூரம் பயணம் செய்வதே சிரமம் தான். வழிநெடுக பறைகளையும் வேட்டுக்களையும் முழங்க விட்டபடிச் செல். அப்போது தான் காட்டு விலங்குகள் விலகி ஓடும். பதினைந்து நாள் பயணத்திற்குப்பின் வழித்தடம் சற்று இலகுவாக இருக்கும். அந்த இடத்தை அடைந்தபின் அங்கிருந்து ஐந்துநாள் பயணம் செய்தால் இயக்கர்கள் வாழும் பகுதி இருக்கிறது. இயக்கர்கள் பலமானவர்கள். அவர்களை எதிர்கொள்வதற்கு நிறைய ஆற்றல் வேண்டும். உன்னிடம் அது இருக்கிறது என்றாலும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது'' என்று கூறிவிட்டு புத்தபிட்சு ஒருவரை அறிமுகப்படுத்தினார்.

''இவர் உபதிஸ்ஸர். மகாதுறவி. எனக்கு குரு. இனி இவர் உனக்கு குருவாக இருப்பார். தேவையான ஆலோசனைகளைச் சொல்வார். உன்லட்சியம் நிறைவேற என் வாழ்த்துகள். புத்தம் சரணம் கச்சாமி''

★★★

நாகதீபத்தில் தான் கால் பதித்த வேளை நல்ல வேளை தான் என்ற நினைப்போடு ஆனைக்கோட்டையிலிருந்து பயணத்தைத் தொடர்ந்தான் விஜயன். தனது படையை புரவிப் படையாக மாற்றியது பலவிதங்களில் ஆதாயமானது என்றாலும் தங்களைச் சுமக்கும் புரவிகளைப் பராமரிக்க வேண்டிய கூடுதல் கட்டாயம்

விஜயனுக்கு ஏற்பட்டது. புரவிகளைக் காட்டுப்பாதையிலும் முரட்டு மலைகளிலும் நடத்திச் செல்வது என்பது சாமானியமான வேலையாக இல்லை. அதோடு குறுக்கிட்ட ஆறுகளைக் கடக்க முடியாமல் சுற்றுவழிகளைத் தேர்ந்தெடுத்த தால் பயணமும் நீண்டது. ஓய்வெடுக்க வேண்டிய அவகாசங்களும் அதிகரித்தன. புரவிகளின் விருப்பத்திற்கேற்ப பயணம் செய்யவேண்டியதாக இருந்தது. ஓரிரு இடங்களில் மக்கர் செய்த புரவிகளை சரிசெய்ய முடியாமல் அங்கேயே கைவிட வேண்டியதாகவும் இருந்தது. மற்றபடி புரவிகள் அனைத்துமே பழக்கப்பட்ட போர்ப் புரவிகளாதலாலும் அவற்றின் மீது பயணம் செய்தவர்கள் புரவிச் சவாரியில் ஓரளவிற்கு பயிற்சி பெற்றிருந்ததாலும் புரவிகளால் அதிகம் அசதி வரவில்லை.

வழிநெடுக இயற்கையானது தனது பசுமை செழிப்பை தாராளமாக விருந்தாக்கியிருந்தது. தனது வங்கதேசத்தை விடவும் இதர வட பாரத தேசங்களைவிடவும் நாகதீபம் இயற்கை எழிலில் அபார அழகைப் பெற்றிருந்ததாகவே தோன்றியது விஜயனுக்கு. அவனது கண்களில் விரிந்த மலைகளும் காடுகளும் மனிதர்களின் கைப்படாமல் கண்களில் மட்டுமே பட்டிருந்ததாலோ என்னவோ கன்னித் தன்மையை இழக்காத இளம் பெண்களைப்போல பொலிவோடு விளங்கின. பல மாதங்களாக கண்டறியாத அழகின் அமைதியையும் அமைதியான அழகையும் கண்களால் பருகிய விஜயன் தன்னையே மறந்தான்.

தன்னை உணர்ந்து பயணம் செய்த சமயங்களில் புத்த பிட்சுவான உபதிஸ்ஸரிடம் நாக தீபத்தைப் பற்றிய சரித்திர மற்றும் புவியியல் விவரங்களை விஜயன் கேட்டறிந்தான். துறவி என்ற அடையாளம் காட்டப்பட்ட அந்த பிட்சுதான் துறவறத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களில்தான் எத்தனை அறிவு கொண்டவர் என்பதை விஜயனுக்கு அடையாளம் காட்டினார்.

''தாங்கள் துறவியாக இருந்து கொண்டு இத்தனை விஷயங்களை அறிந்து வைத்திருப்பது வியப்பாக இருக்கிறது'' என்று விஜயன் தெரிவித்தபோது -

''துறவி என்பவன் எதுவும் அறியாதவன் என்றும் அறிய விரும்பாதவன் என்றும் பலர் கூறுவார்கள். அது தவறு. சகல விஷயங்களையும் அறிந்து கொண்டு அவற்றுக்கிடையே அவற்றை அடைய முற்படாதவனே துறவி. புத்தர் அத்தகையதொரு துறவிதான். இன்றைய மக்களோ காட்டில் தனிமையில் காலம் காலமாகத் தவம் செய்து கொண்டிருப்பவனையே துறவியாக நினைக்கிறார்கள். மகான் புத்தர் அந்த நினைப்புகளைத் தவிர்த்தார்'' என்று பதில் சொன்னார் உபதிஸ்ஸர்.

அவரது விளக்கமே அவரது சிறப்பை உணர்த்தியது. அவரைச் சிரமமின்றி பாரவண்டியில் பயணம் செய்யும்படி உதயணன் கேட்டுக் கொண்டபோது அதை மறுத்த பிட்சு ''உடலுக்கு பயிற்சியளித்து அதைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய அவசியம் துறவிகளுக்கும் இருக்கிறது. முன்புபோல ஓரிடத்தில் காலம் காலமாகத் தங்கியிருக்கும் நிலை மாறி பல இடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் துறவிகளுக்கு வந்திருக்கிறது. எல்லோராலும் நடந்தே பல்வேறு நாடுகளுக்குச் செல்ல முடியாது. அவர்களுக்கு ஊர்திகள் தேவைப்படுகின்றன. இச்சமயங்களில் புரவிகள் மீது பயணம் செய்யும்போது உடலுக்கு உரம் கிடைக்கிறது. சுறுசுறுப்பு கிடைக்கிறது. ஆகவே புரவிலேயே நான் பயணம் செய்கிறேன்'' என்று தெரிவித்தார்.

பிட்சுவின் அருகாமை தென்றலின் சுகவாசம் போல் அமையவே வழிச் சிரமங்களை மெல்ல மெல்லக் கடந்து விஜயனும் அவனது படைகளும் இருப்பதாறு நாட்கள் பயணத்திற்குப் பின் நாகதீபத்தின் மத்திய பாகத்தின் தொடக்கத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

''இதிலிருந்து இயக்கர்கள் ஆதிக்கம் ஆரம்பிக்கிறது'' என்றார் பிட்சு.

அந்த இடம் விசாலமான வெளியாக இருந்ததால் அங்கே எல்லோரையும் இறங்கச் சொன்ன விஜயன் அந்த விஸ்தாரமான இடத்தில் இருந்த பூமியின் மணற்பரப்பு தாமிர நிறத்தில்

பழுப்பாக இருந்ததைக் கண்ட விஜயன் அந்தச் செவ்வழகை ரசித்துவிட்டு ''இந்த இடத்திற்குப் பெயரென்ன குருநாதரே?'' என்று கேட்டான்.

''பெயரென்று எதுவுமில்லை'' என்று பிட்சு சொன்னவுடன் ''நாமே பெயர் வைத்தால் போகிறது. தாமிர நிறத்து பூமியான இவ்விடத்திற்கு தாமிரப்பன்னி என்ற பெயரைச் சூட்டலாம்.* நம் நடவடிக்கைகளுக்கு தாமிரபன்னியே ஆதாரமாகவும் அடித்தளமாகவும் இருக்கும்'' என்று சொன்ன விஜயன் ''இயக்கர்களின் ஆதிக்கம் இங்கிருந்து துவங்குவதாகச் சொன்னீர்கள். ஆனால் அவர்களின் நடமாட்டமோ கண்காணிப்போ இங்கில்லையே குருநாதரே அது ஏன்?'' என்று கேட்டான்.

''விஜயபாகு, நாகதீபமானது உங்கள் பாரத நாட்டைப்போல வளர்ச்சியடைந்த நாடோ நாகரீகமடைந்த தேசமோ அல்ல. அங்கே இருப்பது போன்ற பேரரசுகள் எதுவுமே இங்கில்லை. இருந்திருந்தால் இங்கே நகரங்கள் உருவாகியிருக்கும். கோட்டைகள் கட்டப்பட்டிருக்கும். படைகள், பாதுகாப்பு என்று கெடுபிடிகள் ஏற்பட்டிருக்கும். ஆனால் இங்கே அத்தகைய நகரங்களோ கட்டிட கட்டமைப்புகளோ உருவாகவில்லை. அவற்றை உருவாக்கக் கூடிய வல்லரசோ வசதிகளோ இல்லை. தீவு என்ற அளவிலேயே இருக்கிறது. இதை ஆதிக்கத்தில் வைத்திருக்கும் இயக்கர்களோ இந்தக் கட்டமைப்புகள் இல்லாமல் பற்பல குழுக்களாக பல்வேறு இடங்களில் வாழ்கிறார்கள். இந்தத் தாமிரபன்னியிலிருந்து கல்யாணி வரை அவர்கள் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. அதை இதுவரை யாரும் முறியடிக்க முடியவில்லை'' என்று சொன்ன பிட்சு ''இங்கே இயக்கர்களைக் காணவில்லை என்பது வேண்டுமானால் உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர்களது கண்காணிப்பு இல்லை என்று மட்டும் நினைக்க வேண்டாம். நாம் அறியாமலேயே அவர்களது கண்காணிப்பு இருக்க வாய்ப்புண்டு. பாரத தேசத்தின் தெற்கே

* பக்கம் 5 South India and SriLanka by K.K. Pillai

வல்லவர்களாகத் திகழும் தமிழர்கள்தான் இங்கே இயக்கர் இனமாக வாழ்கிறார்கள். எல்லாவிதமான திறமையும் அவர்களுக்கு இருக்கிறது'' என்றார்.

''குருநாதரே, நான் கேள்விப்பட்ட விஷயமும் நீங்கள் சொல்லும் விவரமும் வேறுபடுகிறது'' என்றான் விஜயன்.

''எதைச் சொல்கிறாய் நீ?''

''எங்கள் நாட்டின் இதிகாசமான ராமாயணத்தில் இத்தீவை ஆண்ட ராவணனின் காலத்தில் நாகரீகம் சிறப்பாக இங்கே இருந்ததாகவும் தலைநகரான இலங்காபுரத்தில் மாடமாளிகைகள் நிரம்ப இருந்ததாகவும் யட்சர்களின் நகரம் 400000 தெருக்களைக் கொண்டதாகவும் சொல்கிறது''*

''விஜயபாகு! ராமாயண காலத்தை உன்னால் அரிதியிட்டுச் சொல்ல முடியுமா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலை நீ சொல்வது. அதை வைத்துக்கொண்டு இன்றைய நிலையை எப்படிக் கணிக்க முடியும்? அதோடு ராவணனின் இலங்காபுரம் எரியூட்டப்பட்டதாகக் கூறும்போது அதன் தடயங்களைக்கூட இப்போது காணமுடியாது அல்லவா? அதே ராமாயணத்தில் சொல்லப்படும் பாரத தேசத்தின் தெற்கு முனையும் பாண்டியர்களின் தலைநகரமுமான கபாடபுரமும் இப்போது இருக்கிறதா? அதைக்கடல் கொண்டுபோய் விடவில்லையா?''

''குருநாதரே, இயக்கர்களைக்கூட மனிதத் தன்மை யற்றவர்கள் என்றும் மனிதர்களைத் தின்பவர்கள் என்றும் கறுத்த காட்டுமிராண்டிகள் என்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக் கிறேன்''

''அவர்களின் நிறம் கறுப்பு என்பதைத் தவிர வேறு எதுவும் உண்மையில்லை. சரித்திரத்தை அறியாதவர்கள் இருப்பார்கள். அவர்கள் அறியாமல் சிலவற்றைச் சொல்வதுண்டு. சரித்திரத்தை அறிந்தவர்கள் சிலர் அதைத் திரித்துக் கூறுவார்கள். அந்தப் பிழையால் உண்டான தகவலைத் தான் நீ சொல்கிறாய்''

* Page 24 South India and SriLanka by K.K. Pillai

''குருநாதரே! நாமிருக்கும் இடம் கடலுக்கு அருகாமையில் இருக்கிறதா?''

''ஆம். இங்கிருந்து மேற்கு கடற்கரை அருகாமையில் இருக்கிறது. அங்கே இருக்கும் துறைமுகம் மகாதிட்டு போல் வடிவமைந்திருப்பதால் அதன்பெயர் மகாதிட்டு என்று வழங்கி இப்போது மகாதிட்டை என்றும் மாதிட்டை என்றும் அழைக்கப்படுகிறது. இது பாண்டிய நாட்டிற்கு அருகாமையில் இருக்கிறது''

''இது எங்களுக்கு முன்னமே தெரிந்திருந்தால் எங்கள் கப்பலை இத்துறைமுகத்திற்கே கொண்டு வந்திருக்கலாம்''.

''நாகஅரசன் பரீதி கூறிய தகவலின்படி பார்த்தால் நீ வந்த மரக்கலம் மிகப்பெரியது என்று தெரிகிறது. நாகதீபத்திற்கும் இந்திய கடற்கரைக்கும் இடையே உள்ள கடல்பகுதி சிறிய குடா என்று வழங்கப்படுகிறது. அப்பகுதி ஆழமற்றது. பெரிய மரக்கலங்கள் செல்ல முடியாது''

''குருநாதரே, இயக்கர்களைத்தேடி எங்கே நாம் செல்வது?''

விஜயனின் இந்தக் கேள்விக்கு பதில் சொல்வது போல் காற்றினிலே ஒரு கீதம் தவழ்ந்து வந்தது.

''இதென்ன கீதம்?'' என்று கேட்டான் விஜயன்.

''இது குவேணியின் கீதம்'' என்றார் பிட்சு

''குவேணி யார்?''

''யட்சிணி என்று சொல்வார்கள். கேள்விப்பட்டிருக் கிறேனே தவிர பார்த்ததில்லை''

''அவள் ஏன் பாடுகிறாள்?''

''குயிலைப் பார்த்து நீ ஏன் கூவுகிறாய் என்று கேட்பது போல் இருக்கிறது உங்கள் கேள்வி'' என்று சொன்ன பிட்சு ''அவளது குரலைக் கேட்பதோடு திருப்தியடையுங்கள். அவளைப் பார்க்க யாரும் முயலவேண்டாம்''

எச்சரிக்கையை மீறும் சுபாவம் தேவர்கள் முதல் மனிதர்கள் வரை இருந்து வந்திருக்கிறது.

அதே கதை தான் இங்கேயும் நடந்தது.

எச்சரிக்கையை மீறினார்கள் தோழர்கள்.

அதனால் விளைந்ததோ விபரீதம்!

◈◈◈

## அத்தியாயம் எழுபத்திரண்டு

# குவேணி

**யட்**சிணி ஒருத்தி பாடுவதாகவும் அவளை நேரில் பார்த்ததில்லை என்றும் புத்தபிட்சு உபதிஸ்ஸர் கூறியபோது ''இசை மிகவும் அருமையாக தாலாட்டுவது போல் இருக்கிறது குருநாதரே. இப்படியொரு இசையை என் வாழ்நாளில் நான் கேட்டதே இல்லை'' என்றான் விஜயன்.

''அவளது இசையைக் கேட்ட ஒவ்வொருவரும் சொல்கிற வார்த்தை இது. அவள் இசைக்கவே பிறந்தவள். அந்தத் தேனமுதத்தைக் கேட்டு ரசிப்பதோடு நிறுத்திக்கொள். அவளைப் போய் பார்க்க முயலவேண்டாம்'' என்றார் பிட்சு.

''ஏன் அவளைப் பார்க்கக் கூடாதா?''

''சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள்''

''நாம் நம்புகிறேன் குருநாதரே, சொல்லுங்கள்''

''அவளைப் பார்க்கப் போனவர்கள் திரும்பி வந்ததில்லை''

''அவளது குரல் அருகில் கேட்கிறதே''

''அருகில் அவள் இருக்கலாம்''

''அவளாக வந்து நம்மைப் பார்ப்பாளா?''

''தெரியாது''

அதற்குப் பிறகு யட்சிணியைப்பற்றிக் கேட்க விரும்பாத விஜயன் தனது தோழர்களைப் பார்த்து ''குருநாதர் சொல்வது கேட்கிறதா உங்களுக்கு? இனிமையான இந்தப் பாடலைக் கேட்டு அதோடு மறந்துவிடுங்கள். யாரும் அவளைப் பார்க்க முயலவேண்டாம்'' என்று சொல்லிவிட்டு ''இரவு நேரம்

நெருங்கிவிட்டது. இன்று இங்கேயே தங்கலாம். உணவுக்கு ஏற்பாடு செய்யுங்கள். பந்தங்களை கொளுத்தி தரையிலே நட்டு வையுங்கள். எதிரிகளைக் கண்காணிக்கத் தவறவேண்டாம்'' என்றான்.

அனைத்தும் சில நிமிடங்களில் நடந்தன. பிட்சு சில பழங்களை மட்டும் உண்டுவிட்டு ''நான் தியானத்தில் அமருகிறேன். யாரும் தொந்தரவு செய்யவேண்டாம்'' என்று கூறி ஓர் ஓரத்தில் போய் அமர்ந்தார். விஜயனும் மற்றவர்களும் கூட ஓய்வெடுக்கலானார்கள்.

நள்ளிரவின்போது மீண்டும் யட்சிணியின் குரல் கேட்டது. அமைதியான நேரத்தில் எழுந்த அவளது இசைக்குரல் எல்லோரையும் தாலாட்டுவது போல் இருந்தது. விஜயன் அதிலேயே லயித்துப்போய் உறங்கிவிட்டான். ஆனால் தோழர்களுக்கோ உறக்கம் வருவதாக இல்லை. தங்களுக்கருகில் தேவகானம் இசைப்பவளை பார்க்கும் ஆர்வம் அவர்களுக்கு உண்டாயிற்று. இவ்வளவு நேர்த்தியாக இசைப்பவள் பேரழகியாகத்தான் இருப்பாள் என்று கணக்கு போட்டார்கள். எனவே அவளைப் பார்க்காமல் இருப்பது வாய்ப்பை வீணடிப்பதாக நினைத்தார்கள். விஜயனின் எச்சரிக்கை நினைவுக்கு வந்தாலும் அதைப் பொருட்படுத்த அவர்கள் விரும்பவில்லை.

எச்சரிக்கைகளையும் அறிவுரைகளையும் அலட்சியப் படுத்துவதென்பது ஊழிக் காலத்திலிருந்து இருந்து வரும் சுபாவமாகும். அறிவிலும் பண்பிலும் சிறந்தவளான சீதை லட்சுமணனின் எச்சரிக்கையைப் புறக்கணித்து அவனிட்ட கோட்டைத் தாண்டினாள். அதனால் அவள் மட்டுமின்றி பலரும் சொல்லொணா கஷ்டங்களையும் பிரிவுத் துயரங்களையும் அனுபவித்தார்கள். தேவர்கள் கூட இப்படி அல்லல் பட்டதுண்டு. அப்படியிருக்கும்போது சாதாரண மனிதர்களான விஜயனின் தோழர்கள் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா? அதிலும் அமானுஷ்யமான விஷயங்களைப் பார்த்தவனும் அவற்றில் ஈடுபாடு கொண்டவனுமான உதயணன் யட்சிணியைப் பார்ப்பதற்கு மிகுந்த ஆவல் கொண்டவனாய்

பத்து தோழர்களை அழைத்துக்கொண்டு பந்தம் ஒன்றைப் பிடித்துக்கொண்டு குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான். அவனையடுத்து பத்து பத்து பேராகப் பதுங்கிப் பதுங்கிச் சென்றார்கள். ஏறக்குறைய உபதலைவர்களும் தோழர்களும், பணியாட்களும், மருத்துவர்களும் யட்சிணியைப் பார்க்கச் சென்றார்கள். ஆனால் விடியும் நேரமாகியும் திரும்பவில்லை. அடிமைகள் மட்டும் சுருண்டு படுத்துக் கிடந்தார்கள். வழிகாட்ட வந்த பத்து பேர் ஏற்கனவே விடைபெற்று போயிருந்தார்கள்.

இந்நிலையில் நிஷ்டையிலிருந்து எழுந்த உபதிஸ்ஸர் அங்கு நிலவிய விபரீதத்தை உணர்ந்து விஜயனை எழுப்பினார். அச்சமயத்தில் யட்சிணியின் இசை கேட்கவில்லை. பொழுது விடியும்போது பறவைகள் வழக்கமாக எழுப்பும் கிலாகிலா சத்தங்கள் மட்டுமே கேட்டன. கண்விழித்த விஜயன் தோழர்களை காணாமல் திகைத்தான். குருநாதரைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''யட்சிணியைப் பார்க்கப் போய்விட்டார்களா குருநாதரே?'' என்று கேட்டான் விஜயன்.

''அப்படித்தான் இருக்கவேண்டும்?''

''நாம் எச்சரித்ததை உதாசீனப்படுத்திவிட்டார்கள்''

''அது மனித சுபாவம்''

''இப்போது அவர்களைத்தேடி எங்கே செல்வது? யட்சிணியின் குரலும் கேட்கவில்லையே?''

''அவளுக்கு இசைப்பது மட்டும் தான் வேலையா? அப்படியே இருந்தாலும் இடைவிடாமல் இசைக்க முடியுமா அவளால்?''

''குருநாதரே, அவளது இருப்பிடம் அருகில் எங்காவது இருக்கலாம் அல்லவா?''

''எப்படிச் சொல்கிறாய்?''

''எங்கேயோ வசித்துக்கொண்டு இங்கே வந்து இரவு பகல் பாராமல் இசைக்க முடியுமா?''

பிட்சு இதற்கு உடனடியாக பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தார்.

பிறகு ''நண்பகல் வரை காத்திருப்போம். அப்படியும் வரவில்லை என்றால் தேடுவது பற்றி யோசிப்போம்'' என்றார்கள்.

இதற்கிடையில் அடிமைகள் எழுந்து கொண்டு வழக்கமான பணியில் ஈடுபட முனைந்தார்கள். விஜயன் அவர்களை அழைத்து கடலோரமாக வளர்ந்திருந்த சவுக்கு மரங்களை வெட்டி வரச்செய்து புரவிகளைச் சுற்றி நெருக்கமான வேலியைக் கட்டச் செய்தான். புரவிகளையும் அந்த சதுரவடிவமான வேலிக்குள் முளைகளை அடித்து அதில் கட்டினான். புரவிகளைப் பொறுத்தவரை பாதுகாப்பு செய்தபின் அவற்றுக்குத் தேவையான உணவு வகைகளை பார வண்டிகளிலிருந்து கொண்டு வரச்செய்து அவற்றை உண்ணச் செய்தான். அடிமைகளை அந்த வேலிக்கு காவல் வைத்தான். இவற்றையெல்லாம் செய்து முடித்தபோது நண்பகல் தாண்டிவிட்டதால் நண்பர்களுக்காக காத்திருப்பதை விட்டு விட்டு அவர்களைத்தேடிச் செல்ல விரும்பினான்.

பிட்சு அதற்கு மறுப்பு சொல்லவில்லை. ''முதலில் நான் செல்கிறேன் விஜயபாகு. நீ சற்று பின் தங்கி வா'' என்றார்.

விஜயனோ ''குருநாதர் முன்னே செல்வது ஆபத்து. நான் முன்னே செல்கிறேன். நீங்கள் பின்தங்கி வாருங்கள்'' என்று கூறிவிட்டுப் புரவியில் புறப்பட்டான்.

சவுக்குத் தோப்பையடுத்த வனாந்திரப் பகுதியிலிருந்து யட்சிணியின் குரல் வந்திருந்ததால் வனத்தை நோக்கியே புரவியைச் செலுத்தினான். வனமானது அடர்த்தியாக இல்லை. அதோடு அங்கே அடிக்கடி மனிதநாட்டம் இருந்ததற்கான அடையாளங்கள் இருந்தன. கண்ணுக்கெட்டிய வரை வீடுகளோ கட்டிடங்களோ காணப்படவில்லை. இப்படி தங்குவதற்கோ ஒதுங்குவதற்கோ ஒரு இடமும் இல்லாத நிலையில் அந்த் யட்சிணி இங்கே எப்படி குடியிருக்க முடியும் என்று தனக்குத் தானே கேட்டுக்கொண்டான். அகில் மரங்களிலிருந்து நாசியைத் துளைக்கும் சுகந்தம் காற்றில் கலந்து வந்தது. யட்சிணியை

எப்படி கண்டுபிடிப்பது என்று தெரியாமல் யோசித்த அவனுக்கு ஒரு யோசனை தோன்றவே பாட ஆரம்பித்தான்.

**''இசையால் வசமாகா இதயமெது**
**இறைவனே இசைவடிவம் எனும்போது...''**

என்று பாடினான் விஜயன். அவனது குரல் யட்சிணியின் குரலைப் போல இல்லையென்றாலும் கேட்கும் அளவிற்குச் சுமாராக இருந்தது. அவனோ குரலைப்பற்றிக் கவலைப் படாமல் இரண்டு வரிகளையே திருப்பத் திரும்பப் பாடியதால் சாரீரம் கட்டு குலைந்தது.

அதேசமயம் ''யாரது கத்துவது?'' என்று கேட்டபடி அருகிலிருந்து வெளிப்பட்டாள் ஒரு பெண்.

அவள் தான் யட்சிணி என்று உறுதிசெய்து கொள்ள முடியாத நிலையில் இருந்த விஜயன் அவளை லட்சியம் செய்யாமல் மீண்டும் பாடியபோது ''கத்தலை நிறுத்து'' என்று சொன்னாள் அப்பெண் அப்பேச்சில் ஒருவித தோரணை இருந்தது. விஜயன். அதை கவனித்தாலும் கவலைப்படாமல் ''நான் பாடுவதை எதற்காக நிறுத்த வேண்டும்?''என்று கேட்டான் சாதாரணமாக.

''நீ பாடியது பாட்டா? கழுதை கத்துவது போல் கத்திவிட்டு அதைப்பாட்டு என்கிறாய். பாட்டைப் பற்றியோ இசையைப் பற்றியோ உனக்கென்ன தெரியும்?'' என்று காரசாரமான குரலில் கேட்டாள் அவள்.

''பாட்டைப் பற்றியும் இசையைப் பற்றியும் உனக்கு நிறைய தெரியும் போலிருக்கிறது'' என்றான் விஜயன் அவளை ஆழம் பார்ப்பது போல.

''அதைப்பற்றி ஒன்றுமறியாத உன்னிடம் பேசிப் பயனில்லை''-

''உனக்கும் இசைபற்றி எதுவும் தெரியாது. அதனால்தான் என்னை இகழ்கிறாய். எனக்குச் சரியாக பாட வராதுதான். ஆனால் நல்ல இசை எது என்று உறுதியிட்டுச் சொல்ல முடியும். நேற்று இதே பகுதியில் கந்தர்வ கானம் ஒன்றைக் கேட்டேன். இசை என்றால் அதுதான் இசை. கந்தர்வர்களே மயங்கிப்

போகும் இசை. அதைப் பாடியது நிச்சயமாக ஓர் இசைக் குயிலாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் குயிலைத்தேடி வந்தேன். இடையில் என்னை மறித்து என் பாடலையும் நிறுத்திவிட்டாய்''

''நேற்று பாடியது நான் தான்''

''பாவம்''

''பாவமா? ஏன்?''

''காகம் குயிலைப் போல இருக்கலாம். குயிலைப்போல பாடமுடியாது.''

''குயில் குயிலாகத்தானே பாடமுடியும்?''

''அப்படியானால் நீ சொல்வது உண்மையா? நேற்று பாடியது நீயா? எங்கே இப்போது பாடு''

''முட்டாளே! வழிபோக்கர்களுக்கெல்லாம் பாடுபவள் நானல்ல. நான் இசைத்தால் புவி எழுந்தாடும். அப்படிப்பட்ட இசையை என்னிடமிருந்து யாரும் வற்புறுத்திப் பெறமுடியாது''

''இசையைப்பற்றி நான் பாடியதின் அர்த்தம் உனக்குத் தெரியுமா? இசையானது இறைவனின் வடிவமாதலால் அதற்கு வசமாகாதவர்கள் யாருமில்லை என்பது தான் அர்த்தம். இசையே இசைவடிவம் என்றால் இசைப்பவர்கள் எப்பேர்பட்டவர்கள்? அப்படிப்பட்டவர்களைக் காண வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் வராது? உன் இசையின்ப அருவியைக் கேட்டுவிட்டு என் தோழர்கள் உன்னைக் காணவந்தார்கள். மீண்டும் திரும்பி வரவில்லை. அவர்களை நீ பார்த்தாயா?''

''அவர்களைப் பற்றிய கவலை உனக்கு வேண்டியதில்லை''

''ஏன்?''

''கவலைப்பட்டுப் பயனில்லை''

''ஏன்?''

''அவர்கள் இறந்து விட்டார்கள்''

''எப்படி?''

''நான் கொன்றுவிட்டேன்''

''எதற்காக?''

''அது இருக்கட்டும். உன் கூட்டத்தில் நீதான் கடைசியா?''

''குருநாதர் இருக்கிறார்''

''அவரை வரச்சொல்''

''எதற்கு? அவரையும் கொல்வதற்கா?''

''நீ வரவழைக்கவில்லை என்றால் நான் வரவழைக்கிறேன்'' என்று கூறிய அப்பெண் சடாரென இடுப்பிலிருந்து குறுவாளொன்றை எடுத்து விஜயனை நோக்கி வீசினாள். அங்கு வரும் போதே ஆபத்தை எதிர்பார்த்திருந்த விஜயன் அப்பெண்ணின் கை அசைவதை கவனித்தபோதே புரவியின் மீது படுத்துக் கொண்டானதலால் அவளது குறுவாள் புரவிக்கு அப்பால் போய் விழுந்தது. அதனால் ஆத்திரமடைந்த அப்பெண் ''குவேணியின் குறுவாளுக்கு தப்பியவன் நீ மட்டும் தான்'' என்று கூறிவிட்டு உடைவாளை எடுத்தாள். விஜயனும் புரவியிலிருந்து குதித்து வாளை உருவினான். அப்பெண் தன் இதழ்களை குவித்து ஏதோ ஓர் ஒலியை எழுப்பிவிட்டு வாட்போரில் ஈடுபட்டாள்.

உருவத்தால் பெண்ணாக இருந்தாலும் வாள் வீச்சில் ஆடவனைப் போலவே சீராகவும் சிறப்பாகவும் போரிட்டதைப் கண்ட விஜயன் அவளது திறமையை உள்ளுக்குள் பாராட்டினான். குருநாதர் குறிப்பிட்ட யட்சிணி இவள் தான் என்பதை உணர்ந்து கொண்டதால் அவளை வாட்போரில் காயப்படுத்தி சிறைப்பிடிக்க நினைத்து மும்முரமாகப் போரிட்ட விஜயன் அவளது உடலில் சில கீறல்களை உண்டாக்கினான். அச்சமயத்தில் திமுதிமுவென பலர் அப்பகுதிக்கு விரைந்தார்கள். அவர்களில் ஒருவன் விஜயனை பின் மண்டையில் தாக்கவே மயக்கமடைந்து விழுந்தான். குவேணியின் முகம் அவன் கண்களிலிருந்து மறைந்தது.

★★★

விஜயன் கண்விழித்தபோது தனது இருப்பிடம் மாறுபட்டிருந்ததையும் நான்கு சுவர்களுக்குள் அடைப்பட்டுக் கிடந்ததையும் உணர்ந்தான். தலையில் கட்டு ஒன்று போடப் பட்டிருந்தது. பின்மண்டையில் லேசான வலியிருந்தது. யட்சிணி பெண் குவேணி தன்னிடம் போரிட்டுக் கொண்டிருந்த போது ஒரு கூட்டம் வந்ததையும் தன் பின் மண்டை தாக்கப்பட்டு மயங்கி விழுந்ததையும் அவனால் நினைவுபடுத்திக் கொள்ள முடிந்தது. தன்னைத் தாக்கியவர்கள் அப்பெண்ணைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கமுடியும் என்று தோன்றியது அவனுக்கு. தன்னுடன் போரிடுவதற்கு முன் அவள் இதழ்களைக் குவித்து ஒலி எழுப்பியபோதே அது அவளைச் சேர்ந்தவர்களை வரவழைக்கும் சமிக்ஞைதான் என்று அப்போதே நினைத்திருந்தான் விஜயன். அவன் நினைத்தபடியே ஆட்கள் வந்து தன்னைப் பின்புறத்தில் தாக்கி மயக்கமடையச் செய்திருக்க வேண்டும் என்று தன் எண்ணத்தை உறுதி செய்து கொண்ட அவன் தன் இருப்பிடத்தை ஒருமுறை பார்த்தான். நாற்புறமும் சுவர்கள் இருக்க ஒரு சுவற்றின் உச்சியில் காற்றைச் சுவாசிப்பதற்காக சிறிய துவாரம் ஒன்று இருப்பதையும் அதன் மூலம் அறைக்குள் சூரியவெளிச்சம் வருவதையும் கண்டான். தன்னை சிறை வைத்திருப்பதும் அதைச் செய்தது குவேணி என்பதும் அவனுக்குப் புரிந்தாலும் சிறை இருக்கும் இடம் எது என்பது புரியவில்லை.

காட்டுப் பகுதியில் அச்சமின்றி தன்னை எதிர்கொண்டு அலட்சியமாகப் பேசியதோடு மட்டுமின்றி கொல்வதற்கும் முயன்ற அப்பெண்ணைச் சற்று நினைவுபடுத்திப் பார்த்தான். அவளது நிறம் கறுப்பாக இருந்தாலும் கவரக்கூடிய அழகாக இருந்தது. அகன்ற விழிகளும் காந்தக் கண்களும் அவளது முகத்திற்கு ஆபரணமாக அமைந்திருந்தன. சுருள் சுருளாக இருந்த கேசம் அலட்சியமாக முடிச்சு போட்டு கட்டப்பட்டிருந்தது கூட அழகாகத்தான் இருந்தது. உடலில் அவள் அணிந்திருந்த ஆடைகள் முழுதாயும் சிறப்பாயும் இருந்தன. ஒரே ஒரு முத்துமாலையைத் தவிர வேறு எதையும் அவள் அணிந்திருக்கவில்லை. குயில் கறுப்பாக இருந்தாலும் அந்த நிறத்திற்கும் அதன் குரலுக்கும் எப்படிச் சம்மந்தம்

இல்லையோ அப்படித்தான் நிறத்திற்கும் குரலுக்கும் சம்மந்தமில்லாதவளாக இருந்தாள் அப்பெண். அதேசமயம் குயிலின் கறுப்பில் இல்லாத அழகு அவளது நிறத்தில் இருந்தது. நாகர்மலைத்தீவில் கண்ட கறுப்பு நிறப்பெண்ணாக இவள் இருந்தாலும் அக்காட்டுமிராண்டிப் பெண்களிடம் இல்லாத முகவெட்டும் சௌந்தர்யமும் அவளுக்கு இருந்தது. தேவலோகத்திற்கு ஒரு ரம்பை என்றால் நாகதீபத்திற்கு ஒரு குவேணி என்று சொல்லக்கூடிய அளவிற்கு கறுமையில் சிறப்பான அழகில் இருந்தாள் அவள். போரிட்ட விதம் அவளது துணிச்சலுக்கு அடையாளமாக இருந்ததே தவிர பெண்மையைக் கெடுத்துக் காட்டுவதாக இல்லை. அவளது பேச்சும் போக்கும் ஆணவத்தின் வெளிப்பாடுகளாக இருந்தாலும் அவற்றைக் கொண்டு அவள் மீது ஒரு முடிவுக்கு வர விஜயனால் முடியவில்லை.

அவளது தோற்றத்தை நினைவூட்டிப் பார்த்த விஜயனுக்கு அவள் தனது தோழர்களைக் கொன்றுவிட்டதாகச் சொன்னதும் நினைவிற்கு வந்தது. தோழர்களைக் கொன்று விட்டதாகச் சொன்ன அவள் தன்னை மட்டும் ஏன் கொல்லவில்லை என்று கேட்டுக் கொண்டான். ஒரேயடியாக தனது தோழர்களை நூற்றுக்கணக்கில் கொல்வதற்கு காரணமில்லை என்று நினைத்த அவன் குவேணி கொன்றுவிட்டதாகக் கூறியதை நம்ப மறுத்தான். தன்னுடைய எதிர்பாராத இந்தநிலை அவனுக்கு கவலையை அளித்தது. பெரிய லட்சியத்தை நிறைவேற்ற புறப்பட்டு வழியில் பல்வேறு சோதனைகளைக் கடந்து லட்சியம் நிறைவேறவேண்டிய பூமிக்கு வந்து சேர்ந்துவிட்ட நிலையில் தன் தோழர்களைப் பிரிந்து பெண்ணொருத்தியால் சிறைப்பட்டு விட்டது எதிர்பாராத அதிர்ச்சியாக இருந்தாலும் விஜயன் தன்னம்பிக்கையை கைவிடவில்லை. அத்தன்னம்பிக் கையை அவனுக்குப் போடப்பட்டிருந்த கட்டு அவனுக்கு உண்டாக்கியது. தன்னைக் கொல்வது குவேணியின் நோக்கமாக இருந்திருந்தால் போரிட்ட இடத்திலேயே அதை நிறைவேற்றி யிருக்கலாம். அல்லது சித்ரவதை செய்வது நோக்கமாக இருக்குமானால் தலையில் கட்டுப் போடவேண்டிய அவசியம் இல்லை. எனவே ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் தனக்கு

சிகிச்சையளித்து உயிரோடு விட்டிருக்கிறார்கள் என்று நினைத்த விஜயன் நம்பிக்கையுடன் நேரத்தைக் கடத்தினான்.

தன்னைத் தொடர்ந்து பின் தங்கி வருவதாகச் சொன்ன குருநாதரைப் பற்றியும் தாமிரபன்னியில் வேலிக்குள் விட்டிருந்த புரவிகளைப் பற்றியும் நினைத்துப் பார்த்தான் விஜயன். நினைப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய அவனால் இயலவில்லை. இதற்கிடையில் அவனிருந்த அறையின் கதவு சத்தமின்றி லேசாகத் திறக்கப்பட்டு ஒரு பாத்திரத்தில் உணவும் ஒரு குவளையில் தண்ணீரும் உள்ளே தள்ளப்பட்டு மீண்டும் மூடப்பட்டது. திறந்தது யார் என்பது பற்றியெல்லாம் கவலைப்படாமல உள்ளே அனுப்பப்பட்ட உணவை உண்டு தண்ணீரைப் பருகிவிட்டுப் படுத்தான். லேசான தூக்கம் அவனைத் தழுவியது.

எத்தனை நாழிகை அவன் அந்த தூக்கத்தில் இருந்தானோ தெரியாது. திடீரென அவனது தூக்கம் கலைந்தது. அதுவரை அமைதியாக இருந்த அப்பிராந்தியத்தில் 'டம்டம்' என்ற பேரிகையின் ஒலி சன்னமாகக் கேட்டது. அமைதியாயிருந்த நேரத்தில் எழுந்த அந்த ஒலி பயங்கரமாகத் தோன்றியது. காலன் தான் வருகிறானோ என்று நினைத்தான் விஜயன்.

விரைவிலேயே பேரிகை ஒலி அவனது இருப்பிடத்தை நெருங்கவும் செய்தது.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்து மூன்று

# இயக்கர்கள்

அறைக்கு அருகில் வந்ததும் பேரிகை ஒலி நின்றது. விஜயனின் அறைக் கதவு திறக்கப்பட்டு அவன் வெளியே அழைத்துச் செல்லப்பட்டான். வெளியே சுமார் நூறு பேர் படை சூழ ஒரு கூட்டம் காணப்பட்டது. ஏறக்குறைய அறுபதுக்கும் மேற்பட்ட பந்தங்கள் காணப்பட்டதால் அந்தப் பகுதி பிரகாசமாக இருந்தது. அந்தக் கூட்டத்தின் தலைவனைப்போல்

காணப்பட்ட ஒருவன் ஆஜானுபாகுவாய் இருந்தான். நல்ல உயரமும் நீண்ட கைகளும் ஒற்றை நாடியான சரீரமும், நீண்ட கூந்தலும் கொண்டிருந்த அவன் எளிமையாக இருந்தாலும் கம்பீர்மாகக் காணப்பட்டான். அவனுக்குப் பிராயம் ஐம்பதுக்கு மேல் இருக்கலாம் என்று தோன்றியது. அவனுக்கருகில் துடுக்குத்தனம் மிளிர நின்றிருந்தாள் குவேணி.

தலைவன் விஜயனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''நீ எந்த நாடு?'' என்று கேட்டான்.

விஜயன் சற்று யோசித்துவிட்டு ''நான் நாடில்லாதவன். நாடோடி'' என்றான் ஆழம் பார்க்கும் முயற்சியில்.

''நாடில்லாததால் இந்த நாட்டிற்கு வந்தாயா?''

''அப்படியும் வைத்துக் கொள்ளலாம்''

''அப்படியும் என்றால்?''

''உங்கள் அபிப்ராயம் அப்படி இருந்தால் அதுவும் சரிதான் என்று சொன்னேன்''

''என் அபிப்ராயம் இருக்கட்டும். உண்மை என்ன? எதற்காக இங்கு வந்தாய்?''

''இந்த நாட்டை ஆள''

''இன்னொரு முறை சொல்''

''இந்த நாட்டை ஆள்வதற்காக வந்தேன்''

''ஆள்வதற்கு ஆளில்லாமலா இந்த நாடு இருக்கிறது?''

''அதைப்பற்றி கவலையில்லை''

''நீ கவலைப்பட்டாலும் சரி படாவிட்டாலும் சரிஅதனால் பயனொன்றும் இல்லை''

''ஏன்?''

''உன்னால் இந்நாட்டை ஆளமுடியாது''

''ஏன்?''

''உன்னோடு வந்தவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டு விட்டார்கள்'' என்று சொன்ன தலைவன் குவேணியைப் பார்த்து ''யாராவது மீதமிருக்கிறார்களா குவேணி?'' என்று கேட்டான்.

''இல்லை தந்தையே. எல்லோரையும் கொன்று புதைத்து விட்டேன்'' என்று மிடுக்காகச் சொன்னாள் குவேணி.

தலைவன் விஜயனின் பக்கம் திரும்பி ''கேட்டாயா என் மகள் சொன்னதை? அவள் பெண்ணல்ல. பெண்ணென்று நினைத்து வந்தவர்களுக்கு அவள் ராட்சஷி. அவளது பலமும் சக்தியும் அபாரம். அவள் நினைத்ததை சாதிக்காமல் விடமாட்டாள். நாடு பிடிக்கும் ஆசையோடு வங்க நாட்டி லிருந்து வந்திருக்கும் வேந்தனே விஜயபாகு! நீ பல இடங்களுக்குப் போயிருக்கலாம். பல பேரை வென்றிருக்க லாம். கொன்றிருக்கலாம். இங்கே உன் எண்ணங்களும் ஆசைகளும் நிறைவேறாது. இயக்கர்களை மீறி உன்னால் ஒரு பிடி மண்ணைக் கூட அள்ள முடியாது. உன்னோடு வந்த படைகள்அழிந்து நீ தனிமரமாக நிற்கிறாய். உன்னை ஏற்க கழுமரம் தயாராக இருக்கிறது. அதில் உயிரை விடப்போகும் நீயா இந்த நாட்டை ஆளப்போகிறாய்?'' என்று கேட்டான்.

''என்னைக் கழுவேற்றும் நீங்கள் யார்?''

''இன்னுமா தெரியவில்லை? இந்த நாட்டை அண்டை நாட்டவர் அண்ட விடாமல் பாதுகாத்து வரும் இயக்கர் இனத் தலைவன் - நாகதீபத்தின் மாமன்னன் காளிசேனன் இவர்தான். ஏதாவது முறையீடு இருந்தால் மண்டியிட்டு வேண்டிக்கொள்'' என்று உறுதியான குரலில் சொன்னாள் குவேணி.

விஜயன் காளிசேனனைப் பார்த்து வேசாகச் சிரித்துவிட்டு ''நீங்கள் வீரர்கள் தானே?'' என்று கேட்டான்.

''அதிலென்ன சந்தேகம் உனக்கு?''- கேட்டான் காளிசேனன்.

''உங்கள் இனம் தமிழரினம் என்று கேள்விப்பட்டேன். அது உண்மைதானா?''

''ஆமாம். அதற்கென்ன?''

''வீரத்திற்குப் பேர்போன உங்கள் இனம் என் படைகளை வஞ்சகமாக அழித்ததற்குப் பெயர்தான் வீரமா? உங்கள் சரித்திரத்தில் இதுதான் வீரத்தின் பொருளாகக் கொள்ளப்பட்டிருக்கிறதா?''

''கோட்டைகள் இல்லாத கானகத்தில் புலிகள் மான்களை வேட்டையாடுகின்றன. அதை யாரும் புலிகளின் கோழைத் தனம் என்று சொல்வதில்லை''

''புலிகளுக்கு எந்த இடத்தில் இருக்கிறது கோட்டை? காடுகளே அதற்கு கோட்டைதான். வேட்டையாடுவதுதென்பது அதன் பண்பு. வீரர்களுக்கு அது பண்பா? போரிட்டு எங்கள் படையை அழித்திருந்தால் உங்களைப் பாராட்டலாம். அப்பாவி மான்களைப் போல உங்கள் அருமை மகளின் அரிய இசையைக் கேட்டுவிட்டு அவளது அழகைக் காண வந்த எனது தோழர்களைப் புலிகளைப் போல பாய்ந்து கொன்றிருக் கிறீர்களே, இதுதான் இனமானமா? உங்கள் குல வீரமா?''

''அவசரப்பட்டு வார்த்தைகளை இறைக்காதே விஜயபாகு. வீரத்தை வெளிப்படுத்தும் முறையானது அதற்கு அமையும் சந்தர்ப்பங்களைப் பொறுத்தது. நாங்கள் இந்த நாட்டில் ஆட்சி செய்கிறோம் என்றாலும் இன்னமும் அலைந்து கொண்டுதான் இருக்கிறோம். எங்களிடம் செல்வம் இல்லை. உணவிற்கே நாங்கள் வேட்டையாடித்தான் பிழைக்கிறோம். நாங்கள் வாழ நகரங்கள் இல்லை. அரண்மனைகளோ மாட மாளிகைகளோ இல்லை. பாதுகாப்பு செய்து கொள்வதற்கு கோட்டைகளோ படைகளோ இல்லை. எங்களுக்குள்ளேயே பகைவர்கள் முளைத்து காவு வாங்குவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓரிடமாய் கால் பதிக்கமுடியாமல் அதேசமயம் பிறர் யாரும் கால்பதித்துவிட அனுமதிக்காமல் வேட்கைப் புலிகளாய் இருந்து வருகிறோம். இந்த நிலையில் பகைவராக வந்து நிற்கும் உங்களை வியூகம் வைத்தா போரிட முடியும்? வலைவிரித்துத் தான் வீழ்த்த முடியும். ஆகவே எங்கள் செயலைக் குற்றம் கூற வேண்டாம்.''

''எல்லாம் சரி. கழுமரத்தில் ஏற்றும் அளவிற்கு நான் செய்த குற்றமென்ன?''

''குற்றவாளிகளின் உயிரை எடுக்கமட்டும் தான் கழுமரங்கள் இருக்கின்றன என்று நீ நினைப்பது தவறு. குற்றவாளிகளைத் தண்டிக்கும் முறைகளை சற்று எண்ணிப்பார். அவற்றில் ஒன்று தான் கழுவில் ஏற்றுவது. இது மிகவும் கொடிய முறை

குற்றவாளியைத் தூக்கி அதில் அமரவைத்தால் கழுமர ஊசி கீழே குத்தி தலைக்கு மேலே வரும். அதில் குத்திக் கிழிக்கப்படும் குற்றவாளி போடும் சத்தம் ஒரு யோசனை தூரத்திற்குக் கேட்கும். அக்காட்சியைக் காண்போருக்கு குற்றம் செய்யவே அச்சம் ஏற்படும். அந்த அச்ச உணர்வுதான் உன்னைக் கழுவேற்றுவதைக் காண்போருக்கும் கேள்விப்படும் பகைவர்களுக்கும் வரும். வரவேண்டும். உன்னைத் தண்டிப்பது உன்னை அழிக்க மட்டுமல்ல. என் பகைவர்கள் அனைவரையும் அகற்றத்தான்'' என்று நிர்தாட்சண்யமாகக் கூறிவிட்டு அருகில் இருந்தவர்களிடம் ''இப்பகைவனை அந்த அறையிலேயே மீண்டும் அடையுங்கள் இவனைக் கழுவேற்றப் போவது பற்றி அறிவிப்பு செய்யுங்கள். எல்லோரும் வந்து சேரட்டும். கழுவில் ஏற்றலாம். பார்ப்பவர்கள் பாடம் கற்கட்டும்'' என்று கட்டளையிட்டு விட்டுச் சென்றான். அவனைத் தொடர்ந்து பேரிகை ஒலித்துச் சென்றது.

எல்லாமே சில நிமிடங்களில் நடந்து பழையபடி அறையில் விஜயன் அடைக்கப்பட்டபோது நடந்ததெல்லாம் கனவுபோல் இருந்தது அவனுக்கு தன்னைக் கழுமரத்தில் ஏற்றப் போவதாக இயக்கர்கள் தலைவன் காளிசேனன் கூறியது பற்றி விஜயன் ஆராய முற்படவில்லை. இயக்கர்களின் நிலைபற்றி பலவாறு நினைத்துப் பார்த்தான். அந்த நினைவிலேயே இரவு கழிந்தது.

காலையில் கண்விழித்தபோது அறைக்கதவு திறந்து கிடந்தது. விஜயன் எழுந்து வெளியே வந்தபோது யாரும் கண்ணில் படவில்லை. நேராக நடந்தான். அருகிலேயே சிற்றோடை ஒன்று ஓடியது. அதில் இறங்கி சுதந்திரமாகவே குளித்தான். குளித்துவிட்டு கரைக்கு வந்தபோது அவன் அணிவதற்கான புத்தாடைகள் இருந்தன. தன்னைச் சுற்றிலும் கண்காணிப்பு இருந்ததை அதன் மூலம் உணர்ந்து கொண்ட விஜயன் பரபரப்பு எதுவும் அடையாமல் அந்த ஆடைகளை எடுத்து அணிந்து கொண்டான். சிறிது நேரம் வரை கண்களை மூடி அங்கேயே அமர்ந்து புத்தரை நினைத்து தியானம் செய்தான். கண்களைத் திறந்தபோது முன்னால் உணவு தாயாராக வைக்கப்பட்டிருந்தது. அதை உண்பதா வேண்டாமா என்ற

ஆராய்ச்சியில் இறங்காமல் உண்ண முற்பட்டபோது ''நில்'' என்ற குரலொன்று ஒலித்தது.

உண்பதைதை நிறுத்திவிட்டு குரலுக்குடையவர் யார் என்று சுற்றும் முற்றும் பார்த்தான் விஜயன். யாருமில்லை. ''யாரது பேசுவது?'' என்று கேட்டான் உரத்த குரலில்.

''உணவை உண்பதற்கு முன்பு அதை உண்ண உனக்குத் தகுதி இருக்கிறதா என்று பார்'' என்று ஒலித்தது குரல்.

''தானாக வந்த உணவை உண்ண தகுதி எதற்கு? ஒருவேளை எனக்குத் தகுதி இல்லை என்றால் உணவை ஏன் அனுப்ப வேண்டும்? புத்தாடைகளை ஏன் வழக்கவேண்டும்? அறைக்கதவை எதற்காக திறந்து வைக்கவேண்டும்? இதையெல்லாம் நானா கேட்டேன்?'' என்று கேட்டான் விஜயன்.

''நீ கேட்டால் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை உனக்கு இருக்கிறதா?''

''இப்போது இது அர்த்தமற்ற கேள்வி''

''அப்படியானால் அர்த்தமுள்ள கேள்விகளைக் கேட்கிறேன். அதற்குச் சரியான பதிலைச் சொல்லிவிட்டு உணவைச் சாப்பிடு''

''என்ன கேட்கப் போகிறாய்?''

''நீ அரசன் என்று வைத்துக்கொள். உனக்கு முன்னே குருநாதன், அமைச்சர், சேனாதிபதி என்று மூவரை நிறுத்தினால் யாரை அழைத்துக்கொள்வாய்?''

''மூவரையும் தான்''

''எதற்காக?''

''விளக்கு நன்றாக எரியவேண்டும் என்றால் எண்ணை, திரி, காற்றிலிருந்து பாதுகாப்பு ஆகிய மூன்றும் தேவை. இதுவும் அது போலத்தான்''

''எந்த மன்னனை மக்கள் நேசிக்கிறார்கள்?''

''உண்மையாக வாழும் மன்னனை''

''ஆசையை விடுவதற்கு என்ன செய்யவேண்டும்?''

''ஆசைப்பட வேண்டும்''

''ஆசைப்பட்டால் ஆசை போய்விடுமா?''

''நான் சொன்னது அதுஅல்ல. ஆசையை விடுவதற்கு ஆசைப்பட வேண்டும் என்பது முயற்சியைத்தானே குறிக்கிறது?''

''ஆசையை நாம் ஏன் விடவேண்டும்?''

''முதலையின் வாயில் காலை விட்டால் நாம் அதன் வயிற்றுக்குள் போய்விடுவோம். ஆசையும் அப்படித்தான்''

''ஆசையில்லாமல் வாழமுடியுமா?''

''முதலையின் வாயில் காலை விடால் வாழ முடியுமானால் ஆசையில்லாமல் வாழலாம். ஆசையின் பாதிப்புகளை ஆழமாக உணர்ந்து விட்டால் எவன் ஆசைப்படுவான்?''

''இந்த உ.லகில் நிரந்தரமானது எது?''

''நிரந்தரமானது இருப்பதாக நாம் எண்ணும் எண்ணம் தான்''

''மனிதனின் வாழ்க்கை எங்கே தொடங்குகிறது?''

''அவன் மனிதனாக வாழத் துவங்குவதிலிருந்து?''

''மனிதன் ஏன் சாகிறான்?''

''பிறந்தவர் இறக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி''

''இறந்தவன் எங்கே செல்கிறான்''

''இதை இறந்தவன் தான் சொல்லவேண்டும்''

''சொர்க்கத்திற்கோ நரகத்திற்கோ போவதில்லையா?''

''இதற்கும் அவன் தான் பதில் சொல்லவேண்டும்''

''இறந்தவன் மீண்டும் பிறக்கிறானா?''

''இதுபோன்ற கேள்விகள் பயனற்றவை. உயிரோடு இருப்பவர்களால் இவற்றுக்கு உறுதியாக பதில் கூற இய்லாது''

''நீ பௌத்தனா?''

''இந்த நிமிடம் வரை இல்லை. ஆனால் மகான் புத்தரின் கொள்கைகளைப் பரப்ப வேண்டிய லட்சியம் இருக்கிறது''

''புத்தர் உன்னை பாதித்திருப்பதால்தான் என் கேள்விகளுக்கு உன்னால் சரியாக பதில்சொல்ல முடியவில்லை''

''தவறு. பாதித்திருப்பதால் தான் சரியான பதில்களைச் சொல்கிறேன்''

''புத்தர் வழியைப் பின்பற்றாதவன் அவர் கொள்கைகளை எப்படி பரப்பமுடியும்?''

''பின்பற்றுவதற்கும் பரப்புவதற்கும் ஆரம்ப காலங்களில் இடைவெளி இருக்கும். கொள்கையை உபதேசிக்கும் ஓர் உபதேசி அவற்றைப் பின்பற்றாமல் இருக்கலாம். ஆனால் அவனது உபதேசம் பல பேர்களை மாற்றியமைத்துவிடும். காற்று மணத்தை பலருக்கும் கொண்டுபோய் சேர்க்கிறது. ஆனால் காற்று மணப்பதில்லை. காற்றிடம் மணமில்லை''

விஜயன் இவ்வாறு கூறியதும் கலகலவென சிரிப்பு சத்தம் எழுந்தது. அதையடுத்து அருகியிலிருந்து வெளிப்பட்டான் ஒரு வாலிபன். ''நீங்கள் உணவைச் சாப்பிடலாம்'' என்றான் விஜயனைப் பார்த்து.

''என்னால் சாப்பிடாமல் பல நாட்களுக்கு இருக்க முடியும்'' என்றான் விஜயன்.

''அதனாலென்ன? நான் உணவளிக்கும்போது அருந்தலாமல்லவா?'' என்றான் அந்த வாலிபன்.

''எனக்கு உணவளிக்கும் நீ யார் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?''

''உங்களுக்குத் தண்டனையளிக்கப் போகிறவருக்கு வேண்டியவன். அது மட்டுமல்ல''

''வேறென்ன?''

''குவேணிக்கும் வேண்டியவன்''

''வேண்டியவன் என்றால்?''

''வேண்டியவன் என்று தான் சொல்ல வேண்டும்''

''புரியவில்லை''

''அவளே வருவாள். அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்''

''உன் பெயரென்ன?''

''அதையும் அவளே சொல்லுவாள்'' என்று கூறிவிட்டு அகன்றான் அந்த வாலிபன்.

வாலிபன் சென்றபிறகு எதைப் பற்றியும் கவலைப்படாமல் உணவை அருந்திவிட்டு அறைக்குச் சென்றான். அப்போதும் அறை திறந்தே இருந்தது. அதற்கு காரணம் என்ன என்பது தெரியாத நிலையில் அதற்குள் செல்லாமல் அந்தப் பகுதியிலேயே சுற்றிப் பார்த்தான். எந்த இடம் என்பது மட்டும் தெரியவில்லை. அன்று முழுதுமே அவனால் அந்தப் பகுதியில் சுதந்திரமாகச் சுற்ற முடிந்தது. எந்த இடம் என்பது தெரியாததாலும் தன்னைச்சுற்றி தன்னால் காணமுடியாத கண்காணிப்பு இருந்ததாலும் தப்பிச் செல்ல அவன் முயலவில்லை. அதோடு நேரம் தவறாமல் அவனுக்கு உணவும் வந்து கொண்டிருந்தது. எனவே அங்கு நிலவும் மர்மம் தானாக உடையும்வரை காத்திருக்கத் தீர்மானித்த அவன் அன்றிரவு அறைக்குள் சென்றான். அங்கே புதியதாக ஒரு கட்டிலும் அதில் மஞ்சமும் பஞ்சணையும் போடப்பட்டு அறையானது சகல வசதிகளோடு புதியதாக மாறியிருந்தது. திரிசங்கு என்பவனுக்கு கிடைத்த சொர்க்கத்தைப் போல தனக்குக் கிடைத்த வசதிகளை எண்ணிக்கொண்டு கட்டிலில் போய் அமர்ந்த போது ''என்ன, வசதிகள் போதுமானதாக இருக்கின்றனவா?'' என்று கேட்டபடி அறைவாசலில் நின்றாள் குவேணி.

எதையோ கேட்க நினைத்த விஜயன் எதையும் கேட்காமல் மௌனமாய் இருக்கவே ''ஏதோ பேச வந்தீர்கள்

போலிருக்கிறதே! ஏன் பேசவில்லை?'' என்று கேட்டான் குவேணி.

''என் கேள்விகள் தான் உனக்குப் பிடிப்பதில்லையே! நான் ஏதாவது கேட்டு மறுபடியும் நீ குறுவாளை எறிந்தால் என்ன செய்வது? ஆகவே தான் பேசாமலிருந்து விட்டேன்'' என்றான் விஜயன்.

''கழுமரத்தில் ஏற்றவிருக்கும் உங்களுக்கு இந்த வசதிகளெல்லாம் கிடைப்பதில் வியப்பாக இல்லையா?''

''பலியிடுவதற்கு முன்னால் ஆடுகளை அலங்கரித்து ஊர்வலமாக அழைத்துச் செல்லும் வழக்கம் எங்கள் நாட்டில் இருக்கிறது''

''விரக்தியில் இருக்கிறீர்கள் போலிருக்கிறது'' என்று சொன்ன குவேணி'' என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டாள்.

விஜயனுக்கு வெறுப்பாக இருந்தது. ''இந்தப் பெண்களுக்கு வேறு வேலையே இல்லையா?'' என்று உள்ளுக்குள் வெறுத்துக் கொண்ட அவன் ''உன்னை எப்படி எனக்குப் பிடிக்கும்? என் தோழர்களைக் கொன்றவள் நீ. என்னையும் கொல்ல முயன்றவள் நீ. தண்டிப்பதற்கும் முடிவு செய்துவிட்டவள் நீ. உன்னை எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கவில்லை. அடியோடு வெறுக்கிறேன். இந்த இடத்தைவிட்டு நீ போனால் போதும்'' என்று கடுகடுத்தான்.

''உங்கள் தோழர்கள் உயிரோடு இருந்தால்?''

''அப்போதும் உன்னைப் பிடிக்காது'' என்று அவசரம் அவசரமாகச் சொன்ன அவன் திடீரென ''என்ன சொன்னாய்? என் தோழர்கள் உயிரோடு இருக்கிறார்களா?'' என்று கேட்டான்.

''நான் கேட்டதற்குச் சரியான பதிலைச் சொல்லுங்கள். என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இல்லையா?''

''இல்லை''

''பிடிக்கவில்லையா?''

''ஆமாம்''

''இந்த பதில் எனக்குப் பிடித்திருக்கிறது. நீங்கள் மட்டும்என்னைப் பிடித்திருப்பதாகச் சொல்லிப் பற்களைக் காட்டியிருந்தால் இங்கேயே உங்களை வெட்டிப் போட்டிருப் பேன். என்னைப் பிடிக்காமல் அதேசமயம் என்மீது அக்கறை வைத்து எனக்கு உதவ ஒருவர் தேவை. அந்த ஒருவராக நீங்கள் இருப்பீர்களா?''

''எதற்கு?''

சொன்னாள் அவள்.

அதிர்ந்தான் விஜயன்.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்து நான்கு

# குவேணி கேட்ட உதவி

தன்னை விரும்பாமல் அக்கறை மட்டும் காட்டி உதவி செய்யவேண்டும் என்று இயக்கர் குலப் பெண் குவேணி கேட்டபோது அவளது கோரிக்கை வினோதமானதாக இருந்தது விஜயனுக்கு. எனவே லேசாகச் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''ஒருவர் மீது அக்கறை காட்டவும், உதவி செய்யவும் மற்றொருவருக்கு பரிச்சயம் இருக்கவேண்டும். அல்லது அன்போ கருணையோ அனுதாபமோ இருக்கவேண்டும். இதெல்லாம் இல்லையென்றால் உதவுவதற்கு கடன் பட்டிருக்க வேண்டும். இது எதுவும் இல்லாமல் எப்படி உதவ முடியும்?'' என்று கேட்டான் விஜயன்.

''நிலைமை தெரியாமல் பேசுகிறீர்கள். உங்களை எப்போது வேண்டுமானாலும் என் தந்தை கழுவேற்ற முடியும். சித்ரவதையான மரணத்தை அளிக்க முடியும். நான் உங்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கிறேன். அது போதாதா எனக்கு உதவுவதற்கு?'' என்று கொஞ்சம் சூடாகவே கேட்டாள் குவேணி.

''நீ சொல்வது நியாயம்தான். ஆனால் உன்னிடம் நான் உயிர்ப்பிச்சை கேட்கவில்லையே?'' என்று கேட்டான் விஜயன்.

''தானாக வந்து உதவி செய்தால் இப்படித்தான் எல்லோருமே கேட்பார்கள். நீங்கள் உயிர்ப்பிச்சை கேட்க வேண்டாம். உங்கள் தோழர்களுக்குக் கூடவா கேட்கமாட்டீர்கள்?''

''என் தோழர்கள் உயிரோடு இருப்பார்கள் என்று நான் நினைத்தது உண்மையாகி விட்டது''

''ஆணவம் வேண்டாம். உங்கள் நினைப்பை இப்போதுகூட பொய்யாக்க என்னால் முடியும்''

''வேண்டாம் பெண்ணே. என் நண்பர்களின் உயிரோடு நான் விளையாட விரும்பவில்லை. என்னைவிட அவர்களது உயிர் முக்கியம். அவர்களைக் கொன்றுவிட வேண்டாம்''

''உங்கள் நண்பர்களுக்காக எனக்கு நீங்கள் உதவுவீர்கள் அல்லவா?''

''உதவி என்ன என்பதைப் பற்றிச் சொல்''

சொன்னாள் அவள்.

அதிர்ந்தான் விஜயன்.

''என்ன பேச்சையே காணோம்? உதவ முடியாதா உங்களால்?'' என்று கேட்டாள் குவேணி.

''உன் பேச்சு போக்கு எல்லாமே புதிர்களாக இருக்கின்றன. புரியவில்லை'' என்றான் விஜயன்.

''எது புரியவில்லை''

''என்னைக் கொல்ல முயன்றாய். நான் தப்பினேன். பிறகு உன் ஆட்கள் வந்தார்கள். அப்போது கொன்றிருக்கலாம். ஆனால் கொல்லவில்லை. காயப்படுத்த மட்டுமே செய்தார்கள். அந்த காயத்தோடு என்னைச் சிறை வைத்திருக்கலாம். ஆனால் காயத்திற்குச் சிகிச்சை செய்து கட்டுபோட வைத்தாய். உணவையும் அனுப்பினாய். ஆனால் தந்தையோடு வந்து கழுவேற்ற உத்தரவு பிறப்பிக்க வைத்தாய். இப்போது

விபரீதமான உதவியைக் கேட்கிறாய். ஒரே குழப்பமாக அல்லவா இருக்கிறது!''

''நான் இப்போது கேட்ட உதவியைத் தவிர மற்ற எல்லாவற்றையும் வெறும் நாடகம் என்று நினைத்துப் பாருங்கள். குழப்பம் எதுவும் இருக்காது''

''நாடகமா?''

''என் இசையைக் கேட்டுவிட்டு என்னைப் பார்க்க வந்தவர்களை மடக்கி உங்களைப்பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேன். நீங்கள் எனக்கு உதவியாக இருப்பீர்கள் என்று கணக்கிட்டேன். உங்களை வரவழைக்க உங்கள் நண்பர்களை சிறைப்படுத்தினேன். நீங்கள் வந்தீர்கள். உங்களது பேச்சில் ஒரு வசீகரம் இருந்ததைக் கண்டேன். என் குறுவாள் வீச்சிலிருந்து தப்பியபோது உங்கள் சாமர்த்தியத்தைக் கண்டேன். கழுவேற்றப்படப் போவதாக அறிவித்தபோது அஞ்சாத உங்கள் நெஞ்சுறுதியைக் கண்டேன். நீரோடைக்கருகே கேள்விகளைக் கேட்டு உங்கள் அறிவையும் கண்டேன். நீங்கள் எனக்கு உதவுவதற்கு ஏற்றவர் என்பதை உணர்ந்தேன். ஆகவேதான் உதவியைக் கேட்டேன். இப்போதும் குழப்பமாக இருக்கிறதா?''

''நீரோடைக்கருகில் என்னைச் சந்தித்த வாலிபன் யார்?''

''என் ஆதரவாளன். எனக்கு வேண்டியவன்''

''உன் தந்தைக்கும் வேண்டியவன் என்று சொன்னானே?''

''இன்றைய நிலைவரை நாங்கள் எல்லோரும் ஒன்று தானே? அப்படியானால் அவன் எங்கள் இருவருக்கும் வேண்டியவன் தான்''

''என்னைக் கழுவேற்ற செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்னவாகும்?''

''அதை நான் பார்த்துக்கொள்கிறேன். கவலை வேண்டாம்''

''என் நண்பர்கள் எங்கே இருக்கிறார்கள்?''

''நீங்கள் எனக்கு உதவுவதாக வாக்களித்தால் அவர்கள் உங்களை வந்து சேர்வார்கள்''

''எனது புரவிகள்?''

''பத்திரமாக இருக்கின்றன. எல்லாம் உங்களிடம் ஒப்படைக்கப்படும். நீங்கள் எனக்கு உதவுவதாக வாக்களித்தால்''

''உனக்கு உதவ வேறு யாரும் இல்லையா?''

''இப்போது இல்லை''

''அந்த வாலிபன்?''

''அவனால் முடியாது. அவன் அனுபவம் இல்லாதவன். ராஜதந்திரம் எதுவும் அவனுக்குத் தெரியாது.

''அவன் பெயர்?''

''உதயகுமரன்''

விஜயன் சிறிதுநேரம் வரை யோசித்தான். அவள் கேட்கும் உதவியானது தனது அடிமடியிலேயே கையை வைக்கும் விபரீத உதவி என்பது அவனுக்குப் புரியாமலில்லை. அது மட்டுமல்ல. அது தன்லட்சியத்திற்கு நேர்மாறான வழி என்பதும் அவனுக்குப் புரிந்தது. தனக்குப் பாதகமானதும் அர்த்தமற்றதுமான இந்த உதவியை இவளுக்குச் செய்யத்தான் வேண்டுமா என்று தோன்றியது. அதேசமயம் அந்த உதவிக்குத் தலையாட்டா விட்டால் உடம்பில் தன் தலை இருக்காது என்பதும், தன் நண்பர்களின் உயிர் போய்விடும் என்பதும் எல்லோரும் உயிரை விட்டபின் முயல்வதற்கு எதுவும் மிஞ்சாது என்பதும் தெளிவாகப் புரிந்தது அவனுக்கு. ஆகவே பலரது உயிரைக் காப்பாற்றுவதற்கு இதைத்தவிர வேறு வழியில்லை என்பதால் இப்போதைக்குச் சம்மதம் தெரிவித்து நண்பர்களை மீட்பது என்றும் மீட்டபின் மற்ற விஷயங்களை பரிசீலனை செய்து கொள்ளலாம் என்றும் தீர்மானித்த அவன் அவளிடம் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

அவளோ அதில் திருப்தியடையவில்லை.

''இது போதாது. என்னோடு வாருங்கள்'' என்று கூறி அவனை அழைத்துச் சென்றாள்.

நீரோடைக்கருகில் சென்று தன் உதடுகளைக் குவித்து குரல் கொடுத்தாள் குவேணி.

அதையடுத்து பத்து புரவி வீரர்கள் வந்து நின்றார்கள்.

இருவரை கீழே இறக்கிவிட்டு ஒரு புரவியில் விஜயனை ஏறி அமரச் சொல்லவிட்டு மற்றொரு புரவியின் மீது ஏறிக் கொண்டாள் குவேணி. முன்னால் நான்கு புரவி வீரர்களும் பின்னால் நான்கு புரவி வீரர்களும் காவலுக்கு வர அனைவரும் புறப்பட்டார்கள்.

இரவு நேரத்தில் கும்மிருட்டில் புரவிகள் சர்வ சாதாரணமாகப் பாய்ந்தோடுவதைக் கண்ட விஜயன் வியந்து போய் ''இந்த கும்மிருட்டில் உங்களுக்கு எப்படி கண் தெரிகிறது?'' என்று கேட்டான்.

''நாங்கள் பிசாசுகள். இரவில் தான் நன்றாக கண் தெரியும்'' என்றாள் குவேணி.

''உண்மை'' என்றான் விஜயன்.

''என்ன உண்மை?''

''உன் தந்தைதான் உன்னை ராட்சஸி என்று சொன்னாரே, ராட்சஸிக்கு பேய்க்குணம் தானே இருக்கும்?''

குவேணி இதற்கு பதிலேதும் கூறவில்லை. தன் நகைச்சுவையை அவள் ரசிக்காதது அவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தாலும் அவளது மனஉறுதியைப் புலப்படுத்தியது.

கணிசமான தூரத்தைக் கடந்த பிறகு பொட்டல் வெளி ஒன்றில் புரவிகள் நிற்க, எல்லோரும் இறங்கிக் கொண்டார்கள். பந்தம் ஒன்றைத் தயார் செய்யச் சொல்லி கையில் ஏந்திக் கொண்ட குவேணி விஜயனை மட்டும் அழைத்துக் கொண்டு நடந்தாள். இரவு முற்றிய நேரமாதலால் காட்டுமிருகங்களின் சப்தங்கள் தொலைவில் எழுந்தபடியிருந்தன. அவற்றில் தங்களது தனித்தன்மையைக் காட்டுவது போல் நரிகள் கூட்டமாகச் சேர்ந்து ஊளையிட்டன. பொட்டல் பகுதியின் விளிம்புகளில் வளர்ந்திருந்த மருதமரங்களில் விழித்தபடி அமர்ந்திருந்த கோட்டான்கள் குவேணி புதிய மனிதன்

ஒருவனுடன் செல்வதைப் பார்த்துவிட்டு அவளை எச்சரிப்பது போல் விட்டு விட்டு குரல் கொடுத்தன.

பொட்டலைத்தாண்டி நீண்டு சென்ற ஒற்றையடிப் பாதையில் நடந்த குவேணி முடிவில் பெரியதோர் சிலைக்கு முன்பு வந்தாள். பத்தடி உயர மேடையில் அதே பத்தடி உயரத்திற்கு கரியதோர் சிலை இருந்தது. அதற்கு அடிக்கடி பூஜை செய்தததற்கு அறிகுறியாக மலர்களும் மாலைகளும் சிதறிக் கிடந்தன. யாகம் செய்ததற்கு அறிகுறியாக யாககுண்டங்கள் நான்கு சிலைக்கு முன்பு காணப்பட்டன. சிலையின் காலை மட்டுமே தொட முடிந்தது குவேணியால். அவ்வாறு தொட்டு வணங்கிய அவள் விஜயனைப் பார்த்து ''நீங்களும் தொட்டு வணங்குங்கள்'' என்றாள்.

விஜயன் அப்படியே தொட்டு வணங்கிவிட்டு ''இது என்ன சிலை ?'' என்று கேட்டான்.

''இதுதான் சேதியா. எங்கள் குலதெய்வம். இதற்கு முன்பு ஆணையிட்டுச் சொல்லுங்கள்'' என்றாள் குவேணி.

''ஏன் என்மீது நம்பிக்கையில்லையா?''

''சத்தியம் செய்ய ஏன் தயங்க வேண்டும்? நீங்கள் சத்தியவானாக இருந்தால்? அதோடு நீங்கள் என்னை ஏமாற்றலாம். சேதியாவிடம் ஏமாற்ற முடியாது. அப்படி முயன்றால் மண்டை வெடித்துச் சிதறும்''

விஜயன் வாக்குவாதம் செய்யாமல் ஆணையிட்டுவிட்டு ''என்னைச் சத்தியம் செய்யச் சொன்னது சரி. உன் நிலை என்ன? உன்னை நான் எப்படி நம்புவது?'' என்று கேட்டான்.

''நானும் சத்தியம் செய்யட்டுமா?''

''தேவையில்லை. பரஸ்பர நம்பிக்கைகள் இருந்தால் போதும். இதை நான் சொல்வதற்குக் காரணம் நாம் இறங்கப் போகும் பணி மிகவும் அபாயகரமானது. நமக்குள் நம்பிக்கை குறைவு ஏற்பட்டால் சிரமமாகிவிடும்''

''அது தெரிந்து தான் உங்களை என் தெய்வத்திற்கு முன்னால் ஆணையிடச் சொன்னேன். இனி கவலையில்லை. இனி நீங்கள்

போகலாம். புரவிகள் இருந்த இடத்திற்கே எங்கள் ஆட்கள் உங்களை அழைத்துப் போவார்கள். அங்கே உங்கள் நண்பர்கள் வந்து சேருவார்கள்'' என்று சொன்ன குவேணி முன்பு போலவே உதடுகளைக் குவித்து குரல் கொடுத்ததும் பொட்டலில் காத்திருந்த ஆட்கள் அங்கு வந்தார்கள். குவேணி அவர்களுக்கு உரிய கட்டளைகளை இட்டதும் விஜயனை அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் சென்றதும் சிலையின் பின்னாலிருந்து வெளியே வந்தான் உதயகுமரன்.

குவேணியிடம் வந்த அவன் ''குவேணி, நீ அவனை நம்புகிறாயா?'' என்று கேட்டான்.

''சேதியாவின் முன் சத்தியம் செய்ததை நீ கேட்கவில்லையா?''

''கேட்டேன்''

''இதற்குப் பிறகு உனக்கேன் சந்தேகம்? எனக்கு விஜயபாகுவைப் பற்றி விரிவாகத் தெரியாது. ஆனால் நமது தெய்வத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். உனக்கும் தெரியும். இங்கே ஆணையிட்டவர்கள் தவறமாட்டார்கள்.''

''உண்மைதான். எனக்கென்னவோ சந்தேகமாகவே இருக்கிறது.''

''நீ இனியும் சந்தேகப்படுவது நமது தெய்வத்தை மதிக்காததை தான் காட்டுகிறது. நீ நாசமாகப் போவாய்''

''கோபப்படாதே குவேணி. விஜயபாகு யார்? வெளிநாட்டவன். இங்கே ஏன் வந்தான் என்பது சரியாகத் தெரியவில்லை என்றாலும் நிச்சயமாக உனக்கு உதவ வந்திருக்க முடியாது. ஆனால் நீ கேட்டதும் உதவ முன் வருகிறான். தன் உயிர்மேல் உள்ள ஆசையால் தான் உதவுகிறான் என்கிறாயா? அல்லது நண்பர்களைக் காப்பாற்றத்தான் உதவுகிறான் என்று நினைக்கிறாயா? தன் நண்பர்களோடு சேர்ந்து விட்டால் அவன் உன் இஷ்டப்படி எதற்கு நடக்க வேண்டும்? சூழ்ச்சியில் ஈடுபட்ட தந்தையிடம் உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டால்?''

''வீண் கற்பனைகளைச் செய்யாதே உதயகுமரா. சந்தேகத்தை நாம் அனுமதிக்க ஆரம்பித்தால் அதன் பயணம் முடியவே முடியாது. நான் நம்புவதைப்போல நம் தெய்வத்தையும் அதன் சக்தியையும் நம்பு'' என்று கூறி பேச்சிற்கு ஒரு முடிவு கட்டினாள் குவேணி.

★★★

ஏறக்குறைய விடியும் நேரத்தில் தாமிரபன்னிப் பகுதிக்கு வந்து சேர்ந்தான் விஜயன். அவனுக்கு வழிகாட்டி வந்த குவேணியின் ஆட்கள் விடைபெற்றுக் கொண்டார்கள். விஜயன் அங்கு வந்து சேர்ந்தபோது புரவிகளும் அடிமைகளும் மட்டுமே இருந்தார்கள். அவர்களை குவேணி தொடவில்லை என்பதை உணர்ந்தான் விஜயன். பொழுதுவிடிந்து சிறிதுநேரம் கழிந்த பிறகு அவனது தோழர்கள், பணிப்பெண்கள், உபதலைவர்கள், மருத்துவர்கள் என எல்லோரும் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். விஜயனைக் கண்டதும் எல்லோரது முகமும் இருண்டது.

''உங்களில் பூனைக்கு மணிகட்டியாது யார்?'' என்று கேட்டான் விஜயன்.

அவன் எதைக் கேட்கிறான் என்பது எல்லோருக்கும் புரிந்ததால் ''உதயணன்'' என்றார்கள். உதயணன் முன்னே வந்து நின்றான்.

''உதயணா, உனக்கு எத்தனை முறை சொன்னாலும் ஏன் உறைக்கவில்லை? ஆரம்பத்திலிருந்து உன்னை கவனித்த படிதான் இருக்கிறேன். உணர்ச்சி வசப்படுவதும் பிரச்சனைகளை உண்டாக்குவதுமே உன் வழக்கமாக இருக்கிறது. உன் தவறுகளை உணராமல் மற்றவர்களுக்கு தண்டனை வழங்கச் சிபாரிசு செய்கிறாய். நிர்பந்திக்கிறாய். வங்கதேசத்தில் இருந்தபோது வராத ஒழுக்கக்கேடு இப்போது எப்படி வந்தது உனக்கு? நாம் என்ன சுற்றுலா பயணத்தையா மேற்கொண்டிருக்கிறோம்? இந்நாட்டு நிலவரம் பற்றி நன்கு தெரிந்த குருநாதர் நம்மை எச்சரிக்கும்போது அதை மீறும் துணிவு உனக்கு எப்படி வந்தது? அடிமைகளிடம் இருக்கும் கட்டுப்பாடு உங்களுக்கெல்லாம் இல்லாதது ஏன்? உனக்கே சுயகட்டுப்பாடு இல்லாதபோது அடிமைகளை எப்படிக் கட்டுப்படுத்துவாய்?

உன் உபதலைவன் பதவி இன்றோடு அகற்றப்படுகிறது. இனியாவது ஒழுங்காக நடந்துகொள். நான் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறேன். உங்களையெல்லாம் மீட்பதற்காக பெரும் சிக்கலில் சிக்கியிருக்கிறேன். அதிலிருந்து மீண்டு லட்சியத்தில் வெற்றி பெறுவதென்பது கலையும் மேகங்களாகிக் கொண்டிருக்கிறது. எந்தத் தீவிலும் பார்க்காத பிரச்சினையை இங்கே காண்கிறேன் நான். இனியும் உங்களால் பிரச்சினை ஏற்பட்டால் தண்டிப்பதற்குத் தயங்கமாட்டேன்'' என்று பெரும்சீற்றத்துடன் கூறினான் விஜயன்.

அவன் கூறியதெல்லாம் உண்மையாக இருந்ததால் உதயணன் உட்பட யாரும் எதுவும் கூறாமல் கலைந்து சென்றார்கள்.

பிறகு நவவீரர்களை அழைத்து ''நீங்களெல்லாம்கூட உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விட்டால் உங்களை நவவீரர்கள் என்று தேர்ந்தெடுத்து என் பாதுகாப்பிற்காக வைத்துக் கொண்டதற்கு என்ன அர்த்தமிருக்க முடியும்?'' என்று கடிந்து கொண்ட அவன் ''நாம் கொண்டு வந்த தங்க நாணயங்களும் மூன்றுப் பெட்டி கர்ணபத்ர பங்கமும் பத்திரமாக இருக்கிறதா என்று கவனித்தீர்களா?'' என்று கேட்டான். அவனது குரலில் கவலை இருந்தது.

நாம் அவற்றை உணவுப் பொருட்களோடு கொண்டு வந்திருந்ததால் பத்திரமாக இருக்கின்றன'' என்றார்கள் நவ வீரர்கள்.

''அவை நமக்கு மிகவும் முக்கியம். அதேசமயம் உணவுப் பொருட்களோடு இனிமேலும் அவற்றை வைத்திருக்க முடியாது. எனவே இங்கேயே ஓரிடத்தில் இன்றிரவு பூமியைத் தோண்டி அவற்றைப் புதைத்து வைத்து விடுங்கள்'' என்றான் விஜயன்.

அந்த சமயத்தில் நவவீரர்களில் ஒருவனானஅபயன் ''தலைவர் கோபித்துக் கொள்ள மாட்டீர்கள் என்றால் நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன்'' என்றான்.

விஜயனும் அவனை அலட்சியப்படுத்தாமல் ''என்ன விஷயம் சொல்'' என்றான்.

''தலைவரே, தங்களது மனக்கட்டுப்பாடும் உடல் கட்டுப்பாடும் உங்களுக்கே உரியது. தோழர்களுக்கோ அப்படியில்லை. வங்கதேசத்தை விட்டு வந்து பலமாதங்கள் ஆகின்றன. அவர்களுக்குத் தங்கள் உணர்வுகளுக்கு தீர்வு காண வாய்ப்பு கிட்டவில்லை. நாகர்மலைத் தீவில் நிறைய பெண்கள் இருந்தாலும் அவர்களெல்லாம் அணுக முடியாத அளவிற்கு காட்டுமிராண்டிகளாக இருந்தார்கள்...'' என்று அபயன் கூறி முடிப்பதற்குள் ''நீ என்ன சொல்ல வருகிறாய் என்று புரிகிறது அபயா.'' என்று கூறிய விஜயன் ''உங்களுக்கெல்லாம் அந்தப் பசி இல்லையா?'' என்று கேட்டான்.

''நாங்கள் பிரம்மச்சரிய விரதத்தைப் பூண்டிருக்கிறோம்'' என்றான் அபயன்.

''அப்படியெல்லாம் எதுவும் அவசியமில்லை. இதுபற்றி இன்று மாலைக்குள் முடிவெடுக்கிறேன்'' என்றான்.

அதன் பிறகு யோசனையில் ஆழ்ந்த அவனுக்கு நவவீரர்கள் கூறிய கருத்து சரியானதாகத் தோன்றியது. குவேணியைப் பற்றியும் யோசித்தான். மற்ற இடங்களில் பிரச்சினை வந்தபோது அதுபற்றி உபதலைவர்களிடம் ஆலோசித்த மாதிரி குவேணியின் பிரச்சினையை யாரிடமும் ஆலோசிக்க அவனால் முடியவில்லை. குவேணி தன்னிடம் கேட்ட உதவி பற்றியும் அதைச் செய்வதாக தான் சத்தியம் செய்தது பற்றியும் நண்பர்களுக்குத் தெரிய வந்தால் பிரளயம் உண்டாகிவிடும் என்று தெரிந்திருந்த காரணத்தால் அவர்களிடம் அதுபற்றி எதுவும் சொல்லமுடியாத நிலையில் இருந்தான். தனது உணர்வுகளையும் எண்ணங்களையும் அந்தரங்கமாகப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லாதது அவனுக்கு என்னவோ போலிருந்தது.

குவேணிக்கு உதவும் பட்சத்திலும் அதுபற்றி நண்பர்களிடம் விவாதிக்க முடியாத பட்சத்திலும் அவர்களையும் புரவிகளையும் தாமிரபன்னியில் வைத்திருக்க வேண்டியதில்லை என்று தோன்றியது. தேவையில்லாமல் அவர்களை அங்கே வைத்திருப்பது பிரச்சினையைத்தான் வரவழைக்கும் என்பதை உணர்ந்த அவன் நீண்ட யோசனைக்குப் பிறகு ஐம்பது பேரை

சிலரகசிய செய்திகளைச் சொல்லி ஆனைக்கோட்டைக்கு அனுப்பினான். மற்றவர்களையும் ஐம்பது பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து இயக்கர்கள் வாழும் பகுதிக்குச் சென்று அவர்களோடு கலந்துவிடும்படியும் முக்கியமான தகவலிருந்தால் யாராவது ஒருவர் அந்தந்தக் குழுவிலிருந்து வந்து தன்னிடம் தெரிவிக்கும்படியும் கூறி அனுப்பி வைத்தான். கடைசியில் அவனும் நவவீரர்களும் மட்டுமே மிஞ்சினார்கள்.

''அபயா, உனக்கு இப்போது திருப்தியா?'' என்று கேட்டான் விஜயன்.

''பரம திருப்தி தலைவரே. அவர்கள் பசியும் தீரும். உங்கள் வேலையும் நல்லபடி நடக்கும்'' என்றான் விஜயன்.

''நீங்களும் பசியாறலாம். ஆனால் எச்சரிக்கையாக இருங்கள்'' என்று சொன்ன விஜயன் அன்றிரவு பொக்கிஷத்தை பூமிக்கடியில் புதைப்பதை நேரிலிருந்து கவனித்தான்.

அடிமைகள் தாம் வேட்டையாடிவந்த மிருகங்களின் இறைச்சியைப் பதப்படுத்தி உணவு சமைத்தார்கள். எல்லோரும் அதை உண்டு இளைப்பாறினார்கள்.

விஜயனைப் பொறுத்தவரை நாகதீபத்தில் தாமிரபன்னியை தான் கைப்பற்றிய முதல் தளமாகக் கருதினான். அதேசமயம் மேற்கொண்டு விஸ்தரிக்க முடியாதவாறு தடையாக அமைந்திருந்தது குவேணியின் கோரிக்கை. அவளை எப்படிச் சமாளிப்பது என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோது காற்றிலே தவழ்ந்து வந்தது குவேணியின் தேனிசை.

''சரி, குவேணி அழைக்கிறாள். போக வேண்டியதுதான்'' என்று நினைத்த அவன் நவவீரர்களிடம் ஏதோ சொல்லிவிட்டு குரல் வந்த இடம் நோக்கி சிறிது தூரம் சென்றதும் குவேணியின் குரல் நின்றது.

''குவேணி! குவேணி!'' என்று குரல் கொடுத்தான் விஜயன்.

ஆனால் குவேணி வரவில்லை.

மாறாகப் பத்து பதினைந்து வீரர்கள் உருவிய வாட்களுடன் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

## அத்தியாயம் எழுபத்தைந்து

# சாம்ராஜ்யக் கனவு

விஜயனை வளைத்துக்கொண்ட வீரர்கள் 'எங்கள் தலைவருக்கு எதிராகவா சதிசெய்கிறாய்? உன்னை இங்கேயே வெட்டிப் போடுவோம்'' என்றார்கள்.

''வெட்டுங்கள்'' என்று கூறிச் சிரித்தான் விஜயன்.

அவனது சிரிப்பு வீரர்களுக்கு கோபமூட்டவே ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டார்கள்.

''எனக்கு விதிக்கப்பட்டிருப்பது சித்ரவதையான மரணம். நீங்களோ சித்ரவதை இல்லாமல் வெட்டுவதாகச் சொல்கிறீர்கள். தலைவனிடம் இல்லாத கருணையை நீங்கள் காட்டுவது எனக்குச் சிரிப்பாக இருக்கிறது. அதுசரி யார் உங்கள் தலைவர்? காளிசேனர் தானே?''

''ஆம்''

''அவருக்கெதிராக நான் ஏன் சதிசெய்ய வேண்டும்?''

''அவரது, மகளும் நீங்களுமாகச் சேர்ந்து சதி செய்கிறீர்கள்''

''யார்? குவேணியுடனா?''

''ஆம்''

''அவள் ஏன் என்னோடு சேர்ந்து சதி செய்யவேண்டும்? உங்கள் இளவரசி மீது உங்களுக்கே நம்பிக்கை இல்லையா?''

''நாங்கள் கேட்டதற்கு பதில் சொல்''

''உங்கள் கேள்விக்கான பதிலை குவேணிதான் சொல்ல வேண்டும். அவளிடம் போய் கேளுங்கள். எனக்கு அவளும் ஒன்றுதான். உங்கள் தலைவரும் ஒன்றுதான்''

விஜயன் இப்படிக் கூறியபோது அருகிலிருந்து உதட்டைக் குவித்து எழுப்பும் குரல் ஒலித்தது. வீரர்கள் உடனே விஜயனை

விட்டு அகன்றோடினார்கள். பிறகு அங்கு வந்து சேர்ந்த குவேணி ''நீங்கள் தேறிவிட்டீர்கள் சோதனையில்'' என்றாள்.

விஜயனுக்கு கடுப்பாக இருந்தது. ''சோதனையா?'' என்று கேட்டான்.

''அச்சுறுத்தினால் என்னைக் காட்டிக் கொடுக்கிறீர்களா என்று சோதித்துப் பார்த்தேன். நீங்கள் தேறிவிட்டீர்கள்'' என்றாள் குவேணி.

''உன் குலதெய்வத்தின் முன்பு சத்தியம் செய்த பிறகும் உனக்குச் சந்தேகமா?'' கோபத்துடன் கேட்டான் விஜயன்.

''எனக்கில்லை. எனக்குச் சந்தேகமில்லை. உதய குமரனுக்குத்தான் சந்தேகம். அவன் கூறிய உபாயம் தான் இது''

''இதோ பார் குவேணி, நீயாக இருந்தாலும் சரி அந்த வாலிபனாக இருந்தாலும் சரி, சத்தியம் செய்து கொடுத்த பிறகும் சந்தேகிக்கிறீர்கள் என்றால் அதற்கு அர்த்தமில்லை. சத்தியத்தை நான் விலக்கிக் கொள்கிறேன்''

''வேண்டாம். வேண்டாம். அறியாதவன் சந்தேகித்து விட்டான். நான் தற்போது செய்தது தவறுதான்''

''இன்னும் யார் யார் என்னைச் சோதிக்க விரும்புகிறார்கள்?''

''அப்படியெல்லம் யாருமில்லை''

''நான் சோதனைப் பொருள் அல்ல என்பதை முடிவில் நீ உணர்ந்து கொள்வது நல்லது. நான் ஆபத்தின் விளிம்புகளில் பயணம் செய்பவன். உயிருக்கு அஞ்சி ஒருபோதும் நான் வாழ்ந்தது கிடையாது. இனிமேல் இந்த பயமுறுத்தும் வேலைகளை நிறுத்திக்கொள்''

'கோபமடையாதீர்கள். இனி இப்படி நடக்காது'' என்று சுமூகமான குரலில் கூறிய குவேணி ''உங்கள் வீரர்களை யெல்லாம் அனுப்பி விட்டீர்களாமே? எதற்கு? எங்களைப் பற்றி ஒற்றறியவா?'' என்று கேட்டாள்.

''உன் புத்தி உனக்கு என் புத்தி எனக்கு''

''என்ன சொல்கிறீர்கள்?''

''என் நண்பர்களை அழித்து விட்டதாக நீ உன் தந்தையிடம் கூறியிருக்கிறாய். நாளைக்கே அவர் திடீரென இங்கு வந்து அவர்கள் உயிரோடு இருப்பதைப் பார்த்தால் உன்னைச் சந்தேகிக்க மாட்டாரா?''

''ஆமாம். உண்மைதான்.''

''அதோடு ஆறுமாத காலமாக கப்பலிலும் கடலிலும் சுதந்திரமின்றி நண்பர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டு விஷயங்களையும் சேர்த்துப் பார்த்தேன். சுதந்திரக் காற்றை அனுபவிக்க அவர்களை அனுப்பிவிட்டேன்.''

''முன் யோசனையுடன் தான் செய்கிறீர்கள்''

''உனக்கு உதவுபவனுக்கு முன்யோசனை அவசியமல்லவா?'' என்று வினவிய விஜயன் ''நீ உன் தந்தையைச் சந்தித்தாயா?'' என்று கேட்டான்.

''எதற்காக சந்திக்க வேண்டும்?''

''அவர் கூறிய அறிவிப்பை நீ வெளியிடவில்லை. என்னைக் கழுவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. என்னைச் சிறையிலிருந்து விடுவித்துமிருக்கிறாய். இதையெல்லாம் நீ சொல்லவில்லை என்றாலும் ஒற்றர்கள் அவருக்குச் சொல்லியிருப்பார்கள். அதற்கு உன் விளக்கத்தை அவர் எதிர்பார்க்கலாம் அல்லவா?''

''என் தந்தை என் பேச்சைத் தவிர யார் பேச்சையும் ஏற்க மாட்டார். அவருக்கு விளக்கத்தை எப்போது எப்படி கூறவேண்டும் என்பது எனக்குத் தெரியும். அது விஷயமாக நீங்கள் கவலைப்பட வேண்டாம்''

''தந்தை இவ்வாறு இருக்கும்போது நீ ஏன் அவருக்கு எதிராகத் திரும்ப வேண்டும்?''

''அவர் சரியான திசையை நோக்கித் திரும்பாததால் தான்''

''என்ன சொல்கிறாய் நீ?''

''மன்னர்கள் எல்லா நாட்டிலும் இருக்கிறார்கள். ஆனால் செயல்திறன் கொண்டவர்கள் தான் வெற்றி பெறுகிறார்கள்.

நிலைத்து நின்று சாம்ராஜ்யத்தைப் படைக்கிறார்கள். சாம்ராஜ்யத்தைப் படைக்கும் திசையை நோக்கி என் தந்தை திரும்பவில்லை. நான் பல்முறை சொல்லி அலுத்து விட்டேன். அவர் நல்லவராக இருக்கலாம் ஆனால் அவரிடம் செயல்திறன் இல்லை. அவருக்கு வயதும் ஆகிவிட்டது. நான் செயல்படா விட்டால் அவரும் அவரது தந்தையைப் போல் ஒருநாள் மடிவார். அடுத்ததாக அவரது மகன் உதயகுமரன் வருவான். அவன் எப்படி என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். அவனும் உருப்படியாக எதையும் செய்யப் போவதில்லை. புளித்துப் போன பழைய கதைகளே மீண்டும் மீண்டும் நடக்கும். இதை நான் விரும்பவில்லை''

''உதயகுமரன் உன் சகோதரனா?''

''ஆமாம்''

''அவன் உன்னை ஆதரிக்கிறானா?''

''ஆமாம்''

''உன் உணர்வுகளை அவன் அறிந்திருக்கிறானா?''

''ஆம்''

''உன் உணர்வுகளை ஒப்புக் கொள்கிறானா?''

''ஆம்''

''உனக்கிருக்கும் உறுதி அவனுக்கு இருப்பது போலத் தோன்றவில்லையே! சந்தேகக்காரனாக இருக்கிறானே! அது ஆபத்தில்லையா?''

''என் முயற்சிக்கு அவன் ஆபத்தாக மாறினால் உயிரோடு இருக்கமாட்டான். அவனை முழுமையாக நம்பாததால் தான் நாகதீபத்தின் அரியணையில் என்னை அமர்த்த உங்கள் உதவியை நாடினேன்'' என்று கூறிய குவேணி'' கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேலாகவே நாகதீபம் குழப்பமான பூமியாகத்தான் இருந்து வருகிறது. நாகர்கள், இயக்கர்கள், வேடர்கள் ஆகிய மூவரும் ஒரே தமிழினமாக இருந்தாலும் பிரிந்து நின்று ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு தான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் நாகர்கள் இனமும் பிறகு வேடர் இனமும் இத்தீவை ஆதிக்கம் செலுத்தின.

இயக்கர்கள் ஒடுங்கிக் கிடந்தார்கள். என் தந்யையின் காலத்தில் தான் இயக்கர்கள் கை ஓங்கியது. நாகர்கள் வடக்கிலும் வேடர்கள் தெற்கிலுமாக அடங்கிவிட்டார்கள்'' என்றாள்.

''நீ விரும்பும் சாம்ராஜ்யத்தைப் படைக்க இது சரியான சந்தர்ப்பம்தானே? படைக்க முடியாமல் எது தடுக்கிறது உங்களை?'' என்று கேட்டான் விஜயன்.

''வீரரே! சிங்கம் ஆர்பரித்தது. இதர விலங்குகள் நடுங்கின. அதோடு அந்தச் சிங்கம் படுத்துக்கொண்டது. சாம்ராஜ்யத்தை எப்படி உருவாக்க முடியும்?''

''ஏன் முடியவில்லை?''

''என் தந்தை ஆரம்பத்தில் காட்டிய வேகத்தை நட்டாற்றில் விட்டு விட்டார். அவரது மூதாதையர்களைப் போலவே எதிரிகள் தலைகாட்டும்போது அவர்களைக் கழுவேற்றுவதும் கையைக் கழுவிக் கொள்வதுமே அவரது பழக்கமாகிப் போய்விட்டது. எதிரிகளை அழிக்க வேண்டியது தான். ஏதோ குற்றவாளிகளை அழிப்பது போல எதிரிகளைக் கொன்றுவிட்டால் போதுமா? சாம்ராஜ்யம் உருவாகிவிடுமா? மாயா ஜாலத்தில் உருவாகி விடுமா ராஜ்யம்? தந்தையின் செயல்திறன் குறைந்து விட்டதால் எதிரிகள் பலம் பெற்று வருகிறார்கள். எங்கள் இயக்கர் குலத்திலேயே பல பிரிவுகள் உண்டாகிவிட்டன. எங்களிடமே ஒற்றுமை குலைந்துவிட்டது. எங்களுக்குள்ளேயே பொறாமையும் போட்டியும் உண்டாகி கலவரங்கள் அவ்வப்போது நடக்கின்றன. இந்த நிலையில் நீங்கள் வந்தீர்கள். உங்களைக் கழுவேற்றிவிட்டால் எதிரிகள் ஆடிப்போய் விடுவார்கள் என்ற பழைய பல்லவியையே தற்போதும் பாடுகிறார் காளிசேனர். இதை நான் எதிர்க்க விரும்புவது தவறா?''

''இல்லை குவேணி. தவறில்லை. இனி என்ன செய்ய வேண்டும் என்பதும் எனக்குப் புரிந்துவிட்டது. இப்போது வெகுநேரமாகி விட்டது. நீ போய் வா. நாம் நாளைக்குச் சந்திப்போம்'' என்று கூறினான் விஜயன். அப்படிக் கூறிவிட்டு ''தனியாக நீ போவாயா?'' என்று கேட்டான்.

''பிசாசுக்கு துணை எதற்கு?'' என்று கூறிச் சிரித்த குவேணி வழக்கப்படி உதடுகளைக் குவித்து குரலெழுப்பினாள். புரவி வீரர்கள் பலர் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அன்றிரவெல்லாம் குவேணியின் நினைப்பு அவனது தூக்கத்தை அழித்தது. அவளது நோக்கம் குறை காண முடியாததாக இருந்தது. பல ஆண்டுகளாக இயக்கர் இன ஆளும் வர்க்கத்தினரிடையே தோன்றாத நோக்கம் அவளுக்குத் தோன்றியதை நினைத்தபோது அவளை உள்ளூர பாராட்டவே செய்தான் விஜயன். தனக்கும் குவேணிக்கும் நாகதீபத்தைப் பொறுத்தவரை நோக்கம் ஒன்றுதான். குவேணியோ ஆளும் வர்க்கத்தில் இருந்து கொண்டு ஸ்திரமான ஆட்சியை நிலைநிறுத்தவும் சாம்ராஜ்யமாக மாற்றவும் விரும்பினாள். விஜயனோ உரிமை ஏதும் இல்லாமல் அதை விரும்பினான். குவேணியின் நோக்கம் நிறைவேற என்ன செய்யவேண்டும் என்பது அவனுக்குப் புரிந்தது. அதைச் செய்வதால் அவளது லட்சியம்தான் நிறைவேறுமே தவிர தன்னுடைய லட்சியம் நிறைவேறாது என்பது புரிந்ததால் அதுபற்றி நீண்ட நேரம் வரை யோசித்தான்.

இதற்கிடையில் தனது குருநாதர் உபதிஸ்ஸர் திரும்பாதது அவனுக்குக் கவலையை அளித்தது. தன்னைச் சேர்ந்த எல்லோரையும் பத்திரமாகத் திருப்பி அனுப்பி விடுவதாக குவேணி கூறியிருந்தபோது அவர் மட்டும் வராதது அவனுக்குப் புதிராக இருந்தது.

மறுநாள் குவேணிக்கு உதவும் முயற்சியாக அடிமைகளை அழைத்து தாமிரபன்னிப் பகுதியில் ஓரிடத்தைக் காட்டி ஒரு சிறிய குளம் அளவிற்குத் தோண்டச் சொல்லி நவவீரர்களை மேற்பார்வையிடும்படிச் சொன்னான்.

அன்று மாலை அங்கேயே வந்து சேர்ந்த குவேணி அடிமைகள் செய்து கொண்டிருந்த பணியைப் பார்த்துவிட்டு எதுவும் புரியாதவளாய் விஜயனிடம் வந்தாள்.

விஜயன் தரையில் ஏதேதோ கோடுகளைப் போடுவதும் அழிப்பதுமாக இருந்தான்.

அவனிடம் வந்து நின்ற குவேணி ''இங்கே என்ன நடக்கிறது? பெரிதாகப் பள்ளம் தோண்டப்படுகிறதே எதற்கு; எங்களையெல்லாம் போட்டுப் புதைக்கவா?'' என்று கேட்டாள்

விஜயனோ அவளது கிண்டலைப் பொருட்படுத்தாமல் ''குவேணி, உன்னிடம் நாகதீபத்தின் வரைபடம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

விஜயன் விளையாடும் நிலையில் இல்லை என்பதை உணர்ந்த அவளும் ''வரைபடம் இல்லையே எதற்கு?'' என்று கேட்டாள். கேட்டுவிட்டு ''தரையிலேயே வரைந்து காட்ட முடியும்'' என்று கூறி தரையில் நாகதீபத்தைக் கிறல்களால் வரைந்தாள்.

அதை உன்னிப்பாக கவனித்த விஜயன் ''இயக்கர்களின் எல்லைகளை இதில் காட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

அவளும் அந்த வரைபடத்தைக் காட்டி ''வடக்கில் கதம்ப நதியும் தெற்கில் கல்யாணி நகரும் மேற்கே நாகர் முனையும், கிழக்கில் குடாக்கடலும் எங்கள் எல்லைகள்'' என்றாள்.

அவள் சுட்டிக்காட்டிய எல்லைகளை வளைத்து கோடுபோட்ட விஜயன் ''இதன்படி பார்த்தால் உங்களுக்கு தெற்கே இருக்கும் வேடர்கள் இனத்தாரின் ஆதிக்கப்பகுதி உங்கள் பகுதியைவிட பெரிதாக இருக்கிறது'' என்றான்.

''இருக்கலாம். ஆனால் எங்கள் பகுதியைவிட அவர்கள் பகுதி மோசமானது. பெரியமலைகளும் காடுகளும் பள்ளத்தாக்குகளும் காட்டாறுகளும் நிறைந்த பகுதி அது. அங்கே வாழும் வேடர் இனத்தவர் எங்களைவிட மிகவும் குறைவு. எங்கள் எண்ணிக்கையில் பாதி என்றே சொல்லலாம்''

''அப்படி இருக்கும்போது அவர்களை வெல்ல நீங்கள் ஏன் முயலவில்லை?''

''அதைத்தான் சொன்னேனே! எதிரிகளை வெல்வது என்பது எதிர்ப்பவன் ஒருவனைப் பிடித்து கழுவேற்றுவதோடு எங்கள் முயற்சி நின்றுவிடுகிறது. வேறு முனைப்புகள் காட்டுவதில்லை. பிறகு எப்படி வெல்லமுடியும்?''

''வேடர்களின் தலைநகரம் கல்யாணியா?''

''கல்யாணியில் தான் அவர்கள் குவிந்திருக்கிறார்கள். அது கடலோரமாக இருப்பதால் வாணிபம் செய்வதற்கு வசதியாக இருக்கிறது''

''வாணிகம் செய்யும் அளவிற்கு அவர்களிடம் மரக்கலங்கள் இருக்கின்றனவா?''

''ஓரிரு சிறுகப்பல்கள் இருக்கலாம்''

''நீங்கள் எங்கே தலைநகராக வைத்துச் செயல்படுகிறீர்கள்?''

''நமக்குத் தெற்கே நான்கு யோசனை தூரத்தில் இருக்கும் கோணநதிக் கரையில் இருக்கும் கரம்பன் குளம் தான்''

''உன் தந்தையும் அங்கே தான் இருக்கிறாரா?''

''ஆமாம்''

குவேணியின் விவரங்களைக் கேட்ட விஜயன் ''இதோ பார் குவேணி, உன் நோக்கத்திற்கான அடித்தளத்தைப் பலமாக அமைக்க நான் விரும்புகிறேன். அப்படி அமைக்கும் வரை நீ உன் தந்தைக்கு எதிராக செயல்படுவதாகக் காட்டிக் கொள்ளாதே. அவருடன் சேர்ந்தே செயல்படுவது போல் நடந்து கொண்டால் தான் அவரிடமிருந்து உபத்திரவம் எதுவும் உண்டாகாது. எப்போது அவரை வெட்டிவிட வேண்டுமோ அப்போது வெட்டி விடலாம். சம்மதமா உனக்கு?'' என்று கேட்டான்.

''அவரைச் சிறையில் அடைத்துவிட்டால் என்ன?'' என்று கேட்டாள் குவேணி.

''அது நமக்கு நாமே சமாதி கட்டிக்கொள்வதைப் போல. ஏற்கனவே பல குழுக்களாக உங்கள் இனம் இருக்கும் நிலையில் நீ வேறு புதிய பிரிவை உண்டாக்கி விட்டால் உனக்கு எதிர்ப்பு அதிகமாகிவிடும். ஆகவே உன் அவசரத்தை மறைத்துக் கொண்டு நிதானத்தை மேற்கொள்'' என்று சொன்ன விஜயன் ''உனது இனத்தைச் சேர்ந்த கலைஞர்கள், கைத்தொழில் செய்பவர்கள், கட்டிட அறிவைப் பெற்றவர்கள் என்றிருக்கும் எல்லோரையும் வரச்சொல். பூர்வாங்க வேலைகளை நான் துவக்கிவிட்டேன்'' என்றான்.

''அடிமைகள் என்ன செய்கிறார்கள்?''

'அதை நீயே தெரிந்து கொள்வாய்'' என்று சொன்ன விஜயன் ''என்னுடன் இருந்த புத்த பிட்சுவை நீ பார்த்தாயா? நண்பர்கள் மட்டும்தான் என்னிடம் திரும்பினார்களே தவிர அவர் திரும்பவில்லையே?'' என்று கேட்டான்.

''அவரையும் அனுப்பிவிட்டேனே?'' என்றாள் குவேணி.

''அப்படியானால் அவர் வரும்போது வரட்டும். நீ புறப்படு. நான் சொன்ன ஆட்களை நாளை முதற்கொண்டு அனுப்பு'' என்று சொன்ன விஜயன் அடிமைகளிடம் சென்று அலுவல்களை கவனிக்கலானான். மறுநாள் முதல் அவன் கேட்டபடி கைத்தொழிலாளர்கள் பலரை குவேணி அனுப்பி வைத்தாளாதலால் பணிகள் சுறுசுறுப்பாக நடக்கலாயின.

வாரம் ஒன்று முடிவடைந்த நிலையில் அங்கு வந்த குவேணி அங்கு நடைபெற்று வந்த வேலைகளை கவனித்ததில் என்ன நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டாள். விஜயன் அவளை கவனித்தாலும் எதுவும் பேசாமல் தீவிரமாக தனது பணிகளில் ஈடுபட்டதைக் கண்ட அவள் அவனிடம் தனியாகப் பேச விரும்பி ஒருநாள் இரவு தனது அளப்பறிய குரலில் காட்டுப் பகுதியிலிருந்து பாடினாள். அவளது இசையில் வெளிப்பட்ட அமுதத்தைச் செவிகளால் பருகுவதற்கு இந்திரனே ஆசைப்பட்டிருந்தாலும் வியப்பில்லைதான். அத்தனைச் சிறப்பாகப் பாடினாள் குவேணி. குரல் விஜயனுக்கு கேட்கச் செய்தது. ஆனால் அவன் நகரவில்லை.

மறுநாள் வழக்கம்போல பணிகளைத் தொடர்ந்தான். வாரம் ஒன்றாகியும் தனது நண்பர்கள் யாரும் தகவல் சொல்ல வராததை உணர்ந்த அவன் ''ஒருவாரம் தானே ஆகிறது? சொல்வதற்கு விஷயம் எதுவும் இருக்காது'' என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டான்.

இரண்டாவது வார முடிவில் தனஞ்ஜெயன் மட்டும் வந்தான்.

அவன் கூறிய விஷயம் எதிர்பாராததாக இருந்தது.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்தாறு

# நண்பர்கன்

விஜயனைச் சந்திக்க வந்த தனஞ்ஜெயன் அங்கே நடைபெற்று வந்த பணிகளைக் கண்டு என்ன நடக்கப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டாலும் அதன் காரணத்தை அறிய முடியவில்லை. விஜயனின் லட்சியத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லாததால் சற்றே குழம்பினான். ஆனால் விஜயன் மீது அவனுக்கு அபார நம்பிக்கை இருந்ததால் குழம்புவது தேவையற்றது என்று விட்டுவிட்டு விஜயனைச் சந்தித்தான்.

விஜயன் அவனிடம் அதிகம் பேசவில்லை. ''விசேஷம் ஏதாவது உண்டா?'' என்று மட்டும் கேட்டான்.

''தலைவரே, எங்களையெல்லாம் நீங்கள் அனுப்பியது இயக்கர்களைப் பற்றி ஒற்றறியத்தான். ஆனால் என்னைப் பொறுத்தவரை என் பணி மாறிவிட்டது'' என்றான் தனஞ்ஜெயன்.

''பீடிகை போடாமல் சொல் தனஞ்ஜெயா''

''தலைவரே, நம்மவர்களை ஒற்றறியும்படியாகி விட்டது எனக்கு''

''என்ன விஷயம்?''

சொன்னான் தனஞ்ஜெயன்.

அவன் கூறிய விஷயம் விஜயன் சிறிதும் எதிர்பார்க்காத விஷயமாக இருந்தது. நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருந்ததால் ''நீ கூறும் செய்தி உண்மையானதுதானா? நீயே நேரில் அறிந்தாயா?'' என்று கேட்டான்.

''போன வாரமே விஷயம் தெரிந்துவிட்டது தலைவரே. இருந்தாலும் உறுதி செய்து கொள்வதற்காகத்தான் மேலும்

ஒரு வாரத்திற்கு கவனித்தேன். இனிமேலும் தங்களிடம் தெரிவிக்காமல் இருப்பது தவறு என்று இங்கு வந்தேன்''

''இந்த விஷயத்தில் நரசிம்மன் எப்படி கூட்டு சேர்ந்தான்?''

''இனிமேல்தான் அதுபற்றி துப்பு துலக்க வேண்டும் தலைவரே''

''நீ கூறுவது புதிய தலைவலிதான். இருந்தாலும் அந்த விஷயத்தை நான் கவனித்துக்கொள்கிறேன். நீ நமது நண்பர்கள் நூறு பேரையும் இந்த அடிமைகளையும் அழைத்துக் கொண்டு தீவுக்கப்பலுக்குச் செல்'' என்று கூறிய விஜயன் மேற்கொண்டு செய்ய வேண்டிய விஷங்க்களைப் பற்றியும் எடுத்துரைத்தான்.

நவவீரர்களில் ஒருவனான அபயனை அழைத்து தனஞ்ஜெயனுக்கு பதிலாக அவனது பணியை ரகசியமாகச் செய்யும்படி பணித்தான்.

இதற்கிடையில் திடீரென ஒருநாள் தனது பரிவாரங்களோடு அங்குவந்து சேர்ந்த காளிசேனன் ''இவனை இங்கேயே உடனடியாகக் கழுவேற்றுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

தன்னை நோக்கி வந்த இயக்கர் வீரர்களை அப்படியே நிறுத்திய விஜயன் காளிசேனனைப் பார்த்து ''உனக்கு மூளையே கிடையாதா? நீ எப்படி தலைவனானாய்?'' என்று பெருங்கோபத்துடன் கேட்டான்.

விஜயனின் கேள்வி காளிசேனனை மட்டுமின்றி அங்கிருந்த அனைவருக்கும் அதிர்ச்சியை அளித்தது.

கழுவில் ஏறப்போகிறவன் நாகதீபத்தின் மன்னனான தன்னை இத்தனை இகழ்ச்சியாகப் பேசியதைக் கேட்டு பேரதிர்ச்சியடைந்த காளிசேனன் ''விஜயபாகு! நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்பது நினைவிருக்கிறதா?'' என்று கேட்டான் கடுங்கோபத்துடன்.

''முட்டாளுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்'' என்றான் விஜயன் அதே கடுமையுடன்.

விஜயனின் இந்தப் பேச்சால் காளிசேனனின் வீரர்கள் தாங்க முடியாதவர்களாய் விஜயனின்மேல் பாய்ந்தபோது விஜயன் தன்

கையில் கிடைத்த மரத்துண்டு ஒன்றை எடுத்து திருப்பித் தாக்கினான். அவனது எதிர்பாராத பலமான தாக்குதலால் மூன்று வீரர்களின் மண்டைகள் உடைந்துவிடவே 'ஹா'வென ஓலமிட்டபடி கீழே விழுந்தார்கள். அதோடு நவவீரர்களில் ஒருவர் போக மிஞ்சியிருந்த எட்டு வீரர்களும் வாளெடுத்து தாக்குதலில் இறங்கவே சிறிதுநேரத்தில் காளிசேனனின் பத்து வீரர்கள் பலத்த காயமடைந்து விழுந்து விட்டார்கள். இந்த நிலையில் சண்டையை நிறுத்திய காளிசேனன் விஜயனைப் பார்த்து ''இதற்கென்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

''என்னோடு விளையாடுவது ஆபத்து என்று அர்த்தம்'' என்று சொன்ன விஜயன் ''குவேணியை நீங்கள் சந்திக்க வில்லையா? அவளும் உங்களிடம் எதுவும் சொல்ல வில்லையா? என்னைக் கழுவில் ஏற்றி எல்லோரையும் அச்சப்பட வைக்கப் போவதாக கட்டளையிட்ட நீங்கள் நான் இந்த நிலையில் இருப்பதைப் பார்த்ததும் ஏதோ விஷயம் இருக்கிறது என்ப்தை உணரவேண்டாமா? ஒன்றும் புரியாத முட்டாளைப்போல என்னைக் கழுவில் ஏற்றும்படி ஆணையிடுகிறீர்களே, நீங்கள் ஒரு மன்னன்தானா? உங்களது பழைய ஆணை ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதை ஆராயாமல் ஏதோ முடுக்கிவிடப்பட்ட யந்திர பொம்மையைப் போல் நடந்து கொள்கிறீர்களே இதற்கென்ன அர்த்தம்? உங்களுக்கு எதுவும் தெரியாதா? அல்லது நீங்களும் உங்கள் மகளும் என்னைச் சீண்டிவிட்டு வேடிக்கைப் பார்க்கிறீர்களா?'' என்று கேட்டான்.

விஜயனின் கேள்விகளுக்கு அவனிடம் பதில்கள் இல்லை. அவமானம் தாங்க முடியாதவனாய் அங்கிருந்து விருட்டென்று புறப்பட்டான். அடிபட்டு விழுந்த தன் வீரர்களைப் பற்றி கவலைப்படாமல் சென்று விட்டதால் அவர்களை வண்டியில் ஏற்றி வைத்தியரிடம் அனுப்பி வைத்தான் விஜயன். காளிசேனனைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆனால் அதே இடத்திற்கு குவேணியுடன் வந்த காளிசேனன் கோபத்தின் சுவடே இல்லாமல் விஜயனைக் கட்டிக் கொண்டான். குவேணி தன்னிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்ததாகச் சொன்ன அவன் ''மிகவும் மகிழ்ச்சி விஜயபாகு.

இனி நீங்கள் தான் என் நண்பன். உங்களை என் பிரதிநிதியாக நியமிக்கிறேன். இதோ என் அடையாள மோதிரம். பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

விஜயன் அந்த மோதிரத்தை வாங்கிக் கொண்டு ''காளிசேனரே! நான் இப்போது செயல்படுவது உங்கள் இருவருக்காகத்தான். இந்த நிலையில் உங்கள் இருவருக்கிடையில் தகவல் சரிவர பரிமாறிக் கொள்ளாமல் இடைவெளி உண்டாகிவிடக்கூடாது. உங்களில் ஒருவரிடம் நான் பேசினால் அது மற்றவருக்கு உடனே போய்ச் சேரவேண்டும் தேவையில்லாத குழப்பங்கள் வரவேண்டாம்'' என்றான்.

''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். விஷயம் எனக்குப் புரிந்து விட்டதால் குழப்பங்கள் அகன்று விட்டன. இனி நீங்கள் இருவரில் யாரிடம் பேசினாலும் சரி. அது எங்கள் இருவரிடமும் பேசியது போலத்தான்'' என்று கூறிவிட்டு அகன்றான் காளிசேனன்.

இப்போதுகூட விஜயன் குவேணியைக் கவனித்தாலும் அவளோடு அதிகமாகப் பேசவில்லை. புதியதாக வேயப்பட்டிருந்த பெரியதோர் குடிசையைச் சுட்டிக்காட்டிய அவன் ''குவேணி! இக்குடிசையை வைத்திய சாலையாக மாற்ற வேண்டியது உன் பொறுப்பு. இங்கே நிறைய பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் காயமடைவதற்கு வாய்ப்புகள் அதிகம். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அலையமுடியாது. அவர்களுக்கு இங்கேயே சிகிச்சையளிப்பது தான் சிறந்தது'' என்று கூறிவிட்டு தன் பணியை கவனிக்கச் சென்றான்.

அவனது போக்கு அவளுக்குப் பிடிக்கவில்லை அதேசமயம் அப்போது அவனிடம் எதுவும் பேசிக்கொள்ளாமல் அகன்றாள். விஜயனோ அவளது மனஉணர்வுகளைப்பற்றி அறியவோ கவலைப்படவோ இல்லை.

அன்று இரவு அவரவர்களும் பணியை முடித்து உணவருந்திவிட்டு ஓய்வெடுக்க ஆரம்பித்தார்கள். விஜயனும் தனது கூடாரத்தில் தரையிலேயே படுத்து கண்களை மூடினான்.

''தூங்கி விட்டீர்களா?'' என்று குவேணியின் குரல் கேட்கவே கண்களைத் திறந்த அவன் எழுந்து கொள்ளவில்லை.

''என்ன குவேணி இந்த நேரத்தில் வந்திருக்கிறாய்?'' என்று உணர்ச்சியற்ற குரலில் படுத்த நிலையிலேயே கேட்டான் விஜயன்.

''நான் என்ன மரமா? செடியா? கொடியா? இல்லை கல்லா?'' என்று கேட்டாள் அவள் உணர்ச்சிகளை அடக்க முடியாமல்.

விஜயன் அப்போதும் அலட்டிக் கொள்ளவில்லை.

''இதென்ன அர்த்தமற்ற கேள்வி? உன்னை யார் அப்படியெல்லாம் சொன்னது?'' என்று சாதாரணமாகக் கேட்டான்.

''சொல்லவில்லை. ஆனால் அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்''

''யாரது?''

''நீங்கள் தான். இதில் உங்களுக்குச் சந்தேகம் வேறா?''

''நானப்படி நினைத்துக் கொண்டிருப்பதாக உனக்கு யார் சொன்னது?''

''யாரும் சொல்ல வேண்டாம். கைப்புண்ணிற்கு கண்ணாடி எதற்கு?''

''இந்தப் பேச்சு ஒன்றே போதும் நான் கூறியதற்கு அத்தாட்சியாக. மரம், செடி, கொடி ஆகியவற்றோடு கூட பலர் லயித்துப்போய் சிரிக்கிறார்கள். கல் வடிவமாய் இருக்கும் சிலைகளுக்கு முன்னால் உணர்ச்சிப் பூர்வமாகப் பேசுகிறவர்கள் உண்டு. நீங்களோ மரமுமில்லாமல் செடியுமில்லாமல் கொடியுமில்லாமல் கல்லாகவுமில்லாமல் நகமும் சதையுமாய் உயிரோட்டமுள்ளவளான என்னிடம் போய் உணர்வே இல்லாதவர் போல் பேசுகிறீர்கள். நடந்து கொள்கிறீர்கள். தேவகானம் என்று என் இசையைக் குறிப்பிட்ட நீங்கள் போனவாரம் இசைத்தபோது அசையவில்லை. என் இசை கேட்டால் புவி அசைந்தாடும். கவி எழுதிக் குவிப்பார்

என்றெல்லாம் கூறிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் உங்கள் விஷயமோ தலைகீழாக இருக்கிறது''

பெருமூச்செறிய குவேணி இவ்வாறு பேசியதும் எழுந்து கொண்ட விஜயன் ஒரு சீலையைக் கீழேபோட்டு ''உட்கார் குவேணி'' என்றான்.

''நீங்கள் மண்ணில் அமர்ந்திருக்கிறீர்களே?'' என்று கேட்டாள் குவேணி.

''மண் எனக்குப் பிடித்திருக்கிறது. மண்ணை வெட்டிச் சேறாக்கி அதில் கால்களைப் பதிக்கும்போது சிலிர்க்கிறது. ஏன் தெரியுமா? இந்த மண் தான் சேறாகிறது. செங்கல்லாகிறது. பிறகு சுவராக எழுந்து மாளிகையாகவும் மாநகரங்களாகவும் காட்சியளிக்கிறது. அக்காட்சியை நீ விரைவிலேயே காண்பாய்'' என்று சற்றே உணர்ச்சிப்பட்டவனாகக் கூறிய விஜயன் ''நான் நீ சொன்னபடிதான் நடந்து கொள்கிறேன். நீ தான் அதை மறந்து விட்டாய்'' என்றான்.

''என்ன சொல்கிறீர்கள் நீங்கள்?''

''உனக்கு நான் உதவவேண்டும் என்றாய்''

''ஆமாம்.''

'உதவுகிறேனா இல்லையா?''

''உதவுகிறீர்கள்.''

''உன்மீது அக்கறை காட்டவேண்டும் என்றாய்''

''ஆமாம்.''

''அக்கறை காட்டுவதால் தானே வேலைகள் வேகமாக நடக்கின்றன?''

''ஆமாம்.''

''உன்னை விரும்பாமல் இவற்றைச் செய்ய வேண்டும் என்றாய்''

''ஆமாம்.''

''அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.''

அவள் கூறியது முற்றிலும் உண்மை என்பது அவளுக்குப் புரிந்தது.

அந்த உண்மையை மிகவும் சாதுரியமாகவும் அமைதியாகவும் சுட்டிக் காட்டியதை உணர்ந்து அசந்துபோன அவன் ''அதற்காக இப்படியா நடந்து கொள்ள வேண்டும்? துறவிகள் கூட சிறிது சிரிப்பார்கள். நீங்கள் சிரிப்பையே துறந்தவர் மாதிரியல்லவா நடந்து கொள்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''குவேணி, நான் சிரிப்பைத் துறந்தவனோ மறந்தவனோ அல்ல. நான் கல்லுமல்ல. உன்னைப்போல எல்லா உணர்வுகளையும் கொண்டவன்தான். ஆனால் வேண்டாம் என்று சொல்கிறவர்கள் வீட்டுக் கதவை நான் தட்டுவதில்லை''

''உங்களை நான் உணர்ச்சியற்ற கல்லாக இருக்கும்படிச் சொன்னேனா?''

''நானொன்றும் மரத்துப்போய் விடவில்லையே? நேற்று உன் தந்தையிடம் நான் சீறியது உனக்குத் தெரியாதா? வீரர்களை அடித்து நொறுக்கியதை கேள்விப்படவில்லையா? இங்கே இருக்கும் பணியாளர்களிடம் உணர்வில்லாமலா வேலை வாங்குகிறேன்?''

''என்னிடம் மட்டும் உணர்ச்சிகளை உறைய வைத்துக் கொண்டீர்கள் போலிருக்கிறது?''

''அருமையான வார்த்தை. உணர்ச்சிகளை நான் உறைய வைத்துக் கொண்டிருப்பது உண்மைதான்.''

''ஏனப்படி?''

''இல்லாவிட்டால் சங்கடங்கள் ஏற்பட்டுவிடும். ஆபத்துகள் வந்து விடக்கூடும். அதோடு நீங்கள் விரும்பாத பாதையில் பயணப்பட நான் தயாராக இல்லை''

''என்னிடம் உணர்ச்சிகளைக் காட்டினால் அது ஆபத்தாக முடிந்து விடுமா?''

''பஞ்சிடம் நெருப்பு உணர்ச்சி வசப்பட்டால் பஸ்பமாகி விடுமல்லவா?''

''என்னிடம் அத்தனை பயமா உங்களுக்கு?''

''இயற்கையின் நடைமுறையைச் சொன்னேன். அது பயமாகாது''

''வீரரே!''

''சொல்''

''நானே கூறிவிட்டால் நீங்கள் என்னை விரும்பத் தயாரா?''

''அப்படிச் சொல்லப் போகிறாயா?''

''நான் கேட்டதற்கு பதில் சொல்லுங்கள்''

''விருப்பம் என்பது பிறர் சொல்லி வருவதில்லை. அது தானாக வரவேண்டும்''

''உங்களுக்கு அப்படி விருப்பம் எதுவும் தானாக வரவில்லையா?''

''அப்படி வராதது நல்லதிற்குத்தான் என்று நினைத்துக் கொள் குவேணி''

''ஏன்?''

''நான் விரும்பிய பெண்களுக்கும் சரி என்னை விரும்பிய பெண்களுக்கும் சரி நல்ல கதி கிடைத்ததில்லை.''

''நல்லகதி என்றால்?''

''அநேகமாக எல்லோருமே அகால மரணத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்''

''ஒரு பெண்ணை இப்படியெல்லாம் சொல்லி பயமுறுத்தும் ஆடவரை நான் கண்டதில்லை''

''நான் பயந்தவனுமில்லை. பயமுறுத்துகிறவனுமில்லை. இது என் நண்பர்களுக்குத் தெரியும். உனக்குத் தெரிய நியாயமில்லை''

''உங்கள் விதியை நான் மாற்றிக்காட்டி விட்டால்?''

''விதியை யாரும் இதுவரை மாற்றியதில்லை''

''இதுவரை இல்லாமல் போனால் என்ன? இனிமேலும் அப்படித்தான் இருக்க வேண்டுமா? வீரரே! இந்த நாக தீபத்தின் விதியை நான் மாற்ற முயல்வதும் அதற்கு நீங்கள் உதவுவதும் எதைக் காட்டுகிறது? விதியை என்னால் மாற்ற முடியாது என்பதையா?'' என்று சொன்ன குவேணி ''இதைப்பற்றி நாம் விவாதம் செய்யவேண்டாம். கண்கூடாகப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு வெளியேறினாள் குவேணி.

அவள் அகன்ற சிறிது நேரத்தில் காட்டுப் பகுதியிலிருந்து அவளது இசை காற்றிலே தவழ்ந்து வந்தது. அதைக் கேட்டுச் சிரித்துக் கொண்டான் விஜயன்.

அதோடு அதை மறந்தான்.

அங்கே பணிசெய்வதற்காக வந்தவர்களின் தொகை நூறு ஐந்நூறு என்று வளர்ந்து ஆயிரத்தையும் தாண்டியதால் வேலைகள் விறுவிறுப்பாக நடந்தன.

மண்ணைத் தோண்டி எடுப்பது, சேறாக்குவது, செங்கல் வடிவமைப்பது, அதைச் சுடுவது என்று அடுத்தடுத்து வேலைகள் நடைபெற்றதால் ஒரு மாதம் முடிந்த நிலையிலேயே கட்டிடம் எழலாயிற்று. கட்டிடக் கலைகளைப் பற்றியும் ஊர் நிர்மாணம் பற்றியும் பலரிடம் ஆலோசனை செய்ததில் அனுராதன் என்ற கலைஞன் விஜயனை வெகுவாகக் கவர்ந்ததால் அவனை தாமிரபன்னியின் வடக்கே இருந்த கிராமத்திற்கு அனுப்பி இதே பணிகளை அங்கே துவங்கச் செய்தான். இதற்கிடையில் குருநாதர் உபதிஸ்ஸரிடமிருந்து ஓர் ஓலைவந்தது விஜயனுக்கு. அதில் அவர் விஜயனின் ஏற்பாடுகளை பாராட்டியிருந்ததோடு மட்டுமின்றி கோண நதிக் கரையில் கிராமம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக செய்தியனுப்பியிருந்தார். அது விஜயனுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது.

ஒற்றறியவும் தகவல் சேகரிக்கவும் அனுப்பப்பட்டிருந்த நண்பர்களில் சிலர் அவ்வப்போது வந்து தகவல்களை விஜயனிடம் தெரிவித்து வந்தார்கள். அவர்களது செய்திகள் ஓரளவிற்கு விஜயன் எதிர்பார்த்தவைகளாகவே இருந்தன.

செய்திகளைவிட செய்திகளைச் சுமந்து வந்த நண்பர்கள் தெம்பும் சுறுசுறுப்பும் கொண்டவர்களாகவும் சூடானவர் களாகவும் இருந்ததை கவனித்த விஜயன் சுதந்திரம்தான் அவர்களுக்கு இதையெல்லாம் கொடுத்திருக்கிறது என்று கருதினான். உதயணனும் நரசிம்மனும் மட்டும் அவனிடம் வரவுமில்லை. செய்தியை அனுப்பவுமில்லை.

ஏறக்குறைய ஆறுமாத காலம் கடந்தது. இந்த காலகட்டத்தில் ஐந்தாறு முறை மட்டுமே குவேணி வந்து போனாள். விஜயனிடம் எதையும் பேசவில்லை. விஜயனும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏழாவது மாத முடிவில் பிரம்மாண்டமான மாளிகை ஒன்று உருவானது. நாகதீபத்திற்கு தங்கப்பொட்டு வைத்த மாதிரி உருவான அந்த மாளிகையை திறந்த வைக்க காளிசேனனை அழைத்தான் விஜயன். தொழிலாளர்களும் காளிசேனனைச் சேர்ந்த இயக்கர் குல மக்களும் அங்கே விழா ஒன்றை ஏற்பாடு செய்தார்கள். விழாவிற்கு காளிசேனனும் குவேணியும் வந்திருந்தார்கள். அவர்களை வரவேற்று உபசரித்தான் விஜயன். அவன் உருவாக்கியிருந்த மாளிகையைக் கண்டு பிரமித்துப்போன காளிசேனன் அவனை மிகவும் பாராட்டி விட்டு ''யாருக்கு இந்த மாளிகை?'' என்று கேட்டான்.

''இதென்ன கேள்வி? எல்லா ஏற்பாடுகளும் உங்களுக்காகத் தானே? நீங்களும் உங்கள் அருமை மகளும் குடியிருக்கத்தான் இந்த மாளிகை. இதை மையமாக வைத்து நகரம் உருவாக்கப் படும். அதில் உங்கள் தலைநகரம் அமையும்'' என்றான் விஜயன்.

அச்சமயத்தில் அங்கே வந்த நவவீரன் ஒருவன் ''தலைவரே, இந்த மாளிகையை இடிக்க வேண்டும் என்று சுமார் நூறு பேர் வந்திருக்கிறார்கள்'' என்றான்.

விஜயனின் முகத்தில் புன்னகை விரிந்தது.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்தேழு

# வேகனும் விவேகனும்

விஜயன் புன்னகை செய்ததைக் கண்ட காளிசேனன் ''விஜயபாகு, இதென்ன நீங்கள் சிரிக்கிறீர்கள்? வந்திருப்பது யார் தெரியுமா?'' என்று கேட்டான் ஒருவித பதட்டத்துடன்.

விஜயனோ அலட்டிக் கொள்ளாமல் ''நான் எதிர்பார்த்த விருந்தாளிகள் தான் வந்திருப்பார்கள்'' என்றான்.

''விருந்தாளிகளல்ல விஜயபாகு. வினையாளிகள். என் பங்காளிகள்'' என்றார் காளிசேனன் பதட்டத்தை விடாமல்.

''யாராயிருந்தாலென்ன? விழா முடிந்ததும் திருஷ்டி கழிக்க வேண்டுமல்லவா? கழிப்பாக அவர்களே வந்திருக்கிறார்கள் அவ்வளவுதான். காளிசேனரே, உங்கள் பங்காளிகளின் வருகையை ஆரம்பத்திலேயே எதிர்பார்த்தேன். தாமதமாக வந்திருக்கிறார்கள். அவ்வளவு தான்'' என்றான் விஜயன்.

''அவர்களை அடித்து விரட்ட வேண்டியது தானே?''

''அடிப்பதா விரட்டுவதா என்பது பற்றி பேசிப் பார்க்கலாம்''

''பேசுவதா? அவர்களிடமா? அவர்கள் முரடர்கள். பேசுவதென்பது அவர்களது வழக்கில் இல்லை''

''அதற்கு நான் என்ன செய்யமுடியும் காளிசேனரே? பிரச்சினை வந்தால் பேசிப் பார்ப்பதுதான் என் வழக்கம்''

''நீங்களா பேசப் போகிறீர்கள்?''

''பேசினால் என்ன?''

''உயிருடன் திரும்ப முடியாது''

''பார்த்து விட்டால் போகிறது''

''வேண்டாம் விஜயபாகு. நமது வீரர்களை அனுப்பி அவர்களை விரட்டியடிப்பது தான் சரி''

''விரட்டியடிப்பது முடியாத விஷயமல்ல. ஆனால் பயனுள்ள வேலையாக இருக்காது. விரட்டப்படுபவர்கள் திரும்பி வருவார்கள். அது விவேகமான காரியமல்ல. விரட்டுவதற்கு பதில் மிரட்டி வைத்தால் மீண்டும் திரும்புவதற்கு யோசிப்பார்கள். நான் உங்கள் பிரதிநிதி என்பது உண்மையென்றால் அவர்களிடம் பேச என்னை அனுமதியுங்கள்'' என்று சொன்ன விஜயன் நவவீரனிடம் ''வீரனே, நீ போய் அவர்களிடம் சொல். இயக்கர் தலைவர் காளிசேனரின் பிரதிநிதியான என்னிடம் வந்து பேசச் சொல். பேச மறுத்தால் ஒருத்தன்கூட உயிரோடு திரும்ப முடியாது என்று சொல்'' என்றான். சிறிது நேரமாயிற்று. விஜயனும் அகன்றான்.

பிறகு நவவீரன் அங்கே இருந்த இயக்கர் வீரர்களைச் சற்றே பின்தங்கி வரும்படிச் சொல்லிவிட்டு மற்ற ஏழு நவவீரர்களை அழைத்துக்கொண்டு மாளிகையை இடிக்க வந்த கூட்டத்திற்கு முன் சென்று விஜயன் கூறியதை அப்படியே கூறினான். கூட்டத்தினர் இந்த மிரட்டலை எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் அசந்து விடாமல் அவர்களிடமிருந்து இரண்டு பேர் முன்னால் வந்து ''எங்களை மிரட்டுவது யார்?'' என்று கேட்டார்கள்.

''யாரும் மிரட்டவில்லை. எங்கள் தலைவருக்கு வீணாக மிரட்டுகிற வழக்கமில்லை. உண்மையைச் சொல்லி யிருக்கிறார். அதை நீங்கள் உணர்வது நல்லது'' என்றான் நவவீரன்.

''நாங்கள் யாரிடமும் பேச்சுவார்த்தை நடத்துவதில்லை. இதை உங்கள் தலைவர் உணர்வது நல்லது''

''பேச்சுவார்த்தை தேவையில்லாத இடம் எது நேரம் எது என்பது அவருக்குத் தெரியும். பேச்சில் பயனில்லாத சாவகத்தில் தனது ஒரு மரக்கலத்தை வைத்துக்கொண்டு கடற்படையை அழித்தார். மாபெரும் கடற்படையை அழித்த அவருக்கு நீங்கள் துரும்பு'' என்றான் நவவீரன்.

''துரும்பாக நினைக்கிறவர் இங்கே வரவேண்டியது தானே? ஏன் ஒளிந்து கொண்டிருக்கிறார்?''

''சிங்கம் வனத்தில் இருப்பதை யாரும் ஒளிந்து கொண்டிருப்பதாகச் சொல்வதில்லை. நாகர்மலைத் தீவையே கலக்கியவர் அவர். உங்களுக்குப் போய் பயந்து ஒளிவார் என்று நினைப்பது அறிவீனம்?''

''என்ன நாகர்மலைத்தீவா? மனிதரை உண்ணும் காட்டுமிராண்டிகள் வாழும் பயங்கரத் தீவாயிற்றே அது? அங்கே எப்படிப் போனார் உங்கள் தலைவர்? ஏன் போனார்?''

''பழையகதை எதற்கு? இங்கே அவர் எதற்கு வந்திருக்கிறார் தெரியுமா?''

''எதற்கு?''

''இயக்கர்களை கூண்டோடு அழிப்பதற்கு?''

''எங்களை அழிக்க காளிசேனனை எதற்கு ஆதரிக்க வேண்டும்? அவன் குலமும் இயக்கர் குலம் தானே?''

''காளிசேனனை அவர் ஆதரிக்கவில்லை. காளிசேனன் தான் அவரை ஆதரிக்கிறான். அதனால்தான் அவரைத் தன் பிரதிநிதியாக நியமித்திருக்கிறான்''

''உங்கள் தலைவர் யார்?''

''வங்கதேசத்தின் சிங்கம் - சிகபாகுவின் புதல்வர் - இளவரசர் விஜயபாகு''

''பரததேசத்து இளவரசரா?''

''ஆம்''

இதைக்கேட்டதும் கூட்டத்தினரிடையே சலசலப்பு உண்டாயிற்று. அவர்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டார்கள்.

இதுவரை நவவீரர்களில் ஒருவனாக வேடமிட்டுக் கொண்டு பேசியிருந்த விஜயன் இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சியே அடைந்தான். வெறித்தனத்துடன் வந்தவர்களிடம் அச்சம் பாதி அலட்சியம் பாதி என்ற அளவில் கச்சிதமாகப் பேசி குழப்பத்தையும் தயக்கத்தையும் உண்டாக்கி விட்டதால் திருப்தியடைந்த அவன் மற்ற நவ வீரர்களைப் பார்த்து 'நான் போய் தலைவரிடம் சொல்கிறேன். இன்னும் அரை

நாழிகைக்குள் யாரும் பேச வரவில்லையென்றால் தலைவரின் நடவடிக்கை பயங்கரமாக இருக்கும்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

அவன் எதிர்பார்த்தபடியே அனைத்தும் நடந்தது. கூட்டத்தில் எழுந்த சலசலப்பு அடங்கி அக்கூட்டத்தின் தலைவர்களான இரண்டு பேர் மட்டும் பேசுவதற்கு உடன்பட்டு நவவீரர்களுடன் புறப்பட்டு வந்தார்கள்.

அவர்கள் வந்தபோது புதியதாக கட்டப்பட்ட மாளிகையின் அருகில் இருந்த மேடையொன்றின்மீது அமர்ந்து கொண்டிருந்த விஜயன் அதில் ஏதோ ஒரு படத்தை வரைந்து அதையே பார்த்துக் கொண்டிருந்தான். நவவீரர்கள் இருதலைவர்களை அழைத்து வந்து நிறுத்தி ''இவர்கள்தான் தலைவரே'' என்று சொன்னார்கள்.

விஜயன் தலையை உயர்த்தி அவர்களைப் பார்த்துவிட்டு அவர்களுக்குத்தான் வரைந்த படத்தைச் சுட்டிக்காட்டி ''இது என்ன தெரியுமா?'' என்று கேட்டான்.

அவனது சர்வசகஜமான நிலையும் பரபரப்பு இல்லாத பேச்சும் இருதலைவர்களுக்கும் அசாதாரணமாக இருந்தது. இருப்பினும் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு ''ஏதோ சித்திரம் வரைந்திருக்கிறீர்கள்?'' என்றார்கள்.

''ஏதோ சித்திரமல்ல. இதுதான் பத்ம வியூகம். குருக்ஷேத்திரத்தில் கௌரவர்கள் அமைத்த அபூர்வமான வியூகம். பாண்டவர்களால்கூட நுழைய முடியாமல்போன வியூகம். இதே அமைப்பில் தான் இங்கே ஒரு நகரை அமைக்கப் போகிறேன். வியூகத்திலேயே எதிரிகளால் நுழைய முடியவில்லையென்றால் இந்த வியூகநகரில் நுழைய முடியுமா?'' என்று கேட்டான் விஜயன்.

''மிகவும் திமிர் பிடித்தவன்'' என்று விஜயனை நினைத்த அவர்கள் ''நாங்கள் கட்டிய மாளிகையை இடிக்க வந்திருக்கிறோம். நீங்களோ இதற்கு மேல் நகரத்தைக் கட்டுவதைப் பற்றிப் பேசுகிறீர்கள்'' என்றார்கள் சினத்துடன்.

''என்னது? கட்டிய மாளிகையை இடிப்பதா? அதுவும் நான் கட்டிய மாளிகையையா? என்னாலே கூட அதை இடிக்க

முடியாது. நீங்கள் இடித்துவிடுவீர்களா? அதோடு இவ்வளவு கஷ்டப்பட்டு இதை நான் கட்டியது கண்டவர்களும் இடிப்பதற்காக அல்ல'' என்றான் விஜயன்.

''நாங்கள் யார் தெரியுமா?''

'யார்?''

''காளிசேனனின் எதிரிகள்''

''நாகர்களா?''

''இயக்கர்கள்''

''காளிசேனரும் இயக்கர் குலம் தானே?''

''ஆமாம்''

''பிறகெப்படி அவர் உங்களுக்கு எதிரியானார்?''

''இந்த நாட்டை ஆள அவர் உரிமைகொண்டாடுவதால்''

''அவருக்கு உரிமை இல்லையா?''

''இல்லை''

''அதெப்படி? அவரது தந்தை தானே அவருக்கு முன்னால் இந்த நாட்டை ஆண்டார்?''

''இவருக்கு முன் ஆண்ட மன்னரின் புதல்வர் இவரில்லை''

''இது என்ன புதியகதை?''

''உங்களுக்குப் புதியதாக இருக்கலாம். எங்களுக்கில்லை''

''அப்படியானால் இந்த நாட்டை ஆண்ட மன்னரின் புதல்வர் என்ன ஆனார்?''

''அவரை இக்காளிசேனன் கொன்றுவிட்டு அரியணையில் அமர்ந்து கொண்டான். இவனுக்கும் அரியணைக்கும் சம்மந்தமில்லை. சம்மந்தமில்லாதபோது உரிமையில்லை. உரிமையில்லாதபோது இந்த மாளிகை கட்டவும் நகரை உருவாக்கவும் அவருக்கு பாக்யதை இல்லை.''

காளிசேனனைப் பற்றிய இச்செய்தி விஜயன் கேள்விப்படாத புதிய விஷயமாக இருந்தது. இதுபற்றி காளிசேனனோ

குவேணியோ தன்னிடம் எதுவும் கூறாதது ஏன் என்று எண்ணிப் பார்த்தான். எதுவானாலும் அதைப்பற்றி ஆராய்வதற்கு இது நேரமல்ல என்பதை உணர்ந்த அவன் இருதலைவர்களையும் பார்த்து ''நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் காளிசேனன் அரியணையில் அமர்ந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரையில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் நீங்கள்?'' என்று கேட்டான்.

''ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து தான் வருகிறோம். அவனோ எங்களில் சிலரைப் பிடித்து கழுவில் ஏற்றி மிரட்டி வருகிறான். ஆனால் நாங்கள் ஒடுங்கிப்போய் விடவில்லை. அவனை நிம்மதியாக அரியணையில் அமர விடாமல் தொல்லை கொடுத்தபடிதான் இருக்கிறோம். இந்த நிலையில் அவனது ஆட்சி நிரந்தரமாக நிலைக்கும் வகையில் நகரங்களையும் கிராமங்களையும் உருவாக்கப்படுவதாகச் செய்தி வந்தது. முதலில் அசட்டையாக இருந்தோம். செய்தி உண்மைதான் என்று தெரியவந்ததும் இடித்துத் தள்ள நேரிலேயே வந்து விட்டோம்''

''இந்த மாளிகையை இடித்துவிட்டால் என்ன ஆகிவிடும்?''

''காளிசேனனின் வளர்ச்சியை தடுப்பது எங்கள் நோக்கம்''

''ஏன், நீங்களும் நகரங்களையும் கிராமங்களையும் நிர்மாணிக்கலாமே? அதைவிட்டு விட்டு இக்கட்டிடத்தை இடிக்க ஏன் விரும்பவேண்டும்?''

''எங்களிடம் பொருளில்லை. நகரங்களை எங்களால் நிர்மாணிக்க முடியாது''

''படைகளாவது இருக்கிறதா?''

''படைகள் யாரிடமும் இல்லை. படை திரட்டவும் நிர்வகிக்கவும் பொருள் வேண்டுமல்லவா?''

விஜயன் சற்று யோசித்துவிட்டுச் சொன்னான்.

''உங்களுக்கும் காளிசேனனுக்கும் உள்ள பிரச்சினை உண்மையாகவே இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் எனக்கில்லை. என் ஆதரவை வேண்டி

என்னை அணுகியவன் காளிசேனன். அவனுக்கு உதவுவது என்கடமை. அவனை எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டியதும் என்கடமை. ஆகவே இந்த மாளிகையை நீங்கள் இடிப்பதையோ இங்கே உருவாகப் போகும் நகரத்தை தடுக்க முயற்சிப்பதையோ நான் அனுமதிக்க முடியாது. உங்களை முறியடிக்க நான் தயாராக இருக்கிறேன்'' என்று திட்டவட்டமாகச் சொன்னாள் விஜயன்.

இதைக்கேட்ட இரு தலைவர்களும் ''உங்கள் நியாயம் பெருமைப்படத்தக்கது'' என்றார்கள் இகழ்ச்சியான குரலில்.

விஜயன் அவர்களைப் பார்த்து ''நீங்கள் எங்கள் நாட்டு இதிகாசமான மகாபாரதத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டான்.

அவர்கள் அதற்கு ''கர்ணனைப் பற்றியும் தெரியும். செஞ்சோற்றுக் கடனுக்காக துர்புத்தியைக் கொண்டவனான துரியோதனனுக்கு சாகும்வரை உதவியாக இருந்ததும் தெரியும்'' என்றார்கள் விஜயனுக்கு அடிகொடுப்பது போல்.

''நான் கர்ணனைப் பற்றிச் சொல்ல வரவில்லை. அதோடு துரியோதனனுக்கு உதவ செஞ்சோற்றுக்கடன் என்ற காரணம் கர்ணனுக்கு இருந்தது. இங்கே காளிசேனனுக்கு நான் கடன்பட்டவனல்ல. நான் கூற வந்தது கிருஷ்ணரைப் பற்றி அவரிடம் உதவிகேட்டு அர்ஜுனனும் வந்தான். துரியோதனனும் வந்தான். துரியோதனன் அநீதிக்கு அதிபதி என்பது கிருஷ்ணருக்குத் தெரியும். அவனுக்கு உதவ வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. இருந்தாலும் தனது நாராயணப் படையை அவனுக்கு அளித்தார். இது இகழ்ச்சிக்குரிய விஷயமாக யாராலும் பேசப்படவில்லை.

''ஐயா, அதே கிருஷ்ணர் அர்ஜுனனுக்கும் உதவியாக இருந்தாரல்லவா?''

''உண்மை. அங்கே கிருஷ்ணர் என்றும் அவரது படை என்றும் இரண்டு அம்சங்கள் இருந்ததால் அர்ஜுனனுக்கும் துரியோதனனுக்கும் உதவ முடிந்தது. இங்கே நான் மட்டுமே இருக்கிறேன்''

''மிக்க மகிழ்ச்சி வங்கதேசத்து அரசகுமாரரே. என் பெயர் வேகன். இவர் பெயர் விவேகன். இதுவரை நாங்கள் பிரிந்திருந்தோம். இப்போது சேர்ந்து விட்டோம். வேகமும் விவேகமும் சேர்ந்து விட்டதால் விகடன் நிலை என்னாகும் தெரியுமா?''

''விகடன் என்று சொல்வது யாரை?''

''காளிசேனனை எடுத்துக் கொண்டாலும் சரி. உங்களையே எடுத்துக் கொண்டாலும் சரி. எங்களுக்கு நீங்கள் இருவருமே எதிரி தான். நாங்கள் வருகிறோம்''

இவ்வாறு வேகனும் விவேகனும் கூறியபோது விஜயன் ஒரு வார்த்தையைச் சொன்னான். அதைக் கேட்டதும் அவ்விருவரது முகங்களும் இருண்டன. பிறகு எதுவும் பேசாமல் புறப்பட்டார்கள்.

இவர்கள் பேசியதை மாளிகையில் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்த காளிசேனன் விஜயனிடம் வந்து ''என்ன சொல்லிவிட்டுப் போகிறார்கள் பங்காளிகள்?'' என்று கேட்டான்.

''பங்காளிச் சண்டையைச் சொல்லிவிட்டுப் போகிறார்கள்'' என்று சொன்ன விஜயன் ''அவர்கள் என்ன சொன்னால் என்ன? நானிருக்கும் வரை நீங்கள் கவலைப்படாமல் இருக்கலாம். நீங்கள். போய் மாளிகையில் ஓய்வெடுங்கள்'' என்றான்.

''இல்லை விஜயபாகு நான் இங்கே தங்க விரும்பவில்லை. இங்கே பெரும் பணிகள் நடந்து கொண்டிருக்கும்போது அவற்றைக் கவனிக்கவும் முடுக்கிவிடவும் நீங்கள் தங்கியிருப்பது தான் நல்லது. பயனானது. உங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் நான் செய்து தருகிறேன்'' என்றான் காளிசேனன்.

''உங்கள் விருப்பம்'' என்று சொன்ன விஜயன் ''உங்கள் வீரர்கள் ஐநூறு பேரை இங்கே காவலுக்கு நிறுத்த முடியுமா?'' என்று கேட்டான்.

''அது என் கடமை'' என்று கூறிவிட்டு குவேணியுடன் புறப்புட்டான் காளிசேனன்.

நவவீரர்கள் விஜயனை அணுகி ''தலைவரே, வேகன், விவேகன் ஆகியோர் காளிசேனன் அரியணையில் அமரவே தகுதியற்றவன் என்று சொல்கிறார்களே அது உண்மையாக இருக்குமா?'' என்று கேட்டார்கள்.

''எதற்காகக் கேட்கிறீர்கள்?'' என்று கேட்டான் விஜயன்.

''உரிமையில்லாத மனிதனுக்கு தாங்கள் உழைக்க வேண்டியது அவசியம் தானா என்பதற்காகத்தான் கேட்டோம்'' என்றார்கள் நவவீரர்கள்.

''நான் ஒரு பச்சோந்தி நண்பர்களே'' என்று பதில் சொல்லிவிட்டு போய்விட்டான் விஜயன்.

அவனது பதில் நவவீரர்களுக்குப் புரியவில்லை.

அன்றிரவு வேலைகள் முடிந்து உணவும் முடிந்த பின் அனைவரும் ஓய்வெடுக்கலானார்கள். களைப்பு மிகுதியால் பெரும்பாலானவர்கள் உறங்கியும் போனார்கள்.

விஜயன் தான் கட்டிய மாளிகையின் உப்பரிகையில் சாய்ந்து கொண்டு வானத்தைப் பார்த்தான். அங்கே பூத்திருந்த விண்மீன்கள் ''என்ன பார்க்கிறாய் விஜயா?'' என்று அவனைக் கேட்பது போல் இருந்தன. கண்ணுக்குத் தெரிந்த விண்மீன்களை எண்ணத் தொடங்கினான். ''விண்மீன்களை எண்ணிக் கணக்கிட முடியுமா?'' என்று கேட்பது போல் கோடைகால காற்று உப்பரிகையில் நுழைந்து அவன் உடல்லை வருடியது.

அவனுக்குத் திடீரென பாடவேண்டும் போல் இருந்தது. தன்னை மறந்து பாடினான் விஜயன்.

இசையால் வசமாகா இதயமெது?
இறைவனே இசைவடிவம் எனும்போது?

திசையெங்கிலும் பரவும் கீதமது
தேனெனும் அமுதூட்டும் தன்மையது

அசைசொல்லின் தொடராலே ஆனதே ராகம் - பாடல்
அளவை முறைப்படுத்தவே அமைந்ததே தாளம் - இசையின்
பொருள் விளங்க பாடுதல் பாவம் - எனக்கூறும்
C ø Á I ß Ö ® C ø n ¢x C ß E ® u , ®.*

விஜயனின் இந்தப்பாட்டு நவவீரர்களை எழுப்பியது. தொழிலாளர்களை எழுப்பியது.

''இவரா இவ்வளவு இனிமையாகப் பாடுகிறார்?'' என்று அவரவர்களும் கேட்டுக் கொண்டு மயங்கினார்கள்.

அவனும் மயங்கியவனைப் போலிருந்தான்.

அப்போது ஜல்ஜல் என்ற சத்தமொன்று மாளிகையில் கேட்டது.

அவனை நோக்கி வரவும் செய்தது.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்தெட்டு

# விஜயனின் விவரணம்

தன்னை நெருங்கி வந்த ஓசையை அறியாத நிலையில் இருந்தான் விஜயன். விரைவிலேயே அந்த ஓசைக்குக் காரணமான உருவம் அவனை நெருங்கி தன் கைகளை கழுத்தில் மாலையைப் போல போட்டு இழுத்தது. தனது உதடுகளை அவனது கன்னத்தில் பதித்து எடுத்தது.

அவ்வளவிற்குப் பிறகே தெளிவடைந்த விஜயன் தனக்கு முன்னே நின்றிருந்த குவேணியைப் பார்த்து ''இது முறையல்ல குவேணி'' என்றான் கன்னத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு.

''உங்கள் கன்னங்களை நானொன்றும் தின்றுவிடவில்லை. அவை அங்கேயேதான் இருக்கின்றன'' என்றாள் அவள் கொஞ்சும் குரலில்.

---

* இப்பாடலை எழுதியவருக்கு நன்றி

''குவேணி! உன் நடத்தை, பேச்சு எல்லாமே சரியல்ல என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டான் விஜயன்.

''என் நடத்தைக்கென்ன? பேச்சிற்கென்ன?'' என்று கேட்டபடி அவனுக்குப் பக்கத்திலேயே அமர்ந்து கொண்டாள் அவள்.

''தெரிந்து கொண்டே கேட்டால் எப்படி?''

''தெரியாமல் தான் கேட்கிறேன்''

''பொய் பேசுகிறாய் குவேணி''

'அப்படித் தான் இருக்கட்டுமே!''

'என்னால் அப்படி இருக்க முடியாது குவேணி''

''என்ன செய்வீர்கள்?''

''முறைதவறி நடக்கமாட்டேன்''

''நீங்கள் நடக்க வேண்டாம். நான் முறை தவறி நடந்து கொள்கிறேன்''

''இப்படியெல்லாம் பேசினால் எப்படி?''

''வேறெப்படிப் பேசுவது? நானும் இவ்வளவு காலமாகப் பொறுமையாகத்தான் இருந்தேன்.''

''இப்போது ஏன் பொறுமையை இழந்தாய்?''

''நீங்கள் முன்பு பேசியதெல்லாம் வெறும் புரட்டு என்று நினைத்தேன்''

''ஏன்?''

''என்னை மடக்குவதற்கு நீங்கள் கையாளும் புதிய முயற்சி என்று நினைத்தேன்''

''பிறகு?''

''ஆடவர்களுக்கே இருக்கும் இறுமாப்பு என்று நினைத்தேன்''

''ம்''

''துறவி போல பேசும் போலிப் பிறவி என்று நினைத்தேன்''

''சரி''

''ஆனால் என் நினைப்புகள் பொய்த்து விட்டன''

''நான் மாறிவிட்டேனோ?''

''மாறவே இல்லை. அதனால் தான் வந்து விட்டேன்''

''இப்போது மட்டும் நான் மாறி விடுவேன் என்று எப்படி நினைக்கிறாய்?''

''அப்படித்தான் நினைத்தார் மகாமுனிவரான விசுவாமித்திரர். ஆனால் அவரது நினைப்பை அழித்தாள் மேனகை''

''நீ மேனகையாக இருக்கலாம். நான் விசுவாமித்திரராக இருக்க வேண்டுமா என்ன?''

''நீங்கள் அவரைவிட உயர்ந்தவர் போலிருக்கிறது''

''விசுவாமித்திரரைவிட உயர்ந்தவராக வசிஸ்டர் இருந்தார். நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை''

''பிறகு?''

''என்னால் என் நிலையில் வைராக்கியமாக இருக்க முடியும். மேனகை என்ன ஊர்வசி வந்தால்கூட என்னை அசைக்க முடியாது''

''அப்படியே இருந்து கொள்ளுங்கள் எனக்கென்ன? நான் போகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்தாள் குவேணி.

''நில் குவேணி'' என்று சொன்ன விஜயன் அவளது கரத்தைப் பிடித்தான்.

''விடுங்கள் கையை'' என்று உதறினாள் அவள். அவனது பிடியோ உடும்புப் பிடியாக இருந்தது.

''பிடிக்க நினைத்தால் பிடிக்காமல் விடமாட்டேன். பிடித்து விட்டால் என்னவானாலும் விடமாட்டேன். உட்கார் குவேணி'' என்று சொன்ன அவன் அப்படியே அவளை இழுத்ததால் மடியில் வந்து விழுந்தாள் அவள்.

அவள் எழுந்துகொள்ள முயற்சித்தபோது ''ஏன் எழுந்து கொள்ள முயற்சிக்கிறாய்? முறை தவறி நடந்து கொள்ள வேண்டியது தானே?'' என்று கேட்டான் விஜயன்.

''துறவியிடம் மோத நான் தயாராக இல்லை''

''ஏன் இப்படி முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறாய்? சற்று முன்பு தானே உன்னை மேனகை என்று சொன்னாய்? அவள் யார்? துறவியோடு மோதியவள் தானே?''

''இப்படிப் பேசும் நீங்கள் இதற்கு முன்புவரை துறவியைப் போல ஏன் நடித்தீர்கள்?''

''தவறு குவேணி. நான் யாராகவும் நடிக்கவில்லை. உண்மையைத்தான் சொன்னேன். நன்றாக யோசித்துப்பார். உன்னை நான் விரும்பக்கூடாது என்று நிபந்தனை விதித்தவள் நீ. அதைத்தானே காப்பாற்றுகிறேன் நான்?''

''என்ன பெரிய நிபந்தனை? அதைத்தான் ஆறுமாதங்களுக்கு முன்னால் நானே விட்டு விட்டேனே?''

''விடவில்லை குவேணி. சவால் விட்டுவிட்டுச் சென்றாய். விதியை மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்னாய். நினைவிருக்கிறதா?''

''ஆம்''

''சவாலைச் சந்தித்துத்தான் பழக்கமே தவிர பணிந்து ஒடுங்கி விடுவது என் பழக்கமல்ல''

''சவாலில் நான் தோற்றுவிட்டேன் என்றே வைத்துக் கொள்ளுங்களேன். எனக்கொன்றும் வெட்கமில்லை''

குவேணியைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டான் விஜயன். அவளது முதுகைத் தடவிவிட்ட அவன் ''குவேணி! உன்னைப்போன்ற அழகின் பிறப்பிடத்தை வெறுக்கும் அளவிற்கோ விரட்டும் அளவிற்கோ நான் ஏதுமறியாத காட்டுமிராண்டியல்ல. உன் இசைக்காகவே உன்னிடம் இசையும் அளவிற்கு என் இதயம் இளகியது என்பது உனக்குத் தெரியாது. நீ உன்னை விரும்பக்கூடாது என்று சொன்னது எனக்கு ஒரு பொருட்டே அல்ல. உன் எண்ணங்களை மீறி

உன்னைச் சுற்றியிருக்கிற தடைகளைத் தகர்த்தெறிந்து உன்னை அடையும் தைரியமும் சாமர்த்தியமும் எனக்குண்டு. ஆனால் நீ நிபந்தனை விதித்தபோது பெரிதும் மகிழ்ந்தேன். ஏன் தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஏன்?''

''மாயா என்ற பெண் என்னை மணந்தாள். வாழவில்லை. என் தண்டனைக்கு ஆளாகி மடிந்து போனாள். என் மனைவியின் ஸ்தானத்திற்கு வர ரொம்ப காலமாக ஏங்கி என்னைக் காதலித்தாள் பத்மினி. அவளும் வாழவில்லை. எனக்கு உதவி செய்துவிட்டு உயிர் துறந்தாள். நாகர்மலைத்தீவில் எங்களையெல்லாம் பலியிட்டு உண்ணக்கூடிய காட்டுமிராண்டிகளுக்கிடையில் டிமார்க்கோவின் மனைவி லியானா என்னை விரும்பினாள். எனக்காகத் தன் கணவனைத் தீர்த்துக் கட்டவும் தயாராக இருந்தாள். அவளாலும் இன்பமடைய முடியவில்லை. தட்சகன் தீண்டி மாண்டு போனாள். சொர்ணத்தீவில் பூத்த மலர் ஸ்ரீவிஜயா. மணமானவள். அதோடு சொர்ணத்தீவு மன்னனின் ஆசைநாயகி. ஆனால் தனது உறவுகளை மறந்து எல்லா உறவுகளையும் விட்டுவிட்டு என்னை மணந்துகொள்ள என்னென்னவோ செய்தாள். வெற்றி பெற முடியவில்லை. கரடித் தீவில் அவளை விட்டுவிட்டு வரும்படியாகிவிட்டது. இந்நேரம் அங்கே அவளது எலும்புக்கூடு கூட இருக்குமா என்பது சந்தேகம். இப்படி பலதரப்பட்ட பெண்கள் - பல நாடுகளைச் சேர்ந்த பெண்கள் - எல்லோருமே வாழாமல் மாண்டு போனார்கள். இது எதைக் காட்டுகிறது? என் துரதிஷ்டத்தைத் தானே? என்னோடு விருப்பத்துடன் தொடர்பு கொள்ளும் பெண்களுக்கும் தொடர்பு கொள்ள விரும்புகிற பெண்களுக்கும் கிடைப்பது அகால மரணம் தான் தட்டாமல் கிட்டுகிறது. அந்த நிலை உனக்கும் வந்துவிடக் கூடாது என்பதால் தான் நீ நிபந்தனை விதித்தபோது உயிர் பிழைத்தாய் என்று மகிழ்ந்தேன். உன்னை விரும்ப மனம் துடித்தாலும் என்னுடனேயே நான் போராடி என்னைக் கல்லாக்கிக் கொண்டேன். உன் பேச்சில் நீ முரண்பட்டு விதியை மாற்றிக் காட்டுவதாகவும் மேனகையாக மாறப் போவதாகவும் கூறிய போதெல்லாம் நான் வேதனையை அடைந்தேன்.

இப்போதாவது என் மனம் உனக்குப் புரிகிறதா? உன் எண்ணத்தை மாற்றிக்கொள் குவேணி. என்னைவிட்டு அகன்றுவிடு'' என்று கூறி எழுந்து கொண்டான் விஜயன்.

''அரசகுமாரரே, மகாவீரரும் அறிவாளியுமான உங்களுக்கு வாழ்க்கை என்றால் என்ன என்பது தெரியாமல் போய்விட்டது. வாழ்க்கை என்பது எவ்வளவு காலம் நீடிக்கிறது என்பதைப் பொறுத்ததல்ல. நீடிக்கும் வரை எப்படி கழிகிறது என்பதைப் பொறுத்தது. நூறாண்டுகள் ஒன்றாய் வாழ்ந்து முடிந்தவர்களிடையே பிணக்குகள், வெறுப்புகள், கள்ளத்தனங்கள் என்று எவ்வளவோ இருந்திருக்கும். ஒரே நாளில் வாழ்ந்தவர்கள் நூறாண்டுகால வாழ்க்கையின் முழுமையை அடைவதும் உண்டு. வீணாக வேதனைப்படாதீர்கள். என் அன்பு உங்கள் விதியை மாற்றிக் காட்டும். மாற்றிக் காட்டுகிறேன்'' என்று சொன்ன குவேணி ''தங்களுக்கு மிகவும் நன்றி'''என்றாள்.

''எதற்கு?''

''வேகனையும் விவேகனையும் சமாளித்ததற்கு''

''சமாளிக்கவில்லை குவேணி. உண்மையைச் சொன்னேன்''

''நீங்கள் அவர்களுக்கு என்ன பதில் சொல்வீர்களோ என்று நாங்கள் கவலையோடு இருந்தோம். ஆனால் மகாபாரதத்தைச் சொல்லி நீங்கள் அவர்களது வாயை அடக்கியதைக் கண்டபோது தந்தை மிகவும் பூரித்துப் போனார். விஜயபாகு நமக்குக் கிடைத்த கிருஷ்ணர் என்று சொல்லி சந்தோஷப்பட்டார். என்னைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். இன்பக் காற்றில் மிதந்தேன் நான்''

''அதிருக்கட்டும். வேடனும் விவேகனும் கூறிய செய்திகள் உண்மையா?''

'ஒரு துளியும் உண்மையில்லை. அவர்களுக்கு இதுபோன்ற செய்திகள்தான் அனுதாபத்தையும் ஆதரவையும் தரும். பங்காளிகளின் சண்டைக்கு உரிமை பிரச்சினையைத் தவிர வேறு எதுவும் கைகொடுக்காது. அது தெரிந்த எங்கள் இனத்தவர் இதைத்தான் ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள்'' என்றாள் குவேணி.

''அதைப்பற்றிய கவலையில்லை. உனக்கு உதவ சத்தியம் செய்திருக்கிறேன். அதைத் தவிர எனக்கு எதுவும் முக்கியமில்லை'' என்றான் விஜயன்.

குவேணி அவனை இறுகத் தழுவி வெட்கமின்றி முத்தமழைகளைப் பொழிந்தாள்.

அடை மழையில் சிக்கித் தவித்த விஜயனைக் கண்டு சிரித்த அவள் ''உங்கள் குரல் நன்றாக இருக்கிறது. தினமும் பாடுங்கள்'' என்று கூறிவிட்டு சிட்டாகப் பறந்தாள்.

அன்று பறந்து சென்ற குவேணி அடிக்கடி அங்கு பறந்து வந்தாள். விஜயனிடம் செலவழித்த நேரத்தையெல்லாம் காதல் அலைகளில் புரளும் நேரங்களாகவே செலவழித்தாள். அவளது துடிப்பான காதலையும் காதலின்பத்தையும் கண்ட விஜயன் தனது தயக்கங்களைக் கைவிட்டு முழுமனதோடு அவளுக்கு ஈடுகொடுத்து அவளை மகிழ்வித்தான். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தது நவவீரர்களுக்கு மட்டுமின்றி அங்கிருந்த பணியாளர்களுக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

காதலில் ஈடுபட்டாலும் கடமையை கைவிடாத விஜயன் தாமிரபன்னியில் நகரை எழுப்பும் பணியில் முழுமையாக ஈடுபட்டான். குவேணியின் மூலம் பணியாட்கள் பலரை மேன்மேலும் தருவித்து பணிகளை வேகப்படுத்தினான். மலைகளுக்கு குறைவில்லாத நாகதீபத்தில் மலைகளை வெடிவைத்து தகர்த்து பாறைகளை எடுத்து செதுக்கியும் அழகு படுத்தியும் பலமான கட்டிடங்களை எழுப்பினான் விஜயன். அவனுக்கு அனுராதன் அடிக்கடி வந்து ஆலோசனைகளை வழங்கி வந்தான். அவனும் அனுராதனும் உபதிஸ்ஸரும் நிர்மாணித்து வந்த கிராமங்களை நேரில் போய் பார்த்து பணிகளை ஊக்கப்படுத்தி வந்தான். காளிசேனன் பலமுறை வந்து நகரம் உருவாவதை பார்த்துவிட்டு பாராட்டி வந்தான். விஜயனின் நண்பர்கள் விஜயனுக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்து தந்துவிட்ட பட்சத்தில் அவர்களையெல்லாம் தாமிரபன்னிக்கு வரச்செய்து நகர நிர்மாணப் பணியில் ஈடுபடுத்தினான். அவ்வாறு தாமிரபன்னிக்குத் திரும்பிய நண்பர்களில் உதயணனும்

நரசிம்மனும் நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களும் வரவில்லை. அதற்கான காரணத்தை விஜயன் அறிந்திருந்ததால் அதைப்பற்றி கண்டு கொள்ளவில்லை.

காளிசேனனுக்கு எதிரிகளாக உருவாகிவிட்டதாகச் சொல்லிக் கொண்ட வேகனும் விவேகனும்கூட பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. வெறும் மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தனவே தவிர அபாயம் எதுவும் வரவில்லை.

இந்த நேரத்தில் உபதலைவன் தனஞ்ஜெயனிடமிருந்து ஓலைச்செய்தி வந்தது விஜயனுக்கு. செய்தி திருப்திகரமாக இருந்ததால் காளிசேனனையும் குவேணியையும் உடனடியாக வரவழைத்தான்.

அவனது அவசர அழைப்பிற்கு காரணம் தெரியாத அவர்கள் பரபரப்புடன் அங்கே வந்து சேர்ந்தார்கள்.

அவர்களிடம் பேசத்தொடங்கிய விஜயன் ''காளிசேனரே, உங்கள் பங்காளிகள் யாரும் சமீபகாலமாக இங்கே தலைகாட்ட வில்லை. இப்போதைக்கு தலைகாட்ட மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். இங்கே நகர நிர்மாண வேலைகளும் முடிவடையும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே நமது அடுத்தகட்ட நடவடிக்கையை துவங்க வேண்டும். அதைத் துவங்குவதற்கான நேரம் வந்துவிட்டதாக என் உபதலைவன் தனஞ்ஜெயன் செய்தியனுப்பியிருக்கிறான். உங்களது வீரர்கள் ஐநூறு பேர் எனக்கு வேண்டும்'' என்றான்.

காளிசேனனுக்கு ஒன்றும் புரியவில்லை. ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டான்

''காளிசேனரே, இங்கே நாம் நகர் ஒன்றை நிர்மாணிப்பது எதற்கு? நமக்கென்று ஒரு நிரந்தரமான மற்றும் பலமான இருப்பிடம் வேண்டும் என்பதற்காகத்தான். நாட்டை ஆள்வதாகச் சொல்லிக்கொண்டு காட்டில் அலைந்து கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த முயற்சியில் இறங்கினேன். அநுராதன் தனியாக ஒரு கிராமத்தையும் உபதிஸ்ஸர் ஒரு கிராமத்தையும் அமைக்கிறார். இரண்டு

கிராமங்களுக்கு நடுவே நமது பலமான நகரம் உருவாகிறது. நமது பலத்தை ஒடுக்க நினைப்பவர்கள் வரிசையில் முதலாவதாக இருப்பது உங்கள் இயக்கர் இனத்தைச் சேர்ந்த உங்கள் பங்காளிகள். அவர்கள் இப்போது ஒடுங்கி யிருக்கிறார்கள். இரண்டாவதாக இருப்பது நாகர்கள். அவர்களோடு நான் சமரசம் செய்துகொண்ட காரணத்தால் அவர்களும் எதிர்க்கப் போவதில்லை. மூன்றாவதாக இருப்பவர்கள் நாகதீபத்தின் தெற்குப் பகுதியை தங்கள் வசம் வைத்திருக்கும் வேடர்கள். அவர்கள் நம்மை நோக்கி வருவதற்குள் அவர்கள் இருப்பிடத்திற்கு நாம் போவோம்''

''அவர்கள் இருப்பிடத்திற்கா?''

''ஆம், வேடர்களின் தலைநகரமான கல்யாணிக்கு சென்று அவர்களைத் தாக்குவோம்''

''அவர்களது இருப்பிடத்திற்குச் சென்று அவர்களைத் தாக்குவது முடியுமா?''

''இதென்ன கேள்வி? வருங்காலத்தில் நீங்களோ உங்கள் வம்சாவளிகளோ தமிழகத்தில் ஆட்சிபுரியும் அரசுகளின் மீது போர்தொடுக்காதா? அதைப் பார்க்கும்போது நாக தீபத்திற்குள்ளேயே இருக்கும் கல்யாணியைத் தாக்குவது பெரிய விஷயமல்ல. சாம்ராஜ்யம் படைக்க விரும்பும் நாம் பதுங்கிக் கொண்டிருக்கக் கூடாது. எதிரிகளைத் தேடிச் சென்று பாயவேண்டும்'' என்று சொன்ன விஜயன் ''நீங்கள் வீரர்களை கொடுத்தால் போதும். வேடர்களைத் தாக்கும் வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

விஜயன் கூறியதைக் கேட்ட காளிசேனனுக்கு பிரமிப்பாக இருந்தது. விஜயன் கல்யாணியைத் தாக்குவதும் வெற்றி கொள்வதும் சுலபமான காரியமல்ல என்பது நன்றாகத் தெரிந்திருந்ததால் அந்தத் தாக்குதலில் தன்னை ஈடுபடுத்தாமல் விட்டதை தான் செய்த புண்ணியம்தான் என்று கருதிய காளிசேனன் ''தங்கள் விருப்பம். நான் வேண்டாம் என்று தடுப்பது அபசகுனமாகிவிடும்'' என்று ஒன்றும் தெரியாதவனைப் போல் கூறினான்.

காளிசேனனின் மனம் விஜயனுக்குப் புரியாமலில்லை. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

''நானும் அவரோடு கல்யாணிக்கு போகிறேன் தந்தையே'' என்றாள் குவேணி.

''சுடுகாட்டிற்கு எந்தத் தகப்பனாவது தன் மகளை அனுப்புவானா? முட்டாளே! விஜபாகு உயிரோடு திரும்புவதே கஷ்டம். இதில் நீயும் போய் சாக வேண்டுமா?'' என்று சொல்லி அவளது கோரிக்கையை நிராகரித்துவிட்டு விஜயன் கேட்ட ஐநூறு வீரர்களை மட்டும் அனுப்பி வைத்தான் காளிசேனன்.

விஜயன் ஐநூறு வீரர்களுடன் புறப்பட்டுவிட்ட நிலையில் தனது கல்யாணி நகருக்கு வந்து கொண்டிருந்த அபாயத்தை அறியாதவனாய் வேடர்குலத் தலைவன் வேடகம்பீரன் சுகபோகத்தில் சொக்கிக்கிடந்தான்.

◈◈◈

## அத்தியாயம் எழுபத்தொன்பது

# வேட கம்பீரன்

**வேட**கம்பீரன் தனது பெயருக்கேற்ப கம்பீரமாக இருந்தான். விசாலமான முகமும் விரிந்த கண்களும் உருண்டு திரண்ட மீசையும் கொண்டிருந்த அவன் தனது இனத்தவரைப் போல் அல்லாது மாநிறமாக இருந்தானாதலால் அவன் ஆணழகனைப் போலிருந்தான். அம்புக் குறிபோன்ற திலகம் அவனது நெற்றியை அழகுபடுத்திக் காட்டியது. ஆடை ஆபரணங்களைத் தேர்ந்தெடுத்து அணிந்திருந்தானாதலால் அவன் தேவபுருஷனைப்போல காட்சியளித்தான். உடல் முழுவதும் புருஷ லட்சணங்கள் நிரம்பியிருந்த காரணத்தால் அவனை அழகுப் பெண்கள் அதிகம் விரும்பினார்கள்.

தற்போதுகூட அழகுப் பெண்ணொருத்திதான் அவனது இன்பங்களுக்கு ஊற்றாக அமைந்திருந்தாள். அவனது வாலிப உடல்கட்டும் மாநிறமும் பலரைப் போலவே அவளையும் கிறங்கச் செய்திருந்ததால் அவள் விரும்பிய காமக்கடலில்

முழுவதுமாய் இறங்கிவிட்டிருந்தாள். தன்னை விரும்புட ஆடவனைவிட தான் விரும்பும் ஆடவனாக வேடகம்பீரன் இருந்தது மட்டுமின்றி அவன் வேட இனத்தலைவனாகவுட இருந்ததால் இந்தப் புளிய மரத்தை லேசில் விட்டுவிடக் கூடாது என்று கருதிய அக்கறுப்பழகி அப்புளிய மரத்தை பலமாகவே உலுக்கினாள்.

தன்னிடம் வந்த அழகிகள் யாருமே அதுவரை காட்டாத வேகத்தையும் வெறியையும் இக்கறுப்பழகி காட்டியதைக் கண்ட வேடகம்பீரன் பெரும் திருப்தியடைந்தான். காமத்தை கடனுக்கு என்று காட்டும் பெண்களின் உறவு புளித்துப் போய்விடும். ஆனால் காமத்தை கலையாகக் காட்டி கடலாக விரிக்கும்போது அது திகட்டுவதில்லை. அதை அக்கறுப்பழகியின் கடல் காமத்தில் கண்கூடாகக் கண்டான் வேடர் குலத்தலைவன்.

அவனுக்கு அவள் காட்டிய காமத்தில் மட்டுமின்றி தனத நிலை குறித்தும் திருப்தியாகவே இருந்தது. காடுகள் நிறைந்த கரடுமுரடான காட்டுப் பிரதேசத்தில் காட்டு விலங்குகளைப் போலவே கட்டுப்பாடு இன்றியும் கடப்பாடு இன்றியும் வேடர் குலமக்கள் கண்டபடிதிரிந்து கொண்டிருந்ததை ஆழ்ந்து கண்டுணர்ந்தவன் அவன்தான். இவர்களையெல்லாம் ஒன்று திரட்டி ஓர் அணியாக மாற்றினால் என்ன என்று தோன்றியதும் அவனுக்குத்தான். தனது எண்ணம் தெளிவானது என்று தெரிந்துவிட்ட பின் அதிகமாக யோசித்து குழம்பி விடாமல் செயலில் இறங்கினான்.

செயலில் இறங்கியபோது தான் அது எத்தனைச் சிரமமானது என்பது அவனுக்குப் புரிந்தது. காட்டு விலங்குகளைவிட மோசமானவர்களாக இருந்தார்கள் வேடர் குலமக்கள். காட்டு விலங்குகளை கண்டபடி வேட்டையாடித் திரியும் தங்களது சுதந்திரத்தை இழக்க அவர்கள் தயாராக இல்லை.

''நீங்கள் இப்படியே இருந்தால் இன்று நீங்கள் விலங்குகளை வேட்டையாடுவது போல் எதிரிகள் உங்களை வேட்டையாடி விடுவார்கள். உங்களது வம்சம் பூண்டோடு அழிந்துவிடும். மிருகங்கள்கூட இனவிருத்தி செய்து மகிழ்ச்சியோடு

வாழும்போது நீங்கள் மட்டும் ஏன் அசட்டையாக இருக்கவேண்டும்? நமக்கென்று ஒருநாடு வேண்டாமா?'' என்று கேட்டான் வேடகம்பீரன்.

''நாம் இருப்பது நம் நாடுதானே?'' என்று கேட்டார்கள் வேடர்கள்.

''விலங்குகளுக்கும் இக்காடுகள் அவற்றின் நாடுதான். ஆனால் எந்த நாட்டிலும் காடுகள் உண்டு. அவை அங்கே வாழும். நம்மால் அப்படி முடியாது. நம் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் உரிமையோடு நாம் வாழமுடியாது. அடிமைகளாகத் தான் வாழவேண்டும். அதுமட்டுமல்ல. நம்நாடு என்று சொல்லும் இந்நாட்டை எவராவது வென்றுவிட்டால் அப்போது நமது சுதந்திரம் பறிபோய்விடும். நாம் சுதந்திரமாகவும் உரிமைகளோடும் வாழ வேண்டுமானால் காடுகளில் சுற்றிக் கொண்டிருந்தால் போதாது. நமது நாடு என்று ஒன்றை உருவாக்க வேண்டும். அங்கே நமது பலத்தை திரட்டி வைத்திருக்க வேண்டும். அப்போது தான் எதிரிகள் இங்கே வந்தால் உள்ளே நுழையவிடாமல் விரட்டலாம். வேடர்கள் நாட்டை உருவாக்கி சுகமாக வாழலாம்''

வேடகம்பீரன் இவ்வாறு அடிக்கடி தன் இனத்தவரிடம் பேசிப்பேசி பேச்சின் சாரத்தை அவர்களுக்குள் உறைய வைத்ததால் கல்லும் கரைந்த கதையாக வேடர்கள் உண்மை நிலையை உணர்ந்து அவனது அழைப்பை ஏற்றார்கள். அவனது தலைமையின் கீழ் வேடர்இனமாக அணிதிரண்டார்கள்.

வேடர் இனம் அவ்வாறு அணிதிரண்டபோது புத்திசாலித் தனமாக நினைத்த வேடகம்பீரன் அவர்களை ஓரிடத்தில் கட்டிப்போட எந்த இடம் ஏற்றது என்று யோசித்து கல்யாணியைத் தேர்ந்தெடுத்தான். நாக தீபத்தின் தெற்குப் பகுதிகளுக்கு அது நுழைவாயிலைப் போல் அமைந்திருந்தது மட்டுமின்றி அருகாமையிலேயே கடலும் இருந்ததால் கல்யாணியைவிடச் சிறந்த இடம் வேறு இருக்க முடியாது என்று கருதி அப்பகுதியை காடுகொன்று நாடாக்கினான். கட்டிடக்கலை அப்போது வழக்கில் இல்லாத காரணத்தால் பெரிய மாளிகைகளை உள்ளடக்கிய நகரமாக அல்லாமல்

சிறுசிறு குடியிருப்புகளையும் அவற்றை இணைக்கும் வீதிகளையும் கொண்ட சிற்றூராக மாற்றினான். அங்கே சகல வசதிகளையும் அவன் செய்து கொடுத்தானாதலால் வேடர்கள் காடுகளைவிட கல்யாணி சிறப்பானது என்பதை உணர்ந்தார்கள். வேட் கம்பீரனைத் தங்கள் இனமானத் தலைவ்னாக ஏற்றார்கள்.

வேடர்களின் தலைவனான வேடகம்பீரன் தலைவனுக்குரிய சுகபோகங்களில் உடனடியாக இறங்கி விடாமல் தனது பதவியை தக்கவைத்துக் கொள்ளும்விதமாகவும் தமது இனத்தவர்களைப் பாதுகாக்கும் விதமாகவும் வேடர் நாடு உருவாகும்விதமாகவும் அம்மக்களில் வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து ஆயுதப் பயிற்சியையும் போர்ப் பயிற்சியையும் அளித்தான். அவர்களில் பலருக்கு உபதலைவர்கள் பதவிகளை அளித்து அவர்களது தலைமையின் கீழ் வாலிப வீரர்களை அணி அணியாகப் பிரித்து கல்யாணியைப் பாதுகாக்கும் பொறுப்பை அளித்தான்.

அருகில் இருந்த கடல் தன் அருமையை அவனுக்கு உணர்த்தியது. வெளிநாட்டுக் கப்பல்கள் மேலைக் கடலான எரித்திரிய கடலுக்குச் சென்று அரபு நாடுகளையும் கிரேக்க நாடுகளையும் அடைய வேண்டுமென்றால் நாகதீபத்திற்கும் பாரதநாட்டிற்கும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள குடாக் கடல் மூலம் செல்ல முடியாமல் அக்கடல் வழியானது குறுகலானதாகவும் ஆழமற்றதாகவும் இருந்தது. எனவே மரக்கலங்கள் நாகதீபத்தைச் சுற்றிக்கொண்டு குமரிக் கடலை அடைந்து மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றன. இந்த இயற்கையான அம்சத்தை தனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதிய வேடகம்பீரன் கல்யாணியின் கடல்முகத்தை துறைமுகமாக மாற்றினால் பலநாட்டு வணிகக் கப்பல்கள் அங்கே வரும் என்றும் அதனால் வாணிபம் பெருகி செல்வம் கிடைக்கும் என்று கருதினான்.

இந்த விஷயத்திலும் கடல் அவனுக்கு அனுகூலமாய் இருந்தது. கல்யாணியின் கழிமுகத்தில் கடலானது நிலத்தை அரித்துக்கொண்டு உள்ளே தனது மூக்கை நீட்டியிருந்ததால் அப்பகுதியை ஆழப்படுத்தி கப்பல்கள் வந்து நிற்பதற்கேற்ற துறைமுகமாக மாற்றினான் வேடகம்பீரன். அந்த மாற்றம் ஏற்றம்

பெற்றது. நீண்ட தூரப் பயணம் மேற்கொண்ட வாணிகக் கப்பல்கள் கல்யாணிக்கு வந்து இளைப்பாறிச் சென்றதால் அங்கே கடல் வாணிபம் உருவாயிற்று. அவனுக்குச் சுங்க வருமானமும் பெருகியது. நாகதீபத்தின் காட்டுவளம் சந்தன மரங்களை அவனுக்குச் சீதனமாகத் தந்திருந்ததால் சந்தனப் பொருட்கள் இதர நாடுகளுக்கு ஏற்றுமதியாகி பெரும் செல்வத்தை ஈட்டித் தந்தது. அதிலிருந்து இரண்டு மரக்கலங்களையும் கட்டுவித்து வாணிகத்தில் ஈடுபடுத்தினான் வேடகம்பீரன்.

செல்வம் நிரம்பி வழிய ஆரம்பித்ததும் அவனது அறிவு ஓய்வெடுத்துக் கொள்ளத் துவங்கி விட்டதால் மேற்கொண்டு எடுக்கவேண்டிய ஆக்கப்பூர்வமான செயல்களைப் பற்றிச் சிந்திக்காமல் சிரிக்கச் சிரிக்கப் பேசும் சிங்காரிகளைப் போய் சந்திப்பதில் ஈடுபட்டான் வேடகம்பீரன். அச்சந்திப்புக்குப் பிறகு தான் தன் அழகின் மீதே அவனுக்கு ஆர்வமும் ஆணவமும் உண்டாயின. பெண்களைத்தேடித் தான் அலைய வேண்டியதில்லை என்பதையும் அவர்களே தன் இருப்பிடம் தேடி பறந்து வரத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்துகொண்ட அவன் தன்னை எண்ணி ஏங்கும் பெண்களுக்காக ஓர் அந்தப்புரத்தைக் கட்டி அதில் பெண்களை நிரப்பும் வேலையைச் செய்ய உபதலைவர்களைப் பணித்தான். வெறுத்துப்போன உபதலைவர்கள் வீரத்தை மூட்டைக்கட்டி வைத்துவிட்டு வேடர் தலைவனுக்கு அழகிகளை சேகரிப்பதிலும் அப்படிச் சேகரிக்கும் அழகிகளில் சிலரை அபகரித்து அனுபவிப்பதிலும் ஈடுபட்டார்கள். வேடகம்பீரனின் அழகிலும் கம்பீரத்திலும் சொக்கிப்போன சிங்காரப் பெண்கள் அவன் போட்ட கொக்கிகளில் தாமாகச் சிக்கி அவனைக் காமத்தில் திக்குமுக்காடச் செய்தார்கள். அறிவாலும் ஆற்றலாலும் சம்பாதித்த செல்வங்களை முத்தாகவும் மணியாகவும் அழகிகளுக்கு அள்ளிக்கொடுத்து கரைத்து வந்தான் வேடகம்பீரன்.

செல்வம் கரைந்து போவதை கவனித்தாலும் அதைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. ஏனென்றால் வாணிபம் தொடர்ந்து சிறப்பாகவே இருந்து வந்தது. ஆனால் செல்வத்தை

ஈட்டி தந்து கொண்டிருந்த அவனது அதிகாரிகள் அந்தச் செல்வம் அழகிகளின் மடிகளில் போய் குவிகிறது என்பதை அறிந்ததும் பல்வேறு நிலைகளிலும் விதங்களிலும் சுரண்டத்தொடங்கி ஊழல் புரியலானார்கள். காமம் மலையாக உயர்ந்து கண்களை மறைத்துவிட்டதால் கடல்புறம் வளர்ந்து கொண்டிருந்த அவலங்களை வேடகம்பீரன் கவனிக்கவில்லை. அதோடு கல்யாணி நகருக்கு ஒருவிதமான தொல்லையும் வராததால் நிர்ப்பயமாக இருந்தான் அவன். மத்திய நாகதீபத்தில் இருந்த இயக்கர்களும் தங்களுக்குள் அடித்துக் கொண்டிருந்ததால் தெற்கு பகுதிகளைப்பற்றி அவர்கள் கவலைப்படவோ முனைப்பு காட்டவோ முற்படவில்லை. இவற்றாலெல்லாம் தனது நிலை திடப்பட்டு விட்டதாக நினைத்த வேடகம்பீரன் தன்னிடம் விளையாடிக் கொண்டிருந்த கறுப்பழகியின் உடலைத் திடமாகப் பிடித்தான்.

வேடகம்பீரனின் பிடி திடமாகிவிட்டதை உணர்ந்த கறுப்பழகியும் அவனுக்கு ஈடுகொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தவளாய் காமக் கலையில் என்னென்ன விசேஷங்கள் உண்டு என்பதை அவனுக்கு உணர்த்த ஆரம்பித்தாள். அவனது அந்தப்புர அழகிகளை மிஞ்சி நின்று வேடகம்பீரனின் இதயத்தில் மட்டுமின்றி அவனது ரத்தின சிம்மாசனத்திலும் இடம்பிடித்து விடவேண்டும் என்ற தீர்மானத்தில் இருந்த கறுப்பழகி அவனை எல்லாவிதங்களிலும் கவரமுற்பட்டாள்.

அவனிடம் கரைந்து கொண்டே ''தங்களிடம் எப்போதுமே நான் தோற்றுப் போய்க் கொண்டே இருக்க வேண்டும் மன்னவா'' என்றாள் கிறங்கிய குரலில்.

அவளிடமிருந்த இன்ப ஊற்றுக்களை முழுமூச்சோடு உறிஞ்சிக் கொண்டிருந்த வேடகம்பீரன் இத்தேவையில்லாத பேச்சை விரும்பாமல் ''என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டு அவளது உதடுகளைத் தண்டித்தான் தனது வெண்பற்களால்.

தன் உதடுகளில் பூத்த குருதிப் பூக்களைத் துடைத்துக் கொண்ட அக்கறுப்பழகி ''ஆண்களும் சரி, பெண்களும் சரி உங்களை வெற்றி கொள்ளவே நினைப்பார்கள். நானோ தோற்பதற்கே விரும்புகிறேன்'' என்றாள்.

''ஏன்?'' என்று கேட்டான் வேடகம்பீரன்.

''உங்களை வெற்றிகொள்ள விரும்புகிறவர்கள் உங்களுக்குத் துன்பத்தை தருகிறார்கள். உங்களிடம் தோற்பவர்கள் உங்களுக்கு இன்பத்தைத் தருகிறார்கள். நான் விரும்புவது என் சுகத்தையல்ல. உங்கள் சுகத்தைத்தான்'' என்றாள் கறுப்பழகி.

''என்னை வெற்றிகொள்ள எவன் இருக்கிறான்?'' என்று கேட்டான் வேடகம்பீரன்.

''இருக்கிறான் வேடர்குல வேந்தே. வெற்றி கொள்ளவும் வந்து விட்டான்'' என்று குறுக்கிட்டது ஒரு குரல்.

''யாரது?'' என்று கேட்டபடி கறுப்பழகியை உதறிய வேடர்குலத் தலைவன் ஆடைகளை அணிந்து கொண்டு மாணிக்கக் குடிலின் கதவைத் திறந்தான்.

வெளியே நின்றிருந்த உபதலைவன் கனகன் வணக்கம் செய்தான்.

அவனை வெறுப்புடன் பார்த்த வேடகம்பீரன் ''என்னைச் சந்திப்பதற்கு உனக்கு நேரம்காலம் எதுவும் இல்லையா கனகா?'' என்று கேட்டான்.

கனகன் ஆடிப்போய் விடவில்லை. ''நமக்கு வேண்டுமானால் கால நேரங்கள் இருக்கலாம். ஆனால் அந்த அவசியம் எதிரிகளுக்குத் தேவையில்லை'' என்றான்.

''யார் எதிரிகள்? அதுவும் நமக்கு?'' கேட்டான் வேடகம்பீரன்.

''எதிரிகள் இருக்கக்கூடாது என்று நாம் நினைக்கலாம். ஆனால் அதே போல நினைக்க வேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை''

''நீ என்ன எதற்கெடுத்தாலும் நேர்மாறாகப் பேசுகிறாய்?''

''நேர்மாறாகப் பேசவில்லை. உங்கள் கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன்''

வேடகம்பீரன் உணர்ச்சிகளை சற்றே அடக்கிக்கொண்டு ''எங்கிருந்து வருகிறார்கள் எதிரிகள்?'' என்று கேட்டான்.

''வடக்கிலிருந்து தான்''

''வடக்கிலிருந்து என்றால் இயக்கர்கள் தானே? அவர்களா வருகிறார்கள்? அவ்வளவு துணிவா வந்து விட்டது காளிசேனனுக்கு?''

''வடக்கு திசை காளிசேனனுக்கு மட்டுமே சொந்தமானதல்ல. அங்கிருந்து யார் வேண்டுமானாலும் வரலாம். தற்போது கல்யாணியை நோக்கி வருவது காளிசேனன் அல்ல. விஜயபாகு''

''யாரவன்?''

''பாரத நாட்டவன்?''

''வியப்பாக இருக்கிறது கனகா''

''எதற்கு?''

''பாரத நாட்டவன் நாகதீபத்திற்கு வந்தால் வடக்கே தான் வரமுடியும். அப்படி வருபவன் நாகர்களையும் இயக்கர் களையும் கடந்து தான் கல்யாணிக்கு வரவேண்டும். இது சாத்தியமா?''

''சாத்தியமாகியிருக்கிறது என்பது உண்மை''

''எங்கே இருக்கிறான் விஜயபாகு?''

''நமது வடக்கு எல்லையில்''

''வடக்கு எல்லைக்கு வரும் வரை நமது ஒற்றர்கள் அவர்களை கவனிக்கவில்லையா?''

''இல்லை''

''ஏன்?''

''அவர்களுக்கு நீங்கள் வேறு பணி கொடுத்து விட்டீர்கள்.

என்ன பணி என்பது வேடகம்பீரனுக்குத் தெரிந்தே இருந்ததால் அதைப்பற்றி விவாதிக்காமல் ''எதிரியின் படைபலம் எவ்வளவு?'' என்று கேட்டான்.

''ஐநூறு''

''அதெப்படி அவ்வளவு துல்லியமாகச் சொல்கிறாய்?''

''படையின் கணக்கை அம்பின் மூலம் நமது வடவெல்லையில் அனுப்பியதே எதிரிதான். நமக்கு கஷ்டத்தை வைக்கவில்லை''

''எதிரி அனுப்பும் கணக்கு தவறானதாக இருக்கலாம் அல்லவா? நம்மை ஏமாற்றுவதற்காகவும் இருக்கலாம் அல்லவா?''

''ஐந்நூறு பேர்களை வைத்துக்கொண்டு ஐயாயிரம் பேர் வந்திருப்பதாகச் செய்தியனுப்பினால் உங்கள் வார்த்தைகள் சரியாக இருக்கும். இந்த எதிரியோ தன் கணக்கு ஐநூறு என்று சொல்கிறான். இது மிகவும் குறைவான தொகை. குறைவான கணக்கை நம்மை ஏமாற்றுவதற்காக முட்டாள் கூட சொல்ல மாட்டான்''

''இவன் கூறியதற்குக் காரணம்?''

''தைரியம்தான். குறைந்த எண்ணிக்கையோடுதான் வந்திருக்கிறேன். உன்னால் முடிந்ததைப் பார்த்துக்கொள் என்பது தான் அவனது செய்தியின் அர்த்தம்''

''கனகா, நான் பயப்படுவேன் என்று நினைக்கிறாயா?''

''இதை ஏன் சொல்கிறீர்கள்?''

''கல்யாணியில் இப்போது மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பாதிபேரை கடற்கரைக்கு அனுப்பிவிடலாம். எதிரி ஐநூறு பேர் நம்மை தாக்கும்போது இங்கே உள்ள ஆயிரத்து ஐநூறு பேரும் கடற்கரையிலிருந்து திடீரென ஆயிரத்து ஐநூறு பேரும் தாக்கினால் எதிரி தப்ப முடியுமா?''

''திட்டம் சரி. ஆனால் உண்மை நிலைவேறு அல்லவா?''

''என்ன ஆயிற்று நிலைமைக்கு?''

''கல்யாணியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இருப்பதாக நீங்கள் சொன்னீர்கள். அதில் போரிடக் கூடிய வா்லிப வீரர்கள் இரண்டாயிரம் பேர் தான். மற்றவர் அவர்களது

குடும்பத்தினர். அவர்களால் போரிட முடியாது. போரின் போது ஓடத்தான் முடியும். அதுவும் நீங்கள் கூறிய மூவாயிரம் கணக்கு எப்போது போடப்பட்டதோ தெரியவில்லை. இப்போது அதில் பாதி பேர்தான் கல்யாணியில் இருக்கிறார்கள்''

''என்ன ஆனார்கள் மற்றவர்கள்?''

''காடே சிறந்தது என்று காடுகளுக்குத் திரும்பி விட்டார்கள்?''

''கல்யாணிக்கு என்ன குறைந்து விட்டது?''

''அதை நான் கூறுவது அநாகரீகம். உங்களுக்கே தெரியும்''

தான் ஆக்கப்பூர்வமான காரியங்களை விட்டுவிட்டு அழகிகளின் சொர்க்கத்திற்கு வந்து விட்ட காலகட்டத்தில் தன்மீதிருந்த நம்பிக்கையை இழந்தவர்கள் தான் கல்யாணியை விட்டு காட்டிற்குத் திரும்பியிருக்க வேண்டும் என்பது புரிந்தது வேடகம்பீரனுக்கு.

''அப்படிப் பார்த்தாலும் ஆயிரத்து ஐநூறு பேர் இருக்கிறார்கள் அல்லவா?''

''போரிடக் கூடியவர்கள் ஆயிரம் பேர்தான்''

''அவர்களில் ஐநூறு பேரை கடற்கரைக்கு அனுப்பி போரின்போது திடீரென பக்கவாட்டில் தாக்கினால் வெற்றி நமக்குத்தானே?''

''திட்டம் சரி. ஆனால் நிலைமை வேறு''

''இதைத்தான் சற்றுமுன் சொன்னாய்''

''உண்மையைச் சொல்கிறேன்''

''என்ன உண்மை?''

''நீங்கள் கடற்கரைக்கு எத்தனை பேர்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் அவர்களால் உங்களுக்கு உதவமுடியாது''

''ஏன்?''

''அதோ அந்த மரத்தூணின் மீது ஏறி கடற்கரையைப் பாருங்கள்''

''பார்த்தான் வேடகம்பீரன்.

இக்கட்டான நிலையில் தான் இருப்பது அவனுக்குத் தெரிந்ததால் திகைத்தான்.

## அத்தியாயம் எண்பது

# வேடனின் வஞ்சகம்

சுமார் ஐம்பதடி உயரமிருந்த மரத்தூணின் படிக்கட்டுகளில் வேடகம்பீரனும் உபதலைவன் கனகனும் ஏறி உச்சிக்கு வந்து கடற்கரையை நோக்கினார்கள். அங்கே துறைமுகத்தின் வாயிலை அடைத்தபடி நின்றிருந்தது தீவுக்கப்பல். அதைக் கண்டு பிரமித்துப்போன வேடகம்பீரன் ''இது என்ன?'' என்று கேட்டான்.

''விஜயபாகுவின் கப்பல்'' என்றான் கனகன்.

''மிகவும் பிரம்மாண்டமாக இருக்கிறதே?''

''பிரம்மாண்டமானது மட்டுமல்ல போர்க்கப்பலும் கூட, அது இப்போது துறைமுகத்தை அடைத்து சிறைப்படுத்தி விட்டது. அங்கே உங்கள் திட்டம் எதுவும் நிறைவேறாது''

கனகன் கூறுவது உண்மைதான் என்பதை உணர்ந்து கொண்ட வேடர் குலத்தலைவன் கல்யாணியின் நிலை அபாயத்தில் இருப்பதையும் உணர்ந்து திகைத்தான். தீர்க்காலோசனையுடன் காட்டில் திரிந்து கொண்டிருந்த தனது இனத்தவரை திரட்டி ஒரு சக்தியாக மாற்றியதெல்லாம் தற்போது அர்த்தமற்று போய்விட்டதை உணர்ந்தான். கல்யாணி நகருக்கு கடல்வாயில் துறைமுகத்தை அமைத்து வணிகத்தை வளர்த்து பெருக்கிய செல்வமெல்லாம் சிறுத்துப் போனதைவிட அவ்வாறு சிறுத்துப் போனதற்குக் காரணம் சிங்காரிகளின் மீது தனக்கு ஏற்பட்ட மோகம்தான் என்ற உணர்வு அவனை

வாட்டியது. ஒன்றாகத் திரண்ட இனமான மக்கள் நன்றாய்ச் செயல்பட வேண்டிய நேரத்தில் கலைந்து போனது அவனுக்குச் சகிக்க முடியாததாக இருந்தது.

தூணை விட்டுக் கீழே இறங்கிய அவன் கனகனைப் பார்த்து ''கனகா, நமது வடவெல்லைக்கு வந்துவிட்டதாகச் சொன்ன எதிரி நம்மை ஏன் இன்னமும் தாக்கவில்லை?'' என்று கேட்டான்.

கனகன் தனது பையிலிருந்த ஓலை ஒன்றை எடுத்துக்காட்டி ''உயிர் சேதத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் நம்மைச் சரணடையும்படியும் கல்யாணி நகர் முழுவதும் வெள்ளைக் கொடிகளை ஏற்றி அறிவிக்கும்படியும் நமக்கு இரண்டு நாட்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறான் விஜயபாகு. ஆகவே தான் தாக்கவில்லை'' என்றான்.

சிறிதுநேரம் எதுவும் பேசாமல் இருந்த வேடகம்பீரன் பிறகு பணியாட்களை அழைத்து மரத்தூணின் உச்சியில் சிவப்பு விளக்கையும் ஏற்றி சிவப்பு கொடியையும் கட்டச் சொல்லி விட்டு கனகனைப் பார்த்து ''உண்மையை ஒப்புக் கொள்வது அறிவீனமா கனகா?'' என்று கேட்டான்.

எதற்காக தலைவன் திடீரென இவ்வாறு கேட்கிறான் என்பதை உணரமுடியாமல் ''ஆகாது'' என்றான் கனகன்.

''புலி பதுங்குவது கோழைத்தனமாக ஆகுமா கனகா?''

இதற்கும் ''ஆகாது'' என்று பதில்சொன்னான் கனகன்.

''நீயே சொல்லிவிட்டாய். பிறகென்ன? நான் சரணடைகிறேன் கனகா. கல்யாணி முழுவதும் வெள்ளைக் கொடிகளை ஏற்றச்சொல்''

''விஜயபாகுவிடம் நீங்கள் சரணடையப் போகிறீர்களா?''

''உண்மையை ஒப்புக்கொள்வது அறிவீனம் ஆகாது என்று நீதானே சொன்னாய்? நாம் நிர்க்கதியில் இருப்பது உண்மை. அதை விஜயபாகுவிடம் ஒப்புக்கொள்வதுதானே புத்திசாலித்தனம்? உயிர்ச் சேதங்கள் தடுக்கப்படுவது நல்லது தானே?''

மேலுக்கு சத்தியமான வார்த்தைகளைப்போல் தோன்றினாலும் வேட கம்பீரனின் பேச்சை நம்ப கனகன் தாயராக இல்லை. சரணடைபவனின் உணர்வுகள் எதுவும் தலைவனின் முகத்தில் பிரதிபலிக்காததால் அவன் ஏதோ சதி செய்ய முற்படுகிறாள் என்று கருதிய கனகன் ''விஜயபாகுவிடம் சரணடையப் போகும் தாங்கள் மரத்தூணின் உச்சியில் சிவப்பு விளக்கையும் கொடியையும் ஏற்றச் சொல்வானேன்? அது கல்யாணிக்கு உருவாகியுள்ள ஆபத்தை உணர்த்தி நமது இனத்தவரை உடனடியாக இங்கே வரவழைப்பதற்கான அடையாளமல்லவா?'' என்று கேட்டான்.

''நம் இனத்தவரை நாம் அழைப்பதற்கு யாரைக் கேட்கவேண்டும்?''

''சரணடையும் சமயத்தில் இந்த நடவடிக்கை எதற்கு என்பதுதான் என் கேள்வி''

''கனகா, என்னைச் சரணடையும்படிச் சொல்லி இங்கே வரும் விஜயபாகு திடீரென நம்மைத் தாக்கினால்? அதைச் சமாளிக்க நம்மிடம் போதுமான ஆட்கள் இருப்பது நல்லது தானே?''

''எனக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை''

''உனக்கென்ன தோன்றுகிறது?''

''சரணடைவதாகச் சொல்லி விஜயபாகுவை வரவழைத்து வஞ்சகமாக அழித்துவிட நீங்கள் திட்டமிடுவதாகத் தோன்றுகிறது எனக்கு''

''புலி பதுங்குவது பாய்வதற்குத் தானே கனகா?''

''நீங்கள் புலியாக நடக்கவில்லை நரியாக நடந்து கொள்கிறீர்கள்''

''கனகா, விஜயபாகு பிறந்த நாட்டில் இதிகாசங்களும் புராணங்களும் ஏராளமாகப் பிறந்துள்ளன''

''அதற்கென்ன இப்போது?''

''மகாபாரதம் என்ற ஒரு இதிகாசம் உண்டு. அதில் அதர்மங்கள் மண்டிக்கிடக்கின்றன. தர்மவான்கள் என்று

கருதப்பட்ட பாண்டவர்கள் செய்த அதர்மங்கள் பிரசித்தமானது. தங்களால் அழிக்க முடியாத பீஷ்மரையும் துரோணரையும் ஏன் மகாவீரர்களான கர்ணனையும் துரியோதனையும் பாண்டவர்கள் அதர்மம் என்ற சதியினால் கொன்றார்கள்''

''நீங்கள் நான்கு பேர்களைப் பற்றிச் சொன்னீர்களே அவர்களில் நீங்கள் யார்? பீஷ்மரா? துரோணரா? கர்ணனா அல்லது துரியோதனனா?''

''பிரச்சனை அதுவல்ல கனகா. புனித நூல்களிலும் இதிகாசங்களிலும் தர்மவான்கள் அதர்மம் செய்திருக்கும் விஷயங்கள் மண்டிக் கிடக்கின்றன என்பதைத்தான் உனக்குச் சுட்டிக் காட்டுகிறேன். எங்கோ இருக்கும் விஜயபாகு நம்மை எதிர்க்கவும் அழிக்கவும் நினைப்பது என்ன நியாயம்? நம்மிடம் அவனை எதிர்க்கப் போதிய பலமில்லை என்கிறபோது அந்த எதிரியை வஞ்சகத்தால் அழிப்பது எப்படித் தவறாக முடியும்?''

இதைக் கேட்டுச் சிரித்தான் கனகன்.

''ஏன் சிரிக்கிறாய் கனகா?''

''நீங்கள் சொன்னீர்களே பாரத நாட்டு இதிகாசங்களைப் பற்றி - அதில் ராமாயணம் என்று ஒன்றும் இருக்கிறது. அது பாரத நாட்டையும் நம் நாட்டையும் பற்றியது. நம் நாட்டைச் சேர்ந்தவன் இலங்கேஸ்வரன். அவன் செய்தது என்ன? மாற்றானின் மனைவியான சீதையைக் கவர்ந்தான். சீதை என்ன பாவம் செய்தாள்?''

''கனகா, நீ ஆராயாமல் பேசுகிறாய்? தன் தங்கையை லட்சுமணன் மானபங்கப்படுத்தியதால் அதற்குப் பழிவாங்கவே ராவணன் சீதையைக் கவர்ந்தான்''

''ராவணன் லட்சுமணனைப் பழிவாங்கியிருக்க வேண்டும்? சீதையைக் கவருவானேன்?''

''ராவணன் அரக்க குலத்தவன். பிறரைக் கவர்வதும் கொல்வதும் அரக்கர் இயல்பு. அதைத்தான் ராவணன் செய்தான்''

''இஷ்டப்படி பேசுகிறீர்கள் வேடர் குலவேந்தே. அரக்கர் இயல்பிற்கேற்ப சீதையைக் கவர்ந்த ராவணனை ராமன் போரில் கொன்றது தவறு என்றுகூட வாதாடுவீர்கள் போலிருக்கிறது''

''அவரவர் இயல்பை அவரவர் காட்டிக் கொண்டார்கள். அவ்வளவு தான். ஆனால் இதிகாசம் ராவணனைக் குற்றவாளியாகச் சொல்கிறது''

''பிறர் மனைவியைக் கவர்வது அரக்கர் குணம் என்று நியாயம் பேசும் நீங்கள் பிறர் நாட்டைக் கவர்வது மன்னர் குணம் என்று ஏன் ஏற்கவில்லை?''

வேடகம்பீரன் சற்றே குழம்பிப் போய் ''கனகா, ராமாயணத்தைப்பற்றி எதற்காகப் பேச்செடுத்தாய்?'' என்று கேட்டான்.

''அந்த இதிகாசத்தில் அழிந்தவன் நம் நாட்டவன் என்பதையும் அவன் செய்தது குற்றம் என்பதைச் சுட்டிக் காட்டவே சொல்ல வந்தேன். நீங்களோ ராவணன் குற்றமே புரியவில்லை என்று சொல்கிறீர்கள். இந்த அறிவு நிலையில் உள்ள உங்களுக்கு அறிவுரை சொல்வது உகந்தது இல்லை. சொன்னாலும் அது ராவணனுக்கு விபீஷணன் சொன்ன அறிவுரையைப் போலாகிவிடும்''

''ஏதாவது அறிவுரையை கைவசம் வைத்திருக்கிறாயா கனகா?''

''அறிவுரையல்ல. ஒரே ஒரு விஷயம். அதற்கு நீங்கள் மதிப்பளிக்கிறீர்களோ இல்லையோ-சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டியது உபதலைவன் என்ற முறையில் என் கடமை''

''சொல்''

''விஜயபாகுவிடம் உண்மையாகவே நீங்கள் சரணடைந்தால் நிச்சயமாக உயிர்ச்சேதம் இருக்காது. சரணடைவது போல் நாடகமாடினால் உயிர்ச்சேதம் தவிர்க்க முடியாமல் போய்விடும்''

''நன்றி கனகா. சில முடிவுகளை தலைவன் தான் எடுக்க வேண்டும். கடைசி வரை பிறர் ஆலோசனைகளையே

சார்ந்திருக்கக்கூடாது. நீ போய் வாலிப வீரர்களைக் கணக்கெடுத்து தாக்குதலுக்கு அவர்களைத் தயார்படுத்து. சிவப்பு அடை யாளத்தைக் கண்டு கல்யாணிக்கு வருபவர்களிடமும் ஆயுதங் களைக்கொடு. விஜயபாகுவையும் அவனது படையையும் எப்போது தாக்க வேண்டும் என்பதை வீரர்களுக்கு அறிவிக்க ஆங்காங்கே முரசுகளை அமைத்து அவற்றை ஒலிக்க உரியவர்களை நியமித்துவிடு. துறைமுகத்தை அடைத்து நிற்கும் போர்க்கப்பலிலிருந்து யாரும் கல்யாணிக்குள் வராதவாறு மரங்களை வெட்டி கடற்கரை முழுவதும் போட்டு அடைத்துவிடு. வெள்ளைக் கொடிகளை ஊரெங்கும் கட்டு, மரங்களிலெல்லாம் கொடிகள் பறக்கட்டும். விஜயபாகு என்னைச் சந்திக்க உரிய ஏற்பாடுகளைச் செய். வடக்கெல்லைக் கோட்டையடுத்த திடலில் நானும் எதிரியும் சந்திக்க ஆயத்தம் செய்துவிடு. பிறவிஷயங்களைப் பற்றி பிறகு பேசுவோம்'' என்று கூறிவிட்டு அகன்றான் வேடகம்பீரன். கனகனின் இதயமோ கனத்தது.

வஞ்சக எண்ணம் தலைக்கேறி விட்டதால் அசட்டு தைரியமும் நம்பிக்கையும் கூடவே குடியேறின வேட கம்பிரனுக்கு. துறைமுகத்தை அடைத்துக் கொண்டிருந்த தீவுக்கப்பலைப் பார்த்தபோது உண்டான அதிர்ச்சி பெருமளவு மறைந்துபோய் சகஜ நிலைக்கு அவன் திரும்பி யிருந்தானாதலால் விஜயனை வென்று விட்டதாகவே கருதினான். அதனால் உண்டான மகிழ்ச்சி அவனைத் தூண்டிவிடவே அன்றிரவு கவலையேதுமின்றி களிப்புடன் கறுப்பழகியுடன் காமக் களியாட்டத்தில் ஈடுபட்டான். கறுப்பழகிக்கும் அவனது ஈடுபாடு புத்துணர்வுகளை அளித்ததால் காமப் புதுமைகளைக் காட்டி அவனைக் கொள்ளை கொண்டாள்.

மறுநாள் அவன் கனகனுக்கு இட்டிருந்த கட்டளைகள் பூரணமாக நிறைவேறியிருந்தன. மரத்தூணில் உண்டாக்கப் பட்ட அடையாளத்தைக் கண்டு காட்டுப் பகுதியிலிருந்து வேடர் குல மக்கள் ஓரளவிற்கு கல்யாணிக்கு வந்திருந்தார்கள். அவர்களிடம் ஆயுதங்களைக் கொடுத்த கனகன் போருக்கு

அவர்களை ஆயத்தப்படுத்தினான். ஏறக்குறைய ஆயிரத்து ஐநூறு பேர் ஆயுதபாணிகளாக கல்யாணி நகரின் நாற்புரங்களிலும் அணிஅணியாகக் குவிந்தார்கள். அதையெல்லாம் கண்டு பெரும் திருப்தியடைந்த வேடகம்பீரன் விஜயபாகுவை எவ்வாறு அழிக்கலாம் என்ற யோசனையில் ஆழ்ந்தான்.

★★★

தாமிரபன்னியைவிட்டு ஐநூறு வீரர்களுடன் கல்யாணிக்குப் புறப்பட்ட விஜயன் மிகவும் கடுமையான பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இயக்கர்கள் யாரும் நாகதீபத்தின் தென்பகுதிக்கு வந்துவிடக் கூடாது என்ற காரணத்தால் அப்பகுதிக்குச் செல்லும் பாதைகளை வேடர்கள் சிதைத்து விட்டிருந்தார்கள். எனவே விஜயன் தனது பயணத்திற்கு பாதை போட்டுக் கொண்டும் பல இடங்களில் ஓய்வெடுத்துக் கொண்டும் சமாளித்தான். நவவீரர்கள் மூலம் காளிசேனனின் வீரர்களுக்கு நுட்பமான போர்ப் பயிற்சியையும் அளித்து அவர்களது திறமையை கூர்மையாக்கினான். அவனே கூட சில சமயங்களில் போர் நுணுக்கங்களை விவரித்தபோது காளிசேனனின் வீரர்கள் அவனை நேசிக்கலானார்கள். அவனிடம் பணிபுரிய மிகவும் விரும்பினார்கள்.

பயணத்தின்போது நவவீரர்களில் ஒருவன் விஜயனிடம் கேட்டான்.

''தலைவரே, இவர்களுக்கு அளவுக்கு அதிகமாக போர் நுணுக்கங்களை போதிக்கிறீர்களே அந்த அளவிற்கா பெரும்போர் நம்மை வரவேற்கக் காத்திருக்கிறது?''

''கல்யாணியில் மேற்கொள்ளப்போகும் போருக்காக நான் ஆயத்தம் செய்யவில்லை. நமது எதிர்காலத்திற்காகச் செய்கிறேன். அதற்கு நமக்கிருக்கும் படைபலம் போதாது. அதைப் பெருக்க என்ன வழி? காளிசேனனின் வீரர்களை நம் வீரர்களாக ஆக்குவதுதான். அது எப்படி நடக்கும்? அவர்கள் நம்மை நேசித்தால் நடக்கும். அதற்காகத்தான் இப்படி நடந்து கொள்கிறேன்'' என்றான் விஜயன்.

அவன் சொன்னபடியே நடந்தது. காளிசேனனின் வீரர்கள் அவனை நேசிக்க ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில் கல்யாணியின் வடவெல்லையை நெருங்கியது விஜயனின் படை.

''தலைவரே, நமது சொற்ப படை போதுமா?'' என்று கேட்டான் நவவீரர்களில் ஒருவன்.

''சொற்பம் எது என்பதை சோதித்து விடலாம். நமது படையெண்ணிக்கையை குறிப்பிட்டு ஓலையொன்றை அம்பில் கட்டி வடக்கு எல்லைபுறத்தில் எறிந்துவிடு'' என்றான் விஜயன்.

அவன் கூறியதைச் செய்துவிட்டு வந்த நவவீரன் விஜயனிடம் கேட்டான்.

''எதிரியிடம் ஐநூறு வீரர்களைவிட குறைவான வீரர்களா இருப்பார்கள்?''

''எத்தனை பேர் இருந்தாலென்ன? அவர்கள் எந்த நிலையில் இருப்பார்கள் என்று யோசித்துப்பார்''

''எந்த நிலையில் இருப்பார்கள்?''

'நம்மிடமிருந்து போரை எதிர்பாராத நிலையில் இருக்கலாம் அல்லவா? அதிகம் எண்ணிக்கையில் இருப்பவர்கள் ஆயத்தமின்றி இருந்தால் நமக்குச் சாதகமல்லவா?''

''பிறகு எதற்கு ஓலைமூலம் நமது எண்ணிக்கையை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்?''

''எதிரி நம்மைப்பற்றி எண்ணி அசர வேண்டுமல்லவா?''

''எப்படி அசருவான்?''

''எவனாவது தனது குறைந்த எண்ணிக்கையுடைய படையைப் பற்றி எதிரிக்கு அறிவிப்பானா? மாட்டான். ஆனால் நாம் அறிவிக்கிறோம். இது எதிரியை அசர வைக்காதா? குழப்பாதா? அதோடு எதிரியின் தலைநகரம் என்று சொல்லப்படும் பகுதியைப் பார். கட்டிடங்களோ சுவர்களோ ஏதாவது தெரிகிறதா? ஒரே ஒரு தூண் மட்டும் தெரிகிறது. இதிலிருந்தே கல்யாணி நகர் பாதுகாப்பில்லாமல் இருக்கிறது

என்று புரியவில்லையா? இந்தச் சமயத்தில் நாம் அசாத்திய தைரியம் கொண்டவர்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். ஓலையொன்றை எடு. வேடர்குலத் தலைவனுக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தருவதாகவும் உயிர் சேதத்தை தவிர்க்க விரும்பினால் சரணடையும்படியும் அதற்கு அடையாளமாக கல்யாணி முழுவதும் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடும்படியும் செய்தி அனுப்பு''

விஜயன் கூறியபடி செய்தியனுப்பப்பட்டது. அன்று மாலையே அதற்கான பதிலோலையும் வந்தது. தான் சரணடைய விரும்புவதாகவும் வடக்கு எல்லையை அடுத்த திடலில் விஜயபாகு வந்து தனது தலைகிரீடத்தைப் பெற்றுக்கொண்டு கல்யாணியை ஏற்றுக்கொள்ளும்படியும் ஓலையில் சொல்லியிருந்தான் வேடகம்பீரன்.

''பெரிதாக எதிபார்த்த விஷயம் சப்பென்று முடிந்துவிட்டது தலைவரே''என்று தன் ஏமாற்றத்தை வெளியிட்டான் நவ வீரன்.

''தேவையில்லாத இடங்களில் போர் தவிர்க்கப்படுவது நல்லது வீரனே. ஆனைக் கோட்டையிலும் போர் தவிர்க்கப் பட்டது. அங்கே நான் சரணடைந்தேன். இங்கே வேடர்குலத் தலைவன் சரணடைகிறான். இரண்டிலும் நமக்குச் சாதகம் தானே?'' என்று விஜயன் சொன்னதை ஒப்புக்கொண்டான் நவவீரன்.

அன்றிரவு ஏதேச்சையாக கவனித்தபோது எதிரியின் நகரில் இருந்த மரத்தூணின் உச்சியில் சிவப்பு விளக்கு ஒன்று எரிவதை கவனித்தான் விஜயன். அது தினமும் எரிகிறதா அல்லது இன்று மட்டும் எரிகிறதா என்பதை திட்டமாகச் சொல்ல முடியாததால் அமைதியாகவே இருந்த விஜயன் மறுநாள் காலையில் மரத்தூணைக் கவனித்தபோது அங்கே சிவப்புக்கொடியொன்று காட்சியளித்தது. உடனே காளிசேனனின் வீரர்கள் சிலரிடம் இதைப்பற்றிச் சொல்லி வினவியபோது அவர்கள் அதன் காரணத்தைச் சொன்னார்கள்.

''நம்மிடம் சரணடைய ஒப்புக்கொண்ட எதிரி எதற்காக தங்கள் இனத்தவரை அதுவும் இந்த சமயத்தில் அழைக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

அதற்கு காளிசேனனின் வீரர்கள் கூறிய பதில் சரியாகவே தோன்றியது விஜயனுக்கு. எனவே நவவீரன் ஒருவனை தீவுக்கப்பலில் இருக்கும் தனஞ்ஜெயனுக்கு ஒரு செய்தியுடன் அனுப்பி வைத்தான்.

''சரணடையும் சம்பவம் திட்டப்படி நாளை காலை நடைபெற வேண்டும். ஆனால் அது நடக்கும் என்று தோன்றவில்லை. வேடர்குலத் தலைவன் ஏதோ சதியில் இறங்கியிருக்கிறான். ஆகவே இன்றிரவே நாம் தாக்குதலைத் துவங்குவோம்'' என்று கூறி தாக்குதல் பற்றி விவரித்தான் விஜயன்.

★★★

கல்யாணியில் சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்து விட்டு பொழுது விடிந்தால் தன்னைக் கைது செய்ய வரவிருக்கும் விஜயனைக் கொல்லப்போகும் தனது முயற்சியை எண்ணி பெரும் திருப்திக்கு ஆளான வேடகம்பீரன் ''அடே, விஜயபாகு! எங்களை என்ன அத்தனை லேசாகவா நினைத்து விட்டாய்? கரும்பைத் தின்ன கூலியா எதிர்பார்க்கிறாய்? வா வா. நாளைக்கு இதே நேரம் உன் உடலைக் கழுகுகளுக்கு இரையாக்குகிறேன். இங்கிருக்கும் மலைக்கழுகுகள் பற்றி உனக்குத் தெரியாது. உயிரோடு உலவும்போதே பறந்து வந்து கொத்தும் ராட்சஷப் பட்சிகள் அவை'' என்று சற்றே மதமதர்ப்புடன் கூறிக்கொண்ட வேடகம்பீரன் தன்னருகே இருந்த கறுப்பழகியை இறுகத் தழுவி உதடுகளைக் கடித்தான்.

அப்போது ''ஐயோ ஐயோ'' என்ற கூக்குரல்கள் எழுந்தன.

கறுப்பழகியை உதறிவிட்டு வெளியே வந்தான் வேடகம்பீரன்.

அங்கே அவன் கண்ட காட்சி ரத்தத்தை உறைய வைப்பதாக இருந்தது.

◈◈◈

## அத்தியாயம் எண்பத்தொன்று

# கல்யாணி வீழ்ந்தது

கல்யாணி நகரில் நாலா பக்கங்களிலும் இருந்த குடில்களும் குடியிருப்புகளும் தீப்பற்றி எரிந்ததால் அங்கே இருந்தவர்கள் 'ஐயோ ஐயோ' என்று அலறினார்கள். என்ன நடக்கிறது என்று புரியாத நிலையில் குழம்பிய வேடகம்பீரனை நோக்கி வந்த வீரனொருவன் ''எதிரி நம்மீது திடீரென தாக்குதலைத் துவங்கிவிட்டான் நமது நகரின் நாலா புறமும் அவர்கள் சூழ்ந்துகொண்டு எரியம்புகளையும் வாணங்களையும் வீசுகிறார்கள். நமது வீரர்களால் பதில் தாக்குதலைத் தொடுக்க முடியவில்லை. உயிர் தப்புவதற்காக ஓடுகிறார்கள்'' என்றான்.

''எல்லோரையும் கடற்கரை பக்கமாக ஓடச் சொல்லுங்கள்'' என்றான் வேடகம்பீரன்.

''ஓடினார்கள். ஆனால் அங்கே நாம் வெட்டிப் போட்ட மரங்கள் அவர்களுக்குத் தடையாக அமைந்து விட்டன. அதுமட்டுமல்ல.''

''வேறென்ன?''

''துறைமுகத்தில் எதிரிகப்பலில் இருந்த எதிரிகள் இறங்கிவந்து நாம் வெட்டிப்போட்ட மரத்திற்குப் பின்புறமாக இருந்து கொண்டு நம்மை நோக்கித் தீயம்புகளை வீசுகிறார்கள்''

வேடகம்பீரனுக்கு எதுவும் தோன்றவில்லை. மறுநாள் காலையில் நிறைவேற்றவிருந்த தனது திட்டத்தின் மீது அவனுக்கு அபார நம்பிக்கையும் திருப்தியும் வந்துவிட்ட காரணத்தால் வேறு எதைப் பற்றியும் அவன் எண்ணவோ ஆராயவோ இல்லை. அதோடு தான் சரணடைவதாக ஓலையனுப்பிய பிறகு விஜயனிடமிருந்து எந்தச் செய்தியும் வராததால் எல்லாமே திட்டமிட்டபடி நடந்து வருகிறதென்று நினைத்தான். ஆகவே விஜயன் திடீரென தாக்குதலை அதுவும்

இரவிலேயே துவங்கிவிட்டதற்கு காரணம் புரியவில்லை அவனுக்கு.

''கனகன் எங்கே?'' என்று கேட்டான் எதுவும் விளங்காத நிலையில்.

''தீயை அணைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்'' என்றான் வீரன்.

''தீயை அணைத்தால் ஒரே புகைமண்டலமாகிவிடுமே? எதிரிகளை எப்படித் தாக்கமுடியும்?''

''அதனால்? நம்மவர்கள் சாகட்டும் என்கிறீர்களா?''

''வீரனைக் கொன்றுவிடலாம் போல் இருந்தது வேடகம்பீரனுக்கு.

அச்சமயத்தில் அவன் ஏற்றி வைத்த சிவப்பு விளக்கைத் தாங்கிக் கொண்டிருந்த மரத்தூண் திடீரென பற்றிக்கொண்டு எரிந்தது. சிறிது நேரத்தில் கீழே சாயவும் தொடங்கியது.

அக்காட்சி வேடகம்பீரனின் நம்பிக்கையையும் சாய்த்து விட்டது. இனி விஜயபாகுவை வெற்றி கொள்ள முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. தான் தீட்டிய திட்டமும் போட்ட சதியும் தனக்கே ஆபத்தாக வந்து முடிந்தது அவனுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டதால் சரணடையும் தாரைகளை ஊதச் சொன்னான்.

அந்த ஒலி விஜயனுக்கு திருப்தியாக இருந்ததோ இல்லையோ உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேடர்குல மக்களுக்கு ஆறுதலாக இருந்தது. எதிரியின் தாக்குதல் நின்றுவிடும் என்று நம்பிய அவர்கள் கனகனோடு சேர்ந்து கொண்டு தீயை அணைப்பதில் முற்பட்டார்கள். அவர்கள் நினைத்தது போலவே எதிரிகளின் தாக்குதல்கள் நின்றன. கல்யாணி நகரைச்சுற்றி அதை விழுங்க வருவது போல் எதிரிகளின் பந்தங்கள் நகரத்தை நோக்கி நகர்ந்தன.

நெருப்புச் சுவாலைகள் அணைந்து புகை மண்டலமும் அடங்கி எல்லாம் ஓய்ந்து முடிந்த போது கல்யாணி நகர் சுடுகாடு போல் காட்சியளித்ததைக் கண்டான் வேடகம்பீரன். அவனது இதயம் தீப்பற்றி எரிந்தது.

அப்போது அங்கே வந்த கனகன் ''கெடுவான் கேடு நினைப்பான்'' என்றான்.

தீக்காயங்களுடன் வந்து நின்று கனகன் உதிர்த்த சொற்கள் வேடகம்பீரனின் இதயத்தீயை உக்கிரப்படுத்தின.

''வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவதுதான் உபதலைவனின் வேலையா?'' என்று சீறினான் வேடகம்பீரன்.

''புண்ணோடு இருப்பது நான். வேதனைப்படுவதும் நான்'' என்று சொன்ன கனகன் ''இதுபோல் விபரீதம் வரும் என்று தான் நேற்றே நான் அறிவுரையைக் கூறினேன். நீங்கள்தான் கேட்கவில்லை. இப்போது உடம்பில் மட்டுமின்றி உள்ளத்திலும் காயம்படும் நிலைக்கு கொண்டு வந்து விட்டீர்கள். நம்மவர்கள் பலர் தேவையில்லாமல் தீக்கு இரையாகி செத்து விட்டார்கள். வீரர்களாக உருவாக்கிய உங்கள் இனத்து வாலிபர்கள் போரிடாமலேயே கரிகட்டைகளாகக் கிடக்கிறார்கள். நீங்கள் உருவாக்கிய கல்யாணி நகரம் சிதைந்து உருக்குலைந்து கிடக்கிறது. இந்த அவலமும் அலங்கோலமும் எதனால்? யாரால்? உயிர்ச் சேதம் வேண்டாம் என்று எதிரி சொன்னான். உயிர்கள் மேல் அவனுக்கிருந்த மரியாதை உங்களிடம் இல்லை. எதிரி விரும்பாத உயிர்ச் சேதத்தை நீங்கள் உருவாக்கி விட்டீர்கள். உருப்படியாகவும் உண்மையாகவும் நீங்கள் சரணடைந்திருந்தால் இதெல்லாம் நடந்திருக்குமா?'' என்று வேடகம்பீரனைத் துச்சமாகக் கருதி துணிவோடு கேட்டான் கனகன்.

''சரணடையும்படி ராவணனைச் சொன்னான் தம்பி விபீஷணன். சரணடைந்தானா ராவணன்? சரணடையாததால் புகழ் கிடைக்காமலா போய்விட்டது ராவணனுக்கு?'' கேட்டான் வேடகம்பீரன்.

''இது புராணங்களைப் பற்றி பேசுகிற நேரமல்ல வேந்தே. அவற்றைப்பற்றிப் பேசும் தகுதி நமக்கில்லை. அன்றும் சரி இன்றும் சரி வீண்பிடிவாதங்களால் மக்கள் தான் அழிந்திருக்கிறார்கள்'' என்றான் கனகன்.

''உன்நிலையும் என் நிலையும் வேறு வேறு கனகா. நான் ஓர் இனத்தின் தலைவன். எதிரியிடம் சரணடைவதென்பது எப்பேர்பட்ட அவமானம் என்று எனக்குத்தான் தெரியும்''

''உண்மைதான். உங்களைச் சரணடையும்படி யாரும் கட்டாயப்படுத்தவில்லை. போரிட்டு கௌரவமாகத் தோற்றிருக்கலாம். போரில் நீங்களும் நானும் வீரர்களும் மாண்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் அது ஒருகாவியமாக அமைந்திருக்கும். நீங்கள் செய்தது சதி. போரல்ல. ராவணன் கூட போரிட்டுத் தான் மாண்டான். போரால் தான் எல்லோரும் மாண்டார்கள். லங்காபுரியும் எரிந்தது''

''உனக்குச் சாதகமானால் நீ மட்டும் இப்போது புராணம் பேசலாம் போலிருக்கிறது. நடந்ததை விடு கனகா. நடக்கப் போவதைப் பார். விஜயபாகு எங்கே?''

''நீங்கள் சொன்ன அதே திடலில் காலையில் உங்களை வரச்சொல்லியிருக்கிறான் விஜயபாகு. நீங்கள் குறித்த அதே நேரம் தான். சூழ்நிலைதான் வேறு''

மறுநாள் திடலில் விஜயனும் அவனது வீரர்களும் ஒருபுறம் குவிந்திருக்க மறுபுறத்தில் வேடகம்பீரனும் எஞ்சிய அவனது இன மக்களும் கூடியிருந்தார்கள். திடலின் நடுவே கழுமரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அருகாமையில் விஜயன் வந்து நின்றதும் அவனுக்கு எதிராக வேடகம்பீரனும் கனகனும் வந்து நின்றார்கள்.

''விஜயபாகு, நீங்கள் செய்தது போரல்ல. கோரக் கொலை. இதை உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான் வேடகம்பீரன்.

''வீரர்களிடம் போர் புரிவதுதான் என் வழக்கம். சதிகாரர்களிடமும் வஞ்சகர்களிடமும் அல்ல. நடந்ததெல்லாம் உன் சதியின் விளைவேயன்றி வேறல்ல. இதற்கு நான் பொறுப்புமல்ல'' என்று சொன்ன விஜயன் நவவீரர்களை அழைத்து ''இந்தச் சதிகாரனைக் கழுவில் ஏற்றுங்கள்'' என்றான்.

அப்போது குறுக்கிட்ட கனகன் ''ஐயா, நீங்கள் அரசகுமாரர் இவர் எங்கள் தலைவர். அவரைக் கழுவில் ஏற்றுவது தங்களுக்கு உகந்த காரியமல்ல'' என்றான்.

''நான் கழுவில் ஏற்ற நினைப்பது மகா வீரனான ஒரு தலைவனை அல்ல. தனது மக்களை இரக்கமின்றி காவு கொடுத்துவிட்டு நிற்கும் சுயநலம் பிடித்த வஞ்சகனைத்தான் அவனுக்கு இரக்கம் காட்டுவது எந்தவிதத்திலும் நியாயமல்ல மிகவும் சரியான விஷயம்தான்'' என்றான் விஜயன்.

''ஐயா, அவர் தவறாக நடந்து கொண்டது உண்மைதான் ஆனால் அது சூழ்நிலை காரணமாக உண்டாகிவிட்ட ஒரு தவறே தவிர உண்மையில் அவர் மகாவீரர். காட்டிலே திரிந்த எமது மக்களை திரட்ட அவர் பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. வேடர்குலம் தழைக்கவும் உயரவும் அவர் மிகவும் உழைத்தவர்'

''இருக்கலாம். நான் கூட அவன் சரணடைந்தால் என் ஆதிக்கத்தின் கீழ் எனக்குக் கீழ்படிந்து கல்யாணியில் தொடர்ந்து ஆட்சி புரியவே அனுமதிக்கும் எண்ணத்தில் இருந்தேன். உங்கள் தலைவன் அதைக் கெடுத்துக் கொண்டால் நான் என்ன செய்யமுடியும்?'' என்று கேட்ட விஜயன் ''வேடர் குலத்தவர்கள் வேறு எங்கெல்லாம் இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''அதிகமாக எங்கும் இல்லை. கிழக்கே ராவணன் கோட்டையிலும் தெற்கே தேவேந்திரத்திலும் சிலர் இருக்கிறார்கள். கொஞ்சம் பேர் காட்டில் இருக்கலாம்''

''நல்லது. உங்கள் தலைவனை இங்கே உயிரோடு விட்டுச் செல்ல நான் தயாராக இல்லை. அவனைக் கைது செய்து என்னோடு அழைத்துச் செல்கிறேன். என்னோடு வந்த வீரர்கள் இங்கே இருப்பார்கள். அவர்கள் கண்காணிப்பில் நீ இங்கே எனக்கு கப்பம் கட்டும் பிரதிநிதியாய் இருக்கச் சம்மதித்தால் என் நடவடிக்கையை இத்துடன் விட்டு விடுகிறேன். இல்லை யென்றால் உங்கள் அனைவரையும் மட்டுமின்றி ராவணன் கோட்டையிலும் தேவேந்திரத்திலும் உள்ள அனைவரையும் பூண்டோடு அழிப்பேன். இது இனி உங்கள் நாடல்ல. விஜயபாகுவின் ஆதிக்கத்திற்கு வந்துவிட்ட நாக தீபத்தின் பகுதி''

விஜயனின் பேச்சும் நிபந்தனைகளும் வேட கம்பீரனுக்கு கசந்தன.

எனவே விஜயனைப் பார்த்து ''ஐயா வங்க நாட்டு அரசகுமாரரே, என் உபதலைவன் கனகன் என்மீதிருந்த அன்பு காரணமாக உங்களிடம் உயிர்ப்பிச்சை கேட்டு விட்டான். ஆனால் அதை ஏற்க நான் தயாராக இல்லை. அது வேடர் இனத்திற்கு உகந்ததும் அல்ல. எனவே என்னைக் கழுவேற்றி விடுங்கள்'' என்றான்.

''வேடர் குலத்தலைவனே, உன் நாட்டை நான் வென்று விட்டேன். நீ தோற்றுவிட்டாய். ஆகவே உன் விருப்பு வெறுப்புகளுக்கு இங்கே இடமில்லை. என் கட்டளைப்படித் தான் சகலமும் நடக்கும்'' என்று கூறிய விஜயன் மேற்கொண்டு எதையும் பேசாமல் கல்யாணியில் கனகன் தனது சிற்றரசனாக ஆளும் உரிமையைத் தந்தான். தன்னுடன் வந்த காளிசேனனின் வீரர்களை அங்கேயே கண்காணிப்பாளர்களாக நியமித்தான். கல்யாணி நகரை விரைவில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தான்.

இந்தமுறை தாமிரபன்னிக்கு காட்டு வழியில் பயணம் செய்யவில்லை. தனஞ்ஜெயனையும் அவனோடிருந்த தோழர்களையும் கல்யாணித் துறைமுகத்தை காப்பதற்காகத் தீவுக்கப்பலுடன் நிறுத்தினான். வேட கம்பீரனுக்கு சொந்தமான இரண்டு சிறிய மரக்கலங்களில் வேடகம்பீரனை கைதியாக்கி நவவீரர்களுடன் மகாதிட்டைக்குப் பயணமானான். குடாக்கடலில் சிறிய அந்த இரண்டு மரக்கலங்களும் பயணம் செய்து மகாதிட்டையை அடைந்தன. அங்கிருந்து அருகாமையில் இருந்த தாமிரபன்னிக்கு வந்து சேர்ந்தான் விஜயன்.

அங்கே காளிசேனனும், குவேணியும், உதயகுமரனும் இயக்கர்களுமாகச் சேர்ந்து விஜயனை வரவேற்று விழா எடுத்தார்கள்.

''உங்கள் வெற்றி சாதனை வெற்றி. இயக்கர்கள் கனவிலும் காணாத மகத்தான வெற்றி. இதற்காக இயக்கர்கள் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்றான் காளிசேனன்.

வேடகம்பீரனை முன்னே நிறுத்திய விஜயன் ''இந்த வேடர்குலத் தலைவனை இப்போதைக்கு இங்கே சிறை வைக்கலாம்'' என்றான்.

''எதற்காகச் சிறை செய்யவேண்டும். இவனால் நமக்கென்ன உபயோகம்? சிரச்சேதம் செய்துவிட்டால் என்ன?'' என்று கேட்டான் உதயகுமரன்.

''இப்போதைக்கு அந்த அறையில் அடைக்கிறேன். அவனை உயிரோடு வைப்பதும் உயிரை எடுப்பதும் உங்கள் விருப்பம்'' என்றான் விஜயன்.

★★★

அன்றிரவு அவனைச் சந்திக்க வந்த குவேணி சர்வாலங்கார பூஷிதையாய் இருந்தாள்.

அதைக் கண்ட விஜயன் ''இதென்ன கோலம்? இதுவரை இப்படி உன்னைப் பார்த்ததில்லையே?'' என்று கேட்டான்.

''வெற்றி வீரரான உங்களை வரவேற்க நான் பூண்ட பிரத்தியேக கோலம் இது? நன்றாக இருக்கிறதா?'' என்று கேட்டாள் குவேணி.

''கொட்டும் அருவியும், குளிர்ந்த நிலவும், வீசும் தென்றலும், பேசும் மலர்களும், பாடும் குயிலும், ஆடும் மயிலும் அழகில்லை என்றால் வேறு எது அழகு? மலையும் அழகு! அலையும் அழகு! மரங்களும் அழகு! மான்களும் அழகு! இவற்றுக்கு முன் பெண் பேரழகு. அதிலும் நீ அழகுக்கு அழகு செய்யும் அழகு. இது உண்மை என்பதை நானென்ன நான்கு திசையும் சொல்லும். நான்கு திசைகளில் பறக்கும் பறவைகளும் சொல்லும்'' என்றான் விஜயன்.

''அப்பப்பா! போர்க் கவிதை பாடிய கையோடு புலவராக மாறிவிட்டீர்களா? வார்த்தைகள் அருவியாய் வந்து கொட்டுகின்றன?'' என்றாள் குவேணி.

அந்த நிலையில் ஒற்றறியச் சென்றிருந்த நவவீரர்களில் ஒருவனான அபயன் வந்து கடந்த சிலமாதங்களாக உதயணனையும் நரசிம்மனையும் கண்காணித்து உளவறிந்த

விவரங்களைச் சொன்னான். அவற்றை விஜயன் கேட்டுக் கொண்டானே தவிர எதுவும் சொல்லவில்லை.

அதோடு உதயணன் மற்றும் நரசிம்மன் ஆகியோருடன் இருந்த தோழர்கள் அவர்களை விட்டு விட்டு தன்னுடன் வந்து விட்டதாகச் சொன்னான் அபயன்.

அத்தோழர்களை அழைத்து பார்வையிட்ட விஜயன் ''நீங்களெல்லாம் உபதலைவன் நரசிம்மனின் தலைமையின் கீழ் என்னால் நியமிக்கப்பட்டவர்கள் என்று நினைக்கிறேன் சரிதானா?'' என்று கேட்டான்.

''ஆமாம் தலைவரே''

''நீங்களெல்லாம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லையா?''

''ஆமாம்''

''நாகதீபத்தில் உள்ளவர்கள் தமிழர் வம்சம் என்பது உங்களுக்குத் தெரியுமா?''

''முதலில் தெரியாது. உதயணனும் நரசிம்மனும் ஒன்று சேர்ந்து உங்களுக்கெதிராகத் தலைப்பட்டபோது அவர்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரியும். தமிழர்களாக இருக்கும் நீங்கள் நாகதீபத்தில் இருக்கும் தமிழர்கள் பக்கம் சேராமல் விஜயனோடு சேர்ந்து உங்கள் இனத்திற்கு எதிராக ஏன் செயல்பட வேண்டும் என்று எங்களுக்கு இனவெறியைத் தூண்டினார்கள். நாங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் களானாலும் பிழைப்புக்காக வங்கதேசத்திற்கு வந்தபோது எங்களை ஆதரித்தது விஜயன்தான். ஆகவே அவருக்காகப் போராடுவது தான் நியாயமானது என்றோம். செஞ்சோற்றுக் கடன் எங்களுக்கு அதுதான் என்றோம். கடன் என்றும் கடமை என்றும் சொல்லி அழியாதீர்கள், நாகதீபத்தை விஜயனால் ஒரு போதும் வெற்றிகொள்ள முடியாது என்று சொல்லி தங்கள் பக்கம் சேரும்படிச் சொல்லி பலவிதமான ஆசைகாட்டினார்கள். சேர்ந்தோம். இயக்கர் குழுக்களைச் சேர்ந்த வேகன், விவேகன் ஆகியோரை அணுகி உங்களைக் காட்டிக் கொடுப்பதற்கு ஆதரவளிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் எடுத்த

எந்த முயற்சியும் பலன் தரவில்லை. ஆகவே தான் அவர்களை விட்டு விட்டு உங்களிடமே வந்தோம்''

''ஆதாயம் இருக்கும் இடம் தேடிச் செல்வதுதான் நண்பர்களின் பண்பா? எத்தனையோ சிக்கல்களைத் தாண்டி இங்கே வந்து சேர்ந்தது நம் லட்சியத்தை நிறைவேற்றத்தான். புத்தர் பிரானின் நிழலில் ஒதுங்கும்போது இன வித்தியாசமும் மொழி வித்தியாசமும் எப்படி வரும்? அடிக்கடி நீங்கள் இப்படி மனத்தை அலைபாயவிடுவது நல்லதல்ல. என் நண்பர்கள் என்பதால் உங்களை அனுமதிக்கிறேன். உங்கள் சதிவேலை இங்கே எந்த வடிவில் உருவானாலும் சரி உங்களில் ஒருவரைக் கூட விடமாட்டேன். நினைவிருக்கட்டும்''

''எங்களை நம்புங்கள் தலைவரே. இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் நாங்கள் நிறம் மாற மாட்டோம்''

விஜயன் அவர்களிடம் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

மறுநாள் காளிசேனன் திடுதிப்பென்று விஜயனிடம் வந்து ''நீங்கள் இப்படிச் செய்வீர்கள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. இது துரோகம்''என்றான்.

விஜயன் ''என்ன விஷயம்?'' என்று சாதாரணமாகவே கேட்டான்.

''கல்யாணி நகரை வெற்றி கொண்டபின் வேடர்களின் நாடு உங்கள் ஆதிக்கத்திற்கு வந்து விட்டதாகவும் உங்களுக்கு வேடர்கள் கப்பம் கட்ட வேண்டும் என்றும் கட்டளை யிட்டீர்களாமே? இது துரோகம் இல்லையா?''

''உங்கள் பெயரைச் சொல்லி வெற்றியை நான் பறை சாற்றியிருந்தால் கல்யாணியில் ஒருவரும் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள். நாக தீபத்திற்குப் புதியவனான நான் அவ்வாறு அறிவித்தால் அதற்கு அவர்கள் கட்டுப்படுவார்கள். அதோடு அறிவிப்பால் என்ன வந்து விடப்போகிறது? நான் உங்கள் பிரதிநிதி தானே? அந்த வகையில் நான் நடந்து கொண்டது எப்படித் தவறாக முடியும்? நானென்ன கல்யாணியைப் பெயர்த்து எடுத்துக் கொண்டா போய்விட்டேன். மேலும் உங்கள் வீரர்களைத்தானே அங்கே கண்காணிப்பாளர்களாக

நியமித்துவிட்டு வந்தேன்?'' இதில் துரோகம் எங்கிருந்து வந்தது?''

'உண்மைதான் விஜயபாகு. அந்த அயோக்கியன் வேடர்குலத் தலைவன் ஏதேதோ சொல்லி என் மனத்தைக் கலைத்து விட்டான்''

''நீங்கள் மேகமாய் இருந்தால் காற்று கலைந்துவிடும். வானமாய் இருங்கள். இடிகூட எதுவும் செய்யாது''

அந்த அளவில் திருப்தியடைந்து அகன்றாள் காளிசேனன்.

அன்றிரவு வருவதாகச் சொன்ன குவேணி மறுநாள் இரவுதான் வந்தாள்.

விஜயனோடு அவள் பேசிக் கொண்டிருந்தபோது காளிசேனனும் உதயகுமரனும் அங்கே வந்தார்கள்.

அவர்கள் குவேணியிடம் பேசிய வார்த்தைகள் விஜயனை வியப்பில் ஆழ்த்தின.

◈◈◈

### அத்தியாயம் எண்பத்திரண்டு

## வேடனும் மானும்

சர்வாலங்காரத் தேவதையாய் விஜயனைப் பாராட்ட வந்த குவேணி சில வார்த்தைகளே பேசிய நிலையில் காளிசேனனால் அழைக்கப்படவே மறுநாள் இரவு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். ஆனால் அதற்கு அடுத்தநாள் இரவில் தான் வந்தாள். தற்போது அவளது கோலம் நேர்மாறாக இருந்தது. அலங்காரங்களோ ஒப்பனைகளோ இல்லாமல் இயக்கர் குல பெண்ணாகச் சர்வசாதாரணமாக - மிகவும் எளிமையாக ஆனால் புதியதாய் முளைவிட்டச் செடியைப்போல வந்திருந்தாள். இயற்கையான அழகிற்கு செயற்கையான அலங்காரங்கள் தேவையில்லை என்பதற்கு சாட்சி சொல்வது போல வந்திருந்த அவளை மேலிருந்து கீழ்வரை ஒரு பார்வை பார்த்த விஜயன் ''அன்றைக்கு கார்மேகம் போல் கனமாக வந்தாய். இன்றோ

பூமேகம் போல் லேசாக வந்திருக்கிறாய். இரண்டிலுமே நீ நிரந்தரமாக இருக்கிறாய் குவேணி'' என்றான்.

''ரசிப்பதற்கு நான்கு பேர் இருந்தால் நார் கூட மாலை போலத் தோன்றும்'' என்றாள் குவேணி.

''நான் உண்மையைச் சொல்லும்போது அதை ஏன் மறுக்கிறாய்? உனக்கு உண்மை பிடிக்காதா?'' என்று கேட்டான் விஜயன்.

''பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் உண்மை உண்மைதானே?'' கேட்டாள் குவேணி.

''பிறகெதற்கு பாசாங்கு?'' என்று கேட்ட விஜயன் ''நாளைக்கு ஒரு சிறப்பு இருக்கிறது. அது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''என்ன அது?''

''என்ன இப்படிக் கேட்கிறாய்? உனக்கு தெரிந்திருக்க வேண்டும்''

''தெரியவில்லையே''

''உனக்காகவே நடப்பதுகூட உனக்கு நினைவில்லையா?''

''எதைச் சொல்கிறீர்கள்?''

''இங்கே நகரம் உருவாவதே உனக்குத்தானே? உன் விருப்பத்தை நிறைவேற்றத்தானே? அதை எப்படி மறந்தாய்? இதை உருவாக்கத் துவங்கி இன்றோடு ஒரு வருடம் முடிகிறது. நாளை இரண்டாவது வருடம் துவங்கப் போகிறது''

''அப்படியா?''

''நீ எங்கிருக்கிறாய் குவேணி? உன் பேச்சில் உற்சாகமே இல்லையே ஏன்? உனக்கு மகிழ்ச்சியாக இல்லையா?''

விஜயன் இவ்வாறு கேட்டபோது காளிசேனன் வீரன் ஒருவன் வந்து உதயகுமரன் அழைப்பதாகச் சொன்னான்.

''இப்போது வரமுடியாது என்று சொல் போ'' என்றாள் குவேணி.

''மிகவும் அவசரமாம்'' என்றான் வீரன்.

''எத்தனை அவசரமானாலும் வரமுடியாது. போய் வா'' என்றாள் குவேணி.

வீரன் போய்விட்டான்.

''என்ன ஆயிற்று குவேணி? எதற்காக உன்னை அழைக்கிறார்கள்? அன்று கூட இப்படித்தானே அழைத்தார்கள்! எதற்கு? அதுவும் என்னோடு பேசும்போது ஏன் தொந்தரவு செய்கிறார்கள்? அப்படியென்ன அவசரம்?'' என்று கேட்டான் விஜயன்.

''அவர்களுக்கு வேறு வேலை இல்லை'' என்று அலுத்துக் கொண்டாள் குவேணி.

அப்போது காளிசேனனும் உதயகுமரனும் அங்கே வந்தார்கள்.

''குவேணி, இதென்ன கூப்பிட்டால் வரமுடியாது என்று கூறி விட்டாயாமே! இது அநாகரீகமல்லவா?'' என்று கேட்டான் காளிசேனன்.

''இவரோடு பேசும்போது வந்து அழைப்பது அநாகரீகமல்லவா?'' என்று கேட்டாள் குவேணி.

''குவேணி. நீ பலவிஷயங்களை மறந்துவிட்டுப் பேசுகிறாய்? இவரோடு பேசுவதற்குவேறு நேரமே கிடைக்காதா?'' என்று கேட்ட காளிசேனன் திடீரென தமிழில் அவளிடம் சில வார்த்தைகளைப் பேசிவிட்டு அவளை அழைத்துக் கொண்டு போனான்.

தனக்குத் தமிழ் தெரியாது என்ற நினைப்பில் காளிசேனன் பேசிய வார்த்தைகள் விஜயனுக்கு வியப்பாக இருந்தன. அதிர்ச்சியாகவும் இருந்தன. உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

இதேசமயம் குவேணிக்கும் காளிசேனனுக்கும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

''பெண்புத்தி பின்புத்தி என்பதை நீ காட்டி விட்டாய். எங்களை ஏமாற்றிவிட்டாய்'' என்று இரைந்தான் காளிசேனன்.

''ஏமாற்றியதாக யார் சொன்னது?'' கேட்டாள் குவேணி.

''உன் சகோதரன் உதயகுமரன்''

''எதைப் பார்த்துவிட்டுச் சொல்கிறான் அவன்?''

''எல்லாவற்றையும் கண்ணால் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றில்லை. சில விஷயங்களை குறிப்பால் உணரமுடியும்'' என்றான் உதயகுமரன்.

''உனக்கு அதில் ரொம்ப அனுபவம் போலிருக்கிறது' என்றாள் குவேணி.

''உன் அளவிற்கு இல்லை'' என்றான் உதயகுமரன்.

அப்போது காளிசேனன் குறுக்கிட்டு ''நிறுத்துங்கள் உங்கள் சண்டையை. குவேணி, நான் கேட்பதற்கு பதில் சொல். விஜயபாகுவை கழுவில் ஏற்றவிடாமல் செய்த நீ அதற்கு பல காரணங்களைச் சொன்னாய். உண்மையா?'' என்று கேட்டான்.

''ஆமாம்''

''பெரிய திட்டம் போட்டிருப்பதாகச் சொன்னாய்''

''ஆமாம்''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் அவனைக் கொன்று விடலாம் என்றோம். நீயோ மறுத்தாய்''

''ஆமாம்''

''உன் வழியில் அவனை கவனித்துக் கொள்வதாகச் சொன்னாய்''

''ஆமாம்''

''அவனைக் காதலிப்பது போல் நடிப்பதாகச் சொன்னாய்''

''ஆமாம்''

''இப்போது நடித்துக் கொண்டுதான் இருக்கிறாயா?''

''ஆமாம்''

''இல்லை. இல்லவே இல்லை. அவனை உன் வலையில் வீழ்த்துவதாகச் சொன்ன நீ அவன் வலையில் வீழ்ந்து விட்டாய். உண்மையாகவே அவனைக் காதலிக்கத் தொடங்கி விட்டாய்.''

''அது உங்கள் கற்பனை''

''குவேணி, உதயகுமரன் கூறியபோது கூட நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. நானே உண்மையை அறிந்து கொண்டேன்''

''என்னையே வேவு பார்த்தீர்களா? மகளை வேவு பார்ப்பது தான் தந்தையின் நாகரீகமா?''

''இதில் அநாகரீகம் எங்கே வந்தது? அரசியலில் தந்தை மகள் என்றெல்லாம் பார்க்க முடியாது. எதையும் நம்பி அரசியல் நடத்த முடியாது'' என்று சொன்ன காளிசேனன் ''என்னை நம்பச் செய்யும் உத்தேசம் உனக்கு இருக்குமானால் -இயக்கர்குல திலமாக நீ திகழ்வது உண்மையானால் சற்றுமுன் நான் சொன்னேனே அதைச் செய்துவிட்டு வா'' என்றான்.

''தந்தையே, ஏன் அவசரப்படுகிறீர்கள்? வெண்ணைதான் திரண்டு வருகிறதே?''

''திரண்ட வெண்ணை போதும். அதிலிருந்து நெய்யைப் பெற எனக்குத் தெரியும். சொன்னதைச் செய் போ'' என்று கூறிவிட்டு அகன்றான் காளிசேனன். உதயகுமரனும் ஒரு மாதிரியாக அவளைப் பார்த்துவிட்டு அகன்றான்.

குவேணியின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. ஏதோ வெறுமையில் நிற்பது போன்ற உணர்வு அவளுக்கு உண்டாகியிருந்தது. விஜயனிடம் மறுபடியும் செல்வதற்கு அவள் விரும்பவில்லை. எதை எதையோ எண்ணித் தவித்தாள். தன் இருப்பிடத்திற்குச் சென்று உணவை உண்டுவிட்டுப் படுத்தாள். தன்னையறியாமலேயே உறங்கிப் போனாள்.

உறங்கி விழித்தபோது இரவு நேரம் ஆரம்பமாகியிருந்தது முகத்தைக் கழுவி ஒப்பனை செய்துகொண்டு அவளுக்குட பழக்கமான காட்டுப் பகுதிக்குச் சென்றாள். அங்கே இருந்; மூங்கில் குடிலில் அவளது வீரர்கள் பந்தத்தை ஏற்றி வைத்தபட நின்றிருந்தார்கள். அங்கு வந்த குவேணி வீரர்களை போகும்படிக் கூறிவிட்டு எதையோ நினைத்துக் கொண்டவளா ... ...சிக்காள்.

''காற்றில் வரும் கீதமே - என்
கண்ணனை அறிவாயா'' *

என்று ஆரம்பித்து தன்னையே மறந்தவளாய் பாடினாள். பாட்டு சோக கீதமாக ஒலித்ததைக்கூட அவளால் அறிய முடியவில்லை. எதையோ இழந்தவளைப்போல அவள் பாடி முடித்ததும் ''மிகவும் அருமையான இசை. ஆனால் இதை நீ ஆனந்தமாகப் பாடியிருக்கலாம்'' என்று குரலொன்று கேட்கவே விஜயன் வந்து விட்டான் என்று துள்ளி எழுந்த அவள் மிரண்டு போய் நின்றாள். ஏனென்றால் குரல் கொடுத்தவன் விஜயனாக இல்லை.

''நீங்களா? இங்கு எதற்கு வந்தீர்கள்?'' என்று கேட்டாள் குவேணி.

''நான் வரவில்லை குவேணி. உன் இசை என்னை இங்கே அழைத்து வந்து விட்டது'' என்றான் வேடகம்பீரன்.

அவனது வரவு அறவே பிடிக்காததால் ''உங்களை அழைப்பதற்காக நானிங்கு பாடவில்லை'' என்றாள் குவேணி வெறுப்பான குரலில்.

''வேறு யாரை அழைக்கப் பாடினாய்? விஜயபாகுவையா?'' இடக்காகக் கேட்டான் வேடகம்பீரன்.

அவனது பேச்சு அதிகப்பிரசங்கித்தனமாக இருந்ததால் ''தேவையில்லாத விஷயங்களைப் பேச வேண்டாம்'' என்றாள்.

''அப்படியானால் தேவையான விஷயங்களைப் பேசுவோம்''

''அப்படிப் பேசுவதற்கு எனக்கும் உங்களுக்கும் எந்த விஷயமும் இல்லை. அதற்கு இது நேரமும் இல்லை''

''நேரம் சரியில்லை என்று வேண்டுமானால் சொல். விஷயம் எதுவுமில்லை என்று சொல்லாதே. உனக்குத் தெரியுமோ தெரியாதோ - நானும் உன் தந்தையும் ஒன்றாக இணைந்து விட்டோம்''

''அதைப்பற்றி எனக்கென்ன?''

---

* இப்பாடலை இயற்றியவருக்கு நன்றி

''என்ன இப்படிச் சொல்லிவிட்டாய்? நீ காளிசேனனின் மகள். உனக்கு இந்த விஷயம் முக்கியமானதல்லவா?''

''என் தந்தையின் விவஸ்தையற்ற விஷயமெல்லாம் எனக்கு முக்கியமல்ல''

''நானும் உன் தந்தையும் இணைந்தது உனக்குப் பிடிக்கவில்லையா குவேணி?''

''ஏற்கனவே விவஸ்தையற்றது என்று சொல்லிவிட்டேன்''

''அதெப்படி சொல்கிறாய்? நாம் இருவரும் ஒரே இனம் தானே? பிரிந்திருந்த இனம் ஒன்றாக இணைவது விவேகமானது தானே?''

''எப்போது ஏற்பட்டது இந்த விவேகம்? விஜயபாகுவிடம் தோற்று சிறைபட்டதற்குப் பின்தானே? இத்தனை காலமாக எங்கிருந்தீர்கள்? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''வெளிநாட்டிலிருந்து ஓர் எதிரி வரும்போது இங்கே இருப்பவர் எல்லோருக்கும் பொது எதிரியாகிறான். அவனை முறியடிக்க ஒரே இனத்தவர் ஒரே அணியில் இணைவதுதான் விவேகம்''

''விஜயபாகு எதிரி என்று உங்களுக்கு யார் சொன்னது? அவர் எங்களுக்கு உதவுகிறார். உதவுவதற்கு அவரை அழைத்ததே நான் தான்''

''குவேணி நீ பெண். நீ ஏமாறலாம். ஆனால் நான் எளிதில் ஏமாறமாட்டேன். வெளிநாட்டவனாவது நமக்கு உதவுவதாவது! இந்தக் கதையை வேறு யாரிடமாவது சொல். உனக்கு உதவ வந்தவன் எனக்கு எப்படி எதிரியானான்?''

''நேற்று வரை நீங்களே எங்கள் எதிரிதானே? எங்களுக்காக உங்களோடு போரிட்டவர் விஜயபாகு''

''குவேணி, நீ பழைய கதைகளையே பேசி ஏமாற்றத்தை மறைக்கப் பார்க்கிறாய். நான் சொல்வதோ புதுக்கதை. நடக்கப் போகிற கதை. இன்னொரு விஷயத்தையும் கேள். உன்னை என் மனைவியாக்க உன் தந்தை சம்மதித்துவிட்டார்''

இதைக்கேட்டு பெரிதும் அதிர்ச்சியடைந்தாள் குவேணி. இதை அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தந்தை எதற்காக இந்த விபரீதத்தில் இறங்குகிறார் என்று தனக்குத்தானே கேட்டு கொண்டு விடை கிடைக்கப் பெறாமல் தவித்த அவள் அவனிடம் எதுவும் பேச விரும்பாதவளாய் 'சரி, சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி விட்டீர்கள் அல்லவா? நீங்கள் போகலாம்'' என்றாள்.

''உன் பேச்சில் சுவாரஸ்யமே இல்லையே? இதில் உனக்கு மகிழ்ச்சியில்லையா?'' என்று கேட்டான் வேடகம்பீரன்.

''என் மகிழ்ச்சியைப் பற்றிய கவலை உங்களுக்கு எதற்கு? போய் வாருங்கள்''

''என்னை விரட்டாதே குவேணி. நான் பிடிவாதக்காரன்''

''அதனால்?''

''நீ விரட்டினால் நான் போகமாட்டேன்''

''போக வேண்டாம். இங்கேயே இருங்கள். நான் போகிறேன்''

குவேணி இப்படிப் பேசிவிட்டு புறப்பட எத்தனித்ததும் திடீரென அவளது கைகளைப் பற்றிய வேடகம்பீரன் ''இரு குவேணி. நான் சொல்வதைக் கேள்'' என்றான்.

அவள் கைகளை உதறமுயன்றாள். அவனது பிடி இரும்புப் பிடியாக இருக்கவே உதறமுடியவில்லை. ''கையை விடுங்கள்'' என்றாள்.

அவனோ கையை விடாமல் ''குவேணி, நாம் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள். இப்போது இருவரும் தனிமையில் இருக்கிறோம். இந்தத் தனிமையை இன்பமாகக் கழித்தால் என்ன?'' என்று கேட்டான்.

''நன்றாகத்தான் இருக்கிறது உங்கள் பேச்சு. வேடர் குலத் தலைவரே! பண்போடு நடந்துகொள்ளுங்கள். எல்லை மீற வேண்டாம். கையை விடுங்கள்'' என்றாள்.

பெண்களைப் பற்றிவிட்டால் அவர்களை லேசில் விட்டு விடுவது வேடகம்பீரனுக்கு பழக்கமில்லை. எனவே பிடியை

விடாமல் அவளை அப்படியே இழுத்து தன் மார்போடு இறுகத் தழுவிக் கொண்டான். அவனது அத்து மீறலைச் சகித்துக் கொள்ள அவளால் முடியவில்லை. அதேசமயம் அவன் பிடியிலிருந்து விடுபடவும் அவளால் இயலவில்லை. எனவே திமிறிப் பார்த்து எதுவும் செய்ய முடியாதவளாய் ''வேடர்குலத் தலைவரே! முதலில் என்னைவிடுங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்'' என்றாள்.

அவள் ஏதோ சொல்ல விரும்புகிறாள் என்பதைக் கண்ட வேடகம்பீரன் அவளை விடுவித்துவிட்டு ''சொல்'' என்றான்.

''நீங்கள் என்னை மணப்பதுதான் விதியென்றால் அதை என்னால் தடுக்க முடியாது. உங்களைவிட்டு ஓடவும் முடியாது. அதேசமயம் மனவேதனையில் இருக்கும் என்னிடம் ஆனந்தத்தை நிர்பந்தித்தால் அது கிடைக்குமா? உணர்வுகள் இருவருக்கும் இருந்து அவற்றைப் பகிர்ந்து கொள்வதுதான் உண்மையான ஆனந்தம். எனவே இப்போது என்னைப் பலவந்தப்படுத்த முயலாதீர்கள். நாளைக்கு இதே நேரத்தில் இதே இடத்தில் வருகிறேன். நீங்கள் உங்கள் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளலாம்'' என்றாள்.

சிறிதுநேரம் யோசித்த வேடகம்பீரன் ''சரி குவேணி. என்னிடம் வருகிற பெண்களிடம் நான் எதைப்பற்றியும் கவலைப்பட்டதில்லை. ஆனால் உன் விஷயத்தில் கவலைப்படுகிறேன். அதற்கு காரணம் நீ என் மனைவியாகப் போகிறவள் என்பதுதான். இன்றுபோய் நாளை வா. இதே நேரத்தில் இங்கேயே வா. வேதனையுடன் வராதே விருப்பமுடன் வா. வராவிட்டால் நான் வருவேன். நீ எங்கிருந்தாலும் வருவேன். உன்னைக் கட்டாயப்படுத்தி இச்சிப்பேன். நினைவில் வைத்துக்கொள்'' என்று கூறிவிட்டு அகன்றான்.

குவேணிக்கு அவன் சென்றபின்புதான் உயிர் வந்தது.

இனி சிறிதும் தாமதிக்கக் கூடாது என்று கருதியவளாய் குடிலுக்குள் சென்று குறுவாள் ஒன்றை எடுத்துக்கொண்டு விஜயனின் இருப்பிடத்திற்குச் சென்றாள்.

அங்கே அதுவரை அவள் கண்டிராத கெடுபிடி உண்டாகியிருந்தது.

புதிதாக உருவாகிவரும் நகர் பகுதிக்கு வந்தவர்கள் நன்றாகச் சோதிக்கப்பட்ட பிறகு உள்ள வர அனுமதிக்கப்பட்டார்கள்.

த்ன்னை சோதித்து குறுவாளை அகற்றிவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தபடிச் சென்ற அவளை யாரும் சோதிக்கவில்லை.

''என்னைச் சோதிக்கவில்லையா?'' என்று கேட்டாள் குவேணி.

''உங்களைச் சோதிப்பது தலைவரை சோதிப்பதுபோல். செல்லுங்கள். தலைவர் மாளிகையில் தான் இருக்கிறார்''

''அவர் உறங்கவில்லையா?''

''அவர் என்று உறங்கினார் இன்று உறங்குவதற்கு?''

குவேணி வேறெதுவும் பேசாமல் மாளிகைக்குச் சென்றாள்.

அங்கே நிலாமாடத்தில் இருந்த விஜயன் குறுவாள் ஒன்றை கல்லில் தேய்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன செய்கிறீர்கள்?'' கேட்டாள் குவேணி.

''குறுவாளுக்கு கூர்ப்பாய்ச்சிக் கொண்டிருக்கிறேன்'' என்றான் விஜயன்.

''எதற்கு?''

''குத்துவதற்குத் தான்''

''யாரை?''

''எதிரியை''

''எதிரி யார்?''

''தெரியவில்லை'' என்றான் விஜயன்.

## அத்தியாயம் எண்பத்து மூன்று

# அன்பின் அலைகள்

''எதிரி யாரென்றே தெரியாதா?'' என்று கேட்டாள் குவேணி சந்தேகத்துடன்.

''என்னை நேரடியாகத் தாக்குபவனைக்கூட நான் எதிரி என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் அவன் எனக்குத் தெரிந்து தாக்குகிறான். ஆகவே என்னை முதுகில் குத்த முயல்பவனையே நான் எதிரியாக நினைக்கிறேன். அவன் எங்கே இருப்பான் எப்போது வருவான் எந்த சமயத்தில் தாக்குவான் என்பது தெரியாதல்லவா?'' என்று சொன்ன விஜயன் குறுவாளைத் தீட்டுவதை நிறுத்திவிட்டு ''உட்கார் குவேணி'' என்றான்.

அவள் உட்கார்ந்தாள். என்ன காரணத்தாலோ அவளுக்கு வியர்த்தது.

விஜயனோ அதை கவனிக்காமல் ''உன் தந்தையின் போக்கு விபரீதமாக இருக்கிறது. சிறை செய்து கொண்டு வந்த வேடகம்பீரனை அன்றைக்குச் சிரச்சேதம் செய்யவேண்டும் என்றார். இப்போது அவனை விடுவித்திருக்கிறார். வேடகம்பீரன் வஞ்சகத்திற்குப் பேர் போனவன். அடிபட்ட பாம்பு. அவன் ஒருவேளை என்னைக் குத்தினாலும் குத்தலாம். ஆகவேதான் எச்சரிக்கையாக இருக்கிறேன்'' என்றான்.

அவளுக்கு உள்ளுக்குள் அச்சம் உண்டாயிற்று. ''இவன் இயல்பாகப் பேசுகிறானா அல்லது தன்னை ஆழம் பார்க்கிறானா?'' என்றச் சந்தேகமும் உண்டானதால் என்ன பேசுவது என்பது விளங்காமல் விழித்தாள்.

அவனோ வானத்தில் இருந்த நிலவைச் சுட்டிக் காட்டி ''அந்த நிலவைப் பார்த்தாயா குவேணி? அது அழகாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றாள் வேறு மாதிரி பேச முடியாமல்.

''அந்த நிலவு திடீரென வந்து என் முதுகில் குத்திவிட்டால் நான் என்ன செய்ய முடியும் குவேணி?''

விஜயனின் பேச்சு தன்னை ஆழம் பார்க்கிற மாதிரிதான் இருக்கிறது என்று உணர்ந்த அவள் ''நான் வந்ததிலிருந்து ஒரு மாதிரியாகவே பேசுகிறீர்களே ஏன்? அதோடு நிலவு வந்து முதுகில் குத்துமா? இதென்ன அபத்தம்?'' என்று சற்று சுதாரித்துக் கொண்டு கேட்டாள்.

''நிலவை எப்போதும் யாரோடு ஒப்பிடுவார்கள் குவேணி? பெண்ணோடுதானே? நிலவைப் போன்ற பெண் முதுகில் குத்தலாமல்லவா?''

பெரிதும் சங்கடத்துடன் அசைந்தாள் குவேணி.

விஜயன் தொடர்ந்து பேசினான்.

''குவேணி, இங்கிருந்து நான் நிர்மாணித்த நகரைப் பார். இன்னும் சில தினங்களில் பணி முடிவடைந்துவிடும். இந்த நகரம் சக்கர வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களும் அதைச்சுற்றிய வீதிகளும் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. நாமிருக்கும் மாளிகை தாமரைப் பூவின் நடுப்பகுதிபோல் நகரின் நடுவில் விசாலமாகவும் உயரமாகவும் கட்டப்பட்டிருக்கிறது. இங்கே நின்றபடி நகர்முழுவதையும் பார்க்க முடியும். எதிரிகள் இந்த நகரை நெருங்கும் முன்பாகவே இங்கிருந்தபடி அறியலாம். இந்த வட்ட வடிவ நகரத்திற்கு நான்கு வாயில்கள் நான்கு திசைகளில் அமைக்கப்பட்டிருந்தாலும் கிழக்கு வாயில் மட்டுமே திறந்திருக்கும். மற்ற மூன்றுவாயில்களை உள்ளேயிருந்தபடி திறந்தால்தான் திறக்கும். அந்த வகையில் மிகவும் கனமான இரும்பினால் கதவுகள் அமைக்கப்பட்டு அவற்றைத் திறக்கும் விசை சுவற்றின் உட்புறம் அமைக்கப்பட்டிருக்கிறது. எதிரி கிழக்கு வாயில் மூலம்தான் நுழையமுடியும். அப்படி நுழைந்தால் ஒருவன்கூட உயிரோடு திரும்ப முடியாது. வட்டடிவமான வீதிகளைப் பார். அவற்றின் அகலம் குறைவு. அந்த வட்டப்பாதையில் எதிரிகள் வரும்போது வட்டவடிவில் இருக்கும் கட்டிடங்களில் இருக்கும் வீரர்கள்

அம்பெறிந்து கொன்று விடுவார்கள். ஏறக்குறைய இந்த நகரம் ஒருபத்ம வியூகம். நமக்கு நகரம். எதிரிக்கு நரகம். இன்னொன்றையும் தெரிந்துகொள். நாமிருக்கும் மாளிகையைச் சுற்றி ஐந்து வட்டங்கள் உள்ளன. முதல் வட்டத்தில் உள்ள கட்டிடங்களில் அமைச்சர்கள், தளபதிகள் ஆகியோர் இருப்பார்கள். அடுத்த இரண்டு வட்டங்களில் மக்கள் வசிப்பார்கள். அதற்கடுத்த இரண்டு வட்டங்களில் படை வீரர்கள் இருப்பார்கள். இதைப்போன்று இரண்டு கிராமங்களும் உருவாகின்றன. நமக்கு வடக்கில் சிற்பி அனுராதன் ஒன்றை உருவாக்குகிறான். மற்றொன்றை தெற்கில் குருநாதர் உபதிஸ்ஸர் கட்டிவருகிறார். அவ்விரண்டு கிராமங்களில் மக்களும் படைவீரர்களும் வசிப்பார்கள். இம்மூன்று அமைப்புகளும் சாம்ராஜ்யம் ஒன்றை உருவாக்குவதற்கான அஸ்திவாரங்கள். நாம் திடமாக ஓரிடத்தில் இருந்து கொண்டுதான் எதிரிகளை வெல்லவேண்டும். ஏற்கனவே வேடர்குலத் தலைவனை வென்று நாகதீபத்தின் தெற்குப் பகுதியை நம் ஆதிக்கத்திற்கு கொண்டு வந்து விட்டேன். நமக்கு வடக்கே இருக்கும் நாகர்கள் நண்பர்களாகி விட்டார்கள். ஏறக்குறைய நாகதீபம் இப்போது நம் கையில் இருக்கிறது. அதாவது உன்கையில் இருக்கிறது. நான் உன் குல தெய்வத்திடம் சத்தியம் செய்து கொடுத்தபடி அஸ்திவாரங்களை உருவாக்கி எதிரிகளை நம் ஆதிக்கத்தில் கொண்டு வந்து விட்டேன். உன்னை உன் விருப்பப்படி ராணியாக அமரச் செய்ய வேண்டியது தான் பாக்கியிருக்கிறது. அதற்கு நாள் குறிக்கச் சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு எல்லாமே இடையூறு இல்லாமல் நடந்ததற்குக் காரணம் உன் தந்தையை பகைத்துக் கொள்ளாமல் வைத்துக் கொண்டது தான் காரணம். இனி அவரது ஆதரவோ நட்போ தேவையில்லை. நீ அரசியாக முடிசூட வேண்டுமானால் அவர் உனக்கு அனுமதியளிக்க வேண்டும். அல்லது அவர் இறக்கவேண்டும். இதில் எது நல்லது என்பதை நீ தான் தீர்மானிக்க வேண்டும். சொன்னால் அதைச் செய்து என் கடமையை முடித்துக் கொள்கிறேன்'' என்றான் விஜயன்.

குவேணி அசந்து போனாள். தான் சத்தியம் செய்து கொடுத்தபடி கடந்த ஒருவருட மாகத் துல்லியமாகச் செயல்பட்டு

தன் கனவை நிறைவேற்றும் முயற்சியில் கிட்டத்தட்ட இறுதிநிலைக்கே வந்து விட்ட விஜயனை எண்ணிப்பார்த்த அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது. வேறு யாராக இருந்தாலும் இதைச் செய்திருக்க முடியாது என்பதைச் சந்தேகமற உணர்ந்தாள். அவளது கண்கள் கலங்கின.

அதைக் கண்ட விஜயன் ''என்ன, ஆனந்தக் கண்ணீர் வந்து விட்டதா உனக்கு?'' என்று கேட்டான்.

''இல்லை அரசகுமாரரே. இது அவலக் கண்ணீர். அவஸ்தையான கண்ணீர்,'' என்றாள் குவேணி.

''அவலம் எதற்கு? கனவு நிறைவேறுவது அவலமா உனக்கு?'' என்று கேட்டான் விஜயன்.

''அரசகுமாரரே, ஒரு விஷயத்தைச் சொல்கிறேன் தாங்க முடியுமா உங்களால்?''

''நான் இடிதாங்கி. தயங்காமல் சொல்''

''நான் உங்களைக் காதலிப்பது போல் நடிக்க என் தந்தையால் அனுப்பப்பட்டவள்.

''நல்லதுதான். நீயும் உன்னை விரும்பக்கூடாது என்று சொன்னாய். நானும் என்னைக் காதலிக்க வேண்டாம் என்று தான் சொன்னேன். அதன் காரணத்தையும் சொன்னேன். இதுவரை நீ காதலித்தது வெறும் நாடகம் தான் என்றால் எனக்குச் சந்தோஷம் தான். கவலையைவிடு''

விஜயனின் இந்த வார்த்தைகளைக் கேட்டு சிலிர்த்துப் போன அவள் ''இப்படி உங்களைக் காதலிப்பது போல் நடிக்கச் சொன்னதற்குக் காரணம் என்ன தெரியுமா?'' என்று கேட்டாள்.

அதுவரை பாலி மொழியிலேயே பேசிவந்த விஜயன் திடீரென தமிழ்மொழியில் ''என் மூலம் வேலைகளை முடித்துக் கொண்டு என்னைத் தீர்த்துவிடுவதற்காகத்தான்'' என்றான்.

அவன் தமிழில் பேசியதைக் கேட்டு பேரதிர்ச்சி அடைந்த அவள் ''உங்களுக்குத் தமிழ் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''தமிழ் தெரியும். நேற்று உதயகுமரனோடு வந்த உன் தந்தை காதல் நாடகத்தை முடித்துக் கொண்டு என்னைத் தீர்த்து

விடும்படி கூறியதும் தெரியும் இந்தா குறுவாள். நன்றாகக் கூர்மைப்படுத்தப்பட்ட குறுவாள். நீட்டியதை நீயே தான் பார்த்தாயே! இதை வாங்கிக் கொள். உன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்'' என்றான் விஜயன்.

''அரசகுமாரரே, என்னை மன்னித்து விடுங்கள்'' என்று கூறியபடி அவன் மார்பில் சாய்ந்தாள் குவேணி. இரண்டு நாட்களாக அவளை வாட்டிய வேதனை அவளது கண்களைக் குளங்களாக்கின. விஜயனின் மார்பை நனைத்தன.

அவளது முதுகைத் தட்டிக் கொடுத்தும் தடவியும் கொடுத்து ஆறுதல் படுத்திய விஜயன் ''அழுகையை நிறுத்து குவேணி. இது அழவேண்டிய சமயமல்ல'' என்றான்.

''நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. அதனால்தான் எனக்கு இந்த நிலை'' என்றாள் குவேணி அவனது மார்பைவிட்டு எழாமல்.

''எதைச் சொல்கிறாய்?''

''எனக்கு உதவ நீங்கள் ஒப்புக்கொண்டதுமே என் தந்தையை சிறைசெய்து விடும்படிச் சொன்னேன். அதைச் செய்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது''

''அப்படியில்லை குவேணி. காளிசேனன் தனி மனிதனல்ல. தலைவன் - அவனுக்கென்று கணிசமான ஆதரவாளர்கள் இருப்பார்கள். அவனைச் சிறைப்படுத்தினால் அவர்கள் கிளர்ந்தெழுவார்கள். காரணம் கேட்பார்கள். நம்மால் காரணம் சொல்ல முடியுமா? முடியாது. அவர்களோடு போராடவே சரியாக இருக்கும். நமது திட்டங்களைச் செயல்படுத்த முடியாது. திட்டங்களின் அஸ்திவாரமே நாம் திடமாக நிற்க ஒரு நகரத்தை உருவாக்குவதுதான். அதை இப்போது உருவாக்கி விட்டோம். இப்போது காளிசேனனை எதுவும் செய்யலாம். அவனது ஆதரவாளர்கள் எதிர்த்தால் முறியடிக்கலாம். அதைவிடு. அது முடிந்த கதை. இப்போது எனக்குத் தேவையானது உனது முடிவுதானே தவிர காளிசேனனோ அவனது கருத்துக்களோ அல்ல. ஏனென்றால் நான் உதவியது உனக்குத்தானே அன்றி காளிசேனனுக்கு அல்ல''

அவள் அவனது மார்பை விட்டு விலகி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு ''என் தந்தையிடம் எதிர்காலத்தைப் பற்றிய தீட்சண்யமான கண்ணோட்டமோ உருப்படியான செயல்பாடோ இல்லாததால் தான் அவரை விலக்கிவிட்டு நல்ல செயல்திட்டத்தை உருவாக்கவும் நாகதீபத்தின் ராணியாக என்னை அமர்த்தவும் உங்கள் உதவியை நாடினேன். உங்களை அவர் கழுவேற்றாமல் இருக்க நான் புதிய திட்டங்களை வைத்துக் கொண்டு நிறைவேற்ற விரும்புவதாக அவரிடம் சமாதானங்களைச் சொன்னேன். அவரோ உங்கள் மூலமாகத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமென்றால் உங்களைக் காதலிப்பது போல் நாடகமாடினால் தான் உகந்ததாக இருக்கும் என்று சொல்லி காதல் நாடகமாட வற்புறுத்தினார். ஆனால் எனக்கோ உங்களிடம் உண்மையாகவே காதல் உண்டாயிற்று உங்கள் செயல்பாடுகளைக் கண்டு. நாடகமாட வேண்டிய அவசியம் வரவில்லை. நீங்களோ என் காதலை நிராகரித்தீர்கள். நான் சிறிது விட்டுப் பிடிக்க எண்ணி ஆறுமாத காலமாக ஒதுங்கியிருந்து மீண்டும் காதலைப் புதுப்பித்தேன். நீங்கள் மரணபயத்தைச் சொல்லி மறுபடியும் நிராகரிக்க முயன்றீர்கள். நானோ உண்மையான வாழ்க்கை எது என்று சொல்லி காதலில் உங்கள் சம்மதத்தைப் பெற்றேன். உண்மையாகவே நமக்குள் காதல் மலர்ந்தது. அது என் தந்தைக்கும் தம்பிக்கும் தெரிந்து விட்டதால் எங்கே நான் ஏமார்ந்து விடுவேனோ என்ற ஆதங்கத்தால் உங்களைக் கொன்றுவிடும்படி பலமுறை சொன்னார்கள். உங்களது நகர் உருவாக்கம் முடிந்து விட்டதாலும் வேடகம்பீரனை வென்று விட்டதாலும் உங்கள் உதவி இனியும் தேவையில்லை என்று கருதிய அவர்கள் நாம் பழகுவதை வெறுத்தார்கள். நாம் பேச முற்படும்போது தடுத்தார்கள். நேற்று பொறுமையை இழந்து நமக்கு முன்பாகவே வந்து உங்களுக்குத் தமிழ் தெரியாது என்ற எண்ணத்தில் உங்களைக் கொன்றுவிடும்படி மிரட்டினார்கள்'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''எல்லாம் சரியாகத்தானே இருக்கிறது குவேணி? நீ எதற்காக அழவேண்டும்?'' என்றான் விஜயன்.

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''நாகதீபத்தை ஒரு குடையின் கீழ்கொண்டு வந்து அதற்கு ராணியாக இருக்க நீ விரும்பினாய். அது தெரியாத உன் தந்தையோ அவருக்காகத்தான் நீ எல்லாவற்றையும் செய்வதாக நினைத்துக்கொண்டார். மொத்தத்தில் உங்கள் இருவருக்குமே நான் தேவையில்லாதவன்தானே? என்னைக் கொன்றுவிட நினைப்பதில் தவறென்ன இருக்கிறது?''

''இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? நானும் என் தந்தையும் ஒன்றா?''

''இருவரும் அரியணையை விரும்புவது உண்மைதானே குவேணி. அவர் இருப்பது போதும் என்று இருந்தார். நீயோ சாம்ராஜ்ய கனவு கண்டாய். இதுதானே வித்தியாசம்?''

''அப்படியென்றால் என் காதல் வெறும் குப்பையா?''

''அப்படி யார் சொன்னது?''

''உங்கள் பேச்சிற்கு என்ன அர்த்தம்? நீங்கள் சாகத் தயாராகி விட்டால் என் காதல் செத்து விடாதா?''

''நன்றாக யோசித்துப் பார் குவேணி. உன் காதலும் நானும் எப்படி உயிரோடு இருக்கமுடியும்? ஏதாவது ஒன்று தான் வாழலாம்''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? நான் உங்களை மணந்தால் காதலும் வாழ்ந்து நீங்களும் வாழலாம் அல்லவா?''

''வாழலாம். ஆனால் உன் கனவு என்னாகும்?''

''கனவுக்கென்ன?''

''நீ நாகதீபத்தை ஒரு குடையின்கீழ் கொண்டு வந்து அதன் அரியணையில் ராணியாக அமர விரும்பினாய். நீ என்னை மணந்தால் நீ ராணியாகவும் நான் சேவகனாகவும் வாழமுடியுமா?''

''அரசகுமாரரே, காதலுக்காக ஏங்கி உங்களை நான் வற்புறுத்தி சம்மதிக்க வைத்தேனே அப்போதல்லவா இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டிருக்க வேண்டும்?''

''நான் கேட்காததற்கு காரணம் உண்டு''

''என்ன காரணம்?''

''உன் கனவை நினைவாக்கத்தான் நான் விரும்பினேன். நம்பினேன். காதலை அல்ல''

''அப்படியானால் இத்தனை காலமாக காதலிப்பது போல் நீங்கள் தான் நாடகமாடினீர்களா?''

''எதற்காக நாடகமாட வேண்டும் குவேணி? பிறந்தவர்கள் எல்லோரும் சாகத்தான் போகிறார்கள். அதற்காக யாராவது வாழாமல் உட்கார்ந்து விடுகிறார்களா. காதல் வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதால் காதலிப்பது போல் நாடகமாட வேண்டிய அவசியமில்லை. நான் காதலித்தது உண்மைதான்.''

''நான் அப்படி நினைக்கவில்லை ராஜகுமாரரே. என்னை நீங்கள் மணந்தால் உங்கள் நிலை என்னவாக இருக்க வேண்டும் என்பதை காதலிக்கத் தொடங்கிய போதே நான் முடிவு செய்து விட்டேன்''

''என்ன முடிவு அது?''

''என்னை நீங்கள் மணந்தால் நாகதீபத்தின் அரியணையில் ராஜாவாக நீங்கள் அமரவேண்டும் என்பதுதான் அந்த முடிவு?''

''குவேணி, உணர்ச்சிவசப்படாதே. யோசித்துப்பேசு''

''ஏதோ நேற்றோ இன்றோ உணர்ச்சிவசப்பட்டு எடுத்த முடிவல்ல அரசகுமாரரே. பல மாதங்களுக்கு முன்னால் நிதானமாக ஆழ்ந்து எடுத்த முடிவு அது''

''நான் அரியணையில் அமர்ந்தால் அரியணை எனக்குச் சொந்தமாகி விடாதா? வருங்காலத்தில் எனது வாரிசுகள் தானே நாகதீபத்தை ஆளும். ஆட்சியுரிமை போய்ச் சேரும்?''

''நமது வாரிசுகள் என்று சொல்லமாட்டீர்களா?''

''இதுவா உன் கனவு? இதற்காகவா தந்தையை கொலை செய்யவும் விரும்பினாய்? வங்கதேசத்தவன் இந்நாட்டை ஆளவா நீ கோட்டைகள் கட்டினாய்? குலதெய்வத்திடம் சத்தியம் வாங்கினாய்?''

''உங்களுக்கு ஏன் உங்களையும் என்னையும் பிரித்துப் பார்க்கும் எண்ணம் தொடர்கிறது? நாம் நமது என்று ஏன்

நினைக்காமல் இருக்கிறீர்கள்? நமது வாரிசுகள் நாகதீபத்தை ஆள்வதில் கௌரவக் குறைவென்ன இருக்கிறது?''

''குவேணி, உன்னையும் என்னையும் நான் பிரித்துப் பேசவில்லை. அதேசமயம் ஒன்றை நீ புரிந்து கொள். வாரிசு என்பது தந்தையைச் சம்மந்தப்படுத்தும் பாரம்பரியமே தவிர தாயை அல்ல. நாகதீபம் என்பது இயக்கர்கள், நாகர்கள், வேடர்கள் என்று கலந்த பூமியாக இருந்தாலும் இது தமிழர் நாடு. இதை தமிழன் ஆளவேண்டும் என்று நினைப்பதுதானே சிறப்பான நினைப்பாக இருக்கமுடியும்?''

''அந்த நினைப்பு இதற்கு முன்பு இந்நாட்டை ஆண்டவர்களுக்கு இருக்க வேண்டும். அல்லது என் தந்தைக்காவது இருக்க வேண்டும். இல்லையே! தான் வாழும் வரை உண்டு அனுபவித்தால் போதும் என்றல்லவா இருக்கிறார்கள்? வருங்காலத்தைப் பற்றி ஒருவரும் நினைக்கவில்லையே? நாகதீபத்தை வருங்காலத்தில் ஒரே குடையின் கீழ் தமிழன்தான் ஆளவேண்டும் என்று சிறப்பாக யாரும் நினைக்காததால்தான் நான் நினைத்தேன். என் ஒருத்தியால் அது நிறைவேறாது என்பதால் உங்கள் உதவியை நாடினேன்''

''நான் இங்கே வராமல் இருந்தால்?''

''இந்தக் கேள்வி எதற்கு அரசகுமாரரே? உனக்கு இந்தக் கனவு வராதிருந்தால் என்ன செய்திருப்பாய் என்றுகூட கேட்பீர்களா? இப்போது எது நடக்கிறதோ அதைப்பற்றிப் பேசுவோம்''

''உன் முடிவைப்பற்றி காளிசேனனுக்கு தெரிவிக்க வேண்டுமல்லவா?''

''எதற்கு தெரிவிக்க வேண்டும்?''

''இப்போது அவன் அரசன். அதோடு உன் தந்தை''

இதற்கு குவேணி அளித்த பதில் எதற்கும் அசராத விஜயனை அரச வைத்தது.

''காளிசேனன் என் தந்தையுமல்ல. அவருக்கும் அரியணைக்கும் ஒரு சம்மந்தமும் இல்லை'' என்றாள் குவேணி.

◈◈◈

# அத்தியாயம் எண்பத்து நான்கு

# வம்புச்சண்டை

ஏற்கனவே நாகதீபத்தின் அரியணைக்கு காளிசேனன் உரிமையில்லாதவன் என்று இயக்கர் குல வீரர்களான வேகனும் விவேகனும் விஜயனிடம் கூறி தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். அதுபற்றி குவேணியிடம் விஜயன் வினவிய போது அதில் உண்மையில்லை என்று சொல்லியிருந்தாள். தற்போது அவளே தனது பேச்சிற்கு எதிராகத் தெரிவித்ததோடு மட்டுமின்றி காளிசேனன் தன் தந்தையே இல்லை என்று கூறியதால் எதற்கும் அசராத விஜயன் சற்றே அசந்து போனான். முன்பு அவள் எப்படிப் பேசியிருந்தாலும் தற்போது உண்மையைத்தான் பேசுகிறாள் என்று கருதிய அவன் ''இப்போது நீ பொய் சொல்லவில்லை என்று நினைக்கிறேன்'' என்றான் அவளிடம்.

''ஆம் அரசகுமாரரே! வேகன், விவேகன் ஆகியோர் எதிர்ப்பு கிளப்பியபோது நான் இந்த உண்மையைக் கூறியிருந்தால் நீங்கள் எனக்கு உதவியிருக்க மாட்டீர்கள். ஆகவேதான் அன்று உண்மையை மறைத்தேன். அதேசமயம் ஒருநாள் உங்களிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டும் என்று நினைத்தது உண்மை'' என்றாள் குவேணி.

''அப்படியென்றால் காளிசேனன் யார்?''

''இந்தப் பகுதியை ஆண்டு கொண்டிருந்த இயக்கர் குலத் தலைவரான குலோதரரின் சேனாதிபதி தான் காளிசேனன். நான் குலோதரரின் மகள். உதயகுமரன் காளிசேனனின் மகன். ஆரம்பத்தில் என் தந்தையிடம் விசுவாசமாக இருந்த காளிசேனன் ஒரு கட்டத்தில் பதவி வெறிபிடித்து என் தந்தையை விஷம் வைத்துக் கொன்றான். அப்போது நான் சிறிய பெண்ணாக இருந்ததால் என்னால் எதுவும் செய்யமுடியவில்லை. ஆகவே தனது ஆதரவாளர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு

அரியணையில் அமர்ந்தான். அப்போது வேகனும் விவேகனும் அவனது முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். காளிசேனனோ எனக்குத் தக்க பருவம் வந்ததும் அரியணையில் அமர்த்துவதாக உறுதிமொழியளித்ததால் வேகனும் விவேகனும் அடங்கினார்கள். நானும் உதயகுமரனும் சகோதர சகோதரிகளாகப் பழகினோம். காளிசேனனும் எங்களைக் கவலையில்லாமல் வளர்த்தான். அரியணைக்கு உரிமையானவள் நான் என்பதால் நான் கூறியதையெல்லாம் ஏற்றுச் செய்து வந்தான். ஆனால் என்னை அரியணையில் அமர்த்த முனைப்பு காட்டவில்லை. அதேடு சாம்ராஜ்ய கனவும் அவனிடம் இல்லை. உயிரோடு இருக்கும் வரை ஆண்டுவிட்டு அதற்குப் பிறகு உதயகுமரனை அரியணையில் அமர்த்துவதே அவனது ஆசை. நானோ அதற்கு இடம் கொடுக்காமல் அவனுக்கு அடிக்கடி அச்சமூட்டி வந்தேன். இந்த நிலையில் தான் நீங்கள் வந்தீர்கள். உங்கள் திறமைகளைப் பற்றித் தோழர்கள் மூலம் அறிந்த நான் அரியணையில் உங்கள் உதவியுடன் அமர ஆசைப்பட்டேன். என் கனவையும் உங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளத் தீர்மானித்த நான் உங்கள் உதவியைக் கோரினேன். எனது உண்மையான நோக்கத்தை காளிசேனன் அறியவில்லை. அதேசமயம் உங்கள் உதவியையும் முயற்சியையும் ஒதுக்கிவிடவும் அவனால் முடியவில்லை. நகரத்தை நீங்கள் உருவாக்க முனைந்தபோது அவனுக்குள் நப்பாசை உருவாகியிருக்க வேண்டும். உங்கள் மூலமாக நகரம் உருவானால் அங்கே குடிபெயர்ந்து ஆட்சி புரியும் ஆசை அவனுக்கு வந்திருக்க வேண்டும். ஆகவே தான் என் திட்டத்தை ஆதரித்தான். திட்டம் கெடாமல் இருக்க உங்களை காதலிப்பது போல் நாடகமாடச் சொன்னான். நகரம் உருவாகிவிட்ட நிலையில் நான் உங்களை உண்மையாகவே காதலிப்பதை அறிந்து கொண்ட அவன் எங்கே தன் ஆசைகள் நிராசைகளாகி விடுமோ என்ற பயத்தில் உங்களை வேலை தீர்த்துவிடும்படி என்னை வற்புறுத்தினான். அவ்வாறு செய்யவில்லையென்றால் உங்களுக்கும் எனக்கும் கள்ள உறவு இருப்பதாக வதந்தியைக் கிளப்பி தனது ஆதரவாளர்களைக் கொண்டு நம் இருவரையும் அழித்துவிடுவதாக மிரட்டினான். இதற்குப்பின் நடந்தது உங்களுக்குத் தெரியும்''

குவேணி கூறியதைக் கேட்ட விஜயன் ''காளிசேனன் விவஸ்தையில்லாதவன் என்றும் கோழை என்றும் எண்ணியிருந்தேன் குவேணி. ஆனால் அவன் வேடகம்பீரனை விட மோசமான வஞ்சகன் என்பது இப்போதுதான் தெரிகிறது. தனது அரியணைக்காக எதைச் செய்யவும் தயங்காதவன் என்பதும் புரிகிறது. ஒருவகையில் எனக்கு இப்போது மகிழ்ச்சி. எதனால் தெரியுமா?'' என்று கேட்டான்.

''எதனால்?''

''காளிசேனனின் மகள் நீ என்பதால் அவனை எப்படி அகற்றுவது என்று தயங்கிக் கொண்டிருந்தேன். அவனது மகள் நீயல்ல என்பது தெரிந்து விட்டதால் இப்போது தயக்கம் நீங்கிவிட்டது. அதோடு என் உறுத்தலும் போய்விட்டது''

''என்ன உறுத்தல்?''

''வேகன், விவேகன் ஆகியோர் கூறியபடி அரியணையில் அமருவதற்கான உரிமையில்லாதவர்களுக்கு அதர்மமாக உதவுகிறேனோ என்ற உறுத்தல் இருந்தது. உண்மையில் உரிமையுள்ள உனக்குத்தான் உதவுகிறேன் என்பது தெரிந்து விட்டபின் உறுத்தல் போய்விட்டது''

''எனக்கும் ஒரு வகையில் நிம்மதி. எப்படித் தெரியுமா?''

''சொல் குவேணி''

''அரசியல், அரியணை, சாம்ராஜ்ய கனவு ஆகிய எல்லாவற்றையும் உங்களிடம் ஒப்படைத்து விட்டேன். காதலைத் தவிர எனக்கு எதுவும் பெரியதில்லை என்பதை உணர்ந்து விட்டேன். நீங்கள் பயமுறுத்திய மாதிரி எனக்கு அகால மரணம் வரப்போவதில்லை. எவ்வளவு நிம்மதியாக இருக்கிறது தெரியுமா?'' என்ற குவேணி ''எனது ஆசை ஒன்றை நிறைவேற்றுவீர்களா?'' என்று கேட்டாள்.

''சொல்''

''வேண்டாம். நீங்கள் அதை ஒப்புக்கொள்ளமாட்டீர்கள்?''

''இந்த நிலையில் உனக்கு எப்படி அவநம்பிக்கை வருகிறது?''

''அப்படியில்லை. சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது''

''எதற்காக வெட்கப்பட வேண்டும் அதுவும் என்னிடம்? சொல் குவேணி.''

சொன்னாள் அவள்.

''இதற்கேன் வெட்கப்பட வேண்டும்?''

''உங்களுக்குக் கொஞ்சம்கூட வெட்கமில்லை?''

''எனக்கெதற்கு வெட்கம்?''

''நீங்கள் மிகவும் மோசம்''

''அதெப்படி? உன் விருப்பத்தை ஏற்பது மோசமானது என்றல்லவா ஆகிறது?''

''போதும்.''

''எது போதும்?''

''உங்கள் பேச்சு.''

''ஏன், நன்றாக இல்லையா?''

''தாங்க முடியவில்லை.''

''உண்மையாகவா?''

''ம்''

''சரி.''

''என்ன சரி?''

''பேச்சை நிறுத்திக் கொள்கிறேன். இனி செயல்தான்'' என்று கூறிவிட்டு அவளைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான் விஜயன்.

ஒரு நாழிகை கழிந்திருக்கும்.

எந்த ஒரு பெண்ணும் ஆனந்தப்படும் முதல் அனுபவத்தைப் பூரணமாகப் பெற்ற குவேணி அதைத் தந்த விஜயனுக்கு நன்றி தெரிவிப்பது போல் அவனது உதட்டில் வலியப் போய் முத்தமிட்டாள்.

ஏற்கனவே முத்தங்களால் நைந்து போயிருந்தாலும் விஜயனின் உதடுகள் அவளது இந்த முத்தத்தால் பரவசப் பட்டன.

''இனி எனக்குக் கவலையில்லை அரசகுமாரரே. கவலையும் இல்லை. அச்சமும் இல்லை'' என்றாள் குவேணி.

''அதெல்லாம் எதற்கு?''

''நான் இதற்கு அவசரப்பட்டதற்குக் காரணம் நான் யாருக்கும் இரையாகி விடக்கூடாது என்பதால்தான்''

''என்ன சொல்கிறாய் நீ?''

''நாளை வருவதாகவும் என்னை ஒப்படைப்பதாகவும் வேடகம்பீரனிடம் சொல்லியிருந்தேன். ஆனால் இன்றைக்கு உங்களிடம் என்னை ஒப்படைத்து விட்டேன். இனி எனக்குக் கவலை இல்லை''

''புரியும்படிச் சொல் குவேணி''

வேடகம்பீரன் வந்து மிரட்டியதைச் சொன்னாள் அவள்.

அவனது முகம் கறுத்தது.

''நீ களைத்திருக்கிறாய். தூங்கு குவேணி'' என்று கூறிவிட்டு எழுந்தான் விஜயன்.

மாளிகையை விட்டு கீழே வந்தான். நேரம் நள்ளிரவை தாண்டிவிட்ட படியால் ஆளரவம் பெரிதும் குறைந்து போய் எல்லோரும் கட்டிடங்களில் முடங்கிக் கிடந்தார்கள். யார் முடங்கினாலும் எப்போதும் விழிப்போடு இருக்கும் நவவீரர்கள் மட்டும் வீதிகளில் உலவிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனை அழைத்த விஜயன் ''வீரனே, துணைக்கு பத்து பேரை அழைத்துக் கொண்டு வேட கம்பீரன் இருக்கும் இடத்திற்குப் போ. நான் அழைத்ததாகச் சொல். பொழுது விடியும்போது அவன் இங்கிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு அகன்றான்.

சரியாகப் பொழுது விடிந்த நேரத்தில் வேடகம்பீரன் அங்கு வந்து நின்றான். விஜயனின் வீரர்கள் பின்னால் நின்றார்கள். குவேணியும் கண்விழித்து மாளிகையின் உப்பரிகைக்கு வந்தாள்.

வேடகம்பீரனைப் பார்த்த விஜயன் ''நான் அழைத்ததும் உடனே ஏன் இங்கு வரவில்லை? ஏன் இந்தத் தாமதம்?'' என்று கேட்டான்.

''விடியும் நேரத்தில் இங்கிருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆகவேதான் இந்த நேரத்திற்கு வந்தேன். அதோடு...''

''அதோடு என்ன?''

''உடனே எதற்காக நான் வரவேண்டும்?''

''நீ என் கைதி. மறந்து விட்டாயா?''

''கைதியாக இருக்கலாம். ஆனால் அடிமையல்ல''

''நீயார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை உனக்கில்லை. அப்படியிருக்கும்போது அறையில் அடைக்கப்பட்ட நீ எப்படி வெளியே வந்தாய்?''

''காளிசேனன் என்னை விடுவித்தான்''

''காளிசேனன் யார் உன்னை விடுவிக்க?''

''இக்கேள்வியை நீங்கள் கேட்க வேண்டியது காளிசேனனிடம்''

''வேடகம்பீரா! நீ யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாய் என்பதை மறந்து விடாதே.''

''எதையும் நான் மறக்கவில்லை.''

''மறக்கவில்லை என்றால் காளிசேனன் விடுவிக்க வந்தபோது என் அனுமதியில்லாமல் நீ வெளியே வந்திருக்கக் கூடாது.''

''காளிசேனன் அதற்கு ஒப்புக்கொள்ள வேண்டாமா?''

''நீ சொன்னாயா அவனிடம்?''

''இல்லை.''

''ஏன்?''

''நீ எப்படி அவ்வாறு முடிவு செய்யலாம்?''

''உண்மை நிலை அதுதானே?''

''அப்படியானால் எனக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று சொல்கிறாயா?''

''அப்படிச் சொல்லவில்லை.''

''வேறு எப்படிச் சொல்கிறாய்?''

''எதுவும் நான் சொல்லவில்லை.''

''அப்படியென்றால் என் கேள்விக்கு என்ன பதில்?''

''நீங்கள் என்ன கேட்டீர்கள்?''

''கேள்வியே மறந்து விட்டதா? இது உன் ஆணவம்''

''வங்கதேசத்து மன்னரே, நீங்கள் பேசுவது விந்தையாக இருக்கிறது''

''நான் பேசவே கூடாது என்கிறாயா?''

''அப்படிச் சொல்லவில்லை.''

''வேறு எப்படிச் சொன்னாய்?''

''நீங்கள் என்னைக் குழப்புகிறீர்கள்?''

''நீ மானமுள்ள வேடர் குலத் தலைவனாக இருந்தால் வாளெடுத்து தீர்த்துக்கொள் உன் குழப்பத்தை.''

''என்னிடம் வாளில்லை.''

''இதோ வாள். பிடி'' என்று சொன்னபடி வாளை அவனுக்குக் கொடுத்து தனது உடைவாளை உருவி போரைத் துவக்கினான் விஜயன்.

யாருமே எதிர்பாராத வாட்போர் அங்கே உண்டாயிற்று. வேடகம்பீரன் வஞ்சகன் என்றாலும் வாட்போரில் சளைத்தவனல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் போரிட்டான். ஆனால் கடும் கோபத்தில் இருந்த விஜயனோ அவனுக்கு அவகாசம் தரவில்லை. தனது வேகமான வாள்வீச்சை வெளிப்படுத்தி வேடகம்பீரனின் மார்பில் பாய்ச்சினான். அவனது வாள் வேடகம்பீரனின் மார்பில் துளைத்து இதயத்தை தொட்டு

விட்டதால் மண்ணிலே விழுந்த அவனது உடல் துடித்து அடங்கியது. மாண்டுவிட்டான் என்பதை உறுதி செய்து கொண்ட விஜயன் நவவீரர்களிடம் ''இவனது உடலை கிழக்கு வாசலில் கம்பத்தில் வைத்துக் கட்டுங்கள். கழுகுகள் வந்து கொத்தட்டும்'' என்று கூறிவிட்டு மாளிகைக்குச் சென்றான்.

நடந்தவற்றையெல்லாம் பார்த்த குவேணிக்கு விஜயனின் போக்கைப் புரிந்துகொள்ள முடிந்தது.

விஜயனுக்கு வேடகம்பீரனைக் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை என்பதும் அவன் தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றான் என்ற செய்திதான் விஜயனின் மனதில் புயலை உண்டாக்கியிருக்கிறது என்பதும் அதன் காரணமாகவே வேடகம்பீரனை வம்புச் சண்டைக்கு இழுத்து வாட்போரில் கொன்று மன ஆறுதல் பெற்றிருக்கிறான் என்பதும் புரிந்தபோது காதலின் சக்தியும் அவளுக்குப் புரிந்தது. தனது காதலியிடம் மற்றொருவன் தகாத முறையில் அணுகியதை விஜயனால் சகித்துக்கொள்ள முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் விஜயனின் சுபாவமல்ல காதலின் சக்தியே என்பதை உணர்ந்து களிப்படைந்தாள் குவேணி. தனக்குப் பிரச்சினையாக வளரவிருந்த வேடகம்பீரனை சாமர்த்தியமாகக் கொன்று பிரச்சினையை கௌரவமாக முடித்த விஜயனின் மதிநுட்பத்தை எண்ணி பூரித்துப்போனாள். நவவீரர்களுக்கு இந்தச்சண்டை புதிராக இருந்தாலும் விஜயன் எதைச் செய்தாலும் அதற்குக் காரணம் இருக்கும் என்று நம்பினார்களாதலால் கவலைப் படவில்லை.

ஆனால் அன்று மாலை புதுப் பிரச்சினையாக வந்து நின்றான் காளிசேனன். உதயகுமரன் மற்றும் பரிவாரங்கள் புடைசூழ கிழக்கு வாயிலுக்கு வந்த அவன் அங்கு நின்றிருந்த விஜயனைப் பார்த்து ''இதற்கென்ன அர்த்தம்?'' என்று கேட்டான் கோபத்துடன்.

''எதற்கு அர்த்தம் கேட்கிறாய் காளிசேனா?'' கேட்டான் விஜயன்.

''புரியாத மாதிரி நடிக்காதே விஜயபாகு. வேடகம்பீரனை நீ கொன்றிருக்கிறாய். ஏனென்று நான் தெரிந்து கொள்ளலாமா?''

''வேடகம்பீரன் என் கைதி. அவனைக் கொல்ல எனக்கு உரிமை இருக்கிறது''

''அவனை இங்கு வந்தபோதே என்னிடம் ஒப்படைத்து விட்டாய். அதற்குப் பின் உனக்கேது உரிமை?''

''உன்னிடம் ஒப்படைத்து விட்டதால் அவனோடு நீ கூட்டணி வைத்துக் கொண்டாய். அதைப்பற்றி கூட எனக்குக் கவலையில்லை. ஆனால் அவன் குவேணியிடம் தவறாக நடக்க முயன்றிருக்கிறான். அதை என்னால் மன்னிக்க முடியாது''

''அதைப் பற்றிக் கவலைப்பட நீ யார்?''

''குவேணி என் காதலி''

''இல்லை. உன்னைக் காதலிக்கும்படி நாடகமாட என்னால் அனுப்பப்பட்டவள் அவள்''

''அது உன் கணக்கு. தப்புக்கணக்கு. அவள் நாடகமாடவில்லை. உண்மையாகவே காதலிக்கிறாள்.''

''அப்படியே இருந்தாலும் தந்தை நான் இருக்கிறேன்.''

''இல்லை. நீ அவள் தந்தையே இல்லை.''

''யார் சொன்னது?''

''குலோதரனின் மகள் குவேணி சொன்னாள்''

''உளறிவிட்டாளா அந்தக் காதகி?''

''காதகியல்ல. காதலி. அவள் அதை மட்டும் சொல்லவில்லை.

''வேறென்ன சொன்னாள்?''

''அவள் தந்தையைக் கொன்றுவிட்டு அரியணையைக் கைப்பற்றியதையும் சொன்னாள். ஆகவே காளிசேனா, குவேணியைப் பற்றியோ வேடகம்பீரனைப் பற்றியோ பேசும் தகுதி உனக்கில்லை. அதுமட்டுமல்ல''

''வேறென்ன?''

ஏற்கனவே வேடர் பகுதி என் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது. இன்று முதல் இயக்கர் நாடும் என் ஆதிக்கத்தில் வந்துவிட்டது. ஒரு நிமிடம் உனக்கு அவகாசம் தருகிறேன். காட்டிற்கு ஓடிவிடு. இல்லையென்றால் உன்னை இங்கேயே வேடகம்பீரனைப் போல கட்டிப்போட்டு கழுகிற்கு இரையாக்குவேன்''

''நல்லது விஜயபாகு. நீ யார் என்பதை எனக்குக் காட்டி விட்டாய். என்னை யாரென்று நாளை காட்டுகிறேன். அப்போது தெரியும் யார்ஓடப் போகிறார்கள்'' என்று கூறிவிட்டு அகன்றான் காளிசேனன்.

விஜயன் அவனுக்குப் பதிலேதும் சொல்லவில்லை.

காளிசேனன் தான் யார் என்பதை இரண்டு நாட்கள் கழித்து காட்டவே செய்தான்.

ஆனால் முடிவில் யாரும் எதிர்பாராத துயரம் ஒன்று நிகழ்ந்து விட்டது.

◈◈◈

## அத்தியாயம் எண்பத்தைந்து

# இன்பவழி

ஒரே நாளில் வேடகம்பீரனை வேலை தீர்த்துவிட்டு காளிசேனனிடம் நாகதீபம் தன் ஆதிக்கத்தின்கீழ் வந்து விட்டதாக அறிவித்து எந்தவிதமான எதிர்ப்பிற்கும் தயாரென அறைகூவலும் விட்டுவிட்டு வந்த விஜயனை எண்ணியபோது ''முடிவுக்கு வந்து விட்டால் எத்தனை வேகமாக நிறைவேற்றுகிறார்!'' என்று வியந்து அயர்ந்து போனாள் குவேணி. என்றும் கண்டிராத கோபத்தை அவனிடம் கண்டாள். அவன் வேடகம்பீரனை வம்புச் சண்டைக்கிழுத்து வீழ்த்திய போது. அதேபோல அவனிடம் அதுவரை கண்டிராத வைராக்கியமான சொற்களை காளிசேனனிடம் உதிர்த்தபோது கண்டதாக வீரர்கள் அவளிடம் சொன்னார்கள். அன்று இரவு வெகுநேரம் கழித்தே மாளிகைக்குத் திரும்பினான் விஜயன். அவனை வரவேற்பது போல் மாளிகை முழுதும் விளக்கேற்றி

வைத்து தன்னையும் ஒரு தங்க விளக்குபோல் அலங்கரித்துக் கொண்டிருந்த குவேணி விஜயனைக் கண்டதும் அவனது முகத்தில் காலையிலிருந்து குடிகொண்டிருந்த சீற்றங்கள் சுவடேயில்லாமல் மறைந்துபோய் கலகலப்பான களை உண்டாகியிருந்ததை எண்ணி வியந்தாள்.

''இதென்ன குவேணி, இத்தனை விளக்குகளை ஏற்றியிருக்கிறாய்?'' என்று புன்னகையோடு கேட்டான் விஜயன்.

''உங்களை வரவேற்கத்தான்'' என்றாள் குவேணி அழகாக அசைந்தபடி.

''இத்தனை விளக்குகள் எதற்கு? நீ ஒருத்தி மட்டும் இந்த கோலத்துடன் நின்றால் போதாதா? நீ ஆயிரம் விளக்குகளுக்கு நிகரானவள் அல்லவா?''

விஜயன் இவ்வாறு கூறியதில் பூரித்துப் போன அவள் ''எனக்கு ஒரே வியப்பாக இருக்கிறது'' என்றாள்.

''எது?''

''காலையில் உங்கள் முகம் எப்படி இருந்தது தெரியுமா? சீற்றத்தின் எல்லையைக் கண்டேன். இப்போது அந்தக் குளிர்நிலவு போல் நிர்மலமாக இருக்கிறது. எப்படி?''

''குவேணி, இந்த முகமானது வானத்தைப் போல. வானத்தில் கார் மேகமும் வெண்மேகமும் மாறி மாறி வரும் கலையும். ஆனால் வானத்தின் இயல்பு மாறுவதில்லை. முகத்திலும் அப்படித்தான். அதில் பல்வேறு உணர்ச்சிகள் பிரதிபலிக்கும். ஆனால் அதன் உண்மையான பாவம் மாறுவதில்லை''

''பேச்சு கூட அப்படித்தானோ?''

''அதுவும் உணர்ச்சியின் வெளிப்பாடுதானே?''

''எப்படி உங்களால் அப்படி மாறமுடிகிறது?''

''செடிகள் கூட வெயிலைத்தேடி தலையை வளைக்கும் போது மனிதனுக்கென்ன கஷ்டம்? அதோடு என்னைப்

போன்றவர்கள் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றபடி மாறிக் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். இல்லையென்றால் அவர்கள் வெற்றி பெற முடியாது''

''வேடகம்பீரனின் மீது என்ன அத்தனை கோபம்?''

''ஏன், உனக்குத் தெரியாதா?''

''தெரிகிறது? உண்மையிலேயே அதுதான் காரணமா?''

''வேறென்ன? என் மனைவியை என் நண்பன் துரோக புத்தியுடன் சல்லாபித்தான். ஆனால் அது எனக்குத் தெரியாது. தெரிந்தபோது இருவரும் உயிரோடு இல்லை. நீ என் காதலி. என் சொத்து. அதன் மீது வேடகம்பீரன் தகாத முறையில் நடக்க முயன்றான் என்று தெரிந்துவிட்ட பிறகு அவனை எப்படி விட்டு வைக்கமுடியும்? அவனை என்ன நீதி விசாரணைக்கா அழைக்க முடியும்? ஆகவே வம்புக்கு இழுத்து வாளுக்கு இரையாக்கினேன்''

''காளிசேனனிடம் திடீரென்று பிரதிக்ஞை செய்தீர்களே அது எப்படி?''

''நீ சொன்ன உண்மை என் தளைகளை அறுத்து விட்டது. உனக்கு உதவும் நிலையில் உன் தந்தை காளிசேனனை எப்படி விலக்குவது என்று எனக்கு யோசனையாக இருந்தது. நீ அவன் உன் தந்தையில்லை என்று உண்மையைச் சொன்னாய். தயக்கம் நீங்கியது. உரிமையில்லாதவன் என்பது தெரிந்து விட்டபின் பேச்சில் வெட்டும் குத்தும் தான் வெளிப்பட வேண்டும். சொறி நாய்களைக் கண்டு சிங்கம் பதுங்குவதில்லை''

''இதென்ன இப்படிப் பேசுகிறீர்கள்?''

''தெளிவடைந்த பின் பிசிறு தட்டக் கூடாது. நாக தீபத்திற்கு நான் வந்தபோது முதல் எதிரியாய் நின்றவர்கள் நாகர்கள். அவர்களைப் போரிட்டு அழிக்க முற்பட்டபோது அவர்கள் தொடுத்த தாக்குதலைக் கண்டேன். வறட்டு கௌரவம் பாராமல் சரணடைந்தேன். தெளிவிற்குப் பின் வந்த முடிவு அது. அதேசமயம் வேடகம்பீரனை அழிக்க அவனைத் தேடிக்கொண்டு போனேன் வேங்கையைப் போல். அவன் போரிடவும் துணியாமல் சரணடையவும் விரும்பாமல் என்னை

ஏமாற்ற நினைத்தான். பாயும் புலியாகப் பாய்ந்து கல்யாணியைத் தீக்கிரையாக்கினேன். தெளிவிற்குப் பிறகு எடுத்த முடிவு இது. அது போலத்தான் காளிசேனன் விஷயமும். உன் கனவுகளை நிறைவேற்ற இந்த நகரை உருவாக்கினேன். நீயோ அரியணை வேண்டாம் என்று காதலால் எனக்கு அதை தியாகம் செய்ததோடு காளிசேனன் உன் தந்தையில்லை என்றும் அரியணையில் அமரும் தகுதி அவனுக்கில்லை என்றும் சொன்னாய். தெளிவு பிறந்தது. நான் உருவாக்கிய நகருக்கு விஜயஸ்வீபம் என்று என்பெயரையே சூட்டி நாகதீபம் என் ஆதிக்கத்திற்கு வந்து விட்டதாக காளிசேனனுக்கு அறிவித்து விட்டேன். என் நிலை சிங்கத்தின் நிலை இப்போது. சிங்கம் வேட்டையாடச் செல்வதில்லை. தன்னைத்தேடி வரும் இரையையே கொல்லும்''

''நாகதீபத்திற்கு வந்தபோது உங்கள் திட்டம் என்ன?''

''திட்டம் எதுவும் இல்லை. லட்சியம் தான் இருந்தது. மகான் புத்தர் விரும்பியதை இங்கே நிறைவேற்ற வேண்டும். அதற்கு தேவபுத்தர் கூறியபடி நாகதீபத்திற்கு நான் மன்னனாக வேண்டும். இது தான் என் நோக்கமாக இருந்தது. இந்நாட்டின் வடக்கே மணிபல்லவத்தில் நாங்கள் வந்து இறங்கியபோது இங்கே நாகர்கள், இயக்கர்கள், வேடர்கள் ஆகியோர் மூன்று பகுதிகளாக இந்த நாட்டை ஆதிக்கம் செய்து கொண்டிருப்பது தெரியவந்தது. இந்த மூவரையும் ஒவவொருவராய் வெற்றிகொள்ள வேண்டும் என்பதுதான் என் திட்டமாக உருவாகியது. இந்நாட்டின் நுழைவாயிலாக இருக்கும் நாகர்களின் ஆனைக்கோட்டையை வெற்றி கொள்ள முனைந்த போது முதல் முயற்சியே தோல்வியாக இருந்தாலும் அது நன்மையில் முடிந்தது. நாக அரசன் என் நண்பனானான். இப்போது அவனது படைகள் இரண்டாயிரம் பேர் இந்நகரில் இருக்கிறார்கள்''

''உண்மையாகவா?''

''ஆம். இந்த நகரை உருவாக்கத் தொடங்கியபோதே என் தோழர்களை நாக நாட்டிற்கு அனுப்பி படையுதவி கேட்டேன். நாக அரசரும் அனுப்பி வைத்தார். அவர்கள் கட்டிடக்

கலைஞர்களாகவும் தொழிலாளர்களாகவும் அவ்வப்போது இங்கு வந்தார்கள். அவர்களது எண்ணிக்கை இரண்டாயிரம்''

''அப்புறம்?''

''ஆனைக்கோட்டையை விட்டு இங்கே வந்தபோது நீ என் மனக்கோட்டையை ஏறக்குறைய அழித்துவிட்டாய். உன் மனதில் மட்டும் சாம்ராஜ்யக் கனவு இல்லாமலிருந்தால் அன்றைக்கே நான் கழுவேற்றப் பட்டிருப்பேன். புத்தரின் அருள் தான் உன் மனதில் அப்படியொரு கனவை உண்டாக்கி என் உதவியை நாட வைத்தது. என்னை நீ நாடி உதவியைக் கேட்டபோது கூட நான் உன்னை வைத்துக்கொண்டு என் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றுதான் நினைத்தேன். நகரம் ஒன்றை உருவாக்கினால் அதை அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு உங்களை எதிர்க்க முடியும் என்பதுதான் என் திட்டமாக இருந்தது. ஆனால் நீ என்னை உன் குலதெய்வத்தின் முன்னால் அழைத்துப்போய் சத்தியம் வாங்கியபோது சங்கடப் பட்டேன். இருந்தாலும் எனக்குள்ளே எப்போதும் இருக்கும் நம்பிக்கை ஒளி அழியாமல் இருந்தது. நான், அனுராதன், குருநாதர் ஆகியோர் அடுத்தடுத்து நகரங்களை உருவாக்குவது என்று தீர்மானித்து வேலைகளை ஆரம்பித்தோம். கடைசியில் எதிர்பாராத திருப்பமாக உன் காதல் மலர்ந்தது தியாகமாக முடிந்தது. அந்த வகையில் எனக்கிது தோல்விதான்''

''தோல்வியா?''

''நான் பெற வேண்டிய ஒன்று என் முயற்சியால் கிடைக்காமல் தானாக கிடைத்தால் அது வெற்றியாகுமா?''

''காதலர்கள் விட்டுக் கொடுப்பது இருவருக்கும் வெற்றி தானே தவிர தோல்வியல்ல. காதலின் சிறப்பு விட்டுக் கொடுத்தல். விட்டுக் கொடுத்தலின் முடிவு வெற்றி. வீணாகப் புதுக்கவலையை அடையாதீர்கள். அரியணையை நான் விட்டுக் கொடுத்திருந்தாலும் காளிசேனன் விட்டுக் கொடுக்கவில்லை என்பதை மறந்து விடாதீர்கள். அவன் அடிபட்ட பாம்பாகப் போயிருக்கிறான். அவனையோ அவனது இயக்கர் படைகளையோ அற்பமாக எண்ணி விடாதீர்கள்''

''அப்படி எண்ணவில்லை குவேணி. அவனது வரவுக்காக நான் காத்திருக்கிறேன்'' என்று சொன்ன விஜயன் ''உன் ஆதரவாளர்கள் எங்கே இருக்கிறார்கள்? இப்போதும் உன்னை ஆதரிக்கிறார்களா?'' என்று கேட்டான்.

''அதிலென்ன சந்தேகம்? அவர்கள் என் உயிரைக் காக்கச் சபதமெடுத்தவர்கள். இங்கே அவர்கள் எல்லோரையும் வரச்சொல்லி விட்டேன். நாளைக்கு வந்து விடுவார்கள்''

''எவ்வள்வு பேர் இருப்பார்கள் குவேணி?''

''மூவாயிரத்திற்கு குறைவிருக்காது''

''நல்லது குவேணி. நீ சற்று ஓய்வெடு. நான் சற்று வெளியே சென்றுவிட்டு வருகிறேன்''

''இனிமேலா? இனிமேலா வெளியே செல்லப் போகிறீர்கள்? உங்களுக்கு ஓய்வில்லையா?''

''காளிசேனனை காட்டிற்கு நிரந்தரமாக அனுப்பிய பிறகு தான் எனக்கு ஓய்வு'' என்று கூறி தங்க விளக்காகப் பளபளத்த குவேணியை இறுகத் தழுவி வழவழத்த உதடுகளில் அழுத்தமான முத்திரையைப் பதித்துவிட்டு வெளியேறினான் விஜயன்.

மறுநாள் நகரம் முழுதுமே விழாக்கோலம் பூண்டிருந்தது. தெருக்கள் அனைத்தும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மங்கள வாத்தியங்கள் இசைக்கப்பட்டவாறிருந்தன. இவற்றுக் கெல்லாம் காரணம் தெரியாமல் தவித்தாள் குவேணி. அவளுக்கு விடைதர விஜயனும் அருகில்லை. விரைவிலேயே குவேணியை அணுகிய பணிப்பெண்கள் அவளை சிங்காரிக்கத் துவங்கினர். ராணிக்குரிய அலங்காரங்கள் செய்யப்பட்ட பின் தேரொன்று மாளிகைக்கு முன்னால் தயாராக இருக்க அதில் ஏற்றப்பட்ட குவேணி முன்னும் பின்னும் திரளானவர்கள் சூழ நகர வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டாள். ஊர்வலம் முடிந்து மாளிகைக்குத் திரும்பியபோது அங்கே உயரமான மேடை ஒன்று எழுப்பப்பட்டு அலங்கரிக்கப்பட்டு பேரழகோடு விளங்கியது. அந்த மேடையின்மீது தங்கத்தாலும் நவரத்தினங்களாலும் அமைக்கப்பட்ட சிங்காதனம் ஒன்று நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தது. தேரிலிருந்து இறங்கிய

குவேணியை வலதுகரம் பற்றி மேடையின் மேல் அழைத்துச் சென்றான் விஜயன். அவனும் பூரண அரசகுமாரனுக்குரிய உடைகளை அணிந்திருந்தான். மேடைக்கு மேல் வந்ததும் அரியணையைச் சுட்டிக்காட்டி ''அதில் போய் உட்கார் குவேணி'' என்றான் விஜயன்.

அவளுக்கு எதுவும் புரியவில்லை.

''நானா?'' என்று கேட்டாள்.

விஜயன் அவளைப் பேசவிடாமல் அரியணையில் அமர்த்தி கையில் செங்கோல் ஒன்றைக் கொடுத்தான்.

சுற்றிலும் சூழ்ந்திருந்தவர்களை நோக்கி ''தோழர்களே! இங்கே விஜயஸ்வீபத்தின் சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் இயக்கர் குலத் தாமரையான குவேணி என் மனைவி மட்டுமல்ல. இந்நாட்டின் ராணியும்கூட. இவளே இந்த நாகதீபத்தின் ராணி. இவளுக்கு உங்கள் வாழ்த்துகளைத் தெரிவியுங்கள்'' என்றான்.

அதையடுத்து வாழ்த்தொலிகள் எங்கும் எழுந்தன.

அச்சமயத்தில் குவேணியின் ஆதரவாளர்களும் வந்து சேர்ந்ததால் வாழ்த்தொலியானது விண்ணைப் பிளந்தது.

அன்று இரவு வரை அவளது இனத்தவர் அவளைச் சந்திப்பதும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுமாய் இருந்தார்கள். ஆனந்த அலைகளால் திணறிப்போனாள் குவேணி. தான் பூலோகத்தில் இருக்கிறோமா அல்லது தேவலோகத்திற்கு வந்து விட்டோமா என்ற பிரமை உண்டாகியிருந்தது.

அன்றிரவு களியாட்டங்கள் ஓய்ந்து விஜயன் மாளிகைக்கு வந்தபோது ''என்ன இப்படிச் செய்து விட்டீர்கள்?'' என்று கேட்டாள் குவேணி ஆனந்தப் பூரிப்புடன்.

''என்ன செய்து விட்டேன்?''

''என்னைப் போய் சிங்காதனத்தில் அமர்த்தி விட்டீர்களே ராணியாக?''

''அப்படித்தானே உன் குலதெய்வத்திடம் சத்தியம் செய்தேன் நான்?''

''நான்தான் அரியணை எனக்கு வேண்டாம் என்று சொன்னேனே?''

''நீ சொன்னால் நான் சத்தியத்தை மீற வேண்டுமா என்ன?''

''நான் ராணி என்றால் நீங்கள்?''

''உன் கரத்தில் இருக்கும் வாள் என்று வைத்துக் கொள்ளேன்''

''நான் வாயால் தான் தியாகம் செய்தேன். நீங்களோ செயலில் காட்டி விட்டீர்கள்''

''அதெல்லாம் இல்லை குவேணி. உன் கனவு உன்னிடம் எத்தனை ஆசைகளை வளர்த்திருக்கும் என்பது எனக்குத்தான் தெரியும். அதை நிறைவேற்ற ஒப்புக்கொண்ட நான் அதை நிறைவேற்றியிருக்கிறேன். இதில் தியாகம் எதுவுமில்லை''

''உங்கள் லட்சியம் என்னாவது?''

''மகான் புத்தரின் கொள்கைகளை நாகதீபத்தில் பரவச் செய்ய நான் இங்கே மன்னனாக அமரவேண்டும் என்பது கட்டளை. அதற்கு நான் அமர்ந்தால் என்ன? என் மனைவியான நீ அமர்ந்தால் என்ன? நீ வேறு நான் வேறா குவேணி?''

விஜயனின் சொற்களால் பரவசமடைந்த அவள் அவன் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு ''எல்லாம் கனவு போல் இருக்கிறது. நிற்பதாகவே தோன்றவில்லை. பறப்பது போல் இருக்கிறது'' என்றாள் தழுதழுக்கும் குரலில்.

''கனவல்ல என்பதைப் புரியவைக்கிறேன். உன் ஆடை அணிகலன்களையெல்லாம் கழற்று''

கழற்றினாள் குவேணி.

அவளை அள்ளிச்சென்று மஞ்சத்தில் கிடத்திய விஜயன் கிளர்ந்தெழுந்தான்.

எதிலும் தான் புலி என்பதை நிரூபித்தான்.

ஆயிரம்தான் பேசினாலும் இதுபோன்ற நேரங்களில் ஆண்கள் புலிகள்தான் பெண்கள் மான்கள்தான் என்பதை உணர்ந்தாள் குவேணி.

சொர்க்கம் போனால் கூட இந்த ஆனந்தமும் திருப்தியும் கிடைக்காது என்று தோன்றியது அவளுக்கு.

தான் மட்டும் காஸிசேனனின் பேச்சிற்கு இணங்கி காதல் நாடகமாடி அரியணையே குறி என்று செயல்பட்டிருந்தால் நிச்சயமாக அரியணையும் கிடைத்திருக்காது இந்தச் சொர்க்கமும் கிடைத்திருக்காது என்பது தெளிவாகப் புரிந்தது அவளுக்கு.

அந்த விதத்தில் தனக்கு எல்லாமும் கிடைக்கும்படிச் செய்த விஜயனை எண்ணிப் பெருமிதப்பட்ட அவள் அவனோடு அவனாகவே இழைந்தாள்.

இன்பம் பூர்த்தியான பிறகு கேட்டான் விஜயன்.

''இப்போது புரிகிறதா நீ காண்பது கனவல்ல என்பது''

''கனவல்ல என்பதைப் புரியவைக்க இது போன்ற இன்ப வழியை யாரும் கையாண்டதில்லை'' என்றாள் குவேணி கள்ளப் பார்வையை வீசியபடி.

''சில இடங்களில் ஏற்கனவே உள்ள பாதையில் போகலாம். சில இடங்களில் நாம் புதிய பாதைகளைப் போட்டு விட்டுப் போகவேண்டும். அப்படித்தான் இது''

''அதோ அந்தச் சுவற்றைப் பார்த்தீர்களா?''

பார்த்தான் விஜயன்.

அங்கே சிங்கம் ஒன்று அமர்ந்திருப்பது போல சித்திரம் வரையப்பட்டிருந்தது. பந்த ஒளியில் சிங்கத்தின் கண்கள் தீவிழி விழித்தன.

''நேற்று நீங்கள் உங்களைச் சிங்கம் என்று சொன்னீர்கள் அல்லவா? உங்களை இங்கே வரைய முயற்சித்தேன். கடைசியில் பார்த்தால் உங்களுக்குப் பதிலாகச் சிங்கத்தை வரைந்திருப்பது தெரிந்தது. நன்றாக இருக்கிறதா?''

''நல்ல உதவியைச் செய்திருக்கிறாய் குவேணி''

''உதவியா?''

''உன்னை அரியணையில் அமர்த்தியபோது உணராத விஷயத்தை இப்போது உணர்த்திவிட்டாய்''

''என்ன சொல்கிறீர்கள்?''

''நாகதீபத்தின் ராணிக்கு ஒரு கொடி வேண்டாமா? வேண்டும். அந்தக் கொடியில் எந்த இலச்சினை பொறுத்தமாக இருக்கும்? அதற்கு நீ இந்தச் சித்திரத்தின் மூலம் உணர்த்தி விட்டாய். இந்தச் சிங்க இலச்சினை பதித்த கொடிதான் இனி உன் நாட்டில் உனக்காகப் பறக்கும். உன் பெருமையைப் பேசும்''

''என் கிறுக்கல்களைக் கூட உருப்படியாக பெருக்கி விட்டீர்கள்''

''எல்லாம் நீ ராணியாக அமர்ந்த நேரம்தான்''

''இன்றைய இரவை வாழ்நாளில் மறக்க முடியாத இரவாக அமைத்து விட்டீர்கள்'' என்றாள் குவேணி.

பரவசத்தில் இவ்வாறு சொன்னாள் குவேணி.

ஆனால் உண்மையிலேயே யாரும் மறக்க முடியாத இரவு இரண்டே நாளில் வந்தது.

◈◈◈

## அத்தியாயம் எண்பத்தாறு

# மறக்கமுடியாத இரவு

மறக்கமுடியாத இரவை குவேணிக்கு அளித்த விஜயன் மறுநாள் உபதலைவர்களை அழைத்தான். எட்டு உபதலைவர்களில் அசுவநாவிகர் கரடித் தீவில் கைவிடப்பட்டு விட்டதாலும் டெமிட்ரியஸை வங்கதேசத்திற்கு அனுப்பி யிருந்ததாலும், உதயணன் மற்றும் நரசிம்மன் ஆகிய இருவர் தலைமறைவாகி விட்டதாலும், தனஞ்ஜெயன் கல்யாணி துறைமுகக்காவலுக்கு நிறுத்தப்பட்டதாலும் விகர்ணன், விதுரன் மற்றும் பகீரதன் ஆகியோர் மட்டுமே இருந்தார்கள். நாக நாட்டிலிருந்து வந்திருந்த இரண்டாயிரம் வீரர்களுக்கு நாக முத்து தலைவனாக வந்திருந்தான். குவேணியின் ஆதரவாளர்கள் மூவாயிரம் பேருக்கு சிமுகன் தலைவனாக இருந்தான். ஆக உபதலைவர்கள் மூன்று பேரையும் நாகநாட்டுத்

தலைவனையும், இயக்கர்தலைவனையும் வரவழைத்த விஜயன் விஜயஸ்வீபத்தை காளிசேனன் தாக்கினால் அவனை எப்படிச் சமாளிப்பது என்பது குறித்து ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

காளிசேனன் எவ்வளவு படையுடன் வருவான் என்று உத்தேசமான கேள்வியை எழுப்பியபோது குவேணியின் ஆதரவாளர்களின் தலைவனான சிமுகன் ''ஐயாயிரம் பேர் இருக்கலாம்'' என்றான்.

நாகர்களும் அவ்வாறே சொன்னார்கள்.

விஜயனுக்கோ அது உடன்பாடாக இல்லை. இருப்பினும் மாற்று கருத்து எதுவும் சொல்லாமல் ''விகர்ணா, நீயும் பகிரதனும் நமது புரவிப் படையை அழைத்துக்கொண்டு அதோ இந்த நகருக்கு மேற்கே இருக்கும் குன்றுக்குப் பின்னால் போய் இருங்கள். நான் மூன்று முரசுகளை இயக்கும்போது நீங்கள் வந்தால் போதும். எப்படி வரவேண்டும் என்பது உங்களுக்கே தெரியும்'' என்றான்.

அதையடுத்து இரு உபதலைவர்கள் தலைமையில் தோழர்களின் புரவிப்படை நகரைவிட்டு வெளியேறியது.

''சிமுகா! உனது மூவாயிரம் வீரர்களில் ஆயிரத்து ஐநூறு பேர்களை அழைத்துக் கொண்டு நீ காட்டுப் பக்கம் போய்விடு. பறையொலி எழுப்பும் போது நீங்கள் நகரை நோக்கி வரவேண்டும். மீதமுள்ள ஆயிரத்து ஐநூறு வீரர்கள் நகரின் கிழக்கே கடற்கரைக்குச் செல்லும் பாதைக்குச் சென்று அணிவகுத்து நிற்கட்டும். ஒற்றை முரசு ஒலிக்கும்போது நீங்கள் வந்தால் போதுமானது'' என்றான் விஜயன்.

அதையடுத்து சிமுகன் தலைமையில் ஆயிரத்து ஐநூறு பேர்களும் விதுரன் தலைமையில் ஆயிரத்து ஐநூறு பேர்களும் வெளியேறிச் சென்றார்கள்.

தற்போது நாகர் படைமட்டும் மிஞ்சியிருந்தன.

அப்படையின் தலைவன் நாகமுத்துவை அழைத்த விஜயன் ''வீரனே! இந்த நகரின் அமைப்பை நன்றாகப் பார். இதுவட்ட

வடிவில் சக்கர வியூகம் போல் அமைக்கப்பட்டிருக்கிறது. மாளிகை நடுவில் இருக்க அதைச்சுற்றி ஐந்து வட்ட வீதிகள் இருக்கின்றன. ஐந்து வீதிகளிலும் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றில் உங்கள் வீரர்கள் மறைந்திருக்க வேண்டும். எதிரி உள்ளே நன்றாக நுழையும் வரை அனுமதியுங்கள். கணிசமான படை உள்ளே நுழைந்தபின் நகரின் நான்கு புறத்தில் இருக்கும் கதவுகள் சாத்தப்படும். அப்போது நீங்கள் வெளிப்பட்டு தாக்குதலைத் துவக்கினால் ஒரு எதிரிகூட தப்ப முடியாது'' என்றான்.

நாகர் படைகளும் அவ்வாறே வட்டவடிவ தெருக்களில் இருந்த இல்லங்களுக்குச் சென்றன.

பிறகு நவவீரர்களை அழைத்தான்.

அவர்களில் ஒருவனான உத்திகனை அழைத்து ''உத்திகா, காளிசேனன் நம்மைத் தாக்கும்போது அவனது இலக்கில் ராணி குவேணியும் இருப்பாள். ஆகவே அவளைக் காப்பாற்றுவது உன் பொறுப்பு. அவள் எக்காரணத்தைக் கொண்டும் மாளிகையைவிட்டு வெளியேறாமல் மாளிகையை வீட்டுச் சிறையாக மாற்றிவிடு. துணைக்கு வேண்டுமானால் அலேச்சனை வைத்துக்கொள்'' என்று கட்டளையிட்ட விஜயன் மற்ற நவவீரர்களை அழைத்துக் கொண்டு போர் ஏற்பாடுகளை கவனித்தான். எல்லாவற்றையும் கவனித்துவிட்டு நகரின் தெற்கு வாசலுக்கருகில் வந்து சேர்ந்ததும் அபயனை அழைத்து நகரின் நான்கு வாயில் கதவுகளையும் திறந்து விடும்படிச் சொன்னான்.

விஜயனின் திட்டம் நவவீரர்களுக்குப் புரிந்தாலும் அது நிறைவேறுமா என்ற ஐயம் அவர்களுக்கு இருக்கவே செய்தது. அதை உண்மையாக்குவதுபோல் அன்று பிற்பகலில் காளிசேனனின் படை துரிதமாக நகரை நோக்கி வந்தது. சிமுகன் கூறியதுபோல் அப்படைகளின் எண்ணிக்கை ஐயாயிரமாக இல்லை. இரண்டு மடங்காக இருந்தது. விஜயன் எதிர்பார்த்தது போல் அப்படை நகருக்குள் நுழையாமல் நகரைச்சுற்றி முற்றுகையிட்டது. கணிசமான நேரம் ஆன பிறகும் அப்படை நகருக்குள் நுழைய முற்படாததால் நகரின் நாற்புரக் கதவுகளையும் மூடச் சொன்னான் விஜயன்.

நகருக்கு வெளியே பாசறை அமைத்திருந்த காளிசேனனுக்கு இது அறிவிக்கப்பட்டபோது கடகடவெனச் சிரித்தான் காளிசேனன். அவனுக்கருகில் இருந்த உதயகுமரனும் சிரித்தான்.

''சக்கர வியூக நகரத்திற்குள் நுழைய நான் என்ன முட்டாளா? எப்படி இதை எதிர்பார்த்து கதவுகளைத் திறந்து வைத்தான் விஜயபாகு? இவ்வளவுதானா இவனது சாமர்த்தியம்? நாம் உள்ளே நுழைய வேண்டிய அவசியம் இல்லை. நாம் பத்தாயிரம் பேர் இருக்கிறோம். நகருக்குள் இந்த எண்ணிக்கையில் பாதி பேர் கூட வசிக்க முடியாது. அவர்கள் வெளியே வந்துதான் ஆகவேண்டும் வந்தால் நம்மிடம் சிக்கி அழிவதைத் தவிர வேறு வழி கிடையாது. எல்லோரும் பந்தங்களைக் கொளுத்திவிட்டு சந்தோஷமாக சாப்பிடுங்கள்'' என்று குதூகலமாகச் சொன்னான் இயக்கர் குல மன்னன் காளிசேனன்.

இதேசமயம் நகருக்குள் மாளிகைக்கு முன்னால் இருந்த வெளியில் அமர்ந்திருந்த விஜயனிடம் வந்த நவவீரன் அபயன் ''தலைவரே, எதிரி நாம் எதிர்பார்த்ததுபோல் நகருக்குள் நுழையவில்லை'' என்றான் ஏமாற்றமான குரலில்.

''அது அவனது விருப்பம் அபயா. அவனை நாம் கட்டாயப்படுத்த முடியாது'' என்றான் விஜயன்.

விஜயனின் பதில் அபயனுக்கு வினோதமாக இருந்தது.

''தலைவரே, எதிரியின் எண்ணிக்கை பத்தாயிரமாக இருக்கும் என்று தோன்றுகிறது'' என்றான் அபயன்.

''இருக்கட்டும்.''

''அவன் நகருக்குள் நுழையாவிட்டால் நாம் வெளியேறிப் போய் போரிடவேண்டும்.''

''எதற்கு? அவனுக்கு ஒரு விருப்பம் இருந்தால் நமக்கு ஒரு விருப்பம் இருக்கக் கூடாதா?''

''என்ன விருப்பம்?''

''நாம் நகரைவிட்டு வெளியேறக் கூடாது''

''பிறகு போர் எப்படி நடக்கும்?''

''நடக்காவிட்டால் போகிறது.''

''நாம் உள்ளேயே இருந்தால் பட்டினி கிடக்க வேண்டி வரும்''

''எதிரிக்கும் அதே நிலைதானே?''

அபயன் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. விஜயன் தனது கேள்விகளுக்குப் பதிலைச் சொன்னாலும் அவனுக்குள் வேறு ஏதோ சிந்தனை ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அதை உறுதி செய்வது போல் அபயனை அழைத்த விஜயன் ''அபயா! காளிசேனனின் பாசறை எந்தப் பக்கம் இருக்கிறது?'' என்று கேட்டான்.

''தெற்கு வாசலுக்கு முன்னால்''

''நீ அங்கே போய் வா. காளிசேனன் ஏதாவது செய்தியனுப்பி யிருப்பான்''

அபயன் புறப்படுவதற்குள் தெற்கு புறத்திலிருந்து வந்த நாக வீரன் ஒருவன் ''ஐயா, காளிசேனனிடமிருந்து அம்பு மூலம் ஒரு செய்தி வந்திருக்கிறது'' என்று கூறி ஓலையொன்றைக் கொடுத்தான்.

அபயனுக்கு வியப்பாக இருந்தது.

ஓலையைப் படித்த விஜயன் அதை அபயனிடம் கொடுத்து படிக்கச் சொல்லிவிட்டு ''என்ன சொல்கிறாய்'' என்று கேட்டான்.

அபயனுக்கு எதையும் சொல்ல தயக்கமாக இருந்தது.

''தாங்கள் தான் சொல்ல வேண்டும்'' என்றான்.

''ஒரே வாசல் வழியாக வெளியேற சம்மதித்தால் நம்மை உயிரோடு விடுகிறானாம். இதை நம்பமுடியுமா?''

''முடியாது''

''நம்புவதாகவே வைத்துக்கொள். இரண்டாவது நிபந்தனையைப் பார்த்தாயா? குவேணியை அவனிடம் ஒப்படைக்க வேண்டுமாம். இன்னொருவன் மனைவியைத்

தன்னிடம் ஒப்படைக்கக் கோரும் காளிசேனன் மனிதனே அல்ல. முடியாது என்று பதில் அனுப்பிவிடு அபயா''

அபயன் எதுவும் பேசமுடியாதவனாய் ஒற்றைச் சொல் ஓலையை அம்பு மூலம் காளிசேனனுக்கு அனுப்பினான்.

ஓலையைப் படித்த உதயகுமரன் ''தந்தையே, கடைசியில் நான் சொன்னதுதான் நடந்திருக்கிறது. விஜயபாகு எதற்கும் அஞ்சுபவன் அல்ல. நீங்கள் குவேணியை அனுப்பி வைக்கும்படி போட்டிருந்த நிபந்தனை தவறு'' என்றான்.

''என்ன தவறு?'' கடுப்புடன் கேட்டான் காளிசேனன்.

''குவேணி விஜயபாகுவின் மனைவி. அவளை உங்களிடம் ஒப்படைக்கும்படி கேட்டால் எப்படி ஒப்புக் கொள்வான்?''

''முட்டாள். நமக்கு விஜயபாகுவைவிட குவேணி முக்கியம். அவள் அரியணைக்கு உரிமையுள்ளவள். அவள் உயிரோடு இருக்கும்வரை நமக்கு நிம்மதியில்லை. அரியணையில் நீ அமரமுடியாது. ஆகவேதான் அவளை ஒப்படைக்கும்படி கேட்டேன்''

''அதற்கு இதுவா நேரம்? அவன் அவளை மணந்து கொள்வதற்கு முன்னால் உங்களோடுதானே இருந்தாள்? அப்போதே அவளைக் கொன்றிருக்கக் கூடாதா?''

''அவள் இப்படி மோசம் செய்வாள் என்று நான் எதிர்பார்க்கவில்லையே! நம்மவளாக இருப்பாள் என்று எண்ணி ஏமாந்து விட்டேன்''

''சரி. இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?''

''அவனுக்குத் தன்னையும் குவேணியையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்காக அவன் சரணடையாமல் இருக்க மாட்டான்''

காளிசேனன் இவ்வாறு சொல்லிமுடித்து சிறிது நேரத்திலேயே விஜயனிடமிருந்து ஓலையொன்று வந்தது.

''காளிசேனா, இக்கட்டான நிலையில் நான் இருப்பது உண்மை. உன்னுடைய பெரும் படையை மீறி நான் தப்புவதோ

வெற்றி பெறுவதோ முடியாத காரியம். நீ கூறியது போல் தெற்கு வாசல் மூலமாக நாங்கள் இரண்டிரண்டு பேராக வரிசையாக வெளியே வருகிறோம். நாங்கள் தப்புவதற்கு உதவி செய். இந்த விஜயஸ்வீபம் உனக்கே சொந்தம். நாங்கள் போய்விடுகிறோம். ஆனால் குவேணியை மட்டும் கேட்காதே. அவள் என் மனைவி. அவளை நான் மிகவும் நேசிக்கிறேன்''-

என்று எழுதியிருந்தான் விஜயன்.

அதைப் படித்ததும் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்ட காளிசேனன் ''இப்போது என்ன சொல்கிறாய் உதயகுமரா?'' என்று கேட்டான்.

''நான் இதை எதிர்பார்க்கவில்லை. விஜயபாகு மகாவீரன் என்று நினைத்தேன்'' என்றான் உதயகுமரன்.

''முட்டாள் மகனே. தவறான கணக்குகளைப் போடும் போது வீரன் முட்டாளாகிறான். விஜயபாகுவிற்கு வேட கம்பீரனை வெற்றி கொண்ட விஷயமே அசட்டு தைரியத்தைக் கொடுத்திருக்கிறது. என்னையும் வேடர் குல முட்டாளாகவே நினைத்து விட்டான் பாவம். அதோடு உண்மைநிலை அப்படி இருக்கிறது. இங்கே விஜயபாகு என்ன அவன் தந்தை சிகபாகுவாகவே இருந்தாலும் இந்த முடிவிற்குத்தான் வரமுடியும். சரிசரி. வீண்பேச்சு வேண்டாம். ஆணவம் பிடித்த விஜயபாகுவிற்கு தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். முதலில் அவனும் அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் ஆயுதம் தரிக்காமல் தெற்கு வாயில் வழியாக வெளியே வரவேண்டும் என்று செய்தி அனுப்பு. எல்லோரும் வெளியேறிய பின் இரண்டு பக்கமும் சூழ்ந்து கொண்டு எல்லோரையும் கொல்வோம். ஓலையை அனுப்பிவிட்டு மற்ற மூன்று வாசல்கள் முன்னால் இருக்கும் நம்மவர்களுக்கும் செய்தியனுப்பிவிடு'' என்று தெம்புடன் கூறினான் காளிசேனன்.

காளிசேனனின் மனம் கனவுலகில் மிதந்தது. தன்னைக் குவேணி காலை வாரிவிட்டாலும் தன் அதிஷ்டம் தனக்கு கைகொடுக்கிறது என்று நினைத்தான். நாக தீபத்திற்கு உரிமையுள்ளவனைக் கொன்றுவிட்டு அரியணை ஏறியபோது கைகொடுத்த அதிஷ்டம்தான் தற்போதும் துணை நிற்கிறது

என்று கருதிய அவன் ''வா. விஜயபாகு. வா. வெளியே வா. குவேணியையும் அழைத்து வா. எல்லாரையும் அழித்துவிட்டு உங்கள் இருவரைமட்டும் தோலை உரித்து இதே தெற்கு வாசலில் தொங்கவிட்டு எனக்குத் தெரிந்த சித்திரவதைகளையெல்லாம் செய்கிறேன். அதற்குப் பிறகு என்னை வெல்ல நினைக்கும் எண்ணம் நாய் நரிகளுக்குக்கூட வராது'' என்று கறுவிக் கொண்டான். உடல் தெம்படைந்தது. தனது வீரர்கள் விஜயனை வெளியேற்றத் தயாராகி வருவதைக் கண்டு திருப்தியடைந்த அவன் ஒரு கோப்பை மதுவை வரவழைத்து ஆனந்தமாகக் குடித்துவிட்டு வீரர்களுக்கு கொடுக்கும்படிச் சொன்னான். விரைவிலேயே அவனது வீரர்கள் கூத்தாடினார்கள்.

இந்நிலையில் நகரின் உள்ளேயிருந்து விர்விர்ரென தீயம்புகள் காளிசேனனின் படைக்குப் பின்புறத்தில் வந்து விழுந்தன. காளிசேனனின் வீரர்கள் மதுக் கலக்கத்தில் இருந்ததால் ஏதோ மாயா ஜாலம் நடப்பதாக எண்ணி ஆட்டம் போட்டார்கள். ஆனால் தொடர் எரியம்புகள் வந்து விழுந்து பின்புறக்காடு தீபற்றிக் கொண்டதால் காளிசேனனின் வீரர்கள் சற்றே தெளிந்தார்கள். காளிசேனனும் இந்தத் திடீர் நடவடிக்கையைக் கண்டு அதிர்ந்தான். எரியம்புகள் சரமாரியாக வந்து கொண்டிருந்த அதே நேரத்தில் தெற்கு வாசல் கதவு திடீரெனத் திறக்கப்பட்டது. அதன் வழியாக வெளிப்பட்டச் சுமார் இருநூறு நாக வீரர்கள் காளிசேனனின் வீரர்களை கண்டபடி வெட்டத் துவங்கினார்கள். காளிசேனனின் வீரர்கள் பின்னடைய முடியாமல் காட்டுத் தீ தடுத்தது. காட்டிற்கும் தெற்கு வாசலுக்கும் இடையே சிக்கிய வீரர்களை நாக வீரர்கள் புயல் வேகத்தில் வெட்டிவிட்டு தெற்கு வாசலுக்குள் புகுந்து மறைந்தார்கள். கதவு சாத்தப்பட்டது. அப்போது உள்ளேயிருந்து பறையொலிகள் எழுந்தன. அவ்வொலி நின்றதும் ஒற்றை முரசொன்று ஒலித்தது. அதையடுத்து மூன்று முரசுகள் விட்டுவிட்டு தொடர்ந்து ஒலித்தன.

காளிசேனன் மலைத்தான் இந்தத் திடீர் தாக்குதலால். சில நிமிடங்களில் நூற்றுக்கணக்கான வீரர்கள் மாண்டுவிட திகைத்துப்போன அவன் தனக்குப் பின்னால் காட்டு மரங்கள் பற்றி எரிவதைக் கண்டான். அப்பக்கமாகப் போக முடியாது

என்பதை உணர்ந்ததும் ''வீரர்களே! நம்மிடம் இருக்கு வாணங்களைக் கொளுத்தி நகருக்குள் வீசுங்கள். அம்புகளை எய்யுங்கள். இரு பக்கங்களில் இறக்கையை போல விரியுங்கள்' என்று கட்டளையிட்டான். அச்சமயத்தில் பலதிசைகளிலிருந்து பெருத்த ஆரவாரங்கள் எழுந்தன.

நகருக்குள்ளிருந்து சமிக்ஞைகள் எழுந்ததால் கிழக்குப் பக்கம் கடற்கரைப் பகுதியில் அணிவகுத்திருந்த சிமுகனின் ஆயிரத்து ஐநூறு வீரர்களும், காட்டுப் பகுதியில் வடக்கே இருந்த ஆயிரத்து ஐநூறு வீரர்களும் மற்றும் மேற்கு திசையில் குன்றுக்குப் பின்னாலிருந்த புரவி வீரர்களும் வாட்களை உருவிக்கொண்டு நகரை நோக்கிப் பாய்ந்தார்கள். நகரைச் சுற்றி முற்றுகையிட்டிருந்த காளிசேனனின் வீரர்கள் இந்தத் திடீர் தாக்குதலை சிறிதும் எதிர்பார்க்காததால் குழம்பினார்கள். அந்தக் குழப்பத்தில் அவர்கள் மீது கோரத்தாக்குதல் நடந்தது. அதோடு நகரின் நான்கு வாயில்களும் திறந்தன. அவற்றிலிருந்து நாக வீரர்கள் வெளிப்பட்டுத் தாக்கினார்கள். இப்படி நகரைச் சுற்றி முற்றுகையிட்டிருந்த காளிசேனனின் வீரர்கள் இரு புறங்களிலும் தாக்கப்பட்டதால் பாக்கு வெட்டியில் சிக்கியவர்களைப் போல் சிக்கித் தவித்தார்கள். வாளை தூக்குவதற்கு முன் அவர்களது தலை வெட்டப்பட்டது.

தெற்கு வாசலில் வெளிப்பட்ட நாகர் படைக்கு விஜயனே தலைமை ஏற்று வந்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு போரில் ஈடுபட்டதால் வாட்போரை ஆக்ரோஷமாகச் செய்து காளிசேனன் வீரர்களை அதாஹதம் செய்தான். அவனது வாள்பட்டு உதயகுமரனும் மரணமடைந்தான். காளிசேனனைக் காணாததால் அவனைத் தேடும்படி உத்தரவிட்ட விஜயன் தன் வாளுக்கு மேலும் பலரை இரையாக்கினான். ஏறக்குறைய இதே நிலை நான்கு வாயில்களுக்கு வெளியில் நடந்ததால் காளிசேனனின் வீரர்கள் சின்னாபின்னமானார்கள். செத்தவர்கள் போக சாவுக்குத் தப்பியவர்கள் சிதறி யோடினார்கள். ஆனால் விகர்ணன் மற்றும் பகீரதனின் தலைமையில் இயங்கிய புரவிப்படை அவர்களை மடக்கி வீழ்த்தியது. காளிசேனன் பிடிபட்டதாக செய்தி வரவே போரை நிறுத்தும் தாரைகளை ஊதச் சொன்னான் விஜயன்.

விரைவிலேயே போர் நின்று வெற்றி கோஷங்கள் எழுந்தன.

விஜயனின் வெற்றிப்படை நகருக்குள் விரைந்தது.

நட்ட நடுவே மாளிகைக்கு முன்புறம் இருந்த வெட்ட வெளியில் நிறுத்தப்பட்டான் காளிசேனன். தனது மகன் இறந்துவிட்ட கணத்திலேயே தன் கனவு சிதைந்து போனதை உணர்ந்து கொண்ட காளிசேனன் ஏமாற்றமும் கோபமும் அடைந்தவனாய் தனக்கு முன்னேயிருந்த விஜயனைப் பார்த்து ''விஜயபாகு! நீ காட்டைக் கொளுத்தியது யுத்த தர்மமாகாது'' என்றான் கடுப்புடன்.

''மாற்றான் மனைவியை ஒப்படைக்கும்படிக் கேட்ட நீ யுத்த தர்மம் பற்றிப் பேசுவது விநோதமாயிருக்கிறது. சொல்லப் போனால் நான் காட்டை கொளுத்தியிருக்கக் கூடாது. உங்களைத்தான் கொளுத்தியிருக்க வேண்டும்'' என்றான் விஜயன்.

''என்னை என்ன செய்வதாக உத்தேசம்?''

''உத்தேசத்தில் எந்தவிதமான தயக்கமும் இல்லை. எப்போது நாகதீபம் என் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டதாகச் சொன்னேனோ அப்போதே முடிவு செய்து விட்டேன் அதற்குத் தடையாய் இருக்கும் யாரையும் உயிரோடுவிடக் கூடாதென்று. வேகனும் விவேகனும் விரைவில் அழிக்கப்படுவார்கள். உன் மகன் உதயகுமரன் போரில் வீரமரணமடைந்து விட்டான். நீயும் வீரமரணம் அடைந்திருக்கலாம். நீயோ ஓடி ஒளிய முயன்றிருக்கிறாய். ஆகவே உன்னை இங்கேயே இப்போதே கழுவேற்றுகிறேன்''

''விஜயபாகு! கழுவேறப் போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் என்னோடு பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று மட்டும் கனவு காணாதே. இயக்கர்கள் முற்றிலுமாக அழிந்து விடவில்லை. என் மரணத்திற்குப் பிறகு அவர்கள் வாளாயிருக்க மாட்டார்கள்'' என்று நிர்ப்பயமாகச் சொன்னான் காளிசேனன்.

''எதிர்ப்புகளும் பிரச்சினைகளும் இல்லாத இடமும் இல்லை. மன்னனுமில்லை. அவற்றை எதிர்கொள்ள

எப்போதும் காத்திருக்கிறேன்'' என்று சொன்ன விஜயன் அருகில் இருந்த நவவீரர்களை நோக்கி ''காளிசேனனைக் கழுவில் ஏற்றுங்கள்'' என்று உத்தரவிட்டான்.

அனைவரது முன்னிலையில் . காளிசேனன் கழுவேற்றப்பட்டபோது பந்தங்கள் படபடத்தன. வானத்தில் கருமேகங்கள் தழைக்கத் தொடங்கின.

அப்போது உடம்பெல்லாம் ரத்தம் சொட்டச் சொட்ட அங்கே வந்தார்கள் நவவீரர்களான உத்திகன் மற்றும் அசேலனன் ஆகியோர்.

அவர்களது கோலத்தைக் கண்டு ''என்ன விஷயம்?'' என்று கேட்டான் விஜயன்.

''மோசம் போய்விட்டோம் தலைவரே. காளிசேனனின் வீரர்கள் ராணி குவேணியைக் கொன்று விட்டார்கள்'' என்று சொல்லி விலகினார்கள்.

பின்னால் புரவியொன்றின் மீது கிடந்தது குவேணியின் சடலம்!

◈◈◈

## அத்தியாயம் எண்பத்தேழு

# புதியவழி

காளிசேனன் முற்றுகையைத் தொடங்கியபோது மாளிகையின் உச்சியிலிருந்து அதைக் கவனித்த குவேணி காவலுக்கு நின்றிருந்த உத்திகனிடம் ''வீரரே, காளிசேனனின் படைகள் முற்றுகையிட்டிருக்கிறதே, என்ன செய்வதாக மன்னர் உத்தேசித்திருக்கிறார்?'' என்று கேட்டாள்.

''தெரியவில்லை ராணி. ஆனால் அவருக்குத் தெரியாத உத்தியா? நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்றான் உத்திகன்.

''காளிசேனனின் படை அதிகமாக இருக்கும் போலிருக்கிறதே?'' என்றாள் குவேணி.

''காளிசேனனிடம் பலம் இருக்கலாம். தலைவரிடம் சாமர்த்தியம் இருக்கிறது. அவர் பார்த்துக்கொள்வார்''

அந்த நம்பிக்கை அவளுக்கும் இருந்தது. அதேசமயம் காளிசேனன் எந்த வஞ்சகத்திற்கும் தயங்காதவன் என்பதும் அவளுக்குத் தெரிந்திருந்ததால் சற்று அச்சப்படவே செய்தாள்.

''வீரரே, அவ்வப்போது நடக்கும் சம்பவங்களை அறிந்து கொண்டு வந்து எனக்குச் சொல்லுங்கள்'' என்றாள்.

உத்திகனும் காளிசேனன் அனுப்பிய ஓலையைப் பற்றியும் அதற்கு விஜயன் அனுப்பிய ஓலையைப் பற்றியும் சொன்னான். விஜயன் நவவீரர்களிடம் காளிசேனன் ஓலையைப் பற்றிப் பேசியதையும் கூறியபோது விஜயனை நினைத்து பெருமைப்பட்டாள் குவேணி. ''என்ன தைரியமிருந்தால் என்னை ஒப்படைக்கும்படி அவரிடமே கேட்டிருப்பான் இந்தக் காளிசேனன்?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

ஆனால் அவளுக்குள் ஏதோ சங்கடம் உண்டானதால் உத்திகனிடம் ''வீரரே, எனக்கோர் உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டாள்.

''சொல்லுங்கள் ராணி''

''நான் என் குலதெய்வத்தை வழிபட வேண்டும்''

''இதற்கு என் உதவி எதற்கு ராணி? தாராளமாக வழிபடுங்களேன்''

''குலதெய்வத்தின் கோயில் இங்கில்லை. வெளியில் இருக்கிறது''

''வெளியிலா? மன்னிக்க வேண்டும் ராணி. இந்நகரை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு எது சொன்னாலும் கேட்கிறேன்''

''ஏன் அப்படி?''

''தலைவர் உத்தரவு அப்படி. இந்த மாளிகையை விட்டு வெளியேறாமல் பார்க்கும்படி எனக்கு கட்டளை யிட்டிருகிறார் தலைவர்''

''வீரரே, நான் குலதெய்வத்தின் கோயிலுக்குச் செல்லும் காரணம் உங்களுக்குத் தெரியுமா?''

''கோயிலுக்கு எதற்காகச் செல்லப்போகிறீர்கள் ராணி? வேண்டிக்கொள்ளத் தானே! ஏதோ நல்ல விஷயம். வேறென்ன இருக்கப் போகிறது?''

''இப்போரில் உங்கள் தலைவர் வெற்றிபெற வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப் போகிறேன்''

''இங்கிருந்து வேண்டிக் கொள்ள முடியாதா ராணி?''

''என் குலதெய்வத்தின் சக்தி உங்களுக்குத் தெரியாது வீரனே. முன்பு அதன் முன் வேண்டிக் கொண்டதால்தான் நான் ராணியானேன். அதேபோல் வேண்டிக் கொண்டால் அவர் போரில் வெற்றி பெறுவார்''

''அவர் திறமை மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா ராணி?''

''காளிசேனன் மகாவஞ்சகன். அவனை நினைத்தால் கவலையாக இருக்கிறது''

''காளிசேனனைவிட மோசமானவர்களைக் கண்டவர் தலைவர். நீங்கள் கவலைப்பட வேண்டாம்''

''வீரனே, என் மனவேதனை புரியாமல் பேசிக்கொண்டிருக் கிறாய்?''

''ராணி, தலைவரின் கட்டளையை சற்று யோசித்துப் பாருங்கள். நீங்கள் வெளியேறுவது ஆபத்து என்பதால் தான் அவ்வாறு கூறியிருக்கிறார்''

''உதவிக்கு நீங்களும் அசேலனும் வாருங்களேன்''

''இப்போது காளிசேனனின் படைகள் நகரைச்சுற்றி முற்றுகையிட்டிருக்கின்றன. இப்போது எப்படி நகரைவிட்டு வெளியேற முடியும்?''

''வேறு வழியைச் சொன்னால் அனுமதிக்கிறீர்களா?''

''ராணி, எங்கள் நாட்டில் சீதை என்ற உத்தமி ஒருத்தி இருந்தாள். அவளைத் தாண்ட வேண்டாம் என்று மந்திரக்

கோடொன்றை போட்டான் அவளது மைத்துனன். சீதையோ எச்சரிக்கையை மீறி கோட்டை தாண்டினாள். ராவணனிடம் சிக்கிக் கொண்டாள். அந்த மந்திரக் கோட்டைப் போன்றது தான் தலைவரின் கட்டளை அதை மீறவேண்டாம்''

''வீரரே, இங்கே உங்கள் தலைவர் பெரியவரா? ராணி பெரியவளா?''

''தாங்கள் தான். ஆனாலும்...''

''இது ராணியின் கட்டளை. நீங்களும் அசேலனும் இரண்டு புரவிகளோடு இந்த மாளிகையின் பின்புறம் வாருங்கள்''

குவேணி எதற்காக அங்கே வரச்சொல்கிறாள் என்பது புரியாமலும் அவளது கட்டளையை மீறமுடியாமலும் உத்திகன் இரண்டு புரவிகளோடும் அசேலனோடும் மாளிகையின் பின்புறத்திற்கு வந்தான். அங்கே ஏற்கனவே வந்திருந்த குவேணி அவற்றில் இருந்த விசையொன்றை அழுத்தியதும் அதற்கு அருகே இருந்த கல்மேடை நகர்ந்து சுரங்கப்பாதை தெரிந்தது. அதைக்கண்டு இரு வீரர்களும் வியந்தார்கள்.

''இது இருப்பது எங்களுக்குத் தெரியாது'' என்றான் உத்திகன்.

''சுரங்கப் பாதை எல்லோருக்கும் தெரிந்து விட்டால் அதற்கு அர்த்தமில்லை. எனக்கேகூட இது தெரியாது. சமீபத்தில் தான் அவர் இதைக் காட்டினார். நேரம் கடத்த வேண்டாம். புறப்படுங்கள்''

சுரங்கப் பாதையில் அனைவரும் நுழைந்ததும் குவேணி உள்ளே இருந்த விசையை நகர்த்தி சுரங்கவாயிலை மூடினாள்.

சுரங்கப்பாதை நன்றாகவும் அகலமாகவும் இருந்தது. அதேசமயம் நீண்ட தூரத்திற்கு இல்லை. நகருக்கு மேற்கே சிறிது தூரத்திலேயே முடிந்தது. விசையை இயக்கி வாயிலைத் திறந்தாள் குவேணி. சுரங்கப் பாதை நடுக்காட்டுப் பகுதியில் முடிந்திருந்தது. எல்லோரும் வெளியேறியபின் சுரங்க வாயிலை மூடினாள் குவேணி. அவள் ஒரு புரவி மீதும் வீரர்கள் இருவர் மற்றொரு புரவி மீதும் அமர்ந்து புரவிகளை முடுக்கிவிட அவை பாய்ந்தோடின.

அவர்கள் புறப்படும்போது இரவாகிவிட்டிருந்தது இருந்தாலும் பிசாசுகள் போல அவர்கள் பயணம் செய்து குலதெய்வக் கோயிலை அடைந்தார்கள்.

குலதெய்வமான சேதியா சிலையின் முன்பு விழுந்து வணங்கி எழுந்த குவேணி, ''எங்கள் குலம் காக்கும் தெய்வமே! அன்று உன் முன் சத்தியம் செய்த வங்கதேசத்து அரசகுமாரர் சொன்னபடியே என்னை அரியணையில் அமர்த்திவிட்டார். ஆனால் அவர் இன்று ஆபத்தான நிலையில் இருக்கிறார். அவரை நீதான் காக்கவேண்டும். அவர் வெற்றிபெற நீதான் துணைசெய்ய வேண்டும்'' என்று வாய்விட்டே வேண்டினாள்.

''அது முடியாத காரியம் குவேணி. நம்குலத்திற்கு துரோகமிழைத்த உனக்கு நம் குலதெய்வம் உதவாது'' என்ற குரலொன்று ஒலிக்க அங்கே இயக்கர் குல புரவி வீரர்கள் பத்துபேர் தோன்றினார்கள்.

அவர்கள் காளிசேனனின் வீரர்கள் என்பதை உணர்ந்து கொண்ட குவேணி ''துரோகம் செய்தது நானல்ல. காளிசேனன் தான். என் தந்தையைக் கொன்று அரியணைக்கு வந்தவன் அவன்'' என்றாள்.

''நமக்குள் தீரவேண்டிய பிரச்சினை அது. நீயோ அதற்குள் வங்க நாட்டவனை நுழைத்து அன்னியனுக்கு இடமளித்து விட்டாய். நீ அரியணையில் அமர்ந்ததிலிருந்து உன்னை எதிர்பார்த்து இங்கே காத்திருக்கிறோம். எங்களை அதிக நாட்களுக்கு காத்திருக்க வைக்காமல் இன்றைக்கு வந்து விட்டாய். மிகவும் நன்றி. இந்தா. இதை வாங்கிக்கொள்'' என்று சொல்லி ஒருவன் குறுவாளை எறிய குவேணி சற்றே நகர்ந்து தப்பினாள்.

உத்திகனும் அசேலனும் வாட்களை உருவி காளிசேனனின் வீரர்கள் மீது பாய்ந்தனர். குவேணியும் வாளெடுத்து சுழற்றவே உக்கிரமான போர் அங்கே துவங்கியது. ஆனால் காளிசேனனின் வீரர்கள் போர் செய்து கொண்டிருக்க விரும்பாமல் வந்த காரியத்தை முடிக்கத் தீர்மானித்தவர்களாய் போருக்கு இடையே குறுவாட்களை இடது கையால் எடுத்து குவேணியின் மீது எறிந்தார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட குறுவாட்கள் தாக்கியதால்

குவேணி நிலைகுலைந்து கீழே விழுந்தாள். அதைக் கண்டதும் ஒருவன் ''வேலை முடிந்துவிட்டது. புறப்படுங்கள்'' என்று கூறவே காளிசேனனின் வீரர்கள் அந்த இடத்தைவிட்டு அகன்றார்கள்.

உடம்பில் பல ரத்த காயங்களை அடைந்திருந்த உத்திகனும் அசேலனும் கீழே விழுந்து கிடந்த குவேணியை நெருங்கினார்கள். அவளது தோளிலும் மார்பிலும் ஐந்து குறுவாட்கள் பாய்ந்து உடம்பு முழுவதும் ரத்தத்தால் நனைந்திருந்தது. அந்த ரத்தத்தைக் கழுவ வந்தது போல் சில தூறல்கள் விழுந்தன. காற்றும் அவளது உடலுக்கு ஆறுதல் சொல்வது போல் பலமாக வீசத் தொடங்கியது. குவேணி இறந்து விட்டதை உறுதி செய்து கொண்ட நவவீரர்கள் இருவரும் அவளது உடலிலிருந்த குறுவாட்களை அகற்றி உடலைப் புரவியின் மீது கிடத்தினார்கள்.

''பெண்கள் மட்டும் பிடிவாதம் பிடிக்காமல் இருந்தால் எத்தனையோ சரித்திரங்கள் மாறிப் போயிருக்கும். இதை நாம் உணர்கிறோம். ஆனால் அவர்கள் உணர்வதில்லை. இதெல்லாம் தெரிந்துதானோ என்னவோ ராணியை சிறைவைக்கச் சொன்னார் தலைவர். ராணியோ பிடிவாதம் பிடித்து தன் அதிகாரத்தைக் காட்டினார். அழிவைத்தேடி வந்து பெற்றுக் கொண்டார். இது அவசியம் தானா அசேலா?'' என்று கேட்டான் உத்திகன்.

''நாம் பேசிக் கொண்டிருந்தால் இந்த உடலைக்கூட தலைவரிடம் நம்மால் ஒப்படைக்க முடியாமல் போய்விடும். அங்கே போர் என்னாயிற்றோ தெரியவில்லை. புறப்படுவோம் வா. சுரங்கம் மூலமாகவே போய் விடலாம்'' என்றான் அசேலன்.

★★★

நடந்தவற்றையெல்லாம் ஒரே மூச்சில் கூறிவிட்டு உத்திகனும் அசேலனும் மயங்கி விழுந்தார்கள். அவர்களை வைத்தியரிடம் கொண்டு செல்லும்படிக் கூறிய விஜயன் புரவி மீதிருந்த குவேணியின் உடலை எடுத்து தரையிலேயே கிடத்தி ஒரு கணம் அந்த உடலையே உற்றுப்பார்த்தான். உயிரற்று

இருந்தாலும் அவளது முகத்திம் மட்டும் களை குலையாமல் இருந்தது.

''நீங்கள் கூறியது பலித்து விட்டது பார்த்தீர்களா?''

''எதைச் சொல்கிறாய் குவேணி?''

''உங்களை விரும்பிய பெண்களும் மணந்த பெண்களும் உயிரோடு வாழ்ந்ததில்லை என்றும் அகால மரணமடைவார்கள் என்றும் சொன்னீர்களே - அது பலித்து விட்டது இல்லையா?''

ஒருவித பிரமையால் இப்படி குவேணி பேசுவது போல் தோன்றியது விஜயனுக்கு.

இரண்டு நாட்களுக்கு முன் அவளை ஜீவனுள்ள ராணியாகப் பார்த்து கொண்டாட்டம் போட்ட வீரர்கள் ஜீவனில்லாத அவளது உடலை அமைதியாகப் பார்த்துவிட்டுக் கலைந்தார்கள்.

அவர்களைப் போலவே குவேணியின் உடலைக் காண வந்த நிலவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது போல் வானில் கருமேகங்கள் சூழ்ந்தன.

அதையடுத்து மழையும் கனமாகப் பெய்யலாயிற்று.

குவேணியின் உடலை அப்படியே தூக்கிச் சென்று மாளிகைக்குள் வைத்த விஜயன் தனக்குப் பின்னாலிருந்த நவ வீரர்களிடம் ஏதோ சொல்லவே அவர்கள் அங்கிருந்து அகன்றார்கள். பொழுதும் இருண்டபடியே விடிந்தது.

விஜயனின் உபதலைவர்களும் நாகர் உபதலைவன் நாகமுத்துவும் இயக்கர்குல சிமுகனும் போர் முடிந்தபின் மேற்கொள்ள வேண்டிய காரியங்களை மேற்கொண்டார்கள். போரிலே வீரமரணமெய்திய வீரர்களின் உடல்களைத் திரட்டி நகருக்கு வெளியே காட்டுப் பகுதியில் சேர்க்கும் பணியில் இறங்கினார்கள். போர்க்கறைகளைத் துடைக்க வந்தது போல் பெய்த மழை விரைவிலேயே நின்று அதற்குக் காரணமான கருமேகங்களை அழைத்துச் சென்று விட்டபடியால் வானம் வெளுத்தது. வெற்றி பெற்ற விஜயஸ்வீபத்தை வாழ்த்த வந்தது போல் வெளிப்பட்டக் கதிரவன் தனது வெள்ளிக் கிரணங்களை நகரெல்லாம் பாய்ச்சி பிரகாசிக்கச் செய்தான்.

தங்களுக்கான மாமிசப்படையல்களையும் ரத்தச் சேற்றையும் உண்ண முடியாமல் தடுத்துவிட்டத் திடீர் மழையை சபித்தபடி மரங்களில் முடங்கிக் கிடந்த பட்சிகளும் காடுகளில் பதுங்கிக்கிடந்த நரிகளும் கருமேகங்கள் கலைந்துபோய் கதிரவன் கண்திறந்ததும் தங்கள் சொர்க்கமே திறந்தது போல் களிப்படைந்து இருப்பிடங்களை விட்டு வெளியே வந்து மலைமலையாகக் குவிக்கப்பட்டிருந்த உடல்களை நெருங்கி வரலாயின. தங்களது உணவு மலைபோல் குவிந்து கிடந்ததைக் கண்டு மலைத்துப்போன கழுகுகள் மலைப்பிலேயே மதி மயங்கி வானத்தில் சுற்றிச் சுற்றிப் பறந்தன. ஆனால் நரிகளோ பறவைகளைப் போல மதிகெடாமல் கருமமே கண்ணாக இருந்து பற்களால் உடல் பகுதிகளைக் கடித்து கிடைத்த மாமிசத் துண்டுடன் காடுகளுக்கு ஓடின. நரிகள் இவ்வாறு தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்து கொண்டு போனதைக் கண்ட பின்பே தெளிவடைந்த கழுகுகள் தங்கள் பங்கிற்கு மாமிசங்களைக் கொத்திக்கொண்டு பறந்தன. யமகாதகக் கழுகொன்று உடலொன்றிலிருந்து கண்ணைப் மட்டும் தனது அலகினால் பிடுங்கிக் கொண்டு நடுமாளிகையின் உச்சியில் அமர்ந்திருந்த விதமானது பயங்கர அழகாக இருந்தது.

நேரமாக ஆக இவற்றின் தொல்லைகளால் வீர உடல்கள் மேலும் சேதமாகிவிடும் என்பதை உணர்ந்த உபதலைவர்கள் உடல்களை எரித்தும் புதைத்தும் வீரவணக்கம் செய்தார்கள். அதையடுதது குவேணியின் உடலும் நகருக்குக் கிழக்கே கடற்கரை பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டு கல்லொன்று ஊன்றப்பட்டது.

கொண்டாடி மகிழவேண்டிய வீரர்கள் குவேணியின் மரணத்தால் திண்டாடித் திணறியதைக் கண்டான் விஜயன். அவனது உள்மனமும் அழுது கொண்டுதான் இருந்தது. யாராலும் மறக்க முடியாத இரவை எண்ணி அழவும் முடியாமல் ஆடிப்பாடவும் முடியாமல் சங்கடப்பட்ட வீரர்கள் முன் தோன்றிய விஜயன் ''வீரர்களே! உங்கள் ராணி மாண்டு போனது தாங்க முடியாத சோகம்தான். அதேசமயம் இங்கே வீரமரணமடைந்த வீரர்களின் மறைவு அதற்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல. அவர்களைப் போரில் வீழ்த்தி என் வெற்றிக்கு

வழிவகுத்த நீங்கள் சோகத்தால் சோர்வடைய வேண்டாம். மரணங்கள் இல்லாத வெற்றிகள் இல்லை. சோகங்கள் படியாத சுகங்கள் இல்லை. ஆகவே கவலைகளை மறந்து எல்லோரும் வெற்றியினைக் கொண்டாடுங்கள்'' என்று அறிவித்தான்.

வீரர்கள் எல்லோரும் அவனைப் பாராட்டியபடி அன்றெல்லாம் விழா கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

மறுநாள் உபதலைவர்கள் வந்து போர்ச்சேதங்களைப் பற்றி முறைப்படி தெரிவித்தார்கள்.

''எங்கள் தரப்பில் வீரமரணம் எய்தியது ஐநூற்று இருபத்தெட்டு பேர். காயமடைந்தது இருநூற்றி பன்னிரெண்டு பேர்'' என்றான் இயக்கர் குலத்தலைவன் சிமுகன்.

''நாகர் தரப்பில் நூற்றுதொண்ணூற்று இரண்டு பேர் வீரமரணம் அடைந்தார்கள். இருபத்து ஒன்பது பேர் காயமடைந்திருக்கிறார்கள்'' என்றான் நாகர் தலைவன் நாகமுத்து.

விகர்ணனும் பகீரதனும் தங்கள் புரவிப் படையில் யாரும் இறக்கவில்லை என்றும் இருபது பேர் காயமடைந்திருப்ப தாகவும் சொன்னார்கள்.

''காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறதா?'' என்று கேட்டான் விஜயன்.

''ஒன்றும் குறைவில்லை'' என்று எல்லோரும் தெரிவித்ததும் அமைதியடைந்தான் விஜயன்.

இரண்டு நாட்களுக்கு குவேணியின் இழப்பால் உள்ளார்ந்த சோகத்துடன் அமைதியாக இருந்தான் விஜயன்.

தன் வெற்றிக்கு வேண்டிக் கொள்வதற்காகப் போனாலும் தன் கட்டளையை மீறி அவள் போனது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆரம்ப காலங்களில் விவேகியாகவும் தைரியமாகவும் செயல்பட்ட குவேணி இக்கட்டான நேரத்தில் அவசரப்பட்டு விட்டதால் தன்னையே இழக்க நேரிட்டதை நினைத்த அவனுக்கு ''ஏன் இப்படி?'' என்று கேட்டுக் கொள்ளத் தோன்றியது. அவளது வரவும் பிரிவும் எதிர்பாராதது. அதேசமயம் அவள் பிரியவேண்டும் என்பது அவனது

விருப்பமாக இருக்கவில்லை. அதனால் தான் அவளது அன்பை மதித்து அவளை அரியணையில் அமர்த்தினான். விதி தற்போது அவளை விலக்கி நாகதீபத்து அரியணைக்குத் தன்னை உரிமையாளனாக ஆக்கியிருந்தாலும் அவனுக்கென்னவோ அசதியாக இருந்தது.

அந்த அசதியைப் போக்க வந்தவர்கள் போல் போர் முடிந்து பதினைந்து நாட்கள் கழித்து மூன்று பேர் விஜயஸ்வீபத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் பெருவியப்பெய்திய விஜயன் ''சுவாமி, தாங்களா?'' என்று வினவினான்.

''ஏன், என்னை இங்கே எதிர்பார்க்கவில்லையா?'' என்று கேட்டார் விஜயனை நாகதீபத்திற்கு அனுப்பிய தேவபுத்தர்.

அவரது வரவும் தோற்றமும் பேச்சும் மிகவும் இதமாக இருந்தது விஜயனுக்கு.

''தங்களை எப்படி நான் எதிர்பார்க்க முடியும் சுவாமி?'' என்று கேட்டான் விஜயன்.

''நீ இங்கு வந்தபின் டெமிட்ரியஸை அனுப்பினாய் சதுர்வேதியைச் சந்திக்க. சதுர்வேதி என்னை வந்து சந்தித்தார். நீ எப்படியும் நாகதீபத்தை உன் ஆதிக்கத்திற்கு கொண்டு வந்திருப்பாய் என்று எதிர்பார்த்தோம். மேற்கொண்டு நடக்க வேண்டியவைகளை வழிநடத்த உடனே புறப்பட்டு வந்தோம். சிறிய மரக்கலத்தில் வந்ததால் மாதிட்டை துறைமுகத்திற்கே வந்து இறங்கி இங்கே வந்தோம்'' என்றார் தேவபுத்தர்.

அவருடன் வந்த சதுர்வேதியும் டெமிட்ரியஸும் தலையாட்டினார்கள்.

''வங்கதேசத்தை விட்டு புறப்பட்டதிலிருந்து ஏதேதோ நடந்து விட்டது சுவாமி. சதுர்வேதியின் நண்பர்கள் மூவரையும்'' என்று ஆரம்பித்த விஜயனைத் தடுத்த தேவபுத்தர் ''எல்லாம் தெரியும் விஜயா. அதோடு டெமிட்ரியஸ் இந்நாட்டை விட்டு வந்தபிறகு நடந்ததையும் கடற்கரைக்கு வந்தபின் தெரிந்து கொண்டேன். நடந்தவற்றைப் பற்றி அலசுவதற்காக நானிங்கு வரவில்லை. நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசுவோம்'' என்றார்.

''அதை நீங்கள் தான் சுவாமி கூறவேண்டும்''

''உன் லட்சியத்தை மறந்து விட்டாயா?''

''இல்லை சுவாமி''

''நாகதீபத்தைப் பிடித்துவிட்டாய். அதன் அரியணையில் நீ அமர்த்திய பெண்ணும் மாண்டு விட்டாள். பிறகு? நீ அமர வேண்டாமா அதில்?''

''ஆம் சுவாமி''

''எப்படி எப்போது அமருவதாக உத்தேசம்?''

''தெரியவில்லை சுவாமி''

''விஜயா! நாகதீபத்தின் மன்னனாக நீ முடி சூடுவதென்பது சாதாரணமான விஷயமல்ல. இப்போதைக்கு நாகதீபத்திற்கு உள்ளேயிருந்து உனக்கு எதிர்ப்புகள் வரப்போவதில்லை. ஆனால் இங்கே நடந்த நடப்புகளை வைத்து வெளியிலிருந்து எதிர்ப்புகள் வரலாம்''

''வெளியிலிருந்தா?''

''ஆம். நாகதீபத்திற்கு அண்மையில் இருக்கும் தமிழகம் இங்கே நடந்த சம்பவங்களைப் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்கும் என்று நினைத்துவிடாதே. இதுவரையில் இங்கே ஆண்டுகொண்டிருந்தவர்கள் மூன்றாகப் பிரிந்திருந் தாலும் அடிப்படையில் தமிழினத்தவர்கள். இவர்களை அப்புறப்படுத்தி வடபாரதத்து அரசுகுமாரன் ஒருவன் ஏகபோகமாக அரியணையில் அமர்வதை தமிழகத்தில் உள்ளவர்கள் சகித்துக்கொள்ள மாட்டார்கள். நான் அறிந்த வரை தமிழகத்தில் தற்போது பாண்டியர் வம்சம் பிரதான அரச வம்சமாக நிலைபெற்றிருக்கிறது. அவர்களது கண் உன் மீது விழுவதற்குள் நீ முந்திக் கொள்ள வேண்டும்''

''என்ன செய்ய வேண்டும் சுவாமி?''

சொன்னார் தேவபுத்தர்.

விஜயனுக்கு அதைக் கேட்டதும் புதியவழியொன்று உதயமானது போல் தோன்றியது.

## அத்தியாயம் எண்பத்தெட்டு

# நடுக்காட்டில் இருவர்

''விஜயா! நீ அரியணையில் இந்த நாட்டின் மன்னனாக அமர்ந்து மகான் புத்தரின் உயர்ந்த நோக்கங்களை பரப்ப முயலும் போது நாடு அமைதியாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். நாடு அமைதியாக இருக்கும்போது தான் மக்கள் உபதேசங்களைக் கேட்பார்கள். கடைபிடிக்கவும் செய்வார்கள். அச்சமயத்தில் உள்நாட்டுக் குழப்பங்களோ அயல்நாட்டு அச்சுறுத்தல்களோ இருந்தால் உன் கவனம் அங்கேதான் இருக்கும். நான் ஏற்கனவே சொன்னதுபோல் கொஞ்ச காலத்திற்கு நாக தீபத்திற்குள்ளேயிருந்து உனக்குப் பிரச்சினை வராது. வெளிநாட்டிலிருந்து அதிலும் குறிப்பாக பாண்டிய நாட்டிலிருந்து உனக்கு எதிர்ப்பு வரலாம். அது வராமல் செய்ய வேண்டியது உனது முதல் கடமை'' என்றார் தேவபுத்தர்.

''அதற்கு நான் என்ன செய்யவேண்டும் சுவாமி?'' கேட்டான் விஜயபாகு.

''தூது அனுப்ப வேண்டும்''

''பாண்டிய நாட்டிற்கா?''

''பாண்டிய மன்னனுக்கு. பாண்டியன் மகளை பெண் கேட்டு தூது அனுப்பு. மணவினை தான் இப்போது இவ்விரு நாடுகளுக்கிடையில் நட்பை உண்டாக்கும்''

''பாண்டியன் இதற்குச் சம்மதிக்க வேண்டுமல்லவா?''

''விவேகமுள்ள மன்னனாக இருந்தால் நிச்சயமாகச் சம்மதிப்பான். அது மட்டுமல்ல''

''வேறென்ன சுவாமி?''

''பாண்டியனைக் கண்டு நாம் கணக்கு போடுவது போல் பாண்டியனும் நம்மைப் பற்றி கணக்கு போடலாம் அல்லவா?''

''புரியவில்லை சுவாமி''

''விஜயபாகு பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கலாம் என்று பாண்டிய மன்னன் நினைக்கலாம் அல்லவா? வங்க தேசத்திலிருந்து வந்து நாகதீபத்தைப் பிடித்தவன் பாண்டிய நாட்டையும் பிடிக்க முயலலாம் என்ற எண்ணம் பாண்டியனுக்குத் தோன்றும். அதோடு நாகதீபத்தில் இருக்கும் குறைபாடு தமிழகத்திலும் இருக்கிறது''

''எப்படி?''

''இங்கே உள்ள தமிழர் இனம் நாகர்கள் என்றும் வேடர்கள் என்றும் இயக்கர்கள் என்றும் பிரிந்திருப்பது போல் தமிழ்நாட்டுத் தமிழர்களும் சோழர்கள் என்றும் சேரர்கள் என்றும் பாண்டியர்கள் என்றும் பிரிந்து நிற்கிறார்கள். இப்போது பாண்டியர் கரம் ஓங்கியிருப்பது உண்மைதான். பாண்டியர்கள் மீது நீ படையெடுத்தால் சோழர்களும் சேரர்களும் உனக்கு உதவக்கூடும் என்ற பயம் பாண்டியனுக்கு இருக்கும். அதுமட்டுமல்ல''

''வேறென்ன சுவாமி?''

''பாண்டிய நாட்டிற்குத் தீராத தொல்லையை கடல் தந்து கொண்டிருக்கிறது''

''கடலா?''

''பாண்டிய நாடாக முதன்முதலில் இருந்த மணலூர் இப்போது இந்து மகா சமுத்திரத்தில் இருக்கிறது. அதாவது கடல் கோள் ஏற்பட்டு பாண்டிய நாட்டை கடல் விழுங்கிவிட்டது. கடலில் போன நிலம் போக மீதியிருந்த மண்ணில் கபாடபுரம் என்று ஊரைத் தலைநகராகக் கொண்டு புதிய பாண்டிய நாடு உருவாயிற்று. கொஞ்ச காலத்திற்கு முன்பு கபாடபுரத்தையும் கடல் விழுங்கி விட்டதால் தங்கள் தலைநகரைத் தென்மதுரைக்கு மாற்றிக் கொண்ட பாண்டியர்கள் கடலை நினைத்து நொந்த நிலையில் இருக்கிறார்கள். இந்த நிலையில் உன்னால் உபத்திரவம் உண்டாவதை ஒருபோதும் விரும்பமாட்டார்கள். நீ நட்புக்கரம் நீட்டினால் பெரிதும் வரவேற்பார்கள். பொதுவாக எல்லா மன்னர்களும் நட்பையும்

சமாதானத்தையும் தான் விரும்புகிறார்கள். வீம்பும் வீராப்பும் கொள்பவர்களால்தான் போரும் சேதமும் அழிவும் உண்டாகின்றன.''

''அப்படியானால் நான் நாகதீபத்தை வெற்றி கொண்டது எந்த விதத்தில் சேரும் சுவாமி?''

''நல்ல கேள்வி விஜயபாகு. இங்கே இருந்த நிலைமையை நீயே கண்டாய். இந்நாடு ஒரு மன்னனின் கட்டுப்பாட்டிற்கு வருவதற்கு இங்கே இருந்த யாவரும் முயலாமல் பிரிந்து கிடந்தார்கள். தங்கள் வரையில் சுயலாபங்களைப் பெரிதாக எண்ணி குறுகிய மனப்பான்மையில் வாழ்ந்தார்களே தவிர இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு யாரும் முன்வரவில்லை. இதே நாடு ஒரு காலத்தில் தேவர்களே வியக்கும் நாடாக இருந்தது. ராவணன் காலத்தில் லங்காபுரி என்றழைக்கப்பட்ட இந்த நாட்டில் யட்சர்களின் வீதிகள் நாற்பது லட்சம் இருந்ததாக ராமாயணம் கூறுகிறது. மாடமாளிகைகளும் விதானங்களும் இருந்த லங்காபுரியை அனுமன் எரியூட்டியதாகவும் அந்நூல் விவரிக்கிறது. அயோத்தியில் இருந்த ராஜகுமாரன் ராமனை ஈர்த்த நாடு இது. இப்போதோ அந்தத் தடயம் கூட இல்லாத வெற்றுத் தீவாக இருக்கிறது. மக்களோ முன்னேறாமல் காடுகளில் வாழ்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். இந்த நாடு உண்மையிலேயே நாடாக வேண்டும். மகான் புத்தர் இதை விரும்பினார். அதற்கேற்றாற் போல் அவரது கொள்கைகள் சீரிய கொள்கைகளாக இருந்தன. இந்த நாடு உருப்படியாக மாறி காடுகள் நகரங்களாக உருவெடுத்து நிற்கும்போது மகான் புத்தரின் உபதேசங்கள் தென்றலாக வீசவேண்டும். இது நிறைவேற ஒருவன் முயலவேண்டும். அவன் நீயாக இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதினேன் நான். இதில் வீம்புக்கோ வீராப்புக்கோ இடமில்லை. மகான் புத்தரின் கொள்கைகளை பரப்ப முயல்வது வேண்டுமானால் சுயநலம் போல் தோன்றலாம். ஆனால் அது சுயநலமல்ல. புத்தமகானின் கொள்கை உலகமக்களுக்குரியவை. இன்னல் படுவோரை கரை சேர்க்கவும் மக்களை இன்னல்களில் சிக்காமல் தடுக்கவும் அவரது கொள்கைகள் உருவாயின. புத்தர் அவதரித்ததே அதற்காகத்தான்''

தேவபுத்தர் கூறியதைக் கேட்டு மலைத்துப் போனான் விஜயன். ஆரம்பத்தில் அவரைச் சந்தித்தபோது கூட அவரை அவன் பூரணமாகப் புரிந்து கொண்டான் என்று சொல்லமுடியாது. புத்தர் மீதிருந்த பக்தியில் அவரது கட்டளைகளை ஏற்றிருந்தான். ஆனால் தற்போது அவர் நாகதீபத்தை வெற்றிகொள்வதற்கான காரணத்தையும் புத்தர் கொள்கை பற்றியும் விவரமாகக் கூறியபோது அவரது பூரணத்தன்மை அவனுக்கு விளங்கியது. அதோடு பாண்டிய நாடு பற்றியும் பாண்டியனின் மனநிலை பற்றியும் விளக்கியபோது துறவியாக இருந்தும் அரசியலை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பதைக் கண்டு வியந்துபோய் ''சுவாமி, துறவியாகிய தங்களிடம் இத்தனை அரசியல் நுட்பத்தை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றான்.

''யார் துறவி என்று தெரியாமல் இருக்கிறாய் விஜயா. அதனால் தான் இவ்வாறு பேசுகிறாய். துறவி பல விஷயங்களை அறிந்திருக்கலாம். பல கல்வி பெற்றிருக்கலாம். எல்லா வற்றையும் அறிந்திருந்து எல்லாவற்றிலும் பற்று வைக்காமல் நிற்பவனே துறவி. அரசியல் தெரியும் என்பதால் நான் பதவியைத்தேடி ஓடியதில்லை. நாகதீபத்தை என்னால்கூட பிடிக்க முடியும். ஆனால் அது என் வேலையல்ல. க்ஷத்திரியனின் வேலை. ஆகவேதான் அதை உன்னிடம் ஒப்படைத்தேன்'' என்று சொன்ன தேவ புத்தர் ''தாமதிக்காதே விஜயா. பாண்டிய நட்டிற்குச் செல்லத் தூதுக்குழு ஒன்றை தயார் செய். ஓலையையும் தயார் செய். எந்த விதத்தில் வார்த்தைகள் இருந்தால் பாண்டியனைக் கவருமோ அந்தவிதத்தில் உன் வார்த்தைகள் அமையவேண்டும்'' என்றார்.

தனது வாழ்க்கையில் புதிய பாதை ஒன்று உருவாவதை உணர்ந்தான் விஜயன்.

அதேசமயம் அவன் அந்தப் புதிய பாதையில் பயணம் செய்யாமலிருக்க என்ன செய்யலாம் என்று நடுக்காட்டில் அமர்ந்து கொண்டு இரண்டு பேர் ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வேறு யாருமல்ல.

உதயணனும், நரசிம்மனும் தான்.

விஜயன் நிர்மானித்த நகருக்கு தெற்கே பின்வாவி என்னும் அடர்ந்த காட்டுப்பகுதியில் மலையொன்றில் பிசாசுகளைப் போல் இருவரும் அமர்ந்திருந்தார்கள். இருவருக்குப் பக்கத்தில் பந்தமொன்று நடப்பட்டிருந்தாலும் சுற்றுப்புரம் பூரண இருட்டாக இருந்ததால் பந்தமேகூட சிலசமயம் பயங்கரமானதாக இருந்தது. காட்டு விலங்குகளின் ஓசைகள் விட்டுவிட்டு ஒலித்தன. காட்டு ஆந்தைகளின் கூக்குரல்கள் அடிக்கடி எழுந்தன. ஓரிரு முறை ஒன்றிரண்டு நரிகள் அவர்களை நெருங்கி உயிரோடு இருக்கிறார்களா என்று சந்தேகத்துடன் உற்றுப் பார்த்துவிட்டு ஊளையிட்டபடி அகன்றன. அவர்களுக்கோ சில மாதங்களாகக் காடுகளே உறைவிடமாகி பழக்கப்பட்டு விட்டதால் அச்சமில்லாமல் தனியாக அங்கே அமர்ந்திருந்தார்கள்.

''இப்படி காடுகளில் பேய்களைப் போலத் திரியவா திட்டம் போட்டாய்? இப்படியே போனால் நமக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசமில்லாமல் போகப் போகிறது'' என்றான் நரசிம்மன் வெறுப்புடன்.

உதயணன் சற்றே இருமிவிட்டு ''நரசிம்மா, இந்த வார்த்தைகளை இதுவரை இருநூறு முறை கூறியிருப்பாய் என்று தோன்றுகிறது. உனக்கு வெறுப்பாக இல்லையா?'' என்று கேட்டான்.

''வெறுப்பினால் தான் கேட்கிறேன். நீயோ இதுவரை பதில் சொல்வதாக இல்லை'' என்று அலுத்துக் கொண்டான் நரசிம்மன்.

''என் பதிலுக்காக எதற்காகக் காத்திருக்கிறாய்? தோழர்கள் நம்மை விட்டு விட்டு விஜயனிடம் போனார்களே அப்போதே நீயும் போயிருக்கலாமே! எதற்காக என்னுடன் இருக்கிறாய்?''

''தோழர்களை நம்பி நான் வரவில்லை. உன்னை நம்பித்தான் நான் வந்தேன்''

''இப்போது என்மீதான நம்பிக்கை போய்விட்டதா?''

''உதயணா! எந்த மனிதனும் சோர்வடைந்து போகும் நிலை ஒன்று வரும். அந்த நிலை இப்போது வந்திருப்பது உனக்குப் புரியவில்லையா? உனக்கு அறிவு வேலை செய்யவில்லையா?'' என்று கேட்ட நரசிம்மன் ''நம்மையெல்லாம் தாமிரபன்னியிலிருந்து விஜயன் எதற்காக பல இடங்களுக்கு அனுப்பினான்? ஒன்று - நாமெல்லாம் அங்கிருந்தால் காளிசேனனால் ஆபத்து உண்டாகும். இரண்டு. நாம் பல இடங்களில் அலைந்து இயக்கர்கள் எங்கெங்கே எப்படி யெல்லாம் இருக்கிறார்கள் என்பதை ஒற்றறிந்து தகவல் அனுப்புவது. நாமும் அதையேற்று பின்வாவி என்னும் இந்த இடத்திற்கு வந்து இங்கிருந்து கொண்டு சுற்றுப்புரத்தைக் கவனிப்பது என்று முடிவெடுத்தோம். சில நாட்கள் வரை நாமும் நம் தலைமையில் இருந்த தோழர்களும் ஒற்றறியும் வேலையை கவனிக்கவும் செய்தோம். திடீரென நீ முரண்டு பிடித்தாய் - விஜயனுக்குப் பணிய விருப்பமில்லை என்றும் அவனுக்கு எதிராகத் திரும்பப் போவதாகவும் அறிவித்தாய். உன் அறிவிப்பைக் கேட்டு நானும் என் தோழர்களும் திகைத்தோம். நீயோ தோழர்களிடம் இன வெறியைத் தூண்டி விட்டாய். இங்கே எல்லோரும் தமிழராக இருக்கும்போது தமிழரான நீங்கள் ஏன் வங்க அரசனுக்கு உதவவேண்டும் என்று பிரிவினை விதையைத் தூவினாய். எனது கட்டுப்பாட்டிலிருந்த தோழர்கள் அனைவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் உன் பேச்சு அவர்களை ஈர்த்தது. ''எதற்காக இப்போது திடீரென்று விஜயனுக்கு எதிராகத் திரும்ப வேண்டும்? இத்தனை காலமாக அவரோடு தோளோடு தோள் கொடுத்துவிட்டு திடீரென இந்த நிலையில் ஏன் காலை வாரவேண்டும்?'' என்று கேட்டான் தோழர்களில் ஒருவனான செழியன்.

''செழியா, எஜமானன் எஜமானனாகவே இருக்க வேண்டும் என்றும் வேலைக்காரன் வேலைக்காரனாகவே இருக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை. வேலைக்காரன் வேலைக் காரனாகவே இருந்தால் கடைசியில் அவன் அடிமையாகத்தான் மாறவேண்டியதாக இருக்கும். இந்தக் கட்டை ஒரு கட்டத்தில் உடைக்க வேண்டும். அப்போது வேலைக்காரன் எஜமானன் ஆகமுடியும்''

''நாம் நூறுபேர் விஜயனுக்கு எதிராகத் திரும்பினால் எஜமானர்களாக ஆகிவிட முடியுமா?''

''நான் சொன்னது பொதுவான நிலை. இப்போதைய சூழ்நிலை வேறு. நீங்களோ தமிழர்கள். இங்கே இருப்பவர்களும் தமிழர்கள். இவர்களுக்கு நீங்கள் உதவி செய்தால் உங்களுக்கு அவர்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். உங்கள் எதிர்காலம் சிறக்கும்''

''ஆனால் நாம் விஜயரின் உயிர்காக்க சபதமெடுத்தவர்களே தவிர தமிழர்களுக்கு கைகொடுக்க சபதமெடுக்கவில்லை''

''முட்டாளைப் போல பேசாதே செழியா. நீயும் நானும் விஜயனுக்காக சபதமெடுத்தது வங்கநாட்டில். ஆனால் அப்போது தமிழர்களான நீங்கள் தமிழர்கள் வாழும் நாகதீபத்திற்கு வருவோம் என்று நினைக்க வாய்ப்பில்லை. இப்போது வந்து விட்டீர்கள். இனம் இனத்தோடு சேருவது தான் இயற்கை. இதற்கு எந்தச் சபதமும் தடையாக இருக்க முடியாது''

''இவ்வாறு நீ சொன்னபிறகு தோழர்கள் சஞ்சலமும் சபலமும் கொண்டார்கள். அச்சமயத்தில் வேகன், விவேகன் ஆகிய இயக்கர் குலத் தலைவர்களைச் சந்தித்தாய். அவர்களுக்கு ஆதரவு அளிப்பதாகவும் விஜயனை வீழ்த்த உதவுவதாகவும் சொல்லி அவர்களை விஜயனின் மீது ஏவினாய். அந்த முயற்சியில் வெற்றி கிட்டவில்லை. அவர்களை வைத்தே பலமுறை விஜயனைத் தாக்க முயன்றாய். ஆனால் எல்லா சந்தர்ப்பங்களும் தோல்வியில் முடியவே நம்பிக்கையை இழந்த வேகனும் விவேகனும் மட்டுமின்றி நமது தோழர்களும் நம்மைவிட்டே விலகினார்கள். நாம் இருவர் மட்டும் கடந்த சில மாதங்களாக அனாதைகளைப் போலவும் பிச்சைக்காரர்களைப் போல் திரிகிறோம். எத்தனை காலத்திற்கு இப்படித் திரிய வேண்டும்? சாகும் வரையிலா?'' என்று கேட்ட நரசிம்மன், ''உண்மையிலேயே விஜயனுக்கு எதிராக நீ திரும்பியதற்கு என்ன காரணம்?'' என்று கேட்டான்.

''வலி நரசிம்மா வலி. மனத்தின் வலி. அது எப்படிப் பட்டதென்று உனக்குத் தெரியாது'' என்றான் உதயணன்.

''நீதான் சொல்லேன். தெரிந்து கொள்கிறேன்''

''நரசிம்மா, நாகர்மலைத் தீவில் என்னையும் நான்கு தோழர்களையும் பாரடைஸைத் தேடிப் பிடிக்கும்படி விஜயன் அனுப்பியது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?''

''இல்லாமல் என்ன? அதற்காக நீ ரகசியத் தீவு ஒன்றில் சிக்கியதையெல்லாம் கூட சொன்னாயே!''

''நரசிம்மா! அந்தத் தீவில் நமது நண்பக்ள் நால்வரும் அசுவநாவிகரும் அங்கிருந்த உருவமற்ற யட்சனால் ஏறக்குறைய இறந்தே விட்டார்கள். நான் மட்டுமே இருந்தேன். வேறு யாராவது என் நிலையில் இருந்தால் விட்டால் போதும் என்று ஓடி வந்திருப்பார்கள். நானோ நண்பர்களின் உயிர்களை பிச்சையாகக் கேட்டேன். அந்த அருவமோ என் கண்பார்வையைப் பறித்துவிட்டது. என்னோடு பேசுவதையும் விட்டுவிட்டது - வினோதமான மிருகங்கள் என்னைத் தொடவில்லையே தவிர சுற்றிச் சுற்றி வந்தன - கேட்டறியாத குரல்களை எழுப்பின. என் நிலை எப்படி இருந்திருக்கும் என்று யோசித்துப்பார்''

''வேதனையான நிலைதான்''

''நரக வேதனை நரசிம்மா. அருவம் என்னோடு பேசாததால் என்னால் எதையும் அறிய முடியவில்லை. கண்பார்வை வருமா என்று தெரியாத நிலை. துணைக்கு யாரும் இல்லாத நிலை. பார்வையிருந்தாலே அங்கிருந்து போகமுடியாது. பார்வையில்லாத நிலையில் எப்படித் தப்பமுடியும். நான் என்ன பாடுபட்டிருப்பேன் ஒரு நாள் அல்ல இரண்டு நாளல்ல. பதினான்கு நாட்கள். அடிமைகூட படமுடியாத பாட்டை நான் பட்டேன். பிறகு எல்லாம் நல்லபடியாக முடிந்தது என்றாலும் என் அவஸ்தையின் வலி எப்பேர்பட்டது தெரியுமா? அதை யாரில்லை என்றாலும் விஜயன் மட்டுமாவது உணர்ந்து மதிப்பான் என்று எதிர்பார்த்தேன். அவனோ அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. பத்தோடு பதினொன்றாகவே கருதி என்னை நடத்தினான். என் தியாகத்திற்கு பரிசும் இல்லை மரியாதையும் இல்லை என்பதை உணர்ந்தபோது விஜயன் எனக்கு கசந்து போனான். அதை அவனுக்கு உணர்த்தவிரும்ப நான் முற்பட

வில்லை. அவனை அழிக்கவே விரும்பினேன். அதற்கு கடல் தோதுபட்டு வராது என்பதால் தான் நாகதீபத்திற்கு வரும் வரை காத்திருந்தேன்''

''உன் ஆதங்கம் இதுதான் என்றால் என்னிடம் சொல்லியிருக்கலாம் அல்லவா? நான் விஜயனைக் கேட்டிருப்பேனே?''

''கேட்டிருந்தால் கிடைத்திருக்காது நரசிம்மா. அரச வம்சத்தவர்கள் தங்கள் உரிமைகளையும் சுகங்களையும் பிறருக்குத் தரமாட்டார்கள்''

''ஆனால் விஜயன் அப்படியில்லையே? சிகபாகு தந்த சுகங்களை உதறிவிட்டு மக்களுக்காகப் போராட வந்தவனல்லவா அவன்?''

''தேவபுத்தர் குறுக்கிடாமிருந்தால் சிகபாகுவைக் கொன்றுவிட்டு மன்னனாகியிருப்பான் அவன்''

''அப்படிச் செய்தால் கூட அந்த அரியணை அவனுக்கு உரியது தானே?''

''ஆக மொத்தம் அவன் ஆட்சியில் இருப்பான். நாம் எடுபிடிகளாகவே உழைக்க வேண்டும். இல்லையா?''

''அவன் அரசவம்சத்தவன். ஆள்கிறான். நாம் நாலாம் வருணத்தவர். உழைக்கிறோம். இது தானே நடைமுறை?''

''நரசிம்மா, விஜயன் அரசவம்சத்தவனல்ல. அவனது தந்தை சிகபாகு நாடோடி. அதிஷ்டவசத்தால் அரியணையில் அமர்த்தப்பட்டவன். மறந்து விடாதே''

''சிகபாகு நாடோடியாக இருந்தாலும் அரியணையில் அமர்ந்த பிறகு மன்னன்தானே? அவனது வாரிசுகள் அரசவம்சத்தவர் தானே?''

''திறமையிலோ உழைப்பிலோ எதிலும் நாம் அரச வம்சத்தவருக்கு சளைத்தவர்கள் அல்ல. ஆனால் நாம் உழைத்துக் கொண்டே இருக்கவேண்டும். அவர்கள் சுகப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்''

''உன் பேச்சில் நியாயமில்லை உதயணா. நம்மில் எட்டு பேர்களை உபதலைவர்களாக நியமித்தானே விஜயன், அதற்கென்ன சொல்கிறாய்?''

''அந்தப் பதவியில் என்ன இருக்கிறது? சாதாரணமாக உழைப்பதற்கு பதில் வெற்றுப் பதவியைச் சுமந்து கொண்டு உழைக்கிறோம். அவ்வளவுதான்''

''விவாதங்களை விடு. விஜயனை ஒழிக்கத் தீர்மானித்தாய். வருடம் ஒன்றாகிவிட்டது. தோல்விகளையே தொடர்ந்து சந்தித்தோம். நம்மோடு இருந்தவர்களும் போய் விட்டார்கள். இனி என்ன செய்யப் போகிறாய்?''

''அதைத் தீர்மானித்து விட்டேன் நரசிம்மா. அதற்கான பொருட்களைச் சேகரித்து விட்டேன். ஒன்றே ஒன்றுதான் பாக்கி. நானும் பல இடங்களில் தேடி விட்டேன். இங்கே சுடுகாடுகளும் இடுகாடுகளும் இருக்காது போலிருக்கிறது. பிணங்களையே காணோம்''

''பிணங்கள் எதற்கு?''

''பிணம் வந்தால்தானே அதன் மீது போர்த்தும் துணி கிடைக்கும்?''

''அது எதற்கு?''

''விஜயனைக் கொல்வதற்கு?''

''எப்படிக் கொல்வது?'' - கேட்டான் உபதலைவன் நரசிம்மன்.

அவனது கேள்விக்குப் பதில் கூறுவதுபோல் ஓர் அமானுஷ்ய குரலொன்று ஒலித்தது.

ஆந்தைகள் இரண்டு கர்ணகொடூரமாக அலறின.

குரல்கள் ஓய்ந்து அமைதி உண்டாயிற்று.

சிலநிமிடங்கள் கழித்து அந்த அமைதி கலைந்து ஜல்ஜல் என்ற சத்தம் கேட்கலாயிற்று.

அவர்களை நோக்கி வரவும் செய்தது.

◈◈◈

அமானுஷ்ய விஷயங்களுக்கு உதயணன் பரிச்சியப் பட்டிருந்த காரணத்தாலோ என்னவோ நள்ளிரவில் எழுந்த விசித்திரக் குரலால் அதிர்ச்சியோ அச்சமோ அடையவில்லை. ஆனால் நரசிம்மன் மட்டும் சற்றே ஒடுங்கினான். 'ஜல் ஜல்' சத்தம்அவர்களை நெருங்கியபோது பூதம் போன்ற உருவமொன்று அவர்களது கண்களுக்குத் தெரிந்தது. பெரும் போர்வையொன்றை போர்த்தபடி வந்து நின்ற உருவத்தைக் கண்டதும் ''வா, மந்திரவாதி. உட்கார்'' என்றான் உதயணன்.

மந்திரவாதி என்று அழைக்கப்பட்ட அந்த மனிதன் அமர்ந்தான் போர்வையை விலக்கிவிட்டு பந்த ஒளியில் அவனது கோர உருவத்தைக் கண்ட நரசிம்மனுக்கு பிணமே எழுந்து வந்து அமர்ந்து கொண்டிருந்தது போல் தோன்றியது. பல்வேறு மாந்தரீகக் காரியங்களில் ஈடுபட்டு பலருக்குக் கெடுதல்களைச் செய்து வந்ததாலும், தொழில் காரணமாக சுடுகாடுகளைச் சுற்றி அலைந்தும் ஆவிகளோடு பேசிவந்ததாலும் மந்திரவாதியின் முகம் பிணக்களையோடுதான் இருந்தது. அதோடு இக்காரியங்களில் ஈடுபட்ட பின்பு மதுவை அருந்துவதும் மாமிசத்தை உண்பதும் அவனுக்கு வழக்கமாக இருந்ததால் கண்கள் பிதுங்கியும், தசைகள் பெருகி தொங்கியும், தேவையற்ற இடங்களில் ரோமங்கள் வளர்ந்து சுருண்டு கிடந்ததால் அவனது முகத்தில் நிலவிய பிரேதக் களையை மேலும் கோரமாக்கி யிருந்தது.

நான்கைந்து மூட்டைகளைச் சுமந்து கொண்டிருந்த மந்திரவாதி ஒரு மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து ஒரு குவளையைத் திறந்து வாயில் கவிழ்த்துக் கொண்டான். அந்த ஒருசில நிமிடங்களுக்கு அங்கு பிணவாடை வீசியது. குவளையை மூட்டையில் வைத்து கட்டிவிட்டு ''இங்கே நீங்கள் இருவரும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இந்த

மலைப்பகுதி பேய்கள் நடமாடும் இடமாயிற்றே?'' என்று கேட்டான் மந்திரவாதி.

''உனக்கு முன்னால் பேய்கள் எம்மாத்திரம்?'' என்று சொல்ல நினைத்த நரசிம்மன் அடக்கிக் கொண்டான்.

''மந்திரவாதி, பேய்கள் எங்களுக்கு நண்பர்களாகிவிட்டன. அவற்றைப் பற்றிய கவலை எங்களுக்கில்லை. கவலையெல்லாம் மனிதர்களைப் பற்றித்தான். இந்தப் பகுதியில் ஒருவாரமாக அலைகிறேன். ஒரு மனிதத் தலையையும் காணோமே! அதோடு சுடுகாடுகள் கூட கண்ணில் படவில்லையே ஏன்?'' என்று கேட்டான் உதயணன்.

''மனிதர்கள் வாழும் பகுதி இருக்கும் இடத்திற்கருகில் தான் சுடுகாடுகள் இருக்கும். நடுக்காட்டில் எப்படி இருக்கும்?'' என்று கேட்ட மந்திரவாதி ''எப்போது விஜயனைத் தீர்த்துக்கட்டப் போகிறாய்? நான் சொன்னதை நீ செய்தால்கூட அவன் சாவதற்கு ஒன்றரை மாதமாகும். நீயோ இங்கே அமர்ந்து கிடக்கிறாய்'' என்றான்.

''நீ எங்கிருந்து வருகிறாய் மந்திரவாதி?''

''எங்கிருந்து வந்தாலும் விஜயனைப் பற்றிய செய்திகளோடு தான் வந்திருக்கிறேன். விஜயன் குவேணியை நாகதீபத்தின் ராணியாக்கிய வேளை அவள் கொல்லப்பட்டாள். இயக்கர்களை வெற்றிகொண்ட விஜயன் இயக்கர் தலைவனை கழுவில் ஏற்றிவிட்டான். அரியணையில் அமர ராணி ஒருத்தி தேவைப்படுவதால் பாண்டியனிடம் பெண்கேட்டு தூதுக்குழு அனுப்பப்பட்டிருக்கிறது. இமாலயத்திலிருந்து தேவபுத்தர் என்னும் புத்தபிட்சு வந்து இங்குள்ளவர்களை பௌத்தத் துறவிகளாக மாற்றிக் கொண்டிருக்கிறார். அங்கே நகரம் உருவாக்கப்பட்டு பொலிவடைந்து கொண்டிருக்கிறது. அந்த நகரத்திற்கு விஜயஸ்வீபம் என்று பெயர் சூட்டியிருக்கிறான் விஜயன். விஜயன் அங்கே முன்னேறிக் கொண்டிருக்கிறான். நீயோ செயலிழந்து இங்கே கிடக்கிறாய். இப்படியே இருந்தால் அவன் அரியணை ஏறியதும் உங்கள் இருவரையும் தேடிப் பிடித்துச் சிரச்சேதம் செய்வான்''

மந்திரவாதி இவ்வாறு கூறியதும் ''நரசிம்மா! நான் தேடிக் கொண்டிருந்த பொருள் கிடைத்துவிட்டது'' என்று கூறிய உதயணன் திடுக்கிடும் படியான காரியத்தைச் செய்தான்.

பேசிக்கொண்டே திடீரென தன்னிடம் இருந்த வாளை எடுத்து மந்திரவாதியின் கழுத்தை நோக்கி வீசினான். வீச்சு பலமாக இருக்கவே மந்திரவாதியின் தலை அறுபட்டு மலையில் உருண்டோடியது. தலையற்ற உடல் தரையில் சாய்ந்ததும் அதன் மீது போர்வையை எடுத்து மூடிய உதயணன் ''நரசிம்மா, பிணத்தின்மீது போடப்பட்ட துணி தான் தேவை என்று சொன்னேன் அல்லவா? இதோ கிடைத்து விட்டது'' என்றான் போர்வையைக் காட்டி.

நரசிம்மனோ கதிகலங்கிப் போயிருந்தான்.

''இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது?'' என்று கேட்டான்.

உதயணன் தன்னிடம் இருந்த ஒரு மூட்டையைப் பிரித்தான். நரசிம்மனுக்குச் சுட்டிக்காட்டி ''இதோ! ப்பார், இதுதான் மூக்கரட்டை மரத்துண்டு. இது வேம்பு, இது குரங்கின் ரோமங்கள். இது மனித எலும்பு, இவற்றை இப்பிணத்தின் மீது கிடக்கும் துணியில் கட்டி விஜயனின் இருப்பிடத்தில் வைத்து விட்டால் அவன் ஒன்றரை மாதங்களுக்கு மேல் உயிரோடு இருக்க மாட்டான்'' என்றான்.

''இது மாந்தரீகமா?''

''ஆம்''

''இந்த மந்திரவாதி சொன்ன உபாயமா?''

''ஆமாம்''

''வழி சொன்னவனையே கொன்றுவிட்டாயே?''

''இவனொன்றும் நாட்டின் சுபிட்சத்திற்கு வழி சொல்லவில்லை''

''நாம் செய்யப் போவதற்கு என்ன பெயர்?''

''நரசிம்மா! பயந்து விட்டாயா?''

''பயப்பட ஒன்றுமில்லை. ஆனால் இந்த வழி உகந்தது தானா என்றுதான் நினைக்கிறேன்''

''இந்த வழிக்கென்ன?''

''விஜயன் மாவீரன். அவனைக் கொல்லும் வழி இதுவல்ல''

''வேறுவழி?''

''அவனோடு போரிடலாம்''

''போரிடலாம். ஆனால் நாம்தான் கொல்லப்படுவோம்''

''அது கௌரவமாக இருக்கும்''

''நரசிம்மா, இவ்வளவு காலமாக என்னோடு இருந்துவிட்டு கடைசி நேரத்தில் தேவையற்ற அறிவுரைகளையும் பயனற்ற வழிகளையும் சொல்லாதே. கொல்வது என்று வந்து விட்டபிறகு வழிகளைப் பற்றி ஆராய்வது வீண் வேலை. உனக்குத் தயக்கமாக இருந்தால் நீ விலகிக் கொள்ளலாம். என்னால் பின் வாங்க முடியாது''

''உன்னை நம்ப வைத்து உன்னோடு வந்த நான் இந்த நேரத்தில் பிரிய விரும்பவில்லை. விதி விளையாடுகிறது. அதற்கு இருவருமே இரையாகலாம்'' என்றான் நரசிம்மன்.

பிறகு இருவரும் விஜயஸ்வீபத்திற்குப் போவதற்குள் தங்களை அடையாளம் காணமுடியாத அளவிற்கு மாற்று உடைகளையும் வேடங்களையும் அணிந்து கொள்வதென்று முடிவு செய்து போகும் வழியில் தங்களை மாற்றிக் கொண்டார்கள். மந்திரவாதியின் உடுப்புகளில் இருந்த தங்க நாணயங்கள் அதற்கு உதவியாக இருந்தன.

விரைவிலேயே விஜயஸ்வீபத்தை அவர்கள் அடைந்தார்கள். நகரின் பிரம்மாண்டமான அமைப்பைக் கண்டு வயிறெரிந்தார்கள். உதயணன் ''இரு இரு விஜயா. உன் ஆட்டமெல்லாம் இன்னும் நாற்பது நாட்களுக்குத்தான்'' என்று கறுவிக் கொண்ட அவன் புத்தப்பள்ளி இருக்கும் இடத்தை விசாரித்துக்கொண்டு சென்றான்.

புத்தப் பள்ளியானது பெயரளவில்தான் பௌத்த அடையாளமாக இருந்ததே தவிர விஹாரமாக உருப்

பெறவில்லை. அங்கே சென்ற உதயணனும் நரசிம்மனும் தங்களை புத்த மதத்தில் சேர்ந்து பிட்சுக்களாக விரும்புவதாகக் கூறியபோது பிட்சு ஒருவர் அவர்களை அழைத்துச் சென்று தடாகம் ஒன்றையும் அருகே இருந்த அறையையும் சுட்டிக்காட்டி ''நீங்கள் இருவரும் அந்த அறைக்குச் சென்று தாடி மீசைகளையும் தலைமுடியையும் நன்றாக மழித்துக்கொண்டு தடாகத்தில் நீராடி இந்த மஞ்சள் நிற காஷாயத்தை அணிந்து கொண்டு வாருங்கள்.'' என்று கூறி உதயணனிடம் இருந்த மூட்டையை வாங்கி ஓர் ஓரமாக வைத்தார்.

இருவரும் பிட்சு கூறியது போலவே அனைத்தையும் செய்து முடித்து காஷயம் அணிந்து கொண்டு மூட்டையை எடுக்க வந்தபோது ''இது எதற்கு?'' என்று கேட்டார் ஒரு பிட்சு.

''இது எங்கள் உடைமை'' என்றான் உதயணன்.

''தடாகத்தில் தலைமூழ்கிய போதே எல்லாவற்றையும் மூழ்கச் செய்து விட்டதாக அர்த்தம். துறவியாக வாழ முன் வருபவர்களுக்கு இக்காஷாயம் தான் உடைமை. இந்த மூட்டை எதற்கு?'' என்று கேட்டார் பிட்சு.

''தலைமைத் துறவியின் உபதேசம் கேட்கும்போது அவரிடம் இந்த உடைகளைச் சமர்ப்பிப்பதாக பிரதிக்ஞை செய்திருக்கிறோம்.'' என்றான் உதயணன்.

பிட்சு எதுவும் பேசாமல் வேறொரு அறையைச் சுட்டிக் காட்டி ''உள்ளே செல்லுங்கள்'' என்றார்.

இருவரும் உள்ளே சென்று அங்கே அமர்ந்திருந்த பிட்சுவை வணங்கி அமர்ந்தார்கள்.

இவருவரையும் தீட்சண்யமாக ஒருமுறை பார்த்த பிட்சு ''நீங்கள் இருவரும் புத்தமதத்தில் சேர விரும்புவது ஏன்?'' என்று கேட்டார்.

''சுவாமி, தாங்கள் ஏன் இந்த மதத்தில் பிட்சுவாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டான் உதயணன்.

''புத்தரின் சீரிய கொள்கைகளை உலகிற்கு உபதேசிக்கத் தான்''

''எங்களுக்கும் அதுதான் காரணம் சுவாமி''

''உங்களை யாராவது கட்டாயப் படுத்தினார்களா?''

''என்னைக் கட்டாயப் படுத்துவதற்கு இனிமேல் தான் பிறக்க வேண்டும் சுவாமி''

இதைக்கேட்டு மெல்ல சிரித்த பிட்சு புத்தம் சரணம் கச்சாமி; தம்மம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி என்று சொல்லி அதை மூன்று முறை உச்சரிக்கும்படிச் சொன்னார்.

அவர்களும் அவ்வாறே சொன்னார்கள்.

''நீங்கள் கூறியதின் அர்த்தம் என்ன தெரியுமா? புத்தரை அடைக்கலம் அடைகிறேன். தருமத்தை அடைக்கலம் அடைகிறேன். சங்கத்தை அடைக்கலம் அடைகிறேன் என்பது தான். அந்த வகையில் நீங்கள் இருவரும் மகான் புத்தரிடம் சரணடைந்து அவரது வழியில் செல்லத் தயாராகிறீர்கள். தலைமைத் துறவியைத் தரிசனம் செய்துவிட்டு பாடசாலைக்குச் செல்லுங்கள். அங்கே உங்களுக்கு தீட்சை நடக்கும். நாளைமுதல் பாடங்கள் நடக்கும். போய் வாருங்கள் அன்பர்களே!'' என்றார் பிட்சு.

உதயணனும் நரசிம்மனும் அடுத்ததாக தலைமைத் துறவியான தேவபுத்தருக்கு முன்னால் அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

எத்தகையவர் ஆனாலும் தேவபுத்தரின் முகத் தாமரையைக் கண்டதும் புத்துணர்வும் சாந்தியும் பிறக்கும். அப்படித்தான் விஜயனுக்குப் பிறந்தது. ஆனால் மனத்தில் கள்ளத்தனமும் வஞ்சகமும் நுழைந்த புத்தரின் அஹிம்சைக்கு நேர்மாறான காரியத்தைச் செய்ய வந்திருந்த காரணத்தால் தேவபுத்தரைக் கண்ட உதயணனுக்கு சாந்தி பிறக்கவில்லை. குரோதமே உண்டாயிற்று.

''ஆகா! இந்த தேவபுத்தர் மட்டும் குறுக்கிடாமல் இருந்திருந்தால் நாம் வங்கதேசத்திலேயே சந்தோஷமாக காலத்தைக் கடத்தியிருப்போம். இவரது தலையீட்டினால் தானே கப்பல், கடல், காரணகாரியங்கள் என்று வாழ்க்கையே சித்திரவதையானது?'' என்ற எண்ணம் எழுந்தது அவனுக்கு.

''என்ன அப்படியே நிற்கிறீர்கள் அன்பர்களே? என்ன ஆயிற்று?'' என்று கேட்டார் தேவபுத்தர்.

''உலகிலே எங்கும் காணமுடியாத அமைதியை தங்கள் திருமுகத்தில் கண்டதால் எங்களை மறந்து விட்டோம் சுவாமி'' என்று பொய்சொன்ன உதயணன் ''சுவாமி, மகான் புத்தரின் பிரதான போதனை என்ன? சொல்கிறீர்களா?'' என்று கேட்டான்.

''அன்பர்களே! இந்த உலகில் பிறப்பு துன்பமானது. இறப்பு துன்பமானது. நம்மால் வெறுக்கப்படும் பொருட்களும் விரும்பி கிடைக்காமல் போகும் பொருட்களும் துன்பத்தைத் தருகின்றன. ஐம்புலன்களினால் நமக்கு வருவது துன்பங்கள் தான். இந்த அனைத்து துன்பங்களுக்கும் காரணம் ஆசை. இந்த ஆசையை மனம், வாக்கு காயங்களினால் நிகழாமல் தடுக்க வேண்டும். இதுதான் புத்தமகான் ஞானஒளியில் கண்டு உபதேசித்த பிரதான விஷயம்'' என்றார் தேவபுத்தர்.

''சுவாமி, ஆசையில்லாமல் ஒருவனால் இருக்கமுடியுமா?'' என்று கேட்டான் உதயணன்.

''ஆசை துன்பத்தைத் தருகிறது என்பதை உணர்ந்தவன் ஆசைப்படுவதில்லை. அவனே விவேகி. விஷம் நமது உயிரைப் போக்கிவிடும் என்று தெரிந்தவன் எவனாவது விரும்பி அதை உண்பானா? புதைச் சேற்றில் இறங்கினால் தலைவரை மூழ்கிப் போய்விடும் என்று தெரிந்தபின் எவனாவது புதைச் சேற்றில் காலை விடுவானா? துன்பத்தை விரும்புபவர் யார்? காலம் காலமாகத் துன்பங்களுக்கான காரணத்தை அறியாமல் உலக மக்கள் அல்லல் பட்டார்கள். துன்பத்தின் காரணம் ஆசை என்று தெரிந்தபின் விவேகமானவன் ஆசையை விட்டு துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்கிறான். இது முடியாமல் போகும் விஷயமல்ல''

''மிக்க மகிழ்ச்சி சுவாமி. இந்த நாளை எங்கள் வாழ்வின் திருநாளாகக் கருதுகிறோம்'' என்று சொல்லி இருவரும் அவரை வணங்கி விடைபெற்றார்கள்.

பிறகு அவர்களுக்கு தீட்சையும் நடைபெற்று பாடமும் நடக்கலாயின. அந்த புத்தப் பள்ளியில் ஐநூறுக்கும் மேற்பட்ட

பிட்சுக்கள் இருந்ததால் அவர்களோடு கலந்து கொண்டு தங்களை அடையாளம் காண முடியாமல் இருக்க முடிந்தது அவர்களால்.

அங்கே இருந்து கொண்டு விஜயனை எப்படி நெருங்குவது என்பதுபற்றி கவனிக்கத் தொடங்கினான் உதயணன். அவனிடமிருந்து மூட்டையைப் பற்றி யாரும் கேள்வி கேட்கவில்லை. ஏனென்றால் பெரும்பாலான பிட்சுக்கள் மாற்றுடைகள் முதலானவற்றை மூட்டையாகக் கட்டி தோளில் தொங்க விட்டிருந்தார்கள். அப்படியே உதயணனும் நரசிம்மனும் தங்கள் தோள்களில் மூட்டையைத் தொங்கவிட்டுக் கொண்டார்கள்.

ஒவ்வொரு வாரமும் புத்தபிட்சுக்கள் சோமவாரத்தன்று விஜயன் இருக்கும் மாளிகைக்குச் சென்று அவனிடம் சிறிது நேரம் உரையாடிவிட்டு வருவதை கவனித்த உதயணன் ''நரசிம்மா! இதுதான் நமக்குச் சரியான சந்தர்ப்பம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான்.

''சொல்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றான் நரசிம்மன் வெறுப்புடன்.

''நாமும் அக்கூட்டத்துடன் போவோம். இந்த மூட்டையை அவன் மாளிகையில் ஓரிடத்தில் வைத்துவிட்டு வந்து விடலாம்''

''நான் எதற்கு? மூட்டை உன்னிடம் தானே இருக்கிறது? நீ போய் வா. நான் இங்கேயே இருக்கிறேன்''

''சரி. உன்னிஷ்டம்'' என்று கூறிய உதயணன் சோம வாரத்தன்று புத்தபிட்சுக்களோடு நூற்றுவரில் ஒருவனாய் விஜயனின் இருப்பிடமான மையமாளிகைக்குச் சென்றான். பிட்சுக்கள் சிலர் விஜயனிடம் பேசினார்கள். விஜயனும் அவர்களிடம் அன்போடு உரையாடினான். அவனைக் காண உதயணனுக்கு அருவை பெருகியது. தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு சுற்றுப்புரங்களை நன்றாக கவனித்துவிட்டு தன்னிடம் இருந்த மூட்டையை உணவுப் பொருட்கள் இருந்த அறையில் பல்வேறு மூட்டைகளுக் கிடையில் வைத்துவிட்டு பிட்சுக்களோடு வெளியேறினார்கள்.

புத்தப் பள்ளிக்கு வந்தபோது அங்கே நரசிம்மனைக் காணவில்லை. எங்கே தேடியும் .கிடைக்கவில்லை. உதயணனும் அவளைப்பற்றிக் கவலைப்படவில்லை.

★★★

தென்மதுரையில் புதியதாக கட்டப்பெற்ற அரண்மனையில் கிரகபிரவேசம் செய்த பிறகு மூன்றாம் நாள் அவையைக் கூட்டியிருந்தான் பாண்டிய மன்னனான வீரசோகன்.

பெயரில் வீரமும் சோகமும் இருந்தது போலவே அவனது முகத்தில் வீரமும் சோகமும் சேர்ந்தேயிருந்தது.

வீரம் பாண்டிய வம்சத்திலிருந்து விளைந்திருந்தது.

சோகமோ பாண்டிய நாட்டை கடல் விழுங்கி வந்தபடியினால் விரிந்திருந்தது.

பாண்டிய நாட்டிற்கும் கடலுக்கும் அப்படியென்ன தீராத பகை என்று அடிக்கடி தனக்குள் கேட்டுக் கொண்டிருந்தான் பாண்டிய மன்னன்.

நிலப்பகுதியை கடல்கோள்கள் விழுங்குவது இயற்கை நிகழ்வு என்பது அவனுக்குத் தெரிந்தேயிருந்தது. இருப்பினும் தொடர்ந்து பாண்டிய நாடு கடலால் அழிவதும் புதிய நாடு உருவாக்கப்படுவதுமாக நடந்ததால் கடலுக்கு பாண்டிய நாட்டின் மீது என்ன கோபம் என்று கேட்டுக் கொண்டான்.

கடல் கோள்கள் மட்டும் நிகழாதிருந்தால் பாண்டிய நாட்டின் நிலப்பரப்பு எத்தனைப் பெரிதாக இருக்கும் என்ற நினைப்பு அவனுக்குப் பரவசத்தை அளித்ததென்றால்-

தென்கோடியில் இருந்த பாண்டியர் தலைநகரம் வடகோடிக்கு வந்து விட்டதே என்ற எண்ணம் அவனுக்குக் கவலையை அளித்தது.

நல்லவேளையாக அவையில் திரண்ட பெருமக்களும் பேரறிஞர்களும் பாண்டியனது விடாமுயற்சிகளைப் பாராட்டிப் பேசியதால் அவனது முகத்தில் இருந்த சோகநிழல் சற்றே விலகியது.

''பாண்டவர்கள் நாடிருந்தும் ஆளமுடியாமல் துன்பப்பட்டார்கள். பாண்டியர்களோ தங்கள் நாட்டை கடலுக்குக் கொடுத்துவிட்டு துன்பப்படுகிறார்கள்'' என்று பாண்டியன் சொன்னபோது-

''பாண்டவர்கள் சூதாட்டத்தில் தங்கள் நாட்டை இழந்தார்கள். அந்த நிலைக்கு அவர்களே பொறுப்பு. இங்கேயோ நமது நாட்டை கடல் தாய் ஆசையால் தனக்கென்று வாங்கிக்கொண்டாள். இதில் பாண்டியர்கள் தவறு எதுவும் இல்லை. அதோடு கடல் தன் ஆதிக்கத்தை எவ்வளவுதான் காட்டினாலும் பாண்டியர்கள் ஓய்ந்துபோய் விடவில்லை. முளைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதோடு கடலுள் போன நமது தலைநகரங்களை விட சிறப்பான தலைநகரை தாங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த அரண்மனையை தேவலோகமாக வடிமைத்திருக்கிறீர்கள். ஆகவே தாங்கள் பெருமைப்பட வேண்டுமே தவிர கவலைப்படக் கூடாது'' என்றார்கள் அவையோர்.

அப்போது செய்தி அறிவிப்போன் வந்து மன்னனை வணங்கி ''மன்னர் மன்னா! நாகதீபத்திலிருந்து விஜயபாகுவின் தூதுவர்களாக நவவீரர்கள் வந்திருக்கிறார்கள்'' என்றான்.

''நாகதீபத்திலிருந்தா?'' என்று வியந்து கேட்டான் வீர சோகன்.

அவையோர்களும் அச்செய்தியைக் கேட்டு வியந்தார்கள்.

◈◈◈

## அத்தியாயம் தொண்ணூறு

# மகாவம்சம் உதயம்

''நாகதீபத்திலிருந்து தூதுவர்களா? அங்கே யார் இருக்கிறார்கள் நமக்குத் தூது அனுப்ப? நாடே துண்டுபட்டுக் கிடக்கிறது. இந்த நிலையில் யார் தூது அனுப்ப முடியும்?'' என்று கேட்டான்.

''நாகதீபத்தின் மன்னர் விஜயபாகு என்று தூதுவர்கள் தெரிவித்தார்கள் வேந்தே'' என்றான் செய்தி அறிவிப்போன்.

''விஜயபாகு! இது தமிழ்பெயராக இல்லையே! யார் இந்த விஜயபாகு? இவன் எப்போது நாகதீபத்தின் மன்னனானான்?'' என்று கேட்டுக் கொண்ட பாண்டிய மன்னன் ''அவர்களை உள்ளே அனுப்பு'' என்றான்.

அதையடுத்து உபத்தியன், அசயன், அபயன், பந்துகாபயன், மூத்தசிவன், உத்திகன், மாமகாசீலன், சூரத்தீசன், அசேலனன் ஆகிய நவவீரர்கள் சிங்கக் கொடிகளைத் தாங்கியபடி அவையில் நுழைந்தார்கள். பாண்டிய மன்னனை வணங்கி நின்றார்கள்.

ஒன்பது தூண்களைப் போல் மிடுக்குடன் வந்து நின்ற நவவீரர்களைப் பார்த்து கண்களை விரித்த பாண்டிய மன்னன் ''தூதுவர்களே! உமது வரவு நல்வரவாகட்டும். உங்கள் மன்னன் விஜயபாகு யார் என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்றான்.

''தொல்குடிப் பிறந்த பாண்டிய மன்னவா! வாழ்க உம் கொற்றம். வளர்க உமது புகழ். விஜயபாகு வங்கநாட்டு மன்னர் சிகபாகுவின் மூத்த புதல்வர். தந்தையின் மக்கள் விரோதப் போக்கு பிடிக்காமல் மக்களை ஆதரித்து மக்கள் திலகமாக மலர்ந்தவர். வங்கதேசத்தின் மன்னராக வேண்டிய அவருக்கு விதி வேறு கட்டளையை பிறப்பித்தது. அதன் விளைவு தான் அவர் இன்று நாகதீபத்தின் ஒரே மன்னராகத் திகழ்கிறார். அவரது தூதுவர்களாக நாங்கள் வந்திருக்கிறோம். அவர் தங்களுக்காக அனுப்பி வைத்த பொன்னும் மணியும் அவைக்கு வெளியே தங்கள் அனுமதிக்காகக் காத்திருக்கின்றன'' என்றான் அபயன்.

''தேடிவரும் பொன்னும் மணியும் காத்திருக்கக் கூடாது - அவற்றை உள்ளே எடுத்து வாருங்கள்'' என்றான் பாண்டிய மன்னன்.

அதையடுத்து பல பெட்டிகளைச் சேவகர்கள் சுமந்து வந்து மன்னனுக்கு முன்னால் வைத்தார்கள். அவற்றை பார்வையிட்ட மன்னன் மூச்செறிந்துவிட்டு ''தூதுவர்களே! விதி விளையாடியதால் உங்கள் விஜயபாகு நாகதீபத்தின் மன்னனாக ஆனதாகச் சொன்னீர்கள். அந்த விதி பாண்டிய நாட்டின் மீதும் விளையாட உத்தேசித்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

பாண்டியனின் வார்த்தைகளில் குத்தல் இருந்தாலும் அபயன் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் ''இல்லை மன்னவா. விதியும் சரி மதியும் சரி அதுபோல் விளையாடி விடக்கூடாது என்பதால்தான் மன்னர் எங்களைத் தூதுவர்களாக அனுப்பியிருக்கிறார். இதோ அவர் தங்களுக்கு அன்புடன் அனுப்பி வைத்த ஓலை'' என்று ஓலையை நீட்டவும் அதை இடையே ஒருவர் வாங்கி மன்னனுக்கு அளித்தார்.

அதை வாங்கிக் கொண்ட மன்னன் அபயனைப் பார்த்து, ''நாக நீபத்து தமிழரின மக்கள் என்னவானார்கள்? அழிக்கப்பட்டு விட்டார்களா?'' என்று கேட்டான்.

''இல்லை மன்னவா. நாகர்கள் நண்பர்களானார்கள். இயக்கர்களும் வேடர்களும் வெற்றி கொள்ளப்பட்டார்கள்'' என்றான் அபயன்.

அதைக்கேட்டு விட்டு விஜயனின் ஓலையைப் படித்தான் மன்னன். ஓலை விவரமாகவும் தெளிவாகவும் எழுதப் பட்டிருந்தது. அதை ஒன்றுக்கு இருமுறை படித்த வீரசோகன் ''நல்லது தூதுவர்களே. நீங்கள் அனைவரும் விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுங்கள். பிறகு சந்திப்போம்'' என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு அருகில் இருந்த அமைச்சரிடம் ஓலையைக் கொடுத்து அவையோர் கேட்கும்படி படிக்கச் சொன்னான்.

ஓலை படிக்கப்பட்டதும் ''இதற்கு உங்கள் பதில் என்ன?'' என்று கேட்டான் மன்னன்.

''ஓலை தெளிவாக இருக்கிறது. வீண் மிரட்டல்களோ வறட்டு வார்த்தைகளோ இல்லை. ஆனால் ஒரே ஒரு உறுத்தல்தான்'' என்றார் அனுபவம் வாய்ந்தவரான சேனாதிபதி.

மன்னன் கேட்டான் ''என்ன உறுத்தல்?''

''ஓலையை எழுதியிருப்பது வடநாட்டான்''

''ஆனால் இப்போது தென்னாட்டு நாகதீபத்தின் மன்னன்'' என்றான் பாண்டிய மன்னன்.

''விஜயபாகு வெற்றி கொண்டிருப்பது நாகதீபத்தில் இருக்கும் நம் தமிழர் இனத்தை''

இதைக் கேட்டு நமட்டுச் சிரிப்பை உதிர்த்த பாண்டிய மன்னன் ''சேனாதிபதிக்கு இந்த இனப்பாசம் எப்போது வந்தது?'' என்று கேட்டான்.

''மன்னா! இனத்திற்குரிய பாசம் என்பது ரத்த பாசம். அது செயற்கையாய் வருவதில்லை. இயற்கையிலேயே இருப்பது'' என்றார் சேனாதிபதி.

''தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பது சான்றோர் வாக்கு'' என்றான் கோட்டைத் தளபதி.

''அங்கே இருக்கும் தமிழன் காயப்பட்டால் இங்கே இருக்கும் தமிழனுக்கு வலிக்க வேண்டும். அதுதான் உண்மையான தமிழனின் உணர்வு'' என்றான் மற்றொரு தளபதி.

''தமிழனுக்குத் தமிழன் தான் காப்பு'' என்றார் ஒரு புலவர்.

இதே ரீதியில் பலரும் பேசியபின் மன்னன் கேட்டான்.

''நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால் இந்த உணர்வு இத்தனை காலமாக எங்கே இருந்தது? இதுபோன்ற வார்த்தைகளை இதுவரை யாரும் உதிர்க்கவில்லையே அது ஏன்?''

சேனாதிபதி இதற்கு பதில் சொல்லமுற்பட்டு ''மன்னா! ஆதரவு குரல்களும் ஆறுதல் வார்த்தைகளும் நாகதீபத்து தமிழர் மீது இதுவரை வரவில்லை என்றால் அதற்கு காரணம் பிரச்சினை எதுவும் எழாததால்தான். தற்போது பிரச்சினை உண்டாகி யிருக்கிறது. அயல் நாட்டவன் நாக தீபத்தை ஆக்கிரமித்துக் கொண்டான். தமிழர்களை நசுக்கி விட்டான். இது தமிழரது மானப்பிரச்சினை. இனமானத்திற்கு இழிவு நேரும்போது தான் குரல் எழும்பும்'' என்றார்.

''சேனாதிபதி, விஜயபாகு நாகதீபத்தில் தமிழர்களை வென்றிருக்கிறான். அதை குறை கூறமுடியாது. அங்கேயுள்ள தமிழர்களை யாரும் தோற்றுப் போகும்படி சொல்லவில்லை. விஜயபாகுவை அவர்கள் ஏன் வெல்லவில்லை? ஆகவே தமிழர்களுக்கு மானப்பிரச்சினையல்ல. அப்படியே பிரச்சினை தான் என்றாலும் அதற்கு அவர்களே காரணம். அதற்காக நாம்

உணர்ச்சிவசப்படுவது விவேகமாகாது'' என்று சொன்ன பாண்டிய மன்னன் ''நாகதீபத்தில் இருப்பது தமிழர்கள் என்றீர்களே அவர்கள் ஏன் பிரிந்து நிற்கிறார்கள்? அவரவர்களுக்கும் இருப்பது மண்ணாசைதானே? அவர்கள் ஒன்றுபட்டிருந்தால் விஜயபாகுவை வீழ்த்தியிருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டான்.

அவனது பேச்சு சரியாக இருந்ததால் அவையில் யாரும் பேசவில்லை.

மன்னனே தொடர்ந்து பேச முற்பட்டு ''நாம் விவாதப் பொருளைவிட்டுவிட்டு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறோம். ஓலையில் விஜயன் தனது லட்சியத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அது பழுதின்றி நிறைவேற நாக தீபத்தில் அமைதி நிலவ வேண்டியது அவசியம் என்கிறான். நம்மிடமிருந்து எதிர்ப்பு வரக்கூடாது என்றும் நாமும் அவனும் நண்பர்களாக இருப்பது உகந்தது என்றும் அதற்கு மணவினையே உறுதியானது என்றும் சொல்லி பெண் கேட்டிருக்கிறான். இதில் தவறு இருப்பதாகத் தோன்றவில்லை'' என்றான்.

''மணவினைக்கு நாம் மறுத்து விட்டால் நம்மோடு போர் தான் என்பது இவ்வோலையின் மறைபொருள்'' என்றார் சேனாதிபதி.

''நீர் வலிந்து பொருள் சொல்ல முயல்கிறீர்களே தவிர இந்த ஓலையில் மறைபொருள் எதுவும் இல்லை'' என்றான் மன்னன்.

''விஜயபாகுவுடன் நாம் நட்புக்கரம் நீட்டினால் இங்கேயுள்ள சோழர்களும் சேரர்களும் நமக்கு எதிராகக் கொதித்தெழுவார்கள்''

''இப்போது மட்டும் அவர்கள் நம்மை எதிர்க்காமலா இருக்கிறார்கள்? இல்லையே! ஆரம்பத்திலிருந்தே இங்கே தமிழர்கள் பிரிந்து தானே இருக்கிறார்கள் நாகதீபத்தைப் போல்? இவர்களுக்குப் பயந்து விஜயபாகுவின் நட்புக்கரத்தை உதற வேண்டிய அவசியமில்லை. அதோடு சேனாதிபதி கற்பனை செய்வது போல் விஜயபாகு நம்மீது படையெடுக்க முற்பட்டால் அவனை வெல்லும் நிலையில் நாம் இருக்கிறோமா?''

''மன்னருக்கு என்மீது நம்பிக்கையில்லையா?'' என்று கேட்டார் சேனாதிபதி.

''அவநம்பிக்கையில் பேசுவது வேறு. உண்மை நிலையைச் சொல்வது வேறு. இப்போது தான் நாம் நமது தலைநகரை நிர்மானித்தோம். அதற்கான செலவு எவ்வளவு ஆயிற்று என்பது நம் எல்லோருக்கும் தெரியும். இந்நிலையில் விஜயபாகுவை எதிர்கொள்ள வேண்டுமென்றால் படை திரட்ட வேண்டும். நம்மிடம் இருக்கும் படை போதாது. மேலும் படை திரட்ட நம்மிடம் நிதிவசதி இல்லை''

மன்னனின் இந்த பதில் அவையில் இருந்த பலரது வாயை அடைத்தது.

அமைச்சர் பேசமுற்பட்டு ''மன்னவா, எதற்கும் உங்கள் செல்லப் புதல்வி விசாகியை ஒரு வார்த்தை கேட்டுவிடுங்கள். அவள் மறுத்துவிட்டால் எல்லாமே தலைகீழாகிவிடும்'' என்றார்.

''அவள் மறுப்பாள் என்று நினைக்கிறீர்களா அமைச்சரே?''

''பெண்ணின் மனத்தை அறிந்தவர் யாருமில்லை'' என்றார் அமைச்சர்.

அதோடு அவையைவிட்டு வெளியேறிய மன்னன் நவ்வீரர்களைத் தனியே சந்தித்து விஜயபாகு வங்கநாட்டில் இருந்ததிலிருந்து நாகதீபத்தை வென்றது வரை அனைத்து விவரங்களையும் கேட்டறிந்தான். அவ்வாறு கேட்டறிந்ததில் விஜயனின் மீது அவனுக்கு மதிப்பு உண்டாயிற்று. அவன் மாவீரன் மட்டுமல்ல நல்ல விவேகி என்பதையும் புரிந்து கொண்டான்.

அன்றிரவு தன் அருமைப் புதல்வியையும் சந்தித்துப் பேசினான்.

அழகெல்லாம் ஒன்று திரண்ட பேரழகியான விசாகி தந்தை சொல்வதையெல்லாம் கேட்டுவிட்டு ''நான் என்ன சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் அப்பா?'' என்று குயில் குரலில் கேட்டாள். அவளது பேச்சே இசை போலிருந்தது.

''என் எதிர்பார்ப்பைவிட உன் விருப்பம்தான் மிகவும் முக்கியம் மகளே. உன் விருப்பத்தை மீறி அரசியல் நடத்த நான் தயாராக இல்லை'' என்றான் வீரசோகன்.

''அரசியலுக்காக மணவினைகள் கட்டாயமாக நடப்பது இயல்பு தானே தந்தையே?''

''எனக்கு அதில் உடன்பாடில்லை மகளே. மணவினை என்பது மனவினையாக இருக்க வேண்டும். மணந்து கொள்ளும் இருவரது மணமும் ஒத்துப்போக வேண்டும். அதனால் தான் அது திருமணம் என்று சொல்லப்படுகிறது''

''அவர் எப்படி இருப்பார் அப்பா?''

''அழகனாக இருப்பான். மாவீரனாக இருப்பான். கருணையுள்ளவனாக இருப்பான்''

''அவரைப் பார்க்காமலேயே எப்படிச் சொல்கிறீர்கள்?''

''அவனை இந்த ஓலையில் பார்க்கிறேன் மகளே. இதை நீயும் படித்துப் பார்'' என்று கூறி விஜயனின் ஓலையைக் கொடுத்தான் மன்னன்.

அதைப் படித்த விசாகி ''கடைசியில் இப்படி எழுதியிருக்கிறாரே அப்பா?'' என்று பரவசத்துடன் கேட்டாள்.

''நட்புக்கு மணவினை நல்லது என்பதால் தங்கள் மகளைப் பார்க்காமலேயே மனைவியாக ஏற்கச் சம்மதிக்கிறேன். அவள் குருடாயிருந்தாலும் செவிடாயிருந்தாலும் என் மனைவியாகவும் ராணியாகவும் இருப்பாள் என்று விஜயபாகு எழுதியிருக் கிறானே அதிலேயே அவனது வடிவம் உனக்கு விளங்க வில்லையா?''

''எனக்குப் பூரண சம்மதம் அப்பா. நான் செய்த புண்ணியம் தான் அவரை என்னிடம் அழைத்து வருகிறது''

''மிகவும் மகிழ்ச்சி தாயே. பாண்டிய நாட்டிற்கு அமைதியைக் கொடுத்து விட்டாய். படைகளால் செய்ய முடியாத பாதுகாப்பை அளித்துவிட்டாய்'' என்றான் மன்னன் பரவசத்துடன்.

★★★

விஜயஸ்தீபத்தில் புத்தப் பள்ளியில் இருந்த உதயணன் மிகவும் குழம்பிப் போயிருந்தான். மந்திரவாதி கூறியபடி சூன்ய மூட்டையை விஜயனின் இருப்பிடத்தில் கொண்டு போய் வைத்து மாதங்கள் இரண்டாகியும் விஜயனுக்கு மரணம் நேராததால் அதன் காரணம் தெரியாமல் தவித்தான். வாரம் தோறும் புத்த பிட்சுக்கள் விஜயனின் மாளிகைக்குப் போகும் போதெல்லாம் அவனும் கூடவே சென்றான். தான் வைத்த மூட்டை அதே இடத்தில் இருந்ததையும் கவனித்து வந்தான். அப்படியிருக்கும்போது விஜயனுக்கு ஒரு பிரச்சினையும் உண்டாகாதது அவனுக்குப் புதிராக இருந்தது. ஆலோசனை கூறிய மந்திரவாதியைக் கொன்று விட்டதால் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள அவனால் முடியவில்லை. மொட்டைத் தலையைத் தடவித் தடவி பைத்தியக்காரனைப் போலானான்.

அவனோடு இருந்த நரசிம்மன் அந்த மூட்டையிலிருந்து குரங்கு ரோமத்தை அகற்றி விட்டிருந்தான். மந்திரவாதியால் செய்வினை செய்து தரப்பட்ட கலவையில் ஒன்று குறைந்தாலும் செய்வினை வெற்றி பெறாது என்பது உதயணனுக்குத் தெரியாது. குரங்கு ரோமத்தை நரசிம்மன் அகற்றியதும் தெரியாது. எனவே இல்லாத ஊருக்குப் பயணச்சீட்டு வாங்க முடியாது என்பதை அறியாதவனாய் செய்வினை பலிக்க வில்லையே என்றெண்ணி எண்ணி மிகவும் பலவீனப் பட்டுப்போனான். சரிவர உண்ணவில்லை. புத்தர் பள்ளியில் நடத்தப்பட்ட பாடங்களை கவனிக்கவும் அவனால் இயலவில்லை. புத்தமதத்தில் சேருவதை விஜயனைக் கொல்வதற்கு உதவும் உபாயமாக மட்டுமே அவன் கருதியிருந்த காரணத்தால் புத்தரது போதனை அவனைக் கவரவில்லை. புத்தர் பள்ளியை விட்டு வெளியே எங்கெங்கோ அலைந்து தலையில்முடி வளர்ந்த நிலையிலும் வயிறு ஒட்டிய நிலையிலும் சுடுகாட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தான். அவனை வரவேற்பது போல் ஊளையிட்ட நரியொன்று அவன் மீது பாய்ந்து பிராண்டிவிட்டு விலகியது. கீழே விழுந்தான் உதயணன். கண்கள் செருகிக் கொண்டு சென்றன.

அந்த வேளையில் அவனது உண்மையான மனம் அவனைத் தாக்கியது. தான் செய்த காரியம் மிகவும் தவறானது என்பது அவனுக்குப் புரிந்தது. ஆனால் புரிந்துவிட்ட நிலையில் அவனால் எதையும் செய்ய முடியவில்லை. வங்கநாட்டு எல்லையில் இருந்த ஹரகிரி மற்றும் ஹரிகிரி மலைகளில் இருந்த ஆலய இறைவனை எண்ணிக் கொண்டான்.

''உதயணா'' என்று யாரோ அழைத்தார்கள்.

''யாரது?'' என்று மெல்லிய குரலில் கேட்டான் உதயணன்.

''நான் தான் அருவம்''

''அருவமா?''

''ஏன் மறந்து விட்டதா? ரகசியத் தீவில் உனக்கும் உன் நண்பர்களுக்கும் உயிர்பிச்சை கொடுத்தேனே நினைவில்லையா?''

''ஆமாம்''

''அப்போது நான் விதித்த நிபந்தனை நினைவிருக்கிறதா? தீவில் நீ கண்ட அதிசயங்களைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது என்று சொல்லி சத்தியம் வாங்கினேன். சத்தியம் செய்த நீ அதை மீறினாய். உன் நண்பர்களிடமெல்லாம் கூறி பெருமை பட்டுக் கொண்டாய். அறியக்கூடாத தேவரகசியங்களை அறியாமையால் அறிந்தாய். அறிந்தபின் ஆணவத்தால் சத்தியத்தை மீறி வெளியிட்டு விட்டாய். அதன் விளைவைத் தான் இப்போது நீ அனுபவித்துக் கொண்டிருக்கிறாய். உன் நினைவு போய்விடும். பிறகு நினைவு மீண்டும் வரும். வேதனை உன் மனதை வாட்டும். நரிகள் உன் உடலைப் பிராண்டும். அவஸ்தை பட்டு நீ சாவாய்''

குரல் நின்றது. உதயணனின் நினைவு தப்பியது.

★★★

பாண்டிய மன்னன் வீரசோகன் பெருமகிழ்ச்சியோடு நாகதீபத்தின் துறைமுகமான மாதிட்டையில் ஆரவாரத்துடன் இறங்கினான். அவனோடு அவனது மகள் விசாகியும் வந்தாள்.

அவர்களது வரவுபற்றி அபயன் முன்கூட்டியே வந்து தகவல் சொல்லியிருந்த காரணத்தால் துறைமுகத்தில் பாண்டிய மன்னன் சிறப்பாக வரவேற்கப்பட்டான். அவனோடு வந்த ஐந்து மரக்கலங்களில் நூற்றுக்கணக்கான பெண்கள் வந்து இறங்கியது பலருக்கும் வியப்பாக இருந்தது. அதோடு தொழில்நுட்பக் கலைஞர்களும் பணியாளர்களும் ஒரு மரக்கலம் நிறைய வந்தார்கள்.

எல்லோரும் விஜயன் நிர்மாணித்த நகருக்கு வந்து சேர்ந்தார்கள். பாண்டிய மன்னனைக் கட்டித் தழுவி வரவேற்ற விஜயன் பாண்டியனுக்குப் பின்னால் திரண்டிருந்த பெண்களைப் பார்த்து வியந்துபோய் ''இது என்ன?'' என்று கேட்டான்.

''விஜயபாகு! இது பெண் வீட்டுச்சீதனம்'' என்றான் பாண்டியன்.

''சீதனமா? இவ்வளவு பெண்களா?''

''இப்போதைக்குச் சீதனமாகத் தர என்னிடம் பொன் பொருள் எதுவுமில்லை. எனவேதான் பெண்களைச் சீதனமாக கொண்டு வந்திருக்கிறேன். பொன்னும் பெண்ணும் ஒன்று தானே!''

''எப்படி ஒன்றாக முடியும்? என்ன புதிர்போடுகிறீர்கள்?''

''புதிர் தீர வேண்டுமா? இங்கே வந்துள்ள பெண்களின் எண்ணிக்கையைச் சொல்லட்டுமா? எழுநூறு''

அதைக்கேட்டதும் விஷயம் விளங்கியது விஜயனுக்கு.

பாண்டிய மன்னன் பேசத்துவங்கி ''விஜயபாகு! வங்க நாட்டிலிருந்து உன்னோடு எழுநூறு தோழர்கள் வந்ததாக உனது தூதுவர்கள் சொன்னார்கள். உனக்குத் திருமணம் நடக்கிற சமயத்தில் அவர்கள் எப்படி தனிமரங்களாக நிற்க முடியும்? ஆகவேதான் திருமணத்திற்கு ஏற்ற விருப்பம் நிறைந்த பெண்களைத் திரட்டி அழைத்து வந்தேன். படையைத் திரட்டக்கூட நான் இத்தனைக் கஷ்டப்படவில்லை. பெண்களைத் திரட்ட நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

ஆகவேதான் நான் வருவதற்கு காலதாமதமாகி விட்டது'' என்றான்.

''மிக உயர்ந்த எண்ணம். சிறப்பான சீதனம். இப்படியொரு சீதனத்தை எந்த வரலாறும் கண்டதில்லை. என் மனத்திலும் இப்படிப்பட்ட யோசனை உதிக்கவில்லை. தங்களுக்கு என் பாராட்டுகள்'' என்று சொன்ன விஜயன் ''ஆனால் இப்போது என் தோழர்களின் எண்ணிக்கை எழுநூறு அல்ல. அறுநூற்று தொண்ணூற்று எட்டு தான்'' என்று கூற நினைத்து கூறாமல் விட்டுவிட்டான்.

ஒருநாள் முழுக்க பாண்டிய மன்னனை அழைத்துச் சென்று தான் நிர்மாணித்த நகரின் சிறப்புகளைச் சுட்டிக்காட்டினான். பிறகு அனுராதன் உருவாக்கிய கிராமத்தைச் சுட்டிக்காட்டி ''இதுதான் அனுராதபுரம்'' என்றான். பிறகு குருநாதர் உருவாக்கிய கிராமத்தைக் காட்டி ''இதுதான் உபதிஸ்ஸா' என்றான்.

''சிறப்பான முயற்சி விஜயபாகு. இதுபோன்ற நகரங்கள் இன்னும் உருவாக வேண்டும். அவற்றை வடிவமைக்கத்தான் என்னோடு தொழில்நுட்பக் கலைஞர்கள் பலரை அழைத்து வந்திருக்கிறேன். அவர்களது உதவியுடன் நாகதீபம் பெரிய நாடாக விரியவேண்டும்'' என்றான் பாண்டியமன்னன்.

அதையடுத்து திருமணத்திற்கும் முடிசூட்டு விழாவிற்கும் நாள் குறிக்கப்பட்டு இரண்டு மங்கல வைபவங்களும் சிறப்பாக நடந்தேறின. பாண்டிய மன்னனே விஜயனுக்கு முடிசூட்டினான். அவன் தன்னோடு மரக்கலத்தில் கொண்டுவந்திருந்த யானையைச் சுட்டிக்காட்டி ''இது பாண்டிய நாட்டு யானை. எப்படி இருக்கிறது?'' என்று கேட்டான்.

''மகாபர்வதம் போல் இருக்கிறது''

''இதன் பெயரும் அதுதான்'' என்று கூறி ''இந்த மகாபர்வதத்தின் மீது நீயும் ராணியும் உலா வாருங்கள்'' என்று கூறி உலாவையும் நடத்தினான்.

தேவபுத்தர் அவனை வாழ்த்தினார்..

''விஜயா, உன் பெயருக்கேற்றபடி வங்கநாட்டிலிருந்து விஜயம் செய்து நாகதீபத்தை ஜெயித்து விஜயமகாதேவியாக பாண்டியர் மகளை கைப்பிடித்திருக்கிறாய். உன் ஆட்சி சிறக்கும். இனி உன் மூலம் விருத்தியாகும் வம்சம் மகாவம்சம் என்று அழைக்கப்படும். அந்த மகாவம்சமே வருங்காலத்தில் இந்த நாட்டை ஆளும். புத்தர் பிரானின் ஆசி உனக்குத் தழைக்கட்டும்'' என்று அமுதவார்த்தைகளை உதிர்த்தார்.

இரண்டு நாட்கள் கழித்து தோழர்களின் திருமணங்கள் நடந்தன.

தனஞ்ஜெயனை கடற்படைத் தளபதியாக நியமித்த விஜயன் எல்லா தோழர்களுக்கும் பல்வேறு பதவிகளை அறிவித்தான்.

பாண்டிய மன்னர், தேவபுத்தர், சதுர்வேதி ஆகியோர் விடைபெற்றுக் கொண்டார்கள்.

ஆரவாரங்கள் அடங்கி அமைதி நிலவியது.

★★★

**மா**ளிகையின் நிலா மாடத்தில் இன்னொரு நிலவுபோல் நின்றிருந்த விசாகியை நெருங்கிய விஜயன் ''என்ன யோசனை விசாகி?'' என்று கேட்டான்.

இதே வார்த்தைகளை சில மாதங்களுக்கு முன்னால் தன்னிடம் குவேணி கூறியதையும் அவளது கனவு எண்ணத்தை நூதன முறையில் போக்கியதையும் நினைத்துக் கொண்டான் விஜயன். ஆனால் அந்த முறையைக் கையாளாமல் ''வாழ்க்கையே கூட சிலநேரங்களில் நினைத்துப் பார்க்கும் போது கனவு போலத்தான் தோன்றுகிறது விசாகி. நம்மை மீறி செயல்கள் நடைபெறும்போது இத்தகைய எண்ணம் தோன்றுவது இயல்புதான்'' என்றான்.

''மன்னவா, என் முகத்தைப் பாராமல் என்னை மணக்க எப்படிச் சம்மதித்தீர்கள்?'' என்று கேட்டாள் விசாகி ஆவலுடன்.

''என் மனம் என்னோடு பேசும் விசாகி. அவற்றின் கணக்கு தவறாக இருப்பது இல்லை. உன்னைப் பற்றி அது எனக்கு என்ன கூறியது தெரியுமா?''

''என்ன?''

''விஜயா, விசாகி உன்னைவிட அழகானவள் என்று கூறியது. அது பொய்க்கவில்லை பார்த்தாயா?''

இதைக் கேட்டுச் சிரித்த அவள் ''உங்கள் லட்சியம் புத்த மதத்தைப் பரப்புவது என்று கேள்விப்பட்டேனே உண்மையா?'' என்று கேட்டாள்.

''உண்மைதான். அதற்காகவே நானிங்கு வந்தேன்''

''புத்தரின் கொள்கைகளில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா?''

''அவரது போதனைகளே எனக்குத் தாரக மந்திரங்கள்''

''ஐயோ! அப்படியானால் என் கதி?''

''உன் கதிக்கென்ன?''

''புத்தரின் கொள்கைகள் உங்களுக்குத் தாரக மந்திரமானால் நீங்கள் ஆசைப்பட முடியாதே! ஆசையில்லாதவரோடு நான் எப்படி வாழமுடியும்!''

''விசாகி! உபதேசங்கள் என்பது எப்போதும் ஊருக்குத்தான்''

''இதென்ன இப்படிப் பேசுகிறீர்கள்?''

''தவறாக எண்ணாதே. நான் இங்கே மன்னனாக இருந்தால் தான் புத்த மதத்தை இங்கே கொண்டு வரமுடியும். வளர்க்க முடியும். அவரது உன்னதக் கொள்கைகளை பரப்ப முடியும். அதுதான் என் லட்சியம். துறவு பூண்டு ஆசையை அறுத்தெறிய நான் வரவில்லை''

''உங்களை நம்பமுடியாது. உங்களை விட்டால் துறவியானாலும் ஆகிவிடுவீர்கள். உங்களைவிடக் கூடாதென்று தந்தையும் காரணமாகத்தான் சொல்லியிருக்கிறார். வாருங்கள் இப்படி. என்னைக் கட்டிப்பிடியுங்கள்''

''இதென்ன விசாகி வெட்கமில்லாமல்...?''

''வெட்கமாவது! நாணமாவது! அதைக் காட்டவா பாண்டிய நாட்டிலிருந்து வந்தேன்?'' என்று கூறி அவளாகவே அவனைக் கட்டித் தழுவினாள்.

அவளது அத்துமீறலைக் கண்டு வான்நிலவு வெட்கப்பட்டது. விண்மீன்கள் அட்டகாசமாகச் சிரித்தன.


மகா வம்சம்
உதயணன்